மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) தடப்பள்ளி வாய்க்கால் பாசனம் பெறும் நிலங்களுக்கு மட்டும் 21—8—1971-ஆம் தேதிக்குப் பின் கீழ்க்கண்ட விவரப்படி தண்ணீர் தீர்வை உயர்த்த ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. ஆனால் காளியங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களைப் பொறுத்தவரையில் தீர்வையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் வட்டத்திலுள்ள தடப்பள்ளி வாய்க்கால், சிங்கியம் கிளை வாய்க்கால், கூகலூர் கிளை வாய்க்கால், அம்மாபாளையம் கிளை வாய்க்கால், அரக்கன் கோட்டை வாய்க்கால் மற்றும் வாணிப்புத்தூர் கிளை வாய்க்கால் ஆகிய பாசனங்கள் 21—8—1971-ஆம் தேதிக்கு முன்பு இரண்டாம் தரமான நீர்நிலைகளென பாகுபாடு செய்யப்பட்டிருந்தன. இவைகள் கீழ்பவானி அணைக்கட்டு திட்டத்தின்கீழ் வடிகால் நீர், கசிவு நீர் வசதி பெறுவதால் மேற்படி நீர்நிலைகளால் பயன்பெறும் நிலங்களை கீழ்பவானித் திட்டத்தின் கீழுள்ள ஆயக்கட்டாகப் பதிவு செய்யவும், மேற்படி நீர்நிலைகளின் பாகுபாட்டை ஒரு படி மேலாக உயர்த்தவும் வருவாய்த்துறை,



அரசு ஆணை (பல வகை) எண். 2321, நாள் 21—8—1971-ன் படி ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக கீழ்க்கண்டவாறு தீர்வை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

| | ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|
| (1) ஒருபோக நன்செய் .. .. .. .. | 15·00 |
| (2) வரி இணைக்கம் செய்யப்பட்ட இருபோக நன்செய் .. | 20·00 |
| (3) இருபோக நன்செய் .. .. .. .. .. | 22·50 |

மேலே கண்டபடி அதிகரிக்கப்பட்ட தீர்வை பசலி 1381 முதல் அமலுக்கு வந்துள்ளது.

திரு. எ. எம். இராஜா: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் முற்பகல் 9.30
பொழுது தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், கூகலூர் கிளை வாய்க்கால் அத்தனை பகுதிகளுக்கும் வரி ஏற்றியிருப்பதாக கூறினார்கள். ஆனால், கூகலூர் கிளை வாய்க்கால் வருகின்ற பகுதிகளில் சில கிராமங்களில் இன்னும் வரிகள் ஏற்றபட்டதாகத் தெரியவில்லை. பழைய வரிதான் வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். தடப்பள்ளி வாய்க்கால் பகுதிக்கு ஏற்றியிருக்கும்பொழுது, ஏன் காளிங்கராயன் வாய்க்கால் பகுதிக்கு ஏற்றவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காளிங்கராயன் கால்வாயைப் பற்றித் தனிக்கேள்வி போடவேண்டும். கூகலூர் கிளை வாய்க்கால் சம்பந்தப்பட்ட கிராமங்களில் வரி வசூலிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து அதற்கு ஆவன செய்யும்.

திரு. எ. எம். இராஜா: தண்ணீர் தீர்வை முன்பிருந்ததைவிட இப்பொழுது உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், வாய்க்கால் பழுதடைந்திருக்கிறது. அந்தக் கால்வாய்க்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்படவேண்டுமோ அவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட முடிவதில்லை. காரணம் அவ்வளவு தண்ணீரையும் கொடுத்துவிட்டால், கரை உடைந்துவிடுகிறது. ஆகவே, கீழ்க்கரையில் டெய்ல்எண்டு பகுதிகளுக்குத் தண்ணீர் வருவதில்லை. என்னுடைய தொகுதியில் இருக்கிற பகுதிகளுக்குத் தண்ணீர் 20 நாட்கள் அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு தரம்தான் வருகிறது. இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. தற்பொழுது உயர்த்தியிருக்கிற வரியை வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் கால்வாயைப் பழுது பார்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கால்வாய் பழுதுபார்க்க வேண்டிய வேலையை அரசு நிச்சயம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Manufacture of Television sets.*

*72 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have addressed the Centre during 1972 for the issue of a "Letter of Intent" for the setting up of a factory for the manufacture of Television sets and components in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்:

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கணபதி: டெலிவிஷன் செட்களை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு எந்தத் திட்டமும் இல்லை என்றாலும், டெலிவிஷன் வசதியை சென்னை நகரத்தில் செய்து தருவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: நம்முடைய மாநில அரசைப் பற்றிக் கேள்வி கேட்டதால், இல்லை என்று சொன்னேன். கூட்டுத் துறையில், ஜாயிண்டு செக்டாரில் 10,000 டெலிவிஷன் செட்கள் செய்வதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. டெலிவிஷன் எங்கே வைப்பது என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, கூட்டுத் துறையிலே எந்த நிறுவனம் முன்வந்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசு வாரியமும், ஷிட்கோ, திரு. ஓபுலு ரெட்டி என்பவரும்.

திரு எம். தேவராசன்: டெல்லியிலெல்லாம் டெலிவிஷன் வந்தபிறகு தமிழகத்திலும் விரைவில் அதைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே இதைப்பற்றி நம்முடைய மாநில அரசு மத்திய சர்க்காரை வற்புறுத்தி வருவது அனைவரும் அறிந்ததே.

திரு. ஏ. எம். இராஜா: டெலிவிஷன் செட் செய்வதற்குக் கூட்டுத் துறையிலே அரசு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த டெலிவிஷன் செட்களுக்குத் தேவையான உபகரணங்களைச் செய்வதற்கு ஆன்ஸிலியரி இண்டஸ்டிரீஸ் சம்பந்தமாக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, தனிப்பட்டவர்கள் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறு தொழில்கள் என்ற முறையில் இதைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள் கிட்டதட்ட சுமார் 7 பேர்களுக்கு மேல். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறோம்.

திரு. சொ. காவேரிமணியம்: கூட்டுத்துறையில் ஏற்படும் தொழிற்சாலை பிற்பட்ட பகுதிகளில் அமைய ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பிற்பட்ட பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்கின்ற பலமுயற்சிகள் ஏற்கனவே தொழில் துறையிலே எடுக்கப்பட்டு வருகிறது.

## *Price for molasses.*

*73 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the basis on which the price for molasses is fixed?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1961-ஆம் ஆண்டு மொலாஸிஸ் கட்டுப்பாட்டு உத்திரவின் கீழ் கரும்புக் கசண்டின் (மொலாஸிஸ்) விலையை மத்திய அரசு நிர்ணயிக்கிறது.

### பாலங்கள்.

*74 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி ஆற்றின் குறுக்கே எலமனூருக்கும் வாய்த்தலைக்கும் இடையே சிறிய பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*75. வினா.—திரு. அ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழைய கடலூர்—சிதம்பரம் சாலையில் வெள்ளாற்றுக்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு அ. இராசமாணிக்கம் : இந்தப் பாலம் கட்டுவதினால் நாகையிலிருந்து சென்னைக்கு வருவதற்கு தொலை தூரம் சற்றேறத்தாழ 30 மைல் குறையும் என்பதினால் பாலம் கட்டுவதினால் போக்குவரத்துக்கு நன்மையாக இருக்கும் என்பதை அரசு அறிந்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பாலம் கட்டுவதற்கு ரூ. 25 லட்சம் செலவாகும். இதை கிழக்குக் கரைச் சாலைப்பணியில் சேர்க்க வேண்டும் என்று நம்முடைய அரசின் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இது இப்பொழுது அனுமதிக்கப் பட்டிருக்கிற பட்டியலில் இடம் பெறவில்லை. அடுத்த பட்டியலில் இடம் பெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

*76 Q.—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether sanction has been accorded for the construction of the Ganapathiankadavu bridge across Kuzhithurai river in Kollencode-Puthukadai road in Vilavancode taluk, Kanyakumari district ; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



திரு ஆர். பொன்னப்ப நாடார் : பாம்பே-கன்னியாகுமரி ரோடு திட்டப்படி இந்தப் பாலம் முக்கியமாக ஏற்படவேண்டும். அன்றிருந்த திருவாங்கூர்-கொச்சி அரசு இதைத் திட்டமிட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இதைப் பற்றி ஆய்வு செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையைப் பொறுத்தவரையிலே இப்பொழுது கிராமச் சாலையாகக் கருதப்படுகிறது. இதற்கு ஆகக்கூடிய செலவு, நில ஆர்ஜிதம் உட்பட, ரூ. 22½ லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறத்தப்பட்டிருக்கிறது. இது இந்த ஆண்டு செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமில் சேர்க்கப்படவில்லை. அடுத்த ஆண்டு இதைச் செண்டிரல் ரோடு பண்டு ஸ்கீமில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*Cultivation of barley.*

*77 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to cultivate barley in Nilgiris and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டத்தில் பார்லி தற்போது சிறு பகுதியில் பழமையான முறையில் பயிரிடப்படுகின்றது. அதனால் அம் முறையில் கிடைக்கும் ஆதாயம் குறைவாக உள்ளது. பார்லி பயிரிடுவதில் நவீன முறைகளையும் முனைப்பான நடைமுறைகளையும் பின்பற்றுவதன் மூலம், பார்லி உற்பத்தியை அதிகப்படுத்தவும் அதிகப் பரப்பளவில் பார்லி பயிரிடவும் வகை செய்யும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது.

திரு எம். தேவராசன் : இந்த பார்லியைக் கொண்டு நல்ல பீர் காய்ச்ச முடியும். உதகையில் கேட்டிக்கு அருகில் ஏற்கெனவே ஒரு தொழிற்சாலை இருந்தது. அதைப் போல ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நீலகிரியில் பார்லி தொழிற்சாலை அமைப்பதால் அது மால்ட் உற்பத்தி செய்வதற்குப் பயன்படும். பார்லிக்கு நல்ல தேவை இருப்பதால் அதை அதிக அளவில் பயிரிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன் : இது இண்டோ-ஜெர்மன் திட்ட அடிப்படையில் சேர்க்கப்பட்டிருக்கிறதா அல்லது விவசாயத் துறையிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தனிப்பட்ட முறையில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு கே. கந்தசாமி : உதகையில் பார்லி பயிரிர்செய்வதைப் போல கொடைக்கானலில் பயிர் செய்வதற்கு அரசு முயலுமா ? அதற்கு ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பார்லி தமிழ்நாட்டில் எங்கெங்கே பயிர் செய்யப்படுகிறது ? இன்னும் எங்கே பயிர் செய்வதற்குரிய தகுதியான நிலங்கள் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : நீலகிரி பகுதியில் இப்பொழுது பயிர் செய்யப்படுகிறது. கொடைக்கானல் பகுதியில் பயிர் செய்ய திட்டம் உள்ளது. மற்ற பகுதிகள் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம்.

திரு ஏ. எம். இராஜா : துணைத் தலைவரவர்களே, இந்த பார்லி பயிரிடுவதிலும் "ஹை ஈல்டிங் வெரைட்டி" பயன்படுத்தப்படுகிறதா ? அல்லது பழைய முறையிலேதான் பயிரிடப்படுகிறதா ? மேலும் மலைப் பிரதேசங்களில்தான் பார்லி பொதுவாகப் பயிரிடப்பட்டு வருகின்றன. அதைச் சமவெளிப் பகுதிகளிலும் பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பெரும்பாலும் தற்போது மலைப் பகுதிகளில்தான் பார்லி பயிரிடப்பட்டு வருகிறது. அதிலும் மற்றப் பயிர்வகைகளைப்போல் வீரிய வித்துக்களைப் பயன்படுத்த அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இந்த ஆண்டு 35 டன் வீரிய விதை உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டம் வகுத்து செயல்பட்டு வருகிறோம். பயிரிடும் முறையிலும் பழைய முறையை மாற்றிய புதிய முறையில், நவீன முறையில் பயிர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக தரிசு நிலங்கள் பயன்படுத்தப்படுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. நவீன முறையில் பயிர் செய்வதற்கு வேண்டிய வகையில், விவசாயிகளுக்கு வீரிய வித்துக்கள், தேவையான உரம், முதலியவற்றை வழங்கி, பயிரிட வேண்டிய முறைகளையும் விளக்கிச் சொல்ல ஏற்பாடு செய்து வருகிறது.

### *Fair Price Shops.*

***78 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food be pleased to state whether it is a fact that fair price shops have been opened in all the districts to distribute rice and other essential articles?**

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : கட்டுப்படியாகும் விலைகளில் அரிசியும், சர்க்கரையும் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக, சென்னை மாநகரிலும் (சிங்காநல்லூர் நகராட்சிப் பகுதியிலும் பேரூர் ஊராட்சி ஒன்றியம் உட்பட) கோயம்புத்தூரிலும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த எல்லையோரப் பகுதிகளில், உள்ளூரில் கொள்முதல் செய்யப்படும் உணவு தானியங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முடிவு செய்யும் நியாய விலைகளில், ஏற்பளிக்கப்பட்ட வணிகர்களால் பங்கீடு செய்யப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவசியமான இடங்களில் கட்டுப்படியாகும் விலைகளில் அரிசியை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட சில்லறைக் கடைகள் மூலமாக சர்க்கரை வழங்கப்படுகிறது. தேவை ஏற்படும்போதெல்லாம் பிற இன்றியமையாப் பொருள்கள் வழங்குவதற்கும். இந்தக் கடைகள் பயன்படுத்திக் கொள்ளப்படலாம்.





திரு சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தற்போது மேட்டூர் வலது, மேட்டூர் இடது பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை, வியாபாரிகள் சென்று வாங்குவதில் அக்கரை காட்டவில்லை. அதனால் விவசாயிகள் உற்பத்திப்பொருளை விற்பனை செய்யமுடியாத அளவில் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அரசாங்கமே நேரடியாக நியாயமான விலையில் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யுமா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்திற்கிணங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பெல்ட் ஏரியாவில் விலை அதிகமாக இருக்கிறது. நல்ல வளமான பகுதிகளில் விலை குறைவாக இருக்கிறது. ஆகவே இதில் மாவட்ட அதிகாரிகள் தலையிட்டு, இரண்டையும் தாரதன்மியப்படுத்தி, எல்லா இடங்களிலும் ஒரே விலையில் பொருட்கள் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அது பரிசீலனை செய்யப்படும்.

திரு எ. சுவாமிதாஸ் : சார், கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் அரிசி விற்பனையை சிறு சிறு வியாபாரிகள் செய்து வருகிறார்கள். அவர்கள் நாகர்கோவிலிலிருந்து ஒரு படி அரிசியை $1\frac{1}{2}$ ரூபாய்க்கு வாங்கினால், அதை பத்து மைல் தூரத்தில் உள்ள தக்கலையில் கொண்டு போய் ஒரு படி அரிசிக்கு ஒரு ரூபாய்க்கு மேல் லாபம் வரத்தக்க முறையில் விற்பனை செய்கிறார்கள். இதைப் பற்றி நாங்கள் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் சொன்னபோது இதைப்பற்றி நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது, அதைத் தடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை, அரசாங்கம் தான் அதற்கு முடிவு கட்ட வேண்டுமென்று சொல்லி விட்டார்கள். எனவே, அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட லாபத்திற்கு மேல் விற்பனை செய்யக் கூடாது என்று உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விஷயத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. இதுபற்றி விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறுவடை நேரத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள சில பெரிய நிலக்கிழார்கள் நெல்லை சேகரித்து பதுக்கி வைத்து, கொஞ்ச நாட்களுக்கு ஒரு பஞ்ச நிலையை உருவாக்கிவிட்டு பின் அதிக லாபத்திற்கு விற்பனை செய்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இதுவரையிலே தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் இப்படி ஒரு நிலைமை இருந்தது என்பது உண்மை. கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. இப்போது விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று கருதி, சர்க்கார் கொள்முதல் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இருந்தும் பதுக்கி வைக்கிறார்கள் என்றால் அது நீண்ட நாட்களுக்கு நடைபெற முடியாது. தஞ்சையில் அதிகமாகக் குறுவை பயிரிடப்படுகிறது. குறுவை சாகுபடியை அதிக நாள் தேக்கிவைக்க முடியாது. விவசாயிகளிடம் உற்பத்திப் பொருள் தேங்கி இருக்குமானால் உடனடியாக அதைக் கொள்முதல் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, உணவுப் பண்டங்களின் மொத்த வியாபாரத்தைப் பற்றி நமது மாநில அரசாங்கம்—மாண்புமிகு உணவு அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் மத்திய அமைச்சரவைக்கு ஒரு கருத்தைத் தெரிவித்திருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்ததே அதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? அதன் விபரம் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மத்திய அமைச்சரவையிலிருந்து ஒன்றும் வரவில்லை. ஆனாலும் மாநில அரசு இதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்து வருகிறது. நியாயமான விலையில் அரிசி, ஜீனி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்கும் வகையில் செய்வதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். அதன் மூலம் இப்போது அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன ; இப்போது நகரங்களின் சிலப் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. இது படிப்படியாக விரிவுப்படுத்தப்படும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் பெரும்பாலும் கிராமங்களுக்கு வந்து சேருவதில்லை. குறிப்பாகப் பெரிய குளம் தாலூக்காவில் சர்க்கரைக்குப் பெரும் தட்டுப்பாடு இருக்கிறது. கிராமங்களுக்கு ஒதுக்கும் சர்க்கரையும் நகரப்புறங்களிலேயே விற்றுவிடுவதாகத் தெரிகிறது. அதை அரசாங்கம் உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இந்த மாதிரியான புகார்களை யார் எங்கே எப்படிச் செய்தார்கள் அல்லது செய்கிறார்கள் என்கிற விபரத்தோடு சொல்வார்களேயானால் நிச்சயமாக உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ரா. ரா. முனுசாமி : துணை தலைவரவர்களே, 1971–72-ல் தென்னார்க்காடு மாவட்டத்தில் பருவமழை தவறியதன் காரணமாக திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே உடனடியாக அங்கெல்லாம் நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, எங்கெங்கு தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் உடனடியாக நியாய விலைக் கடைகள் திறக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கு. திருப்பதி : தலைவரவர்களே, இப்போது அரிசி விநியோகம் செய்வதற்கு ஏற்கெனவே இருக்கும் கடைகள் தவிர, புதிதாக நியாயவிலைக் கடை திறக்க அனுமதி கேட்டு மனுக் கொடுத்தால் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாவிட்டால் தனியார்களுக்கு அனுமதி வழங்கும் முறை இருக்கிறது. அவசியம் ஏற்படுமானால் புதிய மனுக்கள் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, இந்த அரிசி நியாயவிலைக் கடைகள் பெரும்பாலும் நகரப்புறங்களிலேதான் செயல்படுகின்றன. கிராமப்புறங்களில் இல்லை. எனவே, நியாயவிலைக் கடைகளை கிராமப்புறங்களுக்கும் போதிய அளவுக்கு விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இப்போது அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுதான் சர்க்கரை, துவரம்பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருள்களை கொள்முதல் செய்து, போதுமான அளவுக்கு அரசாங்கம் வைத்திருக்கிறது. நகரப்புறங்களில் ஆங்காங்கே நியாயவிலைக் கடைகளை திறந்து அவைகள் மூலமாக அவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன ; எல்லாப் பகுதிகளிலும் நியாயவிலைக் கடைகளைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே நகரப்புறங்களில் ஓரளவு முடிந்தவுடன் படிப்படியாக இத்திட்டம் கிராமப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஏ. எம். டி. நாச்சியப்பன் : தலைவர் அவர்களே, தற்சமயம் அரிசி விலை கூடுதலாகியிருக்கிறது. நெசவாளர்களுக்கு நூல் விலையும் மிகுதியாகியிருக்கிற காரணத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. ஆகவே நெசவாளர்கள் இருக்கக் கூடிய பகுதிகளில் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் சொல்வது போல இப்போது அரிசி விலை கூடுதலாக இல்லை. சென்ற ஆண்டு இருந்ததைவிடக் குறைவாக இருப்பதாகத்தான் புள்ளிவிவரம் வந்திருக்கிறது. எங்காவது நெசவாளர்கள் இருக்கிற பகுதியில் கஷ்டம் இருந்தால் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கிறோம்.

*Cultivation of beedi leaves.*

*** 79 Q.—Thiru K. NAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to cultivate beedi leaves in the forest lands of Tamil Nadu?**

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : இல்லை.

திரு க. நாகராஜன் : ஒரிசாவில் காட்டு நிலப்பகுதியில் பீடி இலைப் பயிரை பயிரிடுகிறார்கள். அதேபோல தமிழ்நாட்டு ஒதுக்கக் காடுகளிலும் பயிரிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தற்போதுதான் இல்லை என்று சொன்னேன். அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு தி. பொன்னுமலை : தமிழ்நாட்டில் உள்ள காடுகளில் ஏராளமான நிலம் இருக்கிறது. அந்த நிலங்களில் கஞ்சா பயிர் செய்தால் அரசாங்கத்திற்குக் கோடிக்கணக்கான பணம் வரும். வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கும். அப்போர்ப்பட்ட இடங்களில் கஞ்சா பயிர் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பீடியில் இருந்து நேரே கஞ்சாவுக்கா ?

திரு தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : பீடி இலை பயிரிடவில்லை என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் பாபநாசம் மலைப் பகுதிகளில் பழைய எம். எல். ஏ. பீடி இலை கடந்த எட்டு ஆண்டுகளாகப் பயிரிட்டு இருக்கிறார்கள் . . . . . . . . . .

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : புதியதாகத் திட்டம் இருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்று சொன்னேன். காட்டு நிலங்கள் தனியாருக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் பயிரிட்டு வருகிறார்கள்.





திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட தரைக்காடுகளில் நீலகிரி மரங்களைப் பயிரிடுகிறார்கள். அவற்றை அழித்துவிட்டு பீடி இலைப் பயிரை வைப்பதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : ஆலோசிக்கலாம்.

திரு. க. நாகராஜன் : அரசு நேரிடையாக முன்வராவிட்டாலும் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்தால் மலைக்காடுகளைக் குத்தகைக்கு விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நம் நாட்டில் காட்டுநிலப் பகுதி குறைவாகத்தான் இருக்கிறது. ஆகவே அவற்றில் அடர்த்தியான காடுகளை வளர்க்கும் திட்டம்தான் இருக்கிறது. சவுக்கு, மூங்கில், யுகலிப்டஸ் போன்றவற்றைத்தான் வளர்க்கிறோம். பீடி இலைப் பயிர் மூலம் காடுகளை வளர்க்க முடியும் என்றால் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. நா. பழனிசாமி : பழனிமலைப் பகுதியில் பீடி இலை பயிரிடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பீடிக்கு ஏகப்பட்ட கிராக்கி இருப்பது போலத் தெரிகிறது.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் எந்த எந்த மாவட்டத்தில் பீடி இலைப் பயிர் செய்யப்படுகிறது ?

(விடை இல்லை.)

திரு. எம். தேவராசன்: நீலகிரியில் உள்ள காடுகளில் கஞ்சா நன்றாகச் செழித்து வளர்கிறது. கஞ்சாவுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. பெரும்பான்மையான போதை தரும் மருந்துக்கள் அதில் இருந்து தயாரிக்கிறார்கள். ஆகவே அதை அங்கே பயிரிடுவார்களா ?

(விடை இல்லை.)

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற பீடி இலைகளில் ஒருவகையான கசப்பு நிற்கிறது. நம் நாட்டில் பயிரிடப்படுவதற்கு நாடன் என்று பெயர். பீடி இலை இங்கே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றால் நம் நாட்டுப் பயிரைவிட்டு வடநாட்டுப் பயிரின் நாத்து, விதைகளைக் கொண்டுவந்து பயிரிட முன்வந்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசு உணர்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இங்கே உற்பத்தி செய்யப்படுகிற இலை கசப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். கசப்பான காரியத்தை அரசாங்கம் செய்யாது என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி : இந்த நாட்டில் தயாரிக்கப்படுகிற இலையில் ஒருவித கசப்பு நிற்கும் என்கிறார்கள். இதை அவர் தமது சொந்த அனுபவத்தில் இருந்து சொல்கிறாரா ?

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : ஆம். என்னுடைய 42 வருஷ அனுபவத்தில் சொல்கிறேன். பீடி உபயோகிப்பவன். அந்தத் தொழிலை நடத்துபவன் என்ற முறையில் சொல்கிறேன்.

*Guest house at Tiruvannamalai.*

*80 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a guest house has been constructed from temple funds at Tiruvannamalai in North Arcot District; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) ஆம்.

(இ) மதிப்பீட்டு தொகை ரூ. 44,500. ரூபாய் நாற்பத்து நான்கு ஆயிரத்து ஐநூறு மட்டும்).

இடவசதி :

ஒரு முன் தாவரம் 11′×8′, ஒரு வரவேற்பு அறை 12′×10′ ஒரு மன்றம் 24′—9″×10′, ஒரு சமயலறை 10′×8′, 2 மலசலம் கழிவிடம் (மேற்கண்டவை மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் கூடியவை).

திரு. எஸ். கே. சுப்பிரமணியம்: இதுபோன்று பயண விடுதிகள் கட்டப்படுகிற கோவில்களில் பகுத்தறிவுக் கொள்கை நூல்கள் அடங்கிய ஒரு நூல்நிலையத்தையும் திறக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நிதிவசதியுள்ள கோவில்களில் ஏற்கனவே நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. சொ. காவேரிமணியம் : இவ்வாறு கெஸ்ட் ஹவுஸ் கட்டுகிற நேரத்தில் அரசு மானியம் எவ்வளவு தருகிறது ? திருப்பரங்குன்றத்தில் ஒரு கெஸ்டு ஹவுஸ் கட்டும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருவண்ணாமலையில் கட்டப்பட்ட பயண விடுதிக்கு 50 சத விகிதம் கோவில் நிர்வாகத்தினர் பணம் கொடுத்தார்கள். 50 சத விகிதம் நன்கொடையாக வசூலித்துக் கட்டப்பட்டது. திருப்பரங்குன்றத்தில் கட்டுவது என்றால் அதுபற்றி அங்குள்ள அறங்காவலர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.



திரு. கே. கந்தசாமி : டெம்பிள் சிட்டி என்று பெயர் பெறுகிற மதுரையில் மீனாட்சி தேவஸ்தானத்திற்கு நிறையப் பணம் வருகிறது, அங்கே ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சமீபத்தில்தான் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஒரு விடுதி கட்டப்பட்டு அதை நமது முதல் அமைச்சர் அவர்கள் திறப்பு விழா செய்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**(2) தகவல் கோரல்.**

**கூட்டுறவுத் துறை அமைச்சர் அவைக்கு வராதது குறித்து**

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 2-ஆம் தேதியில் இருந்து கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வரவில்லை. ராஜிநாமாச் செய்யப் போகிறார் என்பதான செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. முதலமைச்சரிடம் கடிதம் கொடுத்திருக்கிறார் என்கிற செய்தியும் அடிபடுகிறது. அவர் இந்த அவைக்கு என்ன காரணத்தினால் வரவில்லை. உடல் நலக்குறைவினால் அவர் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்கள். அவர் பற்றி விவரங்களை முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்ததைப் போலவும், வெளியிலே சில பத்திரிகைகள் எதிர்பார்ப்பதைப் போலவும் தமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு ஆதித்தனார் அவர்கள் ராஜிநாமா எதுவும் செய்யவும் இல்லை, அதுபோன்ற கடிதம் எதுவும் என்னிடத்திலே தரவும் இல்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்களுடைய தேக ஆரோக்கியம் குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள். முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்களுடைய மூக்குக்குப் பக்கத்திலேயே வளர்ந்திருக்கிற ஒரு விதமான சதை காரணமாக, அறுவைச் சிகிச்சைபெற வேண்டிய நிலை இருந்தது. சென்னை பொது மருத்துவமனையில், ஈ.என்.டி. நிபுணர் டாக்டர் சத்தியநாராயண அவர்களிடம் சிகிச்சை பெற்று இப்பொழுது நலம் பெற்று வருகிறார். இருந்தாலும், சில நாட்கள் ஓய்வு தேவை, அவர் பேசக் கூடாது என்று கூறப்பட்டதால், இங்கு வரவில்லை.

### நடைமுறைக் கேள்விகள்.

(அ) டிசம்பர் 2-ந் தேதி நடந்த பேரவை நிகழ்ச்சிகள் குறித்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருக்கும் நிலையில் பேரவை தொடர்ந்து நடைபெறுதல் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : Sir, Thiru Mathialagan has filed a writ petition before the High Court and notice has been issued to the respective parties to that writ petition and a partial stay also has been granted. So, will it be in order if we continue the deliberations in this House in view of the pendency of the writ petition because the proceedings on 2nd December 1972 has been challenged in that writ petition and that is what we hear from the press.

Another point which is connected with it is that yesterday the Hon. Chief Minister said that the proceedings has not been called for from the Central Government but subsequently he announced that a communication had been sent to the Home Secretary from the Home Ministry. It was reported that there was a parallel session which was going on in this Assembly on 2nd December 1972. So what is the legal position? If any report is called for, will we who were present on 2nd December 1972 be consulted before the report is sent to the Central Government. On these points, I would like to have a ruling from the Chair.

DR. H. V. HANDE rose.

MR. DEPUTY SPEAKER : On the same point?

DR. H. V. HANDE : Yes. . . .

MR. DEPUTY SPEAKER : On the same point you have been speaking for the last few days. I have already given my ruling on this point of order.

DR. H.V. HANDE : My point is that there are two issues before the House and the Hon. Deputy Speaker will have to decide..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய விளக்கத்தை முதலிலே கேளுங்கள். ஒரே ஒரு விளக்கத்தைக் கேட்டு..........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, நீங்கள் நின்று கொண்டிருக்கும்போது உறுப்பினர் ஹாண்டே நின்று கொண்டிருக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் முதலில் உட்காருங்கள். நான் அவரைப் பார்த்துக் கொள்கிறேன். 2-ம் தேதி இந்த சபையில் நடந்த நிகழ்ச்சிகள் செல்லுமா என்பதை தயவு செய்து இந்த சபையில் கேட்க வேண்டிய அவசியமில்லை யென்று நேற்று நான் என்னுடைய தீர்ப்பை வழங்கியிருக்கிறேன். அவர் நீதி மன்றத்திற்குப் போகலாம், எங்கு வேண்டுமானாலும் போகலாம். அதைப்பற்றி எனக்குக்



கவலையில்லை. இந்தப் பேரவையைப் பொறுத்தவரையில், 2-ம் தேதி நடைபெற்றது சட்டப்படி சரியானது என்று இந்தப் பேரவையின் முன்னால் விளக்கமாகத் தீர்ப்பளித்திருக்கிறேன். ஆகவே, இப்பொழுது திரு. பொன்னப்ப நாடார் அதை எழுப்புவதற்கு இடமில்லை.

DR. H. V. HANDE : My point is Slightly conneted with the earlier decision of the Chair. Let us be frank and let us discuss the matter so that we can set things right. The most important point is that the matter is now *sub-judice* and is before the court and we are not going into the question now whether parallel sessions took place or not and that is not the question now. According to the Deputy Speaker, it is not so and he has got the right to be satisfied about it or not satisfied (Interruption). Let me calmly finish my point.

Then, yesterday the Hon. Deputy Speaker took up a particular position with regard to the newspaper 'Alai Osai' and said that a notice of privilege has been given against that paper. There are other papers also which have published that simultaneous session took place. So, my submission to the Chair is that it is better that we shall not discuss the whole thing, viz.,whether the simultaneous session took place or not, because the matter is *sub-judice*. The whole matter can be discussed after it has been settled by the High Court or the Supreme Court.

Also, yesterday when I asked whether the Parliament or the Central Government have called for a report about the proceedings, the Hon. Chief Minister said, 'Nothing'. Later on, he said that a communication was received from the Central Government. I want to know at what point of time he said 'Nothing'. If he had got that information earlier and had withheld it, it would amount to gross breach of privilege......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னைப்பற்றிச் சொன்னதனால் சொல்கிறேன். நேற்று ஹாண்டே அவர்கள் மத்திய அரசிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா என்று கேட்டபொழுது நான் தெளிவாகச் சொன்னேன். அப்படி எனக்கு எந்தவிதமான கடிதமும் வரவில்லை, அரசாங்கத்திற்கு எந்தவிதமான கடிதமும் வரவில்லை என்று சொன்னேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் அது போன்ற கடிதம் எதுவும் வரவில்லை என்று துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வெளியேறிய பிறகு, திரு. பொன்னப்ப நாடார், ஹாண்டே கட்சியினர் வெளியேறிய பிறகு, தொலைபேசி மூலமாக, அங்குள்ள செக்கரட்டரி, டெல்லியிலே இருக்கிற செக்கரட்டரி அவர்கள் இங்குள்ள செக்கரட்டரியை நடவடிக்கைகளை அனுப்ப முடியுமா என்று கேட்டிருக்கிற அந்தத் தகவல்தான் வந்தது. அந்தத் தகவல் எனக்கு கொடுத்த பிறகு, இங்கு எடுத்துச் சொன்னேன்.

DR. H. V. HANDE : Therefore, my point is, let us not go into the question, whether the parallel session took place or not and let us keep it in cold storage. Let us not go into that controversy...............

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, once the Deputy Speaker has given a definite ruling in this House to the effect that a parallel session did not take place here., the hon. Member, Dr. Hande by imputing motives and by saying about it now he is more or less dragging the House in a wrong way. Therefore, I request the Deputy Speaker to see that such annotations or thoughts are not imported and no advice is given to the Deputy Speaker........................

DR. H. V. HANDE: I do not cast any aspersion on the Deputy Speaker..............

MR. DEPUTY SPEAKER: You are not approaching the whole point, what is your point?

DR. H. V. HANDE: My point is that the Deputy Speaker gave a ruling yesterday and I did not say that the Deputy Speaker was right or wrong in giving his ruling. After that ruling certain new facts have come into being.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன கேட்க விரும்புகிறீர்கள்?

DR. H. V. HANDE: So the situation is different today from what it was at the time when the Deputy Speaker gave the ruling. Yesterday the House was not in possession of the fact that a writ petition was admitted in the High Court. Now the writ petition has been admitted and that is a fresh fact.

Also, I would like to know whether the notice of no-confidence motion against the Deputy Speaker has been given and if so, when it is going to be taken up. These are the three points on which I would like to get clarification. Regarding one point, the Hon.Chief Minister gave clarification and with regard to the other two points, I would like the Deputy Speaker to clarify.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்கு, இந்தச் சபையினுடைய முன்னாள் தலைவர் அவர்கள் எடுத்துச் சென்றிருப்பதையும், அதற்குப் பின்னாலே நாம் என்ன முடிவு செய்வது என்பதைப் பற்றியும் இங்கே எழுப்பப்பட்டது. அவர்களே, சொன்னார்கள்; நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்ட காரணத்தினாலே, நம்முடைய சபைக்கு முழு அதிகாரம் இருந்தாலும், நாம் அதைப்பற்றித் தீவிரமாக விவாதிப்பது சரியல்ல வென்று டாக்டர் ஹாண்டே அவர்களும் சொன்னார்கள். அதைத்தான் நானும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளைப் பற்றி, விதிகளைப்பற்றி முடிவெடுப்பதற்குத் தங்களுக்குத்தான் முழு அதிகாரம் இருக்கிறது. இது ஏற்கனவே பல தீர்ப்புகளிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்று நான்



வலியுறுத்த ஆசைப்படுகிறேன். ஆனால் உயர்நீதிமன்றம் இந்த பிரச்சினையை எடுத்துக் கொண்டுவிட்ட காரணத்தினாலே, அந்த வழக்கிலேயுள்ள, விஷயங்களிலேயுள்ள தாரதம்மியங்களைப்பற்றி விவாதிப்பது சரியல்ல வென்று மட்டும் நான் அரசாங்கத்தினுடைய சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்றத்திற்குச் சென்றபிறகு, அதற்குப் பிறகு நாம் இந்தச் சபையை நடத்திக் கொண்டிருப்பது சில சந்தேகங்களை எழுப்புவதாக திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நீதிமன்றத்திலே, அந்த நிகழ்ச்சிக்குப் பின்னாலே இந்தச் சபை நடப்பதைப்பற்றி எந்தப் பிரச்சினையும் எழுப்பப்படவில்லை. அவர் நீக்கப்பட்டிருப்பது சரியா, தவறா என்ற பிரச்னைதான் அங்கே இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

அதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால் புதிதாக ஒரு கருத்து அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்திலே முன்னாள் சபா நாயகர் அவர்களைப்பற்றி விலகல் தீர்மானம் வந்தபோது, தனக்கு அரசியல் அமைப்புச் சட்டப்படி பேசுவதற்கு உரிமை இருக்கின்றது. அந்த உரிமையை நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்ற புதிய அம்சத்தை அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அம்சத்தை நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று தெரியாது. ஆனால் அந்த அம்சத்தைப் பற்றி என்ன நடந்தது என்பதைப் பற்றி மன்றத்திற்குத் தெரியும். புதிதாக எந்தப் பிரச்னை எழுப்பியிருந்தாலும், நாம் அதைப் பற்றி பேசாமலிருப்பது நல்லது என்று கருதுகிறேன். இப்போது இடைக்காலத்தில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த உத்திரவு கூட இந்த மன்றத்தைப்பற்றி, மாண்புமிகு துணைத்தலைவரவர்களைப்பற்றி அல்ல. இது அரசாங்கத்தைப்பற்றிய ஒரு உத்திரவாகும். அரசாங்கம் வீடு கொடுத்திருக்கிறது. அரசாங்கம் கார் கொடுத்திருக்கிறது. இந்தச் சபையைப் பற்றியோ, துணைத் தலைவரவர்கள் அதிகாரத்தைப்பற்றியோ எதுவும் அந்த இடைக்கால உத்திரவில் சொல்லப்படவில்லை. இந்த மன்றத்தில் இந்த விவாதங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு, 2-ந் தேதி நடைபெற்றது சரியா, தவறா என்பதைப் பற்றியெல்லாம், இந்த மன்றத்தினுடைய அதிகாரத்தைப்பற்றியும், எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினை எழவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: In view of the explanation given by the Hon. Law Minister, I would like to make one or two points clear.

The Hon. Minister for Law was stating that Mr. Mathialagan has raised a contention that he was not heard before he was removed from office. Such a contension has been put forward in the affidavit that he has filed before the High Court. I would first submit that now that the Court is seized of the whole matter and as the rule of *sub-justice* is wide enough,

it is not in order now go into the merits or demerits which is likely to influence the decision by the Hon. High Court. So, we may not be in order if we go into the details of averment that is now put forward. Suffice it for me to say that notice has been issued.

Regarding the legal position whether this House can continue or not, that is a point, legal point, on which I still entertain valid doubts. It would be better that when proceedings which has happened in this House is challenged before the High Court, we do not give one version only because there are two parties to it and two versions may be put forward before the High Court so that there may be a fair disposal of justice. Instead of appearing to take sides, it will be better to provide that justice should be done so that the fair name of judiciary as well as legislature may be established. These are the two things on which I would like to have clarification from you, Sir.

**The Hon. Thiru K. ANBAZHAGAN :** Mr. Deputy Speaker, Sir, I want to clarify one issue. In any legislature, even in Parliament or in any legislature like ours which has got statutory right, it can have only one version according to the official department of that legislature. The Hon. Leader of the Opposition is more or less bringing in a point arguing for two versions. There cannot be two versions in any legislature throughtout the world.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> நீதி மன்றத்தைப்பற்றி அவர்கள் கேள்வி எழுப்பிவிட்டு, நீதி மன்றத்தைப்பற்றி நான் பேசியிருக்கிறேன் என்று சொன்னது தவறாகும். நீதி மன்றத்தில் வந்திருக்கக்கூடிய பிரச்னை அவர்கள் வாதாடியிருக்கக்கூடிய பிரச்னைதான். ஆகவே, வந்திருக்கக்கூடிய பிரச்னைக்கும், இந்த மன்றம் தொடரக் கூடாது என்பதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே இந்த மன்ற நடவடிக்கைகள் பற்றி நீதி மன்றம் எதுவும் சொல்லவில்லை. நாம் மன்றத்தை தொடர்ந்து நடத்துவது, நம்முடைய துணைத் தலைவரவர்கள் கொடுத்த தீர்ப்பெல்லாம் சட்டப்படி சரிதான் என்பது எங்கள் வாதம்.

**Dr. H.V. Hande** ; The Hon. Minister for Law has argued the case

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> ஒரு குற்றச்சாட்டை சொல்லிவிட்டு அமைதியாக இருங்கள் என்று சொல்லக்கூடாது. நான் நீதிமன்றத்தில் முன்னாள் பேரவைத் தலைவர் என்ன சொன்னார் என்பதைப்பற்றி இங்கு எடுத்துச் சொன்னேன்.

**Thiru R. PONNAPPA NADAR :** Sir, is the Hon. Minister for Law in order in dragging the mike from another member ?

**Mr. DEPUTY SPEAKER :** It is a common mike.





**Dr. H. V. HANDE :** There is no confusion. We understand each other, myself and the Hon. Minister. My submission is that the Hon.Minister for Law had mentioned one particular statement, viz., that Mr. K. A. Mathialagan had mentioned in Court that he was not given an opportunity to reply. In the process of bringing that particular statement of Mr. Mathialagan in this House, he has also incidentally exhibited according to him, the weakness of Mr. Mathialagan's argument....

* * *

He has brought to the attention of the House the weakness of Mr. Mathialagan's argument. He can bring one portion of argument of Mr. Mathialagan into the House. But he cannot bring the other portions of Mr. Mathialagan's argument which he might have put in his affidavit, which is a long one. I am not saying that the Hon. Law Minister has said any untruth. He has mentioned the facts. Whatever fact is useful from the point of view of Government he has mentioned. But we must know that the whole case is before High Court and the High Court has admitted the case. That is the point. I am not going into the details. The entire case was admitted on that premises (parallel sessions). That may be decided by High Court this way or that way. They may declare the whole thing null and void admitting the writ of Mr. Mathialagan. Or, they may decide the other way. The whole question hinges on whether parallel sessions took place or not. Now the Court has admitted the case. Mr. Mathialagan's point is that parallel sessions took place. His writ application has been admitted by the Court. As far as the Court is concerned, the whole point hinges on whether parallel sessions took place.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> டாக்டர் ஹாண்டே அவர்கள் நீதி மன்றத்தைப்பற்றி பேசக் கூடாது என்று சொல்லிவிட்டு, என்னென்ன வாதங்களைப் பற்றிப் பேச வேண்டுமோ அத்தனையும் சொல்லி விட்டார்கள். நம்மை பொறுத்த வரையில் இந்தக் கருத்துக்களெல்லாம் நீதி மன்றத்தில் நாம் தலையிடுவதாகக் கருதக் கூடுமோ என்று சந்தேகப்படுகிறேன். நீதி மன்றத்தில் ஒரு சப்ளிமெண்டரி அபிடவிட் போட்டார்கள். அனுமதியாகி இருக்கிறது. இதைத்தான் நான் சொன்னேனே தவிர இந்த வாதத்தில் சாதக, பாதக வாதங்களைச் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் அத்தனையும் சொல்லிவிட்டார்கள். அது நல்லதல்ல என்பது என் கருத்தாகும்.

**Thiru M. A. LATHEEF :** I say with a sense of responsibility that even before the High Court, the competence of this House or validity of this House was not brought in question when the writ was filed and that is a thing which is not questionable. The competent and sovereignty of this House has not at all been questioned and

cannot be questioned. Some people in this House are doubting the very concept of sovereignty and supremacy of this House. I am sorry Mr. R. Ponnappa Nadar has raised the question whether the proceedings of this House will be fettered particularly after certain issues were raised before the High Court. Even in the High Court our competence was not questioned but here, inside the House, a responsible member is trying to give an idea before the public giving doubts regarding our sovereignty. Our sovereignty is beyond question. Such raising of doubts about it is not conductive to the dignity of the House. That is my submission. Clause 2 of Article 212 says as follows:—

> "No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business of for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers."

Now a clear verdict has been given by you, Sir, the other day about the competence, the authority, the validity and the constitutionality of the entire proceedings that took place on the 2nd of this month under your chairmanship after the then Speaker was duly removed from the office of Speaker. A ruling has been given and that ruling is final and that ruling is complete and against that ruling if anything happens in any other wing of the State, and that is brought to influence the proceedings of this august House by responsible members of this House then....................

THIRU R. PONNAPPA NADAR: I strongly object to the statement that I bring that to influence. The hon. Member is not entitled to reflect upon my conduct. So far as my conduct is concerned I hold that I am fully responsible for what I say before this House. I know my limitations and responsibilities. That advice given by my hon. Friend, I am not prepared to accept.

THIRU M. A. LATHEEF: Any good advice given by the hon. Member Thiru R. Ponnappa Nadar, I am prepared to accept. Let us not sit here and seriously doubt our own authority. That is my point.

Another thing is with regard to the requisition of official report about the proceedings by the Central Officer. I would submit that even if the Government here would send a copy of the proceedings to the Central Officer or the Central Government, it will be only by way of mutual courtesy and it is not because of superior authority of the other party. This House is the supreme authority. That is my submission. We can send the proceedings and it is for the Deputy Speaker



acting as Speaker to decide. Even if you decide to send such an official version to the Centre, it will be only as a matter of courtesy. It is left to you to send or not. That is my submission.

Thiru R. Ponnappa Nadar said that there has been a partial stay granted. No; whether it is partial or complete, there cannot be any stay to the proceedings of this House. Only amenities have been retained. I do not want to go into the details.

I would only plead that let us not doubt our own authority, let us not doubt our own sovereignty, and doubt our own competence to assert our right and let us not jeopardise the great principle of Legislature being the supreme and sovereign authority. That is all my submission.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தி ஸேம் பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. ஜே. ஜேம்ஸ்: இல்லை, இது வேறு டிபரண்ட் பாயிண்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலில் நான் அவர்கள் எழுப்பிய பாயிண்டு ஆப் ஆர்டருக்கு பதில் சொல்லிவிடுகிறேன். நேற்றைய தினம் இதே பாயின்ட் ஆப் ஆர்டருக்கு மிகத் தெளிவாக, விளக்கமாக, நான் என்னுடைய தீர்ப்பைத் தந்திருக்கிறேன். நீதி மன்றத்தினுடைய இடத்தைப் பற்றியும் சட்ட மன்றத்தினுடைய இடத்தைப் பற்றியும் திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப் போன்று, நான் பேச விரும்பவில்லை. அதைப் பற்றியெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது.

சப்ஜுடிஸ் ஆகுமா என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டார்கள், அது சப்ஜுடிஸ் ஆகாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாம் தேதி நிகழ்ச்சிகள் பற்றி, பேரலல் அசெம்பிளி நடந்தது என்று சில உறுப்பினர்கள் வற்புறுத்திப் பேசுவதைப் பார்க்கிறேன். தாங்கள் அமர்ந்திருக்கின்ற சபையின் மேன்மையை சூப்ரமஸியை தாங்களே சந்தேகத்திற்குரியதாக்குவது மாதிரி அவர்கள் பேசுவது குறித்து நான் வருந்துகிறேன். ஒரு பக்கத்திலே நீதி மன்றத்திலிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. இன்னொரு பக்கம் பத்திரிகையிலே வந்தது பற்றிப் பேசுகிறார்கள். என் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேட்டார்கள். பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்காததாலேயே பத்திரிகைகள் சொன்னது சரி, அல்லது அது ஒரு முகாந்திரம் என்று எடுத்துக்கொள்ள வேண்டியது இல்லை. இந்த அவையிலே உள்ள அலுவல்கள் காரணமாக சில நடவடிக்கைகள் எடுக்கலாம். சில நடவடிக்கைகளை தள்ளிப்

போடலாம். சிலர் பத்திரிகைகளில் வந்தது சரி என்று எப்பொழுது தங்களுக்கு தோதாக இருக்கிறதோ அப்பொழுது எடுத்துக்கொள்கிறார்கள். எப்பொழுது சரியில்லையோ அப்பொழுது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பு கிறார்கள். நீதி மன்றத்திலிருக்கிறது என்ற காரணத்தினால் விவா திக்க வேண்டாமென்று சொல்லவில்லை. நேற்றைய தினம் நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு இரண்டாம் தேதி நடந்தது சரியா என்று மீண்டும் தீர்ப்பு அளிப்பதற்கு அவசியம் இல்லை என்ற தீர்ப்பை அளிக் கிறேன்.

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப் பதாக கேள்விப்படுகிறேன். இந்த நிலையில் தாங்கள் இந்தச் சபையை நடத்திச் செல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் ஒரு வழக் கறிஞர். அவர் சட்ட மன்ற விதிமுறைகளைப் படித்துவிட்டு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(3) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னைக்கு ஏற்கனவே நாம் பதில் சொல்லிவிட்டாலும் மீண்டும் விளக்க விரும்புகிறேன். அப்படியொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம்



வந்திருப்பதாக என் கவனத்திற்கு வரவில்லை. சட்ட விதி முறைகளின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் 180 பேர் அல்ல. குறிப்பிட்ட சில பேர்கள் கொடுத்தாலும் நான் பிடித்துத் தொங்கிக் கொண்டு வற்புறுத்திக் கொண்டிருக்கமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களை நான் நன்றாகத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன். அப்படி அவர்கள் இருக்கமாட் டார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் இந்தப் பேரவையில் நான்கு சுவர்களுக்குள்ளே எடுக்கக்கூடிய முடிவுக்குத்தான் கட்டுப்படுவேனே தவிர அங்கும் இங்கும் போக மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(இ) அரசின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் கொண்டு வந்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 4–12–1972-ம் நாளன்று முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் முன் மொழிந்த "திரு. மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக்கொண்ட அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : Sir, on a point of order, I would like to know under what rule the Hon. Chief Minister is trying to move this Confidence Motion? When he spoke here the other day when we were not present, he referred to Rajaji as a precedent. What we are right now concerned with is under what rule this is done. Our contention is this. There was a no-confidence motion against the Government much earlier. Without giving an opportunity to make my accusations against the Chief Minister, not against the Chair, when there was a no-confidence motion against the Chief Minister and his Government, somehow or other a situation arose when that no-confidence motion was not allowed to be taken up first. My contention and my charge against the Chief Minister is that he was afraid at that time to allow the no-confidence motion. For, the mover of that motion will get an advantage; first he will speak and then the Government will be replying and finally the right of reply vests with the mover of the no-confidence motion. Here the Chief Minister is at an advantage. After all members have spoken then he replies at the end. In other words he has put himself in an advantageous position by doing this now. Therefore, I would like to know under what rule he is moving this motion of confidence, whether it is ultra vires of our rules or intra vires of our rules

முற் பகல் 10-30 THIRU R. PONNAPPA NADAR: Sir, it is the identical point which I want to raise before the House. I would like to invite the attention of the House to Article 208 of the Constitution, which deals with Rules of Procedure. It says—

"A House of the Legislature of a State may make rules for regulating, subject to the provisions of this Constitution, its procedure and the conduct of its business."

These rules have been promulgated under Article 208 of the Constitution. Our rules provide only for the moving of a no-confidence motion against the Ministry and there is no provision for the moving of a Confidence Motion.

So far as the Confidence Motion is concerned, it has a legal import which has been borrowed from the procedure that is prevalent in the Parliamentary Democracy of England. Whether such a novel procedure can be imported in view of the rules that have been framed under Article 208 of the Constitution, is a point which will have to be discussed. It had been stated previously when we were not attending the Assembly that there was a precedent somewhere in 1952 when the revered leader Rajaji, moved a Confidence Motion. So far as that matter is concerned, now we are governed by revised rules and I am in possession of the Rules which has been corrected up to 1st March 1971. When there is no specific provision in the rules, how can this Government depart from it? As there is no specific provision, it may not be in order to discuss the Confidence Motion here though three days have been allotted according to the decision of the Business Advisory Committee. This is an irregular thing which has been brought before the House. Now there has been a large-scale defection from the ruling party and probably the Hon. Chief Minister thought that he wanted to bring in a Confidence Motion so that the members of the ruling party may be pinned down to it. I would say that it is not proper. When there is no express provision either in the Constitution or in the rules, we shall not depart from them and we shall not import into this House a procedure that is prevalent in England. When the Hon. Thiru Si. Pa. Aditanar was the Speaker, he said that whatever be the precedent in the Mother of Parliaments, the House of Commons, it should not be imported into this House. So, I would say emphatically that when the rules or the Constitution do not provide for such a thing, it is out of order to move this Confidence Motion. Now I would like to have a ruling from the Chair.

THIRU M. A. LATHEEF: Sir, the observations, rulings, etc., of the previous Speakers have been duly taken cognizance of by the present Speaker. This particular rule has been invoked even during the Chief Ministership of our veteran leader Rajaji and that rule has been duly



taken cognizance of by the Presiding Officer now. Unless it is so deemed fit by the Chair itself to get it altered or to ask the House to reconsider it, it is valid and it is within the competence of the Chair to apply it or not.

Now with regard to the present motion of confidence moved by the Hon. Chief Minister, that particular rule has been applied and the Chair has duly accepted the same and has allowed the Hon. Chief Minister to move it under that rule.

Now coming to the scope and content of Article 208 of the Constitution, it is stated—

'(1) A House of the Legislature of a State may make rules for regulating, subject to the provisions of this Constitution, its procedure and the conduct of its business.

(2) Until rules are made under clause (1), the rules of procedure and standing orders in force immediately before the commencement of this Constitution with respect to the Legislature for the corresponding Province shall have effect in relation to the Legislature of the State subject to such modifications and adaptations as may be made therein by the Speaker of the Legislative Assembly....'

In this case even though rules are framed under the stewardship of the Chair, there is a great amount of discretion given to the Chair or the PresidingOfficer or the Speaker or anybody who is acting as the Speaker to use his authority to apply that particular rule or otherwise. Therefore, the motion moved by the Hon. Chief Minister under that particular rule, is perfectly valid. When the Chair has already admitted the motion and the Business Advisory Committee has fixed the date for its discussion, it is not proper to question that rule. The Chair is competent to admit the motion under that rule. Thank you, Sir.

THIRU N. GANAPATHI: Mr. Deputy Speaker, Sir, I am very much surprised to see that a learned member of the Bar and a hon. Member of this House has raised objection to the admission of the motion before the House. He quotes so many precedents in courts to win his case. Now here the Chair has quoted the precedent in 1952 while admitting the Confidence Motion. The Chair has followed that precedent and, therefore, his ruling in admitting this motion is supported by precedent as well as by convention.

Another submission is that there is a residuary clause in our rules giving wide powers to the Speaker or the Presiding Officer to regulate the proceedings of the House, which are not provided specifically in the rules. There is another provision in the Constitution which says that the powers and privileges of the House of Commons in England

shall be followed by this House unless and otherwise provided by the Legislature and by practice and convention. In England it is the general practice of the Prime Minister to seek confidence of the House whenever important matters are raised in the public platform. Therefore, that right of moving the Confidence Motion in the Legislature is conferred upon the Chief Minister also by virtue of the provisions of the Constitution. So also the Presiding Officer has got the residuary powers to control the proceedings of the House.

It is very unfortunate and regrettable that the Members of the Opposition deemed it fit not to attend the House the other day when the Motion was admitted and they coolly walked out of the House. Now to question the ruling of the Chair is highly objectionable. Therefore, I submit that the admittance of the motion is supported by Constitutional provisions and the rules and regulations framed by the Legislature. Thank you, Sir.

THIRU R. PONNAPPA NADAR : Now that my name has been dragged into the picture, I want to say a few words. The Hon. Minister has said that precedent has been already there. But the circumstance in which that precedent happened is entirely different. At that time only May's Parliamentary Practice was there. Our consolidated rules were not there at that time. That is my submission. There is a specific rule which has been framed under article 208 of the Constitution. In Chapter X there is provision for bringing in a 'no-confidence motion against the Ministry'. That is under Rule 55. But there is no provision to bring in a 'Motion of Confidence'. Perhaps Government may contend it is like any other motion. If it says so, I can understand that. Then why call it 'Confidence Motion', 'Vote of Confidence motion'. This motion is not provided for in our rules and so bringing in of this motion has no legality, no propriety. That is my submission.

The Deputy Speaker has given his decision to admit this motion' when we had staged a walk-out. We do not question that decision. We only bring in the legality and propriety. We say it is against the provisions of the Constitution. The necessity for bringing in this motion has to be examined. You have given your decision to admit. We do not question it. But we have a duty to expound the legal position. Of course two lawyers do not agree. I do not want to cast aspersion on that noble profession. But it is our duty to see that rules are complied with and when there is confusion, it is our duty to expound the law. We say that in this matter, our rules have not been complied with.

* THE HON. THIRU Si. PA. ADITANAR : In this matter, I would like to put a counter-question to the Leader of the Opposition, viz., under what rule can the Deputy Speaker reject a motion like this? Rule 68(3) says that in order that a motion may be admissible



it shall raise substantially one definite issue, etc. Here it raises one definite issue. That is all. It is just like any other motion and the Deputy Speaker cannot reject the motion under any rule. Regarding its admissibility, it has to be admitted like any other motion and the Deputy Speaker cannot reject it. I am asking the Oppositon leader to point out under what rule it can be rejected by the Hon. Deputy Speaker. I have quoted the rule which admits of the motion. The reverse should be proved by the Leader of the Opposition. Let him say 'here is a rule under which the Deputy Speaker should reject this motion even in the admission stage'. Can you point out any such rule? I have pointed out how it is admissible. Any motion can pertain to anything in the world, from a peanut to a ship, how a peanut should be eaten and how a ship should be run. The only point is it should point out one definite issue. If that is satisfied, it is admitted.

THIRU R. PONNAPPA NADAR : The position has been explained by the Hon. Minister for Co-operation, that under Rule 68 this motion can be moved. As regards his point, let me say that I am in Opposition. I am not bound to anwer any question the ruling party can put to me. So far as legality of the matter is concerned, let me state what Rule 68 (1) states.

It says: "Save in so far as is otherwise provided in the Constitution or in these rules, no discussion of a matter of general public interest shall take place except on a motion made with consent of the Speaker"

Another part of that rule says that it shall not anticipate discussion of matter which is likely to be discussed in the same session. What I say as there is already a motion of 'no-confidence' against the Ministry and a 'censure motion' against the Ministry has also been filed. Now Rule 68 is invoked since the Deputy Speaker has admitted the motion. Since it has been admitted. We are not entitled to question it. When a no-confidence motion is there against the Ministry, the Chief Minister moves a 'Vote of Confidence' motion. Our rules do not provide it. May be in England, in the Mother of Parliaments that custom may be there. But in our legislatures, inasmuch as our rules are specific and our rules do not provide for this kind of motion, moving of such a motion is contrary to our rules. There should be no departure from our rules and so I say this motion has no legality behind it.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று இங்கு இருக்கின்ற நேரத்தில், கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், நம்பிக்கை கோருகிற தீர்மானத்தைக் கொண்டுவருவதன் காரணமாக, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இடம் அளிக்காத ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருப்பதாக ஒரு கருத்தை அவர்கள் இங்கு வெளியிட்டார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்

கப்பட்டிருப்பது உண்மை. அதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களோ, சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களோ இங்கே இப்போதும் கொண்டு வருவதற்கு எல்லா உரிமையும் பெற்றுத்தான் இருக்கிறார்கள். அவர்கள் அதை இப்போது கொண்டு வருகிறோம் என்று கூறுவார்களேயானால் அதற்கு வழி விட்டு, அதை இந்த மன்றத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு நிச்சயமாகத் தயாராக இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு நம்பிக்கை கோருகின்ற தீர்மானம் கொண்டு வந்திருப்பதற்குக் காரணம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந்தாலும் அதை அவர்கள் இங்கே முன்மொழிகிற நேரத்தில் அதற்குரிய எண்ணிக்கை பலம் இன்றைக்கு அவர்களுக்கு இல்லையென்ற காரணத்தால்தான், நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மூலமாக அவர்கள் எடுத்துச் சொல்ல விரும்புகின்ற கருத்துக்களுக்கு வாய்ப்பளிக்கும் எண்ணத்தில்தான் இந்த நம்பிக்கை கோரும் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு விரோதமானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எங்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்கள் நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தில் வழங்கப்பட மாட்டாது என்று சொன்னார்கள். ஒழுங்குப் பிரச்னையில் எவ்வளவு வாய்ப்பு, எவ்வளவு மணி நேரம் இந்த மாமன்றத்தில் அளிக்கப்படுகிறது என்பதை உணர்ந்திருக்கிற, அந்த உரிமையை அனுபவித்துக் கொண்டிருக்கிற நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தில் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட மாட்டாது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. அவர்கள் எந்தெந்த வகையில் வாய்ப்பு வேண்டுமென்று கேட்கிறார்களோ அந்தந்த வகையில் வாய்ப்புகள் வழங்க அவையின் சார்பில் உறுதியளிக்கிறேன் என்பதை மாத்திரம் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இதைக் குறித்து 4—12—1972 அன்றே தீர்ப்புக் கூறியிருக்கிறேன். இதற்கு விதிமுறைகளில் தனி விதி இல்லை என்பதை ஒப்புக் கொண்டாலும் இதே பிரச்சினை 1952-ல் வந்தபோது அப்போது சபாநாயகராக இருந்த மாண்புமிகு திரு. சிவசண்முகம் அவர்கள் மிகத் தெளிவாக அதைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். இலண்டன் பாராளுமன்ற முறைகளைப் பின்பற்றுவதில் தவறு இல்லை. ஆகவே, இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று தீர்ப்புக் கூறுகிறேன்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23 (1)ஐ நிறுத்திவைத்தல் குறித்து.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIAN : Mr. Deputy Speaker' Sir, I move the following motion :

"That Rule 23(i) be suspended and Government Business shall have precedence and be transacted today."

The motion was put and carried.



(ஆ) அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திரு. மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவைமீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என் மீதும் என் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவை மீதும் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தை முன்மொழிந்து நான் சில வார்த்தைகள் மாத்திரம் கூற விரும்புகிறேன். ஏனென்றால், எதிர் தரப்பிலிருக்கிற உறுப்பினர்களுக்கு நிறைய வாய்ப்பளிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடு அவர்கள் தங்கள் கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறிய பிறகு நான் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற வகையில் நான் இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவதற்கு சிறிது நேரமே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் இதுவரையில் விவாதிக்கப்பட்ட பல்வேறு விஷயங்களில், 1952-ம் ஆண்டு நம்பிக்கை கோருகிற தீர்மானம் ஒன்றினை அன்றைக்கு இந்த மன்றத்தில் முதல்வராக வீற்றிருந்த ராஜாஜி அவர்கள் கொண்டு வந்து அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 1952-ம் ஆண்டு ராஜாஜி அவர்கள் மீதும் அவர்களுடைய தலைமையில் இயங்கிய அமைச்சரவை மீதும் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்கான காரணங்கள் அனைவரும் அறிந்ததேயாகும். அப்போது நடைபெற்று முடிந்த அருப்புக்கோட்டை இடைத் தேர்தலில் முதல்வராக இருந்த ராஜாஜி அவர்கள் ஒரு அறிவிப்பு விடுத்தார்கள். அருப்புக்கோட்டை இடைத் தேர்தல் நான் வேண்டுமா வேண்டாமா என்பதை நிர்ணயிக்கிற தேர்தல் என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தேர்தலில் ராஜாஜி கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சி வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டார். அதற்குப் பிறகு கூடிய சட்டமன்றத்தில் ராஜாஜி அவர்கள் தான் வேண்டுமா என்ற கேள்விக்குறியின் அடிப்படையில் தேர்தல் பிரச்சாரம் நடைபெற்று அந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்துவிட்ட காரணத்தினால் தான் வேண்டுமா வேண்டாமா என்கிற அந்தத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் வைத்து விவாதிக்க விரும்பினார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை அது போல் அல்ல. இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை இந்த அவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்து அதன்மீது அமைச்சரவை மீது பல குற்றச்சாட்டுகளை கூறவேண்டும் என்று கோரியவர்கள், இந்த அரசின்மீது பல குறைகளை எடுத்துக் காட்ட வேண்டுமென்று அறிவித்தவர்கள் அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பேசுவதற்கான வாய்ப்பை இழந்துவிட்ட காரணத்தினால் ஏதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கே அரசுத் தரப்பில் இருக்கிற நாங்கள் இணங்க மறுத்து விட்டோம் என்கிற ஒரு பழிச்சொல் இந்த அமைச்சரவை மீது விழுந்த நேரத்தில் நாங்கள் நம்பிக்கையில்லாத் தீரமானத்திற்கும் கண்டனத் தீர்மானத்திற்கும் என்றைக்குமே அஞ்சியவர்கள் அல்ல. அவைகளை எப்படியாவது தடுத்துவிட வேண்டுமென்றுமென்ற கெட்ட நினைப்பு கொண்டவர்களும் அல்ல. அதிலிருந்து தப்பி ஓட வேண்டும்

என்ற தகாப் போக்கினை நாங்கள் ஜனநாயகப் பண்பாக ஏற்றுக் கொண்டவர்களும் அல்ல என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில்தான் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தின் மூலம் எதிர்தரப்பிலிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டுமென்ற வாய்ப்பினை இன்றைக்கு வழங்கியிருக்கிறோம். இந்த வாய்ப்பினை எதிர்தரப்பிலுள்ள அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

கடந்த இரண்டொரு நாட்களாக அவைக்கு வந்தாலும் சில பிரச்னைகளை அடிப்படையாக வைத்து வெளிநடப்பு செய்து வந்த காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திராக் கட்சியினரும் இன்றையதினம் இந்த நம்பிக்கை கோருகிற தீர்மானத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். எந்த ஒரு அரசும் தன்மீது சொல்லப்படுகிற குறைகளை நிர்த்தாட்சண்யமாக இல்லவே இல்லை என்று மறுத்துக் கூறுவதற்குப் பதில் அவைகளை சிந்தித்து குறைகள் இருந்தால் திருத்திக் கொண்டு மேலும் நிலையான ஒரு அரசை நாட்டில் நடத்துவதற்கு முற்படுவதுதான் ஜனநாயக மரபு. அந்த மரபினையொட்டி இன்று அமைந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அமைச்சரவை நிச்சயமாக நடந்து கொள்ளும் என்கிற உறுதியினையும் நான் அளிக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நம்பிக்கை கோருகிற தீர்மானத்தை முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதன் காரணம் அவர்களுடைய கட்சியிலிருந்து சில பேர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் அதைத் தடுத்து நிறுத்த. திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஏற்படுகிற டிஃபெக்ஷன்ஸை தடுத்து நிறுத்துவதற்காகத்தான் இந்தக்காரியத்தில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்த நேரத்தில் சட்டசபையில் உள்ள அவர்களுடைய கட்சியை மறந்து விட்டதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். முன்னேற்ற கழகம், ஆளும் கட்சி தரப்பில் 185 பேர்கள் இருந்து இன்றைக்கு எட்டு ஒன்பது பேர்கள் அதிலிருந்து பிரிந்து விட்டார்கள் என்றாலும் ஆளும் கட்சி இன்றைக்கு நல்ல வலிவோடும் தோழமைக் கட்சிகளுடைய துணையோடும் இந்த மன்றத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. நான் முன்பு ஒரு உதாரணம் சொல்லியிருக்கிறேன். வயிற்றில் இருக்கிற குடல் முப்பது அடிக்கு மேல் நீளம் இருப்பதற்குக் காரணமே ஏதாவது வியாதி காரணமாக ஒரு நாலைந்து அடி வெட்டிவிட்டாலும் மிச்சமுள்ள குடல் இயங்கும் என்பதற்காகத்தான் குடல் அப்படி அமைக்கப்பட்டிருக்கிறதோ என்னவோ. அது போல்தான் 1971-ம் ஆண்டு தேர்தலில் பொது மக்கள் இந்தக் குடல் இடைக்காலத்தில் கொஞ்சம் அறுக்கப்படவேண்டியிருக்கும் என்று முன்கூட்டியே ஊகித்து 184 உறுப்பினர்களை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தந்திருக்கிறார்கள். (ஆரவாரம்) நான் திரு பொன்னப்ப நாடார் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். இந்த அவையில் சுவாசிக்கிற மூக்கு போல் காங்கிரஸ் கட்சியான எதிர்கட்சி இருக்கிறது. அதை குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு உங்களுடையதாகும். ஏனெனில்.....................





திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நாங்கள் சுவாசிக்கிற மூக்குமாதிரி இருக்கிறோம், நீங்கள் குடல் மாதிரி நீளமாக இருக்கிறீர்கள். எங்களிலிருந்து கட்சி மாறியவர்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், அவர்களை பொதுமக்கள் நன்கு புரிந்து கொள்கிறார்கள். ஆகவே உங்கள் கட்சியிலிருந்து இன்னும் ஊசலாடிக் கொண்டிருக்கிறவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி யாராவது ஊசலாடினால் நாடார் அவர்களின் பேச்சு அவர்களுக்கு நல்ல எச்சரிக்கையாக அமையும் என்று நான் கருதுகிறேன். (ஆரவாரம்). ஆகவே பொன்னப்ப நாடார் அவர்கள் உட்கார்ந்திருக்கிற இடம் 76 வரையில் அப்படியே இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். இப்போது தங்கமணி அவர்களின் இடம் கொஞ்சம் மாறியிருக்கிறது. இப்படி கொஞ்சம் கொஞ்சமாக................

திரு ஆர். பொன்னப்ப நாடார் : என் இடம் கடைசியில் சென்றாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. மக்களைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம். எங்கள் திட்டத்தில் நாங்கள் பரிபூர்ணமாக நம்புகிறோம். நாங்கள் காந்திய வழி வந்தவர்கள். ஒரு வேளை அதிகாரம் இல்லை, பதவி இல்லை என்றால் இந்தப் பதவியை நாங்கள் துச்சமாக மதிக்கிறோம் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் மாத்திரம்தான் துச்சம் என்று மதிக்கிறீர்களா? நாங்கள் என்னவோ இதைவிட்டால் வேறு வழியே இல்லை என்று இருப்பவர்கள் அல்ல. பொது மக்களின் கட்டளையை நிறைவேற்ற நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். பதவி என்பது பணி புரிய அளிக்கப்பட்டிருக்கிற வாய்ப்பே அல்லாமல் வேறு அல்ல. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற இங்கே நாங்கள் அமர்ந்திருக்கிறோம். ஆகவே நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொன்னேனேயல்லாமல் பொன்னப்ப நாடார் அவர்களை மிரட்டுவதற்கோ அல்லது எச்சரிப்பதற்கோ என்று கொள்ளக் கூடாது. அவர்கள் கடைசியிடத்தில் உட்கார்ந்து கொண்டாலும் பதவியை நாங்கள் துச்சமாக மதிக்கிறோம் என்று சொல்ல உரிமை படைத்தவர்களாக இருப்பதைப் போல் இந்த அமைச்சரவையில் இருந்து யாராவது அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்கள் நிலையிலிருந்து இங்கிருந்து விரட்டப்பட்டாலும்கூட அவர்களுக்கு மக்கள் இதயத்தில் நிச்சயமாக இடம் இருக்கிறது என்பதை மட்டும் யாரும் மறந்துவிடக்கூடாது. (ஆரவாரம்) திரு பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியதற்கு நான் இந்தப் பதிலை அளிப்பதற்கு மிகுந்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கை கோருகிற தீர்மானத்தில் நான் ஆரம்பத்தில் சொன்னதைப்போல் இப்போது அதிக நேரம் பேசுவதற்கு விரும்பவில்லை, ஆளும் கட்சி உறுப்பினர்கள், தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள், எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பேச இருக்கிறீர்கள். நாம் இந்த மன்றத்தின் மரபினை போற்றி காப்பாற்றி வருகிற வகையில்

நம்முடைய விவாதங்கள் பண்போடும் நாகரீகத்தோடும் நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நம்பிக்கை கோருகிற இந்த தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிந்து நான் அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 11-00 *திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவையின் முன் இருக்கின்ற "திரு மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என்ற தீர்மானத்தினை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எனக்கு முன்னாலே முன் மொழிந்தார்கள். அதனை ஆதரித்து இங்கே பேச நான் முன் வருகிறேன்.

நான் இந்த மன்றத்தில் பேசுவதற்கு முன்பாக எதிர்க்கட்சியிலே அமர்ந்து இருக்கின்ற நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், அவர்களோடு இருக்கக்கூடிய மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும், இந்த மன்றத்திற்கு வராமல் வெளியே இருக்கக்கூடிய புரட்சித் தலைவரின் கட்சிக்காரர்களுக்கும், எங்களுடைய ஆதரவால் மத்திய அரசை அமைக்க முடிந்த இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கும் ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1957-ல் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சட்டமன்றத்திற்கு 15 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்டு நுழைந்தது. 1962-ல் மக்களை நாங்கள் மீண்டும் சந்தித்தோம். 15 பேர்களை மட்டும் அனுப்பினீர்களே, எங்களால் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தினை, சர்வாதிகாரப் போக்கினை எதிர்க்க முடியவில்லையே என்று மக்களிடத்திலே கேட்ட நேரத்தில், நாங்கள் உங்கள் கரத்தை வலுப்படுத்துகிறோம், உங்களுக்கு வலிவை உண்டாக்குகிறோம் என்று சொல்லி 50 சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பினார்கள். எப்படி இன்று நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்களும், கே. டி. கே. தங்கமணி அவர்களும், மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்களும், மற்றும் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் எங்களுடைய அரசாங்கத்தின் மீது, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தின் மீது தங்கள் கணைகளை வீசுகிறார்களோ அதைப்போல் தான் நாங்கள்—நம்முடைய நாவலர் அவர்களும், இன்றையதினம் முதலமைச்சராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்களும், மதிப்பிற்குரிய மாதவன் அவர்களும், நானும்—1962-லிருந்து எதிர்க் கட்சி வரிசையிலே இருந்தோம். இன்றையதினம் இந்த மந்திரி சபையின் பேரிலே கணைகளை வீசுகிறார்களே அவர்களை நான் கேட்கிறேன். இப்போதுள்ள நிலைமைக்கும், அப்போதிருந்த நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை ஒத்திட்டுப் பாருங்கள் என்று முதன் முதலில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் 1962-ல் நடந்த விலைவாசிப் போராட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அல்லது கட்சியின் பெரும் தலைவர்களாக இருந்தாலும் சரி, யாரும் வன்முறையில் ஈடுபடவில்லை. விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று அரசாங்க அலுவலகங்களுக்கு முன்பு



சென்று கோஷமிட்ட குற்றத்திற்காகத்தான் இந்த அவையில் அப்போது இருந்த சட்டமன்ற உறுப்பினர்களையும், கட்சியின் தலைவர்களையும் சிறைச்சாலையில் அடைத்தார்கள். காமராசரின் ஆட்சி அன்று இருந்தது. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சென்னை நகரில் இருக்கும் மத்திய சிறைச்சாலையில் மட்டும் 7,000—8,000 தொண்டர்களை அடைத்து வைத்தார்கள். அவர்களை வெளியே அனுப்ப வேண்டிய சமயத்தில், அவர்களை அடித்து துன்புறுத்தி, குற்றுயிரும், குலைஉயிருமாக அனுப்பினார்கள். பலவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினார்கள். என்ன பெரிய கலவரங்களைச் செய்ததற்காக இப்படியெல்லாம் செய்தார்கள்? விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதற்காகத்தான். அதற்காகத் தான் அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசு எங்களை அப்படியெல்லாம் துன்புறுத்தியது. ஜோதி அம்மையார் அவர்கள் கூட—இப்போது எதிர்க் கட்சியில் இருக்கிறார்கள்—அப்போது அமைச்சராக இருந்தார்கள். அவர்களுக்குத் தெரியும். ஆயிரக்கணக்கான தொண்டர்கள், பொதுமக்களின் பிரதிநிதிகள் சிறைச்சாலைக்குள்ளே அடைக்கப்பட்டார்கள். அதை யாராலும் மறந்துவிட முடியாது. ஒவ்வொருவரையும் விடுதலை செய்யும் சமயத்தில், சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் அரங்கண்ணல் அவர்களும், மாண்புமிகு என். வி. என். அவர்களும், நானும் காலையில் 5 மணிக்கே சிறைச்சாலைக்கு வெளியே டாக்சியை வைத்துக் கொண்டு காத்திருப்போம். வண்டிகளை எதற்காக எடுத்து வருவோம் என்றால், குற்றுயிரும் குலை உயிருமாக விடுதலை செய்யப்படும் தொண்டர்களை அழைத்து வருவதற்காகத்தான். அப்படி நடந்ததையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, அப்போது கூட நாங்கள் முதலமைச்சர் மந்திரிசபை மீது கணைகளை நிதானமாகத்தான் சொன்னோமே தவிர வேறு எந்த முறையிலும் சொல்லவில்லை.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இப்போது தமிழகத்தில் உள்ள நிலைமையென்ன? அப்போது தமிழகத்திலே இருந்த நிலைமையென்ன? படி அரிசி கிடைத்ததா? 5 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னாலும் அரிசி கிடைக்காது. 6 ரூபாய்க்கு படியரிசி விற்ற காலமும் உண்டு. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. தேர்தலுக்கு முன்பாக பொள்ளாச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிற்கு நாங்கள் சென்றபோது, அங்கே எங்களுக்கு அளிக்கப்பட்ட சோறு—அந்த அரிசி உண்ணுவதற்கு லாயக்கற்றது. அப்படிப்பட்ட மோசமான அரிசி கிடைத்த காலம் அது. அப்படிப்பட்ட மோசமான அரிசியை அந்தக் காலத்தில் இருந்த காங்கிரஸ் அரசு கொடுத்து வந்தது. மக்கள் அரிசி வாங்குவதற்காக சினிமாக் கொட்டகைகளில் டிக்கட் வாங்க கியூ நிற்பது போல் நின்று அரிசி வாங்கிய காலம் அது. அரிசி எங்கேயாவது போடுகிறார்கள் என்று சொன்னால், 2-3 மைல் கியூ அங்கே நிற்கும். அப்படிப்பட்ட நிலைமை இருந்தபோது தான் விலைவாசியைக் குறையுங்கள் என்ற போராட்டத்தை நடத்தினோம். அது மட்டுமல்ல. கிரசின் வேண்டுமென்றால் கிடைக்குமா? அதற்கும் மக்கள் குப்பியை எடுத்துக்கொண்டு 5—10 மைல் போய்த்தான் வாங்கிக்கொண்டு வரவேண்டியிருக்கும். அரிசியும், கிரசினும் வாங்குவது தான் மக்களின் அன்றாட வேலையாக அன்றிருந்ததே தவிர வேறு தொழில்களை அவர்களால் கவனிக்க முடியவில்லை.

இந்த நாட்டில் தமிழ் வாழ வேண்டும், இந்தி புகுத்தக் கூடாது என்று இந்திதான் ஆட்சி மொழி என்று சொன்ன நேரத்தில் மாணவர்கள், பொதுமக்கள், தமிழ் மொழி ஆர்வம் கொண்டவர்கள் அத்தனை பேரும் கூறினார்கள். இந்தியை ஆட்சிமொழியாக்குவதை எதிர்ப்போம் என்று சொன்னதோடு மட்டுமில்லாமல், ஆட்சிமொழியாக இந்தி ஆக வேண்டாம், ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக இருக்கலாம் என்று சொன்னதற்கு அன்றையதினம் இருந்த பக்தவத்சலம் மந்திரிசபை என்ன செய்தது ? 50-க்கும் மேற்பட்ட இடங்களில், பட்டாளத்தை வைத்துச் சுட்டது. 100-க்கு மேற்பட்ட பிணங்களை வீழ்த்தியது. பல்லாயிரக் கணக்கானவர்களை சிறையில் போட்டது. எங்களுடைய தலைவராக இருக்கும் டாக்டர் கலைஞரையும் சிறை பிடித்தார்கள். எங்கே அடைத்தார்கள் தெரியுமா ?

சிறைப்பிடித்த இடம் சென்னை. சென்னை சிறைச்சாலையில் அவரை தங்க வைத்திருக்கலாம். ஆனால் சென்னையில் சிறைச்சாலையில் அடைத்துவிட்டால் மக்கள் வெள்ளம் சிறைச்சாலையை நோக்கிப்போய், எப்படி பிரான்ஸ் நாட்டில் பாஸ்டில்ஸ் சிறைச்சாலையை உடைத்து அங்கே இருக்கிறவர்கள் வெளியே கொண்டு வந்தார்களோ அப்படி அவரை இங்கே வெளியே கொண்டுவந்துவிடுவார்கள் என்று பயந்தோ என்னவோ தெரியவில்லை, டாக்டர் கலைஞர் அவர்களை சென்னைச் சிறைச்சாலையில் வைக்கவில்லை. வேலூரில் வைத்தார்களா என்றால், அங்கும் இல்லை. செங்கற்பட்டுச் சிறைச்சாலையில் வைத்தார்களா என்றால் அங்கேயும் இல்லை. எங்கே அனுப்பினார் அப்பொழுது முதல் அமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்கள் ? சென்னையிலிருந்து பாளையங்கோட்டைக்கு, தென்பாண்டியச் சீமைக்கு கொண்டுபோனார்கள். இங்கே இருந்தால் உற்றார், உறவினர் வந்து பார்த்துவிடுவார்களோ என்று பயந்தோ என்னவோ தெரியவில்லை. கல்லும், முள்ளும், பாம்பும் நிறைந்த பாளையங்கோட்டை சிறைச்சாலையில் அடைத்து வைத்திருந்தார்கள், தனிச் சிறைச்சாலையிலே அடைத்து வைத்திருந்தார்கள். ஒன்றை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும். அவர்களைக் கேட்கிறேன். அவர் ஆளும் கட்சியில் இருந்தவர்கள் என்றைக்காவது நாங்கள் நிதானம் இழந்தோமா ? இப்படி கொடுமையாக நடத்தினார்களே, இவ்வளவு கொடுமையாக நடத்திய காங்கிரஸ் மந்திரிசபையின் பேரில் நிதானம் இழந்தோமா ?

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய மந்திரிசபையின் பேரில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு என்று சொல்கிறார்கள்.

ஒன்றை நான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எதிர் கட்சியில் இருப்பவர்கள் எப்படி நடப்பது என்பதனை நீங்கள் 1957-லிருந்து 1962 வரையில் எங்களுடைய கழகத்தின் செம்மல்கள் பேசிய பேச்சுக்களை தயவு செய்து படியுங்கள். 1962-லிருந்து 1967 வரை நாங்கள் எப்படி நடந்துகொண்டோமோ அதை நீங்கள் கண்கூடாகப் பார்த்தீர்கள். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் குற்றச் சாட்டுகளை சுமத்தினோம். என்ன குற்றச் சாட்டுகள் ? பக்தவத்சலம் மந்திரிசபை தமிழனுக்கு விரோதமான மந்திரிசபை, வடநாட்டினுடைய ஏகாதிபத்தியத்திற்கு கை பிடிக்





கின்ற மந்திரிசபை, அவர்களுக்கு வெண்சாமரம் வீசுகின்ற மந்திரி சபை என்றுதான் சொன்னோம். இதைத்தான் சொன்னோமே தவிர, என்றைக்காகிலும், எந்த சமயத்திலாகிலும் வேறு லஞ்சக் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. நான் 1962-லிருந்து 1967 வரையில் நான் சட்டமன்றத்திலிருந்து பணியாற்றியிருக்கிறேன். 1966-வது வருஷத்தில் நான் பேசிய பேச்சை தயவு செய்து பொன்னப்ப நாடார் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், லைப்ரரியில் சென்று படியுங்கள். என்ன சொன்னேன் ? மதிப்பு மிக்க கவுரமான....

(திரு. கே. கந்தசாமி தலைமை.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 1962 முதல் 1967 வரையில் நானும் இந்த சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்தேன். தாங்கள் இந்த மன்றத்தில் எப்படியெல்லாம் நடந்துகொண்டீர்கள் என்று அப்பொழுது சபாநாயகராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களுக்குத் தெரியும். எங்களைப் போன்றவர்களுக்குத் தெரியும். என்ன ஆட்சேபணைகளையெல்லாம் தெரிவித்தீர்கள் என்று எங்களுக்கு மறக்கவில்லை. அது இப்பொழுதும் எங்களுடைய காதில் ரீங்கரித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முன்னாள் சபாநாயகராக இருந்தாரே உங்களுடைய கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் நிலைமை தவறி நடந்தார், அதன் காரணமாக பட்டார்.

நான் சொல்வது என்னவென்றால் 1966-ல் 50 பேர்கள் இருந்தோம். எங்களால் பேச முடியாது என்பது அல்ல. இந்த மந்திரிசபை மீது நாங்கள் குற்றச்சாட்டுகளை சுமத்தினோம். இந்திக்கு காட்டிக் கொடுக்கின்ற துரோகிகள் என்று சொன்னோம். தமிழைக் காட்டிக் கொடுக்கின்ற துரோகிகள், வடநாட்டுக்கு அடிமையாக நீங்கள் பல்லக்கு தூக்குகின்ற எஜமானர்கள் என்று கடுமையாகச் சொன்னோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் மந்திரிசபை லஞ்சம் வாங்கியது என்று நாங்கள் சொல்லவில்லை. அதற்காக ஒன்றுமே இல்லை என்று தயவு செய்து உறுப்பினர்கள் நினைக்கவேண்டாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 1971-ல் வட நாட்டிலுள்ள இந்திரா காந்தியுடன் கூட்டு சேர்ந்து நீங்கள் போட்டியிட்டீர்களே ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : * * * * *

MR. CHAIRMAN (THIRU K. KANDASAMI) : Mr. Krishnamoorthy will please resume his seat. To maintain decorum, I order the word to be expunged from the proceedings.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நாங்கள் 50 பேர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக சட்டமன்றத்தில் இருந்தாலும், நாங்கள் காங்கிரஸ் மந்திரிசபையின் மீது லஞ்சக் குற்றச்சாட்டை சுமத்தவில்லை. என்ன அர்த்தம் ? சுமத்த முடியாது என்பது அல்ல. ஒன்றுமே இல்லை

* பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

என்பது அர்த்தம் அல்ல. ஆனாலும், பொறுப்பு உள்ள எதிர்க்கட்சியாக இருந்த காரணத்தினால் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருகிற நோக்கத்தினால், நாங்கள் கூறுகிற குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருக்கிறதா என்று பார்த்து, அப்படி ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. சொல்லவில்லை என்பதினால் மட்டும் அவர்கள் தப்பித்துவிட முடியாது.

ராஜாஜி அவர்கள் "நீங்கள் 10 வருஷங்களுக்கு முன்பே சொல்லியிருக்க வேண்டும்" என்று சொல்கிறார். நாங்கள் சொல்லவில்லை. பொறுப்பு உள்ள எதிர்க்கட்சியாக இருந்தோம். நாங்கள் அந்த சமயத்தில் எல்லாம், 100-க்கு மேற்பட்டவர்களைச் சுட்ட சமயத்தில், மக்கள் சிறைச்சாலையில் இருந்து வாடிய சமயத்தில் நாங்கள் நிதானம் இழந்தோமா? நிதானம் இழக்கவில்லை. அதைத் தான் எதிர்க்கட்சியினருக்குச் சொல்ல விரும்புகிறேன். இங்கே இருப்பவர்களுக்கும் சரி, வெளியே சென்றிருக்கிறார்களே அவர்களுக்கும் சரி. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து நிதானத்தை இழக்கவேண்டியதில்லை. எங்கள் மந்திரிசபை மீது குற்றச்சாட்டை சொல்கிறீர்களா? சொல்லுங்கள். சட்டமன்றத்தை நம்பவில்லை என்றால் யாரை நம்பப் போகிறீர்கள்? இந்த மன்றத்தில் பேசினால் கோர்ட்டில் வழக்குப் போட முடியாது. வெளியே பேசினால் கோர்ட்டில் வழக்கு போடலாம். நீங்கள் கவர்னர் அவர்களைக் கூட நம்பமாட்டேன் என்கிறீர்கள். உங்களை அல்ல, வெளியே இருக்கிற சபைக்கு வராதவர்களைச் சொல்கிறேன். கவர்னரை நம்பமாட்டேன் என்று சொல்கிறார்கள். உண்மை இருந்தால், நீங்கள் தயவு செய்து யாராக இருந்தாலும் குற்றச்சாட்டுகளை சட்டமன்றத்தில் சொல்லலாம். எங்களுடைய மந்திரிசபையில் யாராகிலும் தவறு செய்தவர்கள் இருப்பார்களேயானால் நாங்கள் அதை மூடி மறைக்கின்ற உறுப்பினர்கள் அல்ல. எப்படி டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு உரிமை இருக்கிறதோ, எப்படி அதை அவர்கள் அணுகுகிறார்களோ, நாங்களும் இந்தப் பிரச்னையை அப்படி அணுகுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், இருந்தால் அல்லவா சொல்லவேண்டும்? இல்லாத ஒன்றை, இல்லாத புகாரை மந்திரப் பெட்டியில் மூடி வைத்துக்கொண்டு, இதோ பார், இதோ பார், இருக்கிறது என்று சொல்வதைப் போல, மூடி வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். இது நியாயமா என்பதனை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சி தன்னுடைய கடமையை, தங்களுக்கு இருக்கிற உரிமையை சரியாக பயன்படுத்தவில்லை, துஷ்பிரயோகப்படுத்துகிறார்கள் என்று தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவதாக, டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சி தலைவர் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் இருக்கிறார். சிறந்த பேச்சாளர். டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கிறார். மற்றுமுள்ள எதிர்கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். நான் ஒன்றை கூற விரும்புகிறேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் எங்களோடு நெருங்கி இருந்தவர். இல்லையென்று சொல்லவில்லை. சட்டமன்றத்தில் அவர்கள் இன்றைக்கு இல்லை. அவர் இங்கே இல்லாத காரணத்தினால் அவரைப்பற்றி குறைவாகச் சொல்லவில்லை. எங்கள் கட்சியில் சில தகராறு எற்பட்டது. அந்தத் தகராறின் காரணமாக அவர் வெளியேற்றப்பட்டார். காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்த



சமயத்தில் எங்களுடைய தலைவர் என்ன சொன்னார்? எங்களுடைய டாக்டர் கலைஞர் என்ன சொன்னார்? நீங்கள் இரண்டு பேர்களும் ஒற்றுமையாக இருங்கள், உடையவேண்டாம், இரண்டு கட்சிகளும் ஒன்றாக இருக்கவேண்டும், காங்கிரஸ் கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி, சிண்டிகேட் காங்கிரஸ் என்று இரண்டாக இருக்கக்கூடாது. ஒன்றாக இருங்கள் என்று சொன்னார். அதைத் தயவு செய்து புரிந்துகொள்ளலாம். எங்களோடு இருந்து, எங்களுடைய கட்சியில் இருந்து, எங்களுடைய கட்சி உழைத்து நின்று வளர்ந்து அதனால் மேம்பாடு அடைந்தவர் எங்களுடைய கட்சியைத் தாக்குகின்ற சமயத்தில், அரசாங்கத்தைத் தாக்குகின்ற சமயத்தில், கட்சித் தொண்டர்களை தாக்குகின்ற சமயத்தில் நாங்கள் சும்மா இருப்பது நியாயமா? முஸ்லீம் லீக் கட்சியில் இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், மற்றவர்கள் "நீங்கள் செய்வது சரியில்லை" என்று சொல்வது தான் நியாயம். நீங்கள் செய்வது சரி என்று சொல்வது எந்த ஜனநாயகத்தில் இருக்கிறது? நாங்கள் அவரை கட்சியைவிட்டு விலக்கினோம் என்று சொன்ன பிறகு தமிழகத்தில் அவர் பேரில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அவரை ஆதரிக்கிறார்கள். சினிமா உலகத்தில் அவர் பேரில் இருக்கக்கூடிய அன்பின் காரணமாக, பாசத்தின் காரணமாக அவரை ஆதரிக்கிறார்கள், ஒன்றிரண்டு நாளைக்கு. விளைவு என்ன? அதற்காக 60 லட்சம் ரூபாய் பெறக்கூடிய பஸ்களை, அரசாங்க பஸ்களை கொளுத்துவது நியாயமா? எந்த எதிர்க்கட்சித் தலைவர்களாவது அப்படிச் செய்வதைக் கண்டித்திருக்கிறார்களா? அது மட்டுமல்ல. இந்த அவையிலே இரண்டு, மூன்று ஆண்டுகளாக முதல் அமைச்சராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞரைப்பற்றி தமிழகத்தில் எவ்வளவு கேவலமான வார்த்தைகளில் அச்சடித்த நோடீஸில் எழுதப்படுகின்றன, பஸ்களில் எழுதப்படுகின்ற வாசகங்கள், சுவற்றில் எழுதப்படுகின்ற வாசகங்கள், வார்த்தைகள் எவ்வளவு கேவலமாக எழுதப்படுகின்றன?

நான் ஒன்றைக் கேட்கிறேன். நீங்களும் தமிழர்கள் தானே? இந்த நாட்டின் தமிழ் குடிமகன் மிகவும் பிற்பட்ட இனத்திலிருந்து தோன்றிய ஒரு குடிமகன் முதலமைச்சராயிருப்பது சகிக்க முடியவில்லையா? ஏன் நீங்கள் கண்டிக்கவில்லை?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு நான் சொல்கிறேன், எதிர்கட்சி சார்பாக. மதுரையில் நான் நிருபர்களைச் சந்தித்தபோது மிக அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாக இந்தமாதிரி வசனங்கள் எழுதுவது தவறு. அது மட்டுமல்ல. இந்த மாதிரி வன்முறைச் செயலில் யாராகயிருந்தாலும் ஈடுபடுவது நாட்டிற்கு நன்மையல்ல என்று திட்டவட்டமாக அறிக்கை கொடுத்ததை நான் நினைவுக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நான் பாராட்டுகிறேன். வன்முறைச் செயலில் ஈடுபடுகின்ற மாணவர்கள் மீது பொய் வழக்கு போடுகிறார்கள் என்று குற்றம் சாட்டினாரே புரட்சித் தலைவர், அவர்களை உங்கள் தலைவர் ஆசிர்வதிக்கின்றார். நீங்கள் செய்கின்றது புனிதமான போர் என்று. இது முறையா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாணவர்களைப் பொறுத்த வரையில் அந்த மாணவர்கள் தவறாக தாக்கப்பட்டார்களா, இல்லையா என்பது

பிரச்னை. பல மாணவர்களை அனாவசியமாக, தவறாக தாக்கப்பட்டார்கள் என்பது தான் எங்கள் கருத்து. ராஜாஜியைப் பொறுத்த வரையில் நமது மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள் சென்று சொன்னாலும் நான் ஊழலை ஒழிப்பதற்கு ஒரு இயக்கம் ஆரம்பிக்கின்றேன் என்று சொன்னாலும் கூட, ஊழலை ஒழிப்பதற்கு அவர் ஆதரவு கொடுக்கிறார். அதுமட்டுமல்ல. அவருக்கு இந்த புரொகிபிஷனைப் பொறுத்த வரையில் மிக அழுத்தம் திருத்தமாக, உண்மையாக He sincerely feels that the State is ruined because of the suspension of prohibition.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: புரொகிபிஷனை ஆதரிக்கிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை டாக்டர் ஹாண்டே ராஜாஜிக்கு விளக்கம் சொன்னார்களா? அப்படி ஆதரிப்பதாக சொல்லக் கூடியவர்கள் எப்படிப்பட்டவர்கள், புரொகிபிஷனுக்கும் அவர்களுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு என்ற இந்த விளக்கங்களை ராஜாஜி அவர்களுக்கு டாக்டர் ஹாண்டே ரகசியமாகச் சொன்னாரா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த ரகசியத்தைப் பொறுத்த வரையில் எனக்கு தெரியாது. என்னைப் பொறுத்த வரையில் ராஜாஜி என்னிடம் சொன்னார்கள். புராகிபிஷனை ஆதரிக்கிறேன் என்று எம். ஜி. ஆர். அவர்கள் சொல்லியிருப்பதாக என்னிடத்தில் சொன்னார்கள். ஊழலை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்கிறேன் என்றும் சொன்னார். இந்த இரண்டு காரணங்களுக்காக ஆசிர்வாதம் கொடுக்கிறார். அதை யார் கேட்டாலும், நல்ல வகையில் நான் ஒழிப்பதற்காகயிருக்கிறேன் என்று சொன்னால் கொடுப்பார்கள். எங்கள் தலைவர் ராஜாஜியைப் பொறுத்த வரையில் யார் தவறு செய்தாலும் கண்டிப்பார்கள். நல்ல காரியம் செய்கிறேன் என்று முற்பட்டால் செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். முன்பே செய்திருக்கலாம் என்று சொல்லுகிறார். அவரைப் பொறுத்த வரையில் பெருந்தன்மையான வார்த்தை. அப்படிப்பட்டவரிடத்தில் ரகசியமாக சொல்லியிருக்கலாம் என்றால் அந்த ரகசியம் எனக்கு தெரியாது. உங்களோடு இருந்த காரணத்தினால் அந்த ரகசியத்தை நான் தெரிந்து கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் மு.கருணாநிதி: மதுவிலக்குக்காக போராடுவோம், மதுவிலக்கை ரத்து செய்வதை எதிர்ப்போமென்று புதிய கட்சியின் தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் ராஜாஜி அவர்களிடத்தில் சொனனதாகவும், ராஜாஜி அவர்கள் அந்த நல்ல காரியத்தை பாராட்டி வாழ்த்தினார்கள் என்று மாண்புமிகு நண்பர் ஹாண்டே அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் அந்த வாழ்த்துப் படலம் முடிந்து நாட்கள் அதிகமாக உருண்டோடிவிட்டன. அதற்குப் பிறகு வாழ்த்துப் பெற்ற அந்தக் கட்சியின் தலைவர் மதுவிலக்கு திட்டத்திற்காக ஏதாவது பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறாரா அல்லது அந்தக் கொள்கையை வைத்து அதற்காக ஏதாவது ஒரு போராட்டத்தில் ஈடுபட்டாரா? இந்தக் கட்சியில் இருக்கும்போது ஒரு பிரசாரக் குழு அமைத்து, அதன் தலைவர் என்று சொல்லி அந்தக் குழுவை இரண்டு, மூன்று முறை கூட்டினார்கள். அதாவது புதிய கட்சித் தலைவர் செய்தாரா? இவ்வளவும் செய்யாமலிருக்கும்போது, என்னிடத்தில் சொல்லி விட்டு, ஏன் செய்யவில்லை என்று ராஜாஜி கேட்டாரா?



டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய முதலமைச்சருக்குத் தெரியும். ராஜாஜி இப்போது தான் சுமாராக இருக்கிறார் என்று. அனாவசியமாக அவரை இழுக்க வேண்டாமென்று நினைக்கிறேன். அவரைப் பொறுத்த வரையில் ஆசீர்வாதம் கொடுத்தார்கள். அதற்கு பிறகு சின்ன details க்கு போகமாட்டார். "What is his age?" ஆசீர்வாதம் கொடுக்கின்ற நேரத்தில் நல்ல காரியம் செய்வார் என்ற நம்பிக்கையோடிருக்கிறார்கள். அதைப் பிறகு பார்ப்போம். கொஞ்ச நாளுக்குப் பிறகு பார்ப்போம். என்ன இப்போது ராஜாஜி எழுதிக் கொண்டிருக்கிறார். இன்னும் அரசியல் நிலைமை குழப்பமாகயிருக்கிறது. பிறகு சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதோடு விட்டு விடுவது நல்லது என்று நினைக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ராஜாஜி அவர்களுடைய உடல் நலத்தைப் பற்றிச் சொன்னார்கள். நானும், அவை முன்னவரும் போய் பார்த்தோம். அவர் உடல் நலம் பெற்று, நீண்ட நாள் வாழ வேண்டுமென்ற வாழ்த்தை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ராஜாஜி அவர்கள் ஒரு விஷயத்தில் ஆசீர்வாதம் செய்து விட்டாலும், அதிலே அதிகமாக கவனம் செலுத்திக் கொண்டிருக்கமாட்டார்கள். இப்போது அதற்கு நேரமுமில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ராஜாஜி ஒரு காரியத்தை ஆதரிக்கத் தொடங்கின பிறகு, அவருடைய கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே போன்றவர்கள், அவரை ஆதரித்து எழுதிக் கொண்டிருக்கின்ற சுயராஜ்யா, கல்கி போன்ற பத்திரிகைகள், அதிலே இருக்கிற பத்திரிகை ஆசிரியர்கள், ராஜாஜி வாழ்த்தைப் பெற்ற எம். ஜி. ராமச்சந்திரனுக்கு மதுவிலக்கு திட்டத்தைப் பற்றி ஞாபகப்படுத்தியிருக்கிறார்களா? ராஜாஜி அல்ல. ராஜாஜியைப் பின்பற்றி இருக்கிற பத்திரிகை நடத்துகின்றவர்கள் ஞாபகப்படுத்தவில்லை. இனிமேல் ஞாபகப்படுத்துவார்களா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். அவையிலும் சரி, வெளியிலும் சரி.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, எதிர் கட்சியிலேயிருக்கின்றவர்கள் எல்லாம் தூண்டி விட்டுவிட்டு, பின்னால் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. அதை நாங்கள் மறுக்கிறோம். அதற்குப் புறம்பாக வன்முறையினால் மாணவர்களை வேண்டுமென்றே தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது பலயிடங்களிலும் நடக்கிறது. அதை நாங்கள் விரிவாக இந்த மன்றத்தில் கூறுவதற்கு கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: எம். ஜி. ஆர். அவர்களை கழகத்திலிருந்து நீக்கிய பிறகு, மாணவர்கள் பஸ்ஸை அடித்தார்கள், நொறுக்கினார்கள் என்பது அல்ல. ரசிகர்களோடு மாணவர்கள் சேர்ந்தார்கள். ரசிகர்கள் அவர்களை சேர்த்துக் கொண்டு செய்தார்கள். அது முறையல்ல என்பதைதான் சொல்லுகிறேன். மிகக் கேவலமான, அசிங்க

மான வார்த்தைகளால் முதலமைச்சர் அவர்களைப் பற்றி எழுதினார்களே, அதை எந்தத் தலைவராகிலும் கண்டித்தார்களா ? எம்.ஜி.ஆர். அவர்கள் ராஜாஜி அவர்களைப் பார்க்கச் செல்லுகிறார்கள். எம்.ஜி.ஆர். யார் ? நாட்டில் பஸ்ஸை கொளுத்துகிறார்கள், பஸ்ஸை அடிக்கிறார்கள், கேவலமாக எழுதுகிறார்கள். அப்படி கேவலமாக எழுதுவதை அவர்கள் அனுமதித்துக் கொண்டு பேசாமலிருக்கிறார்கள். அப்படி பேசாமலிருக்கின்ற தலைவரைப் பார்த்து, ஆசீர்வாதம் என்றால் என்ன அர்த்தம் ? ஆகையினால் நான் பெரும் தலைவரைச் சொல்லுகிறேன். அவர்கள் குற்றம் செய்வதற்கு காரணமாக இருக்கின்றவர்களை ஆசீர்வாதம் செய்திருக்கிறார்கள். தமிழன் உணர்ச்சி அவர்களிடத்தில் கொஞ்சம் இருக்க வேண்டும். இல்லை என்று சொல்லவில்லை. இன்னும் அதிகமாக இருக்க வேண்டும். ஏனென்றால் பொன்னப்ப நாடார் அவர்களை தெருவில் போகின்றவன் தரக் குறைவாகப் பேசிவிட்டால், நான் சும்மா விட்டு விடுவேனா ? காமராஜை தரக்குறைவாகப் பேசிவிட்டால், விட்டு விடுவேனா ? தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை கேவலமாகப் பேசியவர்களை இவர்கள் கண்டிக்கவில்லை என்பதைத் தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முதலமைச்சரைப் பற்றி நிறைய பேசுகிறார்கள். ஒவ்வொன்றிலும் குறை காணுகிறார்கள். எத்தனையோ குறைகள். குறைகளுக்கு இடம் கிடையாது. பிறந்த நாள் விழா எதற்கு, ஏன் என்று கேட்கிறார்கள். ஏன் ஆயிரக்கணக்கான மக்கள் போகிறார்கள். பிறந்த நாள் விழா என்று யாரிடத்தில் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அவர்களிடத்தில் போகிறார்கள். அதில் குறையொன்றுமில்லை. ஆனால், பிறந்த நாள் கொண்டாடிய முதலமைச்சர்கள் இருக்கிறார்கள் தமிழ் நாட்டில்.

காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். பிறந்த நாளைக் கொண்டாடினார்கள். கேக் வெட்டினார். இன்னொருவர் இட்லி வெட்டினார். இன்னொரு முதலமைச்சர் இட்லிதான் தமிழ்நட்டுப் பண்பாடு என்று இட்லி கேக்கை வெட்டுகிறேன் என்று சொன்னார். நம்முடைய முதலமைச்சர் பிறந்த நாள் விழாவுக்கு எல்லோரும் போகிறோம். மாலை போடுகிறோம். எங்களுக்கு பனிஷ்மெண்டு கொடுக்கிறார். என்ன பனிஷ்மெண்ட் ? நீ மாலையோடு 100 ரூபாய் கொண்டுவந்தால் ஏற்றுக் கொள்வேன். நீ மாலையோடு ஆயிரம் ரூபாயும் கொண்டுவந்தால் ஏற்றுக் கொள்வேன், குறைந்த பட்சம் 10 ரூபாய் கொடுத்தால் தான் மாலை போட முடியும். வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போய் விடுகிறாரா ? பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்காக கொடுக்கிறார். மிகப் பெரிய பதவியில் இருக்கின்றவர்கள் தாழ்ந்த நிலையில் இருக்கின்ற மக்களை எண்ணிப் பார்க்கிறார்களே, அவர்களை நீங்கள் போற்றுவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும். காந்தியை ஏன் உலகம் போற்றிற்று ? இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கி தந்து விட்டார் என்பதற்காக மட்டும் அல்ல. உலகத்தில் எத்தனையோ நாடுகள் விடுதலையடைந்தது. அதற்குப் பல தலைவர்கள் பாடுபட்டார்கள். அவர்களையெல்லாம் உலகம் போற்றவில்லை. காந்தி பாரிஸ்டராக இருந்தார். ஆனால் அவர் சுதந்திரத்திற்காக மட்டும் பாடுபடவில்லை. தாழ்த்தப்பட்ட அரிசனங்கள் மேம்பாட்டிற்காக பாடுபட்டதற்கு உலகம் அவரைப் பாராட்டுகின்றது.





தொட்டாலே பாவம், தனக்கு அந்த நோய் ஒட்டிக்கொள்ளும் என்று எல்லோராலும் வெறுக்கப்படுகின்ற தொழு நோயாளியை காந்தியடிகள் தடவிக் கொடுத்து, தன் கையாலேயே மருந்து கொடுத்தார். முற்பகல்
அந்தக் குஷ்ட நோய் பிடித்தவரை தடவிக்கொடுப்பதை நாம் படத்திலே 11-30
பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்களைத்தான் நாம் பெரியார்கள் என்று போற்றுகிறோம் ; பாராட்டுகிறோம்.

ஆனால் எங்களுடைய முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த நாளையும் பார்க்கிறோம். அங்கே கேக் வெட்டப்படவில்லை ; இட்டலி வெட்டப்படவில்லை, வடை வெட்டப்படவில்லை. ஆனால், எங்களை வெட்டுகிறார்கள். 100 ரூபாய் கொண்டுவந்தால்தான் மாலை போடலாம் ; 100 ரூபாய் கொண்டு வந்தால்தான் என்னை பிறந்த நாள் அன்று பார்க்கலாம் என்று சொல்லி எங்களை வெட்டுகிறார்கள். இப்படியாக சேர்த்த ஒரு கோடி ரூபாய் பணத்தை அவர் எடுத்துக்கொள்ளவில்லை. குஷ்டநோய் பிடித்துள்ள பிச்சைக்காரர்களுக்கு, அவர்களின் நல்வாழ்விற்காகக் கொடுத்தார்கள். உடனடியாக எல்லா பிச்சைக்காரர்களுக்கும் கொடுக்க முடியாது. அந்த அளவுக்கு கடந்த 20 ஆண்டு கால ஆட்சியிலே பிச்சைக்காரர்களைப் பெருக்கிவிட்டிருக்கிறார்கள். அதனால், எல்லாப் பிச்சைக்காரர்களுக்கும் உடனடியாக நிவாரணம் அளிக்க முடியும் என்பது எளிதான ஒரு செயலல்ல. ஆனால், இன்னும் ஒரு 10 ஆண்டு காலத்திற்குள்ளாக அதையும் செய்யமுடியும். ஆகவே, முன் எச்சரிக்கையாக தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சரவர்களைப் பாராட்ட வேண்டாம் ; அவர்களைப் போற்ற வேண்டாம் ; அவர்கள் மீது வசை பாடாமல், அவர்களை தூற்றாமல் இருந்தால் போதும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இந்த ஆண்டு பிறந்த நாள் விழாவிலே 10 லட்சம் குருடர்களுக்கு கண்ணொளியற்றவர்களுக்கு உதவியிருக்கிறார்கள். கண்ணொளி சிகிச்சை பெறவேண்டுமென்றால் எழும்பூரில் இருக்கும் மருத்துவமனைக்குத்தான் வரவேண்டும். ஆனால், ஏழை எளிய மக்களால் கோவையிலிருந்து, மதுரையிலிருந்து, திருநெல்வேலியிலிருந்து இங்கே வந்து சிகிச்சை பெற வேண்டுமென்றால் அது முடியக்கூடிய காரியமா ? ஆகையால்தான் இந்த ஆண்டு கண்பார்வை அற்றவர்கள் இருக்கின்ற ஊர்களுக்குச் சென்று சிகிச்சை செய்யும் முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஊர்ப்புறங்களிலே இருக்கின்ற ஹைஸ்கூல்களையும், காலேஜ்களையும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கண் ஆஸ்பத்திரியாக கன்வெர்ட் செய்திருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் குறை கூறட்டும் ; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், இம்மாதிரியான நல்ல காரியங்கள் செய்யும் போது அதைப்பற்றிக் குறை சொல்லாதீர்கள். அப்படிக் குறை கூறுவதானால் தொழு நோயாளிகள் மறுவாழ்வு பெறுவது உங்களுக்கு பிடிக்கவில்லையா ? கண் பார்வையற்றவர்கள் பார்வை பெறுவது உங்களுக்கு பொறுக்கவில்லையா ? ஆகவேதான் சொல்லுகிறேன் இவைகளைப்பற்றியெல்லாம் குறை சொல்லாதீர்கள் என்று.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1972 டிசம்பர் 7

தமிழ்நாட்டிலே இதுவரை இல்லாத ஒன்று இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதுவும் வட மாநிலங்களிலே இருந்து இங்கு பரவியிருக்கிறது. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன். அங்கே—டில்லியிலே சொல்வார்கள் "ஆயாராம், கயாராம்" என்று. அதாவது வருவார்கள் போவார்கள் என்று சொல்வார்கள். அதே போன்று சிலர் நினைத்தால் ஒரு கட்சிக்கு வருவார்கள், நினைத்தால் போய்விடுவார்கள். இந்த நிலை ஆரம்பித்தது முதலில் பஞ்சாபிலே தான். அதற்குப் பின்னால் லக்னவ். அங்கே ஆளும் கட்சியாக இருந்தவர்கள் தங்களுக்கு பெரும்பான்மை வேண்டும் என்பதற்காக, தங்கள் கரத்தை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் செய்த ஏற்பாடுதான் இது. தாங்களே நிரந்தரமாக ஆளும் கட்சியாக இருக்கவேண்டும் என்பதற்காக டில்லி வட்டாரத்திலே இருப்பவர்கள் செய்த வேலை. அது இன்று தமிழ்நாட்டிற்குப் பரவியிருக்கிறது. இங்கே அந்த வேலையில் தீவிரமாக ஈடுபட்டு இருப்பவர் நம்முடைய புரட்சித் தலைவர் என்று சொல்லக்கூடிய எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள். எங்கள் பக்கத்திலே இருந்து போயிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கட்சி என்பது மக்களுக்கு தொண்டு செய்வதற்காக ஏற்பட்ட ஒன்று, தன்னுடைய சுய நலத்திற்காக ஏற்பட்டதல்ல கட்சி. தனக்கு மதிப்பில்லை என்றால், தனக்கு லாபம் இல்லை என்றால், தனக்கு செல்வாக்கு இல்லை என்றால், தனக்கு மந்திரிப் பதவி கொடுக்கவில்லை என்றால், தனக்கு அதிகாரம் இல்லை என்றால் அந்தக் கட்சியில் இனி இருக்கக்கூடாது என்று எண்ணி புதுக் கட்சி ஒன்றைத் தொடங்கியிருக்கிறார் திரு. இராமச்சந்திரன். இது எதைப்போலிருக்கிறது என்றால் "கானலை நீரென்றெண்ணி கடுவெளித்திரியுமானைப்போல" என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மீண்டும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் முதலில் ராமசாமி படையாச்சி அவர்களை வென்று எம். எல். ஏ. ஆனேன். 1957-ல் நான் வெற்றிபெறவில்லை. 1967-ல் பாராளுமன்ற உறுப்பினரானேன். இப்போது மீண்டும் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன். அந்த அனுபவத்தை வைத்து ஒன்றைச் சொல்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக ஒன்றரை மாத காலமாக எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைப் பயன்படுத்தி இங்கே என்னென்ன வேலைகளை எதிர்க்கட்சிக்காரர்கள் செய்துவருகிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். "நரி வாலை விட்டு கடல் ஆழம் பார்ப்பது போல" என்று சொல்வார்கள். இவர்களுடைய போக்கும் அப்படித்தான் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பெரிய கடல்—இந்துமகா சமுத்திரம். எம். ஜி. இராமச்சந்திரன் போன்றவர்களை வைத்து அதன் ஆழத்தைக் கணக்கிட முடியாது. மீறி ஆழம் பார்த்திட விரும்புவீர்களேயானால், நிச்சயமாக அந்தக் கடலிலே நீங்கள் மூழ்கிவிடுவீர்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு லஞ்சம், ஊழல், பயங்கரம் இப்படிப்பட்ட கெட்ட எண்ணங்களை மக்களிடத்திலே பரவவிட்டு வருகிறார்கள். ஒரு எம். எல். ஏ. என்றால் லஞ்சம் வாங்குபவர், பயங்கரம் விளைவிப்பவர் என்று நாட்டுமக்கள் எண்ணக்கூடிய விதத்திலே தூபமிட்டிருக்கிறார்கள்.



1972 டிசம்பர் 7] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

ஒரு எம்.எல்.ஏ. என்றால் அவருக்கு சொத்து இருக்கக்கூடாதா? கார் இருக்கக்கூடாதா? பணம் இருக்கக்கூடாதா? எம்.எல்.ஏ. என்றால் 250 ரூபாயாகக் கொடுக்கும் சம்பளத்தை மட்டும் நம்பியா இங்கே வந்திருக்கிறார்கள்? எத்தனை எம்.எல்.ஏ.க்கள் மிட்டாமிராசுதாரர்களாக, 10 ஏக்கர் 15 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள்? எத்தனை பேர் அட்வகேட்களாக இருக்கிறார்கள்? எத்தனைபேர் டாக்டர்களாக இருக்கிறார்கள்? எம்.எல்.ஏ. ஒரு பியட் கார் வாங்கிவிட்டால் அதை மிகப் பெரிதுபடுத்திப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலையில் கார் வாங்குவது ஒரு பெரிய காரியமல்ல. 2,000 ரூபாய் இருந்தால் கார் வாங்கிக்கொள்ளலாம். மார்வாடி இடத்திலே பணத்தை வாங்கி ஒரு பியட் கார் வாங்கிவிட்டால் "பார்த்தாயா பார்த்தாயா, நேற்று வரை தெருவிலே நடந்து சென்றவன் சைக்கிளில் கூட செல்வதற்கு வசதியற்றவன் இன்றைக்கு காரில் போகிறான் பார்த்தாயா" என்று பேசுகிறார்கள். எங்காவது கடன் வாங்கி ஒரு வீட்டைக் கட்டினால் "பார், பார் வீடு கட்டிவிட்டான்" என்று சொல்கிறார்கள். தவறு நடக்காது என்று சொல்லவில்லை. தவறு நடந்தால் இந்த மன்றத்திலே அதைத் தைரியமாக கூறலாம். அப்படிச் சொல்லும்போது இதையெல்லாம் சட்டமன்றத்திலேயா கூறுவார்கள் என்று பேசுகிறார்கள். சட்டமன்றத்தில் கூறாமல் பின் மூர்மார்க்கெட்டிலா பேசுவார்கள் என்று நான் அவர்களைக் கேட்கிறேன். இந்த மன்றத்தில் குற்றச்சாட்டுக்களை சுமத்திட முடியாதவர்கள் வெளியிலே போய் எதை எதையோ சொல்கிறார்கள். அந்த முறையிலேதான் நம்முடைய புரட்சித் தலைவரும் ஈடுபட்டிருக்கிறார். கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஆயிரக் கணக்கில் பணம் செலவுபண்ணி அவசரம் அவரசமாக டில்லிக்குப் போயிருக்கிறார். அவர் டில்லிக்கு ஏன் போகவேண்டுமென்று தெரியவில்லை. நான் ஒரு லட்சம் வாக்குகள் பெற்று வெற்றிபெற்றிருக்கிறேன் என்றால் இன்றைக்கு ஒரு ஆயிரம் பேர், ஒரு 500 பேர் வந்து ராஜிநாமா செய் என்று சொன்னால் என்ன அர்த்தம்? 500 பேர் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக நான் ஏன் ராஜிநாமா செய்ய வேண்டும்? அது மட்டுமா சொல்கிறார்கள்? இன்னும் என்னென்னமோ சொல்லித் திரிகிறார்கள்.

புரட்சித் தலைவரின் போக்கைப் பார்க்கும்போது எனக்கு எலி—தவளை கதைதான் நினைவுக்கு வருகிறது. எலி, என்னைக் கட்டிப்பிடித்துக்கொள், என்று தவளையிடம் சொல்லி, கரையில் இழுத்தது. தவளை எலியைக் கட்டிப்பிடித்துக்கொண்டது. பின் தவளை எலியிடம் தன்னைப் பிடித்துக்கொள்ளச் சொல்லி, தண்ணீருக்குள் இழுத்துச் சென்றது. தவளையைக் கட்டிப்பிடித்துச் சென்ற எலி தன்னால் மூச்சுவிட முடியாமல், மூச்சுத் திணறி இறந்துவிட்டது. அதே கதிதான் இன்று எம். ஜி. ஆரைச் சுற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கும். எலியாலே மூச்சுவிட முடியவில்லை என்றால் மதியழகனால் எப்படி மூச்சுவிட முடியும்? அந்த நிலையையாரும் எண்ணிப்பார்க்கவில்லை.

நாங்கள் ஒரு தவறு செய்துவிட்டோம். யார் யாரைச் சேர்த்துக் கொள்வது என்றில்லாமல் வந்தவர்களை எல்லாம் சேர்த்துக்கொண்டுவிட்டதுதான் அந்தத் தவறு. கம்யூனிஸ்ட் கட்சியிலே மெம்பர்களைச்

சேர்த்துக்கொள்வதற்கு ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியில் ஒருவன் மெம்பராக வேண்டுமானால், அவன் இரண்டு பேரை கொன்றிருக்க வேண்டும், மூன்றுபேர் கையை முறித்திருக்க வேண்டும்; ஐந்து பேரைக் கொன்று மணலிலே புதைத்திருக்க வேண்டும், பத்து இடத்திலே கொள்ளையடித்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட குவாலிபிகேஷன்ஸ் வேண்டும். ஆனால், கழகத்தில் எந்த நியதியும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு "ஓய்டு ஓப்பன் கேட்". எப்போதும் திறந்திருக்கும். யார் வேண்டுமானாலும் வரலாம். மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் வேண்டுமானாலும் வரலாம். அவர் வரமாட்டார் என்று எனக்குத் தெரியும். (சிரிப்பு).

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் உங்கள் கட்சியில் சேரமாட்டேன்: உங்கள் கட்சிக்கு வரமாட்டேன். (ஒரு குரல், இன்றல்ல), எங்கள் கட்சியை விட்டு இன்று அல்ல, நாளை அல்ல, ஒரு நாளும் உங்கள் கட்சிக்கு வரமாட்டேன் வரவேண்டிய அவசியமில்லை என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** இன்னும் கொஞ்ச நாள் பொறுத்து ஒரு நாள் வரவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். தமிழ்நாட்டிலே இரண்டே இரண்டு அணிகள் தான் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஒன்று இந்திரா காங்கிரஸ், வலது கம்யூனிஸ்டும் அவர்களைச் சேர்ந்த அணியும். இன்னொன்று எங்கள் தலைமையில் இயங்குகின்ற அணி. இந்த இரண்டு அணிகளில் ஒன்றில் நீங்கள் சேரத்தான் போகிறீர்கள். இல்லையென்றால் சாமியாராகத்தான் போக வேண்டிய நிலை ஏற்படும்.

**Thiru R. PONNAPPA NADAR:** Sir, I strongly protest. This would not happen.

**Mr. DEPUTY SPEAKER:** After all it is a suggestion.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** நான் சொல்வதெல்லாம் எங்களுடைய கட்சியிலே சேருவதற்காக விதிமுறைகள் எல்லாம் வைக்காத காரணத்தினால், யார் யாருக்கு அந்தத் தகுதி என்று வைக்காத காரணத்தினால், யார் யாரை எப்படியெப்படி புகழ்வது என்று கூட கிடையாது. அம்மையார் அவர்கள் சினிமாவுக்குப் போவார்கள். அம்மையாரைப் போன்றவர்கள் சினிமா பார்க்கும்பொழுது, எல்லோருக்கும் ஒரு சைக்காலஜி படத்தை மெய்மறந்து பார்ப்போம். வில்லன் வருவான். வில்லன் நல்லவனாக நடிக்கிறவனை குத்துவான். பார்ப்பவர்களுக்கு வெறுப்பு, கோபம் ஏற்படும். அவனைப் போய் அடிக்கிறானே என்ற எண்ணம் வரும். ஆனால், நல்லவனாக நடிக்கிறவனெல்லாம் வாழ்க்கையிலே நல்லவன் என்று நினைத்துப் பாழாகிப் போகிறோம். கெட்டவனாக நடிக்கிற பாலையா அவர்களைக் கெட்டவனாக நினைத்துக் கொண்டிருந்தோம், அந்தக் காரணத்தினாலேதான் இந்த நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம். நீங்களெல்லாம் சிரிக்கிறீர்கள். நாங்கள் செய்த





தவறுக்கு நாங்களே வருந்துகிறோம். நாங்களே பரிகாரம் தேடுகிறோம். எனக்கு ஒரு பாட்டு நினைவுக்கு வருகிறது. இராமசந்திர கவிராயர் 19–ம் நூற்றாண்டிலே பாடிய பாட்டு நினைவுக்கு வருகிறது. இராமசந்திர கவிராயர், எம். ஜி. இராமச்சந்திரன் அல்ல. அந்தப் பாட்டு, எங்களுக்கு நாங்களே பாடுகிற பாட்டு. எங்களிடத்திலேயிருந்து போனவர்களைப்பற்றிய பாட்டு. ஒரு புலவர் வள்ளல் என்று சொல்கிற ஒருவனைப் பார்த்தேன் என்று சொல்கிற பாட்டு.

"கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
நாடறியா மறவனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்
போர் முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயம் என்றேன் சும்பல் தோளை—
வழங்காத கையனை நான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லைஎன்றான்........
யானும் என்தன் குற்றத்தால் ஏகின்றேனே!"

இல்லாதவனைப் போய் சொன்னோம் அல்லவா? அதற்காக அந்த ஆள் இல்லையென்று சொல்வான். அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மந்திரி சபை மீது நம்பிக்கை இருக்கிறது என்று இங்கே நாங்கள் சொல்கிறோம். 100–க்கு 51 பேர் என்ன சொல்கிறார்களோ அதுதான் ஜனநாயகம். ஒரே ஒரு ஆள் ரொம்ப புத்திசாலியாக இருப்பதற்காக அவர் சொல்வதை 99 பேர்கள் கேட்க வேண்டுமென்பதல்ல. அது ஜனநாயகம் அல்ல. பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் யாரை ஆதரிக்கிறார்கள்? ஒருவேளை திடீரென்று பொன்னப்ப நாடார் அவர்களுக்கே மெஜாரிட்டி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிக்கிற நிலை வந்துவிட்டால் அவர்தான் தலைவர். அந்த நிலை வராது. ஆகவே, அவர் தைரியமாக இருக்கலாம் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மந்திரி சபையை கலைத்துவிட்டு நாங்கள் வருவோமா இல்லையா என்பதை தேர்தல் வைத்துப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** தேர்தலில் பார்க்கலாம். கலைப்பதற்கு மருந்து எல்லாம் இருக்கிறது; நாம் எப்படி கலைக்க முடியும்? இப்பொழுது தேர்தல் வைத்தால் உங்களால் தாங்க முடியாது. அதற்காகத்தான் இரண்டு மூன்று வருஷம் டைம் கொடுக்கிறோம். சட்டமன்றத்தை வைத்து, நீங்கள் பேச வேண்டியதை எல்லாம் பேசிய பிறகு, அவைகளை எல்லாம் வெளியிலே மக்கள் நம்பட்டும். நம்பியதற்குப் பிறகு, 1976-லே நீங்கள் இங்கு வரமுயற்சி செய்யுங்கள். ஆனால், வரமாட்டீர்கள். அன்றைக்கு எம். ஜி. ஆர். அவர்கள் சொன்னார்கள். இப்பொழுதே தேர்தலுக்குத்தயாரா என்று கேட்டார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கே பதில் சொன்னார். நான் எழுந்தேன், பேச. எனக்கு அனுமதி அளிக்கவில்லை. அனுமதி அளித்திருந்தால், அன்றைக்கே சொல்லியிருப்பேன், 11-15 மணிக்கே,

12-00 மணிக்கே எலெக்ஷன் என்று சொன்னால், ஜனங்களைப் போய்ப் பார்க்கலாமே என்று சொல்லியிருப்பேன் தமிழகத்தினுடைய நலன்களைக் காப்பாற்றுவதற்காக பாடுபடுகிற மந்திரிசபை, அரிஜனங்களுக்கு நல்லது செய்கிற மந்திரிசபை, பாட்டாளிகளுக்குப் பாடுபடுகிற மந்திரிசபை, பிச்சைக் காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற மந்திரிசபை, கண்ணில்லாதவர் களுக்கு கண்ணொளி அளிக்கும் மந்திரிசபை, குடிசை வாழ் மக்களுக்கு வாழ்வளிக்கும் மந்திரி சபை—நாங்கள் ஆட்சிக்கு வந்தகாலத்தில் எத் தனை இடங்களில், குடிசைகள் எறிந்தன ; உடனே சிமெண்ட், ஆஸ் பெஸ்டாஸ் ஒடு போட்டோம். அப்பொழுதே அண்ணா அவர்கள், ஓட்டையே எடுத்துக் கொண்டு சென்றால் என்ன செய்வது என்றார்கள். உடனே நாங்கள், வீடு கட்டிக் கொடுங்கள் என்றோம். எங்களுடைய அண்ணா அவர்கள் வழி வந்த கலைஞர் அவர்கள் மாடி வீடு கட்டிக் கொடுத்தார்கள். அந்த மந்திரிசபையைப் பற்றிக் குறையாவது சொல் லாமல் இருக்கலாம் அல்லவா ?

ஆகையினால், இந்த மந்திரிசபை மேல் நம்பிக்கையில்லையென்றால், எங்களுடைய தமிழகத்தினுடைய மானத்தைக் காப்பாற்றுகிற ஆட்சியின் மேல் நம்பிக்கையில்லை யென்றால், இந்தியை இங்கு புகுத்த முனைகிற ஆட்சியை இங்குக் கொண்டு வர வேண்டுமா ? அரிசிக்கு மக்கள் திண்டாடுகின்ற காட்சியை மீண்டும் இந்தத் தமிழகம் பார்க்கவேண்டுமா ? குடிமக்கள் சாகவேண்டுமா ? ஆகையினால்தான் இந்த அவையில் இருக்கக் கூடிய உறுப்பினர்களுக்கும், இந்த மன்றத்திற்கு வராதவர் களுக்கும், வெளியிலே இருக்கிறவர்களுக்கும் இன்றையதினம், டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகிற மந்திரிசபைமீது தமிழகம் நம்பிக்கை தெரிவித்திருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திலும் அந்த நம்பிக்கை இருந்து கொண்டிருக்கிறது, என்று தெரிவித்து, இந்த அவையிலே எங்களுடைய ஆதரவினை தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார் :</u> தலைவர் அவர்களே, உயர்திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இன்னும் வரப்போகின்ற நாட்களில், தமிழ கத்திலே இரண்டு கட்சிகள்தான் இருக்கும் என்றும், நாங்கள் அவர்க ளோடு சேரப்போவதாகவும் சவால் விட்டார்கள். நாங்கள் உங்களோடு சேருவதாக இல்லை. அவர்கள் சவால் விட்டார்கள், தேர்தலைச் சந்திக்கத் தயாரா என்று ? நாங்கள் தேர்தலில் மக்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். நாங்கள் தேர்தலில் வெற்றி பெற்று வருவோம் என்பதைப் பரிபூரணமாக நம்புகிறோம். மக்களுடைய ஆதரவு எங்கள் பக்கம் இருக்கிறது என்பதை நம்புகிறோம். இந்தச் சவாலை தி.மு. கழகம் விடுத்தாலும் சரி, அண்ணா தி.மு. கழகம் விடுத்தாலும் சரி, அதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் தயார்தானா என்று கேட்கிறேன். எந்தத் தேர்தலிலும் உங்களைச் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, நான் நேற்று முன்தினம் இந்த அவையிலே பேசியபொழுது, தமிழ்நாட்டிலே





அடுத்தத் தேர்தலை மூன்று அணிகள் சந்திக்கும் என்று குறிப்பிட்டேன். அது ஒரு கருத்து, கட்சியினுடைய முடிவு அல்ல. நாட்டில் இப் பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையினுடைய அடிப்படையில் நான் கணித்துச் சொன்னது அது. ஒரு அணி, தி.மு. கழகத்தின் தலைமையிலே இருக்கிற தோழமைக் கட்சிகளின் அணியாகும். இன் னொன்று இந்திரா காங்கிரசினுடைய தலைமையிலே இயங்குகின்ற கம்யூனிஸ்டு கட்சி, அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுடைய அணியாகும். மூன்றாவது அணியாக ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைமை யிலே இயங்குகின்ற அதனுடைய தோழமைக் கட்சிகள் இணைந்தது, அல்லது தனித்து நிற்பதாக இருந்தாலும் அது அவர்களுடைய விவ காரம். அந்த வகையிலே மூன்றாவது அணி இருக்கும் என்ற கணிப் பினைத்தான் அன்றைக்குச் சொன்னேன். இன்றைக்கு, நம்முடைய நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்பொழுது, காங்கிரஸ் கட்சி யினுடைய அணியும், முன்னேற்றக் கழகத் தலைமையிலே இயங்கு கின்ற அணியும் ஒன்றுசேரக்கூடும் அல்லது ஒன்றுசேரவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அது அவருடைய ஆசை, கட்சியினுடைய முடிவு அல்ல. ஆனால் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒன்றிலே தெளிவாக இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர், காமராசர் காங்கிரசினுடைய அணியோடு சேர்ந்தாலும் சேருவோம் இந்திரா காங்கிரசினுடைய தலைமையிலே இருக்கிற அணியோடு நாங்கள் சேரப்போவதில்லை என்று அழுத்தம் திருத்தமாக அவர் குறிப்பிட் டிருக்கிறார் என்று கொள்ளவேண்டுமே தவிர, பொன்னப்ப நாடார் அவர்கள் உடனடியாக அதை ஒரு சவாலாக இன்றையதினம் ஏற்றுக் கொண்டு, நாங்கள் என்றைக்குமே சேரமாட்டோம் என்று அதைச் சவால் போன்று கருதி, எதிர் சவால் விடுவது அவ்வளவு நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் அவரும் ஒரு கட்சியினுடைய தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்கள். சட்டசபைக் கட்சியை நடத்திச் செல்கின்ற தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்கள். ஆகவே, எதையும் இன்றைக்கு அறுதியிட்டு நாம் யாரும் முடிவு செய்துவிட முடியாது ஆகவேதான், சவால், எதிர் சவால் தேவை யில்லையென்ற கருத்தை நான் சொல்கிறேன்.

அன்றைக்கு நான் சொன்னது, நாட்டின் தற்கால நடப்பை ஒட்டிய கணிப்பு, கிருஷ்ணமூர்த்தி சொன்னது அவருடைய ஆசை. இவைகள் எதுவும் கட்சியினுடைய கருத்தல்ல.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> நான் கேள்விப்பட்டது, அண்ணா தி.மு.க.வும், தி.மு.க.வும் சேரப்போவதாக. சோமசுந்தரம் கூட இதை அறிவித்து இருக்கிறார்கள். இரண்டும் மீண்டும் சேரப்போவதாக கேள்விப் பட்டேன். அது எந்த அளவிற்கு உண்மையோ தெரியாது. முதல மைச்சர் அவர்கள், அது எந்த அளவிற்கு.......

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> ஹாண்டே அவர்களே, அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியாது என்று குறிப் பிட்டார்கள். ஏதோ, பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகள். அதை, அவர்களே, கூட மறுத்திருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் கொண்டு வந்திருக்கின்ற இந்த மந்திரிசபையின் மீது இந்த அவைக்கு நம்பிக்கை இருக்கிறது என்ற தீர்மானத்தை எதிர்த்து, எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் அவர்கள், ஏதோ எதிர்கட்சிகளுக்கு இந்த அரசின்மீது இருக்கிற குறைகளை, சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு வாய்ப்பளிக்கின்ற ஒரு வகையில் இந்தத்தீர்மானம் இன்று இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள்.

ஆனால் அந்த நல்ல நோக்கம் இருக்குமானால் இந்தத் தீர்மானத்தை எதிர்கட்சிகள் எல்லாம் சபையைப் பகிஷ்கரித்த அந்த நாள் முன்மொழிந்திருக்கத் தேவையிருந்திருக்காது. எதிர்கட்சிகள் 5 கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரு காரணத்திற்காக பாய்காட் செய்தபோது இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் வைக்கப்பட்டு இருப்பதைப் பார்த்தால் ஏதோ எதிர்கட்சியினர் இல்லாத வேளையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட வேண்டுமென்ற எண்ணம்தான் இருந்திருக்க முடியுமே தவிர முதலமைச்சர் சொல்லியதுபோன்ற நல்லெண்ணம் இருந்திருக்கமுடியாது. இந்த அவையில் மூன்று எதிர்க்கட்சிகளும் வந்த பிறகு இந்தத் தீர்மானத்தை எடுக்க வாய்ப்பிருந்தால் உண்மையிலேயே நாங்கள் பாராட்டி இருக்கக்கூடும். இந்த அமைச்சரவையின் மீது பல்வேறு ஊழல் குற்றங்களை அடங்கிய ஒரு மனுவை இந்தியத் தலைவரிடம் கொடுத்து அதற்குப் பிறகு........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மற்ற மூன்று எதிர்க்கட்சியினரும் வந்தபிறகு இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். மூன்று கட்சியினரும் இங்கே வருவதற்கு எந்தத் தடையும் கிடையாது. நீங்கள் வந்தபொழுது ஐந்தாம் தேதியன்றே உங்கள் வருகையை வரவேற்று மற்ற எதிர்க்கட்சிகளும் வரவேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். அவர்கள் வருவதற்கு எந்தத் தடையும் கிடையாது. காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திராக் கட்சியினரும் ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவர்களாக வந்திருக்கின்ற அளவுக்கு அவர்களும் தங்களுடைய ஜனநாயகக் கடமைகளை உணர்ந்திருப்பார்களானால் அவர்கள் கலந்திருக்கக்கூடும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த நிலையில் அந்த ஊழல் பட்டியல் பிரதமர் வழியாக இந்த அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிற சூழ்நிலையில் உண்மையிலேயே நீங்கள் இந்தச் சபையின்முன் நம்பிக்கைத் தீர்மானத்தை வைக்கும்பொழுது இந்த அரசின்மீது சுமத்தப்பட்டிருக்கிற ஊழல் பட்டியலையும் இந்த அவையிலே. வைத்திருந்தால் நிச்சயமாக அதன் மீது இந்தச் சபை விவாதிப்பதற்கும் கருத்துக்களை உறுப்பினர்கள் அறிந்துகொள்வதற்கும், நாட்டுமக்கள் அறிந்துகொள்வதற்கும் வாய்ப்பு இருந்திருக்கும். வேண்டுமென்றே இந்த அரசின் கைவசம் இருக்கிற லஞ்ச ஊழல் புகார் பட்டியல் வெளியே காட்டப்படாமல் இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட வேண்டும், அந்த ஊழல்கள்





இந்த மன்றத்தின் அங்கத்தினர்களுக்கும் மக்களுக்கும் தெரிந்துவிட்டால் தீர்மானம் நிறைவேறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்ற ஐயம் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற காரணத்தினால் தான் அவர்கள் குற்றச்சாட்டுப் பட்டியலை இங்கே வைக்கவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலமைச்சர் அவர்கள் நாங்கள் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கூட்டாச்சித் தத்துவத்திலே நம்பிக்கை கொண்டு அதைப் பற்றி இறுதி முடிவு எடுக்கிற அதிகாரம் இந்த மன்றத்திற்குத்தான் உண்டு என்று கூறுகிறார்களா அல்லது டெல்லியிலே உள்ளவர்கள் தலையிடவேண்டுமென்று விரும்புகிறார்களா ? அவர்கள் ரகசியமாகக் கொடுத்திருக்கிறார்கள். ரகசியமாகக் கொடுத்தது அவர்களா நாங்களா என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாங்கள் கூட்டாட்சிக் கொள்கையிலே நம்பிக்கை கொண்டிருக்கிறோமா என்ற சந்தேகத்தை சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நாங்கள் கூட்டாச்சிக் கொள்கையை நம்புகிறோம். கூட்டாட்சிக் கொள்கையை நம்பித்தான் அரசியலமைப்புச் சட்டப்படி நடந்துவருகிறோம். அரசியலமைப்பிலே குடியரசுத் தலைவருக்கென்று சில அதிகாரங்கள் இருக்கின்றன. கவர்னர் அவர்களுக்கு அதிகாரங்கள் இருக்கின்றன. சட்டசபை உறுப்பினர்களுக்கு அதிகாரங்கள் இருக்கின்றன, நமக்கும் அதிகாரங்கள் இருக்கின்றன, இப்பொழுது ஊழல் பட்டியலைப் பெரிதாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலை அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். கூட்டாட்சிக் தத்துவத்திற்கு எந்தவித முரண்பாடும் ஏற்படாத வகையில் இந்த மன்றத்திற்குக் கொடுப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் டெல்லியின் அனுமதி வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், கம்யூனிஸ்டும் ஊழல் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. இந்தச் சட்ட மன்றம் அதிக அதிகாரம் பெற்றது. சட்ட அமைச்சர் அவர்களுக்கு நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். அதைத் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். அப்பொழுதுதான் நாங்கள் அதைப்பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டாட்சிக் கொள்கையில் முரண்பாடு எங்களுக்கு இல்லை. சென்ட்ரல் இண்டர்வென்ஷன் வேண்டுமா வேண்டாமா என்பதில் சட்டபூர்வமாக அது இருக்கவேண்டும், அரசியலமைப்பிற்கு அப்பாற்பட்டு மத்திய அரசாங்கம் திணிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ட்ரல் இண்டர்வென்ஷன் வேண்டுமென்று வாதாட நாங்கள் வரவில்லை. பட்டியல் முழுவிவரமும் இங்கே தரப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசியலமைப்புப்படி இந்த அரசின்மீது யாரும் தலையிடமுடியாது என்று அவர்கள் கருத்தைத் தெரிவித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். ஜேம்ஸ் அவர்கள் அந்த அருமையான குற்றச்சாட்டுகள், ஆதாரம் நிறைந்த குற்றச்சாட்டுகள் தங்களுக்கு ஏன் தரக்கூடாது என்று நாங்கள் கருதுவதாகச் சொல்கிறார்கள். அவ்வளவு அன்யோன்யமாக திரு பொன்னப்ப நாடார் அவர்களோடு பேசிப் பழகுகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளை அவர்களிடமிருந்தும் பாது காத்து இருக்கிறார்கள் என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. பொன்னப்ப நாடாரிடம் இதைப் பாருங்கள், இந்தக் குற்றச்சாட்டுகளைப் பாருங்கள் என்று அவர்கள் சொல்லியிருந்தால் வாய்ப்புக் கிடைக்குமே என்பதைத் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்களுடைய கையிலே ஒன்றும் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. அதிகாரப்பூர்வமானது உங்கள் கையிலே இருக்கிறது. அதிகாரப்பூர்வமானதற்கும் வந்திருப்பதற்கும் ஒத்துப்பார்ப்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. எங்கள் கையிலே ஒன்றும் இல்லை என்று நினைக்க வேண்டாம். அவர்கள் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகக் கொடுப்பதுதான் பொருத்தம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினை மதிக்காமல்., இங்கே கூடியிருக்கிற உறுப்பினர்களை மதிக்காமல் குற்றச்சாட்டுகளை ஜனாதிபதியிடம் கொடுத்து பிரதமர் மூலம் அனுப்பச் செய்த அவர்கள் குற்றவாளிகளா? அல்லது அங்கே போன பிறகு இந்த மன்றத்திலே வைக்கலாம் என்று சொன்ன நாங்கள் குற்றவாளிகளா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். நியாய மாக இந்த நேரத்தில் அந்த ஊழல் பட்டியலை இங்கே வைக்கலாமே. முதலிலே ஒரு கட்சியிலே பிளவு ஏற்பட்டது, கட்சியிலே நெருங்கி இருந் தவர் பிரிந்து ஒரு ஊழல் பட்டியலைக் கொடுத்திருக்கிறார். இன்னின்ன குற்றச்சாட்டுகளைச் சாட்டியிருக்கிறார்கள், இன்னின்ன பதிலைக் கொடுக்கிறோம் என்று ஏன் இங்கே அவர்கள் வைக்கவில்லை. The opposition is not in the docks ஏன் வைக்கவில்லை என்று கேட்கிற நாங்கள் குற்ற வாளிகள் இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாங்கள் கொண்டு வரவில்லை, உங்களுக்கு எண்ணிக்கையில்லை நாங்கள் கொண்டுவரு கிறோம் என்று சொல்கிறார்கள். The question is who is the person who has to answer. The person to answer is the Chief Minister and other Ministers of his cabinet. குற்றவாளிகள் எதிர்க்கட்சிக்கா ரர்கள் அல்ல. குற்றச்சாட்டுகளை விசாரிக்க இந்த அரசே ஏன் என்குயரி கமிஷன் போடவில்லை. நாணயமான அரசாக இருந்தால், தைரியமான அரசாக இருந்தால் என்குயரி கமிஷன் உடனே போட்டிருக்க வேண்டும், என்குயரி கமிஷன் போடுவதற்கு வக்கு இல்லை............



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாணயத்திலே சிறந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் நாணயம் இருக்கிறதா என்று கேட்கிறார் கள். அவர்களுடைய நாணயம் எனக்குத் தெரியும். நாணயமான அரசா என்று கேட்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் நாணயமானவர் என்று கருதிக்கொண்டு இந்த மன்றத்திலே பேசிக்கொண்டிருக்கவேண் டாம். தன்னை நாணயமுள்ளவன், நாணயமுள்ளவன் என்று கூறுவதால் மற்றவர்களெல்லாம் நாணயமற்றவர்கள் என்று ஆகிவிட மாட்டார் கள். ஆனால் நான் அவரைக் கேட்பதெல்லாம் நம்பிக்கை கோரும் தீர்மானத்திலுள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தாங்கள் அளித்த ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலை இங்கே வைப்பதற்குத் தைரிய மில்லாமல் ஓடி ஒளிந்துகொண்டு இங்கே வராமல் இருக்கிறார்களே, அவர்களைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் என்ன நினைக்கிறார் கள்? நண்பகல் 12-00

Dr. H. V. HANDE: My point is, have you got the guts to appoint a Commission of Enquiry yourself. You can appoint a judge from here or if you are not satisfied with it, you can have one from another State. You yourself can do it. You can then show to public: 'Our records are clean. Anyone can come and enquire'. I am putting a challenge to the Hon. Chief Minister. He is trying to pass on the 'buts' tous. I am putting the ball in his Court, in the Court of the Chief Minister. He can appoint a Commission of Enquiry and show to them that their records are clean. If the 'oozhals' are discussed here, there is no chance for persons to give evidence. If you appoint a Commission of Enquiry, people can come in and give evidence. So without waiting for Prime Minister, you yourself, believing in State autonomy, you can appoint a Commission of Enquiry yourself. Have you got the guts to do so?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வைக்கப்படும் குற்றச்சாட்டு கள் எதுவாகயிருந்தாலும் அதற்கு பதில் ஆதாரங்களும், பதில் சொல்லும் திராணியும் தெம்பும் எங்களிடத்திலே இருக்கிறது. ஆனால் விஷயமில்லாத ஒன்றுக்காக விசாரணைக்குப் போக வேண்டிய அவசிய மில்லை. நான் அவருக்கு முன் உதாரணம் ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். இந்த மன்றத்தில் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது சட்டமன்றத்திலேகூட கோசல்ராம் அவர்கள் ராஜாஜியைப் பற்றி எவ்வளவோ ஊழல் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். கொள்ளைக்காரர் என்றுகூட வர்ணித்தார்கள். அப்படி வர்ணித்த நேரத் தில், நான்கு பேர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக அப்பொழுது விசாரணைக் கமிஷன் போட்டுவிடவில்லை. ஆகவேதான் நான் சொல் கிறேன். நான்குபேர் ஊழல் பட்டியல், குற்றப்பட்டியல், புகார் பட்டியல் என்று சொல்லும்பொழுது ஏன் நீங்களே விசாரணைக் கமிஷன் போடக்கூடாது என்று கேள்வி கேட்பது முறையற்றது. விவரங்களைச் சொல்லுங்கள், குற்றங்களைச் சொல்லுங்கள், இன்றைக்கே சொல்லுங் கள். அவர்களுக்கு தைரியமில்லாமல் உங்களிடத்தில் கொடுத் திருந்தால் அதற்காகப் பொறுப்பேற்றுக்கொண்டு இங்கே சொல்லுங்

கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் உடனடியாகப் பதில் சொல்ல விரும்பவில்லை, நாளையதினம் தெளிவாகப் பதில் சொல்லுகிறோம். அந்தக் குற்றச்சாட்டுகளை இங்கே வையுங்கள், இந்த மன்றத்திலேயே வைத்திருக்கலாமே. அதை விட்டுவிட்டு டெல்லிக்கு ஏன் போக வேண்டும்? அங்கே கொடுத்துவிட்டு, அது இன்னும் வரவில்லை, வேறு யாரிடத்திலாவது கொடுத்தனுப்புகிறோம் என்று சாக்கு தேடிக்கொள்ளும் வீராதி வீரர்கள் வழூல் பட்டியலை இந்த அவையிலே சொன்னால் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்ட அமைச்சரவர்கள் ஏதோ நகைச்சுவையோடு இங்கே ஒரு சில கருத்துக்களைக் கூறினார்கள். நாங்கள் சரியாக அவர்களோடு பணியாற்றவில்லை என்ற அர்த்தத்திலே, தொனியிலே அவர்கள் பேசினார்கள். நான் ஒன்றுகூற விரும்புகிறேன். அந்தக் குற்றப்பட்டியல் உங்கள் கையிலே இருக்கிறது. அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. எனவே, எங்கள் கையிலே இருப்பதைச் சொல்லுங்கள். நாங்கள் அதற்குச் சமாதானம் சொல்லுகிறோம் என்று சொன்னால் போதாது. வேண்டுமானால் உடனடியாக விசாரணை நடத்துங்கள். அப்படி நடத்தினால் எங்கள் கையில் இருக்கின்ற ஆதாரங்களை, சான்றுகளை சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருப்போம். **Commission of Enquires Act**-ன் கீழ் மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு நீதிபதியைப் போட்டு உடனடியாக இது ஆதாரமற்றது என்று நிரூபிக்க உங்களுக்குக் கடமை உண்டு. எப்படி சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டுமோ அப்படி நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உங்கள் கையிலே இருக்கிறது என்று மறுமுறையும் கூற விரும்புகிறேன். ஏனென்றால் நீங்கள் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்திருக்கின்றீர்கள். குற்றச்சாட்டுகள் இருக்கிறதா, நியாயமாக இருக்கின்றதா. ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்து ஆதாரம் அற்றது என்று நிரூபிக்க பல மார்க்கங்கள் இருக்கின்றன. அதில் சிறப்பான மார்க்கம் நீதி விசாரணை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்களே ஒரு விசாரணைக் கமிஷன் போடுங்கள் என்று சொல்லுகின்றீர்கள். அதை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து டெல்லிக்குப் போன, தங்கமணி அவர்களும், மற்றவர்களும், எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும் போன நேரத்தில் அப்பொழுது வழி மறித்து, எதற்காக டெல்லிக்குச் செல்லுகின்றீர்கள், இங்கேயே கொடுத்து இங்கேயே விசாரிக்கச் சொல்லுங்கள் என்று அப்பொழுதே சொல்லியிருக்கலாம். டெல்லி விசாரணைக் கமிஷன்போடும், போடப் போகிறது என்று நாட்டைப் பயமுறுத்தியவர்கள் அது போடும் வரையில் காத்திருக்க வேண்டியதுதான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விமான நிலையத்தில் சட்டையைக் கிழிப்பதோ வேறு தயக்கம் செய்வதோ எங்கள் பழக்கம் அல்ல, எங்கள் கட்சியின் பாரம்பரியமும் அல்ல.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தெரியும், தெரியும். காமராஜர் அவர்கள் டெல்லியிலே காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குக் கொல்லைப் பக்கமாகப் போக வேண்டிய நிலைக்கு ஆக்கப்பட்டது உங்கள் கட்சியின் பாரம்பரியம். அதற்காக நான் காமராஜரைக் குறை சொல்லவில்லை, காமராஜர் கட்சியைப் பற்றிச் சொல்லுகிறேன். தெரு வழியாகச் செல்லுவதற்குப் பாதுகாப்பு இல்லை. கொல்லைப்புற வழியாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே அவருடைய கட்சியின் பாரம்பரியம், பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிற என்ற கருத்தைச் சொல்வது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காமராஜர் மேல் இவ்வளவு பரிவுணர்ச்சி ஏற்பட்டிருப்பதற்காகத் தங்களைப் பாராட்டுகின்றேன். இவ்வளவு பரிவு உங்களுக்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறதே என்று நாங்கள் வியக்கிறோம்.

**Dr. H. V. HANDE** : Sir, it is highly objectionable on the part of the Hon. Chief Minister to talk like that about Thiru Kamaraj as though he has come by..................

**Mr. DEPUTY SPEAKER** : I take objection to your raising point of order in this way.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: டாக்டர் ஹாண்டே அவர்கள் தவறாகக் கருதிக் கொண்டார்கள். அரசியல் வரலாற்றில் குறிப்புகளை மறந்து விட்டுப் பேசுகிறார்கள். ஜனசங்கக் கட்சி செய்த காரியத்தை நான் சொல்லவில்லை. அது பசுவதைத் தடுப்பிற்காக நடந்த போராட்டம். அதை டாக்டர் ஹாண்டே அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு பேசுகிறார்கள். அவர்கள் கட்சியில் பாரம்பரியத்தைப்பற்றிப் பேசும்பொழுது நான் குறிப்பிட்டது, காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரியும் அந்தக் கட்டத்தில் காமராஜர் டெல்லியிலே காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்குச் செல்லும் நேரத்தில் அவர்கள் தெருவழியாகச் செல்ல முடியவில்லை. சட்டம்—ஒழுங்கு அமைதி கெட்டு, பாதுகாப்பற்ற முறையில் காமராஜர் அவர்கள் கொல்லை வழியாகச் செல்ல நேரிட்டது என்று சொன்னேன். ஏதோ கொல்லைப்புற வழியாக என்று ஏற்கனவே அரசியல் ரீதியில் பேசப்பட்ட வார்த்தையை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து காமராஜரை இழிவுபடுத்துவதாகக் கருத வேண்டாம். இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலை பெருந்தலைவருக்கு ஏற்பட்டது. எனவே எந்த அளவில் அந்தக் கட்சியில் நிலைமைகள் இருக்கின்றன என்பதற்காகத்தான் சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நமது முதலமைச்சரவர்கள், எங்கள் தலைவர் புறவாசல் வழியாக காங்கிரஸ் ஆபீசிற்கு, கொல்லைப்புற வழியாக, பேக்டோர் வழியாக என்ற அந்த மாதிரி குற்றச்சாட்டை........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நான் கூறியதைத் திரித்துக் கூறுவது முறையல்ல. மண்டபத்திற்கு முன் வாயில், பின்வாயில் என்று இருக்கும்'

அதைப்போல் சொன்னேனே தவிர ஏதோ பேக்டோர் என்று சொல்வதாகத் திரித்துக் கூறுவது முறையல்ல. பாதுகாப்பற்ற நிலையிலே அன்றைக்கு காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்த நேரத்தில் இருந்தது என்பதைக் குறிப்பிடு வதற்காகத்தான் சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : யார் பாதுகாப்புத் தரவில்லையோ அவர்களோடுதான் நீங்களும் உறவாடிக்கொண்டிருந்தீர்கள். நீங்கள் அவர்களை ஆதரித்தீர்கள். அவர்களைத் தாலாட்டிக் கொண்டு அவர்க ளோடு உறவாடினீர்கள். ஆகவே, குற்றக் கணையை வீசும்பொழுது உங்கள் செயலையும் சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். சரித்திரம் இரண்டு பேருக்கும் பொதுவாக இருக்கிறது, காலம் மாறிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யார் பேசிக்கொண்டிருந் தார்கள் என்பதே மறந்துவிட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆகவே, இந்த நிலையிலே இந்த அவையில் முதலமைச்சரவர்கள் நம்பிக்கைத் தீர்மானத்தைத் கொண்டுவரும் நேரத்தில், நம்பிக்கைத் தீர்மானத்திற்கு தேவையான எல்லா உண்மைகளையும் இந்த அவையின் முன்னால் வைக்காமல் உண்மைகளை மறைத்து, ஒரு நம்பிக்கைத் தீர்மானத்தை இந்தச் சபையில் வைத்து நிறைவேற்ற எடுக்கப்படும் கங்கணம் கட்டிய நிகழ்ச்சி என்பதைக்கூற விரும்புகிறேன். எங்கள் தலைவரவர்கள் ஏற்கனவே கூறினார்கள். தங் கள் கட்சியில் ஏற்பட்ட " டிபெக்ஷன் " காரணமாக, இனி மீதியுள்ள அங்கத்தினர்களைக் கட்டுப்படுத்தி வைக்க, மேலும் டிபெக்ஷன் வராத வகையில் அவர்களை எச்சரிக்கும் வகையிலே, தங்களுக்குப் பாதுகாப்பு தேடும் வகையிலே அமைய இந்த நம்பிக்கைத் தீர்மானம் இருக்கிறதே தவிர உண்மையிலே இந்த நாட்டு மக்கள் இந்த அரசின்மீது நம்பிக்கை கொண்டிருக்கிறதா என்பதை அறிய அல்ல என்பதையும் இந்தச் சந்தர்ப் பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சரவர்கள் கூறினார்கள். எங்கள் கட்சியில் டிபெக்ஷன் வந் தால் அது வெகுவாகப் பாதிக்காது. ஆனால் பொன்னப்ப நாடார் அவர்களது கட்சியில் டிபெக்ஷன் வந்தால் என்னவாகும் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் கட்சியில் டிபெக்ஷன் வந்தால் நாங்கள் எதிர்க்கட்சியாகத்தான் இருப்போம். ஆனால் உங்கள்கட்சியில் டிபெக்ஷன் வந்தால் உங்கள் கதி என்னவாகும் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே எங்கள் கட்சியில் டிபெக்ஷன் வருவதற்கும், உங்கள் கட்சியில் டிபெக்ஷன் வருவதற்கும் மெத்த வித்தியாசம் இருக்கிறது. ஆகவே உங்கள் கட்சியில் டிபெக்ஷன் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அதற்காக இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிந்திருந்தால் பாராட்டியிருப்பேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





ஊழல் பட்டியலை இந்த அவையில் வைப்பதற்குப் பதிலாக எங்கோ கொண்டு போய்க் கொடுத்து விட்டார்கள். ஆகையால் என்குயரி கமிஷன் நியமிக்கவில்லை என்று சொன்னார்கள். இதற்கு முன்னதாக கழிந்த பல ஆண்டுகளாகவே எங்கள் கட்சித் தலைவர்கள் இந்த அரசின்மீது எவ்வளவோ ஊழல்களைச் சாட்டியிருக்கிறார்கள். இந்த அவையில் எவ்வளவோ ஊழல்களை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஏதாவது ஒரு ஊழலுக்காவது நீங்கள் நீதி விசாரணை நடத்தியது உண்டா? நாங்கள் சாட்டிய குற்றச்சாட்டின்பேரில் இந்த அரசிலிருந்து மூன்று அமைச்சர்களை வெளியேற்றினார்கள். ஆனால் நாங்கள் இந்த அவையில் கூறிய குற்றச்சாட்டுக்களை அவர்கள் பொருட்படுத்தவில்லை, மதிக்கவில்லை. அதற்காக நீதி விசாரணை நடத்தவில்லை. ஆகவே, இன்றையதினம் எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் டில்லிக்குப் போனார்கள் என்றால் அதிலே வியப்பு இல்லை ; அவர்களைக் குற்றம் கூறவும் தேவையில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தேவையற்ற புகார்களுக்கு நீதி விசாரணை நடத்துவதா என்று கேட்டார் கள். அப்படியிருந்தால் இந்த நாட்டிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் கொடுத்த குற்றச்சாட்டுப் பட்டியலை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார்களா ? போடவில்லை? இது சாரமற்றது. இதில் ஒன்றுமில்லை என்று தூர எறியவில்லை. இதில் ஏதோ உண்மைகள் இருக்கின்றன. இதில் விசாரணைத் தேவை என்று கருதி பிரதமருக்கு அனுப்பிவைத்தார். பிரதமர் அவர்கள் பார்த்துவிட்டு ஹோம் டிப்பார்ட்டுமெண்டுக்கு அனுப்பி வைத்தார். இதில் ஒன்றும் இல்லையென்று தூக்கி எறிந்துவிடவில்லை. அதற்கு மாறாக அதைத் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இதை நீங்களே டிஸ்போஸ் செய்து விடுங்கள் என்ற முறையில் அனுப்பவில்லை............

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது ஜேம்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, " நீங்களே டிஸ்போஸ் செய்யுங்கள் என்று அவர்கள் அனுப்பவில்லை " என்று சொன்னார்கள். அதற்காக நன்றி. நாங்களே டிஸ்போஸ் செய்யக்கூடாது என்று நிலைமை இருக்கும் காரணத்தால்தான் பிரதமருக்கு எழுதி அதற்குப் பின்னால் சட்டசபையில் வைக்க வசதியாக இருக்கும் என்று சொன்னோம். நாங்களே டிஸ்போஸ் செய்கிற கட்டம் வந்துவிட்டால் இந்தச் சபையில் அவை வைக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் நான் கூறிய கருத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பதில் அளித்து விட்டார்கள். இந்தக் குற்றச் சாட்டுகளில் ஒன்றுமில்லை. நீங்களே தள்ளி விடுங்கள் என்ற முறையில் அவர்கள் அனுப்பி வைக்கவில்லை. அதற்கு பதிலாக விளக்கம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்தக் குற்றச்சாட்டில் பல விஷயங்கள் இருக்கின்றன. நம்பக்கூடிய பல காரியங்கள் இருக்கின்றன என்றுதான் இதற்கு அர்த்தம்.

அது மட்டுமல்ல. பிரதமர் அவர்களைப் பத்திரிக்கை நிருபர்கள் இந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோது அவர்கள் ஒன்றும் கூறவில்லை. அதில் பல பெரிய விஷயங்கள் இருக்

கின்றன. ஆகவே, அதைப் பற்றி நிதானமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்ற பொருள் இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிரதமர் அவர்கள் நிருபர்களிடத்தில் இந்தக் குற்றச்சாட்டைப் பற்றிப் பதில் அளித்தார்களா ? அப்படியானால் என்ன பதில் அளித்தார்கள் ? ஜேம்ஸ் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளில் பெரிய விஷயங்கள் இருக்கின்றன என்று பொருள் கொள்ளும் அளவுக்குப் பதில் அளித்ததாகச் சொன்னார்கள். என்ன பதில் அளித்தார்கள் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : பிரதமர் அவர்களைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது அவர்கள் அதில் ஒன்றும் இல்லை என்று சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிரதமர் என்ன சொன்னார் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : பத்திரிகை நிருபர்களிடம் "அதில் ஒன்றும் இல்லை" என்று சொல்லவில்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிரதமர் நிருபர்களிடத்தில் என்ன சொன்னார் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : அதைத் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை. 180 அங்கத்தினர்களின் ஆதரவோடு இருக்கின்ற அரசின் மீது எதிர்க் கட்சியில் இருக்கும் ஒரு சில அங்கத்தினர்கள் மட்டும் ஒரு குற்றச்சாட்டை அனுப்பி இருக்கும் சூழ்நிலையில் அதில் ஒன்றும் இல்லை என்றால் நிச்சயமாக பிரதமர் அவர்கள் "ஒன்றும் இல்லை" என்று சொல்லியிருப்பார்கள். ஒன்றும் இல்லை என்றால் ஆக்ஷன் எடுக்காமல் கூடத் தள்ளி இருப்பார்கள். இன்று ஆக்ஷன் எடுக்கும் அளவு..................

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆக்ஷன் எடுப்பது என்று சொன்னால் அந்த மனுவில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்து அதன்மீது பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறது என்று சொல்லுவதற்கு ஒப்பாகும். இப்போது கருத்தைத்தான் கேட்டிருக்கிறார்களே தவிர, வேறல்ல. "ஜேம்ஸ் திருடினார்" என்று யாராவது சொன்னால் உடனே உங்களைப் பார்த்து "திருடினார்" என்று சொல்லலாமா, சொல்லுபவர் அக்கிரமமாகச் சொல்லக் கூடும். ஜேம்சினுடைய கருத்தைக் கேட்டுத்தான் பிறகு சொல்ல முடியுமே தவிர, உடனே " ஜேம்ஸ் திருடினார் " என்று ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே, இப்பொழுது பிரதமர் கருத்துக் கேட்டிருப்பது "ஆக்ஷன்" என்ற வார்த்தைக்கு உரியது அல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். பிரைமாஃபாசி கேஸ் இருந்தால் அடுத்தபடியாக விசாரணைக்குரிய விஷயங்கள் வரும். பிரைமாஃபாசி கேஸ் இல்லை என்றால் ரிட் மனுவைக்கூட அட்மிஷன் செய்வதில்லை. அங்கு எதிரியைக் கேட்காமல் டிஸ்போசல் ஆகிறது. டிஸ்மிசல் ஆகிறது. பிரைமாஃபாசி கேஸ் இருக்கிறது



என்றால் எதிர்க் கட்சிக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. வாதங்கள் கேட்கப்படுகின்றன. ஆகவே, இன்று இருக்கும் சூழ்நிலையில் எதிர்க்கட்சியாக இருக்கும் உங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறது என்று பிரதமர் நம்புகிறார் என்றுதான் அர்த்தம். ஆகவே தான் நான் கூறுகிறேன்...............

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இந்தியத் தலைமை அமைச்சர் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். இது நோட்டீஸ் அல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறது என்றுதான் அவர்கள் எண்ணுகிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தியாவின் பிரதமர் கருத்தாக, பிரதமர் அவர்கள் கருதுகிறார்கள் என்ற முறையில் கூறுவது முறையல்ல; இந்த இடத்திற்கு உகந்ததும் அல்ல. அவர்கள் கேட்டிருப்பது கருத்து விளக்கம். அந்தக் கருத்து விளக்கத்தை மரியாதைக்குரிய முறையில் அனுப்ப வேண்டுமென்று கருதுகிறோம். அது கோர்ட்டும் அல்ல ; அனுப்பியது நோட்டீசும் அல்ல. பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறது என்று சொல்லுவது அடியோடு உண்மை அல்ல. பிரதமர் பெரியவர் ; அவர் இந்த மாதிரி நடவடிக்கையில் ஈடுபட மாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆக நான் கூற விரும்புவது எல்லாம் ஒரு வேளை இந்த மனுவின்மீது ஒரு என்குயரி கமிஷன் நியமித்துவிடக் கூடாது, அவ்வாறு ஒரு கமிஷன் போடாமல் இருப்பதற்கு எந்த முறையில் எல்லாம் நாம் தடங்கல்கள் ஏற்படுத்தலாம் என்பதற்காகத்தான் இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை இங்கு கொண்டு வந்து ஏறத்தாழ 180 அங்கத்தினர்கள் இந்த அரசுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று காட்டுவதன் மூலம் அதை அறியும்போது ஒருவேளை பிரதமர் இந்தக் குற்றச்சாட்டுகளின்மீது நீதி விசாரணை செய்ய கமிஷன் நியமிக்காமல் போகலாம் என்ற வகையில் இந்த அரசு எடுத்த முயற்சி இது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே தைரியம் இருந்தால் நீங்களே என்குயரி கமிஷன் நியமித்திருக்க வேண்டும். அல்லது இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்த நம்பிக்கைத் தீர்மானத்திற்குப் பதிலாக குற்றச்சாட்டுகளையும், மத்திய அரசிற்கு அனுப்புகிற விளக்கத்தையும் இந்த மன்றத்தின் மீது வைத்து அதன்மீது விவாதம் நடத்தி இந்த அரசின்மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

நாங்கள் கூறுவதெல்லாம் இந்த மன்றத்திற்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று கூற நாங்கள் தயாராக இல்லை. அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் காண்கிறோம். உண்

மையில் இந்த அரசுக்கு இந்த அவையில் 184 அங்கத்தினர்கள் ஆதரவாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்த அரசுக்குத் தமிழக மக்கள் மன்றத்தில் ஆதரவு இல்லை. இந்த அரசு தமிழக மக்கள் மன்றத்தின் நம்பிக்கையை இழந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன்.

ஆகவே இந்த அரசு ஒரு நிமிடமாகிலும் நீடிக்காது, உடனே ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் இந்த மன்றத்தில் வந்திருக்கிற உறுப்பினர்கள் தங்களுக்கு வாக்களித்த வாக்காள பெருமக்களின்.................. ..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தைரியம் இருந்தால் நீதி விசாரணை வையுங்கள் என்று ஜேம்ஸ் அவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். அவர்கள் வழக்கமாகச் சொல்லுகிற ராஜிநாமா செய்யுங்கள் என்கிற அந்த வார்த்தையும் சொல்லி முடித்துவிட்டார்கள். தைரியம் இருந்தால், தைரியம் இருந்தால், என்று என்னைப் பார்த்துக் கேட்கிறார்கள். இங்கேயே நீதி விசாரணை நடந்தால் போதும் என்ற அளவிற்குக் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஊழல் பட்டியலைத் தயார் செய்து டெல்லிக்கு எடுத்துச் சென்றவர்கள் தைரியம் இருந்தால் அதை பொது மக்களிடம் கொடுத்து விடுவார்களானால், அதை வெளிப்படையாக வெளியிட்டு விடுவார்களேயானால் நீதி விசாரணை தமிழ்நாட்டிலேயே நடைபெறும். அவர்கள் பத்திரிக்கைகளுக்குக் கொடுத்த செய்தி வந்தது. ஆனால் பத்திரிக்கைகள் யாரும் பிரசுரிக்கவில்லை. கொடுத்ததாக வந்திருக்கிறது. (டாக்டர் ஹாண்டே அவர்கள் தலையில் அடித்துக் கொண்டார்கள்.) ஏன் இப்படித் தலையில் அடித்துக் கொள்ளுகிறீர்கள்? இன்னும் கொஞ்சம் காலம் இருக்கிறது. அப்புறம் அடித்துக் கொள்ளலாம். புகார் பட்டியலைக் கொடுத்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறதே அல்லாமல் புகார் பட்டியலில் விளக்கம் எந்தப் பத்திரிக்கையிலும் வரவில்லை. திருமதி இந்திரா காந்தி அவர்களிடமிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிற பட்டியலின் விளக்கம் அல்லது ஜனாதிபதி அவர்களிடம் கொடுத்திருப்பதாகச் சொல்லப்படும் புகார் பட்டியலோ எந்தப் பத்திரிக்கையிலும் தொகுத்து வரவில்லை. அந்தத் தைரியசாலிகள்—நான் ஜேம்ஸ் அவர்களைச் சொல்லவில்லை, இங்கு வந்திருக்கும் உறுப்பினர்களை நான் சொல்லவில்லை—இங்கு வராமல் தைரியத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்களே அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அந்தப் புகார் பட்டியலைக் கொடுத்தவர்கள் பத்திரிக்கைகளில் சாங்கோபாங்கமாக வெளியிடச் செய்ய வேண்டும். அப்படி பத்திரிகைகளில் வெளியிடாவிட்டால் அவர்கள் கையெழுத்தோடு பிரசுரித்து துண்டு அறிக்கைகளாக பொதுமக்களிடத்தில் கொடுக்க வேண்டும். உடனே நீதி விசாரணை ஆரம்பமாகிவிடும், அந்த நீதி விசாரணையினால் ஏற்படுகிற விளைவுகளை நாங்கள் ஏற்கத் தயாராயிருக்கிறோம். அதேபோல் ஏற்க அவர்களும் தயாராக இருக்க வேண்டும். அவர்கள் கொடுத்த அடுத்த கணமே நீதிமன்றத்திற்குச் செல்வோம்—நீதிமன்றத்தில் நீதி விசாரணை நடைபெறும்.



டாக்டர் எச். வி. ஹாண்டே: தலையில் ஏன் அடித்துக்கொள்கிறீர்கள். காலம் வரும் என்று சொன்னார்கள். நான் சொல்வது, ஏ.ஐ.ஆர்-ல் இந்த ந்யூஸ் வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பட்டியல் வந்திருக்கிறதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நேற்று மாலையில் கேட்ட செய்தியைச் சொல்கிறேன். இரண்டு மணி ந்யூஸில் ஆறு ஏழு அமைச்சர்கள் பேரில் ஊழல் புகார்கள்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பேசுகிறீர்களே. நான் கேட்கிறேன், ஆறு, ஏழு அமைச்சர்கள் மீது ஊழல் அல்லது லஞ்சம் என்ற குற்றச்சாட்டு வந்திருப்பதாக, ரேடியோவில் வந்திருப்பதாகச் சொல்கிறீர்கள். எந்த எந்த அமைச்சர்கள் என்ன என்ன தவறு செய்தார்கள். எங்கு எங்கு லஞ்சம் வாங்கினார்கள். எப்படி எப்படி ஊழல் புரிந்தார்கள் என்று ரேடியோவில் சொல்லப்பட்டதா? அந்தத் தகவலை ஹாண்டே அவர்கள் கொடுத்தால் எங்களுக்கு ரொம்ப பிரயோஜனமாக இருக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பட்டியலைக் கொடுத்திருக்கிறார்கள். ஏ.ஐ.ஆர்.-க்கு கொடுத்திருக்கிறார்கள், பி.டி.ஐ.-க்கு கொடுத்திருக்கிறார்கள். அவற்றின் சாராம்சத்தை ரேடியோவில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தலையில் அடித்துக் கொள்ள காலம் வரும் என்றால் எல்லோருக்கும் வரும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவு செய்து நான் ஹாண்டே அவர்களைக் கேட்டுக் கொள்வேன். நாளைக் காலை ஒன்பது மணிக்குள்ளாக சபை கூடுவதற்கு முன்பு ரேடியோவில் சொன்ன அந்த பட்டியலின் சுருக்கத்தை தயவுசெய்து அந்த ரேடியோ ஸ்டேஷனிலிருந்து ஒரு காப்பி வாங்கி எனக்குத் தர வேண்டுமென்று நண்பர் என்ற முறையில் நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நீதி விசாரணை என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு அவதூறு செய்கிறவர்கள் தப்பித்துக்கொள்ளுகிற ஒரு பெரிய முயற்சி இன்று தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. அவதூறு செய்யப்பட்டவர்கள், அது உண்மையானால், தண்டனைக்கு உரியவர்களாவதைப்போல், அவதூறு செய்பவர்களும் தண்டனைக்கு உரியவராவார்கள். குற்றச்சாட்டுகளைப் பொது மக்களிடம் தெரிவிக்க வேண்டும். அப்படிப் பொது மக்களிடம் பேச முடியாத குற்றச்சாட்டு இந்த நாட்டில் இருக்குமானால் அதை இந்தச் சட்டமன்றத்தில்தான் விவாதிக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போதிருக்கிற நிலை என்னவென்று சொன்னால் இரண்டு நபர்களிடம் இந்தக் குற்றச்சாட்டு ஆதாரபூர்வமாக இருக்கிறது, ஒன்று தமிழ்நாட்டு முதல்வர் அவர்களிடம் இருக்கிறது. அடுத்தபடியாக,

அதைக் கொடுத்த இங்கு எதிர்வரிசையில் இருக்கிற நண்பர்களிடம் இருக்கிறது. ஆகவே எங்களைப் போன்றவர்களுக்கு இவர்கள் இரண்டு பேர்களும் உதவி செய்தால் நலமாக இருக்கும். ஆனால் இரண்டு பேர்களும் பயப்படுகிறார்கள். இந்தச் குற்றச்சாட்டுப் பட்டியலைக் கொடுத்தவர்கள் விளம்பரம் செய்வதற்குப் பயப்படுகிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், முதல் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தைரியம் உள்ளவர்கள். அவர்கள் தைரியமாக முன்வந்து இதோ பார். நான் பார்த்தேன், படித்தேன், நகைத்தேன், இதோ நீங்களும் சிரித்துக் கொள்ளுங்கள் என்று இந்த அவையில் அதை......

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : மன்னித்துக்கொள்ள வேண்டும் நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். பயத்தின் காரணமாக அல்ல இங்கே வெளியிடாமல் இருப்பது, பண்பின் காரணமாக, மரியாதை காரணமாகத்தான். கொண்டுபோய் பிரதமர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பிரதமர் அவர்கள் கௌரவத்தோடு இங்குள்ள முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். பிரதமர் அவர்களிடம் கொடுக்கப்பட்டது இங்கு கருத்துக் கோரி வந்திருக்கிறது. ஆகவே அவர்கள் சம்மதம் இல்லாமல் இங்கு வைத்துவிடுவது என்பது சுலபமான காரியமா? நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தப் பிரச்னையை முதலில் இந்த மன்றத்தில் எழுப்பியதால் அவர்களிடமும் சொல்லிக்கொள்வேன், நேற்றும் அந்த முயற்சி நடைபெற்றிருக்கிறது. இன்றும் அந்த முயற்சி நடைபெற்றிருக்கிறது என்று. பிரதமர் அவர்களிடமிருந்து இன்று மாலையே சம்மதம் வந்துவிட்டால் இந்த அவைத் தொடர் கூட்டம் முடிவதற்குள்ளாக குற்றச்சாட்டுப் பட்டியலையும், பதில் பட்டியலையும் நிச்சயமாக வைக்கமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஜேம்ஸ் அவர்கள் என்னை கோழை என்று கருதிவிட வேண்டாம். நாம் எல்லாம் தமிழ் நாட்டில் ஒருவரோடொருவர் பழகிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் கோழைகள் அல்ல.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : நான் கூறியதை முதல் அமைச்சர் அவர்கள் தப்பாக எடுத்துக்கொண்டதற்காக வருந்துகிறேன். நாலரைக் கோடி மக்களின் முதல்வர் சீராக சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் (ஆரவாரம்). நாங்கள் எடுத்துக் கூறுகிறது குறைகளைத் தவிர மற்ற காரியங்களைச் சீராகத்தான் நடத்துகிறார்கள். ஆகவே கோழை என்று குறிப்பிட விரும்பவில்லை. குறிப்பிடவும் இல்லை. இந்த அமைச்சரவையைப் பொறுத்தமட்டில் அவர்கள் இந்த மன்றத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறார்களே தவிர பிரதமருக்கோ மற்றவர்களுக்கோ கடமைப்படவில்லை. நாங்கள் பல நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறோம் அந்தப் புகார் பட்டியலை இங்கு வையுங்கள் என்று. நீங்கள் போன் வாயிலாகவாவது அந்த அனுமதியைப் பெற்று இந்த மன்றத்தில் அந்தப் பட்டியலை வைத்திருந்தால் இந்த விவாதம் நல்ல சூழ்நிலையில் நடைபெற ஏதுவாக இருந்திருக்கும். எங்களுக்கும் நன்மை செய்ததாக எடுத்துக் கொண்டிருப்போம். இந்த அரசு மக்கள் மன்றத்தில் அதன் நம்பிக்கையை இழந்



திருப்பதாகக் கூறினேன். 1971-ல் நடைபெற்ற தேர்தலில் ஏழு கட்சிகள் ஒன்றாக கூட்டு சேர்ந்து 184 இடங்களைப் பெற்றது. அந்த நிலை இன்றிருக்கிறதா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று தேர்தலில் கூட்டாக இருந்த அனைத்துக் கட்சிகளும் இன்று கூட்டாக இல்லாத காரணத்தால், அன்று கூட்டாக இருந்த கட்சிகள் பிரிந்து இன்று அரசை எதிர்த்துக் கொண்டிருப்பதால், அந்தக் கட்சிகளின் ஆதரவோடு வாக்குகளைப் பெற்றிருப்பதால், நிச்சயமாக 1971-ல் இந்த அரசுக்கு இருந்த ஆதரவு இன்றில்லை.

அதுமட்டுமல்ல. சில நாட்களுக்கு முன்பு இந்த அரசை நடத்திக் கொண்டிருக்கும் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாகப் பிளந்து இந்த நாட்டில் ஒரு விபரீதமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது அரசுக்கு நன்கு தெரியும். இந்த அரசுக்கு ஆதரவாக இருந்த, ஆணி வேராக இருந்த மூலக் கல்லாக அமர்ந்திருந்த ஒரு நபர், ஆயிரக் கணக்கில் வாங்கித் தந்தவர் அந்தக் கட்சியை விட்டு விலகி வேறு ஒரு கட்சியை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே 71-ல் இருந்த ஆதரவு இன்று இல்லை. இந்த அரசு மக்கள் மன்றத்தில் நம்பிக்கை இழந்து நிற்கிறது என்பதை எடுத்துக் காட்ட இன்று வேறு தெளிவுகள் தேவையில்லை. 1971-ல் அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து பெற்ற வாக்குகளையும் இந்த அரசு இன்று இழந்திருக்கும் வாக்குகளையும் எண்ணிப் பார்க்கும் போது இந்த அரசு மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கிறது என்பது தெரியும். ஆகவே நாட்டு மக்களின் நம்பிக்கையை இந்த அரசுக்கு இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதற்காக இந்த அரசு இத் தருணத்தில் மக்களை அணுகுவதற்குள்ள சூழ்நிலைதான் இருக்கிறதே தவிர இந்த அரசு நீடித்துச் செயல்படுவதற்கு அருகதை இல்லை என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பகல் 12-30 ஒரு வேளை முதலமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் மக்களைச் சந்திக்க வேண்டும், அதற்குத்தான் கான்ஸ்டிடியூஷனில் ப்ரொவிஷன் இருக்கிறது என்று. கழிந்த தேர்தலுக்கு முன்பு, 4 ஆண்டுகள் முடிந்த உடனேயே சட்டசபையைக் கலைத்துவிட்டு, மக்களை சந்தித்த பிரிசிடெண்ட் இருக்கிறது. அது மட்டுமல்ல, இதே போன்ற ஒரு நிலைமை பாராளுமன்றத்திலும் நடந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி பிளவுபட்ட உடனேயே பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, மக்களைச் சந்தித்தார்கள். இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் பிளவு பட்டிருக்கிறது. ஆகவே, அது நிச்சயமாக மக்களைச் சந்தித்து, அவர்களுடைய முழு நம்பிக்கையைப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதுதான் அவர்களுடைய கடமையாக இந்த நேரத்தில் இருக்கிறது என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

குற்றச்சாட்டுகளில் ஒன்றுமில்லை என்று முதலமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். அதில் என்ன இருக்கிறது என்பதை இச் சட்டமன்றத்தில் குறுகிய காலத்திற்குள் தருவதாக வாக்களித்து இருக்கிறார்கள். இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். பிரதமரிடமிருந்து தி.மு.க. அரசுக்கு குற்றச்சாட்டுகள் குறித்து கடிதம் வந்து ஏறத்தாழ ஒரு மாத காலம் ஆகியும், இதுவரையிலும் அதற்கு விளக்கம்

தராமல் இருப்பதற்குக் காரணம் என்ன? காரணம் கடந்து விளக்கம் கொடுப்பதால் ஏற்படும் விளைவு, அந்த விளக்கத்திற்கு மதிப்பு குறைவு என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு எப்.ஐ.ஆர். செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் கேஸ் பைல் செய்யாவிட்டால் அதற்கு மதிப்பு இல்லை. அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையும் இல்லை. அதுபோன்ற தயக்கம் ஏற்படும்போது, அந்தக் கால தாமதம் ஏற்பட்டதற்கான காரணத்தையும் அறிவிக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அந்த பதிலுக்கான வகையில் ரிகார்டுகளை உருவாக்கி அதற்குப் பின்தான் விளக்கம் அனுப்பியிருக்கிறார்கள் என்று எண்ண வேண்டியிருக்கும். அந்த அடிப்படையில் தான் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அனுப்புவதில் காலதாமதம் ஆகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் பட்டியல் கிடைத்தால் எனக்குக் கொடுங்கள் இங்கே சபையில் வைப்பதற்கு வசதியாக இருக்கும், வாய்ப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். எனக்கு ஒரு பட்டியல் கிடைத்திருக்கிறது. அதை ஆதாரமாக வைத்து சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அந்த அறிக்கையை திரு எஸ். ஏ. முருகானந்தம், எம்.பி.-யும், திரு கே. பாலதண்டாயுதம், எம்.பி.-யும் வெளியிட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நான் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். அந்த அறிக்கையிலிருந்து சிலவற்றைப் படிக்கலாம் என்றும் கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்தில் அவைத் தலைவரின் அனுமதியில்லாமல் அவர் அதைப் படிக்க முன் வரலாமா? அது முறைதானா? அது மட்டுமல்ல, அவர் அப்படி படிக்கின்ற அந்தப் பட்டியலில் இருக்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அந்தப் பழைய வேலையெல்லாம் இல்லாமல் இருப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட மன்றத்தில் சில மரபுகள் இருக்கின்றன. அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் பேசுகின்ற ஆதாரத்தை துணைத்தலைவர் அவர்களுக்குக் காட்டிவிட்டு, அதன் பிறகு படிக்கிறேன்.

(திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் ஒரு அறிக்கையினை பேரவைத் துணைத் தலைவரவர்களிடத்தில் கொடுத்தார்கள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத்தலைவரவர்களே, எதிர்க் கட்சியின் துணைத்தலைவராக நான் இருந்த நேரத்தில் அப்போது அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்களிடத்தில் சில விவரங்களை எடுத்துச் சொன்னேன். அப்படிச் சொல்கின்றபோது, நான் கேள்விப்பட்டவைகள் தான் இவை என்றும் சொன்னேன். நீங்கள்



பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்ட நேரத்தில், நான் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது என்று அவர்களிடத்திலே திட்டவட்டமாகக் கூறி, நான் சொன்ன குற்றச்சாட்டுகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டேன். வேறு ஒரு குற்றச்சாட்டுக்கு—எருக்கஞ்சேரி விவகாரத்திற்கு—ஆதாரம் இருந்ததால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டேன், அதற்குப் பிறகு அதன் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முருகானந்தம் அவர்களும், பாலதண்டாயுதம் அவர்களும் வெளியிட்ட ஒரு துண்டு அறிக்கையினைப் படிக்கிறேன் என்று சொன்னார்கள். வெளியிட்டவர்கள் நீதிமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்றுக்கொள்கிறார்களா என்று திரு. வீராசாமி அவர்கள் கேட்டார்கள். பொறுப்பேற்க முடியுமா, முடியாதா என்பதை திரு. ஜேம்ஸ் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நண்பர் வீராசாமி அவர்கள் யாரோ ஒருவர் பிரசுரம் செய்ததற்கு ஆதாரம் வைத்து பேசுகிறீர்களா என்று கேட்டார்கள். யாரோ ஒருவர் என்று சொன்னால், அந்த யாரோ ஒருவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களும் அதைப்பற்றி குறிப்பிட்டதால், அதை யார் பிரசுரம் செய்தார்கள் என்பதும் அரசுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படி பிரசுரம் செய்தவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலையிருக்கிறபோது, அதற்குப் பொறுப்பு நான் ஏற்க வேண்டிய அவசியமில்லை. அந்தப் பிரசுரத்திற்கும் எனக்கும் எந்தவித பந்தமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த அறிக்கையை இங்கே நீங்கள் படிப்பதால் உங்களுக்குத்தான் அதில் சம்பந்தம் உண்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தாங்கள் அந்தக் குற்றச்சாட்டுகளை உண்மை என்று நம்புகிறீர்களா? அப்படி உண்மையென்றால் அதற்கு ஆதாரம் தருகிறீர்களா? பொறுப்பேற்றுக் கொள்கிறீர்களா?

திரு. ஜே. ஜேம்ஸ் : என்னுடைய கையில் கிடைத்த ஆதாரத்தை வைத்துத்தான் நான் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு துண்டு அறிக்கையை ஆதாரமாக வைத்துப் பேசுகிறேன் என்று சொல்கிறீர்கள். அதில் இருக்கும் விஷயங்கள் உண்மையானவை என்று கருதுகிறீர்களா, அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா?

திரு. ஜே. ஜேம்ஸ் : அந்தத் துண்டு அறிக்கை யாரோ அடித்த துண்டு அறிக்கையல்ல. பாராளுமன்ற உறுப்பினர்களால் வெளியிடப்பட்டது. அது ஆதாரம் அற்றது என்று கூற முடியாது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : ஆதாரம் உள்ளதா, அற்றதா என்பது நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கிறது. அப்படியிருக்கும்போது அது எப்படி ஆதாரம் உள்ளது என்று சொல்ல முடியும்?

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : உங்களிடத்தில் இருக்கிற ஆதாரத்தைக் கேட்டால் கொடுக்க மறுக்கிறீர்கள். எங்கள் கையில் இருக்கும் ஆதாரத்தைக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள். இது ஜனநாயகத்திற்கு ஒவ்வாததாக இருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : நாங்கள் வாய்ப்புக் கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் கொடுப்பது எல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்டால் தான் முடியும். அதற்கு உங்களுக்குப் பயம் என்றால், இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்கின்றன, என்ன பதில் சொல்கிறீர்கள் என்று கேள்வியாகக் கேட்டால் பதில் சொல்லக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இரண்டு முறையையும் விட்டு விட்டு நீங்கள் வேறு ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : சட்ட அமைச்சர் அவர்கள் பொறுப் பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டு இருக்கிறார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இப்போது வழக்கு மன்றத்தில் அது குறித்து ஏதோ வழக்கு தொடர்ந்து இருப்பதாகக் கூறுகிறார்கள். வழக்கு மன்றத்தில் இருப்பதைக் குறித்து நாம் எப்படி இப்போது விவாதிக்க முடியும்? அதற்கு நாம் எப்படி பொறுப்பேற்றுக்கொள்ள முடியும்? நாட்டு மக்களுக்கு கடமையாற்றும் முறையில் நாம் இவற்றையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்கிறோம்.

**If they believe them to be true that is different. Now that it is *sub-judice*; it is for them to elicit information from the Government.**

ஆகவே, இந்த மாதிரியான விஷயங்களில் ஆதாரம் இல்லை என்று சொல்வதற்கு இல்லை. வழக்கு மன்றத்திலே இருந்து தீர்ப்பும் வர வில்லை. அந்த அளவிலே சட்ட வரம்புக்குட்பட்டுத்தான் இந்த விவா தத்தைத் தொடர்ந்து நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருது கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : எனக்கு அது பொய்யான ஒரு விஷயம் என்று தெரிந்தால், நிச்சயமாக நான் இந்த மன்றத்திற்கு அதை எடுத்துச் சொல்லமாட்டேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் குறிப்பிடுகின்ற அந்த அறிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முருகானந்தம், பாலதண்டாயுதம் ஆகிய இரண்டு பேரால் வெளியிடப்



பட்டது என்று குறிப்பிட்டார்கள். துண்டு அறிக்கை என்று மாத்திரம் தான் இங்கே சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து அதில் இருக்கும் விஷயங்களையும் சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் அது துண்டு அறிக்கை என்றுதான் வரும். அதைச் சொல்லிவிட்டால், அதற்கான பதில் இங்கேயிருந்து பெறலாம்.

**THIRU K. KANDASAMI : On a point of order, Sir May I know from the Hon. Deputy Speaker whether it will not amount to reference to a matter *sub judice?* Isit in order to speak on it when the matter in question is pending in a court of law ? I want a specific ruling from the Chair.**

<u>திரு நா. வீராசாமி</u> : அனதர் பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இங்கே திரு ஜே. ஜேம்ஸ் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். நான் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன். அவர்களே முருகானந்தம் ஒரு துண்டு அறிக்கையை கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். அதைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். அதில் இருக்கிற செய்திகளை முத லமைச்சர் அவர்கள் படிக்கச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் அதைப் படிப்பதில் ஆட்சேபணையில்லை. அப்படி படிக்கும்போது அதிலே குறிப்பிடுகின்ற அந்தக் குற்றச் சாட்டுகளுக்கு நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறார்களா என்று தெரிந்தால், அதற்குப் பின் னாலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அதற்குப் பதில் சொல்ல முடியும். இல்லையென்றால், ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்களும் எவ்வளவோ துண்டு அறிக்கைகளைக் கொண்டுவர முடியும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : அவர் அதைப் படித்தாலே பொறுப்பேற்றுக் கொண்டு தான் படிக்கிறார்கள் என்று அர்த்தம். அந்தத் தன்மையில் தான் அவர் படிக்க வேண்டும்.

**THIRU M. A. LATHEEF : Even according to the statement made by the Hon. Chief Minister, a particular pamphlet wherein specific charges have been levelled against certain Ministers or the Ministry as a whole, is the subject matter before the court and that has given a cause of action to the Government to prefer a complaint before the appropriate court. Therefore, if that happens to be the subject matter of a particular action instituted at the behest of the Government, whether that could be referred to as the source of information by the Hon. Member here and on the basis of that source of information, can a reply be given by the Government on the floor of the House? So it definitely constitutes a breach of privilege which may be taken before the court. This is a subject matter which is *sub judice*. Therefore, I would requests the Chair to give a definite ruling. Of course, the Hon. Member has got freedom to say that he has certain information. But when he says that that information is based upon certain facts, then he should take responsibility to substantiate the charges without referring to the pamphlet as such.**

MR. DEPUTY SPEAKER: A number of decisions and rulings have been given on the floor of the House that matters which are *sub judice* should not be taken up for discussion. So, it is not advisable on the part of the Hon. Member to refer to it because it may affect the case one way or the other.

Secondly, the Hon. Member wants to read the pamphlet here. That pamphlet is the subject matter of a case before the court. So, if at all the Hon. Member, Thiru James, wants to read it, he must take responsibility of proving it.

Not only that. In 1964 there was a ruling given by the then Speaker which said—

'Members while they are entitled to hold any paper in their hands, should not read from it'.

என்றும் அதைப்போல 'Members should be sure of the fact whenever they made a statement on the floor of the House'

என்ற அளவுக்கும் முன்னாலே காங்கிரஸ்காரர்கள் இருந்த நேரத்தில், சபாநாயகர்களே தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவேதான் இந்த மன்றத்தினுடைய மரபு கெடாமல் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்து கிறோமே தவிர, நண்பர் ஜேம்ஸ் அவர்கள் ஏதோ குற்றச்சாட்டுச் சொல்வார்கள் என்று பயந்து கொண்டு சொல்லவில்லை.

தாங்கள் ஒரு வழக்கறிஞர். இந்த விஷயம் ஏற்கனவே ஸப் ஜுடிஸ்; ஆகவே, இந்த அறிக்கையைப் பார்த்து நீங்கள் மேற்கொண்டு வாசிக்கப் போகிறீர்களா? அதை மீறி வாசிப்பதாக இருந்தால் அவ்வளவு நன்றாக இருக்காது என்பது என்னுடைய கருத்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த அரசின்மீது சுமத்தப்பட்டிருக்கிற சில புகார்களை இந்த மன்றத்தில் நான் தெரிந்த அளவுக்குக் கூற விரும்பு கிறேன். இந்த மன்றத்தில் உறுப்பினராகவும் குடிசை மாற்று வாரியத் தின் தலைவராகவும் இருப்பவர் திரு. இராம அரங்கண்ணல். அவர்கள் அன்னியச் செலாவணி மோசடி வழக்கில் சிக்கிக்கப்பட்டு ரூ. 5,000 அபராதம் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்........

THIRU M. A. LATHEEF: Now it has been established and ruled by the Chair....

THIRU J. JAMES: I am not discussing the merits......

THIRU M. A. LATHEEF: Now it has been ruled that a particular source of information should not be referred to in this House and, that has been disposed of. When a specific charge is made by the



Hon. Member, he states that he has received certain information. He must reveal the source of information on the floor of the House or he must say that he has seen it. He must adopt either of the two ways. Other wise it is not proper for him to say something which he could not substantiate or prove it. Otherwise it could be contrary to the established tradition of the House. The tradition of the House should be upheld in the interest of democracy.

MR. DEPUTY SPEAKER: I appreciate the contention of the hon. Member but I do not want to be too strict.

திரு. ஜே. ஜேம்ஸ்.: துணைத் தலைவர் அவர்களே, ஊழல் பட்டியலைப் பற்றி இவ்வளவு நேரம் வரவேற்கிறோம் என்று சொன்னவர்கள், ஏதோ எனக்குத் தெரிந்த அளவு ஒரு சில ஊழல்களைப்பற்றிக் கூறும்பொழுது சகிக்கமுடியாமல் வருத்தப்படுவதைப் பார்க்கிறேன். திரு. இராம அரங் கண்ணல் விஷயம் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்த விஷயம். It is an admitted fact. இதற்குக் கூட அப்ஜெக்ஷன் ஆளும் கட்சியிலிருந்து வருகிறது என்று சொன்னால் என்ன செய்வது....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஆளும் கட்சியைப்பற்றி; அவர்கள் அப்ஜெக்ஷனைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. உங்களுடைய உரிமையைப் பாதுகாக்க நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் பேசுங்கள்.

THIRU M. A. LATHEEF: I am not objecting to it as such. I am pointing out the rules and tradition.....

திரு. ஜே. ஜேம்ஸ்: திரு. இராம அரங்கண்ணல் ரூ. 5,000 அபராதம் கட்டியிருக்கிறார்கள். இருந்தும், இந்த அரசின் பொறுப்பில் இருக்கிற ஒரு நிறுவனத்தின் தலைவராக இருக்கிறார். ஒருவேளை அவர் நிரபராதி யாக இருக்கலாம் அல்லது குற்றம் செய்தவராகவும் இருக்கலாம். எப் பொழுது அவர் மீது ஒரு குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறதோ அந்த நிமிடத்தி லிருந்தே அவரை இந்த அரசு அந்தப் பதவியிலிருந்து அகற்றியிருக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட நிலை மட்டுமல்ல. கோர்ட்டு அவர் குற்ற வாளி என்று தீர்ப்பு வழங்கி, அவர் அதற்காக அபராதத்தையும் கட்டிய பின்பும் கூட பொறுப்பு வாய்ந்த அந்தப் பதவியை அவர் இன்னும் வகித்துக் கொண்டிருக்கிறார்.................................

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோர்ட்டு என்று சொல்லுகிறார்கள். அது தவறான வாதம். எந்தக் கோர்ட்டும் அப்படிப்பட்ட தீர்ப்பைத் தர வில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ். : அதைத் திருத்திக் கொள்கிறேன். அப்படி குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கப்பட்டும், அவர் அபராதம் கட்டிய பிறகும் கூட இந்த அரசு அவரை அந்தப் பொறுப்புள்ள பதவியிலிருந்து நீக்க வில்லை என்று சொன்னால், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு இந்த அரசு ஆதரவு அளிக்கிறது என்றுதான் பொருள். இந்தக் குற்றச் சாட்டை இந்த அரசின் மீது சுமத்த விரும்புகிறேன்.

இன்னும் இந்த அரசாங்கத்தில் அதிகப் பொறுப்பில் இருக்கிற பலர்.......................(குறுக்கீடு) நான் ஏதாவது ஆதாரம் வைத்திருந்தால் கூட என்னை நீங்கள் பேச அனுமதிக்கமாட்டேன் என்கிறீர்கள். **It is not my own concocted story. You know t as you are in possession of the facts.**

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த அறிக்கையைப்பற்றித் தான் சொன்னோம். அந்த அறிக்கை வழக்கு மன்றத்திற்குப் போய் இருக்கிறது. அந்த அறிக்கை வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிற காரணத்தினால், நீங்கள் முதலில் காட்டிய துண்டு நோட்டீஸில் குறிப்பிட் டிருப்பதைப்பற்றி பேச வேண்டாம் என்று தடுக்கப்பட்டது. வேறு எந்த அறிக்கையை வைத்துக் கொண்டு பேசினாலும் பேசலாம். வழக்கு மன்றத் தில் இல்லாத எந்த அறிக்கையைப் பற்றியும் நீங்கள் தைரியமாகப் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 10 நிமிடங்களில் முடித்துவிடுவீர்களா ?

**THIRU J. JAMES: Sir, a major part of my time has been taken by my hon. friends.**

நமது முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கின்ற சொத்துக் கணக்கைப் பற்றி சில குறைகள் கூறலாம் என்று நான் நினைக் கின்றேன். அது சட்டத்திற்குட்பட்டதாகும். உங்கள் விதிமுறைகள் குறுக் கிட்டதன் காரணத்தினால் இந்த லஞ்ச ஊழல் பட்டியலிலிருந்து பல அம்சங்கள் இந்த அவையில் முன்னால் வைக்க இயலாத நிலைமையிலிருக் கிறேன். அதற்காக நான் வருந்துகிறேன்.

திரு. நா. வீராசாமி : நாங்கள் ஒன்றும் தடுக்கவில்லை. உண்மை யான குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்தில் வைப்பதை நாங்கள் வர வேற்கிறோம். அதை ஆதாரத்தோடு, பொறுப்பேற்று வைப்பதில் ஆட்சே பணையில்லை. பத்திரிகைகளில் போடுகின்றவர்கள் தடுத்து விட்டார்கள். 184 பேர் தடுத்துவிட்டார்கள் என்று தவறான எண்ணம் வரும். ஆகவே அப்படிச் சொல்வதை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



திரு. ஜே. ஜேம்ஸ் : முதலமைச்சர் அவர்களின் சொத்துக் கணக்கில் சில குறைபாடுகளை நான் கூற விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் அஞ்சுகம் பதிப்பகம், மேகலா பிக்சர்ஸ் என்ற நிறுவனங்களிலிருந்து பல லட்ச ரூபாய் கடன் வாங்கியிருப்பதாக அந்தச் சொத்துக் கணக்கில் காணப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில் இந்த நிறுவனங்களுக்கு அதிக பொருள்வாய்ப்பில்லை. முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத் திருக்கின்ற அளவுக்கு அந்த நிறுவனங்களுக்கு பணவசதி இல்லாதிருக்கும் போது, இந்தப் பணம் அந்த நிறுவனங்களுக்கு எந்த வகையில் வந்தது என்ற ஐயப்பாடு பொதுமக்களுக்கிருக்கிறது. ஆக இது ஒரு சந்தேகத்திற் குரிய விஷயம் என்பதையும் இந்த அரசுக்கு எடுத்துக் காட்ட விரும்பு கிறேன். அடுத்ததாக அஞ்சுகம் பிக்சர்ஸ் என்ற நிறுவனம் முதலமைச்சர் அவர்களின் உறவினர் ஒருவர் உரிமையாளராக இருக்கின்றார். அதோடு முதலமைச்சர் அவர்களின் மகன் திரு. மு. க. முத்து ஹீரோவாக நடித்த பிள்ளையோ பிள்ளை என்ற சினிமாப் படம் ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய் செலவில் இந்த நிறுவனம் தயார் செய்திருக்கிறது. இந்த நிறுவனத்திற்கும் போதுமான பொருள் வசதி இல்லை. ஆக இதுவும் சந்தேகத்திற்குரிய விஷயம் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள். அதுமட்டுமல்ல. இந்த பிள்ளையோ பிள்ளை என்ற படத்தை டிஸ்டிரிபியூட் செய்தது, ஓவர் பிரிட்ஜ் கட்டுகின்ற கண்டிராக்டர் அந்த பிள்ளையோ பிள்ளை என்ற படத்தை டிஸ்டிரிபியூட் செய்திருக்கிறார்கள். ஆக இந்த மாதிரியாக அரசு, முதலமைச்சர் அவர்கள், தனது பதவியை, செல்வாக்கைக் கொண்டு, தனது சொந்தக் காரியங்களுக்காகப் பயன் படுத்தியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த அரசுமீது சுமத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கொஞ்சம் கொஞ்சமாக அந்த ரகசியங்களைச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். நாங்கள் இதற்காகத்தான் காத்துக் கொண்டிருந்தோம். இந்தச் செய்திகளைச் சொன்னதற்குப் பின்னால் குற்றச்சாட்டு என்ன ? இந்த அரசு அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய் தது, இந்த அமைச்சர்கள் இந்தெந்த விதத்தில் சொத்து சம்பாதித்தார்கள் என்று அவர்கள் சொல்ல விரும்புகிறார்களா ? முதலில் அவர்கள் சொத்து விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதில் கொடுக்கப்பட்டிருப் பது முதலமைச்சர் கடன் வாங்கினார் என்று. அது யாரோ தெரியாமல் சொல்லியிருக்கிறார்கள் என்று தெரியாமல் பேசக் கூடாது. எங்கள் ஆசை யெல்லாம் அவர்கள் சொல்லும்போது இந்தக் குற்றச்சாட்டு இந்த மேகலா பிக்சர்ஸ் உண்மையிலே முதலமைச்சருக்குக் கடன் கொடுத்தது என்று அவர்கள் நம்புகிறார்களா ? அது தான் குற்றச்சாட்டா ? கடன் வாங்கு வதே ஒரு குற்றச்சாட்டுதானே ? அதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். பிளைஓவர் என்று காண்டிராக்ட், காண்டிராக்ட் கொடுப்பதில் சட்டம் மீறப்பட்டிருக்கிறதா என்று அப்படித்தான் குற்றச்சாட்டு வரும். வேறு ஏதாவது வாங்கிக் கொண்டு, இந்த முதலமைச்சர், அமைச்சர்களும் இந்த காண்டிராக்ட் கொடுத்தார்கள். அப்படித்தான் குற்றச்சாட்டு வர முடியும். மற்றவர்கள் தெளிவாகப் பேசாவிட்டாலும், நம் ஜேம்ஸ் தெளிவாகப் பேச வேண்டும். நாங்கள் பதில் சொல்ல வேண்டும் என்று காத்திருப்பதால் இதைச் சொல்லுகிறேன். அதை தாங்கள் தெளிவாகச் சொல்லலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார். : சட்ட மந்திரி அவர்கள் தெளிவாக விளக்குங்கள் என்று சொல்லியிருக்கிறார். நண்பர் ஜேம்ஸ் கூறுகின்ற நேரத்தில் இந்த ஸோர்ஸ் ஆப் பண்ட்ஸ் பற்றி, எங்கிருந்து பணம் வந்தது என்பது சந்தேகத்திற்குரியது என்று கூறிக் கொண்டிருக்கிறார். இந்த மாதிரி பெருத்த தொகை ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினால், இது எப்படி வந்தது என்று ஆராய்வதற்காகத்தான் இதைச் சொல்லுகிறாரே அல்லாது, இந்த ஸோர்ஸ் ஆப் பண்ட்ஸ் எப்படி வந்திருக்கிறது, உண்மையாக இருக்கிறதா, எவனுடைய கையில் போகிறது என்பதை எல்லாம் விளக்குவதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு சங்கடம் ஏற்படும்.

மாண்புமிகு டாக்டர் கருணாநிதி : தலைவரவர்களே, படம் எடுப்பவர்கள், படம் வெளியிடுபவர்களுக்குத்தான் ஒரு படம் எப்படி வெளியிடப்படுகிறது என்பது புரியும். இதையெல்லாம் எழுதிக் கொடுத்துவிட்ட எம். ஜி. ராமச்சந்திரன் கூட பல படங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே படம் தயாரிக்கும்போது 15 லட்சத்தைக் கொண்டு போய் போட்டு யாரும் படம் தயாரிப்பதில்லை. முதலிலே படத்தை வெளியிடுபவர்கள் பல பேர் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் 1 லட்சம், 2 லட்சம் கடனாகப் பெற்று அவர்களுக்கு நல்ல வட்டி கொடுத்து, முதலிலே படத்தை ஆரம்பிப்பார்கள். பிறகு வடஆற்காடு, செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்கள் ஒரு ஏரியாவாகவும், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, அது இன்னொரு ஏரியாவாகவும், தஞ்சை, திருச்சி அது இன்னொரு ஏரியாவாகவும், சென்னை தனி ஏரியாவாகவும் திருநெல்வேலி கன்னியகுமரி இன்னொரு ஏரியாவாகவும் பிரிக்கப்பட்டு வினியோகஸ்தர்கள் வருவார்கள். அவர்கள் இந்த ஜில்லாக்களுக்கு அந்த ஏரியாக்களுக்கு அந்தப் படத்தை விலைக்கு பெற்றுக் கொள்வார்கள் அல்லது வினியோகம் செய்ய அதிலே ஒரு கமிஷன் எடுத்துக் கொண்டு படத்தை வெளியிடுவதற்கு படம் தருவார்கள். அப்படி அந்த வினியோக உரிமை, விலைக்குப் பெற்றுக் கொள்ளுகின்ற உரிமை அவர்கள் பெறுகின்ற நேரத்தில் முன் பணம் தந்து, படம் முடிகின்ற வரையில் 2 ஆயிரம் அடி முடிகின்ற வரையில் இவ்வளவு பணம், 4 ஆயிரம் அடி முடிகின்ற வரையில் இவ்வளவு பணம் என்று அவ்வப்போது பணம் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். 12 லட்சம், 15 லட்சத்திற்கு ஒரு படம் வெளியிடுவதாக இருக்கலாம். ஆனால் படம் முடிந்தவுடன் எடுத்துச் செல்லுகின்ற நேரத்தில் முழுப் பணம் கொடுத்துவிட்டுதான் செல்லுவார்கள். இது தான் படம் வெளியீட்டிலிருக்கின்ற பணம் வருகின்ற முறை. இதை பொன்னப்ப நாடார் நிச்சயமாக புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள். சினிமா உலகிற்கும் அவருக்கும் வெகு தூரம். நம் நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்கும் இதெல்லாம் தெரிந்திருக்க வழியில்லை. ஆகவேதான் சொல்லுகிறேன், அவர் ஒன்றைக் கிளப்பினார். ஏதோ காண்டிராக்டர் பட வினியோகஸ்தர் என்று சொன்னார். எந்த மாவட்டத்திற்கு அவர் வினியோகஸ்தர், தமிழ்நாடு முழுவதற்கும் அவர் வினியோகஸ்தரா என்ற விவரமெல்லாம் அவரிடத்தில் இருக்காது. அப்படி ஏதாவது ஒன்று கையில் இருக்கிறது என்பதை ஜேம்ஸ் விளக்கிச் சொன்னால் நான் அதைப்பற்றி விளக்கம் சொல்ல முடியும்.





திரு. ஜே. ஜேம்ஸ் : நான் இவற்றையெல்லாம் கூறும்போது முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தருவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டுமென்பதற்காக நான் கூறுகிறேனே தவிர என் என்று சொன்னால் பிரதம மந்திரியினுடைய அனுமதி வரும் வரையில் முதலமைச்சர் அவர்கள் இதில் ஏதாவது கூற இயலாது. ஆனால் ஒரு அங்கத்தினர் கூறி விட்ட காரணத்திற்காக நான் பதில் கூறி விட்டேன் என்று கூறுவதற்கு ஒரு வாய்ப்பிருக்கும் என்ற காரணத்தினால் இதைச் சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறது என்று சொன்னால் அரசாங்கம் ஒரு கண்டிராக்டரை வைத்து தன் சொந்த அவசியத்திற்காக பதவியைப் பயன்படுத்தி அந்தக் காரியத்தை செய்தது தவறு என்பதை தான் நான் இதைக் கூற விரும்புகிறேன். அடுத்தது இந்த அரசு மீது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பதவியைப் பயன்படுத்தி அந்த கண்டிராக்டரை வைத்துக் கொண்டு அந்த படம் எடுத்தோம் என்பதை நான் மறுக்கிறேன். அந்த கண்டிராக்டர் பிள்ளையோ பிள்ளை படத்தை வாங்கினாரா? அந்த கண்டிராக்டருக்கு பட உலகத்தில் எவ்வளவு காலம் வியாபாரத்துறையிலிருக்கிறார்? எவ்வளவு படம் வினியோகித்திருக்கிறார்கள்? நண்பர் எம். ஜி. ஆர். படங்களை எடுத்து வினியோகித்தது உண்டா? இந்த விபரங்களெல்லாம் நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரியுமா?

திரு. ஜே. ஜேம்ஸ் : எனக்குத் தெரிவதற்குள்ள வாய்ப்பில்லை. எம். ஜி. ஆர். விஷயம் முதலமைச்சருக்குத் தெரியும். முதலமைச்சர் சொன்னால் நாங்கள் அதை அறிவதற்கு உதவியாக இருக்கும்.

அடுத்தது இந்த அரசின் மீது லஞ்ச ஊழல் விவகாரத்தைப் பற்றி நாங்கள் பல நாளாக சொல்லிக் கொண்டே வருகிறோம். இந்த அரசைச் சார்ந்துள்ள கட்சியில் பல தலைவர்கள் முறை தவறான முறையில் சொத்துக்கள் சம்பாதித்திருக்கிறார்கள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டிருந்தோம். அதற்கு கடந்த மாதம் விளக்கக் கூட்டம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது. அதற்கு நண்பர் ஆசைத்தம்பி அங்கே வந்து உரையாற்றினார். அவர் கூறினார். நாங்கள் ஒரு கலெக்டர் ஆபிசுக்கு எங்களை ஒரு நண்பர் காரியத்தை நடத்திக் கொடுப்பதற்கு அழைத்துச் செல்லுகிறார்கள், அவர்கள் காரியம் 'நடைபெறுகிறது என்றால் 5 ஆயிரம் அவருக்கு லாபம் ஏற்படுகிறது என்று சொன்னால், அவர் அதற்குப் பிரதியாக 500 ரூபாய் கொடுத்தால், அதில் 10 பர்ஸெண்ட் கொடுத்தால் அது என்ன கஷ்டம் இருக்கிறது, அதை ஒரு தப்பு என்று கூறுவதற்கு இயலுமா என்று அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். ஆக இந்த நிலையில் நம் காரியமெல்லாம் லஞ்சம் வாங்குவது மட்டுமல்ல, லஞ்சம் வாங்குவது சரி என்று நிரூபிக்கின்ற அரசு, அரசைச் சார்ந்திருக்கின்றவர்கள் என்று நிச்சயமாக நாங்கள் கூறுகிறோம். கடந்த சில மாதங்களாக சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்குக் கெட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவையில் கூற வேண்டிய அவசியமில்லை. நாடு முழுவதும் தெரிந்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்திலே ஆசைத்தம்பி அவர்கள் உறுப்பினராக இல்லை. அவர் பேசினார் என்று ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். ஜேம்ஸ் அவர்கள் சொன்னதுபோல் நான் பேசவில்லை என்று ஆசைத்தம்பி அவர்களே மறுப்பு வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் ஜேம்ஸ் அவர்கள் ஆசைத்தம்பி அவர்கள் வெளியிட்ட மறுப்பு அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடாமல், அவர் பேசினார் என்று தவறாக வந்த செய்தியை மட்டும் அவையில் சொல்வது சரியல்ல. ஆசைத்தம்பி அவர்கள் சொன்னதாக வந்த செய்தியைச் சொல்வதாக இருந்தால் அவருடைய மறுப்பு அறிக்கையையும் சொல்ல வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நண்பர் ஆசைத்தம்பி அவர்களின் மறுப்பு அறிக்கை துக்ளக் பத்திரிக்கையில் வந்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது அவர் ஏற்கெனவே சொன்னதை இன்னும் தெளிவாக்கிக் கூறியிருப்பதுபோல் தோன்றுகிறது. நாகர்கோவிலில் அவர் என்ன சொன்னார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் அவருடைய பேச்சைக் கேட்டிருக்கிறேன். எனவே, அவருடைய மறுப்பு அறிக்கையை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆசைத்தம்பி அவர்களுடைய பேச்சைக் கேட்க அவ்வளவு ஆசையாகப் போகின்றவர்கள் என்னுடைய பேச்சையும் ஆசையுடன் கொஞ்சம் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தங்களுடைய அடுத்த கூட்டம் நடைபெறும்போது நிச்சயமாக நான் அந்தக் கூட்டத்திற்கு வந்து தங்களுடைய பேச்சைக் கேட்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, ஆசைத்தம்பி அவர்கள் பத்திரிக்கையிலே மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவர் பேசியதை நான் என் காதாரக் கேட்டேன். அவர் என்ன பேசினார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அது தவறு என்று பலர் தெரிவித்த பின்னால்தான் அவ்வாறு தாம் சொல்லவில்லை என்று மறுப்பு தெரிவித்திருக்கிறார். அவர் என்னதான் மறுப்பு தெரிவித்தாலும் அன்று பேசியது குற்றம். குற்றம் குற்றம்தான். சொன்னது உண்மைதான்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆளும் கட்சியைப் பற்றிக் குற்றம் சாட்டுகிறபோது, ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு முதல் அமைச்சரவர்களோ அல்லது அவை முன்னவர் அவர்களோ அல்லது ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்களோ தவறாகப் பேசியிருந்தால் அதை வைத்துக் குற்றம் சாட்டலாம். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் தவறாகப் பேசிவிட்டார் என்னும் செய்தியை அதுவும் மறுக்கப்பட்டிருக்கிற செய்தியை—வைத்துக்கொண்டு, ஆட்சியையே குற்றம் சாட்டுவது சிறந்ததல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஆசைத்தம்பி அவர்கள் "டூரிஸ்ட் கார்ப்பொரேஷன்" தலைவர். ஆளும் கட்சியைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர்களில் ஒருவர். டூரிஸ்ட் கார்ப்பரேஷன் சம்பந்தமாகத்தான் நாகர்கோவிலுக்கு வந்திருந்தார். அங்குதான் அவ்வாறு பேசினார். ஆகவேதான் குற்றஞ் சாட்டுகிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆசைத்தம்பி அவர்கள் தவறாகப் பேசியதாகச் சொல்கிறார்கள். ஆனால் ஆசைத்தம்பி, தான் அவர்கள் சொல்வதுபோல் பேசவில்லை என்று மறுப்பு தெரிவித்திருக்கிறார்கள். பேசவில்லை என்று மறுப்பு தெரிவித்த பின்பும், அதை ஒரு குற்றச்சாட்டாகக் கூறுவது நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்ல வாய்ப்புக் கிடைக்காத ஒருவரைப் பற்றி இவ்வளவு நேரம் இங்கே பேசவேண்டிய தேவையே இல்லை என்று கருதுகிறேன்.

**Dr. H. V. HANDE** : The Hon. Minister for Health is saying that he (Mr. Asaithambi) is not one of the Ministers and so what he says cannot be taken as that of Government. This is a discussion on a motion of 'Vote of Confidence' in the present Ministry. The Hon. Members Thiru James is citing an instance to support his argument, that this Government is ridden with 'Oozhals'. He cites a witness, a responsible person who is occupying the position of Chairman of Tourism Corporation. There is another witness also. Mr. Swamidhas, a member of this House had heard the speech of Thiru Asaithambi. He testifies to his having spoken like that. If that is so, what he (Mr. Asaithambi) has spoken is a very serious allegation and serious aspersion against the Government and there could be no better proof to condemn this Government than that statement. That is the point.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆசைத்தம்பி அவர்கள் மேடையிலே பேசியிருக்கிறார்கள். மேடைப் பேச்சாளர்கள் சில சமயங்களில் வாதத்திற்காகச் சில கருத்துக்களை வெளியிடுவார்கள். நீதிமன்றங்களிலே வழக்கறிஞர்கள் வாதிடுவதுபோல் வாதத்திற்காகச் சிலவற்றைச் சொல்லுவார்கள். அப்படி வாதத்திற்காகச் சொல்பவற்றை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியின் மீது குற்றஞ்சாட்டுவது சரியல்ல.

"பிலிமாலையா" பத்திரிக்கையில் புரட்சித் தலைவரின் கருத்தாக—ஆம் அவர் புரட்சிக்குத் தலைவர்தான்; மக்கள் தலைவராக இருந்தால் புரட்சி ஏன் வருகிறது—ஒன்றை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அது கறுப்புப் பணம் சம்பந்தப்பட்டது. இந்தத் தொழிலில் கறுப்புப் பணம் என்பது இருந்தாக வேண்டும். இன்கம்–டாக்ஸ் விகிதம் அதிகமாக இருப்பதால்தான் கருப்புப் பணம் கையாள நேரிடுகிறது. அப்படி கருப்புப் பணம் வைத்துக்கொள்ளக் கூடாது என்றால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, அரசுக் கொள்கையை மாற்ற வேண்டும். பிலிமாலையா பத்திரி

கையில் இப்படி ஒரு கருத்து வெளியிடப்பட்ட காரணத்தினால், அதற்குப் பதில் கூறும் நோக்கத்துடன் வாதத்திற்காக ஒன்றைச் சொல்லியிருக்கலாம். ஆனால் அதை வாதிட்ட முறை தவறாகக்கூட இருந்திருக்கலாம். அதை வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு தவறு செய்துவிட்டது என்று குற்றஞ்சாட்டுவது சரியல்ல. இங்கே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுவதற்கு உரிமையும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் அடுத்த விஷயத்திற்குச் செல்கிறேன். இன்று இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. நாட்டிலே அமைதி இல்லை. மக்கள் வெளியே தைரியமாகச் செல்ல முடியவில்லை. இன்னும் என்னென்ன குற்றச்சாட்டுகள் எல்லாமோ சொல்ல வேண்டியிருக்கிறது. அவைகளையெல்லாம் சொல்வதற்கு நேரம் போதாமையினால் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி இந்த நாட்டில் இதற்கு முன் எங்காவது நடந்திருக்கிறதா? சரித்திரத்தில் இதற்கு முன் இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாகப் படித்திருப்போமா? ஆக வரலாறு காணாத ஒரு காட்சியாக அந்த நிகழ்ச்சி அமைந்துவிட்டதே. ஒரு கல்லூரிப் பேராசிரியர் அவருடைய இல்லத்திலே இருக்கும்போது போலீஸ்காரர்களால் தாக்கப்பட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல. அந்தப் பேராசிரியரைக் காவல் நிலையத்திற்கு இழுத்துக்கொண்டுபோய் நையப்புடைத்திருக்கிறார்கள், என்றால் இதற்கு மிஞ்சிய ஒரு நிகழ்ச்சி எங்காவது நடைபெற்றிருக்கிறதா என்று முதலமைச்சரவர்களைக் கேட்கிறேன். அதைத் தொடர்ந்து என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த மன்றம் அறிந்து கொண்டிருக்கிறது. தாக்குண்ட பேராசிரியருக்கு ஆதரவாக போலீஸ்காரர்களின் அக்கிரமத்தை எதிர்த்து மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். கொக்கரகுளம் என்னுமிடத்திலுள்ள பாலத்தின் அருகில் ஊர்வலம் வரும் போது, போலீசார் ஊர்வலத்தை மறித்து, மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக லூர்துநாதன் என்ற கல்லூரி மாணவன்—மூன்றாவது வருட பி. காம். படிக்கும் மாணவன்—இறந்துவிட்டார். அந்த மாணவன் போலீசாரால் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறான்—கொலை செய்யப்பட்டிருக்கிறான். அதை அங்கிருந்த பல வழக்கறிஞர்களும் பார்த்திருக்கிறார்கள். அந்த வழக்கறிஞர்களையும் போலீசார் தாக்கி இருக்கிறார்கள். அங்கே போலீஸ்காரர்கள்தான் ஒரு பஸ்ஸை கொளுத்தினார்கள் என்று அந்த வழக்கறிஞர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கு முன்னதாக எங்காவது இதுமாதிரியான சம்பவம், நடைபெற்றிருக்கிறதா? நாகரிகமான ஆட்சி நடக்கக்கூடிய ஒரு நாட்டிலே ஜனநாயக ஆட்சி நடக்கக்கூடிய ஒரு நாட்டிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பது மிகமிகக் கண்டிக்கத்தக்கது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாகர்கோவிலில் மாணவர்கள் ஊர்வலமாகச் செல்லும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் அந்த ஊர்வலத்திலே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாணவர்களை அடித்து விரட்டி இருக்கிறார்கள். அதைப் போன்று மதுரையில் நடைபெற்றிருக்கிறது.



அடித்துத் துரத்தப்பட்ட மாணவர்கள் ரயில்வே ஸ்டேஷனை புகலிடமாகத் தேடி ஓடியிருக்கிறார்கள். அங்கு சென்று போலீசார் மாணவர்களைத் தாக்கினார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையில் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டிருக்கிறது என்று சொன்னால் அதில் என்ன தவறு இருக்கிறது என்று நான் முதலமைச்சரவர்களை கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக திருச்சியில் நடைபெற்ற சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே கல்லூரிக்குள்ளே சென்று போலீசார் மாணவர்களைத் அடித்திருக்கிறார்கள். பதட்ட நிலை காரணமாகக் கல்லூரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு எப்படி பரீட்சை எழுதப் போகிறோம் என்று மாணவர்கள் எல்லாம் கதி கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். சட்டம், அமைதி, ஒழுங்கு கெடாமல் காந்திய முறையில் இந்த நாட்டில் ஆட்சி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பது உண்மையானால் கல்லூரிகள் இப்படி மூடப்பட்டிருக்குமா? இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் நடந்திருக்குமா என்பதை இந்த அரசாங்கம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்ததாக, கடந்த சில நாட்களாக இந்த நாட்டில் எத்தனை துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றன? இந்த அரசு பதவிக்கு வருவதற்கு முன்னதாக ஆளும் கட்சியினர், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் எங்கள் துப்பாக்கிகளிலிருந்து குண்டு பிறக்காது, குண்டிற்குப் பதிலாக பூச் செண்டு பிறக்கும் என்று கூறினார்கள். இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, துப்பாக்கியிலிருந்து வருகின்ற பூச் செண்டினால் இறந்தவர்களே இத்தனை பேர்கள் என்றால், துப்பாக்கியில் குண்டைப் பயன்படுத்தினால், இந்த நாட்டிலுள்ள நாலரை கோடி மக்களில் எத்தனை பேர்கள் இருப்பார்கள், இருக்க முடியும் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

அடுத்ததாக, விவசாயிகள் போராட்டத்தின்போது துப்பாக்கிச் சூட்டினால் ஏறத்தாழ 20 பேர்கள் இறந்தார்கள். தங்கள் கட்சியிலுள்ள......

திரு. கே. கந்தசாமி: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணைச் சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் போராட்டத்தின்போது, போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் 20 பேர்கள் இறந்தார்கள் என்று உறுப்பினர் குறிப்பிடுகிறார். அது தவறான எண்ணிக்கை என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "ஏறத்தாழ" என்று சொன்னார்கள். சொன்னீர்களா? (திரு. ஜே. ஜேம்ஸ்: ஆம், ஏறத்தாழ என்று சொன்னேன்) ஏறத்தாழ என்று சொன்னார்கள். ஆகவே. 200 என்று கூடச் சொல்லலாம். (சிரிப்பு.)

திரு. ஜே. ஜேம்ஸ்: அக்டோபர் மாதம் 13-ந் தேதி விருததாசலத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றபொழுது, ஊர்வலத்தைக் கலைப்ப

தற்காக போலீசார் லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. அந்தத் துப்பாக்கிச் சூட்டில் கடலை வியாபாரம் செய்து கொண்டிருந்த ஒரு காங்கிரஸ் தோழர், நிரபராதி, இந்த நாட்டில் நடைபெறுகின்ற குழப்பங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லாத நிரபராதி, உயிர் இழந்திருக்கிறார்.

அதுபோல் அக்டோபர் மாதம் 29-ம் தேதி, கண்டமங்கலத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினால், ஒன்றும் அறியாத பாலகன், 15 வயது சிறுவன், உயிர் இழந்திருக்கிறான்.

26-ம் தேதி போடிநாய்க்கனூரில் நடைபெற்ற லத்தி சார்ஜினால் ஏறக் குறைய 50 பேர் காயமுற்றிருக்கிறார்கள். எத்தனைத் துப்பாக்கிச் சூடுகள், எத்தனை விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் இந்த நாட்டில நடைபெற்றிருக் கின்றன. ஒரு அரசு, நிதானமாக ஆட்சி செய்கிறது என்று சொன்னால், இம் மாதிரியான நிகழ்ச்சி நடைபெற முடியுமா என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

அடுத்ததாக, விலைவாசிகளைப் பற்றி இந்த அரசு சற்று சிந்திக்க வேண்டும். அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்தோம். அதை இந்த மன்றம் விவாதிக்க வேண்டுமென்று விரும்பினோம். ஆனால் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. இந்த நாட்டில், இன்று எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் சாதாரணமாக, அன்றாடம் உப யோகிக்கின்ற பொருள்கள், சாதாரண மனிதன் உபயோகிக்கின்ற பொருள்கள் கைக்கு எட்டாத நிலையில் விலை ஏறிக் கொண்டே போகிறது. ஆகவே, இந்த நாட்டில் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்காக எந்த நடவடிக்கையும் எடுத்ததாகவோ, எடுக்க எண்ணியதாகவோ தெரியவில்லை.

அடுத்ததாக, வேலை வாய்ப்பு இல்லாத நிலை. அன்எம்பிளாய்மெண்ட் நிலை சர்வசதாரணமாக இருக்கிறது. வேலையில்லாத படித்த இளைஞர் களைப் பார்க்கும்பொழுது, நிச்சயமாக இந்த நாட்டிலே புரட்சி ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்கிறது. படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கான வழிவகைகளை இன்று செய்யவில்லையென்று சொன்னால், இளைஞர்கள் நிச்சயமாக பொறுத்திருக்கமாட்டார்கள் என்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏறத்தாழ 5 லட்சம் இளைஞர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, பல மாதங்களாகக் காத்துக் கொண்டே இருக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசிடம் எந்த மார்க்கமும் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, தொழிலாளிகள் நிலையை எடுத்துக் கொண்டால், இந்த நாட்டில் தொழிலாளிகளுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. இதை தினந்தோறும் நாம் பார்க்கிறோம். நாட்டுடைமை யாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகள் அங்கங்கே தாக்கப்படுகிறார்கள். எந்த அவசியமும் இல்லாமல் தாக்கப்படுகிறார்கள். தங்கள் கடமைகளை நிறைவேற்ற வழியில்லாமல், அவர்கள் தாக்கப்



படுகின்ற சூழ்நிலையைப் பார்க்கும்பொழுது இந்த நாட்டில் ஒரு அரசு இருக்கிறதா, என்ற சந்தேகம் வருகிறது. அப்படி ஒன்று இருக்குமானால் அது தன் கடமைகளை உணர்வோடு ஆற்றுகின்ற தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத காரணத்தால், நாட்டுடை மையாக்கப்பட்ட பல பேருந்துகள் பல நாட்கள் ஓடாமல் நின்றிருக்கின்றன. ஆகவே, இந்த நாட்டில் உள்ள மக்கள் எவ்வளவு அவஸ்தைக்குள்ளாக் கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆக, இந்த நிலையில் இந்த நாட்டிலிருக்கிற நாலரை கோடி மக்களின் எண்ணத்தையும், நம்பிக்கையையும் இந்த அரசு இழந்திருக்கிறது. ஒரு வேளை, இந்த மன்றத்தில் 184 அங்கத் தினர்களின் ஆதரவு இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக, அவைகளை நான் ஏற்றுக் கொள்ள இயலாது. ஏனென்றால், இந்த அங்கத்தினர்கள் தங்கள் வாக்காளர்களின் நம்பிக்கையை இழந்திருக்கி றார்கள். இந்த சூழ்நிலையில் இந்த மன்றத்தில் இருக்கிற அங்கத் தினர்களின் ஆதரவை மட்டும் இந்த அரசு காட்டுவது நியாயமல்ல; நிச்சயமாக இந்த அரசு நாட்டுச் சூழ்நிலையை மனதில் கொண்டு, மக்களைச் சந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்பதைக் கூறி, முதலமைச்சரவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து, இந்த அவை அத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கை தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

தமிழாய்ந்த தமிழன் தான் தமிழ் நாட்டின் முதல் அமைச்சனாய் வருதல் வேண்டும், தமிழ்ப் பகைவன் தமிழ் நாட்டின் முதல் அமைச்ச னாய் வருவதைத் தடுத்தல் வேண்டும் என்பது 25 ஆண்டுகளுக்கு முன்பு பாரதிதாசன் கண்ட கனவாகும். அந்தக் கனவை நனவாக்கும் வகையில் இப்பொழுது தமிழாய்ந்த ஒருவர் முதலமைச்சராயுள்ளார். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு என்ற பாரதிதாசன் கனவையும், சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும் என்று பாரதியார் கண்ட கனவையும் நனவாக்குகின்ற வகையில், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கின்ற வகையில், செந்தமிழ் நாட்டை பூமணம் கமழும் பூங்காவாக மாற்றிய ஒரே காரணத்திற்காக தமிழ் நாட்டு மக்கள் இந்த அமைச்சரவையின்மீது பூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மிகத் தாழ்மையாக தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், தமிழகத்திலே வாழ்கின்ற மக்கள், குறிப்பாக, பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களும் இந்த அரசினுடைய கண்களாவார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். அதிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களாக இருக்கக்கூடியவர்கள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொன்னாலும், கண்

என்று சொன்னாலும் பொருந்தும் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள் இந்த அரசை எவ்வாறு போற்றுகிறார்கள், எவ்வாறு வாழ்த்துகிறார்கள் என்பதை நான் சொல்வது பொருத்தம் என்று கருதுகிறேன்.

ஏனென்றால், ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்து பிரதிநிதியாக அங்கம் வகிப்பதற்கு இன்றைக்கு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் தான் இப்படிப்பட்ட சலுகைகளை வழங்கிய காரணத்தினால், தாழ்த்தப்பட்ட மக்களுடைய, கண்களாகத் திகழ்கின்ற திராவிட முன்னேற்றக் கழகச் செல்லப் பிள்ளைகளாக, தாழ்த்தப்டட்ட சமுதாயத்து மக்கள் மதிக்கின்ற காரணத்தாலேதான், மதிக்கப்படுகின்ற காரணத்தாலே தான் தாழ்த்தப்பட்ட மக்கள் பல லட்சக்கணக்கிலே இந்த ஆட்சிக்கு, கரம் கொடுத்து உதவவும், இந்த ஆட்சி மீது முழு நம்பிக்கை செலுத்தவும் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே அவையடக்கத்தோடு, நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதற்காக இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லையென்று சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. 1967-ல் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று அவர்களுடைய நலனுக்காக ரூ. 3½ கோடி ஒதுக்கிய நிலைமாறி, இன்றைக்கு ஏறத்தாழ, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுடைய வாழ்வு வளர வேண்டுமென்பதற்காக, ரூபாய் 8·41 கோடி ஒதுக்கி, அரிசன மக்களுடைய வாழ்க்கையை, வளம் பெறச் செய்கிறார்களே, வளரச் செய்து வருகிறார்களே, அதற்காக இந்த ஆட்சிமீது நம்பிக்கையில்லையென்று சொல்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை.

இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில் அடித்தளத்திலே சூழுறிக் கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்கள், ரத்தக் கண்ணீர் விடுகின்ற மக்கள், இந்த ஆட்சி போனால் தங்களுக்கு மீண்டும் வாழ்வு கிடைக்குமா என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணாவினுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, நிலப் பட்டா வழங்குவதாக இருந்தாலும், மனைப் பட்டா வழங்குவதாக இருந்தாலும், 60 சத விகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்குகிற இந்த அரசு. இதற்காக, இந்த அரசு ஒழிய வேண்டுமா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தங்கள் மூலமாகக் கேட்கிறேன். ஏழையின் சிரிப்பிலேதான் இறைவனைக் காண்பேன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதற்குப் பின்னாலே அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னாலே வந்த கலைஞர் அவர்கள் ஏழை எளியவர்களுக்காக அவர்கள் உண்ண உணவும், இருக்க இடமும், உடுக்க உடையும், ஒரு தனி மனிதனுக்கு வேண்டிய அத்தனை அடிப்படைத் தேவைகளையும், பெற்று வாழ வேண்டுமென்ற முறையிலே எட்டு ஆண்டுக் கால திட்டமொன்றைத் தீட்டி குடிசைகள் எல்லாம் இன்றைக்கு மாடி வீடுகளாக மாறி ஏறத்தாழ 70 சத வீதம் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதாயம் பெறுகிறார்களே அதற்காகவா இந்த அரசை ராஜினாமா செய்யச் சொல்கிறீர்கள் என்று தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.





தஞ்சை மாவட்டத்தில் வீட்டு மனைப் பட்டாக்கள், நிலப் பட்டாக்கள், என்ற முறையிலே ஒரு லட்சத்தி 57 ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டதில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதாயம் பெற்றிருக்கிறார்களே, அன்றைய தினம் பட்டாவைப் பெற்றுக் கொண்டவன், இன்றையதினம், இன்றைக்குத்தான் நாம் சொந்த வீட்டில் தூங்குகிறோம் என்று மகிழ்ச்சியுடன் வாழ்கிறானே அதற்காக இந்த அரசை ராஜிநாமாச் செய்யச் சொல்கிறார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு வந்ததற்குப் பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். தர்மகர்த்தாக்கள் என்று சொல்லப்படுகிற அறங்காவலர்களாக தாழ்த்தப்பட்ட மகன் வரவேண்டுமென்ற முறையிலே அதற்கு எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறதே அதற்காக இந்த அரசை ராஜினாமா செய்யச் சொல்கிறார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

உயர்ந்த ஜாதிக்காரர்தான் ஆண்டவனுக்குப் பக்கத்திலே நின்று அர்ச்சனை செய்யத் தகுந்தவர்கள், ஆண்டவனுக்குப் பக்கத்தில் நிற்க அவர்களுக்குத்தான் உரிமை உண்டு என்று இருந்த காலம் போய் இன்றைக்கு ஆண்டவனுக்கு எதிரும் புதிருமாகத் தாழ்த்தப்பட்ட மகனும் நின்று அர்ச்சகராகக் கொண்டுவரக்கூடிய முறையில் சட்டத்தைத் திருத்த முன்வந்திருக்கிறதே இந்த அரசு, அதற்காகவா இந்த அரசை ராஜினாமா செய்யச் சொல்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாகக் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை மக்கள் இந்த ஆட்சியில் முன்னேறியிருக்கிறார்கள், முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கண்டதும் உங்களுக்குப் பொறுக்கவில்லையா? பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இன்றைக்கு ஆட்சியை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார், அதனால் உங்களுக்குப் பொறுக்கவில்லையா? தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுடைய சம்பந்தியாகக் கூட முதலமைச்சர் அவர்கள் வர இருக்கிறார்கள், அது உங்களுக்குப் பொறுக்கவில்லையா? இதன் காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தமாட்டார்களே என்று அவர்கள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை அவ்வளவு எளிதாக ஏதோ சோத்துப் பிண்டம் என்று புரட்சியார் கருதிவிட வேண்டாம், அவர்கள் செத்தாலும் இந்த ஆட்சியின் பின்னேதான் செல்வார்கள், கலைஞரின் பின்னாலேதான் போவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த ஆட்சியிலே ஏராளமான நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். நிலப் பட்டா, மனைப் பட்டா ஆக இருந்தாலும் சரி வேறு எந்த வகையான சலுகையாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்கள் பெறுகிறார்கள் என்ற காழ்ப்புணர்ச்சியினால் மேல் தட்டிலே உள்ளவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியே கூடாது, இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். இந்த ஆட்சி கூடாது. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள், நீதி

யிலே தலையிடுகிறார்கள் என்று எல்லாம் சொல்கிறார்கள். உங்கள் அனுமதியோடு நான் இந்த நேரத்திலே 1953–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17–ஆம் நாள் அன்று திரு கே. டி. கோசல்ராம் அவர்கள் ராஜாஜியை எதிரே உட்கார வைத்துக்கொண்டு இங்கே விமரிசித்தார், என்ன விமரிசித்தார் என்பதை நான் படிக்க விரும்புகிறேன்.

நீதி ஸ்தலங்களி லெல்லாம் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் ஆட்சியிலே, ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் பேய் ஆட்சியிலே, எத்தகைய நிலைமை இருக்கிறதென்பதைச் சொல்லுகிறேன்.

" இவருடைய மகன் ஸ்ரீ நரசிம்மன் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டது சம்பந்தமாக அவருடைய தேர்தல் வழக்கை விசாரிக்க சேலம் ஜட்ஜாக இருந்த ஸ்ரீ நடராஜ நாடாரை சேர்மனாகக் கொண்ட ஒரு ட்ரைபுனலை சென்ற அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. ஸ்ரீ நடராஜ நாடார் தலைவராக வும், ஸ்ரீ விஸ்வநாதய்யரும், ஸ்ரீ ராமகிருஷ்ண அய்யரும், ட்ரைபுனல் அங்கத்தினர்களாகவும் இருந்தார்கள். அந்த மூவரில் ஒருவராகிய ஸ்ரீ நடராஜ நாடார் ரிடையர் ஆவதற்கு 7 மாதம் தான் இருக்கிறது; இந்த 7 மாதத்திற்கு முன்னால், அவரை சேலத்திலிருந்து சௌத் கனரா ஜில்லாவுக்கு ' புட்பால் ' அடிப்பதுபோல்—500 மைல்களுக்கு அப்பால் —மாற்றிவிட்டார். அங்கிருந்தவரை Threaten பண்ணினார். "சேர்மன் ஷிப்பை ராஜினாமா செய்; உங்களுக்கு வேண்டியதெல்லாம் தருகிறேன்" என்றும் சொன்னார்; இதை நான் challenge பண்ணுகிறேன்: ' ராஜி னாமாவை வாங்கினார்; வாங்கிவிட்டு, அந்த இடத்தில் ஒருவரை நியமித் தார்.' யாரை? ஸ்ரீ அனந்தநாராயணய்யர் என்பவரைப் போட்டுக் கொண்டார். தன்னுடைய மகனுக்காக என்ன வேண்டுமானாலும் செய் கின்றேன் என்று நீதியிலேயே தலையிடவும் செய்கின்றார். ரிடையர் ஆவதற்கு 7 மாதமே இருக்கும் ஒருவரை 500 மைலுக்கு அப்பால், ' ட்ரான்ஸ்பர் ' செய்திருக்கின்றார் என்றால், இது அடுக்குமா? இன்றிருக் கிற உயர்நீதி மன்றம் ஆட்சேபணை தெரிவித்தது; அதையும் பொருட் படுத்தாமல், Threaten பண்ணி ராஜினாமா வாங்கினார் "

இவ்வாறு 1953–ஆம் ஆண்டிலே ராஜாஜியை எதிரிலே உட்கார வைத்துக் கொண்டு திரு கே. டி. கோசல்ராம் அவர்கள் பேசியிருக்கி றார்கள். நான் கேட்கிறேன். அப்படி த்ரெட்டனிங் இங்கே நடக்கிறதா? அப்படிப்பட்ட அராஜகம் இங்கே நடக்கிறதா? இதை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் நண்பர்களே, ஒரு உயர்ந்த ஜாதிக்காரர் எது வேண்டு மானாலும் செய்யலாம், ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் முதலமைச்சராக இருந்தால் எது வேண்டுமானாலும் பேசலாம் என்ற நிலைமை வந்தால்............

திரு. ஜே. ஜேம்ஸ்: உறுப்பினர் அவர்கள் முன்னாள் இருந்தவர் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்றும் இன்றைய முதலமைச்சர் குறைந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்றும் சொல்லுவது சபையின் முறை களுக்கு ஏற்றதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கூடிய வரைக்கும் ஜாதி யைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது.



**Dr. H. V. HANDE**: Another point of order, Sir. As for as we are concerned, it will be better in this House if we do not cast aspersions on a member who was a Chief Minister before. He has quoted extracts of speeches made in the Assembly; there should have been replies for that and Rajaji might have given reply. I have not looked into that. He has quoted and he has the right to quote. Perhaps his comments afterwards that Rajaji belongs to a superior community and the present Chief Minister belongs to an inferior community are all unnecessary and that sort of thing will only raise communal spite. My submission is that so far as we are concerned, there is no difference of any community or anything like that. As far as our Chief Minister is concerned, he belongs to the highest caste, the caste of Mankind and that is the caste to which everyone of us belongs too. That is the position as far as we are concerned. Therefore, it will not be proper to speak like that.

I have got the greatest regard for the distinguished member also. But unnecessarily to malign the name of a distinguished leader is not proper. He cannot also reply and we cannot also do justice. If we see how he lives we will know. So all these things can be avoided. Further, this sort of argument is not going to strengthen his case, he will create more enemies and not more friends. It is not also in the interests of the Government, in the interests of the Cabinet, in the interests of Democracy and self- respect of people. Low-class community and high-class community are all a myth and it should be exploded.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்றைக்கிருந்த முதலமைச்சர் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரியவரா என்பது வேறு பிரச்னை. ஆனால் குற்றச்சாட்டுகளைச் சாட்டுவது என்பது ஒரு மரபாக, வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அப்படிக் குற்றம் சாட்டுபவர்கள் குற்றச்சாட்டைக் கூறி விட்டு ராஜினாமா செய்துவிடுங்கள், ராஜினாமா செய்து விடுங்கள் என்று கூறுவது கூடாது. ஏற்கனவே இருந்த முதலமைச்சர் மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருக்கின்றன; எனவே, இப்போது புதிதாகக் குற்றச்சாட்டைக் கூறவில்லை என்பதற்கு ஆதாரமாகத் தான் திரு. பால சுந்தரம் அவர்கள் கூறியிருக்க முடியும் என்று கருதுகிறேன்.

**Dr. H. V. HANDE**: But his subsequent comments and commentary about him were not fair. That is what I said.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த விவகாரத்திலே ஜாதியை இழுத்திருக்க வேண்டிய தேவையில்லை என்பதையே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றாலே பயமாக இருக்கிறது. திரு. பாலசுந்தரம் அவர்கள் தொடர்ந்து

[துணைத் தலைவர்] 1972 டிசம்பர் 7]

நாளைக்குப் பேசலாம். பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

32. Notification issued with R. Dis. No. 155937/72-E5, dated the 7th September 1972, in regard to extension of certain provisions relatings to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Kalakad Town Panchayat in Tirunelveli district. [*Laid on the Table of the House under section* 199(2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958.]

33. Notification issued with G. O. Ms. No. 2199, Home, dated the 23rd August 1972, in regard to an amendment to the Tamil Nadu Motor vehicles Rules, 1940 [*Laid on the Table of the house under section* 133 (3) *of the Tamil Nadu Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939].

34. Notification issued with G. O. Ms. No. 316, Excise and Prohibition, dated 14th November, 1972 in regard to closure of all liquor shops in Madras City and certain other places in the state of Tamil Nadu on 15th November 1972. [*Laid on the Table of the House under section* 34(5) *of the Tamil Nadu Excise Act*, 1971 (*Tamil Nadu Act* 34 *of* 1971)].

*B. Reports Notifications and Other Papers.*

15. Notification issued with G. O. Ms. No. 1911, Rural Development and Local Administration, dated the 13th September 1972 in regard to an amendment to the Special Rules for the Tamil Nadu General Subordinate Service (Section 13 in Volume III of the Madras Services Manual, 1970).

## தமிழ்நாடு சட்டப் பேரவை

**வெள்ளிக்கிழமை, 1972 டிசம்பர் 8**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**(1) வினாக்கள்—விடைகள்**

**வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்**

**அரசு அலுவலகங்களில் வேலை நாட்கள்**

* 81. **வினா—திரு. என். இட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள என். ஜி. ஓ. க்கள் வாரத்திற்கு ஐந்து நாள் வேலைத் திட்டமும், ஓவர் டைம் அலவன்ஸ் திட்டமும் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் கொண்டுவரப்பட வேண்டுமென்று வலியுறுத்தி உள்ளனரா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இம் மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்களில் வாரத்திற்கு ஐந்து வேலை நாள் திட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்று என்.ஜி.ஓ. சங்க 45-வது மாநில மாநாட்டின் கோரிக்கை மீது விரைவில் ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமெனத் தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கப் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். இந்தக் கருத்து 12—7—1972-ல் நடந்த தமிழ்நாடு நாட்டியற்பணிகள் ( Civil Services ) இணைக்குழுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், ஒரு மாதத்தில், மேலும் ஒரு சனிக்கிழமையை விடுமுறை நாளாக அறிவிக்கலாம் என்றும், எஞ்சிய நாட்களில் வேலை மணி நேரத்தை அதிகப் படுத்தலாமென்றும் கருதப்பட்டது. என்.ஜி.ஓ. சங்கத் தலைவர். வேலை மணி நோத்தை அதிகப்படுத்துவதற்கும், இவ்வகையில் அலுவலக வேலை நேரத்தை காலை 9-30 மணியிலிருந்து மாலை 4-30 மணி என்று வரையறுக்கவும் ஒப்புக்கொண்டார். தலைமைச் செயலகச் சங்கத்தின் பொது குழுவைக் கலந்தாலோசித்த பின்னர், தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு எந்த நேரம் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கத் தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார். மிகை நேரப் படி வழங்க வேண்டி என்.ஜி.ஓக்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை.

[1972 டிசம்பர் 8

திரு. என். கிட்டப்பா: துணைத் தலைவர் அவர்களே, ஓவர் டைம் அலவன்ஸ் திட்டத்தைப் பற்றி அரசு ஏதேனும் ஆலோசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது பற்றிக் கோரிக்கை வரவில்லை. வலியுறுத்தவும் இல்லை. ஆகவே, பரிசீலிக்கத் தேவையில்லை. பரிசீலிப்பதும் இயலாத காரியம்.

திரு. நா. வீராசாமி: ஏற்கனவே ஒரு சனிக்கிழமை விடுமுறை விட்டுக் கொண்டு வரப்படுகிறது. இன்னொரு சனிக்கிழமையையும் விடுமுறையாக விட பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாதத்தில் இரண்டு சனிக்கிழமைகள் விடுமுறை என்றால் எந்தெந்த சனிக்கிழமைகள்? ஏற்கனவே ஒரு சனிக்கிழமை விடுமுறை விடுவதைப் பொறுத்து எந்தச் சனிக்கிழமை விடுமுறை என்று சாதாரண மக்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே, அந்த சனிக்கிழமையையும் வேலை நாளாக வைத்துவிட்டு வேலை நேரத்தை முறைப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படுமா? இல்லையென்றால் ஒரு பகுதியினருக்கு இந்த சனிக்கிழமை விடுமுறை, இன்னொரு பகுதியினருக்கு இன்னொரு சனிக்கிழமை விடுமுறை என்று ஷிப்ட் முறையை அரசாங்கம் கொண்டு வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது உத்தேசிக்கப்பட்டிருப்பது மேலும் ஒரு சனிக்கிழமை, நான்காவது சனிக்கிழமை விடுமுறையாக விடுவது பற்றியாகும். இதிலே இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இன்னொரு சனிக் கிழமையும் விடுமுறையாக விடுவதால் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் அதிக மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். என்.ஜி.ஓ. சங்கத்தினர் அதை ஒப்புக் கொண்டு தங்களுடைய கருத்தை அறிவித்து விட்டார்கள். ஆனால் தலைமைச் செயலகப் பணியாளர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்து முடிவு எடுக்கப்படும். இப்போது காலை 10 மணி முதல் மாலை 4½ மணி வரை தலைமைச் செயலகம், மற்ற அலுவலகப் பணிகள் நடைபெறுகின்றன. மேலும் ஒரு சனிக்கிழமை விடுமுறை விடுவதாக இருந்தால் காலை 9½ மணி என்றும் மாலை 4-30 மணியை அப்படியே வைத்துக் கொள்வது என்றும் யோசிக்கப்பட்டு வருகிறது. இவை எல்லாம் இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: 9-30 மணிக்கு ஆரம்பித்து 4-30 மணி வரை வேலை செய்வது என்பது பற்றி முடிவு செய்யும்போது நீதிமன்றங்களில் வேலை செய்கின்ற துறையினரின் அபிப்பிராயங்களையும் அரசு கேட்குமா? அந்தத் துறைக்கு இது பொருந்துமா?



1972 டிசம்பர் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இன்னும் தலைமைச் செயலகத்தினுடைய அலுவலாளர்களின் அபிப்பிராயமே வந்து சேரவில்லை. அது வந்த பின்னர் நீதிமன்ற அலுவலாளர்களின் அபிப்பிராயம் தேவைப்பட்டால் கேட்கப்படும்.

திரு. ஆ. பாந்தாமன்: வாரத்தில் ஐந்து நாட்கள் என்றால் பல அரசு வேலைகளுக்குப் பாதகம் ஏற்படாதா? அதே நேரத்தில் சட்டமன்றம் கூட ஐந்து நாட்கள்தான் நடைபெற வேண்டுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சனிக்கிழமை விடுமுறைக்கும் சட்டமன்றத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: மத்திய அரசு அலுவலகங்களிலோ அல்லது வேறு எந்த மாநில அரசு அலுவலகங்களிலோ இரண்டு சனிக்கிழமைகள் விடுமுறை விடும் திட்டம் அமலில் இருக்கிறதா? இப்படி வேலை நேரத்தை மாற்றுவதால் அரசுக்கு அதிகம் செலவாகுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த மாற்றத்தை என்.ஜி.ஓ. சங்கத்தினர் கோருகிறார்கள். அரசுக்குச் செலவு இல்லாத வகையில் இருந்தால்தான் அரசு இந்த மாற்றத்தைக்கூட ஏற்றுக் கொள்ளும். மற்ற மாநிலங்களில் இது போன்று இரண்டு சனிக்கிழமைகள் விடுமுறை விடப்படுகின்றனவா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ந. தருமலிங்கம்: என்.ஜி.ஓ. க்கள் அல்லாத அரசாங்க அலுவலாளர்களுக்கும் ஐந்து நாள் வேலைத் திட்டத்தைக் கொண்டுவர அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபற்றி முடிவு எடுக்கப்பட்ட பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

### திருப்பூர் நகருக்கு புதைச் சாக்கடைத் திட்டம்

82: வினா—திரு. க. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கக் கோரி திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து 18—8—1970 தேதிய விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) திருப்பூர் நகராட்சி புதை சாக்கடை திட்டத்திற்கான விரிவான ஆய்வை மேற்கொள்ள ரூ. 50,000-க்கான ஆய்வு மதிப்பீட்டினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதித்துள்ளது. திருப்பூர் நகராட்சி இத் திட்ட ஆய்வு வேலைக்காகும் முழுத் தொகையையும் செலுத்தியவுடன் திட்ட ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. க. துரைசாமி :** நகராட்சி மன்றம் ஐம்பதாயிரம் ரூபாய் செலுத்துவதை வருகின்ற மார்ச் இறுதிக்குள் செலுத்தினால் போதும் என்று மானேஜிங் டைரக்டர் தெரிவித்தார். அந்த அடிப்படையில் நகராட்சி ஒரு பகுதியைச் செலுத்திவிட்டது. மீதியைக் குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் எவ்வளவு காலத்தில் முடியும் என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது பத்தாயிரம் ரூபாய் அளவுக்குத்தான் ஆய்வு வேலைப் பணிகளுக்காக நகராட்சியிலிருந்து பணம் செலுத்தியிருக்கிறார்கள். ஆய்வு மதிப்பீடு ஐம்பதாயிரம் ரூபாய் ஆகலாம் என்று குடிநீர் வாரியத்திலிருந்து நகராட்சி மன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். மார்ச் மாதத்திற்குள் முழுத் தொகையையும் நகராட்சி கட்டிவிடும் என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகை வந்த பிறகு, ஆய்வுப் பணிகள் முடிந்த பிறகுதான் அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்று அறுதியிட்டுக் கூற முடியும்.

## அரசு உயர்நிலைப்பள்ளிகள்

* 83. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் A ' பிரிவு B பிரிவு என்றும் பாகுபாடு இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எவ்வித பாகுபாடுமின்றி ஒருங்கு இணைந்துச் செயல்படும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.



D
V211, 31 N72
31 N72 . 28

* 84 Q.—Thiru A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether postings by promotions have been made for the posts of Gazetted Headmasters sanctioned for ' A ' grade schools since the implementation of the recommendations of the Second Pay Commission ; and

(b) if not, the reason for the delay?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** [illegible] 20—2—1971 தேதியிட்ட அரசு ஆணை 289 (கல்வி)-ல் அரசுப் புறச்சிப் [illegible]க்கு 25 அரசிதழ் பதிவுள்ள தலைமை ஆசிரியர்கள் பதவிகளும் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு 15 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன.

இப்பணியிடங்கள் யாவும் நிறைவு செய்யப்பட்டுவிட்டன.

615824

* Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, it is stated that schools now started by the Government are classified as 'A' Group and the schools taken over from the old District Boards are classified as 'B' Group. There is a lot of disparity in regard to emoluments, etc. of the teachers employed in these schools and there is also inferiority complexes felt by the teachers of the old District Board schools. So, may I know from the Hon. Minister whether he will remove this disparity and other things in the emoluments of the teachers in these two sets of schools?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற துணைக் கேள்வி முதற் கேள்விக்குரியதாகும். இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக ஆக்க வேண்டுமென்று நான்காண்டு காலமாக இரண்டு துறையினரும் சேர்ந்து பேசிய பிறகும் சரியான முடிவு எட்டாததன் காரணமாக ' ஏ. விங் ' என்றும் ' பி. விங் ' என்றும் வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக ஆக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. இரு சாராரைச் சேர்ந்தவர்களும் ஒருமித்த முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் ஒருமித்த முடிவுக்கு வருவார்களானால் அதுபற்றிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, கெசட்ட் ஹெட்மாஸ்டர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் சீனியாரிடி அடிப்படையில்தான் பதவி உயர்வு பெறுகிறார்கள். அப்படி நியமிக்கப்படுகிறவர்கள் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில்தான் போடப்படுகிறார்கள். சில இடங்களில் சில தலைமை ஆசிரியர்கள் தவறு செய்தால், அவர்களை மாற்றி வேறு ஆயிரம் மாணவர்கள்

உள்ள பள்ளிகளுக்குத்தான் போட வேண்டுமென்று இருக்கிறது. அப்படிப் போடுவதில், சில சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, பதவி உயர்வு கொடுப்பது சீனியாரிடி அடிப்படையில் என்றாலும், அவர்களை மாற்றம் செய்து எந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கும் போடலாம் என்ற ஆணையை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களில் கெசடட் பிரிவு என்று ஏற்படுத்தப்பட்ட பிறகு, அவர் பணியாற்ற வேண்டிய பள்ளிகளிலும் ஒரு குறிப்பிட்ட மாணவர்கள் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஆகவேதான் ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில்தான் அவர்களைப் போட வேண்டுமென்று முறை வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட பள்ளிகள் பல மாவட்டங்களில், பல்வேறு பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, ஒரு இடத்திலிருந்து அவர்களை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதில் அதிக கஷ்டம் ஏற்படுவது இல்லை. உள்ளபடியே யாரேனும் தவறு செய்திருப்பார்களானால், அப்படித் தவறு செய்தவர்கள் மீது முறைப்படி நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கீழ்நிலைக்குக் கொண்டு வருவதற்கும் வழி இருக்கிறது. இப்போதிருக்கின்ற முறையினால் பாதகம் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவரவர்களே, தற்போது 'ஏ' கிரேட் பள்ளிகள், 'பி' கிரேட் பள்ளிகள் என்று எந்த அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன ? அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் இரு ஆசிரியர்களையும் ஒன்றாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. அரசாங்கப் பள்ளிகளை 'ஏ' விங் என்றும், டிஸ்ரிக்ட் போர்ட்டிலிருந்து அரசாங்கத்தோடு இணைக்கப்பட்ட பள்ளிகளை 'பி' விங் பள்ளிகள் என்றும் ஆக்கியிருக்கிறோம். அவற்றை ஒன்றாக்குவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. மேலும், அங்கேயிருக்கும் ஆசிரியர்கள் அல்லது பணியாளர்களுக்கு பதவி உயர்வு என்று வருகிறபோது சில சங்கடங்கள் வருகின்றன. அதையெல்லாம் தீர்க்க முடியாத காரணத்தால்தான் அது தனிப் பிரிவாக வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக்கும் முயற்சியும் நடைபெற்று வருகிறது.

திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, இந்த 'ஏ', 'பி' என்ற இரண்டு பிரிவுகளை வைத்துக்கொண்டு நிர்வாக இலாக்கா படுகிறபாடு எங்களைப் போன்றவர்களுக்குத்தான் தெரியும். காரணம், ஏதாவது தகராறு ஏற்பட்டால் அது 'ஏ' பிரிவு எங்களால் ஒன்றும் முடியாது, அது 'பி' பிரிவு எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று நிர்வாகத்தினர் கூறிவிடுகிறார்கள்.





சமீபத்தில் நடந்த மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், ஒவ்வொரு நாளும் இந்தப் பிரச்னை வந்து கொண்டேயிருக்கிறது, இதற்கு அரசாங்கம் தான் தீர்வு காண வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே, அடுத்த கல்வியாண்டிற்குள்ளாவது இந்த இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக ஆக்குவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'ஏ' விங், 'பி' விங் இரண்டையும் ஒன்றாக ஆக்குவதினாலே அரசாங்கத்திற்குச் சங்கடம் இல்லாமல் இருக்கும். நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் ஒன்றாக இருப்பது தான் நல்லது. ஒவ்வொரு ஆசிரியர்களுக்கு ('ஏ', 'பி' விங்கில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு) அவர்கள் பணியில் சேர்ந்த ஆண்டிலிருந்து சீனியாரிடி தருவது என்று சொன்னால், 'ஏ' விங்கில் இருக்கும் தலைமை ஆசிரியர்கள், 'பி' விங்கில் இருக்கும் தலைமையாசிரியர்கள் பலபேரை அப் பதவியிலிருந்து கீழே இறக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. ஏற்கனவே அப் பதவியை வகித்து விட்டவர்கள் அப் பதவியிலிருந்து இறங்க மறுக்கிறார்கள். இந்த இரண்டு பிரிவில் இருப்பவர்களும் ஒன்றாக இணைந்து பேச்சு வார்த்தை நடத்தி, அவர்களுக்குள்ளாகவே ஒரு முடிவுக்கு வந்து இரண்டு பிரிவுகளையும் ஒன்றாக இணைக்கலாம் என்று வருவார்களானால் நிர்வாகத்திற்கு அதிக சங்கடம் இல்லாமல் இருக்கும். அவர்களை ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து, அதை அவர்கள் அரசுக்கு அறிவிப்பார்களானால், அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பள்ளிகளில்தான் கெசடட் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நீலகிரியில் உள்ள பள்ளியில் ஆயிரம் மாணவர்கள் இல்லை. 500 மாணவர்கள் கூட பள்ளிகளில் இருப்பது இல்லை. அங்கே இந்த விதியைத் தளர்த்தி கெசடட் தலைமையாசிரியரை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய தகவல் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

## *Financial assistance to sportsmen*

* 85 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether there is any proposal to give financial assistance to the best football and hockey players in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிட்ட விளையாட்டை வளர்த்தும் கண்காணித்தும் வரும் மாநில சங்கங்களின் பரிந்துரையின் மீது மாணவராகவோ அல்லது மாணவியராகவோ இல்லாத, குறிப்பிட்ட விளையாட்டில் சிறந்தவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 ஆண்களுக்கும் 10 பெண்களுக்கும் தலா ரூ. 300 (ரூபாய் முன்னூறு மட்டில்) மாநில விளையாட்டு மன்றம் மூலம் விளையாட்டுத் தளவாடங்கள் ( Kit ) விலை கொடுத்து வாங்குவதற்கு நிதியாக வழங்கப்படுகிறது.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஹாக்கி போன்ற விளையாட்டுகளுக்கு அரசு பரிசு அளித்து ஊக்கம் அளிப்பதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதே போல் மாணவர்களுக்கு உடல் நலம் வலுப்பெறும் வகையில் ஆசனம் போன்ற பயிற்சிகளை அளிப்பதற்கும் அரசு ஊக்கம் அளிக்குமா? பாதுகாப்பு அவசியம் என்ற நிலைமை வரும்போது, தற்காத்துக் கொள்ளக் கூடிய முறையில் சிலம்பம், மல்யுத்தம் போன்றவற்றையும் பயிற்றுவிக்க அரசு ஊக்கம் அளிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது ஆசனங்கள் பயிற்றுவிப்பதற்கான வழிவகைகள் உடற்பயிற்சிப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த உடற்பயிற்சி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் ஆசனங்கள் பயிற்றுவிப்பதற்கான சிலபஸ் வைத்து இருக்கிறார்கள், பள்ளிகளில் ஆசனங்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. சிலவிடங்களில் சிலம்பம் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. அது முறையாக வைக்கப்படவில்லை, அதை உடற்பயிற்சிப் பள்ளிகளின் சிலபஸில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்ற தகவல் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, மாணவர்களுக்கு இப்போது பொழுதுபோக்கு நிறைய தேவைப்படுகிறது. அதனால் தான் அவர்கள் வேறு வழிகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்காக பள்ளிகளில் ஸ்போர்ட்ஸ் பிரிவைக் கட்டாயமாக அடெண்ட் செய்ய வேண்டு



மென்று கம்பல்சரியாகக் கொண்டுவந்து, அதிலே மாணவர்களும் ஒரு குறிப்பிட்ட மார்க் வாங்கினால் தான் அல்லது குறிப்பிட்ட பீரியட்டுகள் அடெண்ட் செய்திருந்தால் தான், அடுத்த வகுப்புக்குச் செல்ல முடியும் என்றும் கொண்டு வரவேண்டும். இப்போது புட்-பால், ஹாக்கி போன்ற விளையாட்டுகளுக்கு ரூ. 300 கொடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி பரவலாக எல்லா விளையாட்டுகளுக்கும் நிறையப் பணம் ஒதுக்கி, மாணவர்களுக்கு அதில் அதிகக் கவனம் செலுத்தக் கூடிய வகையில் வழிவகைகளை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன். இதனால் மாணவர்களின் கவனம் வேறு வழிகளில் செல்லாமல் படிப்பிலும், விளையாட்டுகளிலும் தான் இருக்கும். அரசாங்கம் இதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாணவர்களை விளையாட்டுப் பயிற்சி, உடற்பயிற்சி போன்றவற்றில் கவனம் செலுத்த எந்த வகையில் கட்டாயப்படுத்தலாம் என்பதை பற்றி ஆராயும்படி கல்வி இலாகாவினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மற்ற பாடங்களைப் போல், இதிலும் ஒரு அளவு தேர்ச்சி பெற்றால் தான் மேல் வகுப்புக்குப் போகலாம் என்று கூறலாமா என்பதைப் பற்றியும் கல்வி இலாகாவினர் ஆராய்ந்து வருகிறார்கள். அதிலே தேர்வு பெற வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் தான் மாணவர்கள் அதிலே அதிகக் கவனம் செலுத்துவதில்லை. மற்ற பாடங்களில் எப்படி இவ்வளவு எண்ணிக்கை மார்க் எடுத்தால் தான் மேல் வகுப்புக்குச் செல்ல முடியும் என்றிருப்பதால் கவனம் செலுத்திப் படிக்கிறார்களோ, அதைப்போல் இதற்கும் கொண்டு வந்தால் மாணவர்கள் இதில் தனி கவனம் செலுத்துவார்கள் என்ற கருத்தும் கல்வி இலாகாவினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இப்போது பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளமாக 10 மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 150-ம், பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு 10 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 150, ஆங்கிலோ-இந்திய பள்ளி மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 150 வீதம் மூன்று மாணவர்களுக்கும், மூன்று மாணவியருக்கும், கல்லூரி மாணவர்கள், மாணவியர்கள் ஒவ்வொருவருக்கும் (10 மாணவ, 10 மாணவியருக்கு) ரூ. 300 வீதம் தரப்படுகிறது. மாணவர்கள் அல்லாத சிறந்த கால்பந்து மற்றும் ஹாக்கி உள்ளிட்ட பல தரப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அதிக பட்சம் 10 ஆண்களுக்கும், 10 பெண்களுக்கும் ஒவ்வொருவருக்கும் ரூ. 300 விளையாட்டுப் பொருள்கள் வாங்க உதவித் தொகையாக குறிப்பிட்ட விளையாட்டு மாநிலச் சங்கத்தின் பரிந்துரையின் மீது தமிழ்நாடு விளையாட்டு மன்றம் மூலமாக தரப்பட்டு வருகிறது. இம்மாநில மற்றும் மாவட்ட விளையாட்டு

மன்றங்களின் நிர்வாகச் செலவை அரசு மானியமாக ஆண்டுதோறும் அளித்து வருகிறது.

டாக்டர் ச. அ. சின்னராசு: தலைவரவர்களே, ஹாக்கி மற்றும் விளையாட்டுகளுக்கு உபகாரச் சம்பளம் தருவது போல், உடலுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய சடுகுடு விளையாட்டிற்கும் இந்த அரசு ஊக்குவிக்கும் முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போதே அதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, 10 மாணவர்களுக்கு ரூ. 300 கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புட்-பால், ஹாக்கி போன்ற டீம்களில் 13 பேர் இருக்கிறார்கள். ஆகவே, இரண்டு டீம்களில் இருப்பவர்களுக்கு தலா ரூ. 300 என்று குறிப்பிட்டு, அவர்கள் சென்னை, கோவை, மதுரை போன்ற இடங்களுக்குச் சென்று அந்த இடத்திலேயே அந்த விளையாட்டுகளில் ஈடுபட்டு இருந்தால் தான் நல்ல முறையில் விளையாட முடியும். அப்படிப்பட்ட முயற்சிக்கு அரசு உதவியளிக்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உபகாரச் சம்பளம் 10 பேருக்குத்தான் தரப்படுகிறது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று விளையாடுகிற நிலைமையேற்படும்போது, அச் செலவை மாவட்ட விளையாட்டுச் சங்கம் ஏற்றுக்கொள்கிறது. ஒரு மாநிலத்திலிருந்து வேறு ஒரு மாநிலத்திற்குச் சென்று விளையாட வேண்டுமானால், அச் செலவை மாநில விளையாட்டுச் சங்கம் ஏற்றுக்கொள்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, we find in many schools the school authorities are giving more attention to team games like football and volley-ball and they are neglecting individual games like long-Jump, short-Jump, running race, etc. So may I know whether instructions would be given to the school authorities to give attention to the individual games also?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட பந்தய விளையாட்டுகளுக்கும் இடம் அளிக்கப்பட்டு வருகிறது. பள்ளிக்குப் பள்ளியும், மாவட்ட அளவிலும் கூட ஆண்டுக்கு ஒரு முறை இப்படிப்பட்ட போட்டிகள், பந்தயப் போட்டிகள் நடைபெறுகிறபொழுது, அதற்காக பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அது தவிர, குடியரசு நாளை ஒட்டியும் எல்லா பள்ளிகளிலும்



போட்டிப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. அதுமட்டுமல்லாமல் பொங்கல் நாளன்றும் மாநில அளவில் மாணவர்கள், மாணவர்கள் அல்லாதார் அத்தனை பேர்களும் இந்தப் பந்தயங்களில் கலந்து கொள்கிறார்கள். ஒன்றிய அளவில் தொடங்கி, பிறகு மாவட்டம், பிறகு இரண்டு, மூன்று மாவட்டங்கள், பிறகு மாநில அளவில் விளையாட்டுப் பந்தயங்கள் நடைபெறுவதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இரு வகையான போட்டிப் பந்தயங்களுக்கும், மற்றைய விளையாட்டுகளுக்கும் இரண்டுக்கும் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. கந்தசாமி: இப்படிப்பட்ட வீரர்களுக்கு படிப்பில் சில சலுகை அளிக்கிறார்கள். அதைப்போல உத்தியோகத் துறையிலும் இவர்களுக்கு முதல் சலுகை வழங்கப்படுமா? இவர்கள் நமது மாநிலத்தில் நடக்கும் விளையாட்டுப் போட்டி பந்தயங்களைத் தவிர, மற்றைய மாநிலங்களோடு இண்டர்-ஸ்டேட் பந்தயங்களில் பங்கு கொள்கிறார்களா? இண்டர்நேஷனல் கேம்ஸில் பங்கு கொள்கிறார்களா? இல்லையென்றால் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுதே கூட கல்லூரிகளில், மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சேருகின்றபொழுது என்.ஸி.ஸி. துறை மாணவர்களுக்கும், ஸ்போர்ட்ஸ் போன்ற இப்படிப்பட்ட விளையாட்டுகளில் ஈடுபட்டு அதிலே சிறந்து திறமைசாலிகளாக விளங்குபவர்களுக்கும் தனி எண்கள் தரப்பட்டு அவர்கள் சேர்க்கப்படுவதன் மூலம் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. வேலையில் சேர்க்கப்படும் பொழுதும் இப்படிப்பட்ட விளையாட்டுகளில் திறமைசாலிகளுக்கு, பந்தயங்களில் கலந்து கொண்டு பதக்கங்கள் பெற்றவர்களுக்கு தனிச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. அதற்கான தனி எண்களும் தரப்படுகின்றன. மாநில அளவில், இந்தியா அளவில் எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்த மாநிலங்களுக்குச் சென்றார்கள் என்ற விவரக் குறிப்பு என்னிடம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் யார் சென்று அந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுத் திரும்பினார்கள் என்ற விவரங்களைத் தர முடியும்.

திரு. கோ. செபமாலை: உயர்நிலைப் பள்ளிகளில் இப்படிப்பட்ட விளையாட்டு வீரர்கள் சாம்பியன்ஷிப் எடுக்கிறார்கள். அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு வேலைக்குச் செல்லும்பொழுது அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தக் கேள்வியை இப்பொழுது தானே வேறு ஒரு உறுப்பினர் கேட்டார்?

**திரு. ந. தருமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு மட்டும் கால்பந்து போட்டி, ஹாக்கி போட்டி போன்ற பந்தயங்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எங்களைப்போன்ற இளைஞர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வாய்ப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் போட்டிகளிலே ஈடுபடுவதற்கு வாய்ப்பு அளிக்கின்ற முறை பொங்கல் திருநாளன்று போட்டி நடக்கிற அளவிலே வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அதில் எல்லாம் கலந்துகொண்டு அதில் தேர்வு பெற்று, மாநில அளவில நடக்கும் போட்டிகளில் கலந்துகொண்டு இந்த மாநிலத்திற்கு நற்பெயர் ஏற்படுத்தித் தரலாம். தனிச் சலுகைகள், தனியாக உபகாரச் சம்பளம் ஒன்றும் வேண்டியதில்லை. மாநில அளவில் சிறந்த வீரர்கள் மாணவர்கள் அல்லாதவர்களுக்கு 10 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. அந்த ரூ. 300 உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாநிலத்தில் தேர்ச்சி பெற்று வருகிற 10 பேர்களில் ஒருவராக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திகழவேண்டும்.

## *Primary Health Centres.*

* 86 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state the names of places where Primary Health Centres are to be started in Kanyakumari district?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 வட்டாரங்கள், ஒன்றியங்கள் உள்ளன. எல்லா வட்டாரங்களிலும் ஏற்கனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு எதும் இல்லை.

**திரு. என். டென்னிஸ்:** ஒவ்வொரு வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் இரு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்பட திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. எப்பொழுது அது நடைமுறையில் வரும்? அப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல் கட்டமாக எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறவப்படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது, மத்திய சர்க்காரினுடைய குடும்ப நலத் திட்டத்துடன் இணைந்து ஒவ்வொரு சுகாதார நிலையமும் ஒரு குடும்ப நல





மருத்துவ மனையுடன் சேர்ந்து இயங்குவதாகும். ஆகவே, அந்த அடிப்படையில் மத்திய அரசு ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டாவது குடும்ப நல மருத்துவ மனையை ஏற்றுக் கொண்டால், அதனோடு ஆரம்பச் சுகாதார நிலையத்தை இணைத்து, ஒவ்வொரு ஒன்றியத்திலும் இரண்டாவது இடத்தில் தொடங்குவதற்குத் தமிழக அரசு மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டிருக்கிறது. மத்திய அரசு அதை இன்னும் ஏற்றுக்கொண்டு முடிவாக அறிவிக்கவில்லை.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை:** ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் புது கட்டடங்கள் கட்டும்பொழுது பழைய கட்டடங்களுக்கு காம்பௌண்டு சுவர் கட்டுவதற்கு வசதி செய்யப்படவில்லை. காம்பௌண்டு சுவர் மிக முக்கியமானது என்பதனால், இனிமேலாவது அதற்குரிய வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சுற்றுப்புற சுவர் என்பது பொது மக்கள் அந்த மருத்துவ மனையை மதிக்காத போது மிகவும் அவசியம். பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துத்தான் நாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுகிறோம். பொது மக்கள் மருத்துவமனைகளைத் தவறாகப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்த்து மருத்துவ மனைகள் கட்டப்படவில்லை. மருத்துவ மனை கட்டுவதற்கே ரூ. 1¾ அல்லது 2 லட்சம் தேவைப்படுகிறது. சுற்றுப்புற சுவர் கட்டுவதற்கு ரூ. 35,000 செலவாகிறது. ஏறத்தாழ 5 ஏக்கரா நிலத்திற்குக் கட்ட வேண்டும். ரூ. 35,000, 40,000 செலவழித்து சுற்றுப்புற சுவர் கிராமத்தில் கட்ட வேண்டும் என்பதை அரசாங்கத்தின் பொருளாதார நிலையை வைத்து சிந்தித்துப் பார்க்கும்பொழுது, பல நேரங்களில் அந்தத் திட்டத்தை ஒத்தி வைக்க நேருகிறது.

* 87 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தாராபுரம் வட்டம், மூத்தூர் என்ற ஊரில், ஈரோடு சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

(உ) அச்சுகாதார நிலையத்தின் கட்டடம் அரசினர் செலவில் கட்டப்பட்டதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) 3–9–1955.

(உ) இல்லை. அச் சுகாதார நிலையத்தின் கட்டடம் உள்ளூர்வாசிகளின் பண உதவியின் பேரில் கட்டி முடிக்கப்பட்டதாகும்.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, we read in the newspapers that the Central Government are of opinion that additional Primary Health Centres could be granted to each Block. May I know whether it is in the proposal stage or finalised?

The Hon. Thiru K. ANBAZHAGAN: Sir, most of the suggestions that appear in the newspapers are only under consideration. I hope the Central Government may at least formulate certain principles in order to have second Primary Health Centres or additional Health Service in the Panchayat Union areas in the next Five-Year Plan.

*புலவர் சி. பழனிசாமி*: பழனித் தொகுதியில் பாப்பம்பட்டி சிற்றூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டி ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் ஆகிய இருவர் பணியாற்றுகிறார்கள். ஆனால், 20,000 மக்கள் தொகை கொண்ட மேஜர் பஞ்சாயத்தான ஆயக்குடியில் அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஒரே ஒரு ஆண் மருத்துவர் மட்டும் தான் பணியாற்றி வருகிறார். பெண் மருத்துவர் அங்கே இல்லை. அதிக மக்கள் நோயாளிகள் வருகிற அந்த இடத்தில் பெண் டாக்டர் போடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்*: இந்தத் துணைக் கேள்வி மூலக்கேள்வியோடு தொடர்பற்ற கேள்வி. இருந்தாலும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தரப்படுகின்ற மருத்துவமனை எங்கே இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது அந்த ஒன்றியத்தினுடைய உரிமையாகும். மற்ற மேஜர் பஞ்சாயத்துகளில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளைப்பற்றி, அவைகளை வளர்ப்பது பற்றி அரசாங்கம் தனித்தனியாகவே பரிசீலிக்கும்.

* 88 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether there is any proposal to construct a building for the Primary Health Centre at Kelamangalam in Denkanikota taluk, Dharmapuri district; and

(b) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்*: (அ) & (இ) கேளமங்கலத்தில் 1972-73-ம் ஆண்டில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும், பணியாளர் குடியிருப்பில்லங்களுக்கும் கட்டடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் விவரம் வேண்டுமானால், அவர்கள் இன்னும் அந்த மருத்துவமனைக்காக கட்ட வேண்டிய ரூ. 10,000 முன்பணம் அது இன்னும் அரசாங்கத்திற்கு வந்து சேராத காரணத்தினால், கட்டடம் கட்டுகின்ற வேலை இன்னும் தொடங்கப்படவில்லை.



Thiru K. S. KOTHANDARAMIAH: Sir villages of Kelamangalam have purchased about 5 acres of land which is very costly and they have also registered a document in favour of the Primary Health Centre there. It is an important place and so may I know whether priority will be given for the construction of the health centre there?

The Hon. Thiru K. ANBAZHAGAN: There is a condition that at least a deposit of Rs. 10,000 should come forth from the panchayat union and they have intimated their willingness to the Secretary, R.D. and L.A. Department but it has not yet materialised.

*திரு. கா. வேழவேந்தன்*: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது, எதிர்காலத்தில் ஒரு ஒன்றியத்தில் இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டப்படலாம் என்று அரசின் யோசனையாகச் சொன்னார்கள். எதிர்காலத்தில் தமிழகத்தில் ஒன்றியங்களின் கணக்கை எடுத்து, எந்தெந்த ஒன்றியங்களில் அதிகமாக மக்கள் தொகை இருக்கிறதோ அந்த ஒன்றியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்கு நம்முடைய அரசு திட்டம் வகுக்குமா?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்*: தமிழக அரசாங்கம் செய்யக்கூடிய ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு மேல் உள்ள ஒன்றியங்கள் ஏறத்தாழ 50, 60 ஒன்றியங்கள் இருக்கக்கூடும். அவைகளுக்கு முதல் உரிமை கொடுத்து, பிறகு 90,000 மக்கள் தொகை இருக்கும் ஒன்றியங்களுக்கு அடுத்த இடம் கொடுத்து, இப்படி படிப்படியாக அதிக மக்கள் உள்ள இடங்களுக்கு முதல் வாய்ப்பு அளிக்கின்ற ஒரு முறை மேற்கொள்ளப்படும்.

*திரு. ப. முத்துசாமி*: தலைவர் அவர்களே, பெரும்பாலும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை தமிழ்நாடு முழுவதும் இருந்து வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலையில் ஒவ்வொரு யூனியனிலும் குறைந்தது ஒரு யூனியன் மு.ப. 9-30
டிஸ்பென்சரியாவது ஏற்படுத்துவதற்கு நிதி வசதியில்லாத பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்*: ஒன்றியங்கள் ஏற்படுத்தப்பட்டு இருப்பதே ஜனநாயகத்திலே பொதுமக்கள் தங்களுடைய நன்மைக்காக தாங்களே பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலேதான். ஒன்றியங்கள் மட்டும் இருக்கும், ஆனால் வருமானம் இல்லாத நிலை இருக்கும் என்று

சொன்னால் உண்மையிலேயே யூனியன்களின் குறிக்கோளை நிறைவேற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். யூனியன்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமேயானால் ஆங்காங்கே தனி மருத்துவ மனைகள் ஏற்படுத்த அரசாங்கம் உதவித் தொகை வழங்க ஆர்வமாக இருக்கும்.

டாக்டர் ச. அ. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் மலைப்பாங்கான பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட பிரதேசங்களிலாவது இரண்டு மருத்துவ மனைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அனுமதியளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பின் தங்கிய வட்டாரங்கள் என்பது பல்வேறு கணக்கெடுப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வெவ்வேறான நிலையை யொட்டி பிற்பட்ட பகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்திலே தொழுநோய் அதிகமாகப் பரவியிருக்கலாம். ஒரு மாவட்டத்திலே காச நோய் அதிகமாக இருக்கலாம், ஒரு மாவட்டத்திலே மலேரியா காய்ச்சல் அதிகமாக இருக்கலாம் : தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். வெளிநாட்டினரின் உதவியோடு அந்த மாவட்டத்தில் தொழுநோய்த் தடுப்புக்கு—தடுப்பு என்றால் அந்த நோய் வராமல் முன் கூட்டித் தடுப்பது அல்ல, வந்த நிலையில் சிகிச்சை யளிக்கின்ற நிலை—சிகிச்சைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### சக்தி குழாய் நிறுவன தொழிலாளர்களுக்கு ஈட்டுறுதித் திட்டம்

* 89. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எளாவூர் சக்தி குழாய்த் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதித் திட்டம் நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எளாவூர் சக்தி குழாய்த் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதித் திட்டத்தை நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருந்தது. அச் செயற்குறிப்பை அரசு மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருடன் கலந்து பரிசீலனை செய்தபின் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அதனை தற்போது நிறைவேற்ற இயலாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது :—

(1) எளாவூரில் சக்தி குழாய்த் தொழிற்சாலை மட்டுமே உள்ளது; அதனைத் தவிர, எளாவூரின் அருகாமையில் சுற்றுப்புறத்தில் வேறு எந்த தொழிற்சாலைகளும் இல்லை ;



(2) மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் பணிபுரியும் சுமார் 400 தொழிலாளர்களுக்காக மட்டும் இ.எஸ்.ஐ. மருந்தகம் ஒன்று எளாவூரில் தனியே அமைப்பது என்பது இயலாது ; மேலும்

(3) மேற்குறிப்பிட்ட தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களுக்கு 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மீஞ்சூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் மருத்துவ வசதி அளிப்பது தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்காது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நானூறு தொழிலாளர்கள் இருக்கிற அந்தத் தொழிற்சாலை அரசாங்கத்தினுடைய உதவியோடு மறுபடியும் திறக்கப்பட இருக்கின்ற நிலையில் அங்கே பணியாற்றுகின்றவர்கள் 400 தொழிலாளர்கள்தான். வேறு தொழிற்சாலை இல்லை. ஆகவே, இயலாது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். அங்கே நானூறு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே ஒரு தொழிற்சாலைதான் இருக்கிறது. வேறு தொழிற்சாலை இருக்க முடியாது, காரணம் அந்த ஒரு தொழிற்சாலையும் ஆந்திர எல்லையிலேதான் இருக்கிறது, வேறு தொழிற்சாலை வரவேண்டுமென்றால் ஆந்திராவிலேதான் வரவேண்டிய நிலை இருக்கிறது. எனவே இந்த நிலையில் அதற்கு சிறப்புத் திட்டமாக ஸ்பெஷல் கேஸ் என்ற முறையிலே ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவ மனை துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : குறைந்த பட்சம் 750 தொழிலாளர்கள் உள்ள இடத்தில்தான் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. அதுபோல் எளாவூரிலும் அந்த அளவிற்கு வந்தவுடனே அரசு ஆவன செய்யும்.

### Welfare Department schools at Pechiparai and Pathukani

* 90 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether it is a fact that the Welfare Schools at Pechiparali and Pathukani are run without sufficient number of teachers in each school ;

(b) if so, the number of students and teachers in each school; and

(c) what action has been taken by the Government to provide sufficient number of teachers to these schools?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ), (இ) & (உ) இல்லை. பேச்சிப்பாறை பள்ளியில் 481 மாணவர்களுக்கு 15 ஆசிரியர்களும் பஞ்சுக்காணி பள்ளியில் 313 மாணவர்களுக்கு 11 ஆசிரியர்களும் இருக்கிறார்கள். இரண்டு பள்ளிகளிலும் இப்பொழுது ஒவ்வொரு வகுப்புக்கும்/பிரிவுக்கும் ஒரு ஆசிரியர் இருக்கிறார்.

### தூத்துக்குடியிலுள்ள காமராசர் கல்லூரிக்கு நில ஒப்படை

*91. **வினா—திரு. என். சிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி காமராசர் கல்லூரிக்கு இந்த அரசு இலவசமாக நிலம் ஏதேனும் வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு? எந்த அடிப்படையில்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். சிட்டப்பா:** தலைவர் அவர்களே, காமராசர் கல்லூரிக்குத் தேவையான இடத்தை அதனுடைய நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அந்த இடத்திற்கான அனுமதியைக் கேட்டதாகவும் அது தரப்படவில்லை எனவும் சொல்லப்படுகிறதே. அந்த இடம் தமிழக அரசுக்குச் சொந்தமாக உள்ளதா? அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமான இடமாக இருக்கிறதா? மத்திய அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தால் அதனைப் பெறுவதற்கு உரிய முயற்சியை தமிழக அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அந்த இடம் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமானதுதான். நம்முடைய அரசு நிலம் வழங்கியுள்ளதா என்று கேட்டார்கள், இல்லையென்று சொன்னேன். தூத்துக்குடியில் உள்ள காமராசர் கல்லூரிக்கு 50 ஏக்கர் நிலத்தைக் கோரி அந்த நிர்வாகத்தினர் அரசுக்கு எழுதினார்கள், அப்பொழுது மத்திய அரசாங்கம் அந்த இடத்தை 2,88,889 ரூபாய் கொடுத்துவிட்டு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தினர் காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா அவர்களிடம் மனுக் கொடுத்து அதனை இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசுக்கு எழுதி இப்பொழுது அவர்கள் 99 வருஷத்திற்கு வருஷம் ஒன்றுக்கு 100 ரூபாய் வாடகைக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





### *Modernisation of Sugar Mlils.*

* 92 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to modernise the sugar mills in this State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவ்வித செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### *Film shows in Central Jails.*

* 93 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether film shows are exhibited in the Central Jails in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) அவ்வப்போது சிறையிலுள்ள கைதிகளுக்கு ஒழுக்க, கல்வி சம்பந்தப்பட்ட திரைப் படங்களும் செய்திப் படங்களும் காட்டப்படுகின்றன. மாவட்ட விளம்பர அதிகாரிகள் அல்லது சமூக மன்றங்கள் அல்லது சேவை மனப்பான்மையுள்ள தனிப்பட்ட நபர்கள் அல்லது மற்றும் அயல்நாட்டு தூதரகங்கள் இவற்றிற்கு தேவையான கருவிகளை (projectors) வழங்குகிறார்கள். இத்தகைய திரைப்படங்கள் மேற்கூறியவர்களால் தங்கள் விருப்பப்படி காண்பிக்கப்படுகின்றன. அதற்காக எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, கைதிகளுக்கு சிறைச்சாலைகளில் சீர்படுத்தும் சிறந்த திரைப்படங்கள் மாத்திரமே காட்டப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் நான் இப்பொழுது விவரமாகச் சொன்னேன். பல்வேறு வகைப்பட்ட திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. ஒழுக்கம் அங்கே வளர வேண்டுமென்ற அடிப்படையில்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே கைதிகளை திருத்துவதற்காக ஒழுக்கம் தேவை என்ற அடிப்படையிலே நல்ல திரைப் படங்கள் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் திருடாதே என்ற படத்தைப் போன்ற படங்கள் காட்டப்படுவதாகச் சொல்கிறார்கள். திருடாதே

என்று போட்டுவிட்டு எப்படித் திருடுவது என்பதை அதிலே படம் பிடித்துக் காட்டுகின்ற நிலையில் அப்படிப்பட்ட படங்களைக் காட்டி ஒழுக்க கேடான முறைகளை ஏற்படுத்த விரும்பாமல் அரசு அப்படிப்பட்ட இடங்களில் அப்படிப்பட்ட படங்களைக் காட்டக் கூடாது என்று ஆணையிடுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** படங்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அப்படிப்பட்ட கருத்துக்களை யெல்லாம் மனதில் கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

**திரு. கோவை செழியன் :** சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்காக பல தமிழ்ப் படங்கள், மற்றப் படங்கள் காட்டப்படுகின்றன. கைதிகள் அந்தப் படங்களிலே வருகின்ற காட்சிகளை, மனைவி மக்களோடு இருக்கின்ற காட்சிகளைப் பார்க்கின்றபொழுது அவர்கள் மன வருத்தப்படுவார்களல்லவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைதிகளுக்கு மன மகிழ்ச்சியைத் தருவதற்காகவும்தான் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. எனவே அவர்கள் அவற்றின் மூலம் மகிழ்ச்சியையும் பெறலாம், நல்ல கருத்துக்களைப்பற்றிய போதனையையும் பெறலாம்.

**திரு. த. சோமையா :** தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். அமைச்சர் சிறைகளிலே இருக்கும்பொழுது படம் பார்த்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் இரண்டு முறை சிறைச்சாலைகளிலே இருந்தேன். எனக்குப் படங்கள் காட்டப்படவில்லை. நான் இருந்த சிறைச்சாலைகளிலே நான் திரைப்படங்கள் பார்க்கவில்லை.

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** சிறைச்சாலையில் திரைப்படம் காட்டுவது எந்த ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்டது? அதனால் பலன் ஏற்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைப்பற்றி எனக்குத் தகவல் இல்லை. இந்த அரசு வந்ததற்குப் பிறகு மாவட்டந்தோறும் சிறைச்சாலையில் ஒரு தனி புரஜக்டர் வைத்து ஆங்காங்கு கல்வி சம்பந்தப்பட்ட, ஒழுக்கம் சம்பந்தப்பட்ட படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. எல்லா மாவட்டங்களிலுமுள்ள சிறைச்சாலைகளிலேயும் இப்படிப் படங்கள் காட்டப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know whether there is any restriction in regard to the exhibition of the film shows to the political prisoners and non-political prisoners?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறைச்சாலைகளுக்குள்ளே சென்றால் அரசியல் கைதிகள் அரசியல் அல்லாத கைதிகள் என்ற பாகுபாடே இடையாது. எல்லோரும் கைதிகள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு இந்த வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. த. தருமலிங்கம் :** மத்திய சிறைச்சாலைகளில் காட்டப்படுகிற திரைப் படக் காட்சிகளுக்கு அதற்குச் செலவாகும் பணத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறதா அல்லது மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறைச்சாலைக்கும் மத்திய அரசுக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. கே. கந்தசாமி :** கைதிகளிடையே ஒழுக்கம் வளருவதற்காக சினிமாப் படங்கள் காட்டப்படுவதை வரவேற்கிறேன். அதேபோல் படத்தை பார்த்து விட்டு முடிந்துவிடாமல் நல்ல போதனைகளைப் போதிக்கிற முறையில் மாரல் க்ளாஸஸ் அல்லது மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கிற வகையில் அவ்வகையை கையாள்வதற்கு அரசாங்கம் தேர்ந்த பேராசிரியர்களை அல்லது பண்பாளர்களைக் கொண்டு வாரத்திற்கு ஒரு முறை போதனைகள் புரிந்து தவறு செய்தவர்கள் திருந்திக் கொள்வதற்கு வேண்டிய திட்டத்தினை உருவாக்க முயற்சிக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சில ஆண்டுகளுக்கு முன்பு கதாகாலட்சேபம் நடத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது சில ஆண்டுகளாக ஒவ்வொரு சிறைச்சாலையிலும் அந்தந்த ஊரிலுள்ள தமிழ் பேராசிரியர்கள், தமிழ் புலவர்கள் இவர்களைக் கொண்டு திருக்குறள், திருப்புகழ், திருவாசகம் போன்ற தமிழ் நூல்களில் உள்ள கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு அரசு புது முயற்சி எடுத்திருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** ஒழுக்கத்தைக் கற்பிக்கக் கூடிய நல்ல சினிமாப் படங்களை நல்ல சினிமா நடிகர்களைக் கொண்டு நம் அரசே விளம்பரமாக எடுக்க முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரைப்படங்களை நாம் எடுப்பதற்கில்லை. நடிப்புலகத்தில் ஈடுபட்டிருக்கிற சில கலை உலக நண்பர்கள் சில ஆண்டுகளாக சிறைச்சாலைகளுக்கு அவர்களே சென்று இனிப்புகள் வழங்கி அவர்கள் நடித்த படங்களைப் போட்டுக் காண்பிக்க முன்வருகிறார்கள். அந்த வசதியை அரசு செய்து கொடுக்கிறது.

[1972 டிசம்பர் 8

திரு. ரா. ரா. முனுசாமி : தமிழ் நாட்டிலுள்ள மத்தியச் சிறைகளில், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை போன்ற பெரிய ஜெயில்களில் அன்றாடம் திரைப்படக் காட்சிகளை ஒரு மணி நேரமாவது அங்குள்ள கைதிகளுக்குப் போட்டுக் காண்பிக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாள்தோறும் காட்டுவது என்பது முடியாத காரியம். எல்லோரும் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு அதை ரசிக்க வேண்டுமென்று நாங்கள் கருதவில்லை. மாறாக அதிக வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். எல்லாச் சிறைசாலைகளுக்கும் என்ற கருத்தைத்தான் அரசு செயல்படுத்தி வருகிறது.

## சருக்காம்பாறை நீர்த்தேக்கம்

*94. வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் இருந்து வரும் சருக்காம் பாறை ஆற்றில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத் திட்டம் தீவிர ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஜி. ராமசாமி : இந்த சருக்காம்பாறை நீர்த்தேக்கத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டத்தினால் 107 ஏக்கர் புன்செய் நிலம் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீடு சுமார் நான்கு லட்சம் ரூபாய் ஆகும். அங்கு ஒரு டன் உற்பத்தியாகும் செலவு அதிகமாகயிருப்பதால் இத் திட்டத்தை மறுபரிசிலனை செய்யும்படி மேற்பார்வை பொறியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்த சருக்காம்பாறை அணைத் திட்டத்தோடு சேர்க்கப்பட்ட இணைப்புள்ள மற்ற திட்டங்கள் பரிசிலனையில் உள்ளனவா? அவைபற்றி அதிகாரிகளின் ஆய்வுரை கிடைத்துவிட்டதா? அப்படியானால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டத்தோடு சேர்ந்த மற்ற திட்டங்கள் பற்றி குறிப்புகள் அனுப்பக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்புகள் வந்த பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



1972 டிசம்பர் 8]

## அடையாற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை புதுப்பித்தல்

*95 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, ஆந்திர மகிள சபாவுக்கு அருகில் அடையாற்றில் உள்ள பாலத்தை புதிதாக அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை, ஆந்திர மகிள சபாவுக்கு அருகில் அடையாற்றின் குறுக்கே உள்ள பாலத்தைத் திருத்தி அமைப்பதற்கு ரூ. 58.00 லட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. வேலை தற்பொழுது நடந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : இந்தப் பால வேலை நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, அது எப்போது கட்டி முடிக்கப்படும் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நீண்ட நாட்களாக வேலைகள் நடைபெறவில்லை. மிக விரைவாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த பாலம் 1840-ம் ஆண்டில் கட்டப்பட்டது. அது பழுதடைந்திருப்பதால் அரசாங்கம் மானியமாகவும் கடனாகவும் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்தது. அந்த வேலை இப்போது துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பொதுவாக இந்தமாதிரி பாலப் பணிகள் எல்லாம் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கிறது என்ற நிலையைத்தான் பார்க்கிறோம். தேசிய நெடுஞ்சாலைகளிலும் வேலைகள் அந்தமாதிரித்தான் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆதலால் ஒரு காலவரம்பை நிர்ணயித்து துரிதமாகக் கட்டுவதற்கு அரசாங்கம் வேண்டிய உத்தரவுகளைப் பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலைகள் நடப்பதற்கு குறிப்பிட்ட காலவரையறை நிர்ணயிக்கப்படுகிறது. அதற்குள்ளாகத்தான் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வேலைகளை துரிதமாகச் செய்வதால் பழுது ஏற்பட்டு விடக் கூடாது என்பது அரசாங்கத்தின் கவலை. வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நடந்து முடிந்துவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வேலைகளை முடிப்பதற்கு குறிப்பிட்ட காலவரையறை செய்யப்படுகிறது. அதற்குள்ளே கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது. தவறுகள் ஏற்படுமானால் குறிப்பிட்டு அவைகளை உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1972 டிசம்பர் 8

### செஞ்சிக்கு டிராக்டர் வாடகை நிலையம்

*96 வினா.—திரு. ரா. ரா முனுசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம் விவசாயப் பகுதியாக இருப்பதால் அங்கு டிராக்டர் வாடகை நிலையம் அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) தற்போது இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தென் ஆர்க்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி என்பது அரசுக்கு நன்கு தெரியும். அங்குள்ள விவசாயிகள் குறிப்பாக மேல்மலயனூர், செஞ்சி ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு டிராக்டர்கள் வாங்கப்பட்டு அவற்றை விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு அவை காலாகாலத்தில் கிடைக்க முடியாத நிலை இருப்பதால் வாடகைக்காவது டிராக்டர்களை செஞ்சி, வல்லம், மேல் மலயனூர் ஒன்றியங்களுக்கு வழங்க முடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது அரசால் வழங்கப்படுவது அல்ல. தமிழ்நாடு வேளாண்மை தொழில் கழகத்தின் மூலம் டிராக்டர்கள், விவசாயத்திற்கான துணைக் கருவிகள் இவற்றை வாடகைக்கு விடுகிற திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது. தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது. மேலும் மூன்று விவசாயக் கிடங்குகள் எங்கெங்கு துவங்கலாம் என்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. சோலையா: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு ட்ராக்டர் என்ற முறையில் அறிவுலக மேதை, அரசியல் வித்தகர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தின விழாவில் வழங்கப்பட்டுள்ளன. அப்படி வழங்கப்படாமல் ஒருசில ஊராட்சி ஒன்றியங்கள் விடுபட்டிருக்கின்றன. அப்படி விடுபட்டுள்ள இடங்களில் ட்ராக்டர்கள் இல்லாது விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே வருகிற ஆண்டு அண்ணா பிறந்த தின விழாவின் போதாவது அந்தக் குறை நீக்கப்படுமா? எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் டிராக்டர்கள் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?



1972 டிசம்பர் 8]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு ட்ராக்டர் வழங்குவது என்பது அரசு மூலம் வழங்குவது என்று இல்லை. ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு உறுப்பினர் அவர்கள் தலைமையிலுள்ள ஒன்றியத்தில் இதுவரை வாங்காததன் காரணம் தெரியவில்லை. சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி விரைவில் அதை வாங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: மதுரை மாவட்டத்தில் ட்ராக்டர் வாடகை நிலையம் எங்கிருக்கிறது? இல்லை என்றால் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகியவை உள்ளடங்கி மதுரையில் இருக்கிறது. தற்போது தேனியில் துவக்கப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ட்ராக்டர்கள் பழுதடைந்தால் அவைகளைப் பழுது பார்க்க பக்கத்தில் பணிமனைகள் இல்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே டிவிஷன் அளவிலாவது ஒவ்வொன்று ஏற்படுத்துவதற்கும் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்கு தொலைவில் உள்ள கம்பெனிகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் ட்ராக்டர்கள் பழுதுபார்க்கப்படாமல் வெறுமனே இருக்கின்றன. ஆகவே அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒன்றியங்களில் உள்ள பல கருவிகளைப் பழுதுபார்க்க இப்போது ஆங்காங்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ட்ராக்டர்கள் போன்ற பெரிய இயந்திரங்களுக்கு தனி நிலையங்களைத் துவக்க இப்போது குறிப்பு ஏதும் இல்லை. முன்பு போல் இல்லாது இப்போது அரசின் பழுதுபார்க்கும் கிடங்குகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கு பழுது பார்க்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. வி. சம்பத்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு டிராக்டர்கள் வழங்கப்பட்டு, அந்த டிராக்டர்கள் விவசாயக் காரியங்களுக்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்று எழுதி வைத்திருந்தும், அதை சிலசமயங்களில் தனிப்பட்டவர்களும் தங்கள் சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, விவசாயிகளுக்குத்தான் வழங்க வேண்டுமென்று இருந்தாலும், விவசாய வேலை இல்லாதக் காலங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் முடிவுப்படி டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## *Kalpakkam Atomic Power Plant.*

* 97 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state the amount invested by our Government in Kalpakkam Atomic Power Plant?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இந்த அரசு எவ்வித முதலீடும் செய்யவில்லை. அது முழுவதும் மத்திய அரசுக்குச் சொந்தமானது. ஆயினும் இந்த அரசு சுமார் 53 இலட்சம் பெருமானமுள்ள 2,500 ஏக்கர் நிலங்களை இலவசமாகக் கல்பாக்க மின் நிலையத்திற்கு வழங்கியிருக்கிறது.

**திரு. என். இட்டப்பா :** தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் நமது தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை சதவிகிதம் பேர் பணிபுரிகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, எத்தனை சதவிதம் என்பதற்கு என்னிடம் குறிப்பு இல்லை.

* 98 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணு மின் நிலைய வேலைகள் எப்போது பூர்த்தி அடையும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கல்பாக்கம் அணு மின் சக்தி நிலையத்தின் முதல் பிரிவின் வேலைகள் 1975 நவம்பர் மாதத்தில் முடிவு பெற்று, செயற்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது பிரிவு 1976-ம் ஆண்டு தயாராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு சு. துரைசாமி :** தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. பற்றாக்குறையைப் போக்குவதற்கு இந்த வேலைத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டியது மட்டுமல்லாமல் 1975-ம் ஆண்டு இறுதியில் இன்னும் அதிகமாக நமக்கு மின்சாரம் தேவைப்படும். எனவே, இதில் விரைவான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, விரைவுபடுத்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு பம்பாய் மாநிலத்திலிருந்து எத்தனை நிபுணர்கள் வந்து வேலை செய்கிறார்கள்? அது சம்பந்தமாக ஏதாவது விபரங்கள் இருந்தால் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, கல்பாக்கம் அணு மின் திட்டம் 1972-லேயே முடிந்திருக்க வேண்டும், ஒரிஜினல் பிளான்படி. ஆனால் மத்திய அரசாங்கம் எந்தக் காரணத்தினாலோ இதில் போதிய அக்கறை காட்டாமல் இருந்துவிட்டது. அதன் மூலம் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பலன்கள் கிடைக்காமல் போய்விட்டன. நம்முடைய மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு 53 லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய நிலத்தைக் கொடுத்தும், இன்னும் காலதாமதம் ஆவதால் நமக்கு அதனாலும் நஷ்டம். ஆகவே, இந்தத் திட்டத்திலே விரைவான நடவடிக்கை எடுக்கவும், ஏற்கெனவே முடிவு செய்யப் பட்டதைக் காட்டிலும், நமது மின்சாரத் தேவையைப் பொறுத்து, இரண்டு மடங்காக்குவதற்கும் மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற நிலைமையை உத்தேசித்து, இதிலே துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் முதல் கட்டமாக 235 மெகவாட் மின் உற்பத்திக்கும், இரண்டாம் கட்டத்தில் மேலும் 235 மெகவாட் மின் உற்பத்திக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்ட வேலை முடிவுறும் நிலையில் உள்ளது. இரண்டாம் கட்ட வேலைக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். நடைமுறை சாத்தியக் கூறுகளை ஒட்டி துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய இறக்குமதிக் கொள்கையில் கடைப்பிடிக்கப்படும் கட்டுப்பாட்டின் காரணமாகத் தான் இப்படிப்பட்ட வேலைகள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அது ஓரளவு உண்மை தான். இப்போது மத்திய அரசு அதுபற்றி பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை என்பதைக் காட்ட, இதற்குப் பின்னால் பிற மாநிலங்களில் தொடங்கப்பட்ட அணு மின் நிலையத் திட்டங்கள் பற்றிய விபரங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதை பற்றிய குறிப்பினை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ? இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மூலப்பொருள் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடு ஒரு காரணம் என்று சொல்லப் படுவது உண்மையா ?

[1972 டிசம்பர் 8

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இம்மாதிரித் திட்டங்களுக்கு அன்னிய செலாவணி பெரிதும் தேவைப்படுகிறது. முதல் கட்ட வேலைக்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இரண்டாம் கட்ட வேலைக்கு 15.36 கோடி ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள். மேலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் தான் 1974-ல் முடிய வேண்டிய வேலை 1975-ல் முடிகின்ற நிலையில் இருக்கிறது. இன்னும் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, நமது மாநிலத்திற்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கும்போது கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் மற்ற மாநிலங்களும் உரிமைக் கொண்டாடுகின்றனவே. அவர்கள் எந்த அடிப்படையில் இத் திட்டத்தில் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, முதல் பிரிவில் தயாராகும் மின்சாரத்தை தமிழகம் பயன்படுத்திக்கொள்ளும். இரண்டாவது பிரிவில் உற்பத்தியாகும் மின்சாரத்தை ஆந்திர அரசாங்கம் வேண்டுமென்று கேட்கிறது. தமிழகத்திற்கு தேவையானது போக, உபரி இருந்தால் கொடுப்பதாக நாம் தெரிவித்திருக்கிறோம்.

### ஜீப் பேருந்துகள்

* 99 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைகளில் ஜீப் பஸ்கள் ஓட அனுமதி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தற்போது அத்தகைய செயற்குறிப்புகள் எதுவும் அரசிடம் முடிவுறா நிலையில் இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தற்போது கிராமப்புறச் சாலைகளில் எத்தனை ஜீப் பஸ்கள் ஓடுகின்றன என்பதையும் இன்னும் எத்தனை ஜீப் பஸ்கள் விடப்பட இருக்கின்றன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே 12 வழித் தடங்களில் 14 ஜீப் பஸ்கள் ஓடுகின்றன. அது மட்டுமல்ல. மேலும் 16 வழித்தடங்களில் ஜீப் பேருந்துகள் விடும் செயற்குறிப்புகள் தொடர்புடைய வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளிடம் முடிவு பெறாமல் உள்ளன.



1972 டிசம்பர் 8]

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய ஜீப் பஸ்கள், ஓடுகின்றனவா? இல்லை என்றால் அதற்கு ஏதாவது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனிமேலாவது அனுமதி வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஜீப் பஸ்கள் விடுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. பொதுவாக ஜீப் பஸ்கள் மலைப்பாங்கான இடங்களில் ஓடுவதற்குத்தான் அனுமதி அளிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டம் மலைப்பாங்கான இடம் அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த மினி பஸ்களுக்கு புதிதாக பெர்மிட் வழங்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா என்ற விபரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்த மினி பஸ்களை அரசாங்கப் போக்குவரத்து நிறுவனங்கள் மூலம் ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தும் ஒரு யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். தேவேந்திரன் :** தலைவரவர்களே, மினி பஸ்களை அரசாங்கம் நடத்த உத்தேசித்திருப்பதாகச் சொன்னார்கள். அதைப் போலவே ஜீப் பஸ்களையும் அரசாங்கமே நடத்துமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, ஜீப் பஸ்களை விடுவதிலும், மினி பஸ்களை விடுவதிலும் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கவில்லை. பொதுவாக இப்படிப்பட்ட பஸ்கள் குறுகலான சாலைகளில் விடப்படுகின்றன. மினி பஸ்களை விட ஜீப் கார்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதனால் சிறிய சாலைகளில் மினி பஸ்களை விடுவது பொருத்தமாக இருக்கும் என்பதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

**திரு. கு. பொம்மன் :** தலைவரவர்களே, மலைப்பாங்கானப் பகுதிகளில்தான் ஜீப் பஸ்கள் விடப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீலகிரி மாவட்டம் மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால் அங்கு அதிகமாக ஜீப் கார்கள் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலே ஜீப் பஸ்கள் என்ற வகையில் இப்போது விடப்படவில்லை. ஆனால் அங்கே ஜீப்கள் டாக்சிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, என்னுடைய தொகுதியாகிய ஆண்டிப்பட்டியில் வரிசைநாடு பகுதி மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால், அங்கு ஜீப் பஸ்கள் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் :** தலைவரவர்களே, அது ஜீப் பஸ்கள் விடுவதற்குத் தகுதியான இடமாக இருந்தால் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மலைப் பாங்கான இடமாக தஞ்சை மாவட்டம் இல்லை என்று சொன்னார்கள். இருப்பினும் அங்கே மிகக் குறுகிய பாதைகள் ஏராளமாக இருப்பதால், பெரிய பஸ்கள் போவதற்கு வசதி இல்லாமல் இருப்பதால், அப்படிப்பட்ட இடங்களில் ஜீப் பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஜீப் பஸ்களுக்குப் பதிலாக மினி பஸ்களே போதுமானது.

## அரசு பேருந்துகள்

* 100 வினா.—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க பஸ்கள் வழியில் பழுதடைந்து விட்டால் தனி மெக்கானிக்குகளைக் கொண்டு அவசர காலங்களுக்கு ரிப்பேர் செய்ய அரசு அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை. ஆயினும், பேருந்துகள் செல்லும்போது வழியில் பழுதடைந்து விட்டால் அவற்றைப் பழுதுப் பார்ப்பதற்காகத் தேவையான தொழில் நுட்பப் பணியாளர்கள், சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்ட பழுதுபார்க்கும் இயல் ஊர்திகளை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**திரு. கே. எ. வகாப் :** இப்படி பழுதடைந்த வண்டிகளை ரிப்பேர் செய்வதற்கு
மு.ப. 10-00 அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்றாலும் அங்கங்கே ரிப்பேர் ஆகிறபோது உடனடியாக தனியார் மெக்கானிக்குகளிடமும் சர்வீஸ் கோரி ரிப்பேர் செய்வதற்கு அனுமதித்தால் வண்டிகள் சரியாகச் செல்வதற்கு வழியேற்படும். இதற்குச் சர்க்கார் அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தனிப்பட்ட நபர்களிடம் ரிப்பேர் செய்ய அனுமதி கொடுத்தால் அதற்காகும் பில்கள்பற்றி கணக்குப் பார்க்க வழிவகைகள் செய்யப்படவில்லை. ஆகவேதான் ஒவ்வொரு பணிமனைக்கும் ஒரு ப்ரேக் டவுன் வான் கொடுத்து வேண்டிய வசதிகளும், கருவிகளும், மெக்கானிக்குகளும் கொடுத்து உடனடியாகப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் நடுவில் ப்ரேக் டவுன் ஆனால் பின்னால் வருகிற வண்டிகளில் இந்த வண்டிப் பயணிகளையும் ஏற்றிச் செல்ல வசதி செய்யப்பட்டிருக்கிறது. பெரிய ரிப்பேராக இருந்தால் தனியாகவே ஒரு வண்டி அனுப்பி பிரயாணிகளை ஏற்றிச் செல்லவும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மின்னல் வேகத் துரித வண்டிகள் சில நேரங்களில் வழியில் ரிப்பேர் ஆகிவிடுகிறது. பழுது பார்த்து வண்டிகள் செல்ல மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே மின்னல்வேகத் துரித வண்டிகளின் ப்ரேக் டவுன்கள் ரிப்பேர் செய்யப்படுவதற்கு முதலிடம் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை கவனிக்கப்பட்டு வருகிறது. விரைவுப் பேருந்துகளின் ப்ரேக்டவுன் குறைந்திருக்கிறது. ஆயினும் ஒன்றிரண்டு ஏற்பட்டாலும் பயணிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்கிறோம். ஆகவேதான் தமிழ்நாடு முழுவதும் ஓடுகிற துரித வண்டிகளுக்கு ஒயர்லஸ் சிஸ்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன்மூலம் வண்டிகள் வன்முறையினால் தாக்கப்பட்டாலும், ப்ரேக் டவுன் ஆனாலும் துரிதமாக அருகில் உள்ள நிலையத்திற்கு அவர்கள் செய்தி அனுப்ப வழியேற்படும். இது சம்பந்தமாக பாரத் எலக்ட்ரானிக் கம்பெனியுடன் அரசு தொடர்பு கொண்டுள்ளது. முதலில் 15 லட்சம் செலவாகும் என்றும், பின்னர் ஆண்டுக்கு 3 லட்சம் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆ. பாத்தாமன் :** விழா நேரங்களிலாவது மொபைல் மெக்கானிக்கல் வான் விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** திருத்தணி விழாக் காலத்தில் அது போல வண்டிகள் விடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்.

**திரு. நா. வீராசாமி :** பழுது அடைந்துவிட்டால் ரிப்பேர் செய்வதற்கு வண்டிகள் அனுப்பலாம், தொழிலாளர்களை அனுப்பலாம். ஆனால் சாதாரணமாக பஞ்சர் ஆகிவிட்டால்கூட வண்டியில் ஸ்டெப்னி, ஸ்பானர் இல்லாத காரணத்தினால் மாற்று டயர் மாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இனி எல்லா வண்டிகளிலும் ஸ்டெப்னி, ஸ்பானர் போன்றவைகள் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த போர்வை சம்பந்தமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டெப்னி, ஸ்பானர் எந்த வண்டியிலாவது இல்லை என்றால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** நம்முடைய அரசாங்க பஸ்—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஸ்டேட்மெண்ட் வேண்டாம். கேள்வி போடுங்கள்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ப்ரேக் டவுன் ஆகிறபோது பொதுமக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அறிவிப்புகள்

#### (அ) பேரவைத் துணைத் தலைவர்மீது கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் குறித்து

Mr. DEPUTY SPEAKER : I wish to inform the Hon. Members that on 7th December 1972 I have received two resolutions under Rule 52 of the Tamil Nadu Legislative Assembly Rules for the removal of the Deputy Speaker from office, from hon. Members Thiru K. T. K. Thangamani and Thiru A. R. Marimuthu. According to rules necessary action will be taken up in due course.

### (3) அமைச்சரின் அறிக்கைகள்

#### (அ) திருச்சி நிகழ்ச்சிகள் நீதி விசாரணைக்கு விடப்படுவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, பேரவைக்கு, பேரவை விதி 82-இன் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு அறிக்கைகளை அளிப்பார்கள்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திருச்சியில் இந்த மாதம் 2, 3, 4 ஆகிய நாட்களில் மாணவர்கள், பஸ் தொழிலாளர்கள், போலீசார் ஆகியோரிடையே எழுந்த விரும்பத்தகாத மோதல்களைப்பற்றியும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளைப்பற்றியும் எனக்குக் கிடைத்த தகவல்களை வைத்து 6—12—1972 அன்று இந்த அவையில் சில விபரங்களைக் கூறியிருக்கிறேன். மேலும் நமது சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரி முதல்வருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு மேலும் சில விபரங்களைப் பெற்றுள்ளார். திருச்சியில் டிசம்பர், 2, 3, 4 ஆகிய மூன்று நாட்களிலும் நடந்துள்ள அசம்பாவித நிகழ்ச்சிகள் குறித்து நீதி விசாரணை நடைபெறுவதற்கு மாவட்ட நீதிபதி அளவில் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அரசின் சார்பில் அறிவித்துக்கொள்கிறேன்.

#### (ஆ) புயல்-மழையினால் ஏற்பட்டுள்ள சேதங்களும், அரசு மேற்கொண்டுள்ள துயர் தணிப்புப் பணிகளும் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வங்கக் கடலில் 4—12—1972 காலை 8 மணி அளவில், கடலூரில் இருந்து, 370 கிலோ மீட்டர் தென்கிழக்கே புயல் உருவாகி, அது மேலும் வலுப்பெற்று மேற்கு நோக்கி நகர்ந்து, 6—12—1972 காலை சுமார் 5 மணி அளவில் கடலூர் கரையைக் கடந்தது. இதன் காரணமாக சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களின் கடற்கரை ஓரங்களின் பெரு மழையும் சூறாவளிக் காற்றும் ஏற்பட்டது.

இந்தப் பெருமழையின் காரணமாக நுங்கம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் டிசம்பர் திங்கள் 5, 6 ஆகிய தேதிகளில் 33 மணி நேரத்தில் 152 மி.மீ. மழை பெய்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீனம்பாக்கம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் 183 மி.மீ. மழை பதிவு செய்யப்பட்டுள்ளது.

புயலைப்பற்றிய முன்அறிவிப்பு கடற்கரைப் பகுதிகளில் உள்ளவர்களுக்கும் தாழ்வான பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும் கொடுக்கப்பட்டு அவர்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி எச்சரிக்கை செய்யப்பட்டார்கள்.

**சென்னை :**

இந்த புயல்காற்றினாலும் மழையினாலும் வட சென்னையிலும், தென் சென்னையிலும் கீழ்க்கண்ட தாழ்வான பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் :—

வட சென்னை—

1. இராயபுரம்.

க்குப்பேட்டை.

3. வண்ணாரப்பேட்டையில் சில இடங்கள்.

4. புளியந்தோப்பு.

5. வியாசர்பாடி.

6. செம்பியம்.

தென் சென்னை—

1. தியாகராய நகர்

2. நுங்கம்பாக்கத்தில் சில பகுதிகள்.

3. அடையாறு

4. கோடம்பாக்கம்

5. சைதாப்பேட்டை.

இதனால் சுமார் 21,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாநகராட்சி அதிகாரிகள் அவர்களை அருகாமையில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் இருக்க ஏற்பாடு செய்து 5—12—1972 அன்றும் 6—12—1972 அன்றும் அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 5—12—1972 அன்று சுமார் 40,000 உணவுப் பொட்டலங்கள் கொடுக்கப்பட்டன. 6—12—1972 அன்று பகலிலும், மாலையிலும் ஒவ்வொரு வேளைக்கும் சுமார் 76,000 உணவுப் பொட்டலங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 40 வீதம் நிவாரண நிதியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின்சாரம் தாக்கியதன் காரணமாக பெரம்பூரில் குப்புசாமி என்ற 85 வயது கிழவரும் நுங்கம்பாக்கத்தில் 13 வயது சிறுவன் ஆறுமுகமும், வீட்டுச் சுவர் இடிந்ததன் காரணமாக அய்யனாவரத்தில் ஜெயச்சந்திரன் என்ற 4 வயது சிறுவனும் இறந்துவிட்டார்கள்.

சென்னை மாநகராட்சி மேயரும், கமிஷனரும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுத் தேவையான நிவாரண வேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

செங்கற்பட்டு.—சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம், அரசூர் ஆகிய ஊர்களுக்கருகில் நான்கு இடங்களில் மழைநீர், மாற்றுப் பாதைகளின் மேல் செல்வதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. இவற்றை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்று மாலைக்குள் அநேகமாக இந்த வேலைகள் பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



இரண்டு சிறிய நீர்ப்பாசன குளங்களும் ஒரு பொதுப் பணித்துறை குளமும் உடைந்துள்ளது. இந்த உடைப்புகளைச் செப்பனிட உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னாற்காடு மாவட்டம்.—கடலூரில் கடிலம் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மின்சாரம், செய்தி தொடர்பு, மற்றும் போக்குவரத்து முழுதும் துண்டிக்கப்பட்டது. தளங்காடு, பணங்காட்டூர் காலனி ஆகிய இடங்களில் சில வீடுகள் சேதமடைந்துள்ளன. பழைய மருத்துவ விடுதி சாலையில் ஒரு குடிசையின்மீது மரம் விழுந்ததால் கணவன், மனைவி ஆகிய இருவரும் இறந்துவிட்டார்கள். கடலூரில் சுவர் இடிந்து விழுந்ததால் இரு குழந்தைகள் இறந்துவிட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய ஏற்பாடுகள் மாவட்ட ஆட்சித் தலைவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை-நாகூர் பயணிகள் வண்டியும், சென்னை-இராமேஸ்வரம் துரித வண்டியும் கடலூரில் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டன. இந்த வண்டிகளில் இருந்த 1,500 பேர்களுக்கு உணவு வழங்கவும், மற்ற வசதிகள் செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்துள்ளார்.

தஞ்சை மாவட்டம்.—தஞ்சை மாவட்டத்தில் பல பகுதிகளில் பெருமழை பெய்ததன் காரணமாகப் பல தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதன் காரணமாகப் பல இடங்களில் பஸ் போக்குவரத்து தடைப்பட்டது. பாதைகளின்மீது தண்ணீர் ஓடுகின்றது.

தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், சீர்காழி தாலுக்காக்களில் சுமார் 1,000 முதல் 1,500 குடிசைகள் வரை விழுந்துவிட்டன. இந்த குடிசைகள் பெரும்பாலும் மீனவர்களுடையது. வீடிழந்த மீனவர்கள் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுள்ளனர். தஞ்சையில் புது மன்னியார் நதியின் தென் கரையில் சில பகுதிகள் உடைந்துள்ளன. அதைச் செப்பனிட பொதுப்பணித் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சீர்காழி தாலுக்காவில் 900 ஏக்கர் நெற்பயிர் நீரில் மூழ்கியுள்ளன. தலைஞாயிறில் 2,340 ஏக்கர் கார் நெற்பயிர் அறுவடை செய்ய இயலாமல் உள்ளது.

மாயவரம், சீர்காழி ஆகிய இடங்களில் 6 கால் நடைகள் இறந்துவிட்டன. சீர்காழி தாலுக்காவில் திருமுல்லைவாசல் ரோட்டில் மரம் விழுந்துள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 8

கொள்ளிடம், மகேந்திரப்பள்ளி ஆகிய ரோடுகளிலும் மரங்கள் விழுந்துள்ளன. புதுப்பட்டிணம் கிராம ரோட்டில் பல இடங்களிலும் மரம் விழுந்துள்ளதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. விழுந்த மரங்களை வெட்டியெடுத்து அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரத்தநாடு நகரில் ஒரு காய்கறி கடை விழுந்ததன் காரணமாக ஒருவர் இறந்து விட்டார்.

கும்பகோணத்தில் இரண்டு வீடுகள் இடிந்தன.

பந்தநல்லூர் கிராமத்தில் ஒரு வீடு இடிந்து விழுந்ததன் காரணமாக மூன்று நபர்கள் காயமுற்றனர். அவர்கள் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மன்னார்குடியில் வீட்டின் சுவர் ஒன்று இடிந்ததன் காரணமாக ஒரு பெண் காயமுற்றாள். அவரும் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

பாதிக்கப்பட்ட இந்த இடங்களுக்கெல்லாம் அரசு அலுவலர்கள் உடனடியாக அனுப்பப்பட்டுள்ளார்கள். ஆங்காங்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. தேவையான நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தஞ்சாவூர்.—ஒரத்தநாடு தாலுக்காவில் சின்னசாமி நாயுடு என்பவரின் 55 வயது அடைந்த மனைவி திருமதி நவநீத அம்மாள் என்பவர் வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததன் காரணமாக 7—12—1972 அன்று இறந்துவிட்டார்கள்.

பட்டுக்கோட்டை தாலுக்காவில் அதிராமப்பட்டினத்தில் 65 வயதடைந்த ஈசம்மாள் என்பவர் தன் வீட்டின் வாசலுக்கருகில் வெள்ளத்தால் வழிந்தோடிக் கொண்டிருந்த பாதாளச் சாக்கடையில் விழுந்ததால் 7—12—1972 அன்று இறந்து விட்டார்கள்.

தென் ஆற்காடு:—சிதம்பரம் கோயிலில் தென்புறம் உள்ள கோபுரத்தில் உள்ள ஒரு கலசம் 6—12—1972-ஆம் தேதி இரவு வீசிய புயலில் விழுந்து விட்டது. இந்தக் கலசத்தைக் கோயில் அதிகாரிகள் எடுத்துப் பத்திரப் படுத்தி உள்ளனர்.



1972 டிசம்பர் 8]

### (4) தகவல் கோரல்.

#### (அ) ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

DR. H. V. Hande rose.

MR. DEPUTY SPEAKER: There can be no discussion on this.

DR. H. V. HANDE: After boycotting the Assembly, the next day we came here and the Deputy Speaker gave the assurance that the Opposition would be treated with respect. Our grievance is we are not treated so. This Rule 82 statement had now come. I had given an adjournment motion on this subject and normally that should have been taken up first. It should have been given first preference. But this Rule 82 statement had come first. That is one of the reasons we in the Opposition feel dissatisfied. I had given an adjournment motion on this particular issue under Rule 42 and we would have talked on all these cyclone and connected relief measures that had to be given. I had given the adjournment motion to your Assembly Department. But no action has been taken on that. It has not come up first. That is my anxiety. Whenever we want to raise any issue......

MR. DEPUTY SPEAKER: So far, I have not received any adjournment motion.

DR. H. V. HANDE: Please ask your department.

MR. DEPUTY SPEAKER: I will verify.

#### (ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் குறித்து.

DR. H. V. HANDE: I would also like to know one more thing. Now there is a no-confidence motion against the Deputy Speaker and I would like to know when it will be taken up because last time when there was a no-confidence motion against the Speaker, the House was in a tremendous hurry to dispose it. So, when it will be taken up, I would like to know.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Under our rules, only after 14 days notice, this could be taken up. This was given notice of only yesterday, I think. It will have to wait for another 13 days.

திரு. வை. பாலசுந்தரம்: இரண்டிற்கும் வித்தியாசம் கிடையாது. இங்கே சொல்லுகின்றபோது நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவுறுத்திச் சொன்ன... கள் அரசாங்க ஆதாரத்தோடு சொல்வேன் இந்த அவையில் என்று. நான் இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சியை மீண்டும் உதாரணமாகச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற பட்ஜெட் கூட்டத்தில் நான் பேசுகின்ற போது ஒரு துண்டு அறிக்கையை வைத்துக்கொண்டு, பெரும் தலைவர் என்று சொல்லக்கூடிய காமராஜ் அவர்கள் பெரும் பணத்தை ஒரு பெரும் தொகையை ஹைதராபாத் பாங்கில் போட்டு வைத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைப் பலர் சொல்லியிருக்கிறார்கள், நம்பிக்கைக்குரியவர்கள் ஜனசங்கம் போன்ற நம்பிக்கைக்குரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தைக் கேட்ட நேரத்தில் அன்றைய தினம் கோபத்தோடு எழுந்தார்கள். இது வெறும் அறிக்கை தானே, துண்டறிக்கை தானே, இப்படி வைத்துக்கொண்டு ஆதாரமில்லாமல் பேசலாமா என்று பேசினார்கள். ஆனால் நேற்றைய தினம் இங்கே ஆதாரத்தோடு வந்திருக்கின்றேன் என்று சொல்லிக்கொண்டு யாரோ போட்ட துண்டறிக்கையைக் கொண்டுவந்து இங்கே ஆதாரம் என்று சொல்லுகிறார்கள்.

(Thiru M. A. Latheef in Chair)

Dr. H. V. HANDE: Sir, I would like to know whether you are going to tolerate such wide criticisms against a distinguished leader outside? Whether it is proper? I would like to know is it proper to be talking about Kamaraj like this? Yesterday, he spoke about Rajaji. Now he is talking about Kamaraj. I would like the Chief Minister to give thought to this. Why is it he is talking like this? Is it necessary? He is not in this House. If James referred to a 'SUTRARIKKAI' (bit notice), remarks should be made against Mr. James. Why should a distinguished leader be criticised like this? This is highly objectionable. If this sort of thing is allowed, you cannot control us. We will also talk without any responsibility and we will talk all sorts of things. I would like the Chair to settle this matter once and for all. The hon. Member thinks this is a fashion to do it; perhaps he thinks he becomes greater because of it and therefore he indulges in this sort of talk persistently in this House. He is making wide allegations about the distinguished leader. How is it allowed? How it hurts lakhs of people, we should realise. In making this sort of criticisms he shows lack of commonsense. I take serious objection to this kind of criticisms. (* * * *)

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அக... பட்டது.





Thiru R. PONNAPPA NADAR: What is your decision, Sir, on this? We want to know that. Are you going to allow it once again or are you going to curb it? If this is allowed, we will also talk like that.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் நேற்றைய தினம் ராஜாஜி அவர்களைப்பற்றி எடுத்துச்சொன்னது ஏதோ வெளியிலே எடுத்துச்சொன்ன விவரங்களை அல்ல. இந்த மன்றத்தில் ராஜாஜி அவர்கள் முதல்வராக அமர்ந்த நேரத்தில் அவருடைய கட்சியைச் சேர்ந்த கோசல்ராம் அவர்கள் ராஜாஜியைப்பற்றி எடுத்துச்சொன்ன விவரங்களைத்தான் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே ராஜாஜி அவர்கள் வெளியிலே இருக்கிறார், ஆகவே அதைப்பற்றிச் சொல்லக் கூடாது என்று குறிப்பிடுகின்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள், ராஜாஜி அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில், சட்டமன்ற நடவடிக்கைகளில் உள்ள, அவரைப்பற்றி சொல்லப்பட்ட வார்த்தைகளைத்தான் படித்தாரே தவிர வேறு அல்ல.

அடுத்து, உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள், காமராஜரைப்பற்றி ஐதராபாத் வங்கியில் அவர் பணம் போட்டிருக்கிறார் என்று முன்பே சொல்லி, அதைப்பற்றி பேசவேண்டாமென்று அன்றைக்கே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆகவே, அதைப்பற்றி பேசவேண்டியதில்லை. நான், குறிப்பாக ஆளும் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வேன், அமைச்சர்கள் மீது குற்றங்கள் சாட்டுவதற்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலேதான் இன்றைக்கு இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை இந்த அவையிலே வைத்திருக்கின்றோம். இந்த நம்பிக்கை தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் நோக்கம் என்னவென்றால், அமைச்சரவை நிரம்பக் குற்றங்கள் செய்திருக்கிறது, அவைகளை மூடி மறைப்பதற்கு, அவைகளிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடுவதற்கு, இன்றைக்கு ஜனநாயகத்திற்குப் புறம்பான முறைகளிலே இந்த அமைச்சர்கள் ஓடுகிறார்கள் என்று எங்கள்மீது பழி சுமத்தப்படுகிறது. அது உண்மையா, இல்லையா, என்பது பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அவையிலே இரண்டு மூன்று முறை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த அமைச்சரவைமீது, எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டுவந்த நேரத்திலே, அவை அனுமதிக்கப்பட்டு, இந்த அமைச்சரவை சந்தித்திருக்கிறது. ஆகவே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பயந்து ஒளிந்து ஓடக்கூடிய நிலையிலே இந்த அமைச்சரவை இல்லையென்பதைக் காட்டுவதற்காகத்தான் இந்த நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிப்பதற்கும் இந்த அமைச்சரவை கடமைப்பட்டிருக்கிறது என்கின்ற வகையிலேதான் நம்பிக்கை கோருகிற தீர்மானத்தைக் கொண்டு

வந்து விவாதித்துக்கொண்டு இருக்கிறோம். குற்றச்சாட்டுகளைச் சொல்கின்ற உறுப்பினர்கள் அத்தகைய குற்றச்சாட்டுகளை இங்கே ஆதாரப்பூர்வமாகச் சொல்வார்களானால் அவைகளுக்கு விடையளிக்கவேண்டிய பொறுப்பிலே அமைச்சரவர்களாகிய நாங்கள் இருக்கிறோம். ஆகவே, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு நான் கூறவிரும்புவது, வெளியே இருக்கிறவர்களைப்பற்றிய அந்த விவகாரத்திலே அதிகமாக ஈடுபடாமல், இன்றைக்கு இந்த இந்த அளவிலே இந்த அரசு ஏழை எளியவர்களோடு ஒன்றியிணைந்திருக்கிறது, இவ்வின்ன செய்து வருகிறது என்று சொல்லக் கடமைப்பட்டவர்கள். குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாகிய அமைச்சர்கள் இருக்கிறோம் என்பதை ஆளும் கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் உணர்ந்து, அந்த வகையிலே பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளியிலே இருக்கிறவர்கள் பற்றிப் பேசுகின்றவர்கள் யாருடைய மனமும் புண்படாத அளவுக்கு (குறுக்கீடு) டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன் . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எப்பொழுதும் ராஜாஜி, காமராஜர் இவர்கள் தான் கிடைத்தார்களா? எம்.ஜி. ஆரைப்பற்றிக் கூறவில்லை. உங்கள் கட்சி இரண்டாக உடைந்து நாறிச் சிரிக்கிறது. உங்களுடைய யோக்கியதை வெளியிலே தெரிகிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, யோக்கியதை என்பது ஹாண்டே அவர்கள் ஒருவருக்கு மாத்திரம் உரிமையாக இருக்கட்டும். நாங்கள் யோக்கியதை அற்றவர்களாக இருக்கிறோம். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. (குறுக்கீடு) ஹாண்டே அவர்களுடைய ஆத்திரம் எனக்குப் புரிகிறது. ராஜாஜி, காமராஜரைப்பற்றி மாத்திரம் பேசுகிறீர்களே, இன்னும், எம். ஜி. ஆரைப்பற்றியும் பேசவேண்டுமென்று அவர் ஆசைப்படுகிறார். அவர்கள் பேசும்போது, எம்.ஜி. ஆரைப்பற்றி அவருக்குத் தெரிந்த விவரங்களைப் பேசுவார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே எம்.ஜி. ஆரைப்பற்றி அவர்கள் பேசுவார்கள் . . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் பேசுங்கள் என்று சொல்லவில்லை. Why unnecessarily speak about Rajaji and Kamaraj alone? They are not here.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருவர் உட்கார்ந்தபிறகு ஒருவர் பேசவேண்டுமென்ற சர்வ சாதாரண மரபையாவது டாக்டர் ஹாண்டே அவர்கள் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனக்கு இருக்கிற



தொண்டை வளத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு பேச முற்படுவது நல்லதல்ல. அவையினுடைய மரபைப்பற்றி ஏராளமாகப் பேசுகிறோம். ஆனால் இந்த சாதாரண மரபைக்கூட கடைபிடிக்காமல் இருப்பது நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அவர் கட்சியைச் சார்ந்த கோசல்ராம் அவர்கள் இந்த அவையிலே ராஜாஜியைப்பற்றிக் குறிப்பிட்டதைத்தான் உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். (குறுக்கீடு) வெளியிலே யாரோ போட்ட துண்டறிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். இதற்கு அவர் சொன்ன காரணம் வெளியிலே போட்ட துண்டறிக்கையை ஹேப்ஸ் அவர்கள் சொல்லும்போது நாங்கள் சொல்வதற்கு உரிமை இல்லையா என்பது. எதிர்க்கட்சியினர் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் உரிமை எடுத்துக்கொள்ளவேண்டாம். ஆளும் கட்சியினராகிய நாம், நம்முடைய பெருந்தன்மை காரணமாக விட்டுக் கொடுத்து, இந்த அவையிலே நடந்துகொள்வதுதான் முறை என்று நான் கருதுகிறேன்,

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் நண்பர் பாலசுந்தரம் அவர்களுடைய பேச்சை ஆட்சேபித்தபோது, " he lacks commonsense " * * என்ற வார்த்தைகளை உபயோகித்தார்கள். அந்த இரண்டு வார்த்தைகளும் பார்லிமெண்டரி வார்த்தைகளுக்கு உகந்தது தானா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒரு உறுப்பினர் ஏதாவது பேசினார் என்றால் அதைச் சுட்டிக்காட்டுவதற்கு முறை இருக்கிறது. இந்த மன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைத்தான். மாண்புமிகு உறுப்பினர் பாலசுந்தரம் அவர்கள் ராஜாஜி அவர்களைப்பற்றி இவ்வாறு சொன்னார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், ஹாண்டே அவர்கள் எம். ஜி. ஆரைப்பற்றிப் பேசுங்கள் என்று கூறுவது, ஒரு உறுப்பினர் மற்றவர்களைப்பார்த்து ஒருவரை பற்றிப் பேசுங்கள் என்று கூறுவதற்கு உரிமையிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் அப்படிச் சொல்லவே இல்லை. ராஜாஜி அவர்களைப்பற்றி ஒரு கமெண்ட் கொடுத்தார். கோசல்ராம் பேசியதாகக் குறிப்பிட்ட பிறகு காமெண்ட் கொடுத்தார். அதைப்பற்றி நேற்றே நான்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

எழுப்பினேன். நான் எழுப்பியது அப்ஹோல்ட் ஆகியிருக்கிறது. நீங்கள் பேசவேண்டியதைப்பற்றி நான் வற்புறுத்தவில்லை . . . .
Unnecessarily every time he is making such wide allegations. It hurts our feelings. Why always talk about these two leaders. If they had talked outside, talk about them outside. They are not here. That is my question. Even if Kamaraj had said anything outside, you talk about that outside, but do not do it here in this House. I am not asking you to talk about this person or that person. But the point is the entire situation as it is today is the result of certain things that have happened. Why don't you talk about that ?

THIRU V. M. ABDUL JABBAR: Sir, he has cast aspersions on the hon. Member. I want your ruling.

MR. DEPUTY SPEAKER: You are not giving an opportunity to the Chair to give a ruling. இந்த பேரவைக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையிலே இருந்துகொண்டு தயவுசெய்து எந்தக் கருத்தையும் சொல்லவேண்டாம். இருக்கையிலே இருந்து சொல்கிற கருத்துக்கள் பேசுகிறவர்களுக்குக் கோபத்தை மூட்டுகிறது. இருக்கையிலேயிருந்து சொல்கிற கருத்துக்கள் பதிவாகாது. ஆனால் அதற்குப் பதிலாகக் கோபத்தோடு சொல்வது பதிவாகும். அதனாலே குழப்பம் ஏற்படும். (குறுக்கீடு) வெளியிலே போய் தாராளமாகப் பேசலாம். இருக்கையிலே அமர்ந்துகொண்டு பேசக்கூடாது. எழுந்து நின்று ஒலி பெருக்கியிலே பேசலாம். ஒலி பெருக்கி இல்லாமல் பேசவேண்டாம். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதாக இரண்டு வார்த்தையைச் சொன்னார்கள். (*) என்ற வார்த்தையை நான் சபை நடவடிக்கையிலே இருந்து எடுத்துவிடுகிறேன்.

THIRU V. M. ABDUL JABBAR: He said ' he lacks commonsense '.

THIRU R. PONNAPPA NADAR: 'Lacks commonsense' is perfectly parliamentary.

MR. DEPUTY SPEAKER: It is not unparliamentary. உட்காருங்கள். பார்லிமெண்டரியா அன்பார்லிமெண்டரியா என்பது முக்கியமல்ல. இதேமாதிரி அடுத்து ஒவ்வொரு உறுப்பினரும் பரிமாறிக்கொண்டிருந்தால் பேரவையைப்பற்றி வெளியிலே தவறான அபிப்பிராயம் ஏற்படும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, சில வார்த்தைகள் பாராளுமன்ற முறைக்குச் சரியான வார்த்தைகளாகக்கூட இருக்கலாம். அந்த வார்த்தைகளைப் பத்திரிகைகளில் படிக்கும் நேரத்தில் இந்த வார்த்தைதானே என்று எண்ணக்கூடும். ஆனால் இங்கே பயன்படுத்தப்படும் தொனி மற்றவைகளும் ஆத்திரப்படும் முறையில் அமைந்து விடுகிறது என்பதை நாம் நேரிலேயே பார்க்கிறோம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது யோக்கியதை என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார்கள், என்ன யோக்கியதை இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பத்திரிகைகளில் படிக்கும்பொழுது மென்மையாகத் தோன்றும், என்ன யோக்கியதை இருக்கிறது என்று. ஆனால் அதை மிகக் கடுமையான குரலில், ஏதோ இரண்டுபேர் ஒருவருக்கொருவர் கையை ஓங்கி அடித்துக் கொள்வதைப் போல, என்ன யோக்கியதை இருக்கிறது என்று மிரட்டும் குரலில் பேசுகிறார்கள். ஆகவே, பாராளுமன்ற முறைக்கு ஏற்ற வார்த்தையாக இருந்தாலும் அதைச் சொல்லும் நேரத்தில் நம்முடைய குரலில் ஒரு கனிவும், இந்த மன்றத்திற்குரிய பண்பும் மிளிர வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு மட்டுமல்ல, எல்லா உறுப்பினர்களுக்கும் பணிவன்போடு என்னுடைய வேண்டுகோளை விடுக்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** Sir, I want to make a submission எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பேசும்பொழுது பார்லிமெண்டரியா, அன்பார்லிமெண்டரியா என்று ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் வெகு கண்காணிப்பாக இருக்கிறார்கள். அதேபோல் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் எத்தனை நாள் எத்தனை அன்பார்லிமெண்டரி வார்த்தைகளை இங்கே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும், அதற்கும் கண்காணிப்பு இருந்ததா என்பதற்கும் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏதோ அம்மையார் அவர்கள் இங்கே பாரபட்சம் நடந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு முறையும் அன்பார்லிமெண்டரி வார்த்தை ஏதாவது ஆளுங்கட்சியின் சார்பாகப் பயன்படுத்தப்பட்டால் அதை எடுத்துக்காட்டும் உரிமை எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. நேற்றுக்கூட திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் சொல்லப்பட்ட வார்த்தை உடனே 'எக்ஸ்பஞ்ச்' செய்யப்பட்டது. கிருஷ்ணமூர்த்தி ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்தான். இப்படி நேற்று செய்தது உதாரணமாக, முன்மாதிரியாக இருக்கிறது. எனவே இந்த வார்த்தை பார்லிமெண்டரி வார்த்தையா அல்லாத வார்த்தையா என்று பார்க்க வேண்டிய நிலை பேரவைத் துணைத் தலைவருக்கு இருக்கிறது. ஆனால் நான் சொன்னது எதிர்க்கட்சிகளுக்கு

மட்டும் விடுத்த வேண்டுகோள் அல்ல, இங்குள்ள அனைவருக்கும் விடுத்த வேண்டுகோள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், எதிர்க்கட்சியில் இருப்பவர்களைப் பற்றிச் சொல்லி இங்குகூட அந்த வார்த்தை ரிக்கார்டில் இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த வார்த்தையை அடிக்கடி உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்றும் கருதுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர்களே, அன்பார்லிமெண்டரி பதங்களைப் பயன்படுத்தக்கூடாது என்பதில் இந்த மன்றத்திற்கு உள்ள அக்கறையையும், அதே நேரத்தில் வெளியிலே இருக்கும் சில நபர்களைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசும்பொழுது மன்றத்தின் மரபிற்கு உகந்தது அல்ல என்றும் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு தூரம் இந்த முறைகளைப்பற்றிக் கவலைப்படும் நாம் பொதுவாக இந்த அவையை எப்படி நடத்த வேண்டும், இந்த மன்றத்தின் தலைவருக்கு உள்ள அதிகாரம் என்ன என்பதை மறந்து விடுகிறோம், மறந்துவிடுகிறோம் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. பொதுவாக ஒருவர் பேசினால் மற்றவர்கள் எழுந்து நின்று பேசக்கூடாது. அப்படி நின்றாலும் மன்றத் தலைவர் மணியடித்தால் உட்கார வேண்டும். கடைசி ஆயுதமாக மன்றத் தலைவர் "If he is on his feet, no Member shall be on his feet" என்ற அந்த மரபு இருக்கிறது. அது தொடர்ந்து இந்த அவையிலே மீறப்பட்டு வருகிறது. இது மன்றத்தைப் பெரிதும் பாதிப்பதால் இதைப்பற்றி முடிவான நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் மிகமிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்ட விதிமுறைகளை எழுதி வைத்திருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட தவறுகள் செய்யப்பட்டு திரும்பத் திரும்ப ஒவ்வொரு பேரவைத் தலைவரும் அவர்களுடைய பதவிக்காலத்தில் சொல்லி வந்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் எல்லா உறுப்பினர்களும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் அவரவர்களுடைய பிரச்னை என்று வரும் பொழுது மன்றத் தலைவர் எழுந்து நின்றாலும் அவர்களுக்கு உட்காருவதற்கு மனம் வருவதில்லை. ஆத்திரத்தில் நாக்கை அடக்க முடியாமல் சில வார்த்தைகளைச் சொல்கிறார்கள். ஆனால் அதே வார்த்தைகளைக் கொஞ்சநேரம் கழித்துப் பரிசீலித்துப் பார்த்தால் நிச்சயமாக அதற்காக வருந்துவார்கள். எனவே பேரவையின் முறையைக் காப்பாற்ற சில விதிமுறைகளை வகுத்திருக்கின்றோம், அவைகளை நடைமுறையில் கடைப்பிடிக்கின்ற ஒருவகையிலேதான் பேரவையின் மரபும், மரியாதையும் காப்பாற்றப்படும் என்பதை இவ்வளவு பெரிய



அவைக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே இங்கே பேசும் ஆளுங்கட்சி அங்கத்தினர்களும், எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், முதலமைச்சரவர்களும் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும் சொன்னதைப்போல, கூடியவரையில் வார்த்தைகளை அளந்து, அடுத்தவர்கள் மனம் புண்படாமல் அந்த வார்த்தைகளை உபயோகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பார்லிமெண்டரி, அன்பார்லிமெண்டரி என்று சட்டத்தில் இல்லை. அதற்கு முன் உள்ள சில 'பிரசிடெண்டு'களை வைத்துச் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். அன்பார்லிமெண்டரியாக வரக்கூடிய வார்த்தை எவ்வளவு மோசமாக இருந்தாலும் சில நேரங்களில் நகைச்சுவைக்காக அவைகளைப் பயன்படுத்தும் பொழுது சிரிக்கிறார்கள். அப்பொழுது கோபம் வருவதில்லை. ஆனால் சாதாரண வார்த்தைகளைக்கூட கடுமையாகப் பயன்படுத்தும் பொழுது கோபம் வருகிறது. ஆகவே உறுப்பினர்கள் இதை கவனத்தில்கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பாலசுந்தரம் அவர்கள் அதிக நேரத்தை எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: என்னுடைய உரிமை பாதிக்கப்படுகிறது. பேச ஆரம்பிப்பதற்குள் நேரமாகிவிட்டது என்றால், குறுக்கீடுகள் வந்துவிட்டனவே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குறுக்கீடுகளை ஏன் உருவாக்குகிறீர்கள்?

திரு. வை. பாலசுந்தரம்: என்னைப் பற்றிப் பேசும் நேரத்தில், இந்தச் சமுதாயத்தில் படிப்படியாக முன்னணிக்கு வந்தவன். அது மதிப்பு மிக்க சுதந்திராக்கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுவது நம்பிக்கைத் தீர்மானத்தின்மீது—ஹாண்டே மீது அல்ல—முதலமைச்சர் மீது. எனவே முதலமைச்சரைப்பற்றி, ஆட்சியைப் பற்றிப் பேசுங்கள். ஹாண்டே அவர்களுக்கும் உங்களுக்கும் பொருந்தி வரவில்லை என்பதைப் பார்த்தோம். எனவே திரும்பத் திரும்ப ஏன் அவரை இழுக்கிறீர்கள்?

திரு. வை. பாலசுந்தரம்: பொதுவான கருத்துக்கு நாம் வந்தாக வேண்டும். அவரவர்களுடைய கட்சித் தலைவர்களைப்பற்றிப் பேசும் நேரத்தில் எப்படிக் கோபம் வருகிறதோ அதைப் போலத்தான் எங்கள் கட்சித் தலைவரைப் பற்றிப் பேசும்பொழுதும் வரக்கூடும். எங்கள் கட்சித் தலைவரைப்பற்றி

எப்படியெல்லாம் விமர்சிக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது இந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படி இப்படிப் பேசுவது தவறு என்று தலைவராக இருக்கின்ற அவர் தொண்டராகிய எங்களுக்குச் சொல்லித் திருத்தியிருக்கலாம். ஆனால் ' he lacks common-sense ', என்ற வார்த்தையை உபயோகித்திருக்கக்கூடாது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எத்தனை முறை திரும்பத் திரும்ப உத்தரவு போடுவது ?

I have already expunged the word [ * ]

திரு. வை. பாலசுந்தரம் : எனவே இந்த ஆட்சியின் நல்ல செயல்களைப் பல கோணங்களிலும் திசை திருப்பும் அளவிற்குச் சூழ்நிலைகள் உருவாக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் நம் மாநிலத்தில் மட்டும்தானா சொல்லப்படுகின்றன என்று எண்ணிப் பார்க்கும் நேரத்தில் பல்வேறு மாநிலங்களில் இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டு அது சில நேரங்களில் அலைக்கழிக்கப்பட்டு உதாசீனங்கள் செய்யப்படும் சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சபைக்குத் தங்கள் மூலமாகச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பாலசுந்தரம் அவர்கள்

[ * ]

சொன்ன குறிப்புகளை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : இன்று இந்த ஆட்சியினுடைய சீரான கோண... கள் நாட்டு மக்களுக்கு எதிர்காலத்திலே தேவைப்படும் ஒன்றாகும். இந்த ஆட்சியின் சாதனைகள் எப்படிப்பட்டவை என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனுடைய சாதனைகளை, குறிப்பாக இன்று எங்களுடைய கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் அதைச் சொன்னால் தங்க... ளாரண்டே அவர்களுக்கு இனிக்கும் என்பதால் அதை நான் சொல்லுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





எங்களுடைய கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்கள், எங்களுடைய கட்சி ஏழை மக்களுக்குச் செய்து வரும் தூய்மையான சேவையை அழிப்பதற்கான சூழ்நிலையில் நாட்டில் வன்முறைச் செயல்களுக்கு வழிவகுக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கெல்லாம் இன்றையதினம் தமிழ் நாட்டு மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி நல்ல பல சேவைகளை, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கிறது. கலப்புத் திருமணம் செய்கிறவர்களுக்குப் பொற்பதக்கம் அளித்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு இனிக்கின்ற அளவுக்கு அண்மையில் பெரம்பூருக்கு அருகாமையில் டாக்டர் அம்பேத்கார் பெயரால் கலைக் கல்லூரியை ஆரம்பித்திருக்கிறது. மேலும் பல நல்ல திட்டங்களை உருவாக்கி ஏழை எளிய மக்களுக்குச் சேவை செய்து வருகிறது. இந்த ஆட்சி நெடு நாள் நீடிக்க வேண்டும், நெடு நாள் இந்த ஆட்சி செம்மையுற வாழ வேண்டும், வளரவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பதினைந்து நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும். இடையில் ஏற்படுகின்ற குறுக்கீடுகளுக்குப் பேசுகின்ற உறுப்பினர்கள்தான் பொறுப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எனது கட்சியின் சார்பாக, அதிலும் குறிப்பாக முஸ்லீம் சமுதாய மக்களின் சார்பாக, சில கருத்துக்களை இந்த அவையின்முன் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய காலக் கெடுவை சற்று நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த அரசு கடந்த கூட்டத் தொடரில்தான் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர் நோக்கி, தோற்கடித்து வலுவான ஆட்சியாக வீற்றிருக்கும் நிலையில், இந்தக் கூட்டத் தொடரில் தங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது என்று காட்டுவதற்காக ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்று சொன்னால் அது ஏன் என்ற வினா எழத்தான் செய்கிறது.

இதற்கிடையில் என்ன நடந்தது? கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய ஒருவரைக் கட்சியிலிருந்து நீக்கிய காரணத்தால், அவர்களைத் தொடர்ந்து சட்ட மன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சி மாறிய காரணத்தால், இந்தச் சட்ட

மன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்களைத் தங்கள் பக்கம் கொண்டுள்ள இந்த அரசு நம்பிக்கை இழந்து விட்டதா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. இதைக் குறித்து ஒரு விஷயத்தை உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் கட்சி மாறுவதைத் தடை செய்வதற்காக ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறார்கள். ஒரு கட்சியின் பெயரால் வாக்காளர்களைச் சந்தித்து வாக்குகளைப் பெற்று சட்ட மன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ இடம் பெற்ற பிறகு அந்தக் கட்சியிலிருந்து வேறு கட்சிக்குத் தாவி, சட்டமன்ற உறுப்பினர் பதவியையோ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையோ, ராஜினாமாச் செய்யாது விஸ்வாசமாக இருக்கக்கூடியவர்களைப் பார்த்து 'ராஜினாமா செய் என்று சொல்லக்கூடிய பைத்தியக்காரத் தனத்தை இந்த நாட்டில்தான் பார்க்கின்றோம். அப்படிப் பட்டவர்கள் சொல்லக்கூடிய குறைக்காக இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லுவது எந்த ஆதாரத்தோடு சொல்லுகிறார்கள் என்று நிச்சயமாகத் தெரியவில்லை.

அதே நேரத்தில் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த நீங்கள் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசை ஆதரித்துக் கண்ட பலன் என்ன, ஏன் ஆதரிக்கிறீர்கள், நாடே கொதிப்படைந்திருக்கிறதே, உங்களுக்கு அதில் பங்கில்லையா என்ற தகாத வார்த்தைகளைக் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தாழ்மையாகச் சொல்லிக் கொள்வேன்—இந்திய அரசியல் நீரோட்டத்தில் முஸ்லிம் சமுதாயம் இரண்டறக் கலந்திருக்கிறது என்பதற்கு ஒரு அடையாளம் சொன்னால், பெரும்பான்மையான சமுதாயத்தைச் சேர்ந்த பெரும்பான்மை யான உறுப்பினர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசுடன் முஸ்லீம் சமுதாயத்தின் தாய் சபையாக இருக்கும் முஸ்லீம் லீக் இரண்டறக் கலந்திருப்பதாகும். இதுதான் இந்திய சமுதாய நீரோட்டத்தில் நாங்கள் இரண்டறக் கலந்திருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாகும் என்று பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நன்றி உணர்ச்சியுடையவர்கள் நாங்கள். வேறு மாநிலங்களில் முஸ்லிம் சமுதாயத்தினரை நாய்கள் போல் சுட்டு வீழ்த்தியபோது, அலிகார் பல்கலைக் கழகத்தை முஸ்லீம் சமூகத்திடமிருந்து பறித்துக் கொண்டபோது வடநாட்டில் கிளர்ச்சி நடந்து முஸ்லீம்களைச் சுட்டு வீழ்த்தியபோது எங்களுக்காகப் பரிதவித்துக் கண்ணீர் சிந்தியவர்கள் யார்? இந்த நாட்டில் தேசியம் பேசக் கூடியவர்கள் கண்டித்துப் பேசினார்களா? பெருந்தலைவர்கள் இந்த முஸ்லீம் சமுதாயத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு கண்ணீர் சிந்தினார்களா? அப்போது எங்களுடைய உற்ற நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான் கண்ணீர் சிந்தினார்கள். கண்ணீர் சிந்திப்பது மாத்திரமல்ல, அதற்குரிய



பரிகாரம் தேடவேண்டுமென்ற எண்ணத்தில் நாடாளுமன்றக் குழு ஒன்றைத் துப்பாக்கிச் சூடு நடந்த பிரதேசத்திற்கு அனுப்பி எந்த வகையில் முஸ்லீம்கள் கொடுமைக்குள்ளானார்கள், முஸ்லீம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று ஆராய்ந்து ஒரு அறிக்கையை இந்த நாட்டுக்கு அளித்திருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது நாங்கள் நன்றி கெட்ட தன்மையில் இந்த அரசுக்குத் துரோகம் செய்ய நினைப்போமா?

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் மரணப் படுக்கையில் இருக்கும்போது, டாக்டர் கலைஞர் அவர்கள் அவர்களைச் சென்று கண்டபோது கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் கலைஞரிடம் 'நீங்கள் எங்கள் சமுதாயத்திற்குச் செய்து வரக்கூடிய நல்ல காரியங்களுக்காக நாங்கள் மிக்க நன்றியுடையவர்களாக இருக்கிறோம்' என்று பேசமுடியாத சூழ்நிலையில்கூட, மவுனமான நிலையில் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் நிலையில் கூட, அந்த நன்றியறிதலுடைய இருதயம் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நன்றியைச் செலுத்தினார்கள் என்று சொன்னால், அவர்களுடைய வாரிசாகிய நாங்கள் எப்படி இந்த அரசிலிருந்து பிரிந்து இருக்க முடியும் என்பதை உணரவேண்டும்.

ஒரு காலத்தில் ஒரு பெருந்தலைவர் சொன்னார்—உங்களுக்குப் பத்துக்கும் அதிகமாக சட்டமன்ற இடங்களைத் தருகிறோம். விரும்பிய இடத்தில் விரும்பிய நபர்களைப் போட்டு சட்டமன்றத்திற்குள் வரலாம். அமைச்சரவையில்கூட இரண்டொரு ஸ்தானங்கள் தருகிறோம் என்று சொல்லிவிட்டு அதற்கு ஒரு நிபந்தனையைப் போட்டார். அது என்ன நிபந்தனை? தற்கொலை செய்து கொள்ளுங்கள் என்று கூறும் வகையில் முஸ்லீம் லீக்கை கலைத்து விடுங்கள் என்று சொன்னார். முஸ்லீம் லீகைக் கலைத்து விட்டால் உங்களைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறச் செய்கிறோம் என்று ஆசை வார்த்தைகள் காட்டினார்கள். எங்களுக்குத் தெரியும். தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப் பஞ்ச நிலையிலுள்ள மக்களுடைய உரிமைக் குரலாக ஒரு கட்சி இருந்தது. அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவருக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்த காரணத்தால் அன்றைக்கு அழிந்த அந்தக் கட்சி இன்றுவரை தலைதூக்க முடியாத நிலையைக் காண்கிறோம். அப்படி இருக்கும்போது ஒரு சில மந்திரி பதவிகளுக்காகவோ, சட்ட மன்ற உறுப்பினர் பதவிகளுக்காகவோ எங்களுடைய விஸ்வாசத்தைப் பறிகொடுக்க எங்களுடைய் சமுதாயத்தில் ஒருவரும் இல்லை.

அண்மையில் ஒரு வேடிக்கை நடந்தது. அகில இந்திய ரீதியிலுள்ள ஒரு கட்சியின் தலைவர் எங்கள் மாநிலக் கட்சியின் தலைவரை அணுகி 'உங்களுக்கு ஆசையே இல்லையா? அமைச்சரவையில் இடம் பெற வேண்டுமென்ற ஆசையே

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1972 டிசம்பர் 8

இல்லையா ? எவ்வளவு நாட்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்துக் கொண்டிருப்பீர்கள் ?' என்று பேசி எங்களுக்கு வலை விரிக்கப் பார்த்தார்கள். என்ன வலை விரித்தாலும் அந்த சிலந்திக் கூட்டில் சிக்கிக் கொள்ள மாட்டோம். இவர்களுடைய மாய்மாலத்தில் மயங்குபவர்கள் அல்ல இந்த முஸ்லிம் இணைத்தவர்கள் என்பதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முஸ்லீம் சமுதாயம் சிறுபான்மை சமுதாயம் என்பது மாத்திரமல்ல, மிகவும் பின்தங்கிய சமுதாயம். ஏழ்மையான சமுதாயம். நூற்றுக்கு 95 பேர் இந்தச் சமுதாயத்தில் ஏழை எளியவர்கள், பீடித் தொழிலாளர்கள், ஜட்கா ஓட்டிகள், வண்டி ஓட்டிகள், காலையிலிருந்து மாலைவரை நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைக்கக்கூடிய ஏழை மக்கள். அப்படிப்பட்ட ஏழை மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இந்த அரசை நாங்கள் ஆதரிக்கிறோம். ஏழை மக்களுக்காக ஏழைகளால் நடத்தப்படுகின்ற ஆட்சி தான் இந்த ஆட்சி என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது எங்குப் பார்த்தாலும் ஊழல் ஊழல் என்று சொல்லுகிறார்கள். முஸ்லீம் சமுதாயத்தினருக்கு இதிலே கவலை இல்லையா என்று கேட்கிறார்கள். ஊழல் என்று ஒன்று இருக்குமானால் அதனுடைய ஜன்ம விரோதி நாங்கள். இந்த அப்துல் ஜப்பார் ஊழல் புரிந்தவன் என்று கோர்ட்டில் நிரூபிக்கப்படு மானால் என்னுடைய கட்சி என்னை தூக்கி எறிந்துவிடும். எவ்வளவு முக்கிய மான உறுப்பினர்களாக இருந்தாலும் பொருட்படுத்தாது. ஊழல் புரியும் ஜப்பாரை தாங்கிக்கொள்ளும் கட்சி முஸ்லீம் லீக் அல்ல. எங்களுடைய தோழமைக் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தில், உண்மையாக ஒரு தனி மனிதன் ஊழல் புரிந்து அது நிரூபிக்கப்பட்டால், சட்டப்பூர்வமாக, ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டால் அந்த நபர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நிச்சயமாக தூக்கி எறியப்படுவார் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். ஆனால் வாய்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று அரசியல் நோக்கத்தோடு, குரோதக் கண்களோடு சர்வ சாமான்யர் களான இவர்கள் ஆட்சி புரிவதா என்ற நோக்கத்தில், இவர்களின் திட்டங்கள் ஏழை எளிய மக்களுக்கு, உழைப்பாளிகளுக்கு மட்டும்தான் பயன்படுகின்றன, நாம் சுதந்திரங்களை இழந்து நிற்க நேரிடுகிறது என்ற ஆத்திரத்தில் இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் 'ஊழல் ஊழல் என்று [illegible] அதைப் பற்றி நாங்கள் கவலை கொள்ளமாட்டோம்.



1972 டிசம்பர் 8][1] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அத்துடன் நாங்கள் இந்த அரசை காக்காய் பிடிப்பதாகவும், மற்றும் இவர்களின் வாலைப் பிடிப்பதாகவும் எங்களைப் படம் பிடித்துக் காட்டுவதில் பெருமை கொள்கிறார்கள் ஒரு சில தலைவர்கள். நான் சொல்லிக் கொள்வேன், இந்தச் சமுதாயம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக பல அகமதாபாத்களைக் கண்ட சமுதாயம், பல பரோஸ்களைக் கண்ட சமுதாயம், பல ரூர்க்கேலாக்களைக் கண்ட சமுதாயம். பல்லாயிரக் கணக்கான மக்களின் ஒரு கூட்டம் படுகொலை செய்யப்பட்டு, பெண்களின் மானம் இழக்கப்பட்டு, சொத்துக்கள் சூறையாடப் பட்டன. அந்த இடங்களில் கூட அவர்கள் நேர்ப் பாதையிலிருந்து பிறழாமல் தங்கள் கொள்கைகளிலிருந்து வழுவாமல் இருந்தனர். நாங்கள் எங்கள் கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவர்கள். யாரையும் காக்காய் பிடிக்கும் சமுதாயம் அல்ல எங்கள் சமுதாயம். காக்காய் பிடிக்கும் ஜாதி அல்ல எங்கள் ஜாதி என்பதை நான் இங்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் உற்ற நண்பர்களாக இருந்தபோதிலும் கூட கருத்து மாறுபட்டால் துணிச்சலோடும், தைரியத்தோடும் அதை எடுத்துச் சொல்வதற்கு நாங்கள் பின்வாங்கியதில்லை. இந்த அவைக்கும், நண்பர்களுக்கும் ஞாபகம் இருக்கலாம். முதுவிலக்கில் நாங்கள் இந்த அரசோடு கருத்து மாறுபாடு கொண்ட நேரத்தில் சொல்ல வேண்டியதை ஆணித்தரமாக, ஆனால் பணிவன்புடன் நாங்கள் எங்கள் கருத்துக்களை இந்த அவையிலும் வெளியிலும் எந்த அளவிற்கு எடுத்துச் சொல்லமுடியுமோ அந்த அளவிற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்போ தெல்லாம் பரிகசித்த நண்பர்கள் இப்போது எங்குச் சென்றுவிட்டார்கள் என்று தெரியவில்லை.

அடுத்து, இந்த மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சுட்டிக் காட்டப்படுகிறது. எங்கும் வன்முறைச் செயல்கள் அதிகமாகிவிட்டன, ஆகவே இந்த அரசு நிலைத்திருக்க நியாயம் இல்லை என்று கூறிய நண்பர்களே, உங்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். நீங்கள் மனசாட்சி யோடு பதிலளியுங்கள். அஸ்ஸாம் மாநிலத்தில் என்ன நடந்தது ? ஒரு மொழி சிறுபான்மையினர், லிங்க்விஸ்டிக் மைனாரிட்டி, அங்குள்ள வங்காளிகள் விரும்பியதெல்லாம் அங்குள்ள பல்கலைக்கழகத்தில் வங்காள மொழி ஒரு மொழியாக இருக்கவேண்டும் என்பதுதான். இவ்வளவு பெரிய பாவத்தைச் செய்யலாமா, இந்திய நாட்டுக்குத் துரோகம் செய்யலாமா ? அஸ்ஸாம் பல்கலைக் கழகத்தில் வங்காளி ஒரு மொழியாக இருக்கவேண்டுமென்று கேட்டார்கள். கிடைத்த பலன் என்ன ? நூற்றுக்கணக்கான கிராமங்கள் சாம்பலாக்கப் பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து ஓட வேண்டி வந்தது.

நூற்றுக்கணக்கான மக்கள் இறந்ததாக பாராளுமன்றத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டது. அங்குச் சட்டம், ஒழுங்கு அமைதியாகத்தான் இருந்ததா? நண்பர்கள் இதைச் சற்று சிந்தித்துச் சொல்லவேண்டும்.

ஆந்திராவில் நடந்தது என்ன? முல்கி, நான்-முல்கி என்ற தகராறு ஏற்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் சூறை யாடப்பட்டன. ரெயில்வே நிலையங்கள் கொளுத்தப்பட்டு பஸ்மமாக்கப்பட்டன. விஜயவாடாவில் பல நிலையங்கள் கொளுத்தப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. அங்குக் காவலர்கள் இருந்தார்களா? அங்கு ஆட்சி இருந்ததா? இப்படிப்பட்ட வன்முறைகள் தடுக்கப்படவில்லை. அங்குச் சட்டம் அமைதி நிம்மதியாக இருந்ததா? நண்பர்கள் அவற்றிற்கு விளக்கம் தருவார்களாக.

அடுத்து, எங்கள் இஸ்லாமிய தர்மத்தின் அடிப்படையில் இந்த அரசு நல்ல பல காரியங்களைச் செய்துள்ளது. இதைச் சொல்லும்போது உண்மை உள்ளத் தோடு, உவகையோடு, பூரிப்போடு ஒப்புக்கொள்கிறேன். ஏழைகளுக்கு இரங்குவதுதான் இஸ்லாமியத்தின் தலையாய கடமை. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று எழுந்துள்ள இந்த கட்சியின் ஆட்சியினை நாங்கள் எங்கள் ரத்தத்தைச் சிந்தியாவது நிலைநிறுத்துவோம் என்று நான் இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் இஸ்லாமிய தர்மமே ஏழைகளுக்கு இரங்குவதுதான். நண்பர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். குடிசை மாற்றுத் திட்டம் என்றதொரு திட்டம் இருக்கிறது. கடற் கரையோரப் பகுதிகளில் யார் இருக்க முடியும்? நாம் பல நாடுகளில் கண்டிருக்கிறோம். கடற்கரைக்கு அருகில் உள்ள பகுதிகளில் கேளிக்கை கிளப்புகள்தான் இருக்கும். பெரிய பெரிய லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள் இவர்களின் பங்களாக்கள்தான் இருக்கும், அல்லது அரசாங்கக் கட்டடங்கள் தான் இருக்கும், பெரிய பெரிய பணக்காரர்களின் மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் இவைகள்தான் இருக்கும். ஆனால் நாம் கடற்கரையின் அருகில் ஒருசில பகுதிகளில் இதுவரை வாழ வக்கில்லாதிருந்த ஏழைச் செம்படவர்கள் இதுவரை புழுப்பூச்சிகள் போன்று வாழ்ந்து வந்த ஏழை மக்கள் இன்று மாடி வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். எங்கு? கடற்கரையோரத்தில். இதைச் செய்தது நம் அரசு.

அடுத்து, பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளித்தல் திட்டம். தெருக்களில் சென்றால் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்கள் புழுக்களைப் போல் கையற்றவர்களாக, காலற்றவர்களாக ஒரு காசு, இரண்டு காசு என்று பிச்சை எடுத்துக்கொண்டிருந்தவர்களுக்கு—அவர்களைக் கண்டால் ஒதுங்கி, நெருங்காமல், அவர்களைக் கண்களால் பார்ப்பது கூட பாவம் என்ற நிலை



இருந்தது—விடுதிகள் அமைத்து, அவர்களுக்கு வைத்திய சிகிச்சை செய்து வயிறார உணவு அளிக்கும் அரசாங்கம் இருக்கிறது என்று சொன்னால், இந்த நாட்டிலே, இந்தியத் திருநாட்டிலே, பக்திக்குப் பெயர்போன இந்தத் திருநாட்டிலே, பெரிய பெரிய பாரம்பரியங்கள் இருந்த இந்தத் திருநாட்டிலே தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் செயற்கரிய இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. மனசாட்சி உள்ளவர்கள் சிந்தித்துச் சொல்லுங்கள்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன். எங்கள் கட்சியில் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு வெடிகுண்டு வெடித்தது. எங்கள் கட்சியை அவமதித்தது, எங்கள் தலைமையை அவமதித்து டாக்டர் அபிபுல்லா பேக் போன்ற பெரிய மனிதர் கூட புரட்சிக் கொடி பிடித்துப் பார்த்தார். எங்கள் காய்தே மில்லத் அவர்களை அவமதிப்பதில் பெருமை கொண்டார். அவர் அன்றையதினம் மேயராக இருந்தவர். இந்த மன்ற உறுப்பினர். உறுப்பினர் மட்டுமல்ல, முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக இருந்தார். மிகப் பெரிய மனிதர். செல்வாக்கு படைத்தவர். அவர் எங்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதால் எத்துணைப் பெரியவராக இருந்தபோதிலும் அவர் தூக்கி எறியப் பட்டார். இன்று அவர் மன்னிப்பு கோரி எங்களிடம் திரும்ப வந்துள்ளார் என்று சொன்னால் ஒரு சமுதாயம், அல்லது ஒரு கட்சி அதன் கட்சிக் கட்டுப் பாட்டை எவ்வளவுதூரம் பேணிக்காக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கட்சிக் கட்டுப்பாட்டை மீறுபவர்கள் தூக்கி எறியப்படவேண்டும். குரோதத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளை வீசியெறியலாம், ஆனால் அதைக் கண்டு நாம் ஏமாறக் கூடாது.

கலைஞர் அவர்களின் அரசு ஏழை மக்களின் அரசு. இதை உணர்ந்து இந்த அரசுக்குப் பக்கபலமாக எல்லோரும் இருக்கவேண்டும் என்று முஸ்லீம் லீக் சார்பில் நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முஸ்லீம் சமுதாயம் நிச்சயமாக தங்கள் பின்னால் நிற்கிறது, தங்களோடு கை தட்டி நிற்கிறது. வரக்கூடிய நன்மை, சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு பெறு வோம் என்று ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொண்டு, எனக்கு பேச வாய்ப் பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமர் கிறேன்.

திரு. கு. காமாட்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இயங்குகிற இந்த வரலாற்றுப் புகழ்மிக்க அமைச்சரவை மீது என் பூர்ண நம்பிக்கையையும் என்னுடைய தொகுதியில் எனக்கு வாக்களித்த 43,635 வாக்காளர்களின் சார்பிலும் நம்புகிறேன், நம்புகிறேன் என்பதை முதலில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு நான் ஒரு

சிலவற்றை எடுத்துக்கூறுவதற்கு முன்பாக, டாக்டர் கலைஞர் அவர்கள் ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். அவர் யார் என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

மு.ப. 11-00 (திரு. செ. கந்தப்பன்—தலைமை)

அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் பார்க்கும்போது டாக்டர் கலைஞர் அவர்களைப் போல், ஒரு முதலமைச்சர் இனி இந்த மாநிலத்திலே வர முடியுமா என்ற சந்தேகம் நமக்கெல்லாம் தோன்றுகிறது.

கடந்த ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். இந்த நாட்டிலே ஹிந்தி வரக்கூடாது, தமிழ் தான் இருக்கவேண்டுமென்று சொன்ன ஒரே குற்றத்திற்காக டாக்டர் கலைஞர் அவர்களை சிறை பிடித்துச் சென்றார்கள். அந்த நேரம் இரவு நேரம். அந்த இரவு நேரத்திலே அவர்களைச் சிறை பிடித்து அழைத்துச் சென்றார்கள். எங்கே அழைத்துச் செல்கிறார்கள் என்று யாருக்கும் புரியாத நேரம். வீட்டிலே உள்ளவர்கள் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் எல்லாம் தந்தையைக் காணோம் என்று அழுது கொண்டு இருக்கின்றன. அந்த நேரத்தில் நாங்கள் ஒரு வண்டியை எடுத்துக்கொண்டு எப்படியாவது கலைஞர் அழைத்துச் செல்லப்படும் இடத்தை நாம் பார்க்கவேண்டுமென்ற ஆர்வத்தில், குறிப்பறிந்து நாங்கள் வண்டியை எடுத்துக்கொண்டு தொடர்ந்து சென்றோம். திருச்சியை வண்டி தாண்டி விட்டது என்று கேள்விப்பட்டோம். திருச்சியை தாண்டி போலீஸ் வேன் சென்று கொண்டிருக்கிறது, கலைஞர் அவர்கள் அதிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டோம். வருகிற வண்டியெல்லாம் தடுத்து நிறுத்தி இந்த வழியாக போலீஸ் வேன் ஒன்று சென்று கொண்டிருக்கிறதா என்று கேட்டுக்கொண்டே செல்கிறோம். வழியிலே ஒரு வண்டி வருகிறது. அந்த வண்டியை நிறுத்திக் கேட்கிறோம். அதிலே ஒரு அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இறங்கி வருகிறார்கள். அவர்கள் யார் தெரியுமா? பிரபல பாடகி திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்கள். அவர்களிடத்திலே கேட்கிறோம், ஒரு போலீஸ் வண்டி சென்று கொண்டிருக்கிறதா என்று. அவர்கள் சொன்னார்கள், ஆமாம் அப்பா, தமிழ் தாயை யாரோ சிறை எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்களே, அது யாரப்பா என்று கேட்கிறார்கள். நாங்கள் சொல்கிறோம். இந்தி அரக்கன் இந்த நாட்டிலே புகுந்து, பக்தவத்சலத்தின் உருவத்திலே வந்து தமிழ்த் தாயைச் சிறை எடுத்துச் செல்கிறான், அவரை சிறை மீட்பதற்குத் தான் தமிழ்ச் சமுதாயம் புறப்பட்டு விட்டது. தமிழ்ச் சமுதாயம் தமிழ்த் தாயை சிறைமீட்டு அரியாசனத்தில் ஏற்றுவதற்கான நாள் வெகு தூரத்தில் இல்லை என்று



சொன்னோம். அதே போல் 1967-லே தமிழ்த் தாயை அரியாசனத்தில் ஏற்றியது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன். கலைஞர் அவர்கள் வெளியே வந்தவுடனே கேட்டோம், எப்படியிருந்தது என்று. அதற்கு அவர்கள் சொன்னார்கள், என்னுடைய எதிரிக்குக் கூட இப்படிப்பட்ட கொடுமை வரக்கூடாது என்று. நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற அவர் நினைத்திருந்தால் அவரால் எதையும் செய்ய முடியும். அவருக்கு அன்று செய்யப்பட்ட கொடுமையை எண்ணி, அதே கொடுமையை அவரால் அந்தத் தலைவருக்கு ஏற்படுத்த முடியும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்தார்களா என்பதை இங்கேயுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் தயவு கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும், நினைத்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தகைய கருணை உள்ளம் படைத்த முதலமைச்சரை ராஜினாமா செய்யுங்கள் என்று சொல்வதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டாமா? நான் அதை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே ஏற்பட்டிருக்கிற குழப்பத்திற்குக் காரணமே சினிமா உலகத்திலே ஏற்பட்ட காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாகத்தான் என்பதை, என்னாலே இங்கே பகிரங்கமாகச் சொல்ல முடியும். இங்கே கூட ஊழல் ஊழல் என்று சொல்லி, அதற்கான காரணங்களை நேற்று ஒரு உறுப்பினர் கூறினார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் கூட மிகத் தெளிவாக பதில் அளித்தார்கள். நான் இங்கே இருப்பவர்களையும், எதிர்க்கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்கிறேன். பிள்ளைப் பாசம் அனைவருக்கும் வேண்டியது தானே? யாருக்குமே இருக்கக்கூடாது என்பதை இங்கேயிருப்பவர்கள் தயவு கூர்ந்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அருமை எதிர்க்கட்சி நண்பர்களே, நான் உங்களை கேட்டுக்கொள்வதெல்லாம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற சச்சரவு கலைஞர் அவர்களின் மகன் மு.க. முத்து சினிமா உலகில் நுழைந்ததுதான். அந்தப் பையன் 3 மாதத்திலே தன்னுடைய தாயை இழந்தவன், முரடனாக வளர்ந்தான். அவனை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அடி வாங்கினான். இப்படி பிள்ளையிருக்கிறானே என்று தந்தை புலம்பினார். நண்பர்களிடத்திலே சொல்லி வேதனைப்பட்டார். அந்தப் பிள்ளை இன்று ஒரு துறையிலே முன்னுக்கு வருகிறது என்பதைப் பார்த்து தந்தை மகிழ்ச்சி அடைகிறார். அந்த மகிழ்ச்சி இருக்கக்கூடாதா என்பதை இங்கே உள்ள உங்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்த மகிழ்ச்சியின் காரணமாக பிள்ளையைச் சினிமாவிலே அழைத்து, தன்னுடைய செல்வாக்கை எங்கே அழித்து விடுவார்களோ என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இங்கே அவரை

ராஜினாமா செய்ய வேண்டுமென்று எங்களிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பிள்ளைப் பாசம் இல்லாதவர்களா இங்கே இருக்க வேண்டும். பெற்ற பாசம் இல்லாதவர்களா இங்கேயிருக்கவேண்டும். அல்லது முற்றும் துறந்த முனிவர்களா இந்த சட்டமன்றத்தில் அரசாள வேண்டுமென்ற விதியிருக்கிறது. இந்த நிலைமையை மக்கள் நல்ல முறையில் புரிந்து கொண்டிருக்கிறார்கள், என்பதை நான் இங்கே தெரியப்படுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அமைச்சரவை ஏற்பட்ட பிறகு எத்தனை நல்ல காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன. எதிர்கட்சிகள் எல்லாம் கூட பாராட்டியிருக்கின்றன. சென்ற நிதிநிலை அறிக்கையின் போது பேசிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் மிக தாராள மனப்பான்மையோடு இந்த அமைச்சரவையைப் பாராட்டினார்கள். இந்த அமைச்சரவை மிக நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது என்று சொன்னார்கள். நேற்று பேசிய ஜேம்ஸ் அவர்கள் கூடச் சொன்னார்கள், 4½ கோடி தமிழ் மக்கள் முதலமைச்சரைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று. அதேபோல் மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் இன்றைக்குச் சொல்கிறார்கள். காந்தியார் அவர்கள் இந்த நாட்டிலே இருக்கும் இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாக சகோதர உணர்வோடு பழகவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது தான் இந்த நாடு நல்ல நிலைமையில் செல்லும், அடையும் என்று குறிப்பிட்டார்கள். மற்ற மாநிலங்களில் அது நடைபெறவில்லை. ஆனால் தமிழ் நாட்டிலே தான் முஸ்லீம் சமுதாயமும், மற்ற சமுதாயமும் சகோதர முறையோடு பழகுகிறது. இதற்கு ஒரே காரணம், திராவிட முன்னேற்றக்கழக அரசு தான் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்பவர்கள் யார்? நிலச்சொந்தக்காரர்கள், பெரிய பணக்காரர்கள், பஸ் முதலாளிகள் இவர்களெல்லாம் தான் இந்த அரசு ராஜினாமா செய்யவேண்டுமென்று ஆசைப் படுகிறார்கள். அவர்கள் ஆசைப்படுவதிலே அர்த்தம் இருக்கிறது. முன்பு ஆண்ட மதிப்பிற்குரிய காங்கிரஸ்காரர்கள் நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்திலே ஓட்டை உடைசல் இருந்தது. அதனால் அதிலே இருந்து, நிலச்சுவாந்தார்கள் தப்பித்துக்கொள்ள முடிந்தது. அந்த அன்று எதிர்க்கட்சியிலே இருந்த கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே அந்த ஓட்டை உடைசல்களையெல்லாம் அடைத்து இன்றைக்கு நில உச்சவரம்பு 15 ஏக்கர் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் பயனாக இன்றைக்கு லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள்,



ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கின்ற வகையில் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பஸ் அதிபர்கள் இன்றைக்கு இந்த அரசை ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குவது என்ற திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்து அதை நிறைவேற்றுகிற காரணத்தால் எறிச்சல் ஏற்பட்டு அவர்கள் சொல்கிறார்கள்.

இந்த ஆட்சி வந்த பிறகு பல பள்ளிகளை, பல கல்லூரிகளை யெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறது. பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குடிசை மாற்று வாரியம், குடி நீர் வாரியம், பின் தங்கிய சமுதாயத்திற்கு நல்லதொரு தனியிடம், இவையெல்லாம் இந்த அரசு வந்தவுடன் செய்திருக்கிறது. இதையெல்லாம் முன்பிருந்த காங்கிரஸ் அரசு செய்யத் தவறி விட்டது. அவர்கள் செய்த தவறையெல்லாம் கூட இன்று இந்த அரசு திருத்தி வருகிறது. என்னுடைய தொகுதியில் ஒரு எரி சாராயத் தொழிற்சாலை காங்கிரஸ்காரர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையெல்லாம் இங்கே எடுத்துச்சொல்லி அதற்கு பரிகாரம் காணவேண்டுமென்று கேட்ட நேரத்தில் இந்த அரசு அதற்காக ஒரு தனி குழுவை அமைத்து அதைச் சரிப்படுத்தவேண்டிய நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இந்த அரசு நல்ல பல நடவடிக்கைகளை, காரியங்களையெல்லாம் செய்து இருக்கிறது என்பதை நான் இங்கே மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அப்பொழுது என்னுடைய தொகுதியில் இருந்த சில ஒன்றியங்களையெல்லாம் 'ஏ' கிளாஸிபிகேஷன் செய்திருந்தார்கள். அதெல்லாம் தவறு. இன்றைக்கு அவைகளெல்லாம் 'பி' கிளாசிபிகேஷனாக இருக்கத் தான் லாயக்கு உள்ளவை என்று சொன்னேன். அதை ஏற்று இன்றைக்கு இரண்டு ஒன்றியங்களை 'பி' கிளாசிபிகேஷன் யூனியன்களாக மாற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு சென்றால், இனி எந்த அரசும் இங்கே வந்து நல்ல முறையில் ஆட்சி செலுத்தும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை என்று நான் கூறிக் கொள்வேன். இன்றைக்குத் தஞ்சையிலே இருக்கிற ஒரு கல்வெட்டில் கூட எழுதப்பட்டிருக்கிறது—இந்த நாட்டை சூரிய வம்சத்தினர் 25 ஆண்டு காலம் ஆள்வார்கள். சூரிய வம்சத்தினர், அதாவது உதய சூரியனைச் சின்னமாக வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 25 ஆண்டு காலம் ஆளப்போகிறார்களே தவிர (ஆரவாரம்) இனி வேறு யாரும் வர முடியாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

இன்னும் 20 ஆண்டு காலம் கழித்து வேறு யாராவது வந்தாலும், நாங்கள் தீட்டியிருக்கும் திட்டங்களை அவர்களால் மாற்றுவதற்கு முடியாது. பதினைந்து ஏக்கரை வேண்டுமானால் குறைக்கலாமே தவிர, 15 ஏக்கரை அதிகப்படுத்த முடியாது. நாங்கள் ஏற்படுத்தியிருக்கிற குடிசை மாற்று வாரியத்தை அழித்துவிட முடியாது. குடி நீர் வாரியத்தினால் செய்யப்பட்டிருக்கிற நன்மைகளை அவர்கள் மாற்றுவதற்கு திட்டங்கள் தீட்ட முடியாது. அப்படி அவர்கள் தீட்டுவார்களேயானால் மக்கள் அவர்களைச் சும்மா விடமாட்டார்கள் என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஏழைகளுக்காக இருக்கிற அரசு, எளியோர்களுக்காக இருக்கிற அரசு, நல்ல முறையில் இன்னும் நல்ல பல காரியங்களைச் செய்ய இருக்கிறது என்பதை பார்க்கிறபொழுது நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

குறிப்பாக ஒன்று மட்டும் சொல்கிறேன். இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு முக்கியமான திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். கிராமங்களில் வைத்திய வசதி பெறமுடியாத அளவுக்கு 60, 70 வயதுக்கு மேற்பட்டவர்களெல்லாம் கண் ஒளி மங்கி, இது ஆண்டவன் விட்ட வழி, நம்முடைய தலை எழுத்து இது தான், இனிமேல் நம்முடைய கண்பார்வை திரும்பவே திரும்பாது என்று வருத்திக்கொண்டிருக்கிற 10 லட்சம் பேர்களுக்கு, அப்படிப்பட்ட 10 லட்சம் மக்களுக்கு எல்லாம் கண் ஒளி வழங்குகின்ற ஒரு அருமையான திட்டத்தை நமது எதிர்க் கட்சியில் இருக்கிற தலைவர்களெல்லாம் தயவு கூர்ந்து அந்த விழாக்களில் ஒரு விழாவில் கலந்து கொண்டு, அந்த விழாவில் கண்ணாடி வழங்கப்பட்டு, 60, 65, 70-க்கு மேற்பட்ட வயதுள்ள தாய்மார்கள், பெரியவர்கள் எல்லாம் இந்த அரசையும், டாக்டர் கலைஞர் அவர்களையும் எந்த வகையில் புகழ்கிறார்கள், எப்படி பாராட்டுகிறார்கள் என்ற அந்த நிலைமையை அவர்கள் தயவு கூர்ந்து பார்ப்பார்களேயானால், அவர்களும் இந்த அரசு நீடிக்கட்டும் என்று ஆசிர்வதிப்பார்களே தவிர, இந்த அரசு ராஜிநாமா செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லமாட்டார்கள் என்பதை இங்கே கூறிக் கொண்டு, இந்த அளவுக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன் டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் மந்திரிசபையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு, அதைப் பல நண்பர்கள் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். நான் சார்ந்துள்ள பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக இந்த அரசின் மீது நம்பிக்கை மாத்திரம் அல்ல, முழு





நம்பிக்கை மாத்திரம் அல்ல, கலப்படமற்ற பரிசுத்தமான ஒரு ஆதரவை, நம்பிக்கையைத் தெரிவித்து, அதற்குரிய காரணங்களை நான் விளக்க முயல்கிறேன்.

இந்த நம்பிக்கைத் தீர்மானம் என்ற ஒன்று இன்றைய ஜனநாயக அடிப்படையிலே, சட்டசபை மரபில் இல்லாத ஒன்று. ஆகவே இதைக் கொண்டு வந்தது முறைதானா என்ற சர்ச்சை நேற்று எதிர்க் கட்சியினரால் எழுப்பப்பட்டு, இறுதியாகப் பல பெரியவர்கள் விளக்கம் தந்ததற்கு மேல், இந்த விவாதம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சார்ந்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் விளக்கத்திற்கு மேலும், நான் என்னைப் பொறுத்த அளவிலே மிக ஆணித்தரமான விளக்கத்தைக் கொடுத்து, இது முறைதான், சட்டசபை மரபுகளுக்கு உகந்ததுதான் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 1952-வது ஆண்டில் நாட்டில் தேர்தல் வந்தபொழுது, எங்களுடைய பெருந் தலைவர் தேவர் பெருமகன் அவர்கள் அருப்புக்கோட்டை பாராளு மன்றத் தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் ஒரே நடவையில் தேர்தலுக்கு நின்று இரண்டு வெற்றிகள் பெற்றுக் காட்டினார். அதன் பிறகு உகந்த முறையில் அருப்புக்கோட்டை பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தார். அப்படிச் செய்த காலத்தில் உப தேர்தல் வந்தது அந்தத் தொகுதிக்கு. எங்கள் கட்சியின் சார்பாக திரு. எம். டி. ராமசாமி செட்டியார் அவர்கள் நிறுத்தப்பட்டு, அவர்கள் சார்பாக எங்களுடைய தலைவர் பிரசாரம் செய்த காலத்தில், அப்பொழுது ஆளும்கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதத்தை நிறுத்தி, தேர்தல் பிரச்சாரம் நடத்தினார்கள். அப்படி நடத்தியபொழுது அரசாங்கக் கொள்கை கோட்பாடுகளைக் கூறி தனக்குப் பெரிய ஆதரவு தேட முயன்றார். அந்தச் சமயத்தில் அவர்கள் ஒரு 'சாலெஞ்சை' விட்டார்கள். 'நான் வேண்டுமானால், நான் ஆளுகின்ற இந்த அரசின் மீது நம்பிக்கை இருக்கிறது என்றால், வாக்காளர் பெருமக்களே, ராஜாத்தி குஞ்சிதபாதத்திற்கு வாக்களிக்க வேண்டும், இல்லையென்றால் உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள்', என்று ஓபனாக ஒரு 'சாலெஞ்சை' விட்டார்கள். பொது மக்கள் ஜனநாயகம் புரிந்தவர்கள், நாட்டிலே நன்மைகளை யார் செய்வார்கள் என்று விவரம் தெரிந்தவர்கள், ராஜாத்தி குஞ்சிதபாதத்திற்கு வாக்கு அளிக்காமல் தேவர் திருமகன் வேட்பாளராக நின்ற திரு. எம். டி. ராமசாமி செட்டியார் அவர்களுக்கு வாக்களித்து, பெருத்த வெற்றியைத் தேடித் தந்தார்கள். ஆக, அன்று விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட பெருத்த ஜனநாயகத் தோல்வியை இங்கே சட்டமன்றத்தின் மூலம் அதை

வெற்றியாகத் தோற்றுவிக்க ஒரு முறையைக் கையாண்டார்கள். அன்றும் இங்கே எழுப்பப்பட்டதுபோல் எந்த அடிப்படையில் நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்தார்கள் என்ற பிரச்னை எழுப்பப்பட்டபொழுது, ஆங்கிலேயர்களுடைய சட்டசபையை, ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் விதிகளை யெல்லாம் மேற்கோளாகக் காட்டி, அதை நாம் மரபாகப் பின்பற்றுவதன் காரணமாக, அந்த அடிப்படையில் தான் இதை 'மூவ்' பண்ணுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் வாக்களிப்புக்கு விடப்பட்ட பொழுது, 'வீக் மெஜாரிடி'-யை வைத்து வெற்றி என்ற நிலைமையை உண்டு பண்ணிக் கொண்டார்கள். ஆக, இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் கொண்டு வருவதற்கு சட்டசபையின் மரபுகளுக்கும், விதிகளுக்கும் உகந்ததாக இல்லை என்ற வாதம் ஆதாரமற்றது, வேண்டாதது என்று தெரிவித்துக் கொள்கிறேன். உகந்த முறையில் இப்பொழுது நம்பிக்கைத் தீர்மானத்தின் பேரில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால், எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்டது போல 185 பேரவையின் உறுப்பினர்களை தங்களுடைய கட்சி உறுப்பினர்களாக சட்டமன்றத்தில் வைத்துக் கொண்டு, தோழமைக் கட்சிகளாக முஸ்லிம் லீக், பார்வார்டு பிளாக் கட்சிகளையும் வைத்திருக்கிற தி.மு.க. நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வருவது முறைதானா, இது அவசியம் தானா என்றால், முறை தானா என்பதற்குப் பதில் அளித்தாகிவிட்டது. இது அவசியம் தானா என்று அடுத்த கேள்வி வருகின்ற பொழுது, சிக்கலாக இருக்கிறது. நேற்று வரை ஒன்றாக இருந்தவர்கள் இன்று வேண்டுமென்றே சில காரணங்களால் பிரிந்து சென்றார்கள். ஜனநாயக ரீதியிலே, ஜனநாயகக் கோட்பாடுகளை, சட்ட விதிகளை அனுசரித்து, அவைகளைக் கடைப்பிடித்து, இந்த அரசைக் கவிழ்த்து, தானோ தன்னைச் சேர்ந்தவர்களோ அரசுக் கட்டிலில் அமர வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். பெருந் தோல்வி கண்டார்கள். அப்படி ஏதாவது முயற்சி செய்ய வேண்டுமென்றால், இன்னும் 3, 3½ ஆண்டுகளுக்கு மேல் காலம் இருக்கிறது. அதுவரையில் எப்படிப் பொறுத்திருக்க முடியும் என்று நினைத்தார்கள். 'இமாஜினரி வேர்ல்டு' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள், கற்பனை உலகத்தில் வசிக்கிறவர்கள், கற்பனைக் கதைகளை நடிப்பிலே நடித்துக் காட்டுபவர்கள் நடைமுறையில் இந்த அரசியலில் மந்திரவாதிகள் திடீர் மாற்றத்தை உண்டு பண்ணுவதுபோல ஒரு பெருத்த மாற்றத்தை உண்டு பண்ண முடியாது என்று கண்டார்கள். அந்தக் கற்பனையை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியில் இங்கே ஈடுபட்டார்கள். பல சதியான முறைகளை யெல்லாம், வேலைப்பாடுகளை யெல்லாம் கையாண்டார்கள் சட்டமன்றத்தில்.



அங்கே அதற்குச் சரியான பதில் கொடுக்கப்பட்டது. ஜனநாயக ரீதியாக தோல்வி கண்டார்கள். தோல்வி கண்டவர்கள் வெளியிலே சென்று சட்டங்களுக்கும், சட்ட விதிமுறைகளுக்கும் நேர்மாறாகப் பொதுமக்கள் அமைதியைக் கெடுத்து, எப்படியாவது இங்கே ஜனநாயக ரீதியாக நாம் தோல்வி கண்டு விட்டோம் என்று பொது மக்கள் தெரிந்துகொள்வதற்கு முன்னால் சில செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆட்சியைக் கவிழ்த்து விட்டு நாம் ஆட்சியில் அமருவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று உண்மைக்குப் புறம்பான நடைமுறை சாத்தியமில்லாத ஒரு சில கற்பனை எண்ணங்களை மக்கள் மத்தியில் பரப்ப முடியாதா என்ற முயற்சியிலே ஈடுபட்ட வண்ணம்தான், சட்டத்தை, அமைதியை பொதுமக்களிடையே கெடுத்து, பொதுமக்களுடைய சொத்துக்கும், உயிருக்கும், உடைமைக்கெல்லாம் பாதகம் விளைவிக்கக் கூடிய அளவுக்கு சமுதாய விரோதிகளைத் தூண்ட முயற்சித்ததாக எனது மதிப்பிற்குரிய தலைவர் ஏ. ஆர். பெருமாள் அவர்கள் விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார் "ராஜினாமாக் கட்சிகள்" என்று. ராஜினாமாக் கட்சிகள் சிலர் இன்றைக்கு தங்களுடைய ஒரே குறிக்கோள் கலைஞர் ராஜினாமா செய்ய வேண்டும். அந்தக் கொள்கையில் இங்கே தோற்று, அங்கே கிராமங்களில், நாட்டுப்புறங்களில், பல்விதமான குழப்பத்தை விளைவிக்கிறார்கள். என்றுமில்லாத அளவுக்கு 60 லட்சம் ரூபாய்க்குப் பொதுஜன சொத்துக்களுக்கு ஆபத்து விளைவித்திருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் நம்முடைய சமுதாயத்திற்கு எதிர்கால சந்ததிகள், வித்தாக விளங்கக் கூடிய சமுதாயம், மணிகளாக இருக்கக் கூடிய மாணவர்களை அரசியலுக்கு இழுத்து, வேண்டாத பல விளைவுகளுக்கு உள்ளாக்கியிருக்கக் கூடிய துர்பாக்கிய நிலையைக் காண்கிறோம். ஆகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தவர்கள், அவர்களுக்கு நெஞ்சில் உரமிருந்தால், நேர்மைத் திறனிருந்தால், தைரியமிருந்தால், கலைஞர் அவர்களைப் பார்த்து, அமைச்சரவையைப் பார்த்து, நேற்று எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். தைரியமிருந்தால் ராஜினாமாச் செய்யுங்கள், தேர்தலுக்கு வாருங்கள் என்று. நினைத்த நேரத்தில் எதைப் பேசினாலும் பேசிக்கொள்வது என்ற அளவுக்குச் சொன்னார்கள். நான் கேட்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களை. உங்களுக்கு நெஞ்சில் உரமும், நேர்மையும், தைரியமிருந்தால் ஏன் இங்கே அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை உங்களைச் சார்ந்தவர்கள் தைரியமாக சட்டமன்றத்திலே மரபுகளுக்கு உகந்த முறையில் வாதத்திற்கு எடுத்துக் கொள்ளச் செய்யக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அவர்கள் பேசுகின்றபோது அதற்கு

விளக்கம் கொடுப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்கு அஞ்சியவர்கள், அஞ்சி ஒடுங்கி ஓடியவர்கள், வெளியே குழப்பத்தை விளைவித்து, மக்களின் எண்ணத்தை தவறான வழியில் திருப்பப் பார்க்க முயலுகிறார்கள்.

ஆகவே ஜனநாயக உணர்வைப் பெற்ற, கடமையுணர்ந்த கலைஞர் அவர்கள் நம்பிக்கைத் தீர்மானத்தை நாமே கொண்டு வந்து மக்களிடம், சட்டமன்ற பிரதிநிதிகளாக, மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற மாமன்றத்தில் தன் நிலையை உணர்த்த வேண்டுமென்ற மரபோடு, ஜனநாயக கடமையோடுதான், இந்த நம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அவருடைய ஜனநாயக உணர்ச்சியை, ஜனநாயகப் பண்பை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்த அளவுக்கு இங்கே கொண்டு வந்துள்ள தீர்மானம் மிகச் சிறப்புடனே, செல்வாக்குடனே நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த அரசைக் கவிழ்க்கவேண்டும், தேர்தலில் வாருங்கள் பார்ப்போமென்று மரபுகளுக்கு உகந்த முறையில் அல்லாமல், வேறுபட்ட முறையில், அன்றைய சபாநாயகராக இருந்த அவர்கள், மாஜி சபாநாயகர் அவர்கள், without political bias இருக்க வேண்டியவர்கள், எந்த அரசியல் கண்ணோட்டமும், விருப்பு வெறுப்பின்றி இருக்கக் கூடிய நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்திருக்கக்கூடியவர். நீண்டதொரு அரசியல் பிரசங்கத்தைச் செய்தார்கள். ஜனநாயகத்தை மதிக்கின்றவர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கையுடையவர்கள், தன்னுடைய பலத்தில் நம்பிக்கை இருக்குமானால் இங்கே வந்து சட்டமன்ற ஆசனத்தில் அமர்ந்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மூவ் பண்ண, அவர் செகண்ட் பண்ணி பேசி முடித்திருந்தால் கலைஞர் ராஜினாமா செய்யச் சொல்லியிருக்கலாம். ஏன் செய்யத் தவறினார்கள்? ஆக, அவர்கள் வாய் வேதாந்தியாக, வாய்ச் சொல் வீராகி விட வேண்டுமென்ற செயலில் அழிந்துபட்டிருக்கும் நிலையில் சொல் வீராகக் காணப்பட்டு பேசினார். அந்தக் காரணத்தினால்தான் இங்கே இந்த நம்பிக்கைத் தீர்மானம் விவாதிக்கப்படுகிறது.

அடுத்தபடியாக, அவர்கள் போக்கைப் பார்க்கும்போது, இங்கே டாக்டர் ஹண்டே அவர்கள், மற்றும் ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள், வலது கம்யூனிஸ்ட், புதிதாகத் தோன்றிய ராமச்சந்திரன் கட்சி, இவைகள் நம்பிக்கையில்லாத கட்சி, ராஜினாமக் கட்சி என்று நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் கூட்டு விநோதமாக இருக்கிறது. நோவாஸ் ஆர்க் என்று சொல்வார்கள். வேண்டாத சக்திகள் ஒன்றாகச் சேர்ந்திருப்பது; எதற்காகச் சேர்ந்திருக்கிறார்கள்? என்ன கூட்டு



சாதனையைச் செய்யப் போகிறோம், என்ன கூட்டறிக்கை விட்டிருக்கிறார்கள்? கலைஞர் ராஜினாமாச் செய்ய வேண்டும். அதற்கு எத்தனை பஸ்கள், எந்தெந்த இடத்தில் யார் யாரை வைத்துக் கொளுத்துவது, எப்படி மாணவர்களை மறைமுகமாகத் தூண்டி விடுவது என்பதா?

இந்த ராஜினாமாக் கட்சித் தலைவர்களையும் அதைச் சார்ந்த நண்பர்களையும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாணவர் சமுதாயம் இன்று உங்களுடைய குழந்தைகள்தான். நம்முடைய மொத்தக் குழந்தைகள்தான். அவர்களுடைய அழுகையில் மகிழ்ச்சி காண விரும்புகிறீர்களா? அவர்களை வைத்து அரசியல் லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கிறீர்களா? அந்த லாபம் கிடைத்தாலும் அதை வைத்து நிரந்தரமாக நீங்களும், உங்கள் சந்ததிகளும் எப்படி வாழ முடியும் என்று கணக்குப் போடுகிறீர்கள்? உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். ஏன் அந்தத் தலைவர்கள் அத்தனைபேரும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை விடக் கூடாது. 'மாணவச் சிங்கங்களே, மணிகளே, எங்கள் அருமைக் குழந்தைகளே, உங்களுடைய எதிர்காலத்தில் நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். கடமையுணர்ச்சியோடு இருக்கிறோம். ஆகவே நீங்கள் உங்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள், ஆசிரியர் கட்டளைகளைக் கேட்டு உங்கள் கல்வியில் கவனம் செலுத்தி வாருங்கள்' என்ற அறிக்கையை எந்தத் தலைவராவது இதுவரை விட்டார்களா? விடுவார்களா? ஆனாலும் தினமும் பத்திரிகையைப் பார்க்கிறேன். தினமும் பார்த்தால் இந்தக் குழப்பத்திற்கு கலைஞர் தான் பொறுப்பு, இந்த மாணவர்களை இப்படி அடித்துத் தொல்லைப்படுத்துகிறார்கள் என்று வேதனைப்படுகிற டாக்டர் ஹண்டே அவர்கள் அதைப்பற்றி மாணவர்களுக்கு அறிவுரை கூற எங்கே போய் விட்டார்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரடியாக அப்படி பேசக் கூடாது. சபாநாயகர் மூலம் சொல்ல வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: சபாநாயகர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். நேற்று பேசும்போது டாக்டர் ஹண்டே அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றை எழுப்பினார்கள். கட்சி ஆணையின்படி வந்து பேசுகிறார்களா அல்லது தன்னிச்சையாக இங்கே வந்து பேசுகிறார்களா என்று. உங்கள் கட்சியின் ராஜாஜி மட்டுமல்ல, பல தலைவர்கள் என்னுடைய கட்சியில் இருக்கின்றார்கள். அத்தனை பேரும் ஒருமித்தக் கருத்தோடு கலைஞர் அரசைப் பாராட்டுகிறார்கள். வரவேற்கிறார்கள் அவருடைய ஆலோசனையின் பேரில், ஆதரவின் பேரில் நாங்கள் சட்ட மன்றத்திற்குள்ளேயும், வெளியேயும் செயல்படுகிறோம் என்ற விவரத்தை டாக்டர் ஹண்டே அவர்கள் போன்ற நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிச் சொல்லிக் குட்டையில் குழப்பம் ஏற்படுத்தி,

மீன் பிடிக்க முயலாதீர்கள் என்ற வேண்டுகோளை அந்த ராஜினாமாக் கட்சி நண்பர்களுக்கு விடுக்கின்றேன். கலைஞர் அரசு மிகப் பெரிய சாதனையைச் செய்திருக்கிறது. கடந்த ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி புரிந்த நேரத்தில் நிறைய போராட்டங்களைச் சந்தித்தார்கள். எத்தனை பிரச்னையைச் சந்தித்தார்கள்? ஆனால் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று ஒரு சில ஆண்டுகளில், 3, 4 ஆண்டுகளில் எத்தனை போராட்டங்கள், எத்தனை பிரச்னைகள்?

Problems were increasing and they have become the order of the day.

ந.ப. 1–30 பிரச்னைகள் அதிகமாகிக் கொண்டே வருகின்ற நேரத்தில் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். எங்கு பார்த்தாலும் ஆசிரியர்கள் பிரச்னை, மாணவர்கள் பிரச்னை, என்.ஜி.ஜி.ஓக்கள் பிரச்னை, எல்.ஜி.ஜி.எஸ். பிரச்னை, பொறியாளர் பிரச்னை. எங்கு பார்த்தாலும் பிரச்னை அதிகமான நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். விவசாயச் சமுதாயம் ஒரு பெரிய சமுதாயம். அதைக் கூடப் பயன்படுத்தி, முதலைக் கண்ணீர் விட்டு, நீலிக்கண்ணீர் விட்டு, அவர்களுக்கு அனுதாபம் காட்டுவது போல நடித்து, அவர்களைக் கொண்டு பெருத்த குழப்பத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாகப் பல பிரேதங்களை வீழ்த்தி, ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்ற நம்பிக்கையில் தோல்வி கண்டார்கள். என்ன நடந்தது? சுட்டது கலைஞர் ஆட்சி, காட்டுமிராண்டித்தனமான ஆட்சி, ராஜினாமா செய், நீதி விசாரணை செய் என்று கூக்குரலிட்டார்கள். ஆனால் அப்படி அவர்கள் நடித்தாலும்கூட, மக்களுக்குக் கண்ணைக் கொடுப்பது போல, அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை வளப்படுத்திக் கொடுப்பதில், வள்ளுவர் பெருந்தகை சொல்லியது போல் "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக, உலகியற்றியான்" அவ்வழியில் செல்வதை நான் பாராட்டுகிறேன். "தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியார் வீரக்கனல் மிக்க அரசியல் வாதத்தைப் பேச நான் கேட்டிருக்கிறேன். ஆனால் நெருக்கடி நேரத்தில் ஏழையின் தோண்டனாக, ஏழையின் நம்பிக்கையில் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு மனிதனைக் கண்டதில்லை. இன்றுதான் டாக்டர் கலைஞர் அவர்களுடைய உருவிலே, அவர்களுடைய ஆட்சிப் பொறுப்பிலே நாங்கள் காண்கிறோம். எத்தனையோ தலைவர்கள் சொன்னார்கள். தீண்டாமை ஒழிய வேண்டும்; தாழ்த்தப்பட்ட சமுதாயம் உயர வேண்டும் என்று. ஆனால் அத்தகைய போதனைகளை மக்களிடம் சொல்வதோடு நின்றுவிடாமல் நம்முடைய டாக்டர் கலைஞரவர்கள் தமது சொந்த வாழ்க்கையிலும் அதைச் செய்து காட்டுகிறார்கள். கலப்புத் திருமணம் செய்ய வேண்டும் என்று மேடைகள்தோறும் பேசுகிறார்கள். இன்றைக்குத் [illegible] மகனுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் கலப்புத் திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். சொல்வதைச் செயலில் காட்டி வருகின்ற



தலைவர் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள். அவருடைய ஆட்சியைப் பார்த்து ராஜிநாமா செய், ராஜிநாமா செய் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

லஞ்சம், ஊழல் என்றெல்லாம் இந்த ஆட்சியின்மீது குற்றஞ் சாட்டினார்கள். என்ன ஊழல், எங்கே லஞ்சம் என்று கேட்டபோது, நம்முடைய நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்வதாக எழுந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களும், சட்ட அமைச்சரவர்களும், நாங்களும் மிக்க ஆவலோடு காதுகளைத் தீட்டிவைத்துக் கொண்டிருந்தோம். ஏதோ பெரும் பட்டியலைச் சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தோம். அவர்கள் சொன்னதோ அஞ்சுகம் மன்றம் இருக்கிறது, அஞ்சுகம் படிப்பகம் இருக்கிறது. அஞ்சுகம் பள்ளிகூடம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதிலே எப்படி லஞ்சம் வந்தது? ஊழல் வந்தது என்று கேட்டால் முதலமைச்சரவர்களுக்கு விளக்கம் சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற முறையிலே சொன்னதாகச் சொல்லி விட்டார்கள். ஆக, இப்படி ராஜிநாமா செய், ராஜிநாமா செய் என்று சொல்லி விட்டு ஏன் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று காரணத்தைக் கேட்டால் இப்படி கோமாளித்தனமாக நழுவி விடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களை . . .

திரு. நா. வெ. குருசாமி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், 'கோமாளி' என்று சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'கோமாளி' என்று சொல்லக் கூடாது. இந்த மாதிரியான வார்த்தைகள் சொல்வதைத் தவிர்க்கவேண்டும்.

திரு. கே. கந்தசாமி: நான் கோமாளி என்று யாரையும் வேதனைப்படும்படியாகச் சொல்லவில்லை. விளையாட்டாக இப்படிச் சொல்லுகிறார்களே என்ற அர்த்தத்தில் சொன்னேன். யார் மனதையாவது அது புண்படுத்துவதாக இருந்தால் அதை 'வாபஸ்' பெற்றுக்கொள்கிறேன். யார் மனதையும் நோக வைக்க வேண்டும் என்பது என் எண்ணமல்ல.

இப்படி நடைபெறாத ஒன்றை நடந்ததாகச் சொல்லி, திருப்பிக் கேட்கின்ற போது, 'நான் அப்படிச் சொல்லவில்லை, கேள்விப்பட்டேன்' என்று ஒதுங்கி விடுகிறார்கள். பொறுப்புள்ள இந்தச் சட்டமன்றத்தில் இப்படி பொறுப்புள்ள [illegible] பொறுப்பற்ற முறையில் பேசலாமா என்பதுதான் என் வாதம். [illegible] பொறுப்போடு குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டும். இதற்கு முன்னாலே நாங்களும் பல குற்றச்சாட்டுகளைச் சொன்னோம். கள்ள நோட்டு அடித்தவர்களைச் சொன்னோம். கள்ள நோட்டு அடிப்பதிலே சம்பந்தப்பட்டவர்களைச் சொன்னோம். அவைகளையெல்லாம் இந்தச் சட்ட மன்றத்திலே

ஆதாரங்களோடு சொன்னோம். ஆனால் இன்றைக்கு என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றுமே நடைபெறாமல் இருக்கும்போது, குற்றச்சாட்டுகள் என்ற முறையிலே சிலவற்றை சபாநாயகரை வைத்து நடத்தி முடித்து விடலாம் என்று நினைத்தார்கள் போலும். லஞ்சம் என்கிறார்கள். ஊழல் என்கிறார்கள். விவசாயிகளைத் துணைக்கு அழைக்கிறார்கள். மாணவர்களைத் தூண்டி விடுகிறார்கள். யார்மீது? தன்னையே நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்திருக்கும் டாக்டர் கலைஞர் ஆட்சிமீது. நடக்கக்கூடிய காரியமா இது?

கலைஞர் அவர்கள் எப்போது தூங்குகிறார், எப்போது சாப்பிடுகிறார் என்பதே தெரியவில்லை. அந்த அளவுக்குப் பணியாற்றி வருகிறார். 'உடல் எல்லாம் மூளை' என்று டாக்டர் லோகியா அவர்களைச் சொல்வார்கள். டாக்டர் கலைஞர் அவர்களும் அப்படித்தானே என்று நான் நினைக்கிறேன். நான் ஒரு டாக்டர் அல்ல. ஆதலால் அதைப்பற்றி எனக்குச் சரியாகத் தெரியாது (சிரிப்பு). ஏழை எளிய மக்கள் எல்லாம் பெருமைப்படத் தக்க வகையிலே இன்றைக்கு கலைஞர் அவர்கள் அரசுக் கட்டிலிலே வீற்றிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து ராஜிநாமா செய் என்று சொல்கிறார்கள். என்ன வேடிக்கை பாருங்கள்? இதற்கு முன்னாலே ஆட்சியில் இருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை மக்கள் மறந்துவிடவில்லை. கைகளைக் கட்டி வைத்துச் சுட்டார்கள். கிணற்றிலே, ஏரியிலே தள்ளிக் கொன்றார்கள். சிறைச்சாலைகளிலே தள்ளிச் சித்திரவதை செய்தார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் இன்றைக்கு கலைஞர் ஆட்சியைக் குறை கூறுகிறார்கள்.

நமது நண்பர் குருசாமி போன்றவர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு 'ராஜிநாமாச் செய்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பெரும் தலைவரை ஆட்சியில் அமர்த்தி விடலாம் என்ற ஒரு அபிலாஷையில் அப்படிச் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களை ஆட்சியிலே அமர்த்திவிட்டால் அப்புறம் எங்களுக்கு வேறு என்ன வேலை? அப்படி உட்கார விட்டுவிடுவோமா? உட்கார்ந்துவிடலாம் என்ற கற்பனையில், பகற்கனவில் அவர்கள் மிதந்து கொண்டிருக்கிறார்கள். அது ஒருநாளும் நடைபெறாது.

ஜனநாயக நாட்டிலே அவர்கள் பேசலாம், எழுதலாம், கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால் மக்கள் நாச வேலைகளைச் செய்வதற்குத் தூண்டி விடலாமா? ஒரு ஜனநாயக நாட்டில் அது நடைபெறலாமா? மக்களுடைய சொத்துக்கு, மக்களுடைய உடைமைக்கு, மக்களுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கலாமா? அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? அப்படிப் பாதுகாப்பு முயற்சியில் ஈடுபட்டால், இந்த ஆட்சியின்மீது லஞ்சம், ஊழல் என்று குற்றஞ்சாட்டுவதா? எதிலும் உண்மை இருக்க வேண்டாமா? இப்பொழுது ராஜிநாமாக் கட்சி ஒன்று தோன்றியிருக்கிறது. அதனுடைய



வேலையே கலைஞர் ஆட்சியே ராஜிநாமாச் செய், கலைஞர் ஆட்சியே ராஜிநாமாச் செய் என்று சொல்வதைத் தவிர வேறு வேலையில்லை. இதைச் சொல்வதற்காகவா ஒரு கூட்டணி. ராஜிநாமாச் செய் என்று சொல்லி, ராஜிநாமாக் கட்சி இன்று நாட்டிலே குழப்பம் விளைவித்து வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் கந்தசாமி அவர்கள் 'ராஜிநாமாக் கட்சி, ராஜிநாமாக் கட்சி' என்று அடிக்கடிச் சொல்லிக்கொண்டே வருகிறார். எதிர்க்கட்சிகளைப் பார்த்து அப்படி ராஜிநாமாக் கட்சி என்று சொல்வது முறையா? அப்படி ஒரு கட்சி இருக்கிறதா? இந்த மன்றத்திலே அப்படிப் பேசுவது பொருத்தம் உடையதல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தக் கட்சி இப்போது இங்கே இல்லை (பலத்த சிரிப்பு).

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** எல்லாக் கட்சிகளையும்தான் குறிப்பிடுகிறார். நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். எங்கள் கட்சியையும் சேர்த்துத் தான் ராஜிநாமாக் கட்சி என்று சொல்கிறார்.

* **திரு. ஏ. ஆர். பெருமாள்:** தலைவரவர்களே, சோசலிசக் கருத்துக்களைக் கொண்டவர்களை சோசலிஸ்ட் கட்சி என்று சொல்கிறோம். கம்யூனிசக் கருத்துக்களைக் கொண்டவர்களை கம்யூனிஸ்டு கட்சி என்று சொல்கிறோம், சுதந்திரமான கருத்துக்களைச் சொல்லி, சுதந்திரமாக இருப்பவர்களை சுதந்திராக் கட்சி என்று சொல்கிறோம். ராஜிநாமாச் செய் என்று சொல்லக்கூடிய கட்சியை ராஜிநாமாக் கட்சி என்று சொல்கிறோம் (சிரிப்பு). அதிலே என்ன தவறு?

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைப் பார்த்து ராஜிநாமாக் கட்சி என்று சொல்வது தவறு.

He is casting aspersions on the Opposition parties. I strongly object to that. I cannot accept the explanation of the hon. *Member Mr. Perumal.*

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் சபாநாயகர் அவர்களே, ராஜிநாமாக் கட்சி என்று திரு. கந்தசாமி அவர்கள் எதை அடிப்படையாக வைத்துச் சொல்கிறார்கள்? திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்களும் அதை ஆமோதித்துப் பேசினார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். இன்றையதினம் தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய 4½ கோடி தமிழ் மக்களும் இந்த மந்திரி சபையை

ராஜிநாமா செய் என்று சொன்னார்கள். அந்த 4½ கோடி தமிழ் மக்களின் சார்பிலே வந்திருக்கக்கூடியவர்கள்; ஆகையால் நாங்கள் ராஜிநாமாக் கட்சி என்று அழைக்கப்படலாம்.

Four-and-a half-crores of people want that this Government should resign. Everybody wants, almost everybody wants this Government to resign. We have absolute right to that and I thank Mr. Perumal for that.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதோ பெரிய விளக்கம் கொடுத்துவிட்டதுபோல் மகிழ்ச்சியடைகிறார்கள். நாங்கள் குறிப்பிடும் ராஜிநாமாக் கட்சி எம்.ஜி.ஆர். கட்சி ஒன்றைத்தான். அந்தக் கட்சிதான் டாக்டர் கலைஞர் அவர்களுடைய மந்திரி சபையை ராஜிநாமாச் செய் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. வேறு எந்தக் கொள்கையும் அந்தக் கட்சிக்கு இல்லை. கொள்கையே இல்லாத ஒரு கட்சி, இந்த ஆட்சியைப் பார்த்து ராஜிநாமாச் செய் என்று சொன்னால் அதற்கு வேறு என்ன பெயர் சொல்வது, சுதந்திரமாகச் செயல்படக்கூடிய, கருத்துக்களைச் சொல்லக் கூடிய டாக்டர் ஹாண்டே அவர்களும் அதில் சேர்ந்து கொண்டால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. ஆக்வே நாங்கள் சொல்லக்கூடிய ராஜிநாமாக் கட்சி எம்.ஜி.ஆர். கட்சி ஒன்றைத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் சொல்வது . . . .

You need not compliment M.G.R. Long before that, before the new party was started I have been demanding that. Almost 99 per cent of the people of Tamil Nadu have been asking this Government to resign and asking for the resignation of the Chief Minister. Therefore that question does not arise.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முதலில் பேசும்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் 4½ கோடி தமிழ் மக்களும் ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றார்கள். இப்போது பேசும்போது 99 சதவீதம் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் அவர் எழுந்து பேசும்போது சதவீதம் குறைந்து கொண்டே வரும் என்று கருதுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** துணை சபாநாயகர் அவர்களே, இங்கே நான் இல்லாதபோது எங்கள் கட்சியைப்பற்றி எல்லாம் பலவிதமாகச் சொன்னதாகச் சொன்னார்கள். ராஜிநாமாக் கட்சி என்று பெயர் சூட்டு விழாவும் நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட ராஜிநாமாக் கட்சி எங்கு இருக்கிறது? இந்த மன்றத்திலே இருக்கிறதா அல்லது வேறு எங்காவது இருக்கிறதா? தமிழ்



நாட்டு மக்கள் எல்லாம் இந்த அரசாங்கம் இனியும் நீடித்து இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். ராஜிநாமாச் செய் என்று சொல்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் எல்லாம் இந்த ஆட்சியை ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று சொல்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று சொல்வதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் நாங்கள் எல்லாம் எங்கே உள்ளவர்கள்? (சிரிப்பு) நாங்கள் தமிழ் மக்கள் இல்லையா? நாங்கள் எல்லாம் பரம்பரைத் தமிழர்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவரவர்களே, இங்கே எம்.ஜி.ஆர். கட்சி என்று ஒன்று இருக்கிறதா? அல்லது வேறு பெயராலே ஏதாவது கட்சி இருக்கிறதா? அல்லது எம்.ஜி.ஆர். கட்சி என்று சபாநாயகர் ஏதாவது அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எம்.ஜி.ஆர். கட்சி என்று இந்த மன்றத்தில் ஒரு கட்சி இல்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுதான் ஒரு கட்சி இருக்கிறது. எம்.ஜி.ஆர். தலைமையில் அந்தக் கட்சி இருப்பதால் அங்கத்தினர்கள் நகைச்சுவைக்காக அப்படிக் குறிப்பிடுகிறார்கள். அதை நகைச்சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. கே. கந்தசாமி:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பெருந்தன்மையோடு கொடுத்த விளக்கத்தைப் பாராட்டுகிறேன். கௌரவத்திற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். அத்தனை மக்களும் இந்த மந்திரி சபை ராஜீநாமாச் செய்ய வேண்டும் என்று விரும்புவதாக. நான் ராஜீநாமாக் கட்சி என்று குறிப்பிட்டதற்குக் காரணம் அவர்களுடைய சொந்த அபிலாஷையை வைத்து ஒன்று சேர்ந்து ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்கிறார்களே தவிர அவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமை நமக்குத் தெரியும். எத்தனை நாட்கள் இப்படிச் சேர்ந்திருப்பார்கள் என்றும் தெரியும். போராட்டத்தை, குழப்பத்தை நாட்டில் ஏற்படுத்துவதன் மூலம் ஒரு ஆட்சியை மாற்ற முடியாது. மக்களுடைய உயிரை, உடைமையைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும். ஆகவே, நாட்டில் அமைதியை ஏற்படுத்த எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு அரசாங்கத்தின் சார்பில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கைத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம், இந்த அரசை மாற்ற வேண்டுமென்றால் அதற்கான ஜனநாயகக் கோட்பாடுகளுடன் ஒரு முறையை வகுத்துக்

கொண்டு செயல்படுங்கள், அதை நாங்களும் ஜனநாயக முறையில் எதிர்க் கிறோம் என்பதாக எதிர்க் கட்சிகளுக்குத் தெரிவித்து நம்பிக்கைத் தீர்மானத் தில் பேசி, இதனை ஆதரிக்க சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ராஜீநாமாக் கட்சிபற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். ராஜீநாமா என்பது மராட்டி பதம். ராஜி என்றால் ஒப்புதல், நாமா என்றால் பத்திரம், தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களும் இந்த அரசே தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதற்கு ஒப்புதல் பத்திரம் கொடுத்திருக்கிறார்கள் என்பதாக இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*** திரு. கி. செயராமன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களது தலைமையில் அமைந்துள்ள மந்திரி அவையின் மீது நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்துப் பேச எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி.

நாட்டில் உள்ள ஜனநாயகவாதிகள் அத் தனைபேர்களும் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீதுதான் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை எல்லோரும் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். புதிய கட்சியினர் நடத்திய பேரணியா, பேரணியா அது முடிந்த பிறகு வேறு எந்த செயலையும் குறிப்பாகச் சொல்ல முடியாது. நாட்டில் இருக்கிற அராஜகவாதிகள் வேண்டு மென்றே சிலர் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லி நாட்டில் ஒரு நாடகம் நடத்திக் கொண்டு வருகிறார்களே தவிர மக்களில் பெரும் பாலோர் அதிலும் சாதாரணமானவர்கள், சாமானியர்கள் தமிழகத்தில் நடைபெறும் டாக்டர் கலைஞர் அவர்களது ஆட்சியைத்தான் ஆதரித்து வருகிறார்கள். புதிய கட்சித் தலைவர்கள் நாடு ஸ்தம்பிக்கப்போகிற, நிர்வாகமே ஸ்தம்பிக்கப்போகிற திட்டத்தை அறிவிக்கப் போகிறதாகச் சொன்னார்களே தவிர இன்று நாட்டில் நடைபெறும் மக்கள் ஆட்சியைக் கண்டு அவர்கள் தான் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். செயல்பட முடியாத நிலையை அடைந்து— நிருபர்களைச் சந்திக்கக்கூட இயலாதவர்களாகிவிட்டார்கள். அந்தக் கட்சியினர் களின் செயல்முறைகளை வருணித்த பிரபல பத்திரிகைகள் எல்லாம் கூட எந்த முறையில் விமர்சித்திருக்கின்றன என்று பார்த்தால்

"The notion of Thiru M.G.R. that he can get things done by a dramatic move is due to his political immaturity.".

என்றுதான் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் கூறுவேன்.

'It is a flash in the pan'.



என்று அவரது செயலைச் சொல்லலாம். மக்களைச் சந்திப்பதாகச் சொல்வார்கள். திட்டம்போட்டுவிட்டுச் சொல்வார்கள். இன்றைக்கு நாடே ஸ்தம்பிக்கிற திட்டத்தை அறிவிக்கப் போவதாகச் சொன்னவர்தான் ஸ்தம்பித்து நிற்கிறார். அப்படியே ஓய்ந்துவிட்டார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கண்டு இந்த அமைச்சரவை பயந்து விட்டதாகச் சொல்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கண்டு இந்த அரசு என்றைக்கும் பயந்தது இல்லை. சென்ற ஆகஸ்டு மாதத்தில் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வந்தபோது எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஹாண்டே அவர்களும், அனந்தநாயகி அம்மையார் அவர்களும் அதை என்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்ட நேரத்தில் "இன்றே, இப்பொழுதே எடுத்துக்கொள்ளலாம்" என்பதாக இந்தப் பேரவையில் அறிவித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நாடு மறந்திருக்காது. சரித்திரத்தில் எழுதப் பட்டிருக்கிறது. வேண்டுமென்றே தவறாக மக்கள் மத்தியில் எத்தனைதான் எதிர்க் கட்சிகள் பிரச்சாரம் செய்தாலும் கூட நாட்டு மக்கள் அவர்கள் சொல்வதைக் கேட்டு ஏமாந்து போய்விடமாட்டார்கள்.

டாக்டர் கலைஞர் சாதாரணமானவராக இருக்கலாம். சாமானியமானவராக இருக்கலாம். இந்த ஆட்சியில் சாமானியமானவர்கள் அமர்ந்தால்தான் ஜன நாயகம் தழைக்கும், நாட்டில் உள்ள சாமானியமானவர்கள், சாதாரணமான வர்கள் வாழ முடியும் என்பதை மக்கள் உணர்ந்துதான் டாக்டர் கலைஞர் அவர்களை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கிறார்கள்.

நெசவாளர்களது துயர் துடைக்க முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் ஒருபோதும் முன்வந்ததில்லை. அந்த நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச கூலியும், வேலையும் உத்தரவாதமாகக் கிடைக்க டாக்டர் கலைஞர் அவர்கள் தான் சிறப்பானதொரு திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தினார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதுமட்டுமல்ல. மாநில திட்டக் கமிஷன் என்பதாக வேறு எந்த மாநிலமும் எடுத்து அமைக்க சிந்திக்காத நேரத்தில் நல்ல பல திட்டங்களை உருவாக்கு வதற்கு நமது தமிழ் மாநிலத்தில் அமைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

அடுத்து நமது டாக்டர் கலைஞர் அவர்களுடைய செயல்முறையே ஒரு தனித்தன்மையானது, சிறப்பான பாராட்டுக்குரியது என்பதற்கு எடுத்துக் காட்டாக ஒவ்வொரு துறையிலும் மற்ற மாநிலங்களின் சாதனை என்ன.

[திரு. கி. செயராமன்] [1972 டிசம்பர் 8

நம்முடைய சாதனை என்ன, மற்ற நாடுகளைவிட நம் நாடு எந்த எந்த வகையில் எப்படி முன்னேறி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதோடு மற்ற மாநிலங்களில் எப்படி வன்முறைகள் தூக்கியிருக்கின்றன, நம் மாநிலத்தில் எப்படி அமைதி நிலவி வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறார்கள். இதை ஒருசில எதிர்க் கட்சிகள் விரும்பாமல் இருக்கலாம். ஆனால் நாட்டில் உள்ள சாமானிய குடிமக்கள், சாதாரண குடிமக்கள் எல்லோரும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். ஒருசிலர் இந்த நாட்டில் நடைபெறும் நான்காந்தர குடிமகனது ஆட்சியை—அதாவது நான்காந்தர குடிமகன் என்கிற சூத்திருடைய ஆட்சியை விரும்பாமல் இருக்கலாம். இவர்கள் ஆட்சியில் இருக்கக்கூடிய ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியதே மக்கள் தான். அந்த மக்கள் இன்றைக்கும் இந்த அரசை ஆதரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தங்களுடைய சொந்த அரசியல் லாபத்திற்காக எதிர்க் கட்சிக் காரர்கள் செய்கிற தவறான பிரசாரங்களினால் மக்கள் ஏமாந்துவிட முட்டாள்கள் அல்ல, இனி எடுப்பார் கைப்பிள்ளையாக மக்கள் ஒருபோதும் இருக்க மாட்டார்கள்.

இன்றையதினம் சிறுசிறு வியாபாரிகளுக்கு எல்லாம் நன்மை ஏற்படக் கூடியவகையில் விற்பனை வரியில் இந்த அரசுதான் அதிகச் சலுகையை வழங்கியிருக்கிறது. முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் செய்தார்களா? இல்லை.

அதைப்போல இன்றைக்கு விவசாய வருமான வரியை எடுத்துக் கொண்டால் நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வரியில்லை என்பதாகச் செய்திருப்பதும் இந்த அரசுதான்.

அடுத்து எத்தனையோ ஆண்டுகளாக நகராட்சிகளில் சைக்கிள் வரி இருந்திருக்கிறது. அதை ரத்து செய்யவேண்டுமென்று முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் நினைக்கவில்லை. ஆனால் நமது கழக அரசுதான் சாமானியமானவர்கள், சாதாரணமானவர்கள், தொழிலாளர்கள் நன்மை அடைய வேண்டும் என்பதாக எல்லா நகராட்சி மன்றங்களிலும் விதிக்கப்பட்டு வந்த சைக்கிள் வரியை ரத்து செய்துவிடலாம் என்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

இந்த ஆட்சிக்கு முன்னால் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்டது பிற்பட்டோர் பட்டியல். அவை ஒரேமாதிரியாகத்தான் இருந்தது. இராமன் ஆண்டால் என்ன, இராவணன் மாண்டால் என்ன, அதனை எங்கே மாற்ற முடியும் என்பதாக உயர்ந்தோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு பிற்பட்டோர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் எதுவும் பெறாமல் கஷ்டப்பட்டு



1972 டிசம்பர் 8] [திரு. கி. செயராமன்]

வந்த சமூகத்தினர்களில் 13 சாதாரண, சாமானிய சமூகத்தை இன்றைக்கு கலைஞர் ஆட்சியில்தான் பிற்பட்டோர் பெயர்ப் பட்டியலில் சேர்க்க முடிந்திருக்கிறது என்றால் இது ஒரு சாதாரணச் சாதனை அல்ல.

டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், இந்த அரசு சாதாரண குதிரை அல்ல, பந்தயக் குதிரை, அதுவும் அதிவேகப் பந்தயக் குதிரை ஆக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன் என்பார்கள். ஆனால் எதிர்க் கட்சிக் காரர்கள் மக்கள் விருப்பத்திற்கு மாறாக இந்த ஆட்சி உடனே மாற வேண்டும் என்று சொல்கிறார்கள். காரணம், மக்களை அவர்கள் அடிக்கடி இன்னும் ஏமாந்து கொண்டிருப்பார்கள், எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பார்கள் என்று நினைப்பது தான்.

இவ்வளவுக்கும் பின்னாலே, நம்முடைய நாட்டிலே சட்டம், அமைதி கெட்டு விட்டது என்று சொல்பவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சேலம் மாவட்டத்திற்கு, சேலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஒருவர், அண்மையிலே, வருகை தந்தபொழுது, எனக்குப் பின்னாலே பல நூற்றுக்கணக்கான போலீசார்கள் வருகிறார்கள், அது தேவையில்லை; நான் ஏன் பயந்து கொண்டு வரவேண்டும். தமிழக அமைச்சர்கள்தான் போலீசை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ் இல்லாமல் அவர்கள் வருவதில்லை. மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், அண்மையில், சென்னையிலே, நடந்த காங்கிரஸ் கட்சியின் தேர்தலைப் பற்றி செய்தித்தாள்களிலே பார்த்தோம். தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று குறிப்பிட்ட, உள்அறையிலே கட்சித் தேர்தலை நடத்த முடியாமல், மரத்தடியிலே கட்சித் தேர்தலை நடத்தினார்கள். கட்சித் தேர்தல் மட்டும் நடக்கவில்லை. சோடாபாட்டில்களும் வெளியே எறியப்பட்டன. அது மட்டுமல்ல, அவர்களைச் சேர்ந்த வாக்காளர்களை, கட்சித் தொண்டர்கள் அணுக முடியவில்லை. நமது போலீசை நம்பி, இன்னின்னார் வாக்காளர்கள் என்று தேர்தல் நடத்துபவர்கள் சொன்னபிறகு, போலீசார் உதவியுடன் தேர்தல் அரைகுறையாக நடந்தது. அந்த இந்திரா காந்தியினுடைய கட்சித் தேர்தல் நடந்ததுபோல், எந்தத் தேர்தலும் நடந்திருக்கவே முடியாது, மத்திய அமைச்சர் நிச்சயமாக இந்த நிகழ்ச்சியை மறக்க முடியாது. உள்ளூரவாவது மறக்காமல் இருப்பார். இப்படி, சட்டம், அமைதி கெட்டு விட்டது என்று சொல்கிறவர்கள், தங்களுடைய கட்சித் தேர்தலிலே, டிஸ்ட்ரிக்ட் கமிட்டி தேர்தலிலே சோடா பாட்டில்களை எறிந்ததையும், தமிழகத்திலே அவர்களுடைய கட்சித் தேர்தல் இப்படி நடந்திருப்பதையும் நாம் மறக்க முடியாது.

இவ்வளவுக்கும் பிறகுதான் ஊழல் குற்றச் சாட்டுகளைப்பற்றிச் சொன்னார்கள். ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அனுப்புவதில் காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வேறு மாநிலத்து அமைச்சரைக் குற்றம் சாட்டுவதாக நினைக்க வேண்டாம். ஹரியானா மாநிலத்து முதலமைச்சரைப்பற்றி ஊழல் புகார் கொடுக்கப்பட்டது. குறிப்பிட்ட நாளுக்குள் பதில் அனுப்ப வேண்டுமென்று குறிப்பிட்டும், 20 வாரத்திற்கு மேல் ஆகிறது பதில் அனுப்புவதற்கு. இன்னும், அந்த அமைச்சர் மீது சி.பி.ஐ. என்கொயரி போடப்பட்டு, அந்த சி.பி.ஐ. ரிப்போர்ட்டுகளை நமது பிரதமர் வைத்துக் கொண்டு, அதை அவருடைய காபினெட் சப் கமிட்டி, சரியானதா என்று பரிசீலனை செய்து, அந்த கமிட்டியும் 7, 8 வாரங்களுக்குப் பின்னாலே என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவெடுக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஏதோ எதிர்க் கட்சி என்ற முறையிலே, ஆளும் கட்சியைத் தாக்க வேண்டுமென்ற முறையிலே இங்கே இருப்பவர்களைப் பார்த்து, தாமதம் ஏன், தாமதம் ஏன் என்று கேட்பது விந்தையாக இருக்கிறது. மக்கள் கண்மூடித்தனமாக, ஏமாளிகளாக இருக்கிறார்கள் என்று இங்கே இருப்பவர்கள் நம்புகிறார்கள். ஆனால் மக்கள் உஷாராக இருக்கிறார்கள். எது எது நாடகம், எது எது உண்மையான நிலைமைகள் என்பதை யெல்லாம் கண்டு கொண்டிருக்கிறார்கள். உண்மையான ஜனநாயகவாதிகளை மக்களுக்குத் தெரியும். ஆனால் அரசியலைத் தனிப்பட்டவர்கள், சொந்த லாபத்தைக் கருதி, பயன்படுத்தினால், அதைப்பற்றி அவர்கள் தெரிந்து கொள்ளாமல் போகலாம். அதைப்பற்றி, இங்கே இருக்கிற பெரும்பான்மையானவர்கள், பொருட்படுத்தாமல், அதற்கு மாறாக

'Eternal vigilance is the prices of liberty '

என்பதையும் அதே மாதிரி,

'Eternal vigilance is the price of power '

என்பதையும் நாம் நினைத்துக் கொண்டு மேலும் மேலும் கலைஞருடைய கரத்தை வலுப்படுத்துவோம் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

* திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின்முன் வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை எதிர்த்துச் சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

இருநூற்றுமுப்பத்திநான்கு அங்கத்தினர்கள் கொண்ட இந்தச் சட்ட சபையில் 172 அங்கத்தினர்களின் துணையைப் பெற்ற ஒரு கட்சியின் தலைவர், முதலமைச்சர், நம்பிக்கை தீர்மானத்தை ஏன் இங்கே வைக்க வேண்டுமென்றால், அதற்கு பிரத்தியேக காரணங்கள் இருக்கின்றன. சட்ட முறையாகப்





பார்த்தால், 172 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கட்சிக்கு மக்களின் பின்துணை இருக்கிறது என்பதாக நாம் கருதலாம். ஆனால், அதே சமயத்தில் மக்களின் பின்துணை இருக்கிறதா, இல்லையா என்பதை நாம் பிரத்தியேக பல காரணங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம். மக்களின் உணர்ச்சியை, நம்பிக்கையை, அளிக்கும் ஆதரவை, சட்டப்படி இன்று மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டசபை அங்கத்தினர்கள் மூலம்தான் அறியலாம் என்று இருந்தாலும் சில சமயங்களில் மக்களின் உணர்ச்சியை, நம்பிக்கையை பொது மக்களின் செயல்களிலிருந்து நாம் அறிவதற்கு வழி இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்களின் பெரும்பான்மை கொண்ட ஒரு கட்சி ஆட்சிப்பீடத்தில் இருக்கலாம் என்று இருந்தாலும் 5 ஆண்டுகளுக்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மான்டேட் ஆனது, ஆட்சிப் பீடத்தில், அவர்கள் 5 ஆண்டுகளில் எதையும் செய்துவிடலாம் என்ற அவ்விதமான ஒரு மான்டேட்டை பொதுமக்கள் கொடுத்துவிடவில்லை. ஆதலால், மக்களின் உணர்ச்சிக்கு, மக்களின் நம்பிக்கைக்கு எதிராக ஆளும்கட்சி ஆட்சி நடத்தும்பொழுது, மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்பது தான் அதன் அர்த்தம்.

இன்று, நாம் பார்க்கும்பொழுது சில உதாரணங்களை எடுத்துக் கொண்டால், ஆட்சிப் பீடத்தில் இருக்கிற அந்தக் கட்சியானது மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கிறது என்பதாக நாம் கருத முடியும். முதலாவதாக பல கட்சிகள் உடன்பாட்டின் அடிப்படையில், தேர்தலில் ஆளும்கட்சி வெற்றிபெற்றது. தேர்தலின்பொழுது ஆதரவு தந்த முக்கிய கட்சிகளின் ஆதரவை இன்றைய தினம் ஆளும்கட்சி இழந்திருக்கிறது. அவ்விதமாகப் பார்க்கும்பொழுது வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஒரு பெரும் சரிவு ஏற்பட்டிருக்கிறது, குறை ஏற்பட்டிருக்கிறது, அவர்களுடைய பின்னணியில் ஒரு மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பற்றிப் பேசியது சரி. என்னுடைய தொகுதியில் எனக்கு 40,000 பேர்கள் ஓட்டுபோட்டார்கள். ஆனால், 30 பேர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று எழுதிக் கொடுத்தார்கள். எழுதிக் கொடுத்தது முப்பதே முப்பது பேர்கள்தான். எனக்கு ஓட்டுப்போட்டது 40,000 பேர்கள். அதற்கு மேல் எழுதிக் கொடுத்தால் ராஜினாமா செய்துவிட முடியும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether there is any provision for recall of any Member, in the law which is now in force in this country ?

[1972 டிசம்பர் 8

* THE HON. THIRU SI. PA. *ADITANAR*: What I have mentioned is not about the question of recall and the hon. Member (Thiru Dennis) was not dealing with it. He was stating that there was a way to measure the voters' support. I was asking what was the method by which to measure the voters' support. 30 persons came and said that I must resign. Is that voters' support ?

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, திரு. டென்னிஸ் அவர்கள் ஒரு விவாதத்தை இங்கு எழுப்பினார்கள். அது அவருடைய வாதம் அல்ல. கம்யூனிஸ்டு கட்சியும், இந்திரா காங்கிரசும் வைத்து வருகின்ற வாதத்தினை அவர் எதிரொலித்திருக்கிறார். தேர்தல் நேரத்திலே, 1971-ம் ஆண்டு, 4, 5 கட்சிகள் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் நின்றார்கள், அதிலே கம்யூனிஸ்டு கட்சியும் இந்திரா காங்கிரசும் அவர்களை விட்டுப் பிரிந்துவிட்டது. ஆகவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ராஜினாமாச் செய்யவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். தேர்தல் நேரத்திலே அலையன்ஸ் வைத்துக் கொண்டு, தொகுதி உடன்பாடு வைத்துக் கொண்டு நின்ற கட்சிகளின் எண்ணிக்கை திராவிட முன்னேற்ற கழகம், முஸ்லிம் லீக், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்ட், இந்திரா காங்கிரஸ், பார்வார்ட் பிளாக்; திராவிடர் கழகத்தினுடைய ஒத்துழைப்பும் இருந்தது. கிட்டத்தட்ட 7 கட்சிகள் அன்றைய உடன்பாட்டிலே இருந்தன. கம்யூனிஸ்ட், காங்கிரஸ் இரண்டும் இப்பொழுது உடன்பாட்டிலே இருந்து விலகிவிட்டன. மற்ற 5 கட்சிகளினுடைய ஆதரவை இழந்த அந்த 2 கட்சிகளும் ராஜினாமாக செய்யவேண்டுமா? அல்லது இரண்டு கட்சியினுடைய ஆதரவை இழந்த 3 கட்சிகளும் ராஜினாமாச் செய்யவேண்டுமா என்பதை நான் தங்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார்:*** அதே மாதிரி, பாண்டிச்சேரி மாநிலத்திலே தங்கள் கட்சியும், சி.பி.ஐ.-யும் கூட்டாக சேர்ந்திருக்கிறது. அதைப்பற்றி தங்கள் கருத்து என்ன என்று நான் கேட்க விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** முதலில், நான் சொன்னதைப்பற்றி கருத்து அறிவித்துவிட்டால் பிறகு நான் கருத்துத் தெரிவிப்பதற்கு வசதியாக இருக்கும்.

***திரு. எ. சுவாமிதாஸ்:*** முதலமைச்சர் அவர்கள் வாதத்திற்கு இணங்க இரண்டு பேர்களுமே ராஜினாமாச் செய்வதுதான் பொருத்தம் என்று நான் கருதுகிறேன்.



1972 டிசம்பர் 8]

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** இரண்டு பேரும் ராஜினாமாச் செய்துவிட்டால் நீங்கள் தன்னிச்சையாக ராஜினாமாச் செய்தாக வேண்டும்.

***திரு. என். டென்னிஸ்:*** பல கட்சிகளின் ஆதரவின்பேரில் அவர்கள் தேர்தலில் நின்று போட்டியிட்டார்கள், அப்பொழுது மக்களின் பின்துணை அவர்களுக்கு இருந்திருக்கும். அவர்களுடைய பின்துணை எடுக்கப்பட்டுவிட்ட பிறகு வாக்கு எண்ணிக்கையில் அவர்களுக்குச் சரிவு ஏற்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சி மக்களுடைய நம்பிக்கையை இழந்துவிட்டது. இதைத்தவிர ஆளுங்கட்சியிலே ஏற்பட்ட ஒரு பிளவு காரணமாகவும் வாக்கு எண்ணிக்கையிலே அவர்களுக்கு ஒரு சரிவை ஏற்படுத்தியிருக்கிறது. 1967-ம் ஆண்டு, 1971-ம் ஆண்டு தேர்தல்களிலே அவர்களுடைய கட்சி வெற்றி பெற்றதற்கு மிகவும் முக்கிய காரணமாக இருந்த அந்தக் கட்சியின் முன்னாள் பொருளாளர் அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து மாறியிருப்பதும் வாக்காளர் எண்ணிக்கையிலே ஒரு சரிவை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. கடந்த நவம்பர் மாதம் 10-ம் தேதியன்று சென்ற ஊர்வலமும் அதை எடுத்துக் காட்டுகிறது. இந்த மாநிலம் கண்டிராத அளவுக்கு அன்றைக்கு ஊர்வலம் நடந்திருக்கிறது. நவம்பர் 15-ம் தேதியன்று நடந்த அர்த்தால் மாநில அளவில் எல்லா இடங்களிலும் நடந்தேறி இருக்கிறது, இது மக்கள் பின்துணை ஆளுங்கட்சிக்கு எதிராக போய்விட்டது என்பதைத்தான் காட்டுகிறது. ஆகவே இந்த அரசு நம்பிக்கையை இழந்துவிட்டது என்பதைத்தான் இவையெல்லாம் காட்டுகிறது. ஆதலால் மக்களின் நம்பிக்கையை ஆளுங்கட்சி இழந்துவிட்டது.

நவம்பர் 26-ம் தேதி தி.மு.க. உறுப்பினர் ஒவ்வொருவருடைய வீட்டிலும் சென்று வாக்காளர்கள் மகஜர்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் மக்களின் நம்பிக்கையை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. தி.மு.க. தலைவர்கள் எங்கே கூட்டம் போடச் சென்றாலும் போலீஸ் பந்தோபஸ்து இருந்தும் அவர்கள் கூட்டத்தை நடத்த முடியாமல் இருக்கிறது என்றால் மக்கள் பின்துணையை அவர்கள் இழந்திருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம்.

அடுத்ததாக சட்டமும் ஒழுங்கும் இந்த தேசத்தில் கெட்டுவிட்டது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க இந்த அரசாங்கம் தவறிவிட்டது. சரித்திரம் காணாத வகையில் ஒழுங்கீனம் இந்தச் சபையிலே நடந்திருக்கிறது. சட்ட சபையிலே இப்படி நடந்திருக்கிறது என்றால் வெளியிலே என்ன நடக்கும்? மக்கள் நன்றாக அறிவார்கள்; மாநிலத்தில் எல்லா இடங்களிலும் சட்டமும், ஒழுங்கும் நிலைகுலைந்து இருக்கிறது.

சென்னை நகரத்திலே மாத்திரம் 1972-ம் ஆண்டில் 365 நாட்களில் 60 நாட்கள் தவிர மற்ற எல்லா நாட்களிலும் போலீஸ் தடை இருந்து இருக்கிறது. இதுபோன்ற தடை உத்திரவுகள் மாநிலத்தில் உள்ள எல்லா இடங்களிலும் இருந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது தடையுத்திரவு மூலம்தான் ஆட்சியை நடத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு ஆண்டில் 1972-ம் ஆண்டில் நடத்தப் பட்ட போலீஸ் தடியடிகள், கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம் எந்த ஆண்டிலும் நடந்ததாகத் தெரியவில்லை. கடந்த அக்டோபர் மாதத்திலே மாத்திரம் ஐந்து இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. சமூகத் தினரில் எந்தப் பிரிவினரும் விட்டுவைக்கப்படவில்லை. தொழிலாளர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய யாவரும் போலீசின் அடக்குமுறைக் கொடுமைக்கு விட்டுவைக்கப்படவில்லை. மாணவர்கள் நான்கு பேர்கள் இறந் திருக்கிறார்கள். விவசாயிகள் போராட்டத்தின் போது முத்துக்குமாரசாமி என்ற மாணவர், கண்ணமங்கலத்தில் சிவசங்கரன் என்ற மாணவர், திருநெல் வேலியிலே பார்த்தநாதன், அண்ணாமலையிலே உதயகுமார் ஆகிய மாணவர்கள் இறந்திருக்கிறார்கள். ஆகவே எந்தப் பிரிவினரும் போலீஸ் அடக்குமுறைக்கு விட்டுவைக்கப்படவில்லை. தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் போலீஸ் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பொது மக்கள் யாவரும் அறிந்திருக்கிறார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்னால் நடந்த திருச்சி சம்பவத்தைப்பற்றி யெல்லாம் இங்கே யெடுத்துச் சொல்லப்பட்டது. ஆதலால் அவற்றைக் கூற நினைக்கவில்லை. மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், போலீஸ் அடக்குமுறைக்கு ஆளாகிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் மிக அதிகமாக இன்றைக்கு உபயோகப்படுத்தக்கூடிய வார்த்தை 'ஊழல்'. அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய வேண்டும். தீ இல்லாமல் புகை வராது. மக்கள் கண் கொண்டே பார்த்துக் கொண்டிருக்கும், மக்கள் அன்றாடம் அனுபவித்துக் கொண்டு இருக்கும் ஒரு நிலைமை. மக்கள் இதன் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசின் நிர்வாக இயந்திரத்தை ஆளுங் கட்சி யிலுள்ள தொண்டர்கள், தலைவர்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசியலைக் கட்சித் தொண்டர்கள் லாபகரமாகப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்பு கிறேன்.





இந்தக் குற்றச்சாட்டுகளை ஆளுங்கட்சியோடு பல ஆண்டுகளாக இருந்தவர், ஆளுங்கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்டவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்; அவர் குற்றஞ்சாட்டினார் என்பதற்காக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மக்கள் மன்றத்தில் அவர் எழுப்பியிருக்கின்ற குற்றச்சாட்டு பிரதிபலிக்கிறது. நான் உள்கட்சி விவகாரத்தில் தலையிட விரும்பவில்லை. மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் எழுப்பிய பிரச்னை அரசியல் தலைவர்கள் இதுவரையில், குறிப்பாக தலைவர் காமராசர் அவர்கள் ஊர் ஊராகச் சில ஆண்டுகளாகவே எழுப்பிக் கொண்டிருக்கின்ற ஒரு பிரச்னை என்பதை நான் இந்தச் சந்தர்ப் பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிறிய உத்தியோகங்களும் அமைச்சரவையின் லிஸ்ட் சிபாரிசின் அடிப்படையிலே கொடுக்கப்படுகிறது. கட்சித் தொண்டர்கள் நன்கொடை வாங்கிக் கொண்டு லிஸ்டு கொடுக்கிறார்கள். அந்த லிஸ்டை பெற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் வேலைக்கு அமர்த்து கிறார்கள் என்பதாகச் சொல்லப்படுகிறது . . . .

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நன்கொடை வாங்கிக் கொண்டு லிஸ்டைக் கொடுத்தார்கள் அமைச்சர்கள் (குறுக்கீடு) தொண்டர்கள் என்று சொல்கிறார்கள், யாருக்கு எந்த இடத்தில் என்று தெரிவித்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். டென்னிஸ் :** நியமனங்களுக்காகக் கட்சித் தொண்டர்கள் அமைச் சரிடத்தில் கொடுக்கின்றதான லிஸ்ட்—பெயர்கள்—அவர்கள் பணம் பெற்றுக் கொண்டு கொடுப்பதாகப் பொதுமக்கள் கூறிக்கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல பக்கங்களைக் கொண்ட ஊழல் பட்டியலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினரும், கம்யூனிஸ்ட் கட்சி யினரும் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி மிகவும் விஸ்தாரமாக இங்கே டில்கல் செய்யப்பட்டது. ஊழல்களுக்குப் பதில் அளிப்பதில்—அவற்றில் சார மில்லை யென்றால்—ஏன் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த் தால் அந்தப் பட்டியலில் சாரம் இருக்கிறது என்பதுதான் அர்த்தம். எந்தக் காரியத்திற்கும் பதில் எழுதிவிடலாம். ஆனால் அது உண்மையான பதிலாக இருக்க வேண்டுமென்பதுதான் நாம் கைக்கொள்ள வேண்டிய கடமையாகும்.

இன்னும், திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் வீடுகளில் கறுப்புப் பண வேட்டை பல தடவைகள் நடந்திருப்பதாகப் பத்திரிகை களின் மூலம் யாவரும் அறிவோம்.

**திரு. என். கணபதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாராளுமன்றத் தில் கறுப்புப் பண வேட்டையைப்பற்றி ஒருநேரத்தில் கேள்வி வந்தபொழுது

கறுப்புப் பண வேட்டை நடைபெற்றதாக அங்கே அமைச்சர் தகவல் தரவில்லை. ஏதோ எம்.எல்.ஏ. வீட்டில், பெயர்கூடக் குறிப்பிடாமல்தான் சொன்னதாக எனக்கு ஞாபகம். ஆனால் இங்கே பேசும் உறுப்பினர் ஏதோ ஆட்சிக்குச் சம்பந்தப்பட்ட பலருடைய வீட்டில் கறுப்புப் பண வேட்டை நடந்ததாகக் கருத்தைச் சொன்னார்கள். அது தவறான கருத்தாகாதா என்பதைத் தாங்கள் தயவு செய்து கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். டென்னிஸ் :** பத்திரிகைகளில் படித்தேன் என்பதாகத்தான் கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பத்திரிகைச் செய்திகளைக் கூடிய வரையில் தவிர்க்க வேண்டும்.

**திரு. என். கணபதி :** துணைத் தலைவரவர்களே, பத்திரிகைகளில் பல செய்திகள் வருகின்றன. புதிய கட்சியை ஸ்தாபன காங்கிரஸ் கட்சி ஆதரிப்பதற்காக ஏதோ கைக்கூலி பெற்றுக் கொண்டுள்ளதாகச் செய்தி வந்திருக்கிறது, பொது மக்களும் பேசிக் கொள்ளுகிறார்கள், அது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தங்கள் கட்சியின் சார்பாக, கைக்கூலி பெற்றுக் கொண்டதாக நிரூபிக்க ஒரு கமிஷன் நிறுவினால் நாங்கள் இல்லை என்று நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். நீங்கள் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. என். கணபதி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, எதற்கெடுத்தாலும் கமிஷன் கமிஷன் என்று கேட்பதுபோல் இதற்குக்கூடக் கமிஷனைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எ. சுவாமிதாஸ் :** தலைவரவர்களே, எங்களுக்குத் தெரிந்த சில கருத்துக்களை இந்த மன்றத்தில் வைப்பது, நீங்கள் அதற்குரிய ஆதாரங்களோடு தெளிவுபடுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் வைக்கிறோமே தவிர வேறு அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, திராவிட முன்னேற்ற கழகத் தொண்டர்களின் வீடுகளில் கறுப்புப்பண வேட்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் வந்ததைப் பொதுமக்கள் நம்புகிறார்கள் என்பது திரு. டென்னிஸ் அவர்களது வாசகத்தின் கருத்து. இது சுலபமான வேலை. நாளைக்கு, காங்கிரசுக்கு எதிராக உள்ள பத்திரிகைகளில்—



எந்தக் காங்கிரசாக இருந்தாலும், அந்தப் பத்திரிகைகளில்—காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களின் வீடுகளிலே கறுப்புப் பண வேட்டை நடந்ததாகச் செய்திகளைப் போட்டு, அதைச் சட்டசபையில் சொல்லி, அதற்குப் பொறுப் பேற்றுக் கொள்ள மறுத்து, இப்படி காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் வீடுகளில் கறுப்புப் பண வேட்டை நடந்ததாகப் பத்திரிகைகளில் போட்டிருக்கிறார்கள் என்று பேசுவது சுலபம். அந்தச் சுலபமான வழியை விட்டுவிட்டு, கொஞ்சம் கடினமான வழியில் நடக்க, உண்மைகளை வெளியே கொண்டுவர வேண்டுமென்று உண்மையாக நோக்கமிருந்தால், கொஞ்சம் கடுமையான வழியில் நடக்கவும், அதிலே வருவதை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

**திரு. என். டென்னிஸ் :** கன்யாகுமரி மாவட்டத்தில் 'லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டி' என்று ஒரு சொசைட்டி அமைக்கப்பட்டிருப்பதாக, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்களில் ரிப்போர்ட் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த 'லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டி' எங்கேயிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது அப்படி ஒரு லிப்ட் இர்ரிகேஷன் சொசைட்டி இருந்ததாகவோ, அதில் அங்கத்தினர்கள் இருந்ததாகவோ காண முடியாது. ஆனால் பேப்பர் டிரான்சாக்ஷன் மூலமாகக் காரியங்கள் நடந்திருப்பதாக நாம் அறிய முடியும். டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில், இது எங்கே இருக்கிறது, ஸ்பெசிபிக்காக அந்த சொசைட்டி எங்கேயிருக்கிறது என்று கேட்டால் அதற்கு அங்கத்தினர்கள் இருக்கமாட்டார்கள், அது எங்கேயிருக்கிறது என்று தெரியாது.

இன்னும் பார்த்தால், ஸ்பெசிபிக்காகச் சொன்னால், கிள்ளியூர் வட்டாரத்தில், லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டி இருக்கிறது. அதற்குத் தலைவராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாலஸ் என்ற ஒருவர் இருக்கிறார்கள். அந்த சொசைட்டிக்கு வேலை காண்டிருக்ட் எடுப்பதில் கன்செக்ஷன் கிடைக்கிறது. அந்த கன்செக்ஷனைப் பயன்படுத்திக் கொண்டு லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டி என்ற பெயரில் வேலை காண்டிருக்டிற்கு விண்ணப்பித்து அவர்கள் வேலைகளைப் பெற்று, பொதுமக்களுக்கு, தொழிலாளர்களுக்குப் பயன்படாத அளவில் வேறு காண்டிருக்டர்களுக்கு அதை விற்று ஊதியம் பெறுவதான செய்தியை பொதுமக்கள் யாவரும் அறிவார்கள்.

அடுத்து, இந்த அமைச்சரவை வேலையில்லாத் திண்டாட்டத்தையும், விலைவாசி உயர்வையும் தடுக்கத் தவறிவிட்டது. விலைவாசி உயர்வைத் தடுக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கவும் உருப்படியான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கவில்லை.

[திரு. என். டென்னிஸ்] [1972 டிசம்பர் 8

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பார்த்தால் முன்பு தொழில் அமைதி உள்ள மாநிலமாக இருந்து வந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழிலதிபர்கள் பல தொழிற்சாலைகளை யெல்லாம் ஸ்தாபித்தார்கள். ஆனால் இன்றைய தினம் தொழிலமைதி கெட்டு, தொழில் வாய்ப்புக் குன்றிய நிலையில் இருக்கிறது.

விவசாயிகள்மேல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. பள்ளிகளில் மாணவர்களின் படிப்பு மிக பாதிக்கப் பட்டிருக்கிற நிலை இருக்கிறது. மக்களுக்கு வசதி கொடுக்கப்படாமல், மக்களின் மேல் பெரிய வரிகளையெல்லாம் அரசாங்கம் விதித்துக் கொண்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன்னால் 200 கோடி ரூபாயாக இருந்த வரி இன்றைக்கு 400 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆனால் மக்களுக்கு வசதி கொடுக்கப் பட்டிருக்கிறதா என்றால் அதுதான் இல்லை. விற்பனை வரி மட்டும் சுமார் 48 கோடி ரூபாயாக இருந்தது இன்றைக்குச் சுமார் 104 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இன்னும் ஆட்சியாளர் எப்படியாவது வருமானத்தை உயர்த்த வேண்டுமென்ற நிலையில் ஆட்சி நடத்துகிறார்கள். ஆனால் மக்களுக்கு வசதிதான் பெருகவில்லை.

மதுவிலக்கை இந்த அரசு ரத்து செய்திருக்கிறது. லாட்டரி சீட்டு என்ற வகையில் சூதாட்டம் தொடர்ந்து நடக்கிறது. எந்த வகையிலேயாவது அரசுக்கு வருமானம் வர வேண்டுமென்பதாகத்தான் இந்த அரசு செயல்படுகிறது. சூதாட்டத்திற்கு வசதியளித்த ஒரு சர்க்காரிடமிருந்து, மதுவிலக்கை நீக்கிய ஒரு சர்க்காரிடமிருந்து சீரான ஆட்சியை நாம் எதிர்பார்க்க முடியாது.

அடுத்து, இன்றைக்குக் கட்சிக்காக ஆட்சி நடத்தப்படுகின்றது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மக்களின் நலன்களுக்காகப் பல திட்டங்களைத் தீட்டி ஆட்சி நடத்தினார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பல அணைக்கட்டுகளைக் கட்டி வைத்தார்கள். பல ஆலைகள் திறக்கப்பட்டன. வயோதிகர்களுக்குப் பென்ஷன் அளிக்கப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. வரையில் இலவசப் படிப்புக் கொடுக்கப்பட்டது. ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது கட்சிக்காக ஆட்சி, கட்சித் தொண்டர்களை வளர்ப்பதற்காக ஆட்சி நடத்தப்படுகிறது.

மக்களைப் பாதிக்கக்கூடிய தவறான நடவடிக்கைகளை எடுத்துவிட்டு, அவைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பல தவறான விளக்கங்களை ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் கொடுக்கிறார்கள் என்பதை உதாரணத்தின் மூலமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, அவர்களே மது அருந்தக் கூடாது என்பதற்கு ஒரு குழுவையும் அமைத்திருக்கிறார்கள்.



1972 டிசம்பர் 8] [திரு. என். டென்னிஸ்]

பஸ் கட்டணங்களை உயர்த்திவிட்டு அதை கேட்ட நேரத்தில், கட்டணத்தை உயர்த்தவில்லை, ஆனால் பஸ் கட்டணங்கள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இவைகளை யெல்லாம் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அறிவார்கள். இதுபோல் அண்ணாமலையில் மாண்டவர் உதயகுமார் அல்ல என்று தகப்பன்கூடச் சொல்லக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால் கமிஷன் அதற்குச் சரியான தீர்ப்பைக் கூறி உண்மையை தெரிவித்திருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

விவசாயப் போராட்டக் காலத்தில் துப்பாக்கிக்குப் பலியானவர்கள் ஒரு புறமிருக்க, வன்முறைக் கண்டன நாள் என்பதாக ஏற்படுத்தி மக்களைத் திசை திருப்பும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினார்கள். இவ்விதமாக மக்களின் பின்துணையை இந்தச் சர்க்கார் இழந்திருக்கிறது. மக்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்டிருக்கிறது, மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கிறது என்பதாக நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் தொடக்கத்தில் சொன்ன கருத்தை, அதாவது இந்தச் சபையில் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் அரசின் பக்கம் இருந்தாலும் மக்கள் தான் 'அட்டிமேட் சாவரின்' என்பதாக டைய்சி அவர்கள் கூறியிருப்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

Parliament is from a merely legal point of view the absolute sovereign of the British Empire. Since every act of the Parliament is binding on every court through out the British Dominions and every court through-out the British Dominions and no rule whether of morality or law which contravence an act of Parliament, binds any court through-out this realm. But if Parliament be in the eye of law a Supreme legislature, the essence of representative Government is that the legislature should represent to give effect to his will of the political soverign, i.e. of the electoral body or of the nation.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : கூட்டுறவைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். கூட்டுறவுக் கழகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் எதுவாக இருந்தாலும் பத்துப் பேர் கையெழுத்துப் போட்டால் அதைப் பதிவு செய்தாக வேண்டும். கூட்டுறவுப் பண்டகசாலையாக இருக்கட்டும், கூட்டுறவு விற்பனைக் கழகமாக இருக்கட்டும், கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகமாக இருக்கட்டும், கூட்டுறவு எஞ்சினியரிங் கழகமாக இருக்கட்டும், எந்தக் கூட்டுறவுக் கழகமாக இருந்தாலும் பத்துப் பேர் கையெழுத்துப் போட்டவுடன் ரிஜிஸ்டர் செய்து விடுகிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு லேபர் காண்ட்ராக்ட் சொசைடி செயல்படவில்லை என்று சொன்னார்கள். எந்த சொசைடியாக

இருந்தாலும் பதிவு செய்வதைத் தடுக்க அரசுக்கு அதிகாரம் இல்லை. பதிவு செய்த பிறகு ஒரு வருஷம் செயல்படாமல் இருந்தால் பதிவை அரசாங்கம் ரத்து செய்கிறது. மாண்புமிகு டென்னிஸ் அவர்கள் எந்தக் கூட்டுறவுக் கழகம் செயல்படாமல் இருக்கிறது என்று தெரிவித்தால் அதை ரத்து செய்யத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சொ. காவேரிமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் டாக்டர் முதல்வர் அவர்கள் கொண்டு வந்த நம்பிக்கைத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1971-ம் ஆண்டு தமிழக மக்களுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்று இந்த அரசினுடைய பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த அரசு செய்துள்ள நல்ல காரியங்களை இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக, பத்தாண்டுகளுக்கு முன்னால் இல்லாத பலவிதமான சீர்திருத்தங்களையும், பொதுமக்களுடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்ற பல திட்டங்களையும் இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோமானால் கிராமங்களானாலும் சரி, பேரூராட்சி மன்றங்களானாலும் சரி, அல்லது மற்ற எந்தப் பகுதிகளிலானாலும் சரி, மாதம் ஒருமுறை மனுநீதி நாள் திட்டத்தை அமல்படுத்தி அந்த மனுநீதி நாளில் என்னென்ன குறைகள் பொதுமக்களிடத்தில் இருந்து தெரிவிக்கப்படுகிறதோ அந்தக் குறைகள் எல்லாம் முறையாகவும், செம்மையாகவும் தீர்க்கப்படுகிறது என்பது இந்த அரசின் ஆட்சிக் காலத்திலேதான் என்பதை இங்கு தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; ஊராட்சி மன்றங்களை உள்ளடக்கிய ஒன்றியங்களின் மூலமாக இந்த அரசு எந்த அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள், தொழிலாளப் பெருங்குடி மக்கள், மற்ற இனத்தைச் சார்ந்தவர்களுக்கு அவ்வப்போது நன்மைகளைச் செய்து வருகிறது என்பதை இங்கு அதிகம் குறிப்பிடத் தேவையில்லை. குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான பொறுக்கு விதைகள், பூச்சிகொல்லி மருந்துகள், பலவிதமான சாதனங்கள் ஒன்றியங்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் இந்த நாட்டில் படித்துப் பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கக்கூடிய பட்டதாரிகளுக்கும், அதுபோன்று ஆசிரியப் பெருமக்கள் அத்தனை பேருக்கும் எந்தெந்த முறையில் வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமோ அந்தந்தத் துறைகளில் எல்லாம் வேலை வாய்ப்புத் தந்துகொண்டு வருகிறது.



இவ்வளவு ஒழுங்காகக் காரியமாற்றி வரும் இந்த அரசை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று ஒருசிலர் கோருகிறார்கள் என்று முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். ஏதோ மாலை 6 மணிக்கு ஆரம்பித்து இரவு பத்து மணிக்கு முடிகிற சினிமாவைப் பார்க்க முடியும். அந்தச் சினிமாவில் நடைபெறுகிற நிகழ்ச்சியைப் போல் இந்த அரசை மாற்றிவிட வேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 6½ மணிக்கு ஆரம்பிக்கிற சினிமாவில் பெரிய சரித்திரத்தையே காட்டிவிடுவார்கள். அல்லது பெரிய அரசைப் பற்றி பல குறைகளை எல்லாம் சுட்டிக்காட்டிப் போராட்டங்களை ஏற்படுத்தி கடைசியில் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விடுவார்கள். அப்படி மூன்றரை மணி நேரத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சியைப் போல் இந்த அரசின்மீது இல்லாததையும், பொல்லாததையும், தேவையற்றதையும், தெளிவற்றதையும் ஊழல்கள் என்ற முறையில் கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வருவாய்த் துறையாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அந்தந்தத் துறைகள் ஆற்ற வேண்டிய பணிகளை எந்த அளவுக்குச் சிறப்பாகச் செய்து வருகிறது என்பதை மற்ற மாநிலத்திலிருந்து வருகின்றவர்கள், மத்திய அமைச்சர்கள் எல்லாம் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள் என்பதை இங்கிருக்கக்கூடிய மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களும் உணர வேண்டுமென்பதைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பிற்பட்ட நலத்துறைக்கென தனியாக ஒரு அமைச்சரை நியமித்து பிற்பட்டோர் நலன்களைப் பாதுகாக்கவும் அதே சமயத்தில் அவர்களுடைய மேம்பாட்டைக் கவனத்தில் கொண்டு தக்க முறையில் முன்னேறச் செய்யவும் இந்த அரசு மிக முனைந்து பாடுபடுகிறது என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தியைப் பார்த்தேன். அதிலே என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை இங்கே உதவி சபாநாயகர் ஒப்புதலோடு கூற விரும்புகிறேன். ஆல் இந்தியா பாக்வார்டு கிளாஸ் பெடரேஷனில் இருக்கக்கூடியவர்கள் ஒன்றாகக் கூடி—அதிலே கலந்து கொண்டவர்கள் ரொம்ப முக்கியமானவர்கள், மத்திய துணை அமைச்சர் ஒருவரும் கலந்து கொண்டிருந்தார்—கடைசியில் எடுத்த முடிவு என்னவென்றால் கடந்த 25 ஆண்டுகளாக பிற்பட்டவர்களுக்கு எந்தவிதமான

நன்மையும் செய்யவில்லை என்பதாகும். அதற்கான திட்டங்களைப் பற்றி மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களிடத்தில் சொல்ல வேண்டுமென்றும் முடிவெடுத்தார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? 25 ஆண்டுக் காலமாக இந்த அகில பாரதத்தில் பிற்பட்டவர்களுக்கு எந்த விதமான நன்மையும் செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் தமிழகத்தில் நிச்சயமாக அந்த நிலைமை இல்லை என்பதைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அதற்கென்று தனித் துறையை வைத்துப் பிற்பட்டவர்கள், அரிசனப் பெருங்குடி மக்கள் ஆகியவர்களுக்கு என்னென்ன சேவைகள் செய்ய வேண்டுமென்பதை ஆராய்ந்து செய்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சமீபத்தில்கூட பிற்பட்டவர்கள் அரிசன மக்கள் படிக்கக்கூடிய பள்ளிகளில் எட்டாவதில் இருந்து இறுதி வகுப்பு வரை படிக்கக்கூடியவர்களில் அதிகமான மார்க்குகள் பெற்றவர்களில் 300 பேர்களை—கிராமங்களில் இருப்பவர்களானாலும் சரி, மற்றப் பகுதிகளில் இருப்பவர்களானாலும் சரி, சென்னை மாநகரத்திற்கு அழைத்து வந்து பிரசிடென்சி காலேஜ் விடுதியில் தங்க வைத்து சென்னை மாநகரத்திலுள்ள முக்கியமான பகுதிகளைக் காட்டுவதோடு, ஆங்கிலப் பேராசிரியர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள், மற்ற ஆசிரியர்களோடு உரையாடச் செய்து தெளிவு விளக்கம் பெறுவதற்கெல்லாம் வழி செய்திருக்கிறார்கள். இதற்காக 40,000 ரூபாயை இந்த அரசு செலவழித்திருக்கிறது என்றால் எந்த அளவுக்கு அவர்களுடைய மேம்பாட்டில் இந்த அரசு அக்கறை செலுத்துகிறது, கவனம் செலுத்துகிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, எந்தத் துறையானாலும் சரி, அந்தத் துறையில் தெளிவுபட இந்த அரசு தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

(திரு. என். கணபதி—தலைமை)

இவ்வளவு செய்த பிறகும் பொதுமக்கள் அத்தனை பேரையும் ராஜினாமாச் செய்யச் சொல்லுகிறார்கள், ராஜினாமாச் செய்யச் சொல்லுகிறார்கள் என்று இங்கே இருக்கக்கூடிய மாற்றுக் கட்சியைச் சேர்ந்த மெம்பர்கள், குறிப்பாக பெருமதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள் என்றால் அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

ஏறத்தாழ 150 உறுப்பினர்கள் நாங்கள் இங்கே அமர்ந்திருக்கிறோம். இந்த 150 பேர்களும் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு இந்த





மன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. அந்தந்த தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதிகளிலுள்ள பொதுமக்களை ஒவ்வொரு நாளும் சந்தித்து, ஏறத்தாழ 100, 150 பேர்களைச் சந்தித்துக் கொண்டுதானிருக்கிறோம். அவர்கள் சொல்கிற குறைகளை, அவர்கள் கொடுக்கிற வேலைகளை செய்து கொண்டு தானிருக்கிறோம். ஏதோ செல்வாக்கை இழந்துவிட்டோம், பொதுமக்கள் அத்தனை பேர்களும் மாறிவிட்டார்கள், அவர்கள் எண்ணம் எல்லாம் மாறி விட்டது, ஆகவே நீங்கள் ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று சொல்வது ஏதோ ஒரு கற்பனை ஓட்டமே தவிர, ஒரு கற்பனைக் கதையே தவிர, இல்லாத ஒன்றைக் கூறுகிறார்களே தவிர, எங்களுக்குப் பொதுமக்களிடம் தொடர்பு இல்லை, பொதுமக்கள் எங்களைக் கண்டவுடன் அருவருப்புக் கொள்கிறார்கள், எங்களைப் பார்ப்பது கூட பாவம் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பது போன்ற வேண்டாத வாசகங்களை, இல்லாததை இங்கு திரித்துக் கூறுகிறார்களே தவிர நாங்கள் தினம் தினம் பொதுமக்களைப் பார்த்து கொண்டுதான் இருக்கிறோம், அவர்கள் எண்ணங்களைக் கண்டுகொண்டுதான் இருக்கிறோம், அவர்களின் கருத்துக்களைப் புரிந்துகொண்டுதானிருக்கிறோம். அவர்கள் எங்களோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு மாற்றுக் கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் ஏதோ பத்து அல்லது பதினைந்து பேர்கள் சினிமாவில் நடிப்பதைப் போல், அங்கு ஏற்படுகிற சண்டை குத்து போல், அங்கு ஏற்படுகிற நிகழ்ச்சிகள் போல், அங்கு ஏற்படும் மாற்றங்கள் போல், அங்கு ஏற்படுகிற நிகழ்ச்சிகளைப் போல் நடக்க விரும்புகிறவர்கள், அதை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக ஏமாற்றம் அடைவார்கள் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நம் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கக் கூடிய இந்த அரசு ஏழை எளியவர்களுடைய அரசு, விவசாயப் பெருங்குடி மக்களின் அரசு, நடுத்தர மக்களின் அரசு என்பது மட்டுமல்ல, இந்த நாட்டுக்கு எவை எவை தேவை என்பதைக் கண்டு பணியாற்றக்கூடிய செம்மையான அரசு என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எந்தத் துறையானாலும் சரி, சாதாரணத் துறையானாலும் சரி எந்தத் துறையிலும் நல்ல பெயர் எடுக்க வேண்டும், மக்களுடைய உள்ளங்களைக் கவர வேண்டும், அவர்களைத் தங்கள் பக்கத்திற்குத் திருப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு பாடுபடுகிற இந்த அரசை பொதுமக்கள் பாராட்டுகிறார்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் வரவேற்கிறார்கள், தொழிலாளப் பெருமக்கள் தங்களுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக்

கொண்டிருக்கிறார்கள் என்று கூறி இந்த நம்பிக்கை உள்ள தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. எ. வகாப்:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அன்றைய சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் ஒரு அசாதாரண சூழ்நிலையில் கூடிய சட்டமன்றம் ஒரு அசாதாரண சபாநாயகருடைய தலைமையில் ஒரு அசாதாரண நிலையை இந்த நாட்டில் உண்டாக்கிவிட்டு இன்றையதினம் ஒரு அசாதாரண தீர்மானம் இந்த மன்றத்தில் வருகிற அளவிற்கு ஆக்கியிருக்கிற நிலையைக் காணும்போது—இங்கு சட்டத்தை உணர்ந்த வல்லுநர்கள் எல்லாம் பேசினார்கள், வக்கீல்கள், டாக்டர்கள் எல்லாம் பேசினார்கள், என்னைப் போன்ற சாதாரணமானவர்களும் இன்று பேசுகிறோம். சட்டப் பிரச்னைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்து அலசிப் பார்த்து இங்கு சொன்னார்கள்—அன்றைய தினம் இருந்த சபாநாயகர் செய்தது சரியான முறை அல்ல என்று கூறிய நேரத்தில் மக்கள் மன்றம் என்ன நினைக்கிறது என்பதை நினைக்க மற்றவர்களுக்கு உரிமை இல்லையா? நீங்கள் எண்ணிக் கொண்டிருப்பதைப் போல் மக்கள் ஒன்றும் அறியாதவர்கள் அல்ல, இந்த நாட்டு மக்கள் மன்றம் விரைவில் உண்மை நிலையை காட்டத்தான் போகிறது.

இங்கு பேசிய மாற்றுக் கட்சி நண்பர்களுக்கு ஒரு எண்ணம். இன்றைய தினம் முஸ்லிம் லீக் எதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தை இத்தனை ஆழமாகவும் அதிகமாகவும் ஆதரிக்கிறது, ஏன் அப்படி அவ்வளவு ஆதரவு கொடுக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட கொஞ்சம் எரிச்சலோடு என்றுகூடச் சொல்லலாம். அதை அன்றையதினம் சட்டமன்றத்தில் சுட்டிக் காட்டினார்கள். நாங்கள் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கக் கூடிய இந்த ஆட்சியை தாஜா செய்வதாக அல்லது காக்காய்பிடிப்பதாகச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை நாங்கள் யாரையாவது தாஜா செய்வதாக இருந்தால் அதைப் பெருமையோடு ஏற்றுக்கொள்கிறோம். ஏனெனில் நாங்கள் செய்கிற தாஜா உண்மைக்குச் செய்கிற தாஜாவாகும். நாங்கள் யாரையாவது பாராட்டுகிறோம் என்றால் அது ஒரு தாய் தன் குழந்தையைப் பாராட்டுகிற தன்மையில் உள்ள பாராட்டாகும். ஒரு தாய் தன் குழந்தையைப் பாராட்ட உரிமை பெற்றிருப்பதுபோல் குழந்தை தவறு செய்யும்போது கண்டிக்கவும் உரிமை பெற்றிருக்கிறாள். அந்த உரிமையோடுதான் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு முஸ்லிம் லீக் கூட்டு சேர்ந்திருக்கிறது. தாஜா செய்வதாக அவர்கள் எந்த எண்ணத்தோடு சொல்லியிருந்தாலும் சரி உண்மையில் நல்ல காரியங்களைச் செய்கிறவர்கள் யாராக



யிருந்தாலும்சரி அவர்களைப் பாராட்ட முஸ்லிம் லீக் என்றைக்குமே பின்வாங்கியதில்லை, பின்வாங்கப் போவதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், என்ன பாரம்பரியம் என்று கேட்கலாம். இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்பிக்கைத் தீர்மானம் ஒன்றினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு சட்டமன்ற விதிகளில் இடம் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் எந்த விதிமுறையின்கீழ் இந்த நாட்டின் மூதறிஞர், இந்த நாட்டின் பேரறிஞர் என்று போற்றப்படுகிற ராஜாஜி அவர்கள் இம்மாதிரியானதொரு தீர்மானத்தை 1952-ல் இந்த மன்றத்தில் கொண்டுவந்தார்களோ அதையொட்டித்தான் இன்று இந்த நம்பிக்கைத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது அந்த பாரம்பரியத்தின் அடிப்படையில்தான் முஸ்லிம் லீக் அன்றையதினம் ராஜாஜி அவர்களுக்குச் சரியான மெஜாரிட்டி இல்லாத நேரத்தில் அவர்களுக்குக் கைகொடுப்பதற்கான முறையில் நோய் வாய்ப்பட்ட தன் கட்சி உறுப்பினரை டோலியில் கொண்டுவந்து சட்டமன்றத்தில் அமர்த்தி ராஜாஜி அவர்களுக்காக வோட் அளிக்க வேண்டுமென்ற அந்த பாரம்பரியத்தின் அடிப்படையில்தான் இன்றையதினம் நாங்கள் இந்த நம்பிக்கைத் தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்கிறோம் என்பதை மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில் ஒரு அமைதியான ஆட்சி ஏற்பட வேண்டும், ஒரு நிலையான ஆட்சி இருக்க வேண்டும், இந்த நாட்டின் நிர்வாகத்திற்கு சீர்கேடு ஏற்படக் கூடாது என்ற அடிப்படையில் பார்க்கும்போது, ஒரு நல்ல ஆட்சியை யார் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை முஸ்லிம் சமுதாயத்திற்கோ அல்லது லீகிற்கோ ஏற்படுகிறதோ அதற்கு ஆதரவளிக்கும் வகையில் அந்தப் பாரம்பரியத்தின் அடிப்படையில்தான் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு, கலைஞர் தலைமையில் இயங்கக்கூடிய அரசுக்கு ஆதரவு தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதற்குப் பதிலாக நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அமைதி கெட்டுப் போகிற நேரத்தில் ஒரு நிலையான ஆட்சி ஏற்பட வேண்டுமென்று எங்கள் தலைவர் முடிவு எடுத்திருக்கிறார்கள். காமராஜ் அவர்களை குடியாத்தம் தேர்தலில் ஆதரித்து வெற்றி பெறச் செய்திருப்பது முஸ்லிம் லீக் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த நேரத்தில் இந்த நாட்டுக்கு அப்படிப்பட்ட ஒரு தலைவர் தேவை என்பதை உணர்ந்த காரணத்தினால் அன்றையதினம்

காமராஜ் அவர்களுக்கு முஸ்லிம் லீக் ஆதரவு கொடுத்தது. கேரளாவில் சிக்கல்கள் ஏற்பட்டபோது காங்கிரஸை ஆதரித்தோம், கம்யூனிஸ்ட்களை ஆதரித்தோம், பிறகு இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆதரித்தோம் என்று சொல்லும்போது ஒரு நிலையான ஆட்சி ஏற்பட வேண்டும், மக்களிடையே குழப்பங்கள் ஏற்படக் கூடாது, குழப்பங்கள் நீக்கப்பட வேண்டும், மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கப்படுகிறது என்றால் கேரளாவில் மட்டுமல்ல. இந்தியத் துணைக்கண்டத்திலிருக்கிற அத்தனை மாநிலங்களிலும் குழப்பங்கள் ஏற்படுகிறபோது நிலையான ஆட்சியை யார் ஏற்படுத்த முடியுமோ அவர்களுக்கு எங்கள் ஆதரவை, தார்மீக ஆதரவு மட்டுமல்ல, மனப்பூர்வமான ஆதரவை, பூர்ண ஆதரவை கொடுக்க எங்கள் தலைவர் காய்தே மில்லத் அவர்கள் என்றுமே பின்வாங்கியதில்லை. அந்தப் பாரம்பரியத்தை யொட்டித்தான் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எங்கள் ஆதரவைத் தருகிறோம்.

அதுமட்டுமல்ல. பிளவு என்பது இன்று எல்லாக் கட்சிகளிலும் இருப்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். பிளவு ஏற்படுவது நல்லது என்று கூட நான் சொல்லிக் கொள்வேன். வளர்ந்து வருகிற கட்சிகளில் பிளவு ஏற்படுவது போன்ற ஒரு நிகழ்ச்சி. கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. மா சே துங்-க்கு ஆதரவாக இருப்பவர்கள், ரஷ்யா பக்கத்திற்கு ஆதரவு கொடுக்கக்கூடியவர்கள் என்று இப்படி இரண்டாகப் பிளவுபட்டது. அது போன்றதொரு நிலைமை ஏற்பட்டு காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டதையும் நாடு உணர்ந்து கொண்டிருக்கிறது. காங்கிரசில் பிளவு ஏற்பட்டு இரண்டு கட்சிகளாகப் பிரிந்தபோது இந்த நாட்டில் யார் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்கள் தலைவர் காய்தே மில்லத் அவர்களுக்கு இருந்ததோ அந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு ஆதரவு அளிக்க எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். எங்கள் சமுதாயத்திற்குக் கட்டளையிட்டார்கள். அதன் காரணமாக இன்றையதினம் இந்திய துணைக் கண்டத்தில் ஒரு நிலையான ஆட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்காக முஸ்லீம்களின் பெருவாரியான ஓட்டுகள்தான் காரணம் என்பதை ஜன சங்கத் தலைவர்களே ஒப்புக்கொள்ளும் அளவிற்கு எங்கள் ஆதரவு அளிக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய ஜனாதிபதியாக வீற்றிருக்கும் பெருமதிப்பிற்குரிய கிரி அவர்களின் தேர்தல் நடந்தபோது திராவிட முன்னேற்றக் கழகமும், முஸ்லிம் லீகும் ஓட்டளித்து இருக்கவில்லையென்றால், அவர் தேர்தலில் வெற்றி பெற்று இருக்க முடியுமா? இந்த நாட்டிலே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் அன்றையதினம் முஸ்லிம் லீகும் திராவிட முன்னேற்றக் கழகமும் தங்களுடைய ஆதரவை



கிரி அவர்களுக்குக் கொடுத்தன. அதன் பிரகாரம் ஒரு ஜனநாயகப் பாரம்பர்யத்தை உண்டாக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட காரணங்களுக்காகத்தான் முஸ்லிம் லீக் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைந்து நிற்கிறது, ஆதரிக்கிறது.

நாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு, புழுதிப் புயலை கிளப்பிவிட்டுக் கொண்டிருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பல குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். நான் இப்போது கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறேன். இங்கேயிருக்கும் மின் விளக்குகள் எல்லாம் எனக்கு வெறும் மெழுகுவத்தி போல் தோற்றம் அளிக்கின்றது. மின் விசிறிகள் எல்லாம் வேறு பொருள்களாகத் தோன்றுகின்றன. இதற்குக் காரணம் நான்போட்டுக் கொண்டிருக்கிற கண்ணாடிதான். அந்தக் கண்ணாடியை நான் போட்டுக்கொண்டிருப்பதற்குக் காரணம் எனக்குக் கண் வலி. நான் இந்தக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு, இந்த மன்றத்தில் இருக்கின்ற விளக்குகள் எல்லாம் கேன்டல் போல் இருக்கின்றன என்று சொன்னால் நீங்கள் எப்படி நம்ப மாட்டீர்களோ, அது போல் அவர்க்ள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளையும் நம்பத் தயாராக இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கறுப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு வந்து விட்டு உலகமெல்லாம் இருண்டு இருக்கிறது என்று சொல்கிறார். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல் இருக்கிறது இவர் சொல்வது. பெருந்தலைவர் ராஜாஜி அவர்களை ரிப்லெக்ட் செய்யக்கூடிய அளவில் நீங்கள் அந்தக் கருத்தைக் கூற வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் தான் அணிந்து கொண்டிருக்கிற கறுப்புக்கண்ணாடியைப் பற்றிச் சொன்னார்கள். நான் கருப்புக்கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறேன். ஆகையால் எனக்கு விளக்கு எல்லாம் கறுப்பாகத் தெரிகிறது என்று சொன்னார்கள். தேவையில்லாமல் நீங்கள் அதிலே தலையிட்டு, ஹாண்டே அவர்களின் கோபத்தையும் கிளப்புகிறீர்கள். அவர் சொன்ன கறுப்பு கண்ணாடி ராஜாஜியைப் பற்றித்தான் என்று விளக்கம் சொல்லி வம்புக்கு இழுப்பது நல்லதல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நான் வம்புக்கு இழுத்து விட வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தப் பெரும் தலைவரை நாங்கள் மதிப்போடு வைத்திருக்கிறோம். அந்த முதுபெருந் தலைவராக இருப்பவருக்கு எந்த விதமான களங்கமும் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ராஜாஜியும் பொன்னப்ப நாடாரும் சந்தித்து எவ்வளவோ நாட்கள் ஆகியிருக்கும். நாங்கள் எவ்வளவு தான் வேறு பாடு கொண்டிருந்தாலும், அடிக்கடி சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறோம். அவர் இப்போதெல்லாம் கறுப்புக் கண்ணாடி அணிவது இல்லை. இதை பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உறுப்பினர் அவர்கள் ராஜாஜியைப் பற்றி ஜாடைமாடையாகக் கூடச் சொல்லவில்லை. அவர் கறுப்புகண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறார். திரும்பிப் பார்த்தீர்களானால் தெரியும். கறுப்புக் கண்ணாடிப் போட்டுக்கொண்டிருக்கிற எனக்கே கோபம் வரவில்லை. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு கோபம் வந்தது மாத்திரமல்லாமல், ஹாண்டே அவர்களின் கோபத்தையும் கிளப்பி விடுவதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, நான் கறுப்புக்கண்ணாடி என்று குறிப்பிட்டது நான் போட்டுக் கொண்டிருப்பதைத்தான். டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்தார்கள் நான் யாரைப் பற்றியும் குறிப்பிட வில்லை. ராஜாஜியைப் பற்றி நிச்சயமாகக் குறிப்பிடவில்லை. வேறு யார் போட்டுக் கொண்டிருக்கிற கறுப்புக் கண்ணாடியையும் குறிப்பிட வில்லை. நான் இந்த இடத்தில் குறிப்பிட விரும்பியதெல்லாம் எப்படி நான் கறுப்புக்கண்ணாடி போட்டுக் கொண்டிருப்பதால் எல்லாம் கறுப்பாக தெரிகிறது என்று சொன்னால் எப்படி இந்த மன்றத்தில் இருக்கிற மற்றவர்கள் நம்ப மாட்டார்களோ அது போல் இந்த நாட்டு மக்களும் அவர்கள் சொல்கிற லஞ்ச-ஊழல் குற்றச் சாட்டுகளை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நேற்றையதினம் பேசிய மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் ஏதோ சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, தட்டிக் கழிக்கும் விதத்தில் பேசினார்களே தவிர ஒரு குறிப்பிட்ட அளவிலே குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லவில்லை. இதுவரையில் அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்பதை மக்கள் மன்றத்தில் வைத்தார்களா? மக்கள் மன்றத்தை நம்பாதவர்கள் மக்களைப் பற்றிப் பேசுகிறார்கள். இங்கே இருக்கும் மக்களை நம்பாமல் வடக்கே டெல்லிக்குச் செல்ல வேண்டிய காரணம் என்ன என்பதை மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முஸ்லிம் லீக்கைப் பற்றி திரு. ஹாண்டே அவர்கள் சொன்னதாக சில செய்திப் பத்திரிக்கையில் வந்திருக்கின்றன. அதாவது, அடுத்தத் தேர்தலில் முஸ்லிம் லீகிற்கு ஜீரோ தான் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள்.



**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் அப்படி எங்கும் சொல்லவில்லை அடுத்த தேர்தலில் ஜீரோதான் வரும் என்றும் சொல்லவில்லை. 'let us not have confusion about that'.

**திரு. கே. எ. வகாப் :** தங்கள் விளக்கத்திற்காக நன்றி. பதவிக்காக என்றோ சலுகை பெறுவதற்காக என்றோ முஸ்லிம் லீக் இங்கே உட்கார்ந்து கொண்டு இருக்கிறது என்று யாராவது சந்தேகக் கருத்தோடு இருந்தால், அந்தச் சந்தேகத்தை உங்கள் மனதிலிருந்து எடுத்து விடுங்கள். முஸ்லிம் லீகிற்கு என்று சில நிரந்தரமான கொள்கைகள் உண்டு. அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு தான் அது செயல் பட்டு வருகிறது.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** தலைவரவர்களே, என்னுடைய கட்சியின் சகா சொன்னார், நாங்கள் உரிமையைப் பெறுவதற்காகவோ, அல்லது பதவியைப் பெறுவதற்காகவோ இங்கே வரவில்லை என்று சொன்னார்கள். நிச்சயமாகப் பதவியைப் பெறுவதற்காகத்தான் வந்து இருக்கிறோம். எங்களுக்கும் உரிமை உண்டு ஜனநாயக அடிப்படையில் நாங்கள் இங்கே வந்து எங்களுடைய வாதத்தைப் பிரதிபலிப்பதற்கு உரிமை உண்டு. அது போலவே சலுகை பெறுவதற்கும் உரிமை உண்டு சலுகை இல்லாமல், உரிமை இல்லாமல் ஒரு சமூகம் வாழ முடியாது. எந்தச் சமூகமும் வாழ முடியாது. ஆகையால் அவர்களின் பேச்சுக்கு நான் சிறு திருத்தம் செய்கிறேன். பதவி, உரிமை இவைகளெல்லாம் எதற்கு என்றால் சமுதாயத்திற்காகத்தான்.

**திரு. கே. எ. வகாப் :** எங்களுடைய தலைவர் கூறியது போல் அந்த அடிப்படையை நான் நிச்சயமாக ஏற்றுக் கொள்கிறேன். பதவியை ஒரு வாய்ப்பாக ஏற்படுத்திக் கொண்டு சமுதாயத்திற்கு நாட்டிற்குத் தொண்டாற்றி வருகிறோம். இன்று நாட்டில் பல கட்சிகள் இருக்கின்றன. ஜனங்கள் எந்தப் பக்கம் பேசுகிறார்களோ அதற்குத் தக்கபடி தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் இல்லை. எங்களுக்கு நல்ல பாரம்பரியம் இருக்கிறது. அதற்குச் சில கொள்கைகள் உண்டு. அப்படிப்பட்ட கட்சியானது தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதற்கு, அந்தச் சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்குப் போதுமான அக்கறையைச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் நல்லாட்சி நீடிக்க வேண்டுமென்பதற்காக எதை ஆதரிக்க வேண்டுமோ அதைச் செய்து வருகிறோம். இதை நாங்கள் மட்டும் வலியுறுத்தவில்லை. எங்கள் தலைவர் காலம் சென்ற காயிதே மில்லத் அவர்களும் அதைத் தான் நன்கு ஆலோசித்த பிறகு சொன்னார்கள். எத்தனை கட்சிகள் நாட்டிலே இருந்த போதிலும், எத்தனை பெரும் தலைவர்கள் நாட்டில் இருந்தபோதிலும், ஏழை மக்களுக்கு, தொழிலாளர்

களுக்கு, யார் நன்மை செய்வார்களோ அவர்களை உணர்ந்து தான் அவர்களுக்கு ஆதாவு தரவேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்களோடு அன்றைய தினம் உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். அன்று ஏற்பட்ட பாரம்பர்யம் தான் இன்றும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகமும் முஸ்லிம் லீகும் எத்தனை நாளைக்கு உறவாக இருக்கும் என்று ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். நிச்சயமாக இந்த உறவு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மைனாரிட்டி மக்களின் நலனில் அக்கறை கொண்டு இருக்கிற வரைக்கும், பின் தங்கியே மக்களின் நலனில் அக்கறை கொண்டு இருக்கிற வரைக்கும், ஏழைகளுக்கு உதவி செய்கின்ற வரைக்கும், அந்த எண்ணம் அவர்களிடத்தில் இருக்கிற வரைக்கும் இருக்கும். இந்த உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி):** ஏற்கனவே 15 நிமிடம் பேசிவிட்டீர்கள். இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. கே. எ. வகாப் :** டாக்டர் கலைஞர் அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள் இந்தச் சட்டமன்றத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை யார் கொண்டு வந்தார்களோ அவர்கள் பேசுவதற்கு முன் வரவில்லை என்று, நாங்கள் எல்லாம் கூட ஆவலாக இருந்தோம். இந்தச் சட்டமன்றத்திலே ஒரு புரட்சி நடிகர், இன்று புரட்சித் தலைவராக மாறியிருப்பவர், மிகவும் நல்லவராக சினிமாவில் நடித்து நல்லவர் என்று பெயர் வாங்கியவர் எப்படிப் பேசப் போகிறார் என்று பார்த்தோம். அவர் பேசுவதற்கு வாய் திறந்ததுமே என்ன பேசினார், தெரியுமா ? ஒரு கதை சொல்லுவார்கள். அது என் நினைவுக்கு இப்போது வருகிறது. ஒரு பெற்றோர் குழந்தை பிறந்து மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியும் பேச வர வில்லையே என்று, காசி, ராமேஸ்வரம் போய் அதற்காக வேண்டுதல்கள் எல்லாம் செய்து கொண்டு வந்தார்கள். அந்தக் குழந்தையும் ஒரு நாள் திருவாய் திறந்தது. குழந்தை முதலில் அம்மா, அப்பா என்று தான் பேசும். ஆனால் அந்தக் குழந்தை என்ன வார்த்தை பேசியது தெரியுமா ? அம்மா, உன்னுடைய தாலி இன்னும் அறுபட வில்லையா? என்று. அந்த முறையில் நாங்கள் புரட்சித் தலைவர் நல்ல கருத்துக்களையெல்லாம் சொல்வார் என்று எதிர்ப்பார்த்திருந்தபோது, முதன் முதலில் அவர் வாய்திறந்து கூறிய வார்த்தை "பாயின்ட் ஆப் ஆர்டர்" அந்த வார்த்தை தான் முதன் முதலில் பேசியிருக்கிறார்.





அதுமட்டுமல்ல. ஆளும் கட்சியான தி.மு.க. மந்திரிசபை ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். எம். ஜி. ஆர். அவர்களை வாழவைதத தி.மு.க. கழகமும் இந்த அமைச்சர் அவை அடியோடு அழிந்துவிட வேண்டும் என்ற தோரணையில் தன்னுடைய பேச்சைத் துவங்கினார்கள். சினிமாத் துறையைப் பற்றி நான் குறை கூற விரும்பவில்லை. சினிமாத் துறையிலே இருந்து புகழ் பெற்றவர். அது குறித்து ரசிகர்கள் என்ற முறையில் நான் கூட மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், சினிமாத் துறையில் இருப்பவர்கள் சென்ட், அதாவது வாசனை திரவியங்கள் போல். வாசனைத் திரவியங்கள் மேலே பூசிக்கொள்ள உதவுமே தவிர, வயிற்று வலிக்கோ மற்ற நோய்க்கோ உள்ளே சாப்பிடுவதற்கோ உதவியாக இருக்காது. இந்த நாட்டு மக்கள் இதை நல்ல முறையில் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் கானலைப் போல் வந்து மறைகிறது. இதை நாட்டு மக்கள் நல்ல முறையில் உணர்ந்து கொண்டிருப்பதன் காரணமாக, இவர்கள் எப்படிக் கலவரங்களை உண்டாக்குகிறார்கள், எப்படிப்பட்ட சூழ்நிலையில் குழப்பங்களை உண்டாக்குகிறார்கள் என்பதை அறிவார்கள்.

எங்கள் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களைப் பற்றி ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு எங்கள் தலைவரே குழப்பவாதிகள் என்று பெயர் வைத்தார்கள். அம் மாதிரி நிலையில் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, ஹர்த்தால் என்றும், ஊர்வலங்கள் என்றும் நடத்தி அதில் ஈடுபடுகிறார்கள். அதிலே ஈடுபடாதவர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள்? குறிப்பாகச் சொல்லப் போனால், முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்கள் ஒன்றிரண்டு பேர்கள் கடைகளைத் திறந்து வைத்தபோது ஏற்பட்ட அசம்பாவிதங்களை இந்த இடத்தில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். செங்கத்தில் முஸ்லிம் லீக்குக்கு வேண்டிய நண்பர் ஒருவர் அன்று கடை திறந்தார். அவர் தெருவில் இழுக்கப்பட்டு அடிக்கப்பட்டார். வந்தவாசியில் ஒருவர் டீ கடை திறந்து வைத்திருந்தார். அவருடைய மூலதனமான ரூ. 5 பெறுமான பால் தெருவிலே வீசப்பட்டது. இம்மாதிரி முறைகளெல்லாம் இவர்கள் நடத்திய ஹர்த்தாலிலும், ஊர்வலத்திலும் கையாளப்பட்டன. இந்த நாட்டில் இம்மாதிரி நிலைமை இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் இவர்கள் நாட்டுக்கு நன்மை செய்வதாக வைத்துக் கொண்டு, நாட்டிற்கு ஏதோ புண்யமான காரியத்தைச் செய்வதாக வைத்துக் கொண்டு, ஊழல், ஊழல் என்று சொல்லிக் கொண்டு, ஊழலைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஊழல், லஞ்சம் என்று நாம் எடுத்துக் கொண்டு பார்க்கும் பொழுது மனித சமுதாயம் ஆரம்பித்த நாள் முதற்கொண்டே இப்படிப்பட்ட குறைபாடுகளெல்லாம் கூறப்பட்டு வந்திருக்கின்றன. அகாமம்

ஈவும் தோன்றிய காலத்திலேயே சைத்தானால் பழம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்திலேயே லஞ்சத்தை ஆரம்பித்துவிட்டார்கள் என்று தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். எந்த ஆட்சியில் லஞ்சம் இல்லை? காமராஜ் அவர்கள் ஆண்ட காலத்தில் லஞ்சம் இல்லை என்று சொல்ல முடியுமா? இந்திரா காந்தி ஆட்சியில் இல்லை என்று சொல்ல முடியுமா? ஆசிய ஜோதி நேரு அவர்கள் காலத்தில் லோகியா அவர்கள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கூறிக் கொண்டிருக்கவில்லையா? அமைச்சர் அவையிலே ஊழல் என்று சொல்கிற பொழுது நாமும் அதை அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறோம்.

உருப்படியாக இவர்கள் எதையாவது சொல்வார்கள், நிச்சயம் அதை உணர்ந்து கொள்கிற சந்தர்ப்பம் மக்களுக்குக் கிடைக்கும் என்று காத்திருந்தோம். ஆனால், இதுவரையில், இன்று வரையில்--ஒரு வேளை நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பட்டியலை வெளியிட்டாலொழிய அதற்கு முந்தி அதைச் சொல்வதற்கு வக்கு இல்லாமல் இருக்கிறார்களே என்று எண்ணுகின்ற அளவில் மக்கள் சமுதாயம் இருந்து கொண்டிருக்கிறது . . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** வக்கு இல்லை என்று சொல்கிறார்கள். முஸ்லிம் லீக்குக்கு எவ்வளவு வக்கு இருக்கிறது என்று இந்தக் கூற்றிலிருந்து தெரிந்து விட்டது. ஆகையால் அம் மாதிரி மனதைப் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முஸ்லிம் லீக்குக்கு வக்கு இருக்கிறது. முஸ்லிம்களுக்கு வக்ஃப் போர்டு என்ற ஒரு போர்டு இருப்பது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியாது என்று கருதுகிறேன். அவர்கள் உங்களைச் சொல்லவில்லை. குற்றச்சாட்டுகளை சட்டமன்றத்தில் ஏன் வைக்கவில்லை, என்று வைக்காதவர்களைக் கேட்கிறார்கள்.

**திரு. எ. வகாப்:** முஸ்லிம் சமுதாயம் ஒரு கேள்வியைக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறது. அண்ணா கொள்கையைப் பற்றிச் சொல்கிறபொழுது நாங்கள் சென்ற ஆண்டு இங்கே இந்த அமைச்சர் அவையிலே . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. கணபதி):** ஏற்கனவே உறுப்பினர் அவர்கள் 20 நிமிஷம் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச வேண்டும். தயவு செய்து உடனே முடித்துவிடுங்கள்.

**திரு. கே. எ. வகாப்:** மது விலக்கை ரத்து செய்வதற்கு நாங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தோம் இப்பொழுது புதிய கட்சியைத் தோற்றி வைத்திருக்கிற தலைவர் மதுவிலக்கு பிரசாரக் குழுவின் தலைவராக இருந்தார்;



அவர் அன்றைக்கு முஸ்லிம் லீக் சொல்வது நியாயம் என்று சொல்லாதவர், அன்றைக்குப் போகட்டும், இன்றைக்காவது நானும் அவர்களுடைய பிரசாரங்களைப் படித்திருக்கிறேன், பேச்சுக்களைப் படித்திருக்கிறேன், சில கூட்டங்களுக்குக்கூட சென்று அவர்கள் பேசுவதைக் கேட்டேன். லட்சியத்தை வைத்திருப்பவர், கொள்கையை வைத்திருப்பவர், அண்ணா வழி செல்பவர் மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி 'நான் ஆட்சிக்கு வந்தால் உடனே மதுக் கடைகளை மூடிவிடுவேன்' என்று எங்கேயாவது சொல்லியிருக்கிறார்களா என்றால், இல்லை. அப்படிப்பட்ட லட்சியம், கொள்கை இல்லாதது மாத்திரம் அல்ல. அண்ணா பெயரை வைத்துக் கொண்டு கட்சியை வளர்க்க முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட கடமையை நிறைவேற்றாத முறையில், கடமையை நிறைவேற்றுவதற்குச் சட்டமன்றத்திற்கு வாராமல், வெளியே இருந்து கொண்டு, ஏதேதோ அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே கடமையை நிறைவேற்றுவதாக இருந்தால், சட்டமன்றத்திற்கு அல்லவா வந்து பேச வேண்டும். லட்சக்கணக்கான மக்களின் வாக்குகளைப் பெற்று வந்திருந்தும்கூட, அவர்கள் இங்கே வந்து தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற வில்லை. ஆகவே, அண்ணா பெயரைச் சொல்லிக் கொண்டு, அவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொண்டு இருப்பவர்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டிருப்பவர்களா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. கணபதி):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, திரு. முத்துசாமி.

**திரு. ப. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நம்பிக்கைத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சி உறுப்பினர்களும் மிகத் தெளிவாக இந்த ஆட்சியில் செய்திருக்கிற நன்மைகளை எடுத்துச் சொல்லி, இந்த அமைச்சரவையின் பேரில் எந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதையும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், நம்முடைய கலைஞர் டாக்டர் அவர்கள்

ஆளுகிருர்கள். அண்ணு அவர்கள் என்ன என்ன செய்ய வேண்டுமென்று கருதினர்களோ, எதைச் செய்ய வேண்டுமென்று நினைத்தார்களோ, அந்த நற்செயல்களை யெல்லாம் இன்றைக்குக் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பது மாத்திரமல்ல. பேரறிஞர் அண்ணு அவர்கள் என்ன கருதினர்களோ, எப்படி நடந்து கொண்டார்களோ, எந்த தெந்தக் கொள்கைகளை அரசாங்கத்தில் தலைமையை ஏற்று நிறைவேற்றிச் சென்ருர்களோ, எம்மாதிரி நடந்துகொள்ள வேண்டுமென்று கருதினர்களோ, அந்தப் பண்புகளை, அந்தக் கொள்கைகளை, அரசியல் நாகரிகத்தை இன்று கலைஞர் அவர்கள் எந்தக் கட்டத்திலும் கொண்டிருக்கிருர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் இங்கு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே சட்டமன்றம் கூடிய நேரத்தில் கூட, இங்கே மிக பதட்ட நிலைமை இருக்கிறது, எதிர்வரிசையில் இருப்பவர்கள் தாறுமாருக எதையெதையோ பேசுவார்கள் என்ற நிலை ஏற்பட்ட நேரத்தில், சட்ட மன்ற உறுப்பினர்களை அழைத்து கலைஞர் அவர்கள் 'நாம் அத்தனை பேர்களும் ஆளும் கட்சியில் இருக்கிறோம், ஆகையால் சட்டமன்றக் கூட்டம் நடக்கும் பொழுது நமக்கு இருக்கிற பொறுப்பை உணர்ந்து எதிர் வரிசையில் இருப்பவர்கள் என்ன பேசினலும், என்ன வைதாலும், என்ன திட்டினலும், பதில் சொல்கின்ற பொறுப்பை எங்களிடம் விட்டுவிட்டு, அச்சடித்த பதுமை போல் இருக்க வேண்டும், அறிஞர் அண்ணு அவர்கள் வழியில் என்று அந்த நாளில் எடுத்துச் சொன்னதை நான் இந்த நேரத்தில் நினைவு படுத்துகிறேன்.

அது மாத்திரமல்ல. இங்கே சட்ட மன்றம் மீண்டும் கூட்டப்பட்ட நேரத்தில் இங்கே அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்த சமயத்தில் கூட, 'எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அவர்கள் கொண்டுவருகிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்துவார்களேயானல், அவர்களுக்கு இடம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்', என்று குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல, 'அதற்கு வேண்டிய எண்ணிக்கை குறைந்திருக்கிற காரணத்தினல், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இந்த அவையிலே வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலே இருக்கிற ஒரு சந்தேகம், பொதுமக்களிடையே இருக்கிற ஐயப்பாடு இவைகளைப் போக்கவும், எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் அவர்களுடைய குற்றச் சாட்டுகளைக் குறைகளை இந்த ஆளும் கட்சியின் அமைச்சரவை மீது சொல்ல முடியாது செய்துவிட்டார்கள் என்ற அபாண்டத்திற்கு உள்ளாக்கி விடக் கூடாது என்று கருதியும் தான், நம்பிக்கைத் தீர்மானத்தை முறைப்படி, சட்டப்படி கொண்டு வந்திருக்கிறேன். இதிலே நீங்கள் கூட உங்களுடைய கருத்துக்களைக் கூறுங்கள், ஜனநாயகம் உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது'



என்று கலைஞர் அவர்கள் அறைகூவல் விட்டார்கள். அண்ணு அவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று கூறினர்களோ, அந்த வழியில் அவர் நடந்து கொண்டிருப்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அது மாத்திரமல்ல நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமான பிரச்னைகள் வருகின்ற நேரத்தில், நாட்டில் முக்கியமான எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அது காவேரி நீர்ப் பிரச்னையாக இருந்தாலும், விவசாயிகள் பிரச்னையாக இருந்தாலும், மாணவர்கள் பிரச்னையாக இருந்தாலும், எதிர் வரிசையில் இருக்கிறவர்களை அழைத்து 'என்ன செய்யலாம், என்ன சொல்கிருர்கள், இதற்கு என்ன பரிகாரம்' என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் எப்படிக் கேட்பாரோ அந்த வகையிலே தான் இன்றைக்குக் கலைஞர் அவர்கள் நடந்து கொண்டிருக்கிருர்கள் என்பதைக் கடந்த கால வரலாறுகளை நினைவு படுத்தி நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. இன்றைக்கு லஞ்ச ஊழலைப்பற்றி வெளியே குறிப்பிட்டார்கள், மேடையிலே தாக்கிப் பேசினர்கள். பத்திரிகையிலே பொதுப்படையாக லஞ்சம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். கட்சி ரீதியாக பொதுக் குழுவைச் சந்திக்கப் பயந்தார்கள். இன்றைக்கு ஜனநாயக ரீதியாக சட்டமன்றத்தில் சந்திக்கப் பயந்து ஒளிந்து கொண்டு விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே நான் கூற விரும்புகிறேன்.

பி.ப. 1-00

அது மட்டுமல்ல. தலைவரவர்களே, தங்கள் கட்சியிலேயிருந்து வெளியேறுகின்றவர்கள் என்ன கூறினர்கள்? லஞ்சம், கணக்குக் காட்டவில்லை. யார் மீது, எப்போது, எந்தக் காரணத்திற்காக லஞ்சம் வாங்கினர்கள் என்று பல தடவை கேட்டார்கள். நம்முடைய அரசுக் கட்டிலில் இருக்கின்ற அமைச்சர்கள் அத்தனை பேரும் கேட்டார்கள். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். இதுவரையில் பதில் வரவில்லை. எங்கே போய் மனு கொடுத்தார்கள். அதற்குப் பின்னும் இந்தச் சட்டமன்றத்தில் சொல்லுகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டு வரவில்லை.

அது மாத்திரமல்ல. இந்த நேரத்தில் நான் கூற விரும்புகிறேன். அண்ணு கட்சியில் இருக்கின்ற, கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கின்றவர்கள் மாத்திரமல்ல, இன்றைக்கு ஸ்தாபன காங்கிரசிலே இருக்கின்றவர்கள் பலயிடங்களில் மேடைகளில் சட்டமன்ற உறுப்பினர்களும், அவர்கள் தலைவர்களும் பலயிடங்களில் லஞ்சம் என்று சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். இன்றைக்குத் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். லஞ்சம் இந்த அரசு மீதிருக்கும் என்று நம்புவார்களானல், இந்த மன்றத்தில் தெளிவாக இன்னர் இந்த நேரத்தில் இப்படி

லஞ்சம் வாங்கினார்கள் என்று குறிப்பிட வேண்டும். இல்லையென்றால் இன்றிலிருந்து அவர்கள் மேடையில் லஞ்ச ஊழல் குறைகள் வெளியில் பேசக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய எல்லோரும், இந்த ஸ்தாபன காங்கிரஸ் கட்சி நண்பர்களும் நேற்றுப் பேசியவர்கள் விவசாயப் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அதிலே ஒரு முக்கியமான விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். விவசாயப் போராட்டத்தில் 10, 14 பேர் உயிரிழந்தார்கள் என்பது உண்மை. ஆனால் அத்தகைய நிலை ஏற்படுவதற்கு முன்னால் கலைஞர் அவர்கள் அறிவித்த சலுகைகளுக்கும், அதற்குப் பிறகு பேசி முடித்ததற்குப் பின்னால் அறிவித்த சலுகைகளுக்கும் என்ன வித்தியாசம். நான் ஒரு விவசாயி. ஐந்து ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருந்தால் 700 யூனிட் சராசரி ஓடலாம். அந்த 700 யூனிட்டிற்கு முன்பு கலைஞர் அவர்கள் அறிவித்த சலுகைகளுக்கும், இப்போதிருக்கின்ற சலுகைக்கும் என்ன வித்தியாசமென்றால் ஒரு ரூபாய் ஒரு விவசாயி சராசரியாக அதிகம் கட்ட வேண்டிய நிலையிருக்கிறது. உண்மையிலே விவசாயிகள் பேரில் அக்கறையிலிருந்து இந்தப் போராட்டம் ஆரம்பித்திருப்பார்களானால், இந்தச் சலுகை அறிவித்ததற்குப் பின்னால் அவர்கள் 14 உயிர்களை அனாவசியமாகப் பலி கொடுத்திருக்க வேண்டியதில்லை. அதுவல்ல பிரச்னை. அவர்களுக்கு இருந்ததெல்லாம் எப்படியும் சட்டம் அமைதி கெட்ட ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அது எந்தப் போராட்டமாக இருந்தாலும் பரவாயில்லை. விவசாயி கிடைத்தாலும் பரவாயில்லை, தொழிலாளி கிடைத்தாலும் பரவாயில்லை, மாணவர்கள் கிடைத்தாலும் பரவாயில்லை, யார் கிடைத்தாலும் சட்டம் அமைதி இந்த நாட்டிலே கெட்டு விட்டது என்ற நிலையை உருவாக்கி அதன் மூலமாக மத்தியரசு தலையிட வேண்டும். அதிலே லாபம் கிடைக்குமென்ற கருத்தில் தான் அந்தப் போராட்டத்தை வலிய ஏற்படுத்தினார்களே தவிர, இந்த அரசின் குறையால் இந்த 14 உயிர் இறந்தது என்ற குற்றச்சாட்டினை நிச்சயமாக ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

இன்னொன்று நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய அவையிலிருக்கின்ற ஸ்தாபன காங்கிரசிலிருக்கின்ற பலர் சொன்னார்கள். இங்கேயிருந்த கட்சிகள், பல கட்சிகள் தேர்தல் நேரத்திலிருந்த வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி, அதைப் போல தேர்தல் நேரத்திலிருந்த இந்திரா காங்கிரஸ் பிரிந்து போய்விட்ட பின்னால், இந்த மக்களுடைய ஆதரவை இழந்ததிற்குப் பின்னால், மீண்டும் சட்ட மன்றத்தில் இருக்கலாமா என்று கேட்டார்கள். எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. திருமணத்திற்கு பெண் பார்த்த நண்பர் நான்கு பேர் ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் இன்றைக்கு கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள். தகப்பனும் தாயும் போல முஸ்லிம் லீகும், பார்வேட் பிளாக்கும் இருக்கிறது. பெண் பார்த்தவர்கள் போய் விட்ட பின்னால் மனைவியோடு நீ வாழலாமா என்று கேட்பது போல இன்றைக்கு அவர்கள் கேள்வியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.





அது மட்டுமல்ல. இங்கே வாக்காளர்களெல்லாம் உங்களிடத்தில் இல்லை என்று சொன்னார்கள். அதைக் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். நான் கேட்கிறேன். ஒரு தொகுதியில் இருக்கிற 100, 200 பேர், அதிக பட்சம் 500 பேர், அதிலே ஓட்டளித்தவர்கள் பாதிப் பேர் அந்த தொகுதியில் ஓட்டு இல்லாதவன் பாதி பேர், கையெழுத்துப் போட்டு வாக்காளர் பேரணி நடத்தி, அந்த 200, 500 பேர் சொன்னதினால் 1 லட்சம் வாக்காளர் இருக்கின்ற தொகுயில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய நம்பிக்கை இழந்து விட்டார்களென்றால், இது எந்த ஜனநாயகம் என்று எங்களுக்குத் தெரியவில்லை.

நேற்றைக்குக் கூட பலரும் குறிப்பிட்டார்கள். தேர்தல் காலத்தில் தங்கள் தலைவர்களை எந்த அளவுக்குத் தரக்குறைவாகப் பேசினார்கள் என்று சொன்னார்கள். இங்கே அவர்கள் தலைவர் பெயரைக் குறிப்பிட்டால் கூட கோபம் வருகிறது. ஆனால் எங்கள் தலைவர் அவர் குடும்பத்தில் உள்ள பெண்டுபிள்ளைகளை யெல்லாம் தரக்குறைவாக எழுதி, அந்த வசனங்கள் சென்னையிலிருந்து ஒவ்வொரு பகுதிக்கும் அனுப்பப்பட்டது என்பதையும் அந்த வசனங்கள் எழுவதற்கு, இன்றைக்கு இங்கே வீற்றிருக்கின்ற, எதிர்க் கட்சியிலிருக்கின்ற அந்தக் கட்சி நண்பர்கள் ஒவ்வொரு ஊரிலும்—நான் தெளிவாக சொல்லுகிறேன்—மை வாங்கிக் கொடுத்தார்கள், காசு கொடுத்தார்கள், பிரிண்ட் அடித்துக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட காரியம் நடக்குமானால் எதிர்காலத்தில் நல்லவர்கள், கண்ணியமானவர்கள், நாணயமுள்ளவர்கள் குடும்பத்திலிருந்து அரசியலுக்கு வரமுடியாது. இன்னொரு காந்தி வந்தாலும், யார் வந்தாலும், இந்த நாட்டிலே நல்ல அரசியல் வாதியை உருவாக்க முடியாது. தமிழ் இருக்கின்ற வரை, தமிழ் மொழி இருக்கின்ற வரை, தமிழ் ஜாதி இருக்கின்ற வரை, நம் பண்பாட்டை அழிக்க யார் வந்தாலும் இடம் கொடுக்கக் கூடாது என்று கூறி, இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையிருக்கிறது என்று ஏழை, பிற்படுத்தப்பட்ட மக்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேரும் ஏகோபித்த குரலில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் கூறி நம்பிக்கைத் தீர்மானத்தை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1972 டிசம்பர் 8

*திரு. கே. பி. கோபால் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்தப் பேரவையில் கொண்டு வந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டு இந்தப் பேரவையில் ஆகஸ்டு மாதம் நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டு வந்து அது தோல்வியடைந்தது. மதுரை மாநாட்டில் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்ட கூட்டத்தை பார்த்துமா இந்த நம்பிக்கையில்லாத தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். இன்று அதே கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அக்டோபர் மாதம் மதுரையில் தேசியத் திருவிழா என்று நடைபெற்றது. அந்தத் திருவிழாவில் லட்சக்கணக்கான மக்கள் கூடி, இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்பதை தெரிவித்தார்கள். அதே மாதம் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் வழி செல்லும் கலைஞருக்கும் ஒரு விழா எடுத்தார்கள். அந்த விழாவிலும் இந்த அரசு மீது நம்பிக்கையில்லை என்று காட்டி கொண்டார்கள். மேலும் நவம்பர் 15-ந் தேதி இந்த மாநிலம் முழுவதும் நடைபெற்ற ஹர்த்தாலில், இந்த மாநிலத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் முழு ஆதரவு கொடுத்து இந்த அமைச்சரவையில் நம்பிக்கை யில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமூக விரோதிகளுக்குப் பயந்து கொண்டு இந்த ஹர்த்தால் ஓரளவு வெற்றியடைந்திருக்கும் என்று கூறினார்கள். அவர் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதிற்கில்லை. பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள், முக்கியமாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தைரியமாகக் கடைகளைத் திறந்து வைத்துக் கொள்ளலாம், உங்களுக்கு முழு ஆதரவு கொடுக்கப்படும் என்று கூறினார். எனவே நவம்பர் 15-ந் தேதி நடந்த பந்து பந்தோபஸ்து கொடுத்து இந்த அரசுக்கு எதிராகக் கொடுத்த ஆதாவு என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் முன்பு பெரிய மைதானங்கள். தமுக்கம் மைதானம், ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் கூட்டங்களைக் கூட்டி பொதுமக்களைச் சந்தித்தார்கள். இன்று சினிமா அரங்கம், கல்யாண மண்டபம், தெரு முனைகளில் கூட்டங்களைக் கூட்டி, மக்களைச் சந்திக்குமளவுக்கு வந்து விட்டார்கள். இது எதைக் காட்டுகிற தென்றால் இந்த அரசு அரசுஊழியர்களின் நம்பிக்கையை இழந்து விட்டது, ஆசிரியர்களுடைய நம்பிக்கையை இழந்து விட்டது, மாணவர்களுடைய நம்பிக்கையை இழந்து விட்டது, விவசாயிகளுடைய நம்பிக்கையை இழந்து விட்டது, தாழ்த்தப்பட்ட பின் தங்கிய மக்களுடைய நம்பிக்கையை முறையிலக்கு ரத்து செய்ததால் அவர்கள் நம்பிக்கையையும் இழந்து விட்டது என்பதைத் தான் காட்டுகிறது.



1972 டிசம்பர் 8] [திரு. கே. பி. கோபால்]

இந்த அளவுக்கு மாற்றம் திடீரென்று ஏற்படுத்துவதற்குக் காரணம் என்னவென்றால் இங்கு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து உயிருக்கும் உடைமைக்குப் பாதுகாப்பற்ற நிலைமை உண்டாகியிருக்கிறது என்பதை எல்லோரும் உணருகிறார்கள். மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த தேசியத் திருவிழாவில் பட்டப்பகலில் அலங்கார வளைவுகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அதிலே சம்பந்தப்பட்டவர்கள் மதுரை மாநகராட்சி உறுப்பினர் ஒருவருடைய உறவினர் என்று தெரிய வந்தது. பின்பு எங்கள் கட்சியைச் சேர்ந்த ராமன் என்ற ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டார். அது சம்பந்தமாக கைது செய்யப் பட்டவர்கள் யார் என்று தெரியும்போது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது. ஆயுள் தண்டனை பெற்ற கைதி பெரோலில் விடுதலையாகி வந்த ஒருவர் அது சம்பந்தமாக மத்திய சிறையில் கண்காணிப்பாளர் முன்பு சரணகதி அடைந்திருக்கிறார். இது போன்று பல சந்தர்ப்பங்களில் மதுரையிலுள்ள கிரிமினல் கைதிகள் பெரோலில் வருவதும் அப்படிப் பெரோலில் வரும்போது இந்த மாதிரி அசம்பாவித சம்பவங்கள் நடைபெறுவதும் யாருடைய ஆதரவில் நடக்கிறது என்பதை தெளிவுபட முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் பாளையங்கோட்டையில் பேராசிரியர் சீனிவாசன் அவர்கள் தாக்கப் பட்டது குறித்தும், மாணவர் ஆர்துநாதன் இறந்தது குறித்தும், கண்டனம் தெரிவிக்கும் வகையில் மதுரையில் மாணவர்கள் ஒரு ஊர்வலம் நடத்தினார்கள். அந்த மாணவர்களுக்குக் காவல்துறையினர் ஓரளவுக்கு பாதுகாப்பு கொடுத்ததாக பத்திரிகையில் செய்திகள் காணப்பட்டன. அப்படி இருந்தும் ஊர்வலம் வரும்போது எத்தனையோ பொருட்களுக்குச் சேதம் விளைவித்ததாகத் தெரிகிறது. அது உண்மைதான். ஏனென்றால் நான் அங்கு இருந்தேன். அப்படி இருக்கும்போது காவல் துறையினர் சேதம் விளைவித்ததை ஏன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்? என்னுடைய கருத்து என்னவென்றால் சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் சமூக விரோத செயலில் ஈடுபட்டவர்களை விட்டுவிட்டு, மாணவர் சமுதாயத்தின்மீது அந்தப் பழியைச் சுமத்துவது பொருத்தமாகுமா என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

போடியில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. அதைப்பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் இங்கே பேசியிருக்கிறார்கள். அந்தச் சம்பவம் நடைபெற்றதற்கு நீதி விசாரணை வைக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோட்டாட்சித் தலைவரைக் கொண்டு நீதி விசாரணை செய்ய ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். கோட்டாட்சித் தலைவரைக் கொண்டு நீதி

விசாரணை நடத்துவதால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே, உயர் மட்ட நீதிபதிகளில் ஒருவரை வைத்து நீதி விசாரணை வைக்க வேண்டும்.

போடியில் மாதத்தில் நடைபெற்ற இரு துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணம் மாணவர்கள்தான் என்று சொல்லப்பட்டது. அது உண்மையல்ல. அதற்கு காரணமானவர் ஒரு தாலுகா போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஆவார். மாணவர்கள் ஊர்வலமாக சென்றபோது அந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளில் ஊர்வலத்தின் நடுவில் சென்றிருக்கிறார். அதனால்தான் அங்கே தகராறு ஏற்பட்டு, ஒரு பதட்ட நிலைக்குக் காரணமாயிற்று உடனடியாக அந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்மீது நடவடிக்கை எடுத்திருந்தால் அதற்குப் பின்னால் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காது. இரண்டாவதாக துப்பாக்கிச் சூடு நடைபெற்ற பின் அங்கே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த வட்டாரமே ஸ்தம்பித்து போயிருக்கிறது.

ஊர்வலத்திற்குச் சென்ற மாணவர்கள் திரும்பி அவர்கள் ஊர்களுக்குச் செல்ல போக்குவரத்து வசதி இல்லை. பஸ்கள் ஓடாததினால் மாணவர்கள் உதவி தலைமை ஆசிரியருடன் பள்ளியிலேயே தங்கிவிட்டார்கள். அன்று இரவு போலீசார் உள்ளே நுழைந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாணவர்கள் இந்த அரசாங்கம் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அடுத்து; திருச்சியில் நடைபெற்ற சம்பவம். அதைப்பற்றி நேற்று முன் தினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் அங்கு நடைபெற்றதை விசாரித்துவிட்டு, நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள், அங்கு நடந்த சம்பவம் பற்றி செயின்ட் ஜோசப் கல்லூரி பிரின்சிப்பால் ஃபாதர் கால்மீர் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் கண்டிப்பாக பஸ் ஊழியர்களை உள்ளே நுழைவதற்கு அனுமதித்திருக்க மாட்டார்கள். போலீஸார் அத்துமீறி கிளைவ் விடுதிக்குள் நுழைந்து மாணவர்களைத் தாக்கச் செய்திருக்கிறார்கள். எனவே அதுபற்றி விசாரிக்க, காலதாமதமானாலும் நீதி விசாரணைக்கு உத்திரவிட்டாலும் அதை நான் பாராட்டுகிறேன். அண்மையில் முன்னால் துப்பாக்கிச் சூடு நடைபெற்றபோது, உடனடியாக முதலமைச்சரவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டதுபோல, இதற்கும் காலதாமதமாகியாகிலும் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னதுபோல் இந்த ஆண்டு மாணவர்கள் எல்லாம் பள்ளி இறுதி தேர்வுக்குச் செல்ல முடியுமா என்பது ஒரு



கேள்விக் குறியாகவே இருக்கிறது. இப்படியாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடத்திலும், கல்லூரி மாணவர்களிடத்திலும் இப்போது ஒரு பதட்ட நிலை உருவாகி இருக்கிறது. அதற்கான காரணங்களை அறிந்து, அதற்கு ஏற்ற பரிகாரத்தை அரசாங்கம் தேட வேண்டும். அதற்குப் பதிலாக போடியில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதால், மதுரை முழுவதும் உயர்நிலைப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் மூடி வைத்திருப்பதில் பயனில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்களின் வழியில் வந்தவர்கள் நாங்கள் என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசாங்கம், ஏற்கெனவே மதுவிலக்குக் கொள்கையைக் கைவிட்டுவிட்டது. அதை நாங்கள் அப்போதே கண்டித்திருக்கிறோம். இப்போது சாராயம், கள் விற்பனை சம்பந்தப்பட்ட விதிகளைத் தளர்த்தி இருக்கிறார்கள். அதன் காரணமாகச் சிறிய சிறிய கிராமங்களிலும், கூட ஏராளமான கிளைக் கடைகளைத் திறந்துவிட்டிருக்கிறார்கள். மக்கள் கூடுகின்ற இடங்களிலும் திறந்துவிட்டிருக்கிறார்கள். அதனால் சாதாரண கிராமங்களிலும் இப்போது அமைதி கெட்டுவிட்டது. எனவே அந்த மக்கள் அத்தனைபேரும் இந்த அரசாங்கத்தை ராஜிநாமா செய்யச் சொல்கிறார்கள். அவர்கள் சார்பிலே இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மதுரையிலே சமயநல்லூரில் ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் செலவில் ஒரு அனல் மின் நிலையம் அமைத்தார்கள். இப்போது அது மூன்று கோடி ரூபாய்க்கு மேல் போகும். அது லாபகரமாகச் செயல்படவில்லை என்று காரணம் காட்டி, 58 லட்சத்திற்கு விற்கப்பட்டிருக்கிறது. அதிலே முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. தூத்துக்குடியிலே பெரிய அனல் மின் நிலையம் அமைக்கப் போகிறோம் என்றார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமயநல்லூரில் அமைக்கப்பட்ட அனல் மின் நிலையத்தைப் பற்றிக் குறிப்பிட்டதால், அது சம்பந்தமாக என்னுடைய விளக்கத்தை இங்கே கூற வேண்டியிருக்கிறது. அந்த அனல் மின் நிலையம் விற்கப்பட்டதிலே ஏதாவது தவறு நடைபெற்றிருக்கிறதா? அதை விற்பனை செய்ய வேண்டுமென்று சொன்னது யார்? யாருக்கு விற்றதில் தவறு ஏற்பட்டது? என்ன காரணத்திற்காக விற்கப்பட்டது என்ற விபரங்களை எல்லாம் தெரிந்து கொண்டு அங்கத்தினர் அவர்கள் பேசுவது நல்லது.

சமயநல்லூர் அனல் மின் நிலையத்தினால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. அதைப்பற்றி ஆராயும்பொருட்டு 'எஃபிஷியன்சி அண்டு எக்கானமி கமிட்டி'

ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டது 1968-ஆம் ஆண்டில். தமிழக அரசின் சிபாரிசின் பேரில் மின்சார வாரியம் சிறந்த நிபுணர்களைக் கொண்டு அந்தக் குழுவை அமைத்தது. அதனுடைய குறிக்கோள், தமிழ் நாட்டிலே மின் நிலையங்களை எங்கெங்கே அமைப்பது, எப்படிச் செயல் படுத்துவது, லாபகரமாக எப்படி மின் நிலையங்களை இயக்குவது என்பவைகளைப் பற்றி ஆராய்ந்து அறிவுரை கூறும் ஒரு ஆலோசனைக் குழுவாக இருப்பது தான். அந்தக் குழு சமயநல்லூரில் அமைக்கப்பட்ட அனல் மின் நிலையத்தை ஆய்வு செய்தது. அது ஒரு சிறிய மின் நிலையம்; 14 மெகாவாட் மின் உற்பத்தித்திறன் கொண்டது. அதாவது ஒரு சதவீதம் உற்பத்தியை பெற்றிருக்கிறது. அதற்கு வேண்டிய நிலக்கரி வட மாநிலங்களிலிருந்து சென்னைக்கு 'பிராட்கேஜ்' ரயிலில் வந்து, சென்னையிலிருந்து 'மீட்டர் கேஜ்' ரயிலில் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால் செலவு அதிகமாகிறது. இந்தக் கணக்குகளை எல்லாம் பார்க்கும்போது ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அதை மூடிவிட்டால் கூட பெரிய மின்சார நிலையத்தை தூத்துக்குடியில் அமைக்கலாம். தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையம் அமைக்கப்பட்டால் நிலக்கரியை கப்பல் மூலம் கொண்டு வந்து, நேரடியாக தூத்துக்குடியிலேயே இறக்கிவிடலாம். அதனால் செலவு பெருமளவில் குறையும். மேலும் அனல் மின் நிலையத்திற்கு அதிகமாகத் தண்ணீர் தேவைப்படுகிறது. தூத்துக்குடியில் அந்த வசதியும் இருக்கிறது. அதனால் சமயநல்லூர் அனல் மின்சார நிலையத்தை மூடிவிடுவது நல்லது என்று அந்தக் கமிட்டி சிபாரிசு செய்தது.

தற்போது எண்ணூரில் செயல்பட்டு வரும் அனல் மின் நிலையத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் அழைத்துச் சென்று காண்பிக்க வேண்டுமென்று நினைத்திருக்கிறேன். அங்கு குளிர வைப்பதற்கு போதுமான தண்ணீர் கிடைக்காமல் போதிய மின் உற்பத்தி கிடைப்பதற்குத் தடை ஏற்படுகிறது. தற்போது நிலைமை சற்று சீரடைந்திருக்கிறது. அதை நீங்கள் எல்லாம் விரைவிலே பார்க்கலாம்.

கமிட்டி சிபாரிசின்படி சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை விற்பனைச் செய்வதற்கு 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் பப்ளிக் டெண்டர் கோரப்பட்டது. அது எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. இந்தியாவின் எல்லாப் பாகங்களுக்கும் தெரியும் வண்ணம் விளம்பரம் செய்யப்பட்டது. வந்த சீல்டு டெண்டர்கள் அனைவரின் முன்னிலையில் ஓப்பன் செய்யப்பட்டன. அதிலே மிக அதிகமான டெண்டர் ரூ. 38.23 லட்சம். இது மின்சார வாரியத்தினால் குறிக்கப்பட்ட டிப்ரிஷியேஷன் வால்யூவுக்கும் மிகக் குறைவான



தொகை. எனவே, அவருக்கு விற்பனை செய்யப்படவில்லை. அதன் பின் இரண்டாவது முறையாக மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு 'சென்ட்ரல் வாட்டர் அண்டு பவர் கமிஷன்' மூலமாக இந்தியாவிலுள்ள எந்த மாநிலத்திற்காவது புதியதாக அனல் மின் நிலையம் அமைக்கக் கூடிய மாநிலங்களுக்கு—இது தேவையா என்று கேட்கப்பட்டது. அப்படித் தொடர்பு கொண்டதில் பஞ்சாப் மின்சார வாரியம் வாங்குவதற்கு முன்வந்தது. 42 லட்சம் ரூபாய்க்கு அவர்களுக்கு சேல்ஸ் ஆர்டர் கொடுக்கப்பட்டது. அதன்பின் அவர்கள் அதை 'டிஸ்மான்டில் செய்து எடுத்துச் செல்வதற்கு அதிகச் செலவாகும், அது கஷ்டமானது' என்று கூறி எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். அதனால் அந்த சேல்ஸ் ஆர்டர் கான்சல் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மூன்றாவது முறையாக 1971-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில்-பப்ளிக் டெண்டர் கோரப்பட்டது. எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. வெளிநாடுகளுக்கு அதன் பாகங்களை ஏற்றுமதி செய்கிற ஏஜெண்டுகள் எல்லாம் நம் நாட்டிலேயே இருக்கிறார்கள். வெளிநாட்டினர் அது வேண்டுமென்றால் அவர்கள் ஏஜெண்டுகள் மூலம் டெண்டர் அனுப்ப முடியும். அதுவும் நான் முன்பே குறிப்பிட்டதுபோல மின்சார வாரியம் குறிப்பிட்டு வைத்திருந்த புல் வால்யூவுக்கு டெண்டர் தொகை இல்லை என்பதனால் ஒரு முறைக்கு மூன்று முறைகள் டெண்டர் கான்சல் செய்யப்பட்டு நம்முடைய புல் வால்யூவுக்கு அதிகமாக வந்த பிறகு தான் கடைசியாக விடப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் தவறுதல் இல்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அமைச்சர் அவர்கள் இதனுடைய புல் வால்யூ என்ன, டிப்ரிசியேஷன் வால்யூ போட்டு இதற்கு நிர்ணயித்திருந்த விலை என்ன வோர்ல்டு டெண்டர் கோரப்பட்டதா என்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அதைத்தான் நான் சொன்னேன். வெளி நாட்டவர்களுக்காக சாமான்கள் வாங்குகிறவர்கள் இந்தியாவிலேயே இருக்கிறார்கள். நாம் இந்தியா பூராவுக்குமாகத்தான் பத்திரிகையில் கொடுத்தோம். அதன் புல் வால்யூ என்ன, டெப்ரிசியேஷன் வால்யூ என்ன [illegible]ர்கள். 56 லட்சம் என்பது என் ஞாபகம். அந்த விவரம் இப்போது [illegible] இல்லாத காரணத்தினால்' வேண்டுமென்றால் அவற்றையும் வா[illegible] நான் இந்த அவைக்கு அளிக்கிறேன்.

**Dr. H. V. HANDE:** Since the matter has been taken up by the Hon. Minister for Electricity, I want to point out that there are two issues involved. One is, what is the necessity for selling

it. Even the ex-Chief Minister, Thiru Bhaktavatsalam has questioned it in his two articles published in 'Swadeshamitran'. I am not convinced with the reply of the Hon. Minister for Electricity.

Then, why it could not be dismantled and used for other thermal power schemes and why the Government have not thought about it?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. அதுபற்றி ஆராய அமைக்கப்பட்ட எக்ஸ்பர்ட் கமிட்டிதான் அது எக்கனாமிகலாக இல்லை. நான்கு ஆண்டுகளாக அந்த இயந்திரம் ஓடாத நிலையில் இருக்கிறது, ஆனால் மாதம் ஒரு முறையாவது ஓட்டிப் பார்க்க 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்றாலும் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சத்திற்குமேல் இப்படி வீணுகச் செலவு செய்துகொண்டிருப்பதைவிட அதை விற்றுவிடலாம் என்கிற யோசனையை எக்ஸ்பர்ட் கமிட்டி தான் தெரிவித்தார்கள்.

நமக்கு பவர் கட் இருக்கிறபோது இப்படி இதை மூடலாமா என்றார்கள். நமக்கு மின்சார நெருக்கடி வரக்கூடாது என்பதற்காகத்தான் நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வேண்டும், தூத்துக்குடி திட்டம் வேண்டும், ஆயிரம் மெகாவாட் கொடுக்கக்கூடிய ஹொகேனக்கல் திட்டம் வேண்டும் என்றெல்லாம் மத்திய அரசிடம் வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறோம்.

Dr. H. V. HANDE: My point is, why did you sell it? Why did not the Electricity Board think of distributing its component parts to various other thermal schemes?

The other point is that it was worth Rs. 2 crores in 1958. In this connection I want to question your method of accounting. We say that wrong accounting has been done. We question the *bona fide* of the Electricity Board in under-estimating the whole thing. When it was worth Rs. 2 crores in 1958, why it was sold for about Rs. 50 lakhs? So, it would be better if the whole matter is examined by a neutral body. This has become a major issue which has been talked out in the public platform. Thiru Bhaktavatsalam has also written articles about it. To dispel the doubts of the public, it is better that the Government should appoint some person who is an expert to find out whether the whole thing has been done in a normal and proper way.



திரு. ஓ. என். சுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால் கேட்டது எல்லாம் அங்கேயுள்ள அனல் மின்சார இயந்திர சாதனங்களின் மதிப்பு 1 கோடிக்கு மேல் அப்போதே இருந்தபோது அதன் மதிப்பு இப்போது என்ன இருக்கும்? அதைப்போய் ஏன் 59 லட்சத்திற்கு விற்கவேண்டும்? அதை வாங்கியவர்கள் சில இயந்திரங்களை மட்டும் ஒரு கோடிக்குமேல் விற்று இருக்கிறார்களே, மேலும் பல இயந்திரங்கள் இருக்கின்றனவே என்பதாக எல்லாரும் மதுரை மாவட்டத்தில் சொல்லிக் கொள்கிறார்களே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா, அதற்கு விடையளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சமயநல்லூர் பவர் ஸ்டேஷனை விற்றது பற்றி இங்கே பல கருத்துக்கள் கூறப்பட்டன. நான் அங்கே பணியாற்றியவன் என்ற முறையில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு கோடி ரூபாய் பொருமானமுள்ள அந்த ஸ்டேஷனை 3 கோடி என்கிறார்கள், அது உண்மையில் உண்மைக்குப் புறம்பானது. 20 ஆண்டுகளுக்கு முன்னே சமயநல்லூரில் அந்த ஸ்டேஷன் இயங்க ஆரம்பித்தபோதே இருந்த அது ஒரு அன்எக்கனாமிகல் ஸ்டேஷனாகவே இருந்திருக்கிறது. அதுவும் தரி சென்னையில் இருந்தோ, மற்ற பகுதிகளில் இருந்தோதான் அங்கே போக வேண்டியிருக்கிறது. பேசின் ப்ரிட்ஜ் அனல் மின் நிலையத்திற்கே இன்றைக்கு நிலக்கரி கிடைக்காத நிலைதான் இருக்கிறது. அதன்காரணமாக ஒரு யூனிட் செயல்படாதிருப்பதை நாம் அறிவோம். என்னூர் திட்டத்திற்கு கல்கத்தாவில் இருந்து, ஹைதராபாத்தில் இருந்து நிலக்கரி வாராததால் இன்றைக்கு எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். சமயநல்லூரில் இந்தக் கஷ்டம் மிகுதியாக இருந்த காரணத்தினால்தான் அப்போது இருந்த [illegible] அந்த நிலையம் அன்எக்கனாமிகலானது [illegible] திட்டம் பெருந்தபளானது [illegible] அதிகப்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்திற்கு [illegible] கூறியிருக்கிறார்கள். சமயநல்லூர் பவர் ஸ்டேஷனில் ப்ரேக்டவுன் ஆனால் கூட கனடாவில் இருந்து உதிரி இயந்திரங்கள் வருமவரை இங்குள்ள தொழிலாளர்கள் வேலையின்றி உட்கார்ந்து சம்பளம் [illegible] கொண்டிருக்கிற நிலைதான் இருந்திருக்கிறது. அங்கே [illegible] 1957-க்கு முன்பே இதை மூடிவிடலாமா என்கிற [illegible] நடந்திருக்கிறது. 1968 இல் எக்ஸ்பர்ட் கமிட்டி [illegible] பேரில்தான் இந்த நிலையத்தை விற்றுவிட [illegible] முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் எப்படி பத்[illegible] காரணத்தினால் மூன்று, நான்கு முறைகள்

டெண்டர் கோரப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாபில் உள்ள மின்சார வாரியம் கூட—தனியார் அல்ல—நாம் குறிப்பிட்டிருந்த தொகைக்குக் குறைவாகத்தான் டெண்டர் கோரியது. நமக்கு அதனால் நட்டம் இருக்கக் கூடாது என்பதற்காகவே அதையும் கான்சல் செய்து மீண்டும் டெண்டர் விட்டு அந்த நிர்ணயித்திருந்த மதிப்புக்கு அதிகமாகவேதான் விற்றிருக்கிறோம். அல்லது, விடப்பட்ட டெண்டர்களில் யாருக்காவது சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறதா, ஒழுங்கான முறை பின்பற்றப்படவில்லை யென்று சொன்னால், குற்றச்சாட்டு என்று ஏற்றுக்கொள்ளலாம். இப்படி ஒரு முறை, இரண்டு மூன்று முறை அரசாங்கம் டெண்டர்களை பெற்று, அதிலே அதிகமாக யார் கேட்டார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்ட நேரத்திலே மின்சார வாரியத்திற்கு நஷ்டம் இல்லை, முறைகேடு
பி.ப. எதுவும் நடைபெறவில்லை; புக் வால்யூவைவிட ரூ. 3 லட்சத்திற்கு அதிகமாக
1-30 லாபம் வேண்டுமென்ற நிலையில்தான் அதை முடிவு செய்தார்களே தவிர, யாருக்கோ கொடுக்க வேண்டுமென்பதற்காக அந்த டிரான்ஸ்பார்மர்களை டிஸ்போஸ் செய்யவில்லை. அன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் அதனால் இந்த அரசாங்கத்திற்கு நஷ்டம். அது நான்-எக்கனாமிக்கல் ஸ்கீம், அதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்யாமல் சம்பளம் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில்தான் அந்த ஸ்கீம் விற்கப்பட்டது ஆக, அதில் எந்த முறைகேடும் இல்லை.

DR. H. V. HANDE: I want the Hon. Minister to answer an entirely different thing. Thermal scheme was found necessary even when D.M.K. came into power. It is not as if as Mr. N. Veerasami says that it was not found necessary. They found it necessary and that is why they brought the Ennore Thermal Scheme. But here the question is not whether Government is going ahead with thermal power but how you have sold it for scrap value. There are 50 tons of copper and each ton costs Rs. 25,000. So, value of copper alone is Rs. 12½ lakhs. But your value is entirely different. Will you please clarify the position?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த மின் வாரியத்தின் சார்பிலே, சமயநல்லூர் தெர்மல் பவர் ஸ்டேஷன், அதிலே உள்ள இயந்திரங்கள் இவைகளை விற்பனை செய்தது சரிதானா? ஏற்கனவே, தெர்மல் பவர் வாங்கி வினியோகிக்கப்படுகிற பல இடங்களில் நாம், அவைகளை வைத்திருக்கும் போது ஏன் இதை விற்றீர்கள்? இது ஒரு கேள்வி. இயந்திரங்களை அப்படியே விற்றார்களே, அவற்றை பிரித்து விற்றிருந்தால் எவ்வளவு லாபம் வரும் என்ற





சந்தேகம். இதை வாங்கியவர் இப்படியெல்லாம் பிசித்து பிரித்து விற்றாரா? எவ்வளவு ரூபாய் லாபத்திற்கு இதை விற்றார்? யார் யாருக்கு விற்றார்? இதெல்லாம் வதந்தி, யாருக்கும் தெரியாது. இதற்குச் சாதாரணமாக பதில் சொல்வதானால், அண்மையிலே சென்னை கடற்கரையிலே பெரிய கப்பல் ஒன்று புயலாலே அடிக்கப்பட்டு கரையிலே ஒதுங்கியது. அதற்கு புக் வேல்யூ எவ்வளவு இருந்திருக்கலாம். அதை ஒருவர் வாங்கி, அக்கக்காகப் பிரித்து உலகமெல்லாம் சென்று விற்று ஏராளமான பணம் சம்பாதித்திருக்கலாம் என்பது வதந்தி. ஆனால், நம்முடைய அரசாங்க கணக்குகளிலே எப்படி இருக்கிறது? இதிலே பின் பற்றிய முறை தவறு? அல்லது அரசாங்கத்திற்கு இதனால் ஏதாவது இழப்பு ஏற்பட்டிருக்கிறதா? அப்படி இழப்பு ஏற்பட்டிருக்குமானால் வேண்டுமென்றே யாருக்காவது சலுகை செய்யப்பட்டிருக்கிறதா? இதுதான் விவாதம். விவாதம் வேறு, வதந்தி வேறு. விவாதத்திற்குப் பதில் சொல்ல முடியும்; வதந்திக்குச் சொல்ல முடியாது.

இந்த சமயநல்லூர் தெர்மல் ஸ்டேஷன் 14 மெகாவாட் கப்பாசிட்டி உள்ளது. அதிலே இருந்து வருகின்ற பவர் தமிழ்நாட்டு கிரிட்டிலே ஒரு சதவிகிதம், அதை 'Efficiency and Economy Committee' ஒன்று பரிசீலித்தது. அது அட்டானமஸ் பாடி, ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டைச் சேர்ந்தது. அது பரிசீலித்தது. அது பரிசீலித்து முடிவிலே ஒரு சிபாரிசு செய்தது, 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் அவர்களுடைய சிபாரிசில் இதை ஏன் விற்க வேண்டும், எண்ணூர் தெர்மல் யூனிட், மற்ற தெர்மல் யூனிட்கள் எல்லாம் இருக்கும் பொழுது இதை ஏன் விற்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். Generation cost per unit (thermal unit) is 12.3 P. இதற்குக் காரணம், 'coal' நிலக்கரி low efficiency ரொம்ப வருஷங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. கோல், வட நாட்டிலிருந்துக் கொண்டு வரும்பொழுது மதுரை நோக்கி தென் பகுதி செல்லும்பொழுது அதிகச் செலவு ஆகிறது. இதைக் காரணமாகவும் சொன்னார்கள், ஒப்பிட்டும் சொன்னார்கள். பேசின் பிரிட்ஜிலே P 8·8 cost of production நெய்வேலியிலே 5.9 காசு. ஆக, இந்த இரண்டு தெர்மல் பவர் ஸ்டேஷன்களைவிட அதிகமாக, ஒரு யூனிட்டுக்கு 12.3 காசு என்று இருக்கிற இந்த பழைய தெர்மல் ஸ்டேஷன் வேண்டாமென்று அவர்கள் சிபாரிசு செய்தார்கள். யாரும், கட்சிக்காரர்கள், சொந்தக்காரர்கள் சொல்லவில்லை, அந்த குழு சொல்லியது. (குறுக்கீடு) ஏன் என்று கேட்டீர்களோ? என்ன காரணம் என்று சொன்னோம். அதற்கு இன்னொரு காரணத்தையும் சொன்னார்கள். இந்த மதுரை பகுதியிலேயுள்ள கிரிட், நெய்வேலி தெர்மல் ஸ்டேஷனுடனும், கேரள கிரிட்டுடனும், சேர்க்கப்

படுமானால்—(சேர்க்கப்பட்டுவிட்டது)—சேர்க்கப்படுவதற்குப் பின்னாலே Samayanallur power station has become obsolete அப்படி ஒரு காரணத்தைச் சொன்னார்கள். மூன்றாவது காரணம் 'The contribution of S.P.S. is one 'per cent of peak demand'. இந்த மூன்று காரணங்களை வைத்து அவர்கள் சிபாரிசு செய்தார்கள். நம்முடைய ஸ்டேட் எலெக்ட்ரிசிட்டி போர்டு அதை ஏற்றுக்கொண்டு, 1968-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இதை டிஸ்போசல் செய்துவிடலாம் என்று முடிவு எடுத்தார்கள். இந்த முடிவு இந்தக் காரணங்களாலே நியாயம் என்று வாதம் கூறுகிறது. (குறுக்கீடு) வாதமே வேறாக இருக்கலாம்.

இந்த எலெக்ட்ரிசிட்டி போர்டு என்ன முறையைப் பின்பற்றியது? இதை நாம் பார்க்கவேண்டும். அரசாங்கம், அதிகாரிகள், அமைச்சர்கள் ஒரு முடிவு எடுக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு பூரண உரிமை இருக்கிறது. அந்த முடிவு அரசாங்கத்திற்கு ஏதாவது இழப்பிலே முடித்திருக்கிறதா அல்லது முறைகேடான முறையிலே நடந்திருக்கிறதா? இதைத்தான் நாம் கருத்திலே கொள்ள வேண்டும். டெண்டர்கள் மூலமாக விற்க வேண்டுமென்று முடிவு செய்தார்கள். இதில் தவறு கிடையாது. ஏதோ, யாரோ கேட்டார்கள், மாமன், மைத்துனன், மந்திரிகள் இப்படி அவர்களைக் காட்ட வரலாம். அப்படி இல்லாமல் டெண்டர் மூலமாக விற்பனை செய்திருக்கிறார்கள். ஆக, இது தவறு என்று யாரும் கூற முடியாது. 1969 அக்டோபரிலே டெண்டர் வந்தது

'The highest individual offer is Rs. 84.75 lakhs. It was much below the depreciated value of Rs. 55 lakhs.'

ஆகவே, டெப்ரிஷியேட்டட் வேல்யூவுக்குக் குறைத்து விற்க நாங்கள் முன்வரவில்லை ஒத்துக்கொள்ளவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த டெப்ரிஷியேட்டட் வேல்யூவை எந்த அடிப்படையிலே பிக்ஸ் பண்ணினார்கள் என்று அமைச்சர் அவர்கள் தயவு செய்து சொல்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டெப்ரிஷியேட்டட் வேல்யூபற்றி இன்கம் டாக்ஸ் ஆக்டிலே இருக்கிறது. எப்படி எப்படி கணக்கு போட வேண்டுமென்று அதிலே இருக்கிறது. ஒவ்வொரு மெஷினரி பிக்ஸ் பண்ண விலையிலிருந்து எத்தனை பர்சன்டேஜ் குறைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகமெல்லாம் ஏற்றுக்கொண்ட அக்கவுண்ட் முறை அது. என்ன கொடுத்தீர்கள்? எப்படி கொடுத்தீர்கள் என்றால் இதை எப்படி நாம் விவாதத்திற்காக ஏற்றுக்கொள்வது? இந்த ரூ. 38.23 என்று இப்பொழுது மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்.





DR. H. V. HANDE: The depreciated value. as Mrs. Jothi Venkatachellum said, hinges on how it is arrived at. The established principle is when a Government article has got depreciated value, there is difference between its actual depreciated value (according to the Income-tax Act) and its real market value. For instance for cars, the Income-tax Act allows a depreciation of 25 per cent per year. In four years' time, it becomes cipher. Now, they have amended the Act and say it is some percentage of previous year's amount. In practice the depreciated value may be one thing but the market value may be much higher. Here there were 15 tons of copper and one ton of copper costs Rs. 25,000. It is Rs. 12½ lakhs. So the depreciated value, according to the Income-tax Act may be low but the real market value is much higher, Rs. 25,000 for a ton. Has the Hon. Minister gone into that also?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் சொன்னவாதத்தினுடைய சாராம்சம் இதுதான். மார்க்கட் வேல்யூ டெப்ரிசியேட்டட் வேல்யூவைவிட அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒரு முறையைப் பின்பற்றி விற்றோமா இல்லையா என்பதைத்தான் பார்க்க வேண்டும், மார்க்கட் வேல்யூ வருமா வாராதா என்று காத்துக்கொண்டிருக்க முடியாது. அமைச்சர் அவர்கள் சொன்னது 38.23 லட்சம் ரூபாய் புக் வேல்யூ 55 லட்சம் ரூபாய். ஆகவே 55 லட்சத்திற்கும் குறைத்து வந்த டெண்டரை ஒத்துக் கொள்ளவில்லை. இதுவே எங்கள் போனபைடியைக் காட்டுகிறது.

அதற்குப் பிறகு 1969 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசாங்கம் முடிவு செய்தது. குறைவாக வருகிறதே, புக் வேல்யூ 55 லட்சம் ஆயிற்றே மார்க்கட் வேல்யூ அதிகமாக இருக்கலாமே, இப்படி டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்பார்களோ என்று எண்ணித்தான் சி. டபிள்யூ. அண்ட் பி. சி. அதாவது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு நாம் எழுதினோம். நீங்கள் வேறு யாருக்காவது விற்பனை செய்ய வாய்ப்புக் கொடுத்தால் அதிகமாகப் பணம் வருமா என்று கேட்டோம். அதற்குப் பிறகு பஞ்சாப் ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டிலிருந்து 42 லட்சம் ரூபாய்க்கு வாங்கிக்கொள்கிறோம் என்ற தகவல் வந்தது. அதற்குப் பின்னாலே கொஞ்ச நாள் கழிந்து அவர்களே இங்கே வந்து பார்த்த பிறகு வாங்க மறுத்துவிட்டார்கள். இதுவும் எங்கள் போனபைடியைத் தான் காட்டுகிறதே தவிர எந்தவிதமான மாலபைடியும் அல்ல.

அதற்குப் பின்னாலே 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டெண்டர்கள் போடப்பட்டது. அதிலே ஒருவர் அதிகமான தொகைக்கு டெண்டர் கேட்டார், 46.61 லட்சத்திற்குக் கேட்டார்கள். அப்பொழுதும் நாம் ஒத்துக்கொள்ளவில்லை, இதுவும் எங்கள் போனபைடியைத்தான் காட்டுகிறது.

அதற்குப் பின்னாலே மறுபடியும் டெண்டர் கேட்டோம். ஆக இத்தனை முறைகள் டெண்டர்கள் கேட்டுத்தான் செய்யப்பட்டிருக்கிறதே தவிர எலக்டிரிசிடி போர்டு யாருக்காகவும் காத்திருந்து விற்பதற்காக முயற்சி செய்தோம் என்று சொல்வது தவறானது. கடைசியாக ஒரு டெண்டர் 59,16,555 ரூபாய்க்கு ஒருவர் கேட்டார்கள். இது புக் வேல்யூவைவிட அதிகமாக இருக்கிறது, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு தரப்பட்டிருக்கிறது. எனவே சட்டப்படி இதிலே நஷ்டமில்லை. நஷ்டம் என்ற நிலையிலே விற்கப்படவே இல்லை என்பதைச் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சொன்னார்கள், அக்கக்காகப் பிரித்து அக்கு வேறு, ஆணி வேறாகப் பிரித்து யாரோ விற்றிருக்கலாம் என்று சொன்னார்கள், அது ஒரு வதந்திதான். வதந்தியைக் கிளப்பிவிட்டு இதை நம்பவில்லை என்று சொல்வது சரியல்ல. ஏதோ அரசாங்கமே—சென்னையிலே தரைதட்டிய கப்பலை பிரித்தமாதிரி—இதையும் ஓடு வேறு கட்டடம் வேறு காயிலான் கடை மாதிரி, ஸ்க்ரு வேறு, அது வேறு, இது வேறு என்று பிரித்துப் பிரித்து விற்றிருந்தால் லாபம் வருமா வராதா நஷ்டம் வருமா வராதா என்பதையெல்லாம் அரசாங்கம் பார்க்க முடியாது. மோட்டாரைப் பிரித்தால் காப்பர் இவ்வளவு கிடைக்கும். தட்டிக் தட்டி விற்றால் இவ்வளவு கிடைக்கும் என்றெல்லாம் நினைப்பது சரியல்ல. ஏதோ பக்தவத்சலம் சொன்னார், சொன்னார் என்று சொல்கிறார்கள் பக்தவத்சலம் சொன்னதெல்லாம் உண்மையென்றால் இந்த ஆட்சி வந்திருக்குமா? (சிரிப்பு). நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். வேண்டுமென்றே சலுகைகள் காட்டப் பட்டிருக்கிறதா வழிமுறைகள் பின்பற்றப்படாமல் இருக்கிறதா என்பதை யெல்லாம் பார்க்க வேண்டும். அப்படியெல்லாம் சிந்திக்காமல் மொத்தமாக ஒரு அவதூறை, புழுதிவாரித் தூற்றுவதைப் போலத் தூற்றினால் அது சரியல்ல என்பதைதான் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மர்மப் பெட்டகத்திலே வைத்துக்கொடுத்த ரகசியத்திலே இதுவும் ஒன்று. நான் அதற்கும் பதிலும் சொல்லிவிட்டேன். (சிரிப்பு).

THIRU R. PONNAPPA NADAR: What about the upset price?





மாண்புமிகு திரு. செ. மாதவன்: டெண்டர்கள் கேட்கும்பொழுதே நாமே டெப்ரிசியேட் வேல்யூவை முடிவுசெய்து, அதற்குக் கீழே அதாவது 55 லட்சத்திற்குக் குறைவாக விற்கக் கூடாது என்ற முறையிலே நான் கடைசியாக கேட்டு வந்த டெண்டருக்கு ஒப்புக்கொண்டு விற்று விட்டோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 46 லட்சத்திற்கு ஒரு டெண்டர் வந்தபொழுது சில பேர் அந்த 46 லட்சந்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சிபாரிச் செய்தார்கள். அவர்கள்தான் ஊழல் பட்டியலைத் தூக்கிக் கொண்டு டெல்லிக்குச் சென்றார்கள். (சிரிப்பு) ஆனால் நாங்கள் கொடுக்கவில்லை.

திரு. ஆர் பொன்னப்ப நாடார்: அது யார் என்று முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏதோ ஜாடை யெல்லாம் புரிந்து கொள்கிற பொன்னப்ப நாடார் அவர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது, தொடர்ந்து நாளைக்கு வைத்துக்கொள்ளலாமா?

THIRU R. PONNAPPA NADAR: Sir, he may perhaps be allowed to continue tomorrow.

திரு. கே. பி. கோபால்: நாளைக்குத் தொடர்ந்து பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. பி. கோபால் அவர்கள் நாளைக்குத் தொடர்ந்து பேசுவார்கள்.

(2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாளையுடன் முடிவதாக அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டு இப்பேரவைக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிக உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேச விரும்புவதால் அனைத்துக் கட்சித் தலைவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவையின் அனுமதியோடு இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை 11—12—1972, திங்கள் கிழமை அன்றும் தொடர்ந்து எடுத்துக் கொண்டு அன்று முடித்து விடலாம் என்று கருதுகிறேன். 12—12—1972 முதல் நடைபெற வேண்டிய அலுவல்கள் குறித்து அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யும்.

(ஈ) புயல்-மழை குறித்து கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஒரு அறிவிப்பு. டாக்டர் ஹாண்டே அவர்கள் 42-வது விதியின் கீழ் புயல்-மழை குறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் 6—12—1972 அன்று கொடுத்தார்கள். தமிழ்நாட்டில் பல பகுதிகளில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்தும், போலீஸ் துப்பாக்கிச் சூடு குறித்தும் பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருந்தன. அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுவதால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை தள்ளுபடி செய்து அனுப்பியபோது தவறுதலாக இந்தத் தீர்மானமும் சென்றுவிட்டதால், அதை எடுத்துக் கொள்ளவில்லை. இனிமேல் இவ்விதம் நடைபெறாமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் நாளை காலை 9 மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.48-க்கு ஒற்றிவைக்கப்பட்டது.

(7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் :

A. *Statutory Rules and Orders*

பி.ப. 1-48 35. Notification issued with G.O. Ms. No. 1357, Rural Development and Local Administration, dated the 3rd July 1972 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd July 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

36. Notification issued with G.O. Ms. No. 2335, Agriculture, dated the 7th September 1972, in regard to declaration of notified market area of the Lalgudi market for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 in respect of paddy and Gingelly. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]



37. Notification issued with G.O. Ms. No. 929, Rural Development and Local Administration, dated the 3rd May 1972 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd May 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

38. Notification issued with G.O. Ms. No. 2488, Revenue, dated the 21st September 1972 in regard to the cancellation of the entertainments tax granted to the film shows conducted by the Madras, Rasana, Madras and Ray Film Society, Madurai. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

B. *Reports, Notifications and Other Papers.*

@ 16. Annexure to the Tamil Nadu District Police (Amend- Madras Film Society, Madras, Madras Film Fans Association, ment) Bill, 1972.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

## சனிக்கிழமை, 1972 டிசம்பர் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### கிராமங்களுக்கு வானொலிப் பெட்டிகள்.

*101—வினா : திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டி அரசின் சார்பில் வழங்கும் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. பி. எஸ். மணியன் : வானொலிப் பெட்டிகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றன ? ஊராட்சி மன்றங்களின் தலைமையிடத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறதா ? அல்லது சிற்றூர்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டில் 1970–71ம் ஆண்டு முடிவில் 13,060 ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் உள்ளன. அவற்றில் 27,857 வானொலிப் பெட்டிகள் இருந்து வருகின்றன. 1971–72 72–ஆம் ஆண்டில் 5,000 வானொலிப் பெட்டிகள் வைக்க அரசினரால் ஐந்து லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. வானொலிப் பெட்டிக்கு அரசாங்கம் ரூ. 100 மானியமாகத் தருகிறது. ஊராட்சி மன்றமும், ஊராசி ஒன்றியமும் சேர்ந்து வானொலிப் பெட்டிகளை வாங்குகிறார்கள் தமிழகத்தைப் பொறுத்த வரையில், 16,940 வருவாய் ஊர்களும் 41,890. சிற்றூர்களும் உள்ளன. எல்லா ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் ஆண்டொன்றுக்கு 5,000 வானொலிப் பெட்டிகள் வைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1972–73–ஆம் ஆண்டிலும் 5,000 வானொலிப் பெட்டிகள் வழங்க அரசு திட்டம் அமைத்துள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் 42 கிராமங்கள் இருக்கின்றன. நிதி நிலை இருந்தால், எல்லாக் கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் அமைத்துக் கொள்ளலாம் என்ற, உத்தரவை பிறப்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வைத்துக்கொள்வதற்கு இப்போதே வாய்ப்பு இருக்கிறது. இப்போதே 13,060 ஊராட்சிகளும் பேரூராட்சிகளும் இருக்கின்றன. அவற்றில் 27,857 வானொலிப் பெட்டிகள் இருக்கின்றன. எல்லா ஊர்களுக்கும் வானொலிப் பெட்டிகள் இருக்க வேண்டும் என்பது குறிக்கோள். அரசைப் பொறுத்த வரையில், ஆண்டொன்றுக்கு 5,000 வானொலிப் பெட்டிகள் வாங்குவதற்கு மட்டும் மானியம் வழங்குகிறார்கள். எந்த ஊராட்சி ஒன்றியத்திலோ, ஊராட்சி மன்றத்திலோ நிதி வசதி இருந்தால் அது வானொலிப் பெட்டி வாங்கிக்கொள்வதில் தடை இல்லை.

திரு. வ. சுவாமிதாஸ்: 1972–73–ஆம் ஆண்டுக்கு கன்யாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் எத்தனை வானொலிப் பெட்டிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, அரசு மானியத்தில் வாங்கப்படுகிற வானொலிப் பெட்டிகளை அந்தந்த கிராமத்தின் ஊராட்சி மன்றத் தலைவர், தம் வீட்டில் வைத்துக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை அகற்றி, கிராமப் பொது இடங்களில் மக்கள் மத்தியில் வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமான வரையில் பொது இடங்களில் வைக்க வேண்டுமென்றுதான் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதற்கென்று தனிக் கட்டடம் கட்ட வேண்டும். அதற்கு ரூ. 4,000 முதல் ரூ. 5,000 வரை தொகை இருந்தால்தான் கட்டடம் கட்ட முடியும். அப்படிப்பட்ட வசதி இல்லாத ஊர்களில் சில பேர் தாமாகவே முன்வந்து நன்கொடை வழங்குகிறார்கள். அப்படி வழங்கப்பட்ட சில குறிப்பிட்ட இடத்தில்தான் வானொலிப் பெட்டியை வைக்கலாம். அப்படிக் கட்டடம் இல்லாத நேரத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டில் சில பல இடங்களில் இருக்கலாம். பொது இடம் இருந்து தனிக் கட்டட வசதி இருந்து, அங்கு வானொலிப் பெட்டியை வைக்காமல் ஊராட்சி மன்றத் தலைவர் வீட்டில் வைத்திருந்தால் அப்பொழுது அதைத் தவறாகக் கொள்ளலாம்.

திரு எம். தேவராசன் : இத்தகைய வானொலிப் பெட்டிகளில் என்ன என்ன நிகழ்ச்சிகளை வைக்கலாம் என்ற வரையறை ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஒன்றும் வரையறை இல்லை.



*Old manuscripts in Saraswathi Mahal, Thanjavur.*

*102— *Q.* THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that research is conducted on the old manuscripts found in Saraswathi Mahal, Thanjavur.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் உள்ள பழஞ் சுவடிகளை ஆராய்ச்சி செய்ய தமிழக அரசு குழு ஒன்றை நியமித்துள்ளதா? அல்லது, மத்திய அரசு நியமித்துள்ளதா ? அப்படி நியமிக்கப்பட்டிருந்தால், அந்தக் குழுக்களில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கே பல்வேறு மொழிகளில் பல்வேறு ஆராய்ச்சிப் பண்டிதர்களும் புலவர்களும் இருந்து சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால், யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற குறிப்புகள் இல்லை. அந்த நூல் நிலையத்தில் கிட்டத்தட்ட நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகளைச் சார்ந்த பழம் பெரும் சுவடிகளும், ஏடுகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் உதவி செய்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMAIAH : Sir, sometime back I had been to the Saraswathi Mahal Library at Thanjavur and I was there for some days. I found that there is heavy work to be done there but the number of scholars and manuscript readers are inadequate. I was told that the emoluments and pay of the scholars there are very meagre. So, may I know from the Hon. Minister for Education whether their condition has been improved in the recent years?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த சரஸ்வதி மகால் நூல் நிலையத்திற்கு 1971–72–ம் ஆண்டுக் கணக்குப்படி மாநில அரசு ரூ. 58,822 உதவி நிதியாக அளித்து வருகிறது. அதைத் தவிர, தனியாக, ரூ. 20,000 புத்தகங்கள் வெளியிடுவதற்காக என்று மட்டும் அரசு மானியம் அளித்து வருகிறது. இதைத் தவிர, உதவி நிதியாக மத்திய அரசு ரூ. 15,000 அளித்து வருகிறது. மேற்கொண்டும் தேவைப்படுகிற நிலை இருக்குமானால், மேற்கொண்டும் ஆராய்ச்சியாளர்கள் தேவைப்படுமானால், அதற்கென்று இருக்கும் குழுவினர் அரசுக்கு எழுதியனுப்பினால் அது பற்றிப் பரிசீலித்துத் தக்க முடிவை அரசு எடுக்கும்.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : தமிழ்நாட்டின் பல இடங்களிலும் விஞ்ஞானம், மருத்துவம், இன்னும் பழைய வரலாறு பற்றிய எல்லாம் முக்கியமான பழங்கால ஏட்டுச் சுவடிகள் சில இடங்களில் பரவி

பரம்பரையாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. அவைகளை யெல்லாம் அரசு நேரடியாகவோ, அல்லது மாவட்ட ஆட்சியாளர் மூலமாகவோ வேண்டுகோள் விடுத்து, ஒன்று சேர்த்து அவைகளை ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் இருக்கிற பழஞ் சுவடிகளைத் திரட்டுகிற பணிகள் பன்நெடுங்காலமாகவே நடைபெற்றுக் கொண்டு வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் பழஞ் சுவடிகளைச் சேர்த்து வைக்கின்ற பகுதி ஒன்று இருந்து வருகிறது. தனிப்பட்டவர்கள் அவர்களாகவே கொண்டுவந்து தருவார்களானால், ஏற்றுக்கொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. சில பல இடங்களில் சில புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் இன்ன இடத்தில் இருக்கிற சுவடி வேண்டும் என்று கேட்கும்போது அந்த இடத்திலே கேட்டு வாங்கும் நிலை இருக்கிறது. அப்படித் திரட்டி வைக்கப்பட்டிருக்கிற நிலைமையில்தான் பழங்காலச் சுவடிகள் பல சரஸ்வதி மகாலுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

### *Inscriptions at Brahadeeswarar Temple, Thanjavur.*

*108.—*Q.* THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the valuable inscriptions traced by the Archaeological Survey of India at Brahadeeswarar Temple at Thanjavur ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூரில் உள்ள பிரகதீச்வரர் கோவில் செப்பு விமானத்திலுள்ள நான்கு கல்வெட்டுகள், மைசூர் தலைமைக் கல் வெட்டுக் கலை ஆய்வாளரால் படி எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கு. காமாட்சி : தஞ்சை பிரகதீச்வரர் ஆலயத்திலுள்ள சில கல்வெட்டுக்களில் அக் கோவிலுக்குரிய சொத்துக்களின் விவரங்கள் அடங்கி இருப்பதாகக் கூறப்படுகிறதே, அப்படியானால், அந்தச் சொத்துக்களை யெல்லாம் மேற்கொள்ள அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ? எவ்வளவு சொத்துக்கள் அதிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றன ? மற்றவை இன்னும் யார் யாரிடம் இருக்கின்றன என்ற தகவல் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த பிரகதீச்வரர் கோயிலின் மதிற் சுவர்களில் கல்வெட்டுக்கள் இருக்கின்றன, அவற்றில் பல்வேறு சொத்து விவரங்கள் இருக்கின்றன என்று ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்பு பதிப்பிக்கப்பட்டன. அவை யார் யாரால் பதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிவது என்பது இயலாத ஒன்று. பத்தாண்டுகளுக்கு முன்பிருந்த விவரங்களைத் தேடுவதே மிகக் கடினமாக இருக்கும்போது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த விவரத்தை இப்பொழுது தேடுவது என்பது இயலாத ஒன்று. ஆனால், கல்வெட்டுக்களில் இருக்கும் முக்கியமான விவரங்கள் மட்டும் தனியாகப் புத்தகமாக புதை பொருள் ஆராய்ச்சித் துறையினரால் வெளியிடப்பட்டிருக்கிறது.



திரு எம். தேவேந்திரன் : அந்த ஆராய்ச்சியில் திருமருகல் என்ற ஊரில் ராஜ ராஜ சோழன் காலத்தில் நாணயம் அடிக்கும் தொழிற்சாலை இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட விவரம் ஏதாவது அரசுக்குக் கிடைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்த ஆராய்ச்சியில் தெரியவில்லை. ஆனால், ஒரு சமயம் கல்வெட்டுக்களில் இருக்கக் கூடும். முழுக் கல்வெட்டுக்களைப் பற்றிய நூலை ஆராய்ந்தால்தான் அது தெரியவரும்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் நடைபெற மத்திய அரசால் தனியாக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்து தரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் தனியாக அமைக்கப்பட்டிருக்கும் புதை பொருள் ஆராய்ச்சித் துறையினர் இது பற்றிய ஆராய்ச்சியை நடத்துகிறார்கள். இதற்கென்று தனியாக மத்திய அரசின் உதவி கிடைக்கப் பெறவில்லை.

திரு கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழகத்தின் பழம் பெரும் சாதனைகளில் வைத்தியம், விஞ்ஞானம், கணிதம் போன்றவைகள் மிகப் பெரிய சாதனைகள் அடைந்திருந்ததாகவும், அவைகளைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய செப்பேடுகள் தஞ்சாவூரில் இருந்ததாகவும், அவைகளை வைஸ்ராய் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங் தன்னுடைய நாடாகிய இங்கிலாந்து நாட்டிற்கு எடுத்துச் சென்று, சமஸ்கிருதப் புலவர்களையும், தமிழ் நாட்டிலேயிருந்து அழைத்துச் சென்று அவர்களைக் கொண்டு மொழி பெயர்த்து, தங்களுடைய விஞ்ஞான முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டதாக ஆதார பூர்வமாகக் கூறுகிறார்களே, அப்படியானால், அது சம்பந்தமான அந்தச் செப்பேட்டுக் குறிப்புகளைத் திருப்பிப் பெறவும், அது சம்பந்தமான விவரங்களைச் சேகரித்து தமிழகத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்ற பல்வேறு செய்திகளைச் சொல்லி வருகின்றார்களே தவிர, அதற்கான அடிப்படை ஆதாரங்களை நாம் பெறுவதற்கில்லை. சில பல சுவடிகள் மேல் நாடுகளில்

பல்வேறு நிலையங்களுக்குப் போயிருக்கின்றன. மேல் நாடுகளில் சுவடிகளை வைத்து ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். நம்முடைய பழம் பெரும் சுவடிகள் முக்கியமான மேல் நாடுகளில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், எதையெதை எடுத்தார்கள், என்னென்ன ஆராய்ச்சி செய்தார்கள் என்பதற்குப் பல்வேறு குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள முக்கியமான நூல்களிலிருந்து இது மாதிரியான மருத்துவம், விஞ்ஞானம் போன்ற நூல்களில் 225 நூல்களை இப்பொழுது நாம் புதுப்பித்து அடக்க விலைக்குத் தருகிறோம். அந்த நூல்களை வைத்து இப்பொழுதுள்ள ஆராய்ச்சியாளர்கள் ஆராயந்து வருகிறார்கள்.

திரு டி. வி. சம்பத் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதியில் பூம்புகார் நகரத்தில் புதை பொருள் ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. தற்பொழுது அந்த முயற்சி கைவிடப்படுவதாகத் தெரிகிறது. இதுவரை ஆராய்ச்சி நடத்தப்பட்டதில் பண்டைய கலாசாரங்களைப் பற்றி ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பூம்புகார் நகரைப் பற்றி மத்திய அரசின் புதை பொருள் ஆராய்ச்சித் துறையினரும் ஆராய்ச்சி நடத்தினார்கள். மாநில அரசு சார்பிலும், ஆராய்ந்தார்கள். அந்த இடம் கையகப்படுத்துவதில் காலத் தாழ்வு இருந்ததால் மீதி கைவிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் சார்பாக அகழ்வாராய்ச்சித் துறையினர் அந்தப் பணிகளை மீண்டும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

**THIRU K. S. KOTHANDARAMIAH : It is learnt that Tamil Nadu has not got a separate Archaelogical department and Mysore and Tamil Nadu have got a common Archaelogical department situated in Mysore. In view of the huge number of inscriptions and historical records in our State, may I know from the Hon. Minister whether he would ask the Central Government to sanction a separate Archaelogical department for Tamil Nadu?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது தமிழகத்திற்கென்று தனியாகத்தான் புதை பொருள் ஆராய்ச்சித் துறை இருக்கிறது. முதலிலே இந்தக் கல்வெட்டுக்கள் பற்றிய படிகள் மற்றவைகள் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டியிலே சேமித்து வைக்கப்பட்டிருந்தது. பிறகு மத்திய அரசு பெங்களூருக்குக் கொண்டு சென்றது. அதில் பெரும்பாலும் தமிழகத்தைப் பற்றித்தான் இருக்கிறது. ஆகவே, அந்தத் துறையைத் தமிழகத்திற்கு மாற்றித் தர, சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்காரிடமிருந்து அது ப்பற்றி பதில் எதுவும் வரவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட தமிழகத்துக் கல்வெட்டுக்களில் உள்ள பண்டைய காலத் தமிழ், இன்றைய தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியாத அளவில் வட மொழி கலந்த தமிழாக



இருக்கிறது. எனவே, அவைகளை மொழி பெயர்த்து இன்றைய தமிழ் மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் நூல் வடிவத்தில் தருவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த முயற்சியைத் தமிழகத்தில் அகழ்வாராய்ச்சித் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை தற்பொழுது தமிழகத்தில் எந்தெந்த முக்கியமான பகுதிகளில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர், குறிப்பாக பூம்புகார் பற்றிய ஆராய்ச்சியை நடத்துகிறார்கள். மற்றும் தஞ்சை பிரஹதீஸ்வரர் கோயில், ஜெயங்கொண்டான் கோயில், வேலூர் கோட்டை கோயில் போன்றவைகள் மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இருந்து வருகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கல்வெட்டுக்கள் எந்தெந்த ஆட்சி இந்த நாட்டை ஆளும் என்று கூறுகின்றதாகத் தெரிகிறது. யோசனை கூறும் ஒரு கல்வெட்டில் 25 ஆண்டுக் காலத்திற்கு சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஆள்வார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பின்படி பார்த்தால் சூரிய வம்சம் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதய சூரியனைக் கொண்ட அரசுதான் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தால் இப்பொழுது கிளர்ச்சி செய்பவர்களிடத்தில் அந்த உறுதிப்பாட்டை அரசு சொல்லுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றி எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஆராய்ச்சியாளர்கள்தான் அது பற்றி ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

## ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை.

* **104**—வினா : திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி ஆஸ்பிடலில் தற்போது எத்தனை அறுவை சிகிச்சை தியேட்டர்கள் இருக்கின்றன ?

(இ) அதில் குளிர்ப்பதனம் செய்யப்பட்ட (Air-conditioned) அறைகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஐந்து. (இ) நான்கு.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி நான்காக இருக்கும் குளிர்பதன அறைகளில் இந்தக் கேள்வி போட்ட நேரத்தில்—இந்தக் கேள்வி போட்டு சில மாதங்கள் ஆகின்றன—ஒன்று கூட வேலை செய்ய வில்லை என்று தெரிகிறது. அப்படி அரசாங்கத்துக்கு அங்கிருந்து ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? அப்படி யென்றால் மக்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை நிலையங்கள் கோளாறு ஏற்பட்டால் உடனடியாக ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு எதிர்காலத்திலாவது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அறை களில் 3, 4, அறைகளில் உள்ளவை அப்பொழுது வேலை செய்யாமல் பழுதுபட்டு இருந்தது என்பதால் அவைகளை ஒன்றாகப் பழுது பார்க்க அனுப்ப முடியாமல் இருந்தது. 10–7–1972–இல் தியேட்டர் [ ஏ ]யில் குளிர்பதனக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதுவும்கூட உடனே பணியாற்ற முடியவில்லை. கார்பனேசேஷன் என்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டு இப்பொழுது பணியாற்றுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சி போன்ற மாவட்டத் தலைநகரங்களில் இருக்கும் மருத்துவ மனைகளில் உள்ள அறுவை சிகிச்சை அறை ஏர்கண்டிஷன் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அது பரிசீலிக் கப்படும்.

திரு. ந. தருமலிங்கம்: தலைவரவர்களே, ஸ்டான்லி மருத்துவ மனையில் குளிர்ப்பதனம் செய்யப்பட்ட அறைகளில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் நோயாளிகளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ? அப்படி யென்றால் எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குளிர்பதன அறையிலே அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காக என்று கட்டணம் இல்லை. மற்ற குளிர்ப்பதனம் செய்த அறைகளில் தங்கியிருப்பதற்காக என்று கட்டணம் இருக்க முடியும்.

*105 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் "சர்ஜிகல்" பகுதிக் காகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில் அது எப்போது கட்டப்படும்?

(உ) அதற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.



(இ) திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடுடன் வரைபடங்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.

(உ) மொத்த ஒதுக்கீடு ரூ. 15 லட்சங்கள். நடப்பாண்டிற்கான செலவு ஒதுக்கீடு ரூ. 10 லட்சங்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வட சென்னையிலிருக்கும் அந்த மருத்துவமனை அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பெரிதும் பயன்படும் மருத்துவ மனையாகும். இந்தப் ப்ரபோசல் வந்து பல ஆண்டு களாகியும், இன்னும் வரைபட நிலையிலேயே இருப்பதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அதை உடனடியாகச் செயல்படுத்த துரிதமாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் வந்து பல ஆண்டுகள் ஆகவில்லை. இந்தத் திட்டம் ஏற்கப்பட்டது 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலேதான். எனவே 1972–73-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற அடிப்படையில் அதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

## Veterinary Sub-Centres in Kanyakumari.

*106—Q. THIRU N. DENNIS : Will the Hon. Minister for Public Health be pleased to state the number of Veterinary Sub-Centres in Kanyakumari district—constituencywise as on date?

HON. THIRU K. ANBAZHAGAN :

| | |
|---|---|
| (1) Kanyakumari .. .. .. .. | 4 |
| (2) Nagercoil .. .. .. .. | 1 |
| (3) Colachel .. .. .. .. | 3 |
| (4) Padmanabhapuram .. .. .. | 2 |
| (5) Thiruvettar .. .. .. .. | 2 |
| (6) Killiyur .. .. .. .. | 3 |
| (7) Vilavancode .. .. .. .. | 3 |

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நாகர்கோயிலில் இருக்கும் அந்த சப்-சென்டரிலே ஒரு கட்டிடம் மிகவும் மோசமாகப் பழுதடைந்து இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி அங்கு சென்றபொழுது நேரிலே கூறினார்கள். இதுகாறும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பொது விவரம் கேட்டிருப்பது. எனவே இப்பொழுது கேட்ட கேள்வி பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி: பல சப்-சென்டர்களில் கட்டடங்கள் இருந்தும் லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட்ஸ் போன்ற பணியாளர்கள் இல்லாதிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட இடங்களில் விரைவாக ஆட்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கு ஒரு கேள்வியை விடையாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படி எந்த ஒரு இடமாவது அங்கத்தினருக்குத் தெரியுமா? அரசாங்கத்திற்கு ஏற்கனவே தெரிவித்திருக்கிறார? அப்படியானால் அதைப் பற்றிப் பரிசீலித்து முடிவு செய்ய முடியும்.

திரு. ப. முத்துசாமி: என்னுடைய தொகுதியில் மூன்று இடங்களில் கட்டடங்கள் இருந்தும் பணியாட்கள் இல்லை என்பதைப் பற்றி ஏற்கனவே அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறேன். அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனைக் கட்டடங்கள்.

* 107—வினா திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவமனை கட்ட இருந்து, ஒத்திவைக்கப்பட்ட திட்டங்கள் எவை?

(இ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு வேலை துவக்காமல் இருக்கும் இடங்கள் எவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட இடங்களில் மருத்துவ மனைகள் கட்ட இருந்தது ஒத்திவைக்கப்பட்டன:—

1. திருச்சிராப்பள்ளி,
2. திருப்பூர்,
3. விக்ரமசிங்கபுரம்,
4. தூத்துக்குடி,
5. திருநெல்வேலி,



6. ராஜபாளையம்,
7. சேலம்,
8. மேட்டூர்,
9. "E.S.I." காசநோய் மருத்துவமனை, மதுரை,
10. "E.S.I." காசநோய் மருத்துவமனை, கோயம்புத்தூர்.

(இ) 1971-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு, வேலை துவக்காமல் இருக்கும் இடங்கள் கீழ்வருமாறு:—

1. தென் சென்னை E.S.I. மருத்துவமனை.

2. மருத்துவமனை வார்டுகள்:—

(1) 16 படுக்கைகள் கொண்ட E.S.I. வார்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் உள்ள அரசாங்க மருத்துவமனைகளில் கட்டப்படுபவைகளாகும்:—

மேட்டுப்பாளையம்.
பொள்ளாச்சி.
ஈரோடு.
சிவகாசி.
கும்பகோணம்.
திருப்பத்தூர் (வட. ஆற்காடு).
திண்டுக்கல்.
செங்கோட்டை.
நாகப்பட்டினம்.
பழனி.
நாகர்கோவில்.

(2) பென்னத்தூரில் அரசாங்க காசநோய் மருத்துவமனையில் (வட ஆற்காடு) 26 படுக்கைகள் கொண்ட E.S.I. வார்டு.

3. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, மருந்தகம், எழும்பூர்.

4. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, மருந்தகம், உசிலம்பட்டி, மணப்பாறை (மற்றும் 10 படுக்கைகள் கொண்ட வார்டு).

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஏறத்தாழ 10 இடங்களில் இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தை அமல் நடத்துவது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நாலைந்து

ஆண்டு காலமாகவே மத்திய அரசாங்கத்திலிருந்து இந்தத் திட்டத்திற்கான பணம் வருவது மிகக் குறைவாக இருக்கிறது. குறிப்பாக திருப்பூர் போன்ற தொழில் நகரங்களில் விரைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. என்.வி. நடராசன் : இ.எஸ்.ஐ. நிறுவனத்தினுடைய நிதிநிலை சற்றுக் கூடியிருப்பதாக மத்திய தொழிலாளர் அமைச்சர் கடில்கர் தெரிவித்திருக்கிறார். அதற்கேற்ப தமிழ்நாட்டுக்கு அதிகமாக நிதி ஒதுக்குமாறு மடல் தீட்டியிருக்கிறோம்.

திரு. கு. காமாட்சி : சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் வாழும் பகுதியாக திருவெறும்பூர் மாறி இருக்கிறது. அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவமனை நிறுவ அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நிதிநிலைக்கேற்ப அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : தென்னாற்காடு மாவட்டத்தில் தொழிலாளர்களுக்காக இந்தத் திட்டத்தின்கீழ் மருத்துவ மனை கட்ட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதுபோன்ற யோசனைகள் எல்லாம் தக்க சமயத்தில் பரிசீலனை செய்யப்படும்.

## பண்ணைவாடி அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள்.

*108 வினா: திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

மேட்டூர் தாலுக்கா, பண்ணைவாடி கிராமம் அரிசன சேரி மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பண்ணைவாடி அரிசன சேரி மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக அந்த ஊரிலுள்ள நி.அ. எண் 1505, 1503/ஏ, 1503/பி-ல் உள்ள 1·41 ஏக்கர் நிலங்களை ஆர்ச்சிதம் செய்வதற்காக நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 4 (1)-ன் கீழ் விளம்பர அறிக்கை 15—4—1970 தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டு பிரிவு 6-ன் கீழ் உறுதிமொழி அறிக்கை 9—6—1971-ல் அரசிதழில் வெளியிடப்பட்டது. இந் நிலங்களின் சரியான விலை நிர்ணயிக்கப்பட்டதும் நில விலைத் தீர்வு (அவார்டு) வழங்கப்பட்டு, நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அரிசன மக்களுக்கு விரைவில் வீட்டு மனைகள் வழங்கப்படும்.



## நங்கவள்ளி அரிசன குடியிருப்புக்குத் தொடர்புப் பாதை.

*109 வினா : திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மேட்டூர் தாலுகா நங்கவள்ளி அரிசன் சேரிக்கு தொடர்புப் பாதை போடுவதற்கான அரசாணை எண் 612, ச.ந. 12—3—1971 தேதியிலேயே பிறப்பிக்கப்பட்டும், அவ்வாணை செயலுக்குக் கொண்டுவரப்படாமலிருப்பதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதன் சம்பந்தமான நில விலைத் தீர்வு விசாரணையை (அவார்டு விசாரணை) தனித் தாசில்தார், ஓமலூர் 6—10—1972 அன்று நடத்தியுள்ளார். (இந்நிலங்களில் பருத்தி பயிர் செய்யப்பட்டிருப்பதால்), நிலம் இன்னும் கையகப்படுத்தப் படவில்லை.

## Industrial Unit at Hosur.

*110 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. Minister for Industries be pleased to state :—

(*a*) whether there is any proposal to start a feeding unit to Bangalore Hindustan Machine Tools Factory at Hosur where the symmetrical conditions and facilities are available ; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இதுபற்றி மத்திய அரசிடம் வலியுறுத்திக் கூறப்பட்டு வருகிறது.

**THIRU B. VENKATASWAMY : Sir, Hosur has a beautiful climate similar to that of Bangalore and the labour is also cheap there ; further our Government have declared that area as industrially backward. In view of this, may I know from the Hon. Minister for Industries whether this Government will press to open the Accessories Feeding Unit at Hosur to the Hindustan Machine Tool factory.**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பற்றிய சில கருத்துக்களை மத்திய அமைச்சர் தெரிவித்தவுடன் நம்முடைய அரசு சார்பில் மத்திய அரசுக்கு வலியுறுத்தி இருக்கிறோம். ஹிந்துஸ்தான் மெஷின் டூல்ஸ், பாரத் எர்த் மூவர்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ், இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நான்கின் சார்பில் உப தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காகப் பரிசீலனை செய்வதற்காக குழு அமைத்தால் மாநில அரசு ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறதென்று மத்திய தொழில் அமைச்சருக்கு எழுதப்பட்டிருக்கிறது.

**THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when that Committee will examine this matter in that area.**

மாண்புமிகு திரு செ. மாதவன் : இதுபற்றி மத்திய தொழிலமைச்சரை கேட்க வேண்டும்.

## Additional Courts for West Ramanathapuram.

* 111 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. Minister for Industries be pleased to state :—

(*a*) whether the Government have received the resolution passed unanimously by the West Ramanathapuram District Deveolpment Council demanding the location of a Sub-Court at Srivilliputhur and a Sub-Magistrate's Court at Rajapalayam ; and

(*b*) the steps taken on the resolution?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஸ்ரீவில்லிப்புத்தூரில் துணை நீதிமன்றம் ஒன்றையும், ராஜப்பாளையத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் ஒன்றையும் அமைப்பது குறித்த செயற்குறிப்பு, இம் மாநிலத்தில் உள்ள உரிமை வழக்கு நீதி மன்றங்கள், குற்ற வழக்கு நீதி மன்றங்கள் ஆகியவற்றின் ஆட்சி வரம்பைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டு சென்னையில் செயல்படும் குழுவின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்சொன்ன குழுவின் அறிக்கை இன்னும் வரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் குழு பல மாவட்டங்களுக்கும் சென்று விவரங்களைச் சேகரிப்பது முடிந்து விட்டதா? இன்னும் எத்தனை நாட்களுக்குள் அறிக்கையை வெளியிட வேண்டுமென்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ? விரைவில் அறிக்கை வெளியிடப்படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் ; எல்லா பரிசீலனையும் முடிந்து விட்டது என்று தெரிவித்திருக்கிறார்கள். இறுதியாகப் பரிசீலித்து எல்லா நீதிமன்றங்களைப் பற்றியும் ஓர் அறிக்கை தருவதாகக் கூறி இருக்கிறார்கள். மிக விரைவில் தர வேண்டுமென்று அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

## கும்முடிப்பூண்டி இராஜனேரி நீர்த் தேக்கம்.

*112 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், தேர்வாய் அருகில் அமையும் இராஜனேரி நீர்த் தேக்கத் திட்டத்தின் பணி எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பொதுப்பணித்துறை அதிகாரிகள் இத் திட்டத்தை ஆய்விற்காக எடுத்துக் கொண்டுள்ளனர்,



திரு. கா. வேழவேந்தன் : இந்த இராஜனேரி நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராமங்களில் ஏராளமான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். இப்போது பெய்த மழைத் தண்ணீர் கூட வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. இதை விரைவுபடுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோட்டப் பொறியாளர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கான முன் ஆய்வுக்கான புள்ளி விவரங்களைக் கேட்டுள்ளார். மற்றும் புலனாய்வுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கோட்டப் பொறியாளர் இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று தலைமைப் பொறியாளரால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த அடிப்படையில் திட்டம் விரைவுபடுத்தப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: பொதுவாக செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்தத் திட்டத்தை மேற்கொண்டாலும் சென்னை மாநகராட்சியின் ஒப்புதல் தேவை என்று சொல்லுகிறார்கள். இதனால் எங்களுக்கு இருக்கிற ரைப்பேரியன் ரைட்ஸ் பாதிக்கப்படுகிறது. இதைப் போக்க கூடுதலான தண்ணீரை (சர்ப்ளஸ் வாட்டரை) பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவை சென்னை மாநகராட்சிக்கு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை குடிநீர்த் திட்டத்திற்குப் பாதகம் ஏற்படாமல் செங்கற்பட்டு மாவட்டத்திலே சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. சென்னை மாநகராட்சியின் அனுமதியைக் கேட்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் இருக்கின்ற ரைப்பேரியன் ரைட்ஸ் பாதிக்கப்படாமல் இருக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : ஆய்வில் இருக்கும் ராஜநேரி நீர்த் தேக்கத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அதிகாரிகள் வரையறுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தப் புள்ளி விவரம் தற்போது இல்லை.

## சாலைக்கிராமம் கால்வாய் புனரமைப்பு.

*113 வினா : திரு வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வைகை நதியிலிருந்து பிரிந்து செல்லும் சாலைக்கிராமம் கால்வாயைப் பழுதுபார்க்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு அனுமதி பெற வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், சாலைக்கிராமம் வரத்துக்கால், 14 ஏரிகள் பயனடையும் வகையில் ஓர் புனரமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு (ரூ. 5·85 லட்சம்) தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையிலுள்ளது.

## Sewage farm at Pallikaranai.

முற்பகல் 9-30 * 114 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether there is any proposal under consideration to construct a new sewage farm at Pallikaranai near Madras ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சென்னை நகர 5ஆம் மண்டலத்தில் விரிவான வடிகால் திட்டத்தின் கீழ் தென் சென்னை சாக்கடைக் கழிவு நீரை அடையாறில் சேகரித்து இரும்புக் குழாய் மூலமாக பள்ளிக்கரணைக்கு எடுத்துச் சென்று அங்குள்ள சாக்கடைக் கழிவுப் பண்ணையை விரிவாக்கி பயன் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக அரசு சென்னை மாநக ராட்சிக்கு பள்ளிக்கரணைச் சதுப்பு நிலத்தில் உள்ள புறம்போக்கு நிலம் 875 ஏக்கர் (நில அளவை எண் 657/3 ஏ2ம் 657/1 பி) கொடுத் துள்ளது. இணைக்கும் பணிகளைத் தவிர குழாய் போடுதல், மையக் கருவிக் குழாய் அமைத்தல் ஆகிய வேலைகள் ஏறத்தாழ முடிவடைந்து விட்டன. மேலும் இறைவை நிலயத்தில் மேலேற்றும் இயந்திரம் நிறுவும் பணி வெகுவாக நடைபெறுகின்றன. பள்ளிக்கரணையிலுள்ள கழிவு நீர் சுத்தப்படுத்தும் திட்டம் சம்பந்தமான எல்லாப் பணிகளும் முழு உருப் பெறும் நிலையிலுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உள்ள எல்லாப் பணிகளும் முடிப்பதற்குச் சுமார் இரண்டாண்டு காலம் ஆகும். இதர வேலைகள் முடிவடைந்த பின்பே சாக்கடைக் கழிவுப் பண்ணையை விரி வடையச் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether there is any comprehensive scheme with the Government to utilise the sewage water in the entire State because in so many places we find that the sewage water is going to waste?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பல்வேறு மாவட்டங்களில் கேட்கப்பட்டு சில இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி : இப்படி கழிவு நீர் பண்ணைகளை ஏற்படுத்தும் போது குடியிருப்புப் பகுதிகளின் சுகாதாரம் கெடாத அளவிற்கு இந்தப் பண்ணைக்கும் குடியிருப்புப் பகுதிக்கும் உள்ள தூரம், இடைவெளியை நிர்ணயிக்க அரசு முன் வருமா ?



மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: அவைகள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டுத்தான் வீடுகள் அல்லாத பகுதிகளுக்கு அவைகள் இப்போது திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடீரென்று அங்கு வீடுகள் ஏற்பட்டுவிட்டால் அப்போது என்ன செய்வது என்பது பிறகு யோசிக்கப் படும்.

திரு. வா.மை. அப்துல் ஜப்பார் . சாக்கடை வசதியோடு பேரூராட்சி மன்றங்களில் கழிவு நீர்ப் பண்ணைகள் ஏற்படுத்த அரசு அவைகளுக்கு மானியத் தொகை வழங்குமா ? அல்லது மானியத்தொகை வழங்கு வதற்கு சாத்தியம் இல்லை என்றால் கடனாகவாவது கொடுத்து உதவு வதற்கு ஏதாவது அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ.பெ.தர்மலிங்கம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நகராட்சிகளில் இன்றையதினம் கழிவுநீரைப் பயன்படுத்தி புல் மட்டும் பயிரிடுகிறார்கள். மேலும் காய்கறிகள் பயிரிடக்கூடிய வசதியினை அரசு செய்து வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 115 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

## *Site for Madras Zoo.*

* 116 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether Zoological Experts from Delhi and Hyderabad were invited by the State Government to suggest the place for locating the Zoo of Madras : and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சென்னையிலுள்ள மிருகக் காட்சி சாலையை, தற்போதுள்ள இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றியும், அதற்கு வேறு தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பது பற்றியும், தங்களது யோசனைகளை நல்குவதற்காக டெல்லியிலுள்ள விலங்கியல் பூங்காவின் நெறியாளரும், ஹைதராபாத்திலுள்ள நேரு விலங்கியல் பூங்காவின் நெறியாளரும் தமிழ் நாடு அரசால் அழைக்கப்பட்டனர். அவ்விருவரும் சென்னைக்கு 19-1.1972

அண்ணுவந்து, சென்னை மிருகக் காட்சி சாலை, கிண்டி ஒதுக்கக் காடு, வண்டலூர் ஒதுக்கக்காடு, வேளச்சேரி சாலையிலுள்ள நன்மங்கலம் ஒதுக்கக்காடு ஆகிய இடங்களைப் பார்வையிட்டனர். அவர்கள் தங்களது கூட்டறிக்கையில், சென்னையிலுள்ள மிருகக் காட்சி சாலையை, இயற்கைச் சூழ்நிலையும் மற்ற வசதிகளும் நிறைந்த வண்டலூர் ஒதுக்கக் காட்டிற்கு மாற்றலாம் என்று பரிந்துரைத்துள்ளனர். அவர்களது பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மிருகக் காட்சி சாலையில் இப்போது விலங்குகள் குறைவாக இருக்கின்றன. ஆதலால் அதை விருத்தி செய்து மிருகக்காட்சி சாலையை வண்டலூரில் அமைக்க அரசு ஏதாவது ஆலோசனை புரிந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசு ஏற்கனவே அதைக் கருதித்தான் இதுபற்றி நல்ல ஆலோசனை கூறவேண்டுமென்று நிபுணர்களை அழைத்து அறிக்கை தரும்படி கேட்டிருந்தோம். மூன்று இடங்களை பார்த்துவிட்டு இப்போதுள்ள இடத்திலிருந்து மிருகக்காட்சி சாலையை மாற்றவேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கும் இடங்களில் வண்டலூர் நல்ல இடம் என்று சொல்லியிருக்கிறார்கள். கூடிய விரைவில் முடிவு எடுக்க இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதுள்ள மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவதா அல்லது கிண்டிப் பகுதியில் உள்ள காட்டிற்கு மாற்றுவதா என்று கேட்டார்கள். இந்த இரண்டு இடங்களைப் பார்த்துவிட்டு வண்டலூர் பகுதி அதற்கு ஏற்ற இடமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்டலூரில் மிருகக் காட்சி சாலையை வைப்பது என்றால், சென்னைக்கு வரும் மக்கள் தாம்பரத்தைத் தாண்டி வண்டலூருக்குச் சென்று பார்த்துவிட்டு வருவார்களா என்பதைப் பற்றியெல்லாம் ஐயப்பாடு இருப்பதால், கிண்டியை ஒட்டிய பகுதியில் வைக்கலாமா என்பதைப் பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. திட்டவட்டமான முடிவிற்கு வரவில்லை. இப்போது மிருகக் காட்சி சாலை இருக்கும் இடத்தை ரெயில்வே துறையினருக்குத் தந்தால் ஒரு கணிசமான தொகை தர இருக்கிறார்கள், அதையும் பயன்படுத்தி சிறப்பான முறையில் வைக்கலாம். அண்மையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் நானும் ஹைதராபாத்திலுள்ள மிருகக்காட்சி சாலைக்குச் சென்று பார்த்து விட்டு வந்திருக்கிறோம். ஒரு கோடி ரூபாய் செலவில் அதை நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். அதைப்போன்று இங்கும் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. இங்குள்ள அதிகாரிகளை அங்கு அனுப்பி அதைப் பார்த்துவிட்டு வந்து சென்னை நகரத்திற்கு அண்மையில் இருந்தால் வெளி ஊர்களிலிருந்து வருகிற மாணவர்கள், சுற்றுலாவினர் ஆகியோர் விரைவில் சென்று பார்த்துவர வாய்ப்பாகயிருக்கும். அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. முடிவு எதுவும் எடுக்கவில்லை.



திரு என். கணபதி : சென்னையில் இருக்கிற மிருகக் காட்சிசாலை மாநகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தில் உள்ளது. மாநகராட்சி மன்றம் அந்த மிருகக்காட்சிசாலையிலிருந்து வருகிற வருமானத்தை வசூலிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களிடம் விட்டுவிடுகிறது. அந்த ஒப்பந்தக்காரர்கள் சரியானமுறையில் அந்த மிருகங்களைப் பாதுகாக்காமல் ஒவ்வொரு மிருகமும் தூங்கி வழிகிறதேயல்லாமல் சுறுசுறுப்பாக எந்த மிருகமும் அங்கு இல்லை. எனவே அரசாங்கமே அந்த மிருகக்காட்சி சாலையை தன் நிர்வாகத்தில் நேரடியாக எடுத்துக்கொண்டு மிருகங்களுக்கு நல்ல முறையில் உணவும் உற்சாகமும் ஊட்டி, அதைப் பார்க்க வருகிறவர்களுக்கும் உற்சாகம் அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது உள்ள மிருகக் காட்சி சாலையில் உள்ள மிருகங்கள் நல்ல நிலையில் இல்லாமல் இருப்பதற்கு உள்ள காரணங்களில் முதல் காரணமாகச் சொல்லப்படுவது அது புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் இருப்பதால் நிலக்கரி புகை படிவதன்மூலம் மிருகங்களுக்கு நுரை ஈரல் வீங்குகிறது என்று சொல்லுகிறார்கள். அவ்விடத்தில் இருந்து மாற்றுவதற்கான முதல் காரணமாக அதைச் சொல்லியிருக்கிறார்கள். சரியான பராமரிப்பு இல்லை என்று சொல்கிறார்கள். எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. டாக்டர் நாவலர் அவர்கள் சொன்னதுபோல் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போதுள்ள மிருகக் காட்சிசாலையை மாற்றுவதற்கு முன்பு அதிலிருக்கக்கூடிய விலங்குகளை அதிகப்படியாக விருத்தி செய்வதற்கு அரசு என்ன செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லாம் வேறு சூழ்நிலைக்குப் போனால் நன்றாக அமையும் என்று கருதுகிறேன்.

திரு. கோவை செழியன் : காட்டிலே சுதந்தரமாக திரிந்து கொண்டிருந்த மிருகங்களை சிறிய கூண்டுகளில் அடைத்து வைத்திருக்கும் காரணத்தினால், அவைகளின் சுதந்திரம் பறிபோய் மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் கூறியதைப்போல் சிங்கம் எல்லாம் அசிங்கமாக இருக்கிறது. புலிகள் எல்லாம் மனிதனைப் பார்த்து பயந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அங்கு சென்று பார்க்கும்போது "ஸு"வைப் பார்க்கும் உணர்ச்சி வரவில்லை. லண்டனில் உள்ள "ஸு" மாதிரி பென்ஷிங்க்கு உள்ளே விட்டு வானில் சென்று பார்த்து வரும்படியான வசதியைச் செய்து, மிருகங்களுக்கு சிறிது ஜாஸ்தி உணவும் போடவேண்டும். இங்குள்ள விலங்குகள் நம் கையைக் கடிக்க துடித்துக்கொண்டிருக்கின்றன. அப்படியல்லாமல் நிறைய உணவு போட்டு வளமாக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கூட்டுக்குள் இருப்பதே நல்லது, யாருக்கும் ஆபத்து இல்லாமல் இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கு எடுத்துக்காட்டியதுபோல் ஹைதராபாத்தில், இருப்பதைப் போல் மிருகக்காட்சி சாலை இங்கு உருவாக்கப்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் சொன்ன குறைபாட்டிற்கு இடம் இல்லாமல்—கூண்டுகளில் இல்லாமல்—அந்த மிருகங்கள் ஓரளவிற்கு சுதந்திரமாக, அவைகளுக்கு உரிய இடத்தைப் பெற்று, அந்த மிருகக் காட்சிசாலை இயங்குவதற்கு நிச்சயமாக வழிவகைகள் வகுக்கப்படும். அந் நிலையில் மிருகங்களும், அவைகளுக்கு உள்ள இயல்பான குணங்களோடு இருந்து, பார்க்க வருகிறவர்களுக்கும் பாதுகாப்பு எதுவும் குலையாத அளவிற்குப் பாதுகாக்கப்படும். அந்த முறையில் ஹைதராபாத்தில் இருப்பது போல் நம் சென்னையிலும் அமைப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : "ஸூ"வில் உள்ள மிருகங்களுக்குக் கொடுக்கப்படும் ஆகாரம் சரிவரக் கொடுக்கப்படவில்லை. அது ஒழுங்காக, முறையாகக் கொடுக்கப்படுகிற வகையில் அரசு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்கு என்று தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மிருகத்திற்கும் எவ்வளவு ஆகாரம் கொடுக்க வேண்டும் என்ற கணக்கு இருக்கிறது. எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்றால் அதற்கான விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த ஆகாரமும் சிந்தாமல் சிதறாமல் வழங்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : பெருவாரியான மக்களைக் கவரும் வகையில் கூடியவரையில் அந்த மிருகக் காட்சிசாலையில் சென்னைக்குப் பக்கத்தில் சிறப்பான முறையில் நடத்தப்படுகிற பாம்புப் பண்ணையைப் போல் ஒரு பெரிய அளவில் பாம்புப் பண்ணை ஏற்படுத்தவும், பம்பாயில் மிகச் சிறப்பான முறையில் மீன் காட்சிசாலை அமைக்கப்பட்டுள்ளதைப் போல் கடற்குதிரை, கடற்பாம்புகள் ஆகியவை இடம் பெறும் வகையிலும் ஒரு பெரிய மீன் காட்சிசாலையையும் அதற்குள்ளேயே அமையும் வகையில் சிறப்பானதொரு திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இவைகள் எல்லாம் நல்ல யோசனைகள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, சென்னை மிருகக்காட்சி சாலையில் ஒரு நடிகரால் கொடுக்கப்பட்ட சிங்கம் இதுவரையில் சாதுவாக இருந்தது. இப்போது அது உணவு கூட எடுத்துக்கொள்ளாமல், நோய் வாய்ப்பட்டு, வெறி பிடித்தது போல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, வயதாகி விட்ட காரணத்தால் அப்படியிருக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, சென்னை மிருகக்காட்சி சாலையில் ஒரு சில பகுதிகளில் பறவைகளின் பெயர்களும், மிருகங்களின் பெயர்களும் பொறித்த பலகைகள் தான் இருக்கின்றன, பறவைகள், மிருகங்கள் இருப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அது பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திரு ந. தருமலிங்கம் : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கும் மிருகக்காட்சி சாலையை வேறு ஒரு இடத்திற்கு, மாற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்றுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன். இதற்கு மத்திய அரசிடமிருந்து மாநில அரசு ஏதேனும் உதவி கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : அதை நல்ல முறையில் அமைக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் செலவாகும் என்று கருதப்படுகிறது. பல்வேறு நிறுவனங்கள் இதைப் பராமரிக்க உதவி செய்து வருகிறார்கள். வெளிநாட்டினரும் உதவி செய்து வருகிறார்கள். எங்கெங்கே நிதி கிடைக்கும் என்று தெரிகிறதோ, அங்கிருந்தெல்லாம் பெறுவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

திரு அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, மிருகக் காட்சிசாலைகளில் பல மிருகங்களை வைத்துப் பராமரிப்பு செய்து கொண்டிருக்கிற நேரத்தில், பல வனங்களில் குறிப்பாக முதுமலைக் காட்டிலுள்ள புலிகள் அழிந்து வருகின்றன. அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, பெரும்பாலும் காட்டில் இருக்கும் புலிகள் அழிக்கப்பட்டு வருகின்றன. கிராமத்தில் இருப்பவர்கள் புலிகள் வந்து மாடுகளை அடித்து விடும் என்ற பயத்தில் அவற்றிற்கு மருந்து வைத்து அழித்து விடுகிறார்கள். அதுபோன்று கொல்லக்கூடாது என்று அரசு அறிவித்து இருக்கிறது. அப்படி மாடுகளை அழித்து விட்டால் அதற்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகக் கூட அரசு அறிவித்து இருக்கிறது. அரசோடு சேர்ந்து பொதுமக்களும் ஒத்துழைத்தால்தான் முடியும். மலைப்பகுதிகளில் சிலர் துப்பாக்கி வைத்துக் கொள்ள லைசென்சு வாங்கியிருக்கிறார்கள். அவர்களும் ஒத்துழைத்தால் தான் அந்த விலங்குகளை நாம் காப்பாற்ற முடியும்.

திரு எம். முத்தையா : தலைவரவர்களே, மிருகக் காட்சி சாலைகளில் மிருகங்களைச் சுதந்திரமாக விடாமல் அடைத்து வைத்திருக்கிறோம். நாட்டில் அடிக்கடி கட்சிகள் தோன்றுவது மாதிரி, அந்த மிருகங்களையும் சுதந்திரமாக விட வேண்டுமென்று கோரி ஒரு கட்சியை யாராவது ஆரம்பித்தால், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மிருகக்காட்சி சாலையிலுள்ள ஒவ்வொரு மிருகங்களையும் தனித் தனியாக அடைத்து வைக்காவிட்டால், நம்முடைய உறுப்பினர்களும் மற்றவர்களும் உள்ளே சென்று அவற்றைப் பார்க்க முடியாது.

**Thiru M. A. LATHEEF : Is it not a fact that a rare type of bison is found throughout the Javvadu hill areas, which are fastly disappearing on account of unscrupulous shooting by the people there. Will this Government take necessary steps to preserve this rare type of bison and other animals in that hill by developing it as an animal sanctuary?**

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜவ்வாது மலையைப் பற்றி புதிய தகவல் ஒன்றினை இப்போது கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதில் சொல்லியாகிவிட்டதா?

திரு. கே. கந்தசாமி : துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு சென்னைக்கு அடுத்தபடியாக பெரிய மாநகரமாக உள்ள மதுரையில் ஒரு மிருகக் காட்சிசாலை—இப்போது எல்லாயிடங்களிலும் மினியேச்சர் மார்க்கெட் என்று ஏற்படுத்துவது போல்—ஒரு மினியேச்சர் மிருகக் காட்சி சாலையாவது—ஏற்படுத்தி, சென்னைக்கு வருவதற்கு முடியாத ஏழை, எளியவர்களும் பார்த்து மகிழ்வதற்கான வாய்ப்பு தரும் முறையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே பெரிய நகரங்களாக விளங்கும் எல்லாயிடங்களிலும் வைத்தால் நல்லது தான். ஆனால் எல்லா இடங்களிலும் உடனடியாக அமைக்க முடியாது. முதலிலே தலைநகரத்தில் நல்ல முறையில் வைத்துவிட்டு, பின்னாலே அவற்றைப்பற்றி யோசிக்கலாம்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, மிருகங்களை வெளியே இருந்து கொண்டுவரவேண்டுமானால், மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, அதைத் தவிர்க்க மிருகக்காட்சி சாலையிலேயே இனப்பெருக்கத்திற்கான வசதி செய்யப்படுமா?

(விடை இல்லை.)



### மேட்டூரில் டிரான்ஸ்பார்மர் அமைத்தல்

* 117 வினா :—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள அலுமினியம் தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்குவதற்கான டிரான்ஸ்பார்மர் (Tranformer) ராமமூர்த்தி நகரம் அரிஜன குடியிருப்பிற்கு அருகாமையில் அமைக்கப்படவிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது அங்குள்ள அரிஜன மக்களுக்கு இடைஞ்சலாக இருக்குமென்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) அங்கு வசிக்கும் அரிஜன மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வண்ணம் டிரான்ஸ்பார்மர் அமைத்துக் கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

### *Taxis in Madras City*

* 118 *Q*.—**Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state :—**

**(*a*) whether the Commissioner of Police, Madras called for a conference of taximen and the public about May, 1972 ; and**

**(*b*) if so, the details thereof?**

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 8—5—1972 அன்று நடந்த டாக்ஸி ஓட்டுநர், பொதுமக்கள் இவர்கள் பிரதிநிதிகளின் கூட்டமொன்றில் சவாரிக்கு வர மறுக்கும் ஓட்டுநர்கள் மீதும், அதிகப்படியான கட்டணத்தை கோருபவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஏகமனதான உடன்பாடு ஏற்பட்டது.

திரு எம். செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இரவு நேரங்களில் டாக்ஸிகாரர்கள் அதிகப்படியான வாடகை கேட்கிறார்கள். கொடுக்கவில்லையென்றால் வர மறுக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தற்போது ஒப்பந்தம் ஏற்பட்டு இருப்பதாகக் கூறினார்கள். அதை நடைமுறைப்படுத்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

* மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வர மறுக்கின்ற ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தான் ஏகமனதாக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இரவு நேரங்களில் வர மறுக்கின்றவர்கள்

அதிகக் கட்டணம் கொடுத்தால் ஓட்டத் தயார் என்று ஓட்டுநர்கள் சார்பில் சொல்கிறார்கள். அதன் அடிப்படையில் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை ஓடுகின்ற டாக்ஸிகளில் பயணம் செய்பவர்களிட மிருந்து ஆகும் கட்டணத்திற்குக் கூடுதலாக 50 பைசா வாங்கிக்கொண்டு ஓட்டலாம் என்று உத்தரவை வழங்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, சென்னை நகரில் உள்ள டாக்ஸி ஓட்டுநர்கள் மிகச் சிறிய குற்றங்கள் செய்தாலும் கூட கடுமையாக காவல் துறையினரால் தண்டிக்கப்படுகிறார்கள் என்று பொது வாக ஒரு குறை சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த டாக்ஸி ஓட்டுநர் களின் குறை என்ன என்பதைக் கேட்டறிந்து அவர்களுக்கு திருப்தி ஏற்படுகிற வகையில் வழிவகை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது கொடுக்கப்பட்டுள்ள புகார் டாக்சிகள் முக்கியமான திரையரங்குகள் முன் னாலும், புகைவண்டி நிலையத்திற்கு முன்னாலும் நின்றுகொண்டிருந்தால் அவர்கள் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்பதாகும். அதைத் தவிர்க்கத்தான் அரசாங்கம் இந்த உடன்பாட்டை இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது. இதுவே போதாது என்று சொல்லுகிறபோது, ஓட்டுநர் களின் குறை பற்றி பின்னர் பரிசீலிக்கலாம்.

திரு குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, எக்மோர் ஸ்டேஷனில் இருந்து இறங்கி வரும் பிரயாணிகள் அருகாமையில் உள்ள இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் டாக்சி டிரைவர்கள் வர மறுக்கிறார்கள். மைலாப்பூர், தி. நகர் போன்ற இடங்களுக்கு செல்லும் பிரயாணிகளைத்தான் ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். முன் பெல்லாம் போலீஸ்காரர்கள் நின்றுகொண்டு எந்த பிரயாணி வந்தாலும், அவர் எங்கே செல்ல வேண்டுமென்று சொன்னாலும் அவரை ஏற்றிக் கொண்டு போகும்படி செய்து கொண்டிருந்தார்கள். சமீபகாலமாக அந்த ஏற்பாடு இல்லை. அந்த ஏற்பாட்டை மீண்டும் செய்து கொடுத்தால், பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும், அதைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, புகை வண்டி நிலையங்களிலும், திரையரங்குகளிலும் சுலபமாக பிரயாணிகளுக் கும், பொதுமக்களுக்கும் டாக்சி கிடைக்கும் வகையில் நிரந்தரமாக போலீஸ்காரர்களை நியமித்து, நெரிசல் நேரங்களில் அதைக் கட்டுப்படுத்தி வருகிறார்கள். அப்படி எங்கெங்கு இல்லையென்ற தகவலை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. நல்லசாமி : தலைவரவர்களே, சென்னை நகரில் சென்டிரல் ஸ்டேஷனிலிருந்து அசெம்பிளி ஹாஸ்டலுக்கு வருவதற்கு, நாங்கள் சென்னை வரும்போது எல்லாம் டாக்சிகாரர்களிடமும் குதிரை வண்டிக்கார



ரிடமும் வாடகை பேசிக்கொண்டு ஏறுவது போல் ஏறவேண்டியிருக்கிறது. நிறைய போலீஸ் இருந்தபோதும் அதைத் தடுக்க அவர்கள் முன் வருவது இல்லை. அதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு புகார் அனுப்பிவைக்க வேண்டும். கடந்த 1 ஆண்டு காலத்தில் 377 புகார்கள் வரப்பெற்று, வர மறுத்த காரணத்திற்காக 191 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 215 அனுமதிகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதேனும் தகவலை அரசுக்கு அனுப்பினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, எக்மோர் ஸ்டேஷனுக்கு வந்து டிரையினை விட்டு இறங்கிய பிறகு எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குச் செல்ல வேண்டுமென்றால், எந்த டிரைவரும் வருவது கிடையாது. மீட்டருக்கு மேலே ரூபாய் ஒன்று கொடுக்க வேண்டும், அப்பொழுதுதான் ஏற்றுவேன் என்று சொல்கிறார்கள். ஆகவே, எக்மோர் ஸ்டேஷனி லிருந்து எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குப் போகவேண்டுமென்றால் இப்படி கூடுதல்....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதே கேள்வியைத் தான் சற்று முன்பு கேட்டார். ஸ்டேஷன்தான் வித்தியாசம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சட்டமன்ற உறுப்பினர் என்று தெரிந்துமா வராமல் இருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். கணபதி : நாங்களெல்லாம் டாக்ஸிகளில் பணம் கொடுத் துச் செல்கின்ற பிரயாணிகள். ஆனால் நாம் காசு கொடுக்கின்ற நேரத்தில் ஓட்டுநர்கள் அழைத்துச் சொல்கின்ற இடங்களுக்கு செல்லவேண்டியிருக் கிறதே ஒழிய, நாம் விரும்புகிற இடங்களுக்கு ஓட்டுநர்கள் வருவதில்லை. இரண்டாவதாக, மிகவும் பழைய மாடல் வண்டிகளை டாக்ஸிகளாக வைத் துக்கொண்டு, அந்த டாக்ஸிகளில் காசு கொடுத்து போவதை ஒரு தண்டனையாக அனுபவிக்கின்ற அளவில் காசு கொடுத்து பெரிய தண் டனையை அனுபவித்துக்கொண்டு பயணம் செய்யவேண்டிய பயணி களாகிய எங்களைப் போன்ற பொது மக்களுக்கு அரசாங்கம் என்ன பாதுகாப்பு வழங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டாக்ஸிகளில் , காசுகொடுக் காமல் பயணம் செய்ய முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், பழைய டாக்ஸிகளைப் பொறுத்தவரையிலும், அவைகள் ஓட்டப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என்கின்ற அடிப்படையில் 10 ஆண்டு களுக்கு மேலாக இருக்கிற டாக்ஸிகளெல்லாம் மறுபடியும் அனுமதி யைப் புதுப்பிக்கும்பொழுது வேண்டாம் என்ற வகையிலே ஒரு கருத்தினை அரசு கொண்டிருந்தது. ஆனால், சில வண்டிகள் நல்ல முறையிலும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், அத்தனை வண்டிகளுக்கும் அனுமதியை

ரத்து செய்துவிடுவோமானால், போதிய அளவுக்கு புதிய வண்டிகள் கிடைப்பதில்லை. இந்த சூழ்நிலையின் காரணமாக அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அனுமதி வழங்குகிறபொழுது புதிய வண்டிகளாக இருப்பவைகளுக்கு மட்டும் வழங்கவேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி : கோவை, மதுரை போன்ற நகரங்களில் இருக்கிற டாக்ஸிகளுக்கு அதிக கட்டணம் கேட்கிறார்கள். அங்கு இருக்கிற டாக்சிகளுக்கு சென்னை நகரத்தில் இருக்கின்ற டாக்ஸிகளைப் போன்ற மீட்டர்கள் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக பெரிய நகரங்களில் மீட்டர்கள் பொறுத்துவது கொள்கை ரீதியாக அமுலாக்கப்படும் என்பது அரசின் திட்டம். கோவை, சேலம், மதுரை போன்ற நகரங்களில் மீட்டர்கள் பொறுத்துவதை கட்டாயப்படுத்த வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறோம்.

**THIRU B. VENKATASWAMY** : Sir, the questions put by Hon. Members in this House show that there is a lot of confusion and the taxi drivers are not coming for rates prescribed by the authorities. May I know from the Hon,. Minister to take this question in the taxi drivers conference so as to save the rights of the public who use the taxies?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மூலக் கேள்வியே அதுதான். இது சம்பந்தமாக ஓட்டுநர் பிரதிநிதிகள், டாக்ஸி சொந்தக்காரர்கள் பிரதிநிதிகள் ஆகியோருடன் நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள் பேசி, இரவு நேரங்களில் மட்டும் 50 பைசா கூடுதலாக கட்டணம் கொடுப்பதற்கு முன்வருவார்களேயானால், தாங்கள் அதிகமாக கட்டணம் கேட்பதில்லை என்ற அளவுக்கு அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடன் ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், அங்கொன்றும், இங்கொன்றும் ஏதாவது புகார் அங்கத்தினர்களுடைய கவனத்திற்கு வருமேயானால், அவைகளை உடனே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுப்பதற்கு உகந்ததாக இருக்கும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்ஸி டிரைவர்கள் அதிகப்படியான பணம் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்குக் காரணம் ஷார்ட் டிஸ்டன்ஸ் போய் வருவதால் அவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதில்லை, அவர்கள் அவர்களுடைய ஓனர்களுக்கும் ஓரளவுக்கு பணம் கொடுக்க வேண்டியிருக்கின்றது என்பதினால், அரசு இந்த டாக்ஸி ஓனர்களை வைத்து இதற்கு ஒரு தீர்வு காண்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டாக்ஸி ஓனர்களை வைத்துதான் பேசப்பட்டது. இருந்தாலும், டாக்ஸி ஓனர்கள் எவ்வளவு கலெக்‌ஷன் ஆகிறதோ அதன்படியில் ஓட்டுநர்களுக்கு ஒரு பெர்சன்டேஜ் கொடுக்கின்ற அளவிலே ஒரு ஒப்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்



காரணமாக அதிகமாக பணம் வசூலிக்க வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுவதினால், சில சமயங்களில் பொதுமக்களின் நன்மையைப் புறக்கணிக்கின்ற சூழ்நிலை உருவாகிவிடுகிறது.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் பயணிகளுடைய சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். அதைப்போல டாக்ஸி டிரைவர்களுக்கும் சில சிரமங்கள் இருக்கின்றன. சில பேர்கள் டாக்ஸியில் ஏறிக்கொண்டு, ரூ. 30, 40 அளவுக்கு மீட்டர் ஓடியதற்குப் பின்னால், ஒரு இடத்தில் நிறுத்தி கொஞ்சம் சிகரெட் வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஓடிவிடுகிறார்கள். சில இடங்களில் தனியாகப் போகிறபொழுது கத்தியைக் காட்டி ஏற்கனவே வசூல் ஆன பணத்தையும் மிரட்டி பிடுங்கிக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட டிரைவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது பாதுகாப்பு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்பேர்ப்பட்டவர்களுக்கு எல்லாம் போலீஸ் தான் பாதுகாப்பு.

## ரிக்ஷா வண்டிக்கான அனுமதி

* 119 வினா : திரு. அ. தேவேந்திரன், திரு. என். கே. பழனிசாமி, திரு. என். கிட்டப்பா } மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்டவினாவுக்கு விடையளிப்பாரா—

கை ரிக்ஷாக்களுக்கான அனுமதி வழங்கப்படுவதை நிறுத்தி விடவும், பாதிக்கப்படுவோருக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்குமான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. அ. தேவேந்திரன் : கை ரிக்ஷாக்கள் அவைகளை இழுக்கின்ற தொழிலாளிகளிடத்தில் எத்தனை இருக்கிறது என்றும், சில பேர்கள் அத்தகைய ரிக்ஷாக்களை வைத்து வாடகைக்கு விடுகிறார்களே அவை எத்தனை இருக்கும் என்றும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கைரிக்ஷாக்களைப் பொறுத்த வரையிலே இருப்பவைகள் அப்படியே இருக்கட்டும், இனிமேல் கொடுக்கக்கூடாது என்பதை அரசாங்கம் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் 1,243 கை ரிக்ஷாக்கள் இருக்கின்றன. 1965–66-ல் 3,469 இருந்தது. அவை வரவர குறைந்து கொண்டு வருகின்றது என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். தொழிலாளர்கள் வைத்துக்கொண்டிருப்பது 46, சொந்தக்காரர்களால் வாடகைக்கு நடத்தப்படுவது 1,197 ஆகும்.

திரு. என். கிட்டப்பா : மனிதனை மனிதன் எய்த்துப் பிழைத்தது அந்தக் காலம். மனிதனை மனிதன் ஏற்றிப் பிழைப்பது இந்தக் காலம். இந்த ரிக்ஷா தொழிலாளர்களை மனிதனை சுமந்து இழுக்க வேண்டிய சூழ்நிலையை நீக்கிவிட்டு, உடனே அதற்கு ஒரு மாற்றுத் தேட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்பொழுது மனிதனை சுமந்துகொண்டு செல்வது கை ரிக்ஷாக்கள் மூலம். இனிமேல் மனிதனை மனிதன் இழுத்துச் செல்லலாம் என்பதற்காக அவர்களுக் கெல்லாம் சைக்கிள் ரிக்ஷாக்கள் வாங்கிக்கொடுக்க, அந்தத் தொழிலாளர்களை வைத்து கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தி, நிதி ஆதாரத்தையும் ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கை ரிக்ஷாக்களை ஒழித்து விடுவது என்பதை கொள்கை அளவிலே ஒப்புக் கொண்டு, அரசாங்கம் ஒரு திட்டத்தை தீட்டி, பாங்கு ஆஃப் மஜுரா நிறுவனத்தின் மூலம் இத்தகைய தொழிலாளர்களுக்கு சைகிள் ரிக்ஷாக் கள் வாங்கிக் கொடுப்பதற்கு முன் பணம் தருவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.

திரு. க. நாகராஜன் : ரிக்ஷாக்காரர்களுக்கு ரிக்ஷா கொடுத்து உதவி செய்யாமல், சில தலைவர்கள் ரிக்ஷாக்காரர்களை ஏமாற்றி சில நேரங்களில் தொழிலில் லாபம் சம்பாதிக்கின்ற வகையில் மறைக் கோட்டுகளைக் கொடுத்து ஏமாற்றுவதைத் தடுக்க, அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏமாறுகிறவர்கள் இருக்கும் வரைக்கும் ஏமாற்றுபவர்களும் இருககத்தான் செய்வார்கள். தொழிலாளர் களிடத்தில் ஒரு நல்ல விழிப்பு உணர்ச்சி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ரிக்ஷாக்காரன் நம்மிடத்தில் இல்லை என்றாலும், ரிக்ஷாக்காரர்கள் நம் மிடத்தில் இருக்கிறார்கள்.

திரு அ. தேவேந்திரன் : ரிக்ஷா இழுப்பவர்கள் 46 ரிக்ஷாக்களுக்கு மட்டுமே சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்றும், மற்ற ரிக்ஷாக்களை சொந்தக்காரர்கள் வைத்துக்கொண்டு வாடகைக்கு விடுகிறார்கள் என்றும் இங்கே அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபொழுது சொன்னார்கள், அப்படி வாடகைக்கு விடுபவர்கள் வாடகைக்கு விடக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : ஏற்கனவே குறிப்பிட்டது போல கைரிக்ஷாக்கள் ஓட்டுவதை நாம் கட்டாயம் தவிர்க்கவேண்டும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம். ஆனால், சொந் தக்காரர்கள் கைரிக்ஷாக்களை நாம் தடுத்தாலும் கூட, மறுபடியும் ஓட் டிக்கொண்டிருப்பார்கள். அதைப் பொறுத்தவரையிலே போலீஸ் கமிஷனர் அவர்கள் அந்த ரிக்ஷாக்களை அரசாங்கமே வாங்கி அவைகளை யெல்லாம் ஒன்று அழித்துவிடலாம் அல்லது வேறு டிஸ்போஸல் செய்து விடலாம், அந்தத் தொழிலாளர்களுக்கு சைகிள் ரிக்ஷாக்கள் வாங்கி



கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பரிந்துரையை சர்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆதலால், பாதுகாக்கப்பட வேண் டியவர்கள் தொழிலாளர்களே தவிர, அந்த கைரிக்ஷாக்கள் அல்ல. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சைகிள் ரிக்ஷாக்கள் வழங்கு வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

## கல்யாண மண்டபங்கள்.

*120 வினா :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1972–73-ம் ஆண்டு தமிழ்நாட்டில் எந்தெந்தக் கோயில்களின் சார்பில் திருமண மண்டபங்கள் கட்டப்படவிருக்கின்றன ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : ஒரு விவரப்பட்டியல்* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. முற்பக[illegible]
10 0[illegible]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் நகரத்தில் புகழ் பெற்ற திருஇந்தளூர் கோவிலில் ஒரு திருமண மண்டபம் கட்டவேண்டு மென்று திட்டமிட்டு நீண்டகாலமாகியும் இன்னும் கட்டப்படாமல் இருக் கின்றது. எனவே, விரைவில் அதனைக் கட்டி முடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தக்கோயில் மாயூரத்தில் சிறந்த கோவில் என்று சொல்கிறார்கள். திருமண மண்டபம் கட்டுவதற்கு அனுமதி கேட்டிருந்தால், அதுபற்றி கவனிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, எங்கள் மாவட்டமாகிய கன்னியா குமரியைச் சேர்ந்த கோவில்களில் ஒன்றுகூட அமைச்சரவர்களின் பட் டியலில் இல்லை. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கோயில் களை ஒதுக்கிவிடாமல், சில கோயில்களையாவது இந்தத் திட்டத்தில் சேர்த்து, திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கன்னியா குமரியில் இருக்கின்ற கோயில்கள் எல்லாம் தேவஸ்வம் போர்டைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. ஆகையால் தேவஸ்வம் போர்டில் தான் இதுபற்றி பரிசீலனை செய்யவேண்டும்.

திரு, ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த தேவஸ் வம் போர்டின் காலாவதி முடிந்துவிட்டது. முன்னாள் மன்னரால் [illegible] ஒருவர் இப்போதும் இருக்கிறார். இது சம்பந்தமாக [illegible]த்திற்கு கடிதம் எழுதி இருப்பதாக அமைச்சரவர்கள் [illegible] சொன்னார்கள். அது இப்போது எந்த நிலையில் உள்ளது ?

* 94—97-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தேவஸ்வம் போர்டின் காலம் முடிந்திருந்தாலும், புதிதாக ஒரு குழு அமைக்கப்படும் வரையில் பழைய போர்டே தொடர்ந்து நீடிக்கலாம் என்று வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அதில் தவறு இல்லை. இருந்தாலும் கூட, தமிழ்நாட்டின் இதரப் பகுதிகளில் அமுலில் உள்ளச் சட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நீட்டிப்பதற்காக சட்டத்தில் சில மாற்றங்கள் செய்து, அது தற்போது மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது, விரைவிலே பதில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இப்போது குடும்பக்கட்டுபாடு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் திருமண மண்டபங்கள் கட்டுவதற்குப் பதிலாக குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருமணம் நடைபெற்றப் பிறகுதான் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி யோசிக்க வேண்டும். (சிரிப்பு.)

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, திருப்பூர் வீரராகவ பெருமாள் கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கோயிலின் நிதிநிலை போதுமானதாக இல்லை. எனவே அரசாங்கமே அதில் தலையிட்டு, வேறு நிதி வசதிப் படைத்த கோயில்களிலிருந்து பணம் பெற்று, அல்லது அரசாங்கமே உதவிப் பணம் கொடுத்து, 1972–73-க்குள்ளாக திருமண மண்டபத்தைக் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி ஸ்பெசிபிக்காக கேட்டால் அமைச்சரவர்கள் எப்படிப் பதிலளிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்தக் கோயிலின் அறங்காவலர்கள் அதுபற்றி ஏதாவது தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினால், அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the statement placed on the table of the House, there is only one temple in the whole of the Dharmapuri district where Kalyana Mandapam is proposed to be constructed. May I know from the Hon. Minister whether in two or more temples in that district Kalyana Mandapams would be constructed?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருமண மண்டபங்கள் கட்டுவது என்பது அந்தந்த கோயில்களின் நிதிநிலைமையைப் பொருத்ததாகும். அந்தந்தக் கோயில்களின் செலவுபோக உபரி நிதி இருந்தால் பயனுள்ள வகையில் இந்தவகையான காரியங்களுக்குப்



பயன்படுத்துவதில் நமது அரசைப் பொறுத்த வரையில் தடை இல்லை. அதுபற்றி அந்தந்த கோயில்களின் அறங்காவலர்கள் முடிவு செய்ய வேண்டும்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, நான் குறிப்பிட்ட திருஇந்தளூர் கோயிலில் நிதிநிலை போதுமானதாக இருந்தும், திருமண மண்டபம் கட்ட அனுமதி கேட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பதில் வரவில்லை. எனவே, அதைத் துரிதப்படுத்தி, விரைவில் திருமண மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் கூடல் அழகர் கோயில், மதனகோபாலஸ்வாமி கோயில்—இந்த இரண்டு கோயில்களிலும் திருமண மண்டபங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேலை கோயில் நிதியிலிருந்து செய்யப்படுகிறதா அல்லது அரசாங்கம் அதற்கு மானியம் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூடல் அழகர் கோயிலில் திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் : தலைவரவர்களே சில நகரங்களில் தனியார்கள் திருமண மண்டபங்களைக் கட்டி அதிகமான வாடகைக்கு விடுகிறார்கள். ஆகவே, கோயில்களில் திருமண மண்டபங்களைக் கட்டி குறைந்த வாடகைக்கு விடும் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டுவதன் நோக்கமே, ஏழை எளிய மக்கள் குறைந்த வாடகையில் கோயில் திருமண மண்டபங்களை பயன்படுத்திக்கொள்வதற்குத்தான்.

திரு. டி. இராசரத்தினம் : தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற பட்டியலில் செங்கற்கட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சாமிகள் ஒன்றுகூட இல்லை. அந்த அளவுக்கு செங்கற்பட்டு மாவட்ட சாமிகள் ஏழைகளா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருப்பது சாமிகளின் பட்டியல் அல்ல ; திருமண மண்டபங்கள் கட்டப்படுவதற்கான பட்டியல்

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, எங்கள் பகுதியிலுள்ள ஒரு கோயில்—கல்ராயன் கோயில்—கோபுரம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அதைக் கல்யாண மண்டபமாக மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு இன்னும் அனுமதி கிடைக்க வில்லை. அதோடு செங்கற்கட்டு மாவட்டத்தில் 10, 15 திருமண மண்டபங்களாவது கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நிதிநிலை வசதியைப் பொறுத்து திருமண மண்டபங்களைக் கட்டுவதற்கு அந்தந்த கோயில்களின் அறங்காவலர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசு அவைகளைப் பரிசீலனை செய்யும்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற பட்டியலில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பல ஊர்களில் திருமண மண்டபம் பெற்றிருந்தாலும், மாவட்ட தலைநகர் தஞ்சைக்கு இல்லை. ஆகவே, அரசாங்கமே, சிறப்பு பெற்ற பெரிய கோவிலில் ஒரு திருமண மண்டபம் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தஞ்சையில் மாரியம்மன் கோயிலில் திருமண மண்டபம் கட்ட வேண்டுமென்று அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அது அறநிலையத் துறை ஆணையாளரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. கிருட்டிணன் : தலைவரவர்களே, கோயில்களில் கட்டப்படும் திருமண மண்டபங்களில் சீர்திருத்த முறையில் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தந்தை பெரியாரை வேண்டுமானாலும் வைத்து திருமணத்தை நடத்திக்கொள்ளலாம்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கோயில் திருமணமண்டபங்களில் வைத்து திருமணம் செய்துகொள்வதால் அதிகமான குழந்தைகள் பிறக்கின்றன என்று கருதப்படுகிறது. அதைப்பற்றி ஆராய அரசாங்கம் ஒரு கமிட்டியை அமைக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதனால்தான் கனம் உறுப்பினர் அவர்கள் தனியார் திருமண மண்டபத்தில் வைத்து திருமணம் செய்துக்கொண்டார் என்று இப்பொழுதுதான் தெரிய வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

புயல் மழையினால் சேலம் நகரம் மாநிலத்தின் மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருப்பது குறித்து.

MR. DEPUTY SPEAKER : I have received notice of the following adjournment motion :

'That the House do stand adjourned to discuss a matter of urgent public importance, viz., the heavy rain and cyclone which cut off Salem town from the rest of the State.'

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, I have given notice of this adjournment motion only to spot-light the problems of the people so that the persons who have been affected by the floods will not have the feeling that this House is not concerned about them. As we are in the political storm they must not think that we are not worried about them.

Salem town was cut off from the rest of the State on Friday as all bridges and cause-ways over the Thirumanimuthar that runs through the town were submerged in the wake of unprecedented rains since Thursday night.

Floods in the Thirumanimuthar rose to 20 feet and the level was still rising, according to an official press release issued in Madras late on Friday evening.

It is believed that the floods have been caused by heavy rains in Yercaud. It is feared that several tanks may have breached their bund. The skies are overcast and more rains are likely.

It is stated that the present floods are far more serious than the 1918 floods. During the last 40 or 50 years Salem has not witnessed such a lashing of rain and floods. Apart from Salem town, three bodies belonging to fishermen families have been washed ashore off Mallipattinam coast near Pattukkottai according to reports reaching Thanjavur. Another person who was reported to have gone with the victims was still missing.

In other words, all over the State, apart from Salem town we are hearing the serious situation caused by floods. There is a fear that in a day or two, things might become worse. Naturally the House would like to know what anticipatory measures the Government is going to take as preventive measures, so far as floods are concerned. No one can prevent floods and no one can stop the rain pouring from an over-cast sky. But at least evacuation of persons from low-lying areas-likely to be affected by floods could be done and relief measures taken.

I understand some helicopters have been rushed in and G.O.C. Madras and Kerala area had been alerted. Concrete relief measures should be taken to relieve the sufferings of the people and cause-ways which have been breached should be restored. The restoration of communication system should be attended to with speed, and normalcy restored with as much speed as possible. These are the things for which I would like to know the answer from the Hon. Chief Minister.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேற்றைய தினமே 82-வது விதியின்கீழ் நான் இங்கு ஒரு விவர அறிக்கையை வைத்து தமிழ்நாட்டில் கடந்த 5, 6 நாட்களாக பெய்த கடுமழையின் காரணமாகவும், வீசிய பெருங்காற்றின் காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளைப் பற்றிய விளக்கங்களை அளித்துள்ளேன். தொடர்ந்து நேற்றைய தினம் வந்துள்ள செய்திகளையெல்லாம் தொகுத்து இன்றும் இந்த அவையில் விவரங்களைத் தரவேண்டுமென்று விரும்பினேன். இதற்கிடையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒத்திவைப்பு தீர்மானத்தின் மூலம் உடனடியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்கின்ற, ஊக்கப்படுத்துகின்ற உரையை இங்கே நிகழ்த்தியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன்.

5, 6 நாட்களாக தமிழகத்திலே பாதிக்கப்பட்டுள்ள எல்லா பகுதிகளிலும் அரசோடு தொடர்பு கொண்டும், அந்தந்த வட்டங்களிலுள்ள அதிகாரிகள் சமயத்திற்கு ஏற்றவாறு நெருக்கடியை தீர்ப்பதற்கான வகைகளிலெல்லாம் ஒத்துழைப்பை நல்கி, பாதுகாப்புப் பணிகளில், நிவாரணப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். நேற்று கிடைத்த தகவலின்படி சேலம் நகரத்தில் மிகப்பெரும் மழையின் காரணமாக என்றைக்குமே வரண்டு கிடக்கின்ற திருமணிமுத்தார் ஆற்றில் வெள்ளப்பெருக்கெடுத்து சேலம் நகரம் பாதிக்கப்பட்டுள்ளது. அயோத்தியாப்பட்டணத்திலும், மேக்கநேரிலும், உள்ள இரண்டு குளங்கள் உடைந்து விட்டன. ஆற்றில் தண்ணீர் 20 அடி உயரம் இருந்தது என்று நேற்றைய தினம் செய்தி வந்தது. என்.ஜி.ஓ. கட்டிடம், ஸ்டேட் பாங்க் கட்டிடம், செவ்வாய்ப்பேட்டை போலீஸ் நிலையம் ஆகிய இடங்களில் தண்ணீர் வந்து விட்டது என்று செய்தி அறிவிக்கப்பட்டது. சந்தைப்பேட்டை முழுவதும் தண்ணீர் மூழ்கியுள்ளது என்ற செய்தி வந்தது. குகை, செவ்வாய்ப்பேட்டையில் தண்ணீர் நிறைந்து விட்டதாகவும் தகவல் கிடைத்தது. 2,000 குடிசைகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன வென்றும், 10,000 பேர் அந்தப் பகுதியிலிருந்து உடனடியாக அப்புறபடுத்தப்பட்டார்கள் என்று எங்களுக்கு விவரங்கள் அளிக்கப்பட்டன. 5,000 பேருக்கு உணவு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடுகளை உடனடியாகச் செய்தார், மக்களை அப்புறப்படுத்தும் வேலையில், அவர்களை முறைப்படுத்தும் வேலையில் காவலர்கள் முனைந்து உதவி புரிந்து வருகிறார்கள். காவிரி நதி ஓரங்களிலுள்ள கிராமங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க திருசெங்கோடு, நாமக்கல் வட்டாச்சியர்களுக்கு மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி ஆணை பிறப்பித்திருக்கிறார். பாதிக்கப்பட்டிருக்கும்





கூடிய இடங்களில் போலீஸ் ரோந்து வருவதற்கு கூடுதல் காவலர்களை விரவழிக்கும்படி காவல்துறை கண்காணிப்பாளரைக் கேட்டுக் கொள்ளும்படி மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிக்கு தலைமைச் செயலகத்திலிருந்து உத்திரவு அனுப்பப்பட்டுள்ளது. மக்கள் பீதியில்லாமல் அமைதியாக இருக்க இது உதவும் என்ற நோக்கத்தில் இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இன்று காலையில் சேலம் நகரத்தில் தண்ணீர் வடிந்து வருவதாக மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார். மேலும் 6 பேர்கள் தண்ணீரின் நடுவே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மீட்க எல்லா வழிகளும் பயனற்றுப் போய் விட்ட காரணத்தினால் ஹெலிகாப்டர் உதவியை நாடியிருப்பதாகவும், ஹெலிகாப்டர் கொச்சியிலிருந்து சேலத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் முன்னால் அவர்கள் தகவல் கூறினார்கள். ஆனால் இன்று அதி காலையில் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது சிக்கிக் கொண்ட 6 பேர்களும் ஹெலிகாப்டர் வருவதற்கு முன்னாலே மிகுந்த சிரமத்தோடு ஹெலிகாப்டர் உதவியில்லாமல் மீட்கப் பட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், 10 வயது சிறுவன் ஒருவன் பிரேதம் அந்தத் தண்ணீரில் கிடந்து எடுக்கப் பட்டதாகவும் தகவல் வந்தது.

வசிஷ்ட நதியில் வெள்ளம் காரணமாக ஆத்தூர்—முல்லைவாடி பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்த மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி, இன்று காலை பெங்களூரிலிருந்து வந்துள்ள இராணுவப் பிரிவினரை வைத்துக் கொண்டு ஆத்தூருக்கு சென்றிருக்கிறார் என்ற தகவல் காலையில் எனக்குக் கிடைத்தது. மேலும் ஹெலிகாப்டர் காலை 9-மணி அளவில் சேலம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதுவும் மீட்கும் பணிகளில் உடனடியாக ஈடுபடும். சேலம் நகரத்தின் சட்ட மன்ற உறுப்பினரும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சருமான திரு. ராஜாராம் அவர்கள் நேற்றைய தினம் அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு ஆவன செய்வதற்கு உடனடியாக சேலத்திற்குச் சென்றிருக்கிறார். சேலம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்காக 9, 10-ந் தேதி ஆகிய 2 நாட்களும் விடுமுறை நாளாக இருந்தபோதிலும், அந்த விடுமுறையை மாற்றிவைத்துக் கொள்ளலாமென்று அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கு ஏற்ற உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அரசு அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். காலையிலே வந்த செய்தியின்படி போக்குவரத்து துண்டிக்கப்பட்ட பகுதிகளெல்லாம் மீண்டும் சரி செய்யப்பட்டு, பெரும்பான்மையான அளவு போக்குவரத்து சரி செய்யப்பட்டிருக்கிறது என்று நான் இந்த அவைக்கு தெரிவித்து கொள்ளுகிறேன்.

இத்துடன் நீலகிரியில் நேற்றைய தினம் ஏற்பட்ட நிலச்சரிவு சம்பந்தமாக இந்த அவைக்கு இந்த ஒத்திவைப்பு தீர்மானம் வந்த நேரத்தில் சொல்லுவது என் கடமையாக இருக்கிறது. 7—12—1972

அன்று நீலகிரி மாவட்டத்தில் அட்டர்லே—ஹில்குரூவ் ரயில் நிலையங்களுக்கு இடையில் 7—12—1972 அன்று நிலச்சரிவு ஏற்பட்டதை 8-ந் தேதி கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக 150 தொழிலாளர்கள் நிலச்சரிவு ஏற்பட்டதை சமன் செய்வதற்கு அங்கு சென்று பணியில் ஈடுபட்டார்கள். பிற்பகல் சுமார் 4-மணி அளவில் 150 தொழிலாளர்களும் நிலச்சரிவு ஏற்பட்ட அந்த பகுதியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது, மீண்டும் ஒரு நிலச்சரிவு தொடர்ந்து ஏற்பட்டு விட்டது. பெருமழையின் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவாகும். அந்த நிலச்சரிவு ஏற்படடவுடனே உதவி தேவை என்று கூனூர் ஸ்டேஷன் மாஸ்டர் கொடுத்த ரிப்போர்ட் கிடைக்கப்பெற்று, போலீஸ், வருவாய்த் துறை அதிகாரிகள், பயர் சர்வீஸுடன் இடத்திற்கு விரைந்து சென்றனர். மேட்டுப்பாளையம் ரயில் நிலைய மருத்துவ அதிகாரியும் விரைந்து சென்றார். ஆனால், 150 பேரில் 10 தொழிலாளிகள் சிக்கி கொண்டு, உடனடியாக மீட்கப்பட்டு, மேட்டுப்பாளையம் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டனர். ஆனால், 5-லிருந்து 10 தொழிலாளர்கள் வரை புதையுண்டு போயிருக்கக்கூடும் என்ற வருந்தத்தக்க, பரிதாபகரமான செய்தியும் நமக்கு கிடைத்திருக்கிறது. அவர்களை உடனடியாக மீட்கமுடியாத அளவுக்கு பெருமழை பெய்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், மேலும் நிலச்சரிவு ஏற்பட்டதாலும், உடனடியாக அவர்களை மீட்க முடியாது என்ற தவிப்பு நிலை, சிக்கலான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை அடுத்து நிலச்சரிவு ஏற்பட்டதால், சிக்கிக் கொண்டவர்களை மீண்டும் மீட்கின்ற பணி தொடர்ந்து நடைபெற முடியாது என்றபயமும், அந்த பயத்திற்கு ஏற்ப நிலச்சரிவு ஏற்பட்டு விட்டதும், புதையுண்டவர்களை எடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் ஏற்பட்ட இழப்பு, எவ்வளவு பாதிப்பு என்ற விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுப்பதாகக் கூறியுள்ளார். தேவையானால் அவைகளையும் நான் இந்த மன்றத்திலே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஊட்டி நகரத்தில் பெருமழையின் காரணமாக சாலை அருகே கட்டப்பட்டிருந்த கைப்பிடிச் சுவர் ஒரு இடத்திலே சரிந்து விழுந்தது. கைப்பிடிச் சுவர் கற்களால் கட்டப்பட்டிருந்தது. கைப்பிடிச் சுவருக்கு கீழே போடப்பட்டிருந்த ஒரு குடிசை மேல் கற்கள் விழுந்தன. அந்தக் குடிசையில் வாழ்ந்த கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் குடிசைக்குள்ளேயே மரணமடைந்தனர் என்ற சோகச் செய்தியை நான் இங்கே கூற வேண்டியவனாக இருக்கிறேன். அந்த வீட்டிலே உள்ளவர் ஒருவர் போர்ட்டராகவும், பழம் விற்பவராகவும் இருந்தார். அவர் பெயர் முகம்மது. அந்தக் குடிசையில் இருந்த 4 வயதுப் பையன் தப்பித்தான் என்ற செய்தி வந்திருக்கிறது. மேற்கொண்டு தகவல் வந்தால் இந்த அவைக்கு அளிப்பேனென்று கூறி, இந்த விபரங்களை எடுத்துச் சொல்வதற்கும், டாக்டர் ஹண்டே அவர்கள் எடுத்துக் கூறியது போல அரசு ஏற்கெனவே எடுத்துக் கொண்ட பணிகளை மேலும் வேகமாக செயல்படுவதற்கும், அரசாங்க அலுவலாளர்கள் உதவிகளும் உடனடியாக எந்த விதமான தங்குதடையில்லாமல் செய்யப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.



**Dr. H. V. HANDE :** Sir, even in the City of Madras after yesterday's statement, more people have become homeless. It is feared that rains would continue for two, three days more. Today is Saturday and tomorrow is a holiday. May I request the Chief Minister to request the Corporation Commissioner and the Police Commissioner to survey the flood-affected areas, like Perambur, South and North Madras and arrange for relief measures immediately. Also, they may decide immediately the anticipated relief measures for tomorrow and the day after.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : நான் நேற்றே கூறியதைப் போல நிவாரணப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மறுபடியும் நேற்றையதினம் பெய்தமழையில் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் போலீஸ் அதிகாரிகளையும், மாநகராட்சி மன்ற மேயரையும் நிவாரணம் அளிக்க கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்வார்கள். தற்காப்பு நடவடிக்கைகளாக எவற்றை மேற்கொள்ளவேண்டுமோ அவற்றையும் எடுத்துக் கொண்டு வருகிறோம்.

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்</u> : ஊட்டியில் தாய் தந்தையை இழந்து அனாதையாக ஆகிவிட்ட குழந்தையை வளர்ப்பதற்கும், அதன் எதிர்கால படிப்புக்கும் அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : அந்தக் குழந்தையின் தாயாக இந்த அரசு இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்கிற காரணத்தினால் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## 3. நடைமுறைக் கேள்வி :

பேரவையின் தீர்ப்புக்கு மாறாக, பேரவை உறுப்பினர் ஒருவர் பத்திரிகையாளரிடம் கூறியதான செய்தி குறித்து.

<u>திரு. எல். கணேசன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, 2ம் தேதி அன்று இந்தப் பேரவையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி பல்வேறு பிரச்சினைகள் கிளப்பப்பட்டு தாங்களும் விரிவானதொரு தீர்ப்பை அளித்துவிட்டீர்கள். பெரும்பான்மையான உறுப்பினர்களின் நம்பிக்கையை முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் இழந்து [illegible], அவரைப் பதவியில் இருந்து நீக்கம் செய்தது சட்டப்படி [illegible]தான் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படி இருக்க இந்த மன்றத்தின் பெருமதிப்புமிக்க உறுப்பினர் ஒருவர், ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடியவர், பத்திரிகை நிருபர்கள் தாங்கள் எப்போது அவைக்குச் செல்வீர்கள் என்று கேட்ட

தற்கு "உண்மையான சபாநாயகர் வந்தால் போவேன்" என்று சொல்வது, சபைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்கிற தங்களை அவமதிப்பதுபோல , இந்த அவையையே அவமதிப்பதுபோல ஆகாதா? இதற்குத் தங்களுடைய தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிருபர்களிடத்தில் அவர் அவ்வாறு சொல்லியிருக்கிறார். அது பத்திரிகையில் வந்த விஷயம். சபையில் வந்து பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத காரணத்தினால் ஏதோ சாக்குபோக்காக நிருபர்களுக்குச் சொல்லிய செய்தியாகத்தான் நாம் அதைக் கொள்ள வேண்டுமே தவிர அதுபற்றிய ஆராய்ச்சியில் நாம் இறங்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பத்திரிகையில் வெளி வந்த செய்தியை வைத்து இங்கே பாயின்ட் ஆர்டர் என்று அதனை எழுப்புவது சரியல்ல. வேண்டுமென்றால் வேறு உரிமைப்பிரச்சினை யாகக் கொண்டுவரலாம்.

### 4. அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத் தின் மீது விவாதம் (தொடர்ச்சி).

• திரு. கே. பி. கோபால் : துணைத்தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் சமயநல்லூர் மின் நிலையத்தைப்பற்றி குறிப்பிட்டதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. தேய்மானச் செலவை கருத்தில் கொண்டுதான் அது விற்பனை செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியபோது அந்த முறை கையாளப் பட்டதா என்று கேட்க விரும்புகிறேன்.

நான் போடி சம்பவத்தைப்பற்றிச் சொன்னேன். சொக்கநாதபுரத் தில் அரசாங்க பஸ் ஒன்று தீக்கொளுத்தப்பட்டது. எங்கு நடந்தாலும் இதுபோன்ற வன்முறைச் சம்பவத்தைக் கண்டிக்கிறோம். இதில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் புலன் விசாரணை செய்து அவர் களை அரசாங்கம் தண்டிக்க வேண்டும். ஆனால் சொக்கநாதபுரம் கிராமம், அதை அடுத்துச் சுற்றுப்புற இடங்கள் ஆகியவற்றில் வசிக்கும் எல்லா ஜனங்களும் போலீசாரால் கண்மூடித்தனமாகத் தாக்கப் பட்டிருக்கிறார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அதுபோல மதுரை நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டேன். காலேஜ் மாடியில் இருந்து சோடாப் புட்டியை வீசியிருக்கிறார்கள். அதைத் கண்டிக்காது மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ரயில்வே நிலையம் வரை துரத்தி மாணவர்களை மட்டுமல்ல, தொழிலாளர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இதுபோன்ற காரியங்கள் எல்லாம் அரசாங்கத் தினால் மாணவர்களை பழிவாங்கும் நோக்கத்துடன்தான் செய்யப்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.



இந்த ஆண்டு மின்சார வெட்டு பலமாதங்களாக நீடிக்கிறது. காரணம் பருவ மழை தவறிவிட்டது என்கிறார்கள். இது சரியல்ல. கிராமங்கள்தோறும் எந்த அளவுக்கு மின்சாரத்தை விஸ்தரித் தார்களோ, விசையேற்றங்களுக்கு மின்சாரத்தை அளித்தார்களோ, அந்த அளவு இந்த அரசாங்கம் மின்சாரத்தை உற்பத்தி செய்யத் தவறிவிட்டது, ஒரு காரணம். மேலும் கலை விழா என்ற பெயரால், ஆபாச நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன, அங்கெல்லாம் மின்சாரம் அளிக்கப்பட்டு விரயம் செய்யப்படுகிறது. இதுபோன்ற காரணங்களினால் தான் மிகவும் பயங்கர அளவில் தொழில்களை மின்சார வெட்டு பாதித்திருக்கிறது என்கிற குற்றச்சாட்டை நான் இந்தச் சந்தர்ப் பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை, மற்ற இடங்களில் ஆளும் கட்சியினர் மகாநாடுகள் என்று நடத்தப்படுகிற கூட்டங்களிலும் மின் சாரம் மிகுதியும் விரயம் செய்யப்படுகிறது. நீங்கள் அக்டோபர் 1 ஆம் தேதி தேசியத் திருவிழா என்று நடத்தவில்லையா, அதனால் மின் சாரம் விரயமாக்கப்படவில்லையா என்று கேட்கலாம் நாங்கள் மதுரை தேசியவிழாவிலே பெருமளவு ஜெனரேட்டர்கள் வைத்துக்கொண்டு தான் மின்சாரத்தை உற்பத்தி செய்து பயன்படுத்தினோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுரையில் நடந்த உங்களது விழாவுக்கு எவ்வளவு மின்சாரம் தேவையோ அந்த அளவுக்கு அளிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி மேலவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் தொடர்பு கொண்டார்கள். அப்படி இருக்க ஜெனரேட்டர்கள் வைத்து மின்சாரத்தை எடுத்துக்கொண்டோம் என்பது முறையாகாது, மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. பி. கோபால் : அக்டோபர் முதல் தேதியன்றுதான் மின்சார வெட்டு அமலுக்கு வந்தது. எங்களது விழா அக்டோபர் முதல் தேதிதான் நடந்தது. என்றாலும் மின்சார வெட்டினால் அது பாதிக்காது என்று சொன்னார்கள். ஆயினும் நாங்கள் அதிக அளவில் வாரியத்திடம் இருநது மின்சாரத்தைப் பெருது ஜெனரேட்டர்கள் வைத்துத்தான் உற்பத்தி செய்துகொண்டோம் என்பதை இந்த நேரத் தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள், தங்கள் கழகத்தினர் செய்யும் தவறுகளை எல்லாம் கண்டிக்காது விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிலத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றக்கூடாது வாடகை வீட்டில் இருப்பவர் களையும் வெளியேற்றக் கூடாது எனச் சட்டம் இருக்கிறது. ஆனால் மதுரையில் 33 ஆண்டுகளாக அனுபவித்து வந்த உடுப்பி ஓட்டல் காரரை வெளியேற்றும் முயற்சியில், அந்த ஓட்டலையே கட்சிக்காக வாங்கி யிருக்கிறார்கள்.

மேலும் கம்பம், உத்தமபுரம் நிலவள வங்கியில் ரூ. 53 ஆயிரம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. தலைவரும், உபதலைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மீது 21-8-1972-ல் வழக்கு பதிவுப் செய்யப்பட்டது. குற்றப் பத்திரிகை 1-11-1972 தான்

தாக்கல் செய்தார்கள். வேண்டுமென்றே தங்கள் கட்சிக்காரர்கள் என்பதனால் இதுபோன்று பலயிடங்களிலும் தாமதம் செய்யப்படுகிறது. ஜனநாயகவாதிகள் என்று சொல்லிக்கொள்கிறார்களே தவிர நிலவள வங்கிகளுக்கு அங்கத்தினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்காமல், 7 பேர் அங்கத்தினர்களாலும், 9 பேர் அரசாங்கத்தாலும் நியமிக்கப்படுவார்கள் என்கிறபோது எப்படி ஜனநாயகம் நல்ல முறையில் செயல்படும். அங்கத்தினர்களின் நம்பிக்கையைப் பெறுதவர் எப்படித் தலைவராக வரமுடியும்.

கோட்டாச்சித் தலைவர் கூட தன்னுடைய மனசாட்சிப்படி நேர்மையாகச் செயல்பட முடியாத நிலைதான் நீடித்து வருகிறது. வாலாஜா பேட்டையில் பார்த்தோம், ஆற்காட்டில் பார்த்தோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு நாள் நிர்ணயம் செய்யப்படுகிறபோது அன்றைக்குக் கோட்டாட்சித் தலைவர் வராது இருந்து விடுகிறார்கள். அவர்கள் ஜனநாயகத்தை என்ன என்று நினைக்கிறார்கள் ?

நேற்று பேசிய உறுப்பினர்கள், நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வந்திருக்கிறோம், அதிலே பல திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அந்த நில உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதிலே கோயில் நிலங்களைப்பற்றி எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் சுமார் 4 லட்சம் ஏக்கர் நிலங்கள் கோயில் மடங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன என்றும் , அந்த கோயில் நிலங்களிலிருந்து வரும் வருமானம் ஒரு கோடியே 90 லட்சம் ரூபாய் என்றும் செலக்ட் கமிட்டி அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. எனவே, இந்த கோயில் வருமானங்களைப் பொறுத்த வரையில், உச்ச வரம்பு வைக்காது பெரிய சீர்திருத்தம் செய்வதாகக் கூறுவது சரியல்ல.

மேலூரில் கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. அது வரவேற்கத் தக்கது. மேலூரிலே நடைபெற்ற பட்டா வழங்குகிற விழாவிற்கு மதுரை மாவட்டத்திலுள்ள எல்லா வட்டங்களிலிருந்தும் லாரிகளிலே மக்களைக்கொண்டு வந்தார்கள். எல்லோருக்கும் பட்டா வழங்க வேண்டும். அனைவருக்கும் வழங்குவது முடியாத காரியம். இது அரசுக்கும் தெரியும். இருந்தாலும், விளம்பரம் பெறுவதற்காக இவ்வாறு செய்யப்பட்டது. அதேபோல, உத்தமபாளையம் தாலூகாவிலேயிருந்து பலர் மேலூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே தாலூகாவிற்கு ஒருவர் என்ற முறையிலே, உத்தமபாளையம் தாலூகாவைச் சேர்ந்த ஒருவருக்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டு மற்றவர்களுக்குப் பின்பு வழங்கப்படும் என்று கூறினார்கள். இதை விளம்பரத்திற்காக செய்கிறார்கள். கிராம முன்சீப்களின் மூலமாக கர்ணத்தின் மூலமாகப் பட்டாவை வழங்கலாம் என்று இத்தருணத்தில் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, சமீபகாலமாக, மேடைப் பேச்சுக்களில் இனத்துவேஷம் காட்டப்படுவதாகத் தெரிகிறது. இதுபோன்ற இனத்துவேஷம் நீடிக்கப்பட்டால் மற்ற மாநிலங்களிலுள்ள தமிழர்களுடைய நிலை பாதிக்கப்படும். நிச்சய

(திரு. செ. கந்தப்பன் தலைமை.)



மாக, கேரளத்திலுள்ள தமிழர்களுடைய நிலை பாதிக்கப்படும். இதை மேலும் அனுமதிக்கக் கூடாது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட பாதுகாப்பு கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஒரு பொறுப்புள்ள கட்சியின் தலைவர்மீது, 2-ம் தேதி மாடியிலிருந்து காலணி வீசப்பட்டது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் தரும்பொழுது, உண்மைக்குப் புறம்பாக தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி உண்மைக்குப் புறம்பாகத் தகவல் கொடுத்த அந்த அதிகாரியின்மீது முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்று அவர் கூறியபடி, . எம். ஜி. ஆர். அவர்கள் காலணியை எடுத்து............

* மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த நிகழ்ச்சியைப்பற்றி, இங்கேயுள்ள அலுவலர்கள் மூலமாக அறிந்து கொண்ட செய்திதான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அப்படி அறிந்துகொண்ட செய்தியில் அந்தக் கட்சியினுடைய பொதுச் செயலாளர், ஒரு வாழ்த்தொலி எழுப்பியதனுடைய விளைவாக, கருணாநிதி வாழ்க என்று இன்னொரு சாரார் வாழ்த்தொலி வழங்கியதன் காரணமாக, அதைப் பொறுக்கமாட்டாமல், அவர் தன்னுடைய காலிலிருந்து செருப்பை எடுத்துக் காட்ட, அதைப்பார்த்து கோபப்பட்டவர்கள் மேலிருந்து செருப்பை எடுத்து வீசினார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களே தவிர எம்.ஜி.ஆர். அவர்கள் செருப்பை எடுத்துக் காட்டியதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை.

திரு. கே. பி. கோபால் : நான் தவருகப் புரிந்துகொண்டு அந்த குற்றம் சாட்டியதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நம்பிக்கை தீர்மானம் வெற்றிபெறும் என்று அனைவருக்கும் தெரியும். இருந்தாலும், இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை விவாதிக்கின்ற எங்களுக்கு ஒரு மன நிறைவு கிடைக்கிறது. உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதைப்பற்றிக் குறிப்பிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய ஆய்வு தி.மு. கழகம் ஒருவேளை ஸ்தாபனக் காங்கிரசுடன் சேர்ந்தாலும் சேருமே தவிர; என்றுமே இந்திரா காங்கிரசுடன் சேரமாட்டோம் என்ற கருத்தில் அவர் விளக்கம் கொடுத்ததாக முதல்வர் அவர்கள் தெரிவித்தார். அந்த அளவுக்கு யார் முற்போக்குவாதிகள் , யார் பிற்போக்கு வாதிகள் என்று தெரிந்துகொண்ட அளவிற்கும் இந்த அளவிற்கு பேச வாய்ப்பளித்ததற்காகவும் நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை கோரி வந்துள்ள தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரித்து, என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அமைச்சரவையை அமைத்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது எதிர்ப்புக் காட்டக் கூடியவர்கள் இன்று நேற்றல்ல, சுயமரியாதை இயக்கமாக இயங்கி, திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டு மக்களிடத்திலே பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பரப்பிக் கொண்டு வந்த நேரத்தில்தான் மக்களிடத்திலே செல்வாக்கு கொண்டிருப்பவர்கள், செல்வாக்கு இருப்பதாகச் சொல்லிக்கொண்டு இருப்பவர்கள் தேர்தலிலே நின்று வாக்குகளைப் பெறட்டும், அந்த வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்திற்கு வந்து தங்களுடைய கருத்துக்களை வைக்கட்டும், அவர்களுக்கு மக்கள் ஆதரவில்லை என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டுகிறோம் என்று ஸ்தாபனக் காங்கிரசிலே இருப்பவர்கள் சவால் விட்ட காரணத்தினாலேதான், 1957 முதல் 1971 வரை இந்த நாட்டிலே உள்ள மக்கள் 1957-ல் 15 பேர்களை சட்டமன்றத்திற்கும், 1962-ல் 50 பேர்களை சட்டமன்றத்திற்கும், 1967-ல் 138 உறுப்பினர்களை இந்த சட்டமன்றத்திற்கு அனுப்பி, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே, ஆட்சிப் பொறுப்பை, இந்த நாட்டு மக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையிலே ஒப்படைத்தார்கள். அதற்குப் பின்னாலே, இந்த ஆட்சி தொடர்ந்து நடக்காது, 6 மாத காலம்தான் இந்த ஆட்சி இருக்கும், அதற்குப் பின்னாலே, இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று சொல்லிப்பார்த்தார்கள். அதையும் மீறித்தான் 4 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியைப் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவருக்குப் பின்னாலே டாக்டர் கலைஞர் அவர்களும் பொறுப்பேற்றுக்கொண்டு, ஏழை மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பாமர மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நன்மை செய்து வந்தார்கள்.

நாட்டில் ஏற்பட்ட கொள்கைக் குழப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, 1971-ம் ஆண்டு தேர்தல் நடந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருப்பது பதவிக்காக அல்ல, நாட்டிலே நல்ல கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகத்தான், நல்ல கொள்கையை நாட்டிலே நிறைவேற்ற ஆட்சியிலே இருக்கவேண்டுமென்றுதான் நாங்கள் ஆட்சியிலே இருக்க விரும்புகிறோமே தவிர, பதவிக்காக அல்ல என்பதை நாட்டு மக்களிடத்திலே எடுத்து வைக்கவேண்டுமென்று கருதி, ஓராண்டுகாலப் பதவியை தூக்கி எறிந்துவிட்டு இந்த நாட்டு மக்களை திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்தது. சந்தித்த நேரத்தில், இன்று ஒரு நிமிஷம் கூட நாங்கள் ஆட்சியில் இருக்கக்கூடாது, என்று சொல்லுகிறார்களே, அவர்களும், சுதந்திராக் கட்சியினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்த அணிகள் அத்தனையையும் நாட்டு மக்கள் அறிவார்கள். அவர்களுக்குத் துணையாக பத்திரிகைகள் அத்தனையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வராது, அவர்கள் 10 பேர், 15 பேர் கூட வரமாட்டார்கள், நாம்தான் மந்திரிசபை அமைப்போம் என்ற அளவிலே மந்திரிசபைப் பட்டியலைத் தயாரிக்கக் கூடிய அளவிற்கு பத்திரிகை பலம் இருந்ததை நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். நாட்டு மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கினார்கள். கொள்கையின் பக்கம் இருப்போம், ஏழை மக்களுக்குத் துணையாக இருக்கிற அரசின் பக்கம் இருப்போம் என்ற கருத்தில்தான் நாட்டு மக்கள் நல்ல ஆதரவினைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்தார்கள். அந்த ஆதரவோடு, இன்றைக்கு திராவிட முன்னேற்றக்



கழகத்தைச் சேர்ந்த முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும் அமைச்சரவையும் தொடர்ந்து மக்களுக்கு பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 1967-ல் உணவுப்பிரச்சனை பயங்கரமாக இருந்தது. இன்றையதினம் உணவு தானியங்கள் தேவையான அளவுக்கு மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகைகளைச் செய்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மும்மொழி திட்டத்திலே இந்தியை திணித்தபொழுது, நம்முடைய மாணவர்கள் கொதித்தெழுந்தபோது, ரத்தத்தின் ரத்தமாக இருக்கிற நம்முடைய பிள்ளைகள் உயிர் இழப்பதைத் தடுக்க வேண்டுமென்றும் தமிழ் மொழி முக்கிய மொழியானதால், அதற்கு முதலாவது இடமும், உலகத்தோடு தொடர்பு கொள்ள ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடமும் இருக்க வேண்டும், இந்திக்கு இடம் இல்லையென்று சொன்ன ஆட்சி, இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அதேபோல்தான் நீண்ட காலமாக தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுகேட்டு, அது நிறைவேறாமல் இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு என்ற பெயர் நாட்டிற்கு கிடைத்தது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல்தான் சுயமரியாதைத் திருமணம். பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பிச் செய்யப்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது என்று சொன்ன காலம் இருந்தது. சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லும், ஏற்கனவே திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் இந்தச் சட்டம் துணை புரியும் என்று நாம் சட்டமியற்றினோம்.

அதேபோல் பணக்காரர்கள் பின்னாலே சென்றுவிடவில்லை, முதலாளிகள் பின்னாலே சென்றுவிடவில்லை, ஏழை எளிய மக்களுக்காகத்தான் இந்த ஆட்சி இருக்கிறது என்பதற்காக நிலவுடமைச் சட்டத்தை நிறைவேற்றி 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற அளவை ஏற்படுத்தி சட்டத்தை நிறைவேற்றி, நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை மீட்டு ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.

அதேபோன்றுதான் பஸ்களைத் தேசியமயமாக்குகின்ற கொள்கை. பஸ் முதலாளிகள் நாட்டில் தாங்களே அனுபவித்துக்கொண்டு இருப்பதை அனுமதிக்ககூடாது என்ற முறையிலேதான் கழக ஆட்சி சமதர்மக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, முதலிலே 75 மைல்களுக்குமேலே இருக்கின்ற தடங்களில் செல்லக்கூடியவற்றை தேசியமயமாக்கி, அதற்குப்பிறகு இன்றைக்கு பஸ்கள்–10 பஸ்கள்தான் வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிற்கு உச்சவரம்பை ஏற்படுத்தி இன்றைக்கு அறிவித்திருக்கிறோம், 5 ஆண்டுக்காலத்திலே எல்லா பஸ்களும் தேசியமயமாக்கப்பட்டுவிடும் என்ற சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம். இதையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம் இந்த அரசு முதலாளிகள் பின்னாலே சென்றுவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்.

மின்சார நிறுவனங்களைப் பொறுத்தவரையில் தனியார் துறையிலே சிலர் மின்சார நிறுவனங்களை வைத்துக்கொண்டு கொள்ளை லாபம் அடிப்பதை அனுமதிக்கமாட்டோம் என்ற முறையிலே மின்சாரக் கம்பெனிகளையும் நாம் பொதுவுடமையாக்குவதற்காகச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். முதலாளிகள் பக்கம் நாங்கள் செல்லமாட்டோம் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

அதேபோன்றுதான் தொழிலாளர் நலனில் அக்கறைகொண்ட இந்த அரசு வந்ததற்குப் பிறகு 4 சதவீதம் ஆக இருந்த போனஸை 8.33 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசோடு வாதாடி இன்றையதினம் அந்த அளவிற்கு தொழிலாளர்களுக்கு போனஸ் கிடைக்கக்கூடிய வகையிலே, சட்டத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே பாடுபட்டிருக்கிறது என்று சொன்னால் இந்த அமைச்சரவையை நம்பாமல் வேறு எந்த அமைச்சரவையை நாட்டு மக்கள் நம்புவார்கள், நம்பிக்கை வைப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது மட்டுமல்ல. தொழிலாளர்களுக்கு அரசினர் பொதுத்துறையில் 24 சதவீதம் பங்கு உண்டு என்ற சட்டத்தை இந்த ஆட்சி நிறைவேற்றி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலத்திலே இரும்பாலை வரவேண்டும் வரவேண்டுமென்று பல ஆண்டு காலமாகக் கேட்டும் கிடைக்காத நிலையில் கழக ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே தமிழக அரசு மத்திய அரசோடு போராடி எழுச்சிநாள் கொண்டாடி டெல்லியைப் பணியவைத்து சேலம் இரும்பாலையைத் துவக்கி இன்றையதினம் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

அதுபோன்றுதான் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும், தூத்துக்குடி உரத்தொழிற்சாலைத் திட்டமும். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நிறைவேற்றக்கூடிய முயற்சிகளில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டுவருகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டபொழுது அக்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையிலே இரண்டாவது சம்பள கமிஷன் அமைத்து இன்றையதினம் 33 கோடி ரூபாய்க்கு அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கின்ற வகையில், இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசு அலுவலர்களை விட கூடுதலாக சம்பளம் பெறக்கூடிய நிலையை ஏற்படுத்திக்கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கிராமப் புறங்களிலே நல்ல பாதை வசதிகள், குக்கிராமங்களில் எல்லாம் மின்சார வசதிகள் செய்துதரவேண்டுமென்ற முறையிலே தனியாக இலாக்காக்கள் ஏற்படுத்தி சாலை வசதிகள், மின்சார வசதிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் இவற்றை வழங்குவதற்கு தனி முயற்சிகள் எடுத்திருக்கின்ற ஆட்சி



கழக ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலையில் இந்த ஆட்சிமீது நம்பிக்கை வைக்காமல் மக்கள் வேறு எந்த ஆட்சி மீது நம்பிக்கை வைக்கமுடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

மக்கள் கொள்கையில்லாதவர்கள் பக்கம் நம்பிக்கை வைக்க மாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது புதிதாக புதுக் கட்சி ஆரம்பித்து உள்ளவர்களும் ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்த்தவர்களும் இன்றையதினம் ஒன்றுசேர்ந்துக்கொண்டு ஒட்டுமொத்தமாக அவதூறுகளை கிளப்பிக்கொண்டிருக்கிறார்களே, அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன், தமிழ்நாட்டிலே நல்ல பல காரியங்களை செய்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, பின்தங்கிய வகுப்பினருக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மேட்டுக் குடியினர் வாழ்வு கெடாத வகையில் எல்லோருக்கும் சம அந்தஸ்து என்ற முறையிலே சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்தி இருக்கக்கூடிய ஆட்சி இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டில் இருக்கிறது என்பதைக் கொள்கை ரீதியில் அவர்கள் சொல்லி சந்திக்கட்டும். இந்த ஆட்சி என்றைக்குமே யாருக்கும் பயந்து பணக்காரர்கள் பின்னாலே சென்றுவிடவில்லை. தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அமைச்சரவையில் இருக்கிறவர்கள் முயற்சிக்கிறார்கள், சொத்து சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சர்கள் எண்ணுகிறார்கள், அங்கத்தினர் சொத்து சேர்த்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்றெல்லாம் அவதூறுகளைக் கிளப்பிவிடுகிறார்கள்.

நான் இந்த நேரத்திலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதே மன்றத்திலே 1962–ஆம் ஆண்டிலே கழகம் எதிர்கட்சியாக இருந்த நேரத்திலே சட்ட அமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். பொதுவாழ்வில் வரக்கூடியவர்கள் நல்ல நம்பிக்கையைப் பெறவேண்டுமானால் அமைச்சர்களாக வருகிறவர்கள், சட்டசபை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் எல்லோரும் இந்த மன்றத்திலே சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு ஸ்தாபன காங்கிரஸ் மெஜாரிட்டியாக இருந்த நேரம், ஏறெடுத்துக்கூட எங்களைப் பார்க்கமாட்டார்கள். எங்களைவிட்டால் யாருக்கும் ஆளத் தகுதியில்லை என்று இறுமாப்புடனிருந்த நேரம். அவர்கள் அன்றையதினம் சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டுமென்ற அந்தத் தீர்மானத்தைத் தோற்கடித்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் சட்டசபை உறுப்பினர்கள், சட்ட மேலவை உறுப்பினர்கள், அமைச்சரவையில் உள்ளவர்கள் எல்லாம் சொத்துக் கணக்கு காட்டவேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி இன்றையதினம் எல்லோரும் சொத்துக் கணக்கைக் காட்டி வருகிறோம். ஆனால் கணக்குக் கேட்ட ஒருவர் மூன்று ஆண்டுக் காலம் ஆகியும் இந்த அவையை மதித்து கணக்கு இன்னும் வைக்கவில்லை. அக்டோபர் திங்கள் 12, 13, 14, 15–ஆம் நாட்களில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு, செயற்குழு கூடிய நேரத்திலே 19-வது தீர்மானமாக ஒரு தீர்மானம் இன்னும் ஒரு படி மேலே இறங்கி

மாநகராட்சித் தலைவர், நகராட்சித் தலைவர், துணைத்தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகியவர்கள் எல்லாம் சொத்துக் கணக்கைக் காட்டவேண்டுமென்ற தீர்மானத்தை ஏக மனதாக நிறைவேற்றி இந்த அரசுக்கு அனுப்பியிருக்கிறது என்று சொன்னால் எங்களிடத்திலே பணக்காரர்கள் இருந்தால், பணக்காரர்களுக்கு நாங்கள் உதவவேண்டுமென்று நினைத்திருந்தால் அப்படிப்பட்ட தீர்மானம் பொதுக்குழுவிலே நிறைவேற்றப்பட்டு இந்த அரசுக்கு வந்திருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதே நேரத்திலே தான் பூனாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முக்கிய உறுப்பினர்கள் கணக்குக் காட்ட வேண்டுமென்று பிரச்சினையை எழுப்பி அந்தத் தீர்மானம் அங்கே அன்றைக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதையும் பார்த்தோம். அப்படிப்பட்டவர்கள் தான் இன்றையதினம் இந்த அமைச்சரவை ஒருநிமிடம் கூட நீடிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் வயிற்றெரிச்சல், பொறாமை, ஏழை எளிய மக்களின் பிரதிநிதிகள் இந்த ஆட்சியில் இருக்கலாமா, பணக்காரர்கள் பிரதிநிதிகள்தான் இந்த மன்றத்திலே அமரவேண்டும், அவர்களுக்கு வேண்டிய சட்டத்தை உருவாக்கக் கூடியவர்கள்தான் இந்த மன்றத்திலே அமரவேண்டுமென்ற உள் நோக்கத்தோடுதான் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள், அப்படிச் சொல்லக்கூடியவர்கள் ஹாண்டே அவர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள் . . . .

திரு. ஜே.ஜேம்ஸ் : அவ்விதம் ஒன்றும் நான் கூறவில்லை. நான், அமைச்சர் திரு. ஆதித்தனாரைச் சுட்டிக்காட்டினேனே தவிர டாக்டர் ஹாண்டேயைச் சுட்டிக்காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். ஆறுமுகம் : நாலரைக் கோடி மக்களும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதிர்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நாலரைக் கோடி மக்கள் என்றால் நாங்கள் எல்லாம் என்ன அந்தமான் தீவுக்கா போய்விட்டோம்? டாக்டர் ஹாண்டேயும், ஸ்தாபன காங்கிரஸும் மட்டுமா இங்கே இருக்கிறார்கள் ? நாலரைக் கோடி மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது, அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திருவிழா நேரத்தில் ஆண்டவனைக் காணப்போகின்றவர்கள் அனைவரும் பக்தர்களும் அல்ல, அதேபோல் பழனி, திருப்பதிக்குச் செல்லக்கூடியவர்கள் அத்தனைபேரும் மொட்டையடித்துக் கொள்பவர்களும் அல்ல, அதைப் போல, நடிகரைப் பார்க்கவரும் கூட்டம் அனைத்தும் அவரது வழியைப் பின்பற்றுபவர்கள் அல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அதேபோலத்தான், தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காகச் சில அரசியல் கட்சிகளோடு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்காக ராஜினாமா நாடகம் என்று ஏற்படுத்திய புதிய கட்சியைப் பார்க்கிறோம். அவர்கள்



கலைஞர் அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். கலைஞர் ராஜினாமா செய்து விட்டால் தான் முதலமைச்சராக வரலாம் என்று அவருக்கு ஆசை, அவரோடு சேர்ந்திருக்கின்றவர்களுக்கு அமைச்சர்களாக வர வேண்டுமென்று ஆசை, அப்படி நாங்கள் ராஜினாமா செய்தால் இவர்கள் இங்கு வர முடியுமா ? முடியாது என்று நாட்டு மக்கள் தீர்ப்பளிப்பார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. (மணியடிக்கப் பட்டது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :—ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தலைவரோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். திருமதி பழனியம்மாள் அவர்களை சுருக்கமாகப் பேசும்படி அழைக்கிறேன்.

திருமதி வி. ப. பழனியம்மாள்.—தலைவர் அவர்களே: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த "இந்த அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என்ற இத்தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1967-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், 20 ஆண்டுகளாக, ஆட்சியில் இருந்த ஒரு மாபெரும் கட்சிமீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்து, எங்கள் மீது நம்பிக்கை வைத்து, அளித்த ஆதரவின்மீது எதிர்கட்சியிலிருந்து நாங்கள் ஆளும் கட்சிக்கு வந்தோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த எங்கள் மதிப்பிற்குரிய முன்னாள் எதிர்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அது சட்டமன்றத்தில் நிறைவேறாததுடன், மக்கள் மன்றத்திலும் நிறைவேறவில்லை. அதன் காரணமாகத்தான் நாங்கள் 138–ஆக இருந்தவர்கள் 184–ஆக ஆனோம். இப்பொழுதும் மக்கள் மத்தியில் நாங்கள் செல்வாக்கை இழந்து விட்டதாக எதிர்கட்சி உறுப்பினர்கள் கூறுகிறார்கள். நாங்கள் மக்கள் மத்தியிலே செல்வாக்கை இழக்கவில்லை என்பதற்குச் சமீபத்தில் நடந்த வாக்காளர் பேரணியே சான்றாகும். உதாரணமாக என் தொகுதியை எடுத்துக்கொண்டால், சுமார் 64,000 பேர் வாக்களித்திருக்கிறார்கள். 41,000 வாக்குகளை நான் பெற்றிருக்கிறேன். ஆனால் வாக்காளர் பேரணியில் வந்தவர்களோ கிட்டத்தட்ட 30 பேர்கள். அதிலும் வாக்குரிமை பெறாத இளைஞர்கள்தான் பெரும்பாலும் இருந்தார்கள். இதிலிருந்தே எங்கள் பேரில் எங்கள் தொகுதி மக்களுக்கு உரிய அதிருப்தி அதிகமா ? நம்பிக்கை அதிகமா ? என்பதைத் தெள்ளனத் தெரிந்துகொள்ள முடிகிறது.

நாங்கள் ஆட்சிக்கு வந்த இந்த ஆறு ஆண்டுகாலத்தில், பொது மக்களுக்கு, அதுவும் குறிப்பாக ஏழை மக்களுக்கு, ஆற்றிய தொண்டுகள் எண்ணிலடங்காதவை. அவைகளை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. மக்களுக்கு இன்றியமையாப் பொருளான உணவுப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தது இந்த அரசாங்கம். விவசாயிகளுக்கு கடன் உதவி கொடுத்து, அவர்களுடைய இன்றியமையாதத் தேவைகளை

யெல்லாம் பூர்த்தி செய்துகொண்டு வருகிறது இந்த அரசாங்கம். குடியிருக்க வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனை வழங்குகிறது. குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிக விரைவில் வீட்டில்லாத அனைவருக்குமே வழங்குகிறது. புறம்போக்கு நிலம் வசதியில்லாத ஊர்களில் தனிப்பட்டவரது நிலத்தை விலைகொடுத்து வாங்கி அளிக்கிறது. எங்கெங்கு பயிர் செய்வதற்குத் தரிசு நிலங்கள் இருக்கிறதோ, அங்கங்குள்ள ஏழை ஹரிஜனங்களுக்கு அந்த நிலத்தை விவசாயம் செய்வதற்குப் பட்டா அளிக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதிகக் கல்விச் சலுகை அளிக்கிறது.

மேலும் ஒவ்வொரு ஊராட்சியிலும் அமைக்கப்படும் குழந்தைகள் காப்பகம், பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகளுக்கும் பயன்படும் வகையில், அந்தத் தெருக்களுக்குப் பக்கத்திலேயே அமைக்க அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. உயர்நிலைப் பள்ளி, கல்லூரி போன்றவைகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச உணவு விடுதிகளையும் இந்த அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

மேலும் வேலை வாய்ப்புப் பெறுவதில் இதற்கு முன்பு இந்த 16 சதவிகிதத்தை உயர்த்தியிருக்கிறது. கிராமப்புறங்களில் வீடில்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவும் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. அத்திட்டத்தை விஸ்தரிக்கவும் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. மேலும் தொழில் தெரிந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, இலவச தொழிற் கருவிகள் வழங்குவதுடன், வியாபாரமோ, தொழிற்சாலையோ ஏற்படுத்தும் மக்களுக்கு வட்டியில்லாக் கடனும் கொடுத்து உதவுகிறது இந்த அரசாங்கம். விவசாயத்திற்குரிய நிலம் வைத்திருக்கும் தாழ்த்தப்பட்ட குடிமகனுக்கு கிணறு வெட்டுவதற்காக, 3,000 ரூபாய் மானியமாக அளிக்கிறது. மின் இணைப்பிலும் ஹரிஜனத் தெருக்களுக்குத்தான் முதன்மையிடம் கொடுக்கிறது. ஒவ்வொரு தெருவிற்கும் இலவச வானொலிப் பெட்டியும் வழங்கிக்கொண்டு வருகிறது. மேலும் எல்லா ஊர்களும் குடிநீர்வசதி பெற வேண்டும் என்பதற்காக குடிநீர் வாரியம் என்ற ஒரு வாரியத்தையே அமைத்துப் பணிபுரிந்து வருகிறது இந்த அரசாங்கம். குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு வாரியத்தை அமைத்து, குடிசைகளை மாடி வீடுகளாக மாற்றிக்கொண்டு வருகிறது.

இதற்கு முன்பு இருந்த அரசு கல்விக்காக 45 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் அதைப் படிப்படியாக உயர்த்தி இப்பொழுது ஏறக்குறைய 100 கோடி ரூபாய் செலவழிக்கிறது. ஒவ்வொரு அறநிலையத்தையும் நல்ல முறையில் கவனித்து, அதன் வருவாயை, மக்கள் நலனுக்காகச் செலவழிக்கிறது. இவ்வளவு நன்மைகளைச் செய்யும் இந்த அரசாங்கத்தின்மீது பொதுமக்கள் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.



குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாங்கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படலாம், பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படலாம். வாழ்க்கை வசதியிலும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கலாம். ஆனால் உள்ளத்தில் நாங்கள் தாழ்ந்துவிடவில்லை. நன்றி செலுத்துவதில் நாங்கள் தாழ்ந்துவிடவில்லை. எங்களுடைய ஆதரவு என்றென்றும் இந்த அமைச்சரவைக்கு உண்டு என்று கூறிக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி, உரையை முடிக்கிறேன், வணக்கம்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, with regard to the Motion before the House, viz., whether the Assembly has got confidence in the Ministry headed by Thiru Karunanidhi, I wish to offer my remarks on behalf of the Swatantra Party.

I strongly oppose this Motion with all the emphasis. I want to reiterate that as far as the State of Tamil Nadu is concerned, the majority of the people in the State, practically almost everyone in the State wants this Government to go out of office. That is the general opinion and that is the general feeling current among the public. Therefore, though technically speaking, the question before us is whether this House has confidence in the Ministry or not, morally speaking, the people of Tamil Nadu had lost complete confidence in the Ministry as well as the D.M.K. The brute majority that we see here is only a fictitious myth which has absolutely no bearing on the real state of affairs outside this House. That is my contention.

When we have been discussing the Motion of Confidence for the past three days we have basically forgotten—I feel many of us have forgetton—one important point, viz., what is the reason for which normally we bring in a No-Confidence Motion. It is for three purposes. Firstly, we want to expose the wrong doings of the Government before the public, which we did last time. Secondly, we expect large-scale cross-voting from the Government benches, as it happened in Kerala. The third reason is, we want to reflect the view of the public that they have lost confidence in the Government and here we reflect the opinion of the public outside. But unfortunately, due to some reason, or other, we could not bring in a No-Confidence Motion. Now it may be that through a devious method the Confidence Motion has been brought in. I would like to ask one thing, how do you assess public opinion? All I want you to do is to keep your eyes and ears wide open and not to become victims of the lullabi and praise that has been sung in this House from different quarters. Do not be carried away by that. It may look sweet music to you but it is going to be your downfall if you listen to such sweet music and be completely taken away by it. It is only we in the Opposition reflect the opinion of the people outside. What I want every hon. Member to do is to make a random survey outside, go to 10 persons in any

part of Tamil Nadu or in your house and ask them about their opinion about you. Nine out of ten persons would say against you. I mentioned yesterday that about 4½ crores of people were against you and you questioned it. Our trying to outwit each other is not important. The most basic point is, nine out of ten in the entire State of Tamil Nadu, if you make a random survey, will tell the only answer, 'Mr. Karunanidhi and his cabinet must get out'.
முற்பகல் 11-00 That will be the only answer that will be given. I sometimes wonder how the Chief Minister has become so unpopular at so short time. I am surprised he is smiling now. The most unpopular person today in the whole of Tamil Nadu is the Hon. Chief Minister. I have not seen such a tragedy befalling any other Chief Minister. In the whole of India, no Chief Minister is so unpopular as our Chief Minister, Mr. Karunanidhi. Probably because of misdeeds, he has gained this unpopularity.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1952-ல் தேடிப் பிடித்து முதலமைச்சராக்கி, 1954-ல் இந்த நாடு விரட்டிவிட்டதே ஒருவரை அதை ஹாண்டே அவர்கள் மனதில் வைத்து கொண்டு பேசுகிறாரா?

Dr. H. V. HANDE: The majority of people in Tamil Nadu and number of leaders of different parties, people all over India and world respect that leader.

(The Hon. Thiru Si. Pa. Aditanar rose.)

I will yield the floor later. Rajaji is such a highly respected person all over the world. I am proud of such a leader. Whether he has been sent on a particular issue, people had told later that what he had done is right. But unfortunately Mr. Karunanidhi is thinking of only the illusory, mythical, false and fictitious majority in this House and not the feelings of people outside. I am voicing the feelings of people outside. You make a random survey and you will know that you would not see such an unpopular person as Mr. Karunanidhi. Nine out of ten would like Mr. Karunanidhi to go out.

The Hon. Thiru Si. Pa. ADITANAR: I wish to point out to the hon. Member Dr. Hande that he is merely repeating only what was said before 1971. Exactly the same words, nine out of ten are against the Government are, now being repeated. When elections came, we found out what was the real state of affairs. What he is saying is the result of his wishful thinking. Such words were said before last elections. We know what happened later. Elections will come in due course and not within 6 months or one year, according to the wishes of some people. He is repeating the same words, nine out of ten 9·9 persons out of ten are against the Government. That is what every newspaper wrote. There were many people who were misled by such statements.





Dr. H. V. HANDE: In 1971, I never said that D.M.K. will lose. I met Rajaji after touring a good portion of Tamil Nadu.

The Hon. Thiru Si. Pa. ADITANAR: What did your newspapers say? What did 'Hindu', 'Indian Express,' 'Swadesamitran' say?

Dr. H. V. HANDE: Why are you trying to defend the Chief Minister so much? It is rather curious to find your sudden outburst and anxiety to defend the Chief Minister.

Let us do things in a democratic way. As far as I am concerned, I met Rajaji after my tour of Tamil Nadu and I told him 'I am very doubtful whether D. M. K. will lose'. He was asking for information and I gave my opinion. After election was over also, I met Rajaji. I gave my assessment at that time and it proved true. I never said, like what Mr. Adityan is saying now, that nine out of ten are against D.M.K. Government. Of course, the newspapers made some small miscalculation about the wind of change. They had not taken into account the array of forces, Mr. Kamaraj on one side, Indira Congress, Muslim League, D.M.K., Forward Bloc and C.P.I. on the other side. Number of people were arrayed on the other side. That the newspapers did not calculate correctly. What I am saying is this. I am not trying to become a sooth sayer. But I did not say at the time of Krishnagiri election when Mr. Subramanyam was stating, that D.M.K. will regret its decision to support Indira Congress. My prophecy has become true. What I had said then has proved correct. I am telling something to you even now. Take it seriously. In the present context of things, nine out of ten people in Tamil Nadu are against the D.M.K. and want them to go out.

I now come to another point. We have seen parties splitting up. The Congress Party, was split up. The Communist Party was split up. But never have I seen such happenings like the present happening when Mr. M. G. Ramachandran broke from the D.M.K. party and formed his own party. I am not going into the names. They call their party as 'Anna D.M.K.' and the other as 'Karunanidhi D.M.K. party.'

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மக்கள் பிலுமோடி சுதந்திரா, ராஜாஜி சுதந்திரா என்று பேசிக் கொள்கிறார்களே, அது போலவா?

Dr. H. V. HANDE: My point is Mr. Karunanidhi is insulated from all realities. He is not seeing what is happening outside? Even the other day Piloo Mody had written to me asking me some information. He had also met Rajaji. There is no problem at all?

But what I want to point is the spontaneous outburst among the people to throw the D.M.K. out. But you are not seeing that but only seeing the singing of the lullaby song here in this House. What was the 'vachanams' the 'caricatures' written on the walls outside? What was it that was written on the buses? I am sorry at those things. I do not approve of it. I am not at all taking sides. As far as I am concerned it is between tweedledum and tweedledee. Everywhere the buses were stopped. All sorts of things were written. I cannot mention those things inside this House. Yesterday some Members mentioned about some 'vachanams'? What was its meaning! The amount of hatred that was within has come to surface. It has come in public. What sort of language they are speaking outside? It may be they are in M.G. Ramachandran's group. But they were all D.M.K. men and trained by Mr. Karunanidhi and his cabinet collegues, previously. I do not know whether the Chief Minister will cast asperison on Rajaji or Kamaraj. But let Mr. Karunanidhi know what is happening outside and feelings of public outside? But what were the words that they used. Please think it over. In 1971, how much anguish we felt; in every wall they had put up pictures and words in a rotten way about Kamaraj and Rajaji. All sorts of things! In every place in Tamil Nadu such things were exhibited. How much anguish I felt at those things. I felt like that. I really say, honestly say upon God—if there is one as he would say,—I really felt unhappy that these things should happen in Tamil Nadu. But at the same time when I met reporters and addressed meetings in Madurai and other places, I said that Mr. Karunanidhi and his cabinet and his party taught these people then and now it is recoilingon him.

As you sow, so you reap. It was debasing, unparliamentary. It is those persons who are now doing things against you. What you did is recoiling on you now.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1967-ல் ராஜாஜியையும், அண்ணாவையும், காயிதே மில்லத் அவர்களையும் கழுதைமேல் ஏற்றி படம் போட்டவர்களோடுதான் நீங்கள் 1971-ல் கூட்டு சேர்ந்தீர்கள். அதை மறந்துவிட வேண்டாம்.

Dr. H. V. HANDE: This is the misfortune with our Chief Minister. He thinks that one wrong could set right another wrong. Definitely not. One wrong can never set right another. This is no good. It is no use trying to say tit for tat. I feel you must rise above these things and these petty things. You must feel, the Chief Minister must feel that what was done in 1971 is absolutely wrong and most discourteous. If he [illegible] realised it I will be happy. That is the most important point.



What we did in 1971? It was not a battle. After all, Kamaraj and we got 65 lakhs of votes. Why caricature it? And this group got 85 lakhs of votes. Only a difference of 20 lakhs for the whole State and in every constituency it will be 5,000 or 6,000 votes. It was not a wash out. It was a fight against the Prime Minister of India and strongly entrenched the Chief Minister of Madras. Therefore, they did not fare so badly. Therefore, I am sorry, this is not the type of answer from our distinguished Chief Minister.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-ல் அவர்கள் சொல்லுவது போல் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் எங்கு அடிக்கப்பட்ட ஆபாசமான எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன? அந்தப் போஸ்டர்களை, கழகத்தின் சார்பில் போடப்பட்டிருந்தால் அதைக் கொண்டு வந்து அவர்களால் காட்ட முடியுமா? அதற்கு மாருக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தோழமைக் கட்சிகளுக்கும் எதிராக தேர்தலில் ஈடுபட்டிருந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி ஆபாசமான சுவரொட்டிகளை ஒட்டியிருந்தார்கள். அவற்றைக் கொண்டு வந்து நான் காட்டுகிறேன். அப்படி திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட போஸ்டர்களை டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்து காட்டமுடியுமா?

Dr. H. V. HANDE: In every wall, it was written. I did not go about collecting it. (Ruling party Members were laughing). Is it a matter for laughing? Why are you laughing? Your laughing will not last long. You will laugh for a few more months. How many of you will go where, I do not know. (Interruption) Parrot-like you are repeating. The Prime Minister said and you are repeating. Ultimately you do not know where you will be. I do not go about collecting caricatures. I am just trying to impress that this is the sort of people whom you developed in your party. That is my charge. So, it has recoiled on you now. I have said in this House earlier, 'please do not exploit the name of Annadurai for your political ends'. Then protests were raised and one gentlemen got very angry with me. (Interruption). I do not know all of you support as now. I may have to support you later. When I said 'do not exploit the name of Annadurai for your own political ends', one gentleman got very angry and used some strong words. But the very same gentleman is in a different place now. I am not bothered about it now. What I want to say is this, what I said then was correct. Then I was changing. The funniest part is another party leader is doing the same thing now. He is now exploiting the name of Annadurai.

The Chief Minister is not bothered about these things. He is smugly smiling. I do not know I can say so, but you seem to be thick skinned. Without being sensitive, you are smugly sitting and smiling.

Thiru S. KANDAPPAN: Sir, Dr. Hande says we are thick skinned. I am afraid this is not in good taste and also I may request you to tell him not to address the House directly, for he is unnecessarily provoking us by that.

Dr. H. V. HANDE: We know what 'decent' persons are and we know that difference. Now the point is how has this developed? I had mentioned in this House and I gave a red-light warning. I said that Mavatta Seyalargal, Vatta Seyalargal and your partymen are going on doing things. That is giving rise to the feeling that there is corruption and corruption is rampant. I gave a warning two years ago. You all laughed then as usual. Now that is the same thing that his being mentioned by persons who were closely associated with you till yesterday I find everywhere, wherever I go and meet people, when I ask 'why you have shifted your party', do you know what he says, 'in the other D. M. K. the Vatta Seyalargal and Mavatta Seyalargal and others are indulging in corruption.

In other words this party according to me is going on the path of fascism. I mentioned it in this House. In fact I forgot. When I was warning not to exploit the name of Annadurai for political ends, the Chief Minister was very angry with me and called me 'ULARUVAYAN' (Interruption) it was published in 'Murasoli............'

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவு செய்து உண்மை விஷயங்களைப் பேசுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முரசொலியில் போட்டிருந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முரசொலியில் போட்டதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ளக்கூடாது. நான் அவர்களைக் கேட்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் அவர்களை அப்படிச் சொன்னதுண்டா? அப்படி நான் இந்த அவையிலோ அல்லது வெளிக்கூட்டங்களிலோ சொன்னதுண்டா? அப்படியிருந்தால் தெரிவிக்கவும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பேசியதற்குப் பிறகு சிலர் உளறுவாயன் என்று சொன்னார்கள். அடுத்த நாள் முரசொலியில் கருணாநிதி என்னைப் பற்றி உளறுவாயன் என்று சொன்னதாகப் போட்டிருக்கிறார்கள். If you want, I can produce copies. திருவாளர் உளறுவாயன் என்று கருணாநிதி சொன்னதாகச் சொல்லி முரசொலியில் போட்டிருந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருவாளர் உளறுவாயன் என்று எழுதியிருந்ததாகச் சொல்கிறார்கள். அதை அவர்கள் அவர்களைப்பற்றித்தான் என்று எடுத்துக் கொண்டது உங்கள் தவறே தவிர அது முரசொலியின் தவறாக இருக்க முடியாது. நான் டாக்டர் ஹாண்டே அவர்களை உளறுவாயன் என்று என்றைக்குமே சொன்னதில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் அதை படித்துவிட்டுத்தான் சொல்லியிருக்கிறேன். என் பெயரைக் குறிப்பிட்டு சட்டசபையில் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதாக முரசொலியில் வந்திருந்தது.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படியிருந்தாலும் நான் அதையெல்லாம் சொல்லமாட்டேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சொல்லாமல் சொல்வதை சாமர்த்தியம் என்று நினைக்கிறீர்கள். நீங்கள் மனதில் உள்ளதை மறைமுகமாகச் சொல்கிறீர்கள். நான் என் மனதில் உள்ளதை நேரிடையாகச் சொல்கிறேன். உங்களுக்குப் பின்னால் ஒரு பத்திரிகை இருக்கிறது நீங்கள் சொல்வதைப் போட.

I am very plain and straightforward. You may try to adopt devious methods. But these cannot last long. These are small and minor things. People will realise that this sort of thing comes from the D.M.K. 'Vatta Cheyalalargal and Mavatta cheyalalargal' have earned a bad name for your Party and that is what Thiru M. G. Ramachandran has stated............

திரு. பி. பொன். சொக்கலிங்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், வட்டச் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் என்பது ஆங்கில வார்த்தையா? ஹாண்டே அவர்கள் இதைத் தெரிவிக்க வேண்டும்.

Mr. DEPUTY SPEAKER: No point of order.

Dr. H. V. HANDE: That is why anti-Karunanidhi feeling has been developed inside your party.

Then during the Farmer's Agitation, the anti-Karunanidhi feeling has become almost double. What I stated during the Farmer's agitation has become true. At that time nobody bothered about taking my advice. I mentioned that your Party Members had taken the law into their own hands. Even when the No-Confidence Motion was discussed, I told him that they had taken the law into their own hands and they had directed the Police to do this or that and that was responsible for the 16 deaths that took place on the Farmers' Bandh Day. Why did the deaths take place? The Hon. Minister Thiru Sadiq Pasha knows what had happened in the Coimbatore district. Almost in every district the D.M.K. men took the law in their own hands. So, the 16 deaths took place. Sir, the other day Anti-Corruption Day was conducted on 15th or 16th November and at that time no death took place and no 'vanmuraigal' took place because the D.M.K. men never came out of their places because they were scared and rightly scared and so there were no 'vanmuraigal'. But during the Farmer's Agitation they took the law into their own hands.

Then came the split in your party. After the split, people are under the impression that you have lost their support. But you seem to have illusory confidence and you are living in a paradise, about which

I do not want to describe. As I said before, most of the Members and the Ministers would not be returned again in their constituencies if there is re-election now and there is absolutely no doubt about it.

Then when we charged the Government with 'Oozhal' people started thinking about you. But when one of your own persons charged you with 'Oozhal', they felt that that must be true and that there is great truth in what we have stated and they will show you their own mind and what will happen to you. Now you are so confident because 170 Members are your side. You are living in a 'karpanai ulagam' (THIRU N. VEERASWAMY: It is 176). They will never forget 176. But at every point of time you have to make note of it because you do not know what is going to happen after some time.

Now, what is my assessment of the whole problem? My assessment is that the greatest misfortune of our State is that the D.M.K. Party has come to rule over this State. I am making a very, very serious charge against the Government. The Hon. the leader of the house is smiling and he is enjoing the whole thing. The other day the Hon. Chief Minister felt sorry that he had committed a mistake in 1971 in making alliance with the Ruling Congress Party and the C.P.I. and he has openly expressed that in this House. I also share his feeling and further say that Tamil Nadu has committed a big mistake in bringing D.M.K. rule into our State and that is the greatest misfortune of this State. Why I say is this? Because you have corrupted the public life. According to me, wherever you go the talk is corruption. If you go to the Ripon Buildings you can see corruption. If you send a C.I.D. man there he will report that it is full of corruption. Why should I say all these things? It is only to rectify the mistakes. Can you not set right things in the Corporation? How is it that you have become unpopular? It is all because of this corruption and you must do something about it.

When the No-Confidence Motion was discusesd last time I told the House about the Madurai Mahanadu. That Madurai Mahanadu has weakened your party. My prediction at that time that the Madurai Mahanadu is going to be the death-knell of D.M.K., has come true. So also, whatever I say now would come true after six months.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I would like to know what the hon. Member, Dr. Hande, means when he says that what he says now will come true after six months.....

DR. H. V. HANDE: Because of the simple ingriedient called 'commonsense'. I think you have got it in abundance.

Now so far as our State is concerned, what disgrace this D. M. K. Ministry has brought to our State The recent happenings in this House are the greatest disgrace for our State. The Ruling Party Members



[Dr. H. V. Hande]

may say that they did not do anything which the other Party did not do. Whatever that may be, the fair name of our State has been bismerched. Now after the recent happenings and after the rape of democrcay I cannot say with pride about Tamil Nadu Legislative Assembly, etc.

The whole people are laughing at us, and saying the D.M.K. has done this. Such a thing has never happened in the twenty or 25 years of Congress rule, right from 1935. The greatest disgrace has been brought about to this House by the hon. Mr. Karunanidhi and Mr. Mathialagan. What a controversy between Mr. Mathialagan (you may call him the previous Speaker; he may be so according to you. But he says differently. That is a different point) and the Hon. Chief Minister? I have never seen such things happening inside the House. How can there be such a behaviour inside the House? We must conduct ourselves as democrats. People are laughing at the way in which charges and counter-charges were exchanged between Chief Minister and Mr. Mathialagan. What people are saying is that by bringing the D.M.K. into Government, the democratic machinery has come to an end. முற்பகல் 11-30

**Why that stock should be there? You are trying to escape by saying 'Kolgai'.**

தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசுவது போல் நடித்து அதன்பேரில் டைரக்டர்கள், முதலாளிகள் பயன் அடையக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியதால்தான் அவ்வளவு ஸ்டாக் இருந்திருக்கிறது என்று பின் பாயிண்ட் பண்ணிச் சொன்னேன்.

**Then I say there was some understanding between you.**

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u>: டாக்டர் ஹாண்டே அவர்கள் எதையோ வாங்கிவிட்டுத்தான் இங்கு வந்து இப்படிப் பேசுகிறார்களா ?

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: கொஞ்சம் கூட ரோஷம் இல்லை; இவ்வளவு தெளிவாகச் சொல்லுகிறேன். ஜி.ஒ.க்களை எல்லாம் கோட் பண்ணியிருக்கிறேன். தைரியமாகப் பதில் சொல்ல, சரியான பதில் சொல்ல முடியவில்லை.

[Dr. H. V. Hande]

You are trying to escape the whole thing. Why can't you see that all the points raised by me are rectified ? Without doing that, why talk in a personal manner ? I am making specific charges. உங்களுடைய ஜி. ஓ.-க்களே ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன. இவ்வளவு சலுகைகள் கொடுப்பது எந்த இடத்திலும் கிடையாது. எதற்காக அவ்வளவு ஸ்டாக் இருக்கிறது ? மெட்டீரியல் மேல் முத்திரை போடாமல் இருக்கிருர்கள். அதனுல் தொழிலாளர்களுக்கு லாபம் ஒன்றும் கிடையாது. தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். முதலாளிகள் மூடு விழா செய்து விடுவார்கள் என்று சொல்லுவதெல்லாம் நாடகமே தவிர வேறல்ல.

இதைச் சொன்னுல் என்னைத் திட்டுகிறீர்கள். ஸ்பெசிக் சார்ஜ் சொல்கிறேன். இன்னின்ன ஜி.ஓ. இன்னின்ன காரணத்திற்காகப் போடப்பட்டது என்று பதில் சொல்லலாம். வாட்டர் போர்டு சேர்மன் பதில் சொல்லலாம். இந்த ஜி.ஓ. இதற்காகப் போடப்பட்டது, ஆடிட் இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டில் இப்படி இருக்கிறது என்று ஒவ்வொரு பாயிண்டுக்கும் பதில் சொல்வதுதான் பண்பு. அதை விட்டு விட்டு பர்சனலாகச் சொல்வது நல்லதல்ல. Let us behave like gentlemen. My point is this. I want specific answers to the specific charges I have mentioned. To avoid all this, nothing should be said. We know each other. Let us excuse each other. Let us not be losing temper.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு மணி நேரம் கோபாவேசமாகப் பழித்தீர்கள். பதில் சொல்லும் போது உணர்ச்சி வந்துவிடுகிறது. எழுந்தால் உணர்ச்சி வந்துவிடுகிறது. உட்கார்ந்தால் சிரிக்கிறீர்கள். உத்தரவு போட்டுச் சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். அதில் என்ன தவறு ? அரசாங்கத்திற்குச் சில லட்சம் ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று உதவி செய்திருக்கிறோம். ரா மெட்டீரியல்ஸ் கொடுக்கிறோம். உற்பத்தி குறைகிறது. உடனே மறு ஜி.ஓ. போட்டு உற்பத்தி பெருகும் முறைகளை வகுக்கிறோம். இவ்வளவு சலுகைகளைக் கொடுத்த பிறகு ஹாண்டே அவர்கள் சந்தேகப்படுவதுபோல் தவறுகள் நடந்துவிடக் கூடாது என்பதற்காக நம்முடைய மானேஜிங் டைரக்டரைப் போடுகிறோம் ; நம்முடைய டைரக்டர்களை அதிகமாகப் போட்டிருக்கிறோம். எதையும் இரகசியமாகச் செய்துவிட வில்லை. இதில் என்ன தவறு ? ஏ.ஜி. ஆபீஸ் ஆடிட் பற்றி ஏதோ பத்திரிகையில் எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்துவிட்டு எல்லாம் உண்மைதான் என்று கருதிவிடக் கூடாது. ஜி.ஓ. ரகசியமல்ல. உற்பத்தி செய்யப்பட்ட பைப்புகளை இந்த நாட்டில் வாங்கவில்லை. ஆகவே, பெரிய இழப்பு ஏற்பட்டது. அதை மாற்ற நாமே ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்தோம்.

நம்முடைய கண்ட்ரோல் இல்லாமல் போய்விடக் கூடாது ; முத்திரை போடுவதில் தவறு நடந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய நிர்வாக இயக்குநரைப் போட்டிருக்கிறோம் ; போர்டில்



[திரு. செ. மாதவன்]

தலைப்பட்டவர்கள் அதிகமாக இருக்கக்கூடாது என்று நம்முடைய டைரக்டர்களை அதிகமாகப் போட்டிருக்கிறோம். இவ்வளவு விளக்கம் சொன்ன பிறகும் " நீங்கள் டைரக்டர்களிடம் வாங்கிவிட்டீர்கள்" என்று சொன்னுல் நாங்கள் திருப்பிக் கேட்க வேண்டியிருக்கிறது.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : ரா மெட்டீரியல்ஸ் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குப் பதிலாக பைப்ஸ் ஆகத்திருப்பி வாங்கும்போது ரா மெட்டீரியல்ஸ் கொடுத்த அளவுக்குத் திருப்பி வாங்க வேண்டாமா ? நாற்பது லட்சத்திலே பாதி கூட வாங்கவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. We want you not to lose. There is no difference of opinion. In fact I and the Hon. Minister Mr. Madhavan agree and in fact in the Southern Structurals we have spoken.

இந்தக் கம்பெனி அந்த ரா மெட்டீரில்லை வேறு எங்காவது விற்றிருக்கிருர்களா ? ரயில்வே ஃப்ரைட் சலுகை காட்டினுல் பிரச்சினை இல்லை. 79 லட்சம் ஸ்டாக் தேங்கிக் கிடக்கிறதே. அந்த ஸ்டாக்கை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்று கேட்டால் "அம்ப்ரெல்லா ஆப் பாலிடிக்ஸ்" பேசுகிருர்கள். ஜி.ஓ. போட்டிருக்கிறோம் என்று கூறுகிருர்கள். அரசாங்கப் பணத்தை வேறு எப்படிக் கொடுக்க முடியும். ஜி.ஓ மூலந்தான் கொடுக்க முடியும். Let us not stand on technical grounds. I am not saying that. The question is, why give room for suspicion about your *bona fides* ? Simply because there is G.O. it does not exonerate you. My specific point is this. There is the Inspection Report and objections have been pointed out and they are specific. It was the duty of Ministers to clarify them. That was the object of the Inspection Report. Give me your answers. Why adopt devious methods and try to escape from the charges which I have levelled ? I do not mind if you give the replies on Monday. If you want time you may take it.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வாட்டர் போர்டுக்குத் தேவையான பைப்களையும் சக்தி பைப்சில் உற்பத்தி செய்கிருர்கள். அவர்கள் பைப்களை வெளியில் விற்க வேண்டுமென்று நாங்களே ஆசைப்படுகிறோம். எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு வாட்டர் போர்டு வாங்கிக் கொள்ளும். அது போக மீதியை வெளியே விற்க வேண்டுமென்று நாங்களே விரும்புகிறோம். வெளியே விற்கக் கூடாது, ஸ்டாக் வைக்க கூடாது என்று சொல்லுவது தவறு.

இந்தியா மீட்டர்ஸை எடுத்துக்கொண்டால் அட்வான்ஸ் கொடுக்கிறோம். எலக்ட்ரிசிடி போர்டுக்கு வெளிமாநிலங்களிலிருந்து குறைந்த விலைக்கு மீட்டர்களை வாங்க முடியும் என்றாலும் இந்த அரசாங்கம் கொள்கை அளவில் முடிவு செய்து விலை கூடுதலாக இருந்தாலும்கூட இந்தியா மீட்டர்ஸைதான் வாங்கவேண்டுமென்று கூறியிருக்கிறோம். பல

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு இழக்கும் நிலை ஏற்படக் கூடாது என்று அவ்வாறு செய்கிறோம். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படக்கூடாது என்று செய்கிறோம். அதே போன்று சக்தி பைப்ஸ் உற்பத்தி செய்கிறவர்களுக்குச் சலுகைகள் கொடுத்திருக் கிறோம். அந்தச் சலுகைகளைக் கொடுத்ததால் தவறு செய்ததாகக் கூற முடியாது.

DR. H. V. HANDE: The Audit has said that if it was the policy of the Government, they have to do it in a different way. They have brought out certain mistakes and irregularities. At the same time they have pointed out that the raw materials have not been hypothecated. You may issue another G.O. and that is a different matter.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தவிதமான புதிய பதிலும் உங்கள் வாதத்திற்குத் தேவையில்லை. நான் அளித்துள்ள பதில்களே போதும். அந்த ஜி.ஓ.-படி அரசிலிருந்து சலுகைகள் கொடுத்தோம். நான் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். ஏ.ஜி. அப்படிச் சொல்லி யிருக்கிறார்கள் என்றால், மக்கள் பிரதிநிதி என்ற முறையில் இந்தச் சலுகைகள் கொடுத்தது தவறு என்று சொல்லுங்கள். ஜி.ஓ.வில் தவறு இருக்கிறது என்றால் சொல்லுங்கள். ஏ.ஜி. சொல்கிறார் சலுகை கொடுக் கக்கூடாது என்று. நாங்கள் கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். இதை இன்னும் ஆராய வேண்டிய அவசியமே இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இரண்டு ஜி.ஓ.-க்களை நான் குறிப் பிட்டேன். அவை ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கின்றன என்பதைத் தான் சொல்கிறேன்.

The two G.Os. are contradictory.

ஸ்டாக் வைத்துக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். ஹைபாத்திக் கேட் செய்யாமல் கொடுத்து விட்டார்கள். ஹைபாத்திக்கேட் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்குத்தான் கொடுக்கவேண்டும் என்று ஜி.ஓ. போடப்பட்டிருக்கிறது. வேறுவிதத்தில் கொடுக்கலாம் என்றால் வேறு ஜி.ஓ. போடவேண்டும், ஜி.ஓ.-வில் அரசாங் கத்திற்குத்தான் கொடுக்க வேண்டும்மென்று போடப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக வேறு ஜி.ஓ. போடப்பட வில்லை. ஹைபாத்திக்கேட் செய்யாமல் கொடுத்துவிட்டிருக்கிறார்கள். அதற்கு ஜி.ஓ. போடாமல் கொடுத்துவிட்டார்கள்.

There should have been a separate G.O.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கடைசியாக கரெப்ஷன் இல்லை என்ற முடிவைச் சொல்லி விட்டார்கள். பழைய ஜி.ஓ. என்று சொன்னார் கள். ஒவ்வொரு கட்டத்திலும் இந்தத் தொழிற்சாலையை ரிவைவ் செய்ய



பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஒவ்வொரு முயற்சியும் தோல்வி யடைந்தவுடன் இன்னொரு முயற்சி எடுக்கப்பட்டது. இன்னொரு ஜி.ஓ. போடப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் புதுச் சலுகைகள், புது முயற்சிகள் எடுக்கப்பட்டன. புது ஜி.ஓ—க்கள் போடப்பட்டன. ஏ.ஜி. இதை ஒரு குற்றமாகச் சொல்லலாம். அரசு எடுத்த முயற்சியினால் நஷ்டம் ஏற் பட்டதா? அரசு எடுத்த முடிவுகளில் முறை தவறி முடிவுகள் எடுக்கப் பட்டனவா? அப்படிச் சொல்லவேயில்லை. ஒவ்வொரு ஜி.ஓ. வையும் மாற்றிப் போட்டிருக்கிறோம் என்பது குற்றச்சாட்டு. அப்படி மாற்றித்தான் போட வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்று சொல்லி, அப்படிச் செய்வது தொழிலாளர்களுக்காகச் செய்வது என்று சொல்லி விட்டால் எஸ்கேப் செய்யலாம் என்று நினைக் கிறார்கள். ஆனால் அப்படி எஸ்கேப் செய்ய இடம் இல்லை. திட்டவட்ட மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பொருள்களை உற்பத்தி செய்யுங் கள், உற்பத்தி செய்து அவற்றை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறீர்கள். நான் சொல்வது அப்படி ஜி.ஓ. போட் டதற்குப் பிறகு அதற்கு மாறாக நடந்துகொண்டிருக்கிறார்கள். நான் சொல்வது அதிகப்படியான சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஜி.ஓ. சரியான முறையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஜி.ஓ.—க்கு மீறிச் சலுகைகள் காட்டப் பட்டுள்ளனவா? உற்பத்தி செய்து வாட்டர் போர்ட்டுக்கு வேண்டியதை தேவைப்பட்டதைக் கொடுத்துவிட்டு வெளியிலும் விற்கலாம். நமக்குத் தேவையானதை உற்பத்தி செய்ய வேண்டும், வெளியேயும் கொடுக்கலாம். சட்டத்திற்கு மாறாக ஏதாவது சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா? அதைச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஜீ.ஓ.-க்கு மாறாகச் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்களும் அமைச்சர் அவர் களும் அரை மணி நேரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஜீ.ஓ.-க்கு மாறாக நடவடிக்கைகள் எடுத் திருப்பதாக, நடந்துகொண்டிருப்பதாக ஏ.ஜி. சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப் படித்துக்காண்பித்தேன். ப்ரொஸீடிங்ஸைப் பார்த்தால் அது தெரியும்.

I have referred to it in my speech and you have not replied to it.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் பதிலும் சொல்லியிருக்கிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: பதில் சொல்லவில்லை. ஜீ.ஓ.—க்கு மாறாக நடந்துகொண்டிருக்கிறீர்கள். அப்படி ஜீ.ஓ.-க்கு மாறாகப் பண்ணியிருக் கிறார்கள் என்று சொன்னால்.... அதைப் பற்றி வேண்டுமானால் டைப் செய்து எல்லோருக்கும் கொடுக்கிறேன். ஏ.ஜி. நான்கு இடங்களில் திட்டவட்ட மாக அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல ஜீ.ஓ.-க்கள் பல நேரங்களில் போடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் பல நேரங்களில் மூடி மூடித் திறக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்போதும் மூடியிருக்கிறது. மூடிவிடாமல் இருக்க ஜி.ஓ. போட்டு செய்கிறோம். கொள்கை அளவில் எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. நான் இதைப்பற்றித் திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறேன்.

* THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Though the Hon. Minister for Industries with all his efficiency has very intelligently explained with a pinch of salt in his explanation we still feel that the Opposition is not convinced with it. I want a specific reply with regard to the following point. What is the quantity of pipes that the Sakthi Pipes supplied to Government and quantity of the pipes sold outside to others by them.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் குற்றசாட்டு இந்த டைப் தொழிற்சாலைக்குப் பணம் கொடுத்து ரிவைவ் செய்தோம், வெளியில் பொருள்களை விற்றுவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். வெளியில் விற்பதைப் பாராட்டுகிறோம். வெளியில் விற்க வேண்டும் என்று நாங்களும் சொல்கிறோம். நமக்குத் தேவையானதை நமக்கு விற்கிறார்கள். இதில் என்ன தவறு என்று புலப்படவில்லை. பல ஜீ.ஓ.-க்கள் போடப்பட்டு பல சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன என்று சொல்கிறார்கள். ஏ. ஜி. இதை சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் சொல்கிறார்கள். இதில் ரகசியமாக எதுவும் செய்யப்படவில்லை. அதற்குச் சில சலுகைகள் கொடுத்து உயிர்கொடுத்திருக்கிறோம். இது எப்படித் தவறு என்று எனக்குப் புரியவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஜீ.ஓ.-க்கு மாறாகப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏ.ஜி. குறிப்பிட்டிருக்கிறார்கள் அதைப்பற்றி. பூராவையும் நான் வேண்டுமானால் இன்னும் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இரண்டு பேர்களும் உங்கள் தனிப்பட்ட கருத்துக்களை வைத்துக்கொண்டு வாதாடுகிறீர்கள். நீங்கள் சொல்வதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சிச் சார்பிலும் அவர்கள் வாதங்கள் செய்யப்போகிறார்கள், மினிஸ்ட்டர் பதில் சொல்லவும் போகிறார்கள். நீங்கள் பேச ஆரம்பித்து ஏறத்தாழ இரண்டு மணி நேரமாகி விட்டது.

DR. H. V. HANDE: My point is that G.Os. have been flouted.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜீ.ஓ., ஜீ.ஓ., ஜீ.ஓ., எனது தர்மசங்கடமான நிலையைப் பார்க்கவேண்டும். நானும் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன், மற்றவர்களும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.



திரு. கு. காமாட்சி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிக்கேஷன். இந்தச் சபை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துவருகிறோம். எதிர்கட்சி உறுப்பினர்கள் குற்றசாட்டுகள், ஊழல்களைப்பற்றிச் சொன்னார்கள். நேற்று ஒருவர் ஒரு ஊழலைச் சொன்னார்கள். அதற்கு நல்ல பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது, அடுத்தாற்போல் ஒரு ஊழலைச் சொன்னார்கள். அதற்கும் பதில்...............

டாக்டர் எச். வி. ஹாண்டே : பதில் கிடைக்கவில்லை.

திரு. கு. காமாட்சி : கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இரண்டு மணி நேரமாகப் பேசியபோது அவர்கள் குறுக்கிடவில்லை.

திரு. கு. காமாட்சி : இரண்டாவது பெரிய ஊழல் மர்மப் பேழையில் இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது ஹாண்டே அவர்கள் ஒரு ஊழல்பற்றிச் சொன்னார்கள். அதுவும் அந்த மர்மப் பேழையில் உள்ள ஒன்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மர்மப் பேழையில் உள்ளது ஹாண்டே அவர்களுக்குத் தெரியும். எந்த ஊழல் குற்றச்சாட்டை யாவதுபற்றி அவர்கள் சொல்வார்கள் என்று நினைத்தேன். புதிதாக ஒன்றைச் சொன்னார்கள். இந்த ஊழல் அதில் இல்லை.

DR. H. V. HANDE : I strongly object to it.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பத்திரிகையில் இதுபற்றி எழுதப்பட்டிருக்கிறது ஏ.ஜி. ஆபீஸில் இருந்து இந்தக் குறிப்பை ரகசியமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் தெரியும்.

* THIRU M. A. LATHEEF: Hon. Deputy Speaker, Sir, for the last three days, I have been hearing various statements, allegations, accusations and charges from the Members of the Opposition and also rebuttals and replies from the Members of the ruling party and the parties allied to it.

was devoting my attention to the speech of Dr. Hande and also பிற்பகல்
to the speech of Mr. James, the Congress Member, yesterday. I am 1-00
sorry that the Swatantra Party should have deviated from the path which its name sets out. The word 'Swatantra' means self-contrivnce. self-formulation, self-decision and self-ideas. But I never thought that it would reduce itself to the position of borrowing from some other parties, especially from the party which is diametrically opposite to it.

சுதந்திரா என்பதற்குத் தங்கள் இஷ்டப்படி தங்களுடைய கொள்கைகளை வகுக்கின்ற ஒரு முறை என்று சொல்லப்படுகிறது. தந்திரம் என்றால் இங்கு ராஜதந்திரம். அந்த தந்திரங்களைச் சுயமாக, சுதந்திரமாக வகுக்கின்ற ஒரு கட்சியாக இருக்கவேண்டும் தான் அன்று சுதந்திரா கட்சி ஆரம்பிக்கப்பட்டது என்று ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தக் கட்சி சர்வாதிகாரத்தை வளர்க்கிறதோ, அநியாயங்களைப் புரிந்து வரு கிறதோ, ஜனநாயக மரபுகளுக்கு விரோதமாக நடந்து வருகிறதோ அது எங்களுக்கு எதிரி என்று ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அவர்களால் கொடுக்கப்பட்ட ஒரு Charter of absurdities edictum ad absurdum, அவர்களாகவே அவர்களுடைய கொள்கைகளை வகுக்கின்ற பாதையிலிருந்து மாறுபட்டு, அவர்களுடைய சுதந்திரத்தை விட்டுவிட்டு இன்று வேறு வழியில் செல்லக் கூடிய பரிதாபகரமான நிலைமை நம் முடைய சுதந்திராக் கட்சிக்கு ஏற்பட்டு இருக்கிற காரணத்தால் அந்தக் கட்சியின் பெயரை சுதந்திரா கட்சி என்று இருப்பதை மாற்றி "பாதந்திரா" கட்சி என்று மாற்றிக் கொள்ளவேண்டும்மென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**DR. H. V. HANDE**: These particular charges I have levelled probably the Hon. Member thinks we have borrowed from C.P.I. But it is a mistake. It is not so. Did I ever talk disparagingly about your party? Dont make such speeches likely to hurt the feelings of members of our party Did I say a word that your league is in league with somebody. The Chief Minister and Law Minister know the charges I have levelled. Let us not talk disparagingly of other parties.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்): டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதாவது ஒழுங்குப்பிரச்சினை எழுப்புவதாக இருந்தால்மட்டும் எழுந்திருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்றால் அந்த உறுப்பினர் அனுமதித்தால் பேசலாம். இல்லையென்றால் குறுக்கிடாமல் இருப்பது நல்லது. காலம் குறைவாக இருப்பதால் இந்த விஷயத்தில் அவர் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை நான் மனதார வரவேற்கிறேன். ஆனால் நான் ஒரு கேள்வியைக் கேட்க இங்கே எழுந்தபோது "ஆர்யூ ரேசிங்டு காம்பிளிமெண்ட் திஸ் கவர்ன்மெண்ட்" என்று நான் கேட்காமலேயே எங்கள் பக்கம் பார்த்துப் பேசியதை திரு ஹாண்டே அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். முஸ்லிம் லீக்கைப் பொறுத்த வரையில் சாதாரணமாக மத்தியிலே இருப்ப வர்களாக இருந்தாலும்சரி அல்லது இங்கே மாநிலத்திலே உள்ள ஆட்சியில் இருப்பவர்களாக இருந்தாலும்சரி, அல்லது மத்தியிலே ஆட்சி யில் இருப்பவர்களாக இருந்தாலும்சரி யாராக இருந்தாலும் அவர் களுக்குக் காரண காரியம் இல்லாமல் ஆதரவு தருவதோ, அவர்களுக்கு ஒத்துப்போவதோ என்ற கொள்கையைப் பாரம்பரியத்தை உள்ள கட்சியல்ல முஸ்லிம் லீக் என்பதைத் திரும்பத் திரும்ப இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டிருந்த பிறகும்கூட, டாக்டர் ஹாண்டே அவர்களின் வாயி லிருந்து அப்படிப்பட்ட ஒரு வார்த்தை, அவர் என்னுடைய நீண்ட நாள்



நண்பராகயிருந்தும், வருவது சரியல்ல. அவர் வாயிலிருந்து "என்ன வெண்ணெய் தடவுகிறீர்களா" "காக்காய் பிடிக்கிறீர்களா" என்ற பதங்கள் வருவது முறையல்ல. அவர்களுக்கு நான் சொல்லிக்கொள் கிறேன், இது காக்காய் பிடிப்பதோ, வெண்ணெய் தடவுவதோ அல்ல. எங்களுக்கு பொருத்தமான, மனதார, பக்குவமான ஒரு அடிப்படையில் ஒரு உடன்பாட்டின்படி அவர்கள் நடந்து கொண்ட மரியாதைக்கு, அவர் கள் நல்ல முறையில் எங்களுக்கு அளித்த தோழமைக்கு நாங்கள் காட்டுகிற தோழமை உணர்வுதான். ஜனநாயக நாட்டில் கூட்டுகள் அரசியல் அடிப்படையில் ஏற்பட்டால், அந்தக் கூட்டுகள் எந்த அடிப் படையில் ஏற்படுகிறதோ அந்த அடிப்படையில் தோழமை உணர் வோடு, பொறுப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டும். அந்த அடிப்படையில் தான் நாங்கள் செயல்படுகிறோம் என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நாங்கள் இங்கே ஆட்சி மன்றத்தில் வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எங்களுடைய தோழமையை, எங்களுடைய உடன்பாட்டை, எங்களுடைய ஒருமித்த ஒத்துழைப்பைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இன்று சபைக்கு வராமல் வெளியே இருக்கிற ஒரு சிலர், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு 1971 தேர்தலிலே கூட்டு சேர்ந்து நாவலரின் பேச்சாலும், கலைஞர் அவர்களின் பேச்சாலும், மாதவன் அவர்கள் பேச்சாலும், சாதிக் பாட்சா அவர்களின் பேச்சாலும், காயிதே மில்லத் அவர்களின் பேச்சாலும் அவர்களின் வேண்டுகோள்களாலும் தேர்தலில் வெற்றி பெற்று வந்த பிறகு, இங்கே நட்டாற்றில் விட்டு விட்டுச் சென்றது போல் அல்ல முஸ்லீம் லீக். அது என்றைக்கும் இந்த அரசுக்கு ஆதரவாக இருக்கும் என்பதை நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

ஆட்சியின் மீது குற்றங்களைச் சொல்லுங்கள். குற்றச்சாட்டுக்களை ஆதாரங்களோடு நிரூபியுங்கள். நாட்டில் விளைச்சலைப் பெருக்கியதை அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட விளைச்சலைப் பெருக்கிக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டை நீங்கள் சொல்லுகிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் நிச்சயமாக நாங்கள் சொல்கிறோம், திராவிட முன் னேற்றக் கழகத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் மட்டுமல்ல, திராவிட முன் னேற்றக் கழக உறுப்பினர்கள் மட்டுமல்ல, அவர்களோடு சேர்ந்து 1971லே தேர்தலிலே நின்று வெற்றி பெற்ற நாங்களும் ராஜினாமா செய்யத் தயார் என்ற ஒரு உத்தரவாதத்தை நான் இங்கே கொடுக்க விரும்புகிறேன்.

சுதந்திரா கட்சியைச் சார்ந்தவர்கள் ஜூடிஷியல் கமிஷன் நியமிக்க வேண்டு மென்று சொன்னார்கள். நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் திரும்பத் திரும்பத் குற்றசாட்டுக்களைச் சொன்னார்கள். நான் கூட எதிர்பார்த்தேன், காங்கிரஸ் கட்சி தங்களுக்கு என்று ஒரு கொள்கை வைத்து இருக்கிறது, ஒரு பெரிய கட்சியைச் சார்ந்த அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டு உண்மையின் அடிப்படையில், நிதானத்தின் அடிப் படையில், நேர்மையின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில், நல்ல [illegible]க்குப் பிறகு ஏற்படும் முடிவுக்குப் பிறகு அது கொடுக்கப்படும் குற்றச்சாட்டாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். அவரால் பரிதாபத் திற்குரிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரின் கையில் இருந்த அந்த அறிக்கை யாருடைய அறிக்கை? கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் போட்ட

[திரு. எம். ஏ. லத்தீப்] [1972 டிசம்பர் 9

அறிக்கை. இவ்வளவு கேவலமான நிலைக்கா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் போகவேண்டும்? கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை வைத்துக்கொண்டு இந்தச் சபையில் பேசும் கேவலமான நிலைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சி சென்று கொண்டிருக்கிறது என்றால், மகாத்மா காந்தியால் நிலைநாட்டப்பட்ட அந்த சத்தியத்தின் அடிப்படையில் அமைந்த அந்தக் கட்சி, சத்தியமே தர்மம், சத்தியமேவ ஜயதே, அபயா அபயா, என்று சொல்லி வளர்த்த அந்த சத்திய மகன் தந்த தத்துவத்தின் வழியிலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். யாரோ கொடுத்த அறிக்கையை வைத்துக் கொண்டு இந்த சபையில் பேசும் அளவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள் என்பதைப் பார்க்கிறபோது, உள்ளபடியே, அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலைமையிலிருந்து நீங்கள் திரும்ப வேண்டும், நல்ல பாதையில் செல்ல வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

விசாரணைக் குழு வேண்டுமென்று திரும்பத் திரும்ப கேட்கிறார்கள். யார் விசாரணைக் குழுவை அமைப்பது? ஜனநாயக நாட்டிலே, அதுவும் சட்டமன்றத்திலே இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வந்து தங்களுடைய ஜனநாயக உரிமைகளை நிறைவேற்றாமல் தெருவில் நின்று கொண்டு யாரிடத்திலோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசிக் கொண்டிருக்கிற போது விசாரணைக் குழு அமைக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். ஏன் உங்களுக்கு இந்த மன்றத்தில் நம்பிக்கை இல்லையா? இந்த மன்றம் ஒரு முழு அதிகாரத்தை படைத்த ஒரு மன்றம் என்பதை நீங்கள் உணரவில்லையா? தயவு செய்து அவர்கள் இதற்கு உறுதியான ஒரு பதிலைச் சொல்ல வேண்டும்.

This is a responsible Government. Government is responsible and treasury benches and ministers occupying them are responsible to this House. Serious charges are being made against this Ministry, against members of the Ruling Party and if such serious charges are being made since Ministers are responsible to this House, this House alone is, empowered to enquire into the conduct of Ministers. We cannot forget that we are responsible to this House. This House's right cannot be bartered. Even the highest tribunal in this country cannot give any specific direction to this House. I, as a member of this Legislature, is responsible to this House. As an advocate, I am an officer of the Court and I have got the highest regard to the highest judicial tribunal but in spite of that as a Legislator, I refuse to accept the jurisdiction of the Court to enquire into what this House has the sovereign right to enquire. Some M.L.As. have preferred charges and they want a Commission of Enquiry to enquire into those charges. I refuse to accept the jurisdiction of any such tribunal. Only this House can decide about the matter and the Ministers are responsible to this House.

I know even in my constituency, not a single person has joined the A.D.M.K. When the Hon. Minister for Health visited Ambur recently, I told him that even some persons who had intended to join it did not



1972 டிசம்பர் 9] [திரு. எம். ஏ. லத்தீப்]

join A.D.M.K. Therefore, to say that there has been mass upsurge, hatred and demonstration against the Government is a thing that cannot be substantiated in the world of reality and I do not want to say anything more than that.

Now, Sir, the hon. Member, Dr. Hande spoke about a telegram sent by the Bar Association of Tirunelveli. The Bar Association is always a responsible body and the Members of the Bar Association are all advocates. If there had been any untoward incident or some disapproval of the police action there, the Bar Association would definitely have sent the telegram to the Hon. Chief Minister or the concerned Officer. As it had been sent to some Opposition Leader, I just question the very veracity of the telegram because on 30th November, I visited Tirunelveli and Palayamkottah and made anxious enquiries about it. I understood that one criminal lawyer, a colleague of mine in this House, and a responsible Member of this House who has now defected to the so-called M.G.R.'s Party had sent the telegram. Nobody on behalf of the Bar Association had sent it. So, I think it is not correct for the Hon. Member, Dr. Hande, to say that it had been sent by the Bar Association.

MR. DEPUTY SPEAKER : When Dr. Hande read out the telegram, I did not have an opportunity to see the telegram and he did not reveal who sent the telegram.....

DR. H. V. HANDE : The Bar Council sent it. (He then showed the telegram).

MR. DEPUTY SPEAKER : I accept that it is a telegram. The colour, the paper shows that it is a telegram. The question is how can the House take it as a telegram from the Bar Council and that is also what Thiru Latheef has asked.......

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, before any document is read out here, it ought to have been left at the Speaker's Office and the Chair must give his consent to that particular document being read in the House. I want to know whether Dr. Hande has got the consent of the Chair before he read out the telegram.......

MR. DEPUTY SPEAKER : I do not think Dr. Hande had produced the telegram as a document. He just referred to it......

DR. H. V. HANDE, Yes, I have just referred to it.

THIRU M. A. LATHEEF : I do not object to the production of that document by Dr. Hande. But my point is whether a responsible body

like the Bar Association should have thought fit to represent the case only to the Opposition Leaders and not to the Government. This should not have been done by the Bar Association.

MR. DEPUTY SPEAKER : I would like to inform the House that there is no mention of the name of the sender in that telegram. Mention was made only about Bar Association, Tirunelveli.......

Dr. H. V. HANDE : I have checked it up and it is only from the Bar Council.

THIRU M. A. LATHEEF : If it is Bar Association, it should have been sent by its President or Secretary.

இந்த டெலிகிராம் எப்படி இருக்கிறதோ அதேமாதிரிதான் அவர்கள் கேசும். இந்த தந்தியை அனுப்பியவர் பெயர் இல்லாமல் அனானிமஸ் தந்தியாக இங்கிருந்து திருநெல்வேலிக்கு, அங்கே ஒரு ஆள் போய் இந்த தந்தியைக் கொடுக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. He is questioning the very *bona fide* of what I have stated. I again reiterate that the telegram is from the Bar Council which had finally passed a resolution and I have got a printed pamphlet connected with it. If he wants, he can verify it from the Members of the Bar Council there.

திரு. எம். ஏ. லத்தீப் : என்குயரி பண்ணித் தான் சொல்லுகிறேன். அதனால்தான் சொன்னேன். அங்கே 30-ந் தேதி சென்றிருந்தேன். என் நண்பர்களைக் கண்டேன். வழக்கறிஞர்களை மட்டுமல்லாமல், பொதுமக்களையும் பார்த்தேன். சென்ற 30-ந் தேதி அந்த நிகழ்ச்சி நடந்த பிறகு நான் பாளையங்கோட்டை சென்றிருந்தேன். இந்தமாதிரி பார் அசோஸியேஷன் என்று பெயர் வைத்துக்கொண்டு, பார் அசோஸியேஷனுக்கு இழுக்கு ஏற்படும் வகையில் யாரோ ஒருவர், அநாகரீகமான ஒருவர், இப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை இந்த அவையின் முன் வைத்து வாதாடுகிறேன். As a member of the Bar, I have got every right. இந்தமாதிரி ரெசலூஷன் காப்பி, டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு அனுப்பப்பட்டதா என்று தெரியவில்லை. அந்தமாதிரியான ஒரு காப்பி வந்திருக்கிறதா? முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? ஐ. ஜி. அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அங்கே மாவட்ட உயர் போலீஸ் அதிகாரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? இல்லையே. என் அனுப்பப்படவில்லை. சட்டம் படித்த வழக்கறிஞர்கள் நிறுவனம், அந்த நிறுவனம் இப்பேர்ப்பட்ட காரியம் செய்கிறது என்று நினைத்துப் பார்க்கும் போது, அந்தக் காரியத்தைச் செய்தது பார் அசோசியேஷன் என்று பெயர் வைத்துக்கொண்டு, யாரோ செய்து வருகிறார்கள். அந்த ஒரு நல்ல மரபுக்கு, ஒரு நல்ல நாகரீகமான இயக்கத்திற்கு களங்கம் விளைவிக்க



யாரோ முயற்சிக்கிறார்கள். அதை இந்தச் சபையில் வைத்து வாதாடுகிறார்கள் என்றால், இப்படித்தான் எல்லா காரியங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரவில் தூங்கிக்கொண்டிருப்போம். அப்போது என்னென்னவோ கனவுகள் பார்க்கிறோம். இப்போது டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சிலருக்கு சிம்ம சொப்பனமாகியிருக்கிறார். அவர் சிம்ம சொப்பனமாக இருக்கின்ற காரணத்தினால், வெளியே என்னவெல்லாமோ சொல்லுகிறார்கள். இன்றைக்கு கற்பனை உலகத்தில் சிலர் வாழ்ந்து கொண்டு, இந்த ஆட்சியை அகற்றிவிடலாமென்று கருதுகிறார்கள்.

I have the greatest belief in the resourcefulness, in the utility and representative character of this august Body. So if, some one sought the remedy in a Commission of Enquiry, it only shows that they have got more faith and belief in outside bodies than in the integrity and powers of this House. This is a very sorry state of affairs. That I do strongly object and I ask the Hon. Members, my colleague in this House to revise their attitude and believe in the representative character and sovereignty of this House. That is my submission. I pose a question whether you believe in the sovereignty or supremacy of this House or not ? Whether you have lost your belief in the supremacy of this House ? That is my question. Let them answer that and let them come here.

Now with regard to the break-up of the alliance, even the other day our respected Leader of the Communist Party on the 13th of last month said that the alliance has broken and the seven-party alliance which sought a mandate from the people has broken up and two or three parties have left the alliance. In the circumstances we posed a question to the Chief Minister and to his Ministers whether they could legally and morally continue in office because of the departure of these two or three parties from the alliance. I would ask one question. Suppose the Chief Minister resigns, whether Dr. Navalar will continue to be Minister and whether Mr. Natarajan will continue as Minister, and whether Mr. Adithanar will continue to be a Minister. If the Chief Minister resigns, the entire Ministry falls, because the Chief Minister happens to be the Leader of the Group and he is the leader of the group which runs the administration and state of affairs of the State.

Now, what was the alliance ? The alliance was called the D.M.K.—D.M.K. led alliance. In 1971, it was the D.M.K.-led -alliance. If therefore the D.M.K. had gone outside the alliance, then the alliance would have gone out and broken automatically. But the D.M.K. is there ; the Muslim League is there ; the Forward Bloc is there ; the Tamilarasu Kazhagam is there and the others are there. The Communist Party to further its own political ends has gone out. I charge them that they

[திரு. எம். ஏ. லத்தீப்]

have a sinister motive behind this departure from the alliance; they had collusion with people, not in Madras, but some where else, in the upper parts of India and because of that they have left the alliance. Now they ask the Members of the Muslim League to sail with them and we refuse to do it. Actually the alliance itself was under the leadership of the D.M.K. and that leadership still continues to operate.

Another thing is that a great treachery has been done by the Members of the newly started party. The Chief Minister knew something about the statement made by the hon. Member Mr. M.G.R. on the 8th October. I think on the 8th of October some pubic statement was made by M.G.R. But I know that this would happen even on the 13th of September. On 13th September, in Kanyakumari in collusion, some of the Members who are not in this House wanted to utilise this M.G.R. for their own political ends. You Members here do not know the inside foe of D.M.K. As Members of the Ruling Party you may not know what happens outside. But we know. For, நாங்கள் புறக்காவலர்கள். நீங்கள் எல்லாம் கோட்டைக்கு உள்ளே இருக்கிறீர்கள். தி. மு. க. என்ற கோட்டைக்கு உள்ளே இருக்கிறீர்கள். ஆகையினாலே வெளியே என்ன நடக்கிறது என்று எல்லோருக்கும் தெரிய முடியாது. தி. மு. க. என்கின்ற கோட்டைக்குப் புறக்காவலர்களாக இருக்கின்ற எங்களுக்குத்தான் தெரியும், ரகசியமாக இந்தக் கோட்டைக்கு யார் வந்து கொண்டிருந்தார்கள், யார் சென்றுகொண்டிருந்தார்கள் என்று. Therefore, I submit Mr. Deputy Speaker, Sir, there has been conspiracy to topple the very process of democracy in the State and disturb the very peace of this State and thereby further their political purpose and accomplish their political aims by the parties who have belief in revolutions and no belief in the concept of democracy. Such being the case, it is said there has been a changed circumstance in the State and that there has been spontaneous hatred—that is what Dr. Hande said—spontaneous hatred against the Government in the people of Tamil Nadu in their entirety against this Ministry. That is rather unique and surprising to me. Dr. Hande himself said that Rajaji and Kamaraj got 65 lakhs of votes and the D.M.K.-led alliance got 85 lakhs-D.M.K. alone got 85 lakhs of votes.

Now we will understand where the people who created troubles in D.M.K. meetings; you understand where the people who went behind M.G.R., who went in the so-called procession. They show resentment and disapproval of the continuance of this Government and exhibited their attitude on the 10th. That is why we submitted that it is done not by the so-called A.D.M.K. or people who have defected from the D.M.K.



[திரு. எம். ஏ. லத்தீப்]

நான் இன்றைக்கு மற்ற விவகாரங்களைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அதை நம்முடைய அமைச்சரவர்களும், மற்றவர்களும் பார்த்துக்கொள்வார்கள். நான் கேட்பதெல்லாம், எதிர்க்கட்சித் தலைவர்கள்—இங்கே இருப்பவர்களும் சரி, இல்லாதவர்களும் சரி—நம்பிக்கைக் கொள்ளும் விதத்தில் இந்த அமைச்சரவை நடைபெறுகிறதா இல்லையா? இந்த ஆட்சி எந்த வகையிலே குறை செய்திருக்கிறது? என்றுதான் கேட்க விரும்புகிறேன். பிற்பகல் 1-30

இன்றைக்கு நீங்கள் நடந்துகொள்ளும் முறை இந்த மன்றத்தை மதிக்கவில்லை; இந்த மன்றத்தின் உறுப்பினர்களை மதிக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்த அமைச்சரவை மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டுமென்றால், உங்களுடைய குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்திலே நேரடியாகத் தாக்கல் செய்திருக்க வேண்டும். இங்கே அதைப்பற்றி விவாதித்திருக்க வேண்டும். இந்தச் சபையை நீங்கள் மதிக்கிறீர்கள் என்றால், குற்றப் பட்டியலை இந்தச் சபையிலேயே வைத்திருக்கலாம். அதை நீங்கள் செய்யவில்லை. இந்த சபையை நீங்கள் மதிக்காமல், இங்கே இருக்கின்ற ஆளுநர் அவர்களை நீங்கள் மதிக்காமல், என்ன செய்திருக்கிறீர்கள்? இங்கே இருந்து டெல்லிக்குப் போய் ஜனாதிபதியிடத்திலே குற்றப்பட்டியலைக் கொடுத்திருக்கிறீர்கள். ஜனாதிபதி அதை முறைப்படி பிரதமருக்கு அனுப்பி, பிரதமர் அதை இங்குள்ள முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அவையை இன்னும் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கலாமா? (சில குரல்கள்: திங்கட்கிழமை அன்று விவாதம் தொடரலாம்)

## 5 அறிவிப்பு.

### பேரவையின் அலுவல் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 9—12—1972-ம் நாள் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவை நடப்புக் கூட்டத் தொடரின் திருத்திய நிகழ்ச்சி விவரம் :—

| | |
|---|---|
| 11—12—1972 (திங்கட்கிழமை). .. .. | 4—12—1972-ம் நாள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் (கடைசி நாள்). |

பேரவைத் துணைத்தலைவர் [1972 டிசம்பர் 9

| | |
|---|---|
| 12—12—1972 (செவ்வாய்க்கிழமை). 13—12—1972 (புதன்கிழமை). | அரசினர் சட்ட முன்வடிவுகளும் தீர்மானங்களும். |
| 14—12—1972 (வியாழக்கிழமை). .. .. | (1) 1972-73-ம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். (2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல். |
| 15—12—1972 (வெள்ளிக்கிழமை). .. .. | (1) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதலும் நிறைவேற்றலும். (2) அரசினர் சட்ட முன்வடிவுகள் எவையேனும் இருப்பின் அவை. |

தேவையிருப்பின், பேரவை 16—12—1972-ம் நாளன்றும் கூடும்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 11—12—1972 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். அன்று அமைச்சரவை மீது நம்பிக்கைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடரும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒற்றிவைக்கப்பட்டது.

6 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்—

## A. *Statutory Rules and Orders.*

39. Notification issued with G.O. Ms. No. 1832, Rural Development and Local Administration, dated the 2nd September 1972 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd September 1972. [Laid on the Table of the House under section 29(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

40. Notification issued with G.O. Ms. No. 1624, Rural Development and Local Administration, dated the 2nd August 1972, in regard to extension of terms of office of the members of the Tamil Nadu Khad



1972 டிசம்பர் 9]

and Village Industries Board for a period of one month from 3rd August 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

41. Notification issued with G.O. R. No. 2244, Revenue, dated the 5th October 1972 in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal, Rosary Matriculation School on 22nd October 1972 at Anand Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

42. Notification issued with G.O. Ms. No. 2713, Agriculture, dated the 23rd October 1972 in regard to regulation of trade in respect of cotton in Dharmapuri district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

## B. *Reports, Notifications and Other Papers.*

*17. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Sixth Amendment Bill, 1972 (L.A. Bill No. 43 of 1972).

*18. The Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1972 (L.A. Bill No. 44 of 1972).

*19. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1972 (L.A. Bill No. 45 of 1972.)

*20. The Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold lands Bill, 1972 (L.A. Bill No. 46 of 1972).

*21. The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 47 of 1972).

* Despatched to Members on 7th December 1972.

பேரவைத் துணைத்தலைவர் [1972 டிசம்பர் 9

| | |
|---|---|
| 12—12—1972 (செவ்வாய்க்கிழமை). 13—12—1972 (புதன்கிழமை). | அரசினர் சட்ட முன்வடிவுகளும் தீர்மானங்களும். |
| 14—12—1972 (வியாழக்கிழமை). .. .. | (1) 1972-73-ம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். |
| | (2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல். |
| 15—12—1972 (வெள்ளிக்கிழமை). .. .. | (1) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதலும் நிறைவேற்றலும். |
| | (2) அரசினர் சட்ட முன்வடிவுகள் எவையேனும் இருப்பின் அவை. |

தேவையிருப்பின், பேரவை 16—12—1972-ம் நாளன்றும் கூடும்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 11—12—1972 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். அன்று அமைச்சரவை மீது நம்பிக்கைத் தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடரும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒற்றிவைக்கப்பட்டது.

6 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்—

A. *Statutory Rules and Orders.*

39. Notification issued with G.O. Ms. No. 1832, Rural Development and Local Administration, dated the 2nd September 1972 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from 3rd September 1972. [Laid on the Table of the House under section 29(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

40. Notification issued with G.O. Ms. No. 1624, Rural Development and Local Administration, dated the 2nd August 1972, in regard to extension of terms of office of the members of the Tamil Nadu Khad



1972 டிசம்பர் 9]

and Village Industries Board for a period of one month from 3rd August 1972. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959.)]

41. Notification issued with G.O. R. No. 2244, Revenue, dated the 5th October 1972 in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal, Rosary Matriculation School on 22nd October 1972 at Anand Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

42. Notification issued with G.O. Ms. No. 2713, Agriculture, dated the 23rd October 1972 in regard to regulation of trade in respect of cotton in Dharmapuri district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. *Reports, Notifications and Other Papers.*

*17. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Sixth Amendment Bill, 1972 (L.A. Bill No. 43 of 1972).

*18. The Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1972 (L.A. Bill No. 44 of 1972).

*19. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1972 (L.A. Bill No. 45 of 1972.)

*20. The Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold lands Bill, 1972 (L.A. Bill No. 46 of 1972).

*21. The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 47 of 1972).

* Despatched to Members on 7th December 1972.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி.

41. திரு. மார்க்கபுரீஸ்வரர் கோயில், விசலூர்.
42. திரு. அகஸ்தீஸ்வரர் கோயில், வரப்பூர்.
43. திரு. திருக்கண்மாலீஸ்வரர் கோயில், கிருஷ்ணராயபுரம்.

மதுரை மாவட்டம் :

44. திரு. கண்ணீஸ்வரமுடையன் கோயில், வீரபாண்டி.
45. திரு. கூடல் அழகர் கோயில், மதுரை.
46. திரு. மதனகோபாலஸ்வாமி கோயில், மதுரை.
47. திரு கருப்பண்ணஸ்வாமி கோயில், பாலை.
48. திரு. கோபிநாதஸ்வாமி கோயில், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல்
49. திரு. கள்ளழகர் கோயில், அழகர்கோயில்.
50. திரு. கௌமாரியம்மன் கோயில், வீரபாண்டி.
51. திரு. ஜனக நாராயண பெருமாள் கோயில், சோழவந்தான்.
52. திரு. கைலாசநாதஸ்வாமி கோயில், நத்தம், கோயில்பட்டி.
53. திரு. சுப்ரமணியஸ்வாமி கோயில், போடிநாயக்கனூர்.

இராமநாதபுரம் மாவட்டம் :

54. திரு. மாயூரநாதஸ்வாமி கோயில், ராஜபாளையம்.
55. திரு. நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

திருநெல்வேலி மாவட்டம் :

56. திரு. முத்தாரம்மன் கோயில், குலசேகரப்பட்டினம்.
57. திரு. சுப்ரமணியஸ்வாமி கோயில், கழுகுமலை.
58. திரு. சங்கரமேஸ்வரர் கோயில், தூத்துக்குடி.
59. திரு வீரமார்த்தாண்டேஸ்வரர் கோயில், அம்பாசமுத்திரம்.
60. திரு பாபவிநாசஸ்வாமி கோயில், பாபநாசம்.

தஞ்சாவூர் மாவட்டம் :

61. திரு. நீலாயதாக்ஷியம்மன் கோயில், நாகப்பட்டினம்.
62. திரு. சட்டநாதசாமி கோயில், சீர்காழி.
63. திரு. வீரமாகாளியம்மன் கோயில், ஆதலூர்.
64. திரு. ஸ்ரீனிவாச பெருமாள் கோயில், நாச்சியார்கோயில்.



தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

65. திரு. குமரர் கோயில், நாகப்பட்டினம்.
66. திரு. சொக்கநாதஸ்வாமி கோயில், மன்னார்குடி.
67. திரு. சுவாமிநாதஸ்வாமி கோயில், சுவாமிமலை.
68. திரு. சுந்தரேஸ்வரர் கோயில், காட்டூர்.
69. திரு. ஜெகதீஸ்வரர் கோயில், மணல்மேல்குடி, அறந்தாங்கி வட்டம்.
70. திரு. கொழுந்தீஸ்வரர் கோயில், கோட்டூர்.
71. திரு. பரிமேலரங்கநாதர் கோயில், திருஇந்தளூர்.
72. திரு. நாகேஸ்வரஸ்வாமி கோயில், திருநாகேஸ்வரம்.
73. திரு. மந்தரபுரீஸ்வரர் கோயில், கோவிலூர்.
74. திரு. இராமர் கோயில், தில்லைவிளாகம்.
75. திரு. சுப்ரமணியஸ்வாமி கோயில், எண்கண்.
76. திரு. இராமலிங்கஸ்வாமி கோயில், பாபநாசம்.
77. திரு. ஜகன்நாத பிள்ளையார் கோவில், கும்பகோணம்.
78. திரு. அமிர்தகடேஸ்வரர் கோயில், திருக்கடவூர்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### வெள்ளிக்கிழமை, 1972 டிசம்பர் [illegible].

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானம்

#### வினா நேரத்தை நிறுத்தி வைத்தல் குறித்து

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move the following motion—

"That Rule 22 of the Legislative Assembly Rules in so far as it lays down that the first hour of every sitting shall be available for the asking and answering of questions be suspended and the House do proceed with the next item on the Agenda for today."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் இதனை ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், பேரவையின் முடிவின்படி, வினா நேரம் இன்று நிறுத்தி வைக்கப்பட்டு, நிகழ்ச்சி நிரலில் உள்ள அடுத்த நிகழ்ச்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. ஆ. சின்னசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கைத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, அதனையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967-ஆம் ஆண்டு முதல் மக்களுக்கு நல்ல பல பணிகளைப் புரிந்து வருகின்றது. திராவிட முன்னேற்றக் கழக அரசு, அரசியல் ரீதியில் முழுமையான பாராளுமன்ற முறை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்த ஆரம்பத்திலேயே நான் குறிப்பிடுவதற்குக் காரணம்—நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எங்களுடைய முதல்வரையும் அமைச்சரையும் பார்த்து, 'பாஸிஸ்ட் முறையிலே ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள்' என்று சொன்ன காரணத்தினால்தான் என்னுடைய கருத்துக்களைக் கூறுமுன் அதை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் சனநாயக அடிப்படையில் எப்படி வளர்ந்திருக்கிறது என்பதற்கு, தமிழகத்தில் இதுவரைக்கும் யாரும் கண்டிராத, கேட்டிராத ஒரு சாட்சியத்தை மாத்திரம்—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதைப் போல்—சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் தொகுதியில், புஞ்சைபுளியம்பட்டி என்கின்ற ஒரு பேரூராட்சி இருக்கிறது. பேரூராட்சித் தேர்தலில் 15 பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இடத்திற்கும் முழுமையாக அங்கே போட்டி போட்ட காங்கிரஸ் கட்சியிலிருந்து நின்ற அத்தனை வேட்பாளர்களும் தோற்கடிக்கப்பட்டு, 15 மன்ற உறுப்பினர்கள் இடங்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்களே நூற்றுக்கு நூறு வெற்றி பெற்று மன்றத்திற்கு உள்ளே வந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம், அறிஞர் அண்ணா வழியில் வளர்ந்த கழகம், கலைஞர் தலைமையில் வளர்ந்துகொண்டிருக்கிற கழகம், ஆட்சி புரிகின்ற கட்சி, அங்கே எப்படி சனநாயகத்தைக் காப்பாற்றியிருக்கிறது என்பதற்கான சாட்சியமாகவே, எங்களோடு கருத்து வேறுபாடு கொண்ட அரசியல்வாதிகளுக்குத் தங்கள் மூலமாக இந்த மாமன்றத்தின்முன் வைக்கிறேன். பதினைந்து பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளே வந்தபிறகு, அங்கே எங்களுடைய நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கும், நாங்கள் ஏதாவது தவறு இழைத்தால் [illegible] பிடிப்பதற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்





போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவரை—காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை எதிர்த்து வெற்றிபெற்ற உறுப்பினர்களை—நாங்களாகவே ராஜிநாமாச் செய்யச் சொல்லி, அந்த இரண்டு வார்டுகளில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நாங்களாகவே வழிசெய்தது திராவிட முன்னேற்றக் கழகம். அங்கே போட்டி போடாமல் இரண்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, சனநாயக மரபுகளைக் காப்பதற்கு வழிவகை செய்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைத் தங்கள் மூலமாக இம்மாமன்றத்திற்கும் நாட்டுக்கும் அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, 'பாஸிஸ்ட்' குணத்திலேயே ஊறிப்போன வர்க்கம், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து 'பாஸிஸ்ட்' என்று சொல்வதிலே நாங்கள் ஆச்சரியப்படவில்லை. அது அவர்கள் சொந்த குணமாகும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் இரண்டாவது உயிர்க் கொள்கை—சர்க்கார் விஞ்ஞான ரீதியில், சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதன்மூலம் நாட்டை வளப்படுத்தவேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு, இந்த மாமன்றத்தில் உடனடியாக தேசிய வருமானத்தைப் பெருக்க வேண்டும், தமிழ் பேசும் சமுதாயத்திற்கு அதிக சேவை செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, பஸ்கள் அனைத்தையும் தேசியமயமாக்கவேண்டும் என்று 1947-ஆம் ஆண்டு அன்றைய ஆட்சியாளர்கள் திட்டம் தீட்டினர்; தீர்மானம் போட்டனர். துரதிருஷ்டவசமாக 1947-இல் போட்ட தீர்மானம் 1967 வரைக்கும் தூங்கிக்கிடந்து நாட்டிலே பல கோடிக்கணக்கான ரூபாய்களை பஸ் முதலாளிகள் கொள்ளை அடிப்பதற்கு உடந்தையாக இருந்த காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து 1967-க்குப் பிறகு, தமிழகத்தில் தனியார் பஸ்களை ஓடக்கூடாது என்கின்ற திட்டவட்டமான சோஷலிசக் கொள்கையை மேற்கொண்டு, அடுத்த மூன்றாண்டுக் காலத்திற்குள் தமிழகத்தில் எந்தத் தனியார் பஸ்ஸும் ஓடாது என்கிற நிலையை உருவாக்கி, உலகத்திற்கும் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் சமதர்மக் கொள்கையிலே எவ்வளவு அழுத்தந்திருத்தமாகச் செயல்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

அதனை அடுத்து முக்கியமான பிரச்சினை—மூன்றாவது உயிர்க் கொள்கை—ஒன்றை இங்கே சொல்லவேண்டும்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடெனும் பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று சொன்ன நம்முடைய தாய்த்திரு நாட்டின் தமிழகத்தின் பாரம்பரியமாக இருக்கவேண்டிய 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அதற்காக விருதுநகர் சங்கரலிங்க நாடார் உண்ணாநோன்பு இருந்த நேரத்தில் அன்று கேலி செய்தார்கள் அன்றைய ஆட்சியாளர்கள். அது மாத்திரமல்ல 'தமிழ்நாடு' என்று சொன்னால் சர்வதேச அரங்கில் அடையாளம் புரியாது, 'மெட்ராஸ்' என்றுதான் சொல்லவேண்டும் என்று சொன்னார்கள் சேக்கிழார் பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள், காழ்ப்பு உணர்ச்சியின் காரணமாக. தமிழகத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டும் என்று கோரி, அந்தப் பெயரை வைத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அது மூன்றாவது கொள்கையாக இருந்தது.

நான்காவது கொள்கைதான் மிக முக்கியமானது. அதைத்தான் அடிப்படைக் கொள்கையாக வைத்திருக்கிறது— ஜாதி ஒழிப்பு—ஜாதியற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்பதுதான்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

நம்முடைய தாய்த் திருநாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சாதி இல்லை, ஒரு புனிதமான சமுதாயம் நாகரிகமான சமுதாயம் இருந்தது. சோவியத் நாட்டில், அமெரிக்க நாட்டில் குடிசை கட்டி வாழத் தெரியாத அறியாமை இருந்த காலத்தில், இங்கே கோலோச்சி, நாகரிகமாக வாணிபம் செய்த, ஆட்சி செய்த, சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்திலே ஆட்சி புரிகின்ற உயர்ந்த நாகரிகமாக தமிழ் பேசும் சமுதாயம் விளங்கி வந்தது. ஆனால், எங்கிருந்தோ கைபர் கணவாய் வழியாக வந்த நச்சுக்கூட்டம் நம்மிடையே வந்து குடியேறி, ஒரு புனித சமுதாயத்திலே நச்சினைச் சொட்டுச் சொட்டாகச் சொட்டி,





ஆயிரம் சாதிகளைப் பிரித்து, எந்த இட்லர் உலகத்திலேயே ஒரே இனம்தான் ஆளவேண்டும் என்று சொன்னாரோ, அந்த அடிப்படையில் ஒரு ஜாதியிலே வந்த, ஒரு இனத்திலே வந்த, மாடு மேய்க்க வந்த கூட்டம் தமிழகத்தைச் சின்னாபின்னமாக்கி இங்கே ஆயிரக்கணக்கான சாதிகளை உருவாக்கியது. சாதிகளை ஒழிப்பதற்காக தந்தை பெரியார் தலைமையில் ஐம்பது ஆண்டுக் காலமும், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் 30 ஆண்டுக்காலமும், தொடர்ந்து டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் போராடிக் கொண்டே வந்திருக்கிற கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுதான் இந்திய துணைக்கண்டத்தில் எங்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கிற வேறுபாடு. மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் பேசுகின்ற ஜனநாயகத்தை நான் மதிக்கிறேன். சோஷலிசம் பேசுகின்றவர்களின் சோஷலிசத்தை நான் கேட்டிருக்கிறேன்.

ஆனால் இந்திய துணைக் கண்டத்தில் சாதிகளை ஒழிப்பதற்காகவே போராடி வந்திருக்கிற கட்சி, போராடிக்கொண்டிருக்கிற கட்சி வேறு எது என்று கேட்க விரும்புகிறேன். இப்போதுதான் பையப் பைய 50 ஆண்டுக்கால கடும் உழைப்பிற்குப் பிறகு உயர்ந்தோர் இல்லை, தாழ்ந்தோர் இல்லை, சாதிகள் இல்லை என்கிற ஒரு உணர்ச்சி மலர்ச்சி நாட்டில் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. நேற்றையதினம் காலை பத்து மணிக்குப் பெரியார் திடலில் பார்க்க வேண்டும். எந்தச் சாதியைத் தீண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைத்தார்களோ, மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்துக் கொளுத்தினார்களோ, காலணி அணியக்கூடாது என்று கட்டி வைத்து அடித்தார்களோ, அந்தச் சமூகத்தின் பெண் டாக்டர் கலைஞர் அவர்களின் மகனை மணந்துகொள்கிற காட்சியைப் பார்த்தோம்.

தீண்டாமை ஒழியவேண்டும் என்று போராடிய மகாத்மா காந்தியின் ஊராகிய போர்பந்தரில் இன்னமும் சாதி இருக்கிறது. அருள்கூர்ந்து பொன்னப்ப நாடார் மன்னிக்க வேண்டும். தீண்டாமை ஒழியவேண்டும் என்று முழக்கம் செய்த காங்கிரஸ் மகாநாட்டில்தான் தனித்தனி சாதியினர்களுக்குத் தனித்தனி சாப்பாட்டுப் பந்தி என்று போட்டார்கள். அதை எதிர்த்துத்தான் எந்த காங்கிரஸ் கட்சிக்காக தந்தை பெரியார் ஆதியில் பாடு பட்டாரோ, கதர் துணியை ஊர் ஊராகச் சென்று விற்றாரோ,

அந்தக் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறினர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இப்படி கைபர் கணவாய் வழியாக வந்த கூட்டம் தமிழகத்திலே ஆயிரம் ஆயிரம் சாதிகளைப் புகுத்தி நாட்டையே நாசம் செய்துவந்த கொடுமையை ஒருமுகமாக எதிர்த்து ஓரளவு திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்றிருக்கிறது என்று நினைக்கிற நேரத்தில்தான் இன்றைக்கு பாலக்காட்டு கணவாய் வழியாக ஒரு பெரிய ஆபத்து வந்திருக்கிறது. இந்த இரண்டு சக்தியும் எந்தவகையிலும் இனித் தலைதூக்க முடியும் என்று கனவு காணவேண்டாம். அப்படியே தமிழகத்தில் துரதிருஷ்டவசமாக நாங்கள் பதவி இறங்கினாலும்—காரணம் இந்தப் பதவி சாசுவதம் இல்லை—கைபர் கணவாய் வழியே வந்த கூட்டமோ, பாலக்காட்டுக் கணவாய் வழியே வந்த கூட்டமோ ஆட்சிக்கு ஒருகாலும் வர அனுமதியோம் என்பதை மனதில் நன்றாய்ப் பதித்துக் கொள்ளுங்கள். இங்கே திரு. பொன்னப்ப நாடார் வந்து அமர முடியும். என்னுடைய பெருமதிப்பிற்குரிய திரு. காமராஜ் வந்து அமர முடியும்.

எங்களை எல்லாம் நாஸ்திகர் என்கிறார்கள்—வெங்காயம் 1967-க்கு முன்னே பிரும்மனின் வாரிசு, மகாவிஷ்ணுவின் வாரிசு, சிவனின் வாரிசு என்று சொல்லிக்கொண்டிருந்த கூட்டம்தான் 25 வருடம் ஆட்சியில் இருந்தது. ஆனால் அப்போது அறநிலையத் துறையின் சார்பில் ஒன்பது ஆயிரம் கோயில்களே இருந்தன. ஆனால் எங்களைப்போல மெடீரியலிஸ்டு ஆக இருக்கின்ற எங்கள் ஆட்சியில் 72-ம் ஆண்டு 12 ஆயிரம் கோயில்களை அறநிலையத் துறையின் சார்பில் திரு. கண்ணப்பன் நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

அதுமாத்திரம் அல்ல. 67-க்கு முன்னால் கோயில்களின் வரும்படி 3 கோடி ரூபாய்தான். சிவன் பேராலே, பார்வதி பேராலே, இந்திரன் பேராலே, சந்திரன் பேராலே அந்தக் கூட்டம் சாமி சொத்தைக் கொள்ளை அடித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கனம் உறுப்பினர் தம் கருத்தை மற்றவர்கள் மனம் புண்படாத வகையில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. மு. சின்னசாமி : சூத்திரர்கள் என்று சொல்லி எங்களை எத்தனையோ காலம் இழிவுபடுத்தி வைத்திருந்த கூட்டத்தைப் பற்றி நான் சொல்கிற கருத்தை திரு. பொன்னப்ப நாடார் பொறுத்தருளவேண்டும். எனக்குத் தெரியும் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலியில் திரு. பொன்னப்ப நாடார் எந்தக் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டார் என்று கேட்க விரும்புகிறேன். இன்றையதினம் அடித்துப் போட்ட பாம்பாக அந்தச் சமூகம் தன் சக்தியை இழந்து கிடக்கிற நேரத்தில் மீண்டும் அது உயிர்பெற எந்த வகையிலும் திரு. பொன்னப்ப நாடார் உதவியாக இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். 1952-ம் ஆண்டிலே சூத்திரனை சூத்திரனாக உருவாக்குவதற்காக தமிழகத்தில் எழுந்த ஒரு கல்வித் திட்டத்தை அன்றைக்கு தலைவர் காமராஜர் அடித்துப்போட்டார். அதற்காக அவரைப் போற்றுகிறோம். அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன்.

1967-க்கு முன்னால் கோயில்களில் வருமானம் 3 கோடி என்றால், பகுத்தறிவுக் கூட்டம் என்று சொல்லப்படுகிற நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 7 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றால், இதற்கு முன்பு 4 கோடி ரூபாய் யாரால் கொள்ளையிடப்பட்டு சாப்பிடப்பட்டு வந்தது ? அப்படி சாப்பிட்டு வந்ததைத் தடுத்தது எந்தக் கட்சி ?

வேண்டுமென்றே ஜனங்கள் மத்தியில் எதையும் எடுத்துப் பேசலாம். ஜனங்கள் ஏமாறமாட்டார்கள். இதே மன்றத்தில் எட்டு ஆண்டுக் காலம் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் இருந்தார். அப்போது அவர் விரும்புகிற மந்திரிசபைதான் இருந்தது. சக்தி வாய்ந்த அவரது ஆற்றலை நாங்கள் மதிக்கிறோம்.

நாங்கள் எங்கள் சமுதாயம்—50 அடி பனைமரத்தில்—அமாவாசை இருட்டில்—கயிறு கட்டிக்கொண்டு மரம் ஏறுவார்கள்—பதனீர் எடுக்க—தேக ஆரோக்கியத்திற்கு ஏழைகளுக்கேற்ற மிகவும் சத்துள்ள உணவு—அதை நினைத்துப் பார்த்தது டாக்டர் கலைஞர் கழக அரசுதானே. மரம் ஏறுகிறவர்களது உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்து அவர்களுக்கு நஷ்டஈடு பாதுகாப்பு அளிக்க முன்வந்தது டாக்டர் கலைஞர் கழக அரசு தானே. வேண்டுமென்றால் நாம் பிற்பகல் மவுண்ட்ரோடு பொன்னுசாமி ஹோட்டலுக்குச் சென்று இரால் கொண்டா என்று

[திரு. மு. சின்னசாமி] [1972 டிசம்பர் 11

கேட்டுச் சாப்பிடலாம். அந்த இரால், விரால் போன்ற மீன்களை எல்லாம் காலையில் படகுகளில் கடலுக்குள் சென்று தம் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதையும் பொருட்படுத்தாது கொண்டுவருபவர்கள் மீனவர்கள்தானே, அந்த மீனவர்கள் விபத்துக்குள்ளாகிறபோது அவர்களுக்கு நஷ்டஈடு அளிக்க முன்வந்தது எந்த ஆட்சி? டாக்டர் கலைஞர் அவர்களது ஆட்சிதான் என்பதை மறந்துவிடக் கூடாது.

மக்கள் விரும்பினால் திராவிட முன்னேற்றக் கழகம் எந்த நேரத்திலும் பதவியைவிட்டு இறங்கத் தயார். லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள். 59 பேர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு பதவியை விட்டு இறங்கு என்றால் இறங்க வேண்டுமா? 59 பேர்கள் சொன்னால் ராஜினாமா செய்ய வேண்டுமா? இது எந்த உலகத்திலே, எந்த ஜனநாயகத் தத்துவத்திலே இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாமன்றத்திற்கும், என் தாய்த் திருநாட்டிற்கும், திராவிட முன்னேற்றக் கழகம் 4½ கோடி மக்களுடைய பிரிதிநிதிகளுடைய பிரதிநிதித்துவம் என்பதை எடுத்துக் காட்டுகின்ற சக்திதான் 1½ ஆண்டிற்கு முன்னால் நடைபெற்ற தேர்தல் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்)** : திரு. லத்தீப் அவர்கள் இப்போது தமது உரையைத் தொடர்ந்து நடத்துவார்கள்.

* THIRU M. A. LATHEEF : Sir, the other day I was submitting to the House that all ills and grievances can be cured and settled only in this House and the rights of members, their privileges immunities, etc., are all creations of the Constitution. We have received the rights of membership as well as all privileges that we claim to be ours because of and by virtue of the Constitution. Therefore, if we happen to be creations of the Constitution and the result of the creations of the Constitution, it is but proper that we do also seek to remedy any defect in it through the medium of the Legislature. There is no other way whatsoever.



1972 டிசம்பர் 11] [Thiru M. A. Latheef]

Now, what has happened in this State is a very deplorable factor in our public life. What happened happened outside and that too not by the majority of the people and that too not by the people who are duty-conscious by the people who are civic-conscious, not by the people who are deeply committed to the cause of democracy, the cause for which this State stands and this country stands, but something that is done by the people who want to create some trouble in the State and thereby accomplish something politically. That is taken cognisanse of and given more importance by the responsible members of this House, ignoring that they are members of this House and they have obtained that right of questioning the Executive and also the Legislature only through the Constitution. It is rather very curious and very deplorable. Therefore I submit that the Opposition as well as the members of the Treasury Benches of this House and members either sitting on this side or sitting on that side should all seek redressal of all their ills and fulfilment of all their desires only through the medium of this House. That is my submission.

Now, the other day Dr. Hande, my friend, demanded the resignation of this Ministry. His argument had been that though this Ministry is having a majority in this House, it has lost the confidence of the majority of the people of this State. A very strange argument indeed! What is the barometer by which he measures this? The consensus or opinion or will of the majority of the people of this State is measured, how? The concept of democracy, particularly parliamentary democracy, is that there is the Constitution by which we have obtained the right of questioning the Executive and the responsible officers and therefore we must always be constitutional in our approach.

Now the Constitution has provided for the transfer of power from the sovereign people of the State to a sovereign body for a period of five years. Whatever may be the will of the people will have to be expressed through the medium of this Legislative body, for a period of five years. That means the kinetic will of the people has been transferred to the elected body for a period of five years and the potential will of the people is stored and reserved to be utilised by their elected members of the people through the medium of the Legislature whenever they feel necessary in a manner they deem fit and proper. This is for a period

of five years. What is the other way out? I would like to ask Dr. Hande or any other member who has not come to this House, What is the other remedy you seek? Dissolution of this House or do you say that this Ministry should resign, because somebody outside has made charges of corruption against the Ministry. If this Ministry resigns what is the alternative Government that you are going to form and who is going to form the alternative Government? That is the problem to be solved. If you say, Dr. Hande or Mr. Ponnappa Nadar or Mr. Thangamani says that ' my party is strong enough, that my party has sufficient strength in this House and therefore alternatively I am ready to form the Government and therefore the constitutional head of the State should see that the corrupt Ministry should be sent out, and they should be inducted into office so that the responsibility of governance of the State goes to them, the only pure people in the State and the impure Ministers be sent out ' Do they say that? Are they ready to form an alternative Ministry? That is the question. If that is not possible and if they seek dissolution of the Assembly, what is the idea ? Do they feel that all or a few Ministers, a few or some members or the majority of them should be recalled by the electors? The concept of recall is not accepted in India or accepted by the Constitution of India. That is the question. If the concept of recall is accepted by the Constitution, then they have got the remedy that by just creating public opinion in the various constituencies. . .

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN): How long does the hon. Member want more?

Thiru M. A. LATHEEF: I will take just half an hour and finish, Sir.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN): Mr. Latheef, you have already taken half an hour yesterday. You now started at 9-20. Kindly co-operate with the Chair, there are some more members to speak. Therefore, please conclude within 7 or 10 minutes.

Thiru M. A. LATHEEF: I will finish in another 20 minutes; If there is no interruption, I will finish.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN): No, finish within 7 or 10 minutes.



Thiru M. A. LATHEEF: So, the concept of recall is a thing which is not admitted or accepted by our Constitution or by convention adopted in India. Even in countries where we have this thing, for example, in the American States, even there this device is used as an effective measure in checking the activities of not the Legislators, but in most of the American States this device has so far been used against judicial officers and other responsible officers, but not the legislators. In some American States, they can use this device of recall to ask a particular officer to vacate his office and curiously enough in the State of Colorado in the U.S.A., this has been used to reserve judgment of a particular court and if this recall or the will of the people is just given expression to by means of popular vote in a particular constituency, even the judgment can be reserved in the U.S.A. But it has never been used as against a legislator. Even in America where the concept of recall is there, it has never been used against a legislator, for according to Bryce and Burke, this is considered to be a very wrong and mischievous device which will hamstring the very process of democracy. Even in countries like Germany where this device of recall was used to check the activities of the legislators and personages including the President of the Republic, but this is used very rarely.

(Deputy Speaker took the Chair)

Even in the countries wherein we are having the concept of recall, this could be expressed only through the medium of the Legislature and this is the point that I would like to bring to the notice of the House. Then the process to recall a particular legislator from the Legislature and to have a fresh election could be decided only after the majority vote in the Legislature. So, even the concept of recall is utilised only with the consent of the majority opinion of the Legislature.

In the countries like Germany, Latvia, United States of America, Swiss Republic and many other European States, they can utilise the process of recall only after getting the majority opinion from the Legislature and not otherwise. But in India where we do not have a constitutional provision for recalling legislators they want to completely ignore the majority opinion of the Legislature. That is the concept of democracy that they have developed and that is a sad commentary upon the value and

ethics of our public life. I am very sorry to say that even responsible Members have stated that this House should be dissolved and that suggestion has also come not from an ordinary Member of this House but from no less a person than the then Presiding Officer of this House. This has never happened in any country or in any legislature of any country. That is my submission.

Therefore, I would like to ask them, if you ignore the majority opinion, what is the other constitutional remedy? If you want to say that this Government should resign, then you must have an alternative method of forming the Government in the State. In the absence of that, you must not say a thing which has not been admitted by the Constitution or governed by the convention or not accepted by the public or not accepted by this House. Therefore, the demand of the Opposition Members in this House asking the resignation of the Ministry on the false ground of some imaginative corruption is not a bona fide one and it is intended to further their own political ends.

Now, the hon. Member, Dr. Hande, stated the other day that this Government are going to be submissive to the Central Government hereafter because of something which happened outside, according to him, and that the Government are facing a crisis of confidence. I take strong exception to this observation. How can this Government be submissive to the Central Government. This Government is answerable to this House only. So long as we belonging to the Muslim League and sitting in the Opposition in this House, are here, we will question the Ministers to behave as responsible Ministers having all powers enumerated in the Seventh Schedule of the Constitution and wherein the State List has been given and all the powers of the State Legislature are enumerated. So, we will not allow the Ministers to barter away those powers to the Central Government. Even God will say that you must allow yourself to be acted upon according to the Constitution. So, if anybody says that these Ministers are going to be submissive to the Central Government, I would say that they will never be submissive to the Central Government or any other authority except to the Constitution. This is a very important point. Even if circumstances are so contrived by the Central Government as to make this Legislature and the State Government to be always obedient to them, we will refuse to be obedient to them except to what is contained in the Constitution.



Therefore, the charge levelled by Dr. Hande is a very, very serious one and I would like to refute it with all the powers at my command.

Now with regard to the memoranda submitted to the President of India and then to the Prime Minister of India which has been duly forwarded to the State Government, it is a very curious factor that the political leaders are always guided by advocates. One leader says, 'I do not act at any time without the advice of an advocate and that I am always guided by an advocate'. and that is the sorry state of affairs in our State. The people who are to provide leadership to the people are placed in such a pathetic condition. I do not know whether they consulted the advocates before submitting the memoranda to the President. If they had done so, the constitutional method of approach to the problem would have been different. The very memorandum is prepared on the false premises of certain imagination just to gain their political ends or just to take vengeance upon the Ministers who were not amenable to them or who were not accommodative to them. Now, I would like to refer to Article 53 of the Constitution. The Article says—

'(1) The Executive power of the Union shall be vested in the President and shall be exercised by him either directly or through officers subordinate to him in accordance with this Constitution. . . .'.

Then sub-clause (3) of the Article says—

'Nothing in this article shall—

(a) be deemed to transfer to the President any functions conferred by any existing law on the Government of any State or other authority;. . .'

Then sub-clause (2) of Article 154 says—

'Nothing in this article shall—

(a) be deemed to transfer to the Governor any functions conferred by any existing law on any other authority;. . .'

In Article 53 the expression 'State' precedes the expression 'any other authority' but the expression 'State' is not used in Article 154. That means the Union Government are constitutionally precluded from using any power that is constitutionally given to the State Government and enumerated in the Seventh

[Thiru M. A. Latheef] *[1972 டிசம்பர் 11*

Schedule of the Constitution, and the President shall not through his Council of Ministers in the Union Government use any power constitutionally given to the State Government. So the President of India has rightly forwarded the memorandum to the Prime Minister and the Prime Minister is duty bound, according to the Constitution, to forward the same to the Hon. Chief Minister.

What is the position now? The question that is now being asked is ,why is not the list of charges placed on the table of the House by the Executive. The Opposition has no belief in the efficacy, in the resourcefulness, in the supremacy and in the sovereignty and in the political vigour and vitality of this House. Because they do have belief in themselves, they sought the remedy through the medium of union executive by meeting the President and submitting a memorandum to him. Once they submit a memorandum to the President, that will be forwarded to the head of executive in the Indian Union, viz., Prime Minister and that in turn will be forwarded to the head of executive in the particular State through the medium of the union executive. Once it is forwarded through the medium of the union executive, it becomes a matter to be taken cognisance of by the Central Legislature also. Unless and until the Union Executives takes a policy decision so far as the memorandum is concerned to be placed on the table of the House of the State here, the Chief Minister here cannot by himself place the list of charges on the table of the House. Unless and until the union executive agrees to the placing of the list of charges on the table of this House here, the stand taken by the Chief Minister is constitutionally valid, purposeful, and bona fide; the stand taken by the Opposition is strange; instead of bringing it in this House, they have resorted to the circuitous method of submitting the same to President. They will only accuse themselves and they will only expose themselves by this method. They do not contribute anything to the people or members of this House. What they have done is not proper.

What I would say to the members of the Opposition is that they should have implicit faith in the efficacy of this House. They must have implicit confidence in the political vitality and political representative character of this House and supremacy and sovereignty of this House. It is not as if we have come just to please somebody else. Even if some people in the Opposition feel



*1972 டிசம்பர் 11]* [Thiru M. A. Latheef]

differently, we belonging to Muslim League Party, believe that, let alone Central Government or any other body, this Legislature is supreme.

The other day, Mr. James, made mention of one of the points enumerated in the so-called list of corruption against the Ministers, viz. Chief Minister getting a loan of Rs. 15 lakhs from some people for the film ' Pillayo Pillai '.

இப்பொழுதுதான் தெரிகிறது, விஷயம் பிள்ளையோ பிள்ளையில் தொக்கி நிற்கிறது என்பது. திடீரென்று எம்.ஜி.ஆர். ஏன் இப்படி நடந்து கொண்டார் என்று வேதனைப்பட்டுக்கொண்டிருந்தோம். ஜேம்ஸ் அவர்கள் சொல்லுகிறார் பிள்ளையோ பிள்ளை விவகாரத்தை பற்றி. அதாவது, நாட்டிற்கு அது செய்யவில்லை, இது செய்ய வில்லை, மக்களுக்கு வேண்டியதைச் செய்யவில்லை என்ற சார்ஜைக் கூறவில்லை. பிள்ளையோ பிள்ளைக்கு அவர் கடன் வாங்கினாராம், கொள்ளை அடிக்கவில்லை, கடன் வாங்கியது பெரிய தவறாகப் போய் விட்டிருக்கிறது. அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களாக வந்திருக்கிறார்களே என்று வேதனைப்படுகிறேன். ஏனென்றால் பிள்ளையோ பிள்ளை விஷயம் தொக்கி இருக்கிறது. ஏனென்றால் பிள்ளையோ பிள்ளையிலே அவரைவிடச் சின்னப் பையன் நல்ல முறையில் நடித்துவிட்டான். என்னை ,வைத்துக்கொண்டு அவன் நடிக்கலாமா ? அந்தச் சின்னப்பையன் டபிள் ரோலில் நடிக்கலாமா என்ற எண்ணம். ஒரு கதை சொல்லுவார்கள். சின்னஞ்சிறிசுகளுக்குக் கல்யாணம் நடந்தது. அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். அங்கே பாட்டி வெளியிலே இருக்கிறாள். உள்ளே வளையல் சத்தம் வருகிறது. வெளியில் இருக்கும் பாட்டியம்மாளுக்கு ஓரே எரிச்சல். ஏனென்றால் அவளுக்குப் பழைய காலம் ஞாபகம் வருகிறது. அந்தக் காலத்திலே நடந்ததெல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது. அதை நினைத்து ஓரே வயிற்றெரிச்சல். உள்ளே வளையல் சத்தம் கேட்கிறதே, என்னென்னமோ நடக்கிறதே என்று வயிற்றெரிச்சல். நான் கேட்கிறேன், இதெல்லாம் நன்றாக இருக்கிறதா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அந்த மூதாட்டி எங்கிருக்கிறார்கள் என்று நண்பரவர்கள் விளக்குவார்களா ?

[1972 டிசம்பர் 11

**திரு. எம். ஏ. லத்தீப் :** நான் குறிப்பிட்டு யாரையும் தாக்கிப் பேசவில்லை. யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. பெரியவர்கள், சஷ்டியப்தபூர்த்தி செய்துகொள்ளக்கூடிய அறுபதாம் வயது நடக்கக்கூடியவர்கள் சின்னஞ்சிறிசுகள் முன்னுக்கு வந்தால் மகிழ்ச்சியடைவார்கள். அதற்காக ஜேம்ஸ் அவர்கள் பிள்ளையோ பிள்ளையைப்பற்றி சட்டசபையிலா பேசுவது? பிள்ளையோ பிள்ளைக்கு என்றால் அவர் தனிப்பட்ட முறையிலே செய்து கொண்டது.

If he becomes a legislator or Chief Minister, do you mean to say that he should not have the resourcefulness to earn money by lawful means? Can he not raise loans? Do you think I have come here as a legislator only to gain? I may say and I may ask Dr. Hande or Thiru K. T. K. Thangamani to prove that Abdul Lathif has earned, or Abdul Lathif has enriched himself since he became an M.L.A. I challenge them to prove it. In fact I have lost Rs. 2,000 to Rs. 3,000 a month since I became an M.L.A. Simply because I happen to be an M.L.A. and chose to serve my people, my constituency, I am only losing. Do you mean to say that we members or Chief Minister or other Ministers are paupers? What I say is if the Opposition are saying so, it is not proper and is not conducive to our public life.

If you have any particular proof, if you can prove the charge against any member of this House including the Chief Minister, we are ready to support you. You bring it here. You prove according to Constitution, according to law, according to convention, according to the established law of this country, then we will be the first persons, the Muslim League will be the first to condemn this Government, we will be the first to say that such people are driven out of office, not only office but also from public life. That is our stand? Are you having the guts to prove it here? But instead of that you resort to mobocracy? What is happening here is called mobocracy. The thing is decided not in this House, but in the streets, by violent methods, by resorting to brutality and by resorting to chaos, in the streets. Is this good political behaviour? This is mobocracy, trying to do something without the medium of elected representatives of people, namely legislature.



1972 டிசம்பர் 11]

Legislature alone is the supreme body. Are you for democracy or are you for mobocracy? This is the question I want to ask the members of the Opposition, whether they are here or elsewhere. We support this Government because we feel that this Government is carrying on the affairs of the State in the best possible manner. They are putting all the powers at their command to further the cause of the downtrodden, to the upliftment of downtrodden and in pursuance of that they are taking up many welfare measures and implementing them successfully. That is why we support this Government. Unless it is otherwise proved by the Opposition that they are not doing so, we will support this Government.

The Muslim League is no doubt in alliance. But the Opposition should not forget that we are sitting in the opposition and so long as we feel that this Government is doing good to the people, we will support them. When we feel that they are doing something against the wishes of the community which we represent, we will oppose this Government. So far we are feeling that this Government is doing good to the people and that is why we support them. Of course human error is there and all are not angels and there may be some mistake committed here or there.

But to say that all Ministers are corrupt and all members are corrupt and all public men are corrupt is something unique, something unusual and something unfortunate which is not sustained by facts. Therefore, Sir, with these observations I say that this Government is doing well, that this Government is constitutionally entitled to continue in office, that the activities of this Government are constitutionally valid and legal both in the legislature as well as outside the legislature. When they function as Executive, their relationship with all the concerned officials and the public are cordial and constitutional.

In the circumstances, unless it is otherwise proved beyond reasonable doubt, the Muslim League will continue to support this Government. And as such I fully support the Confidence Motion moved by the Hon. Chief Minister. Thank you very much, Sir.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள அமைச்சரவை மீதான நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்று இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒரு கருத்தைக் கூறினார். 'கைபர் கணவாயைக் கடந்துவந்த ஒரு கூட்டம் மேலும் ஆதிக்கம் செய்ய நாங்கள் விடமாட்டோம்' என்று குறிப்பிட்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உள்ள அரசாங்கம் இந்த அரசாங்கம் என்று கூறினார்.

நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததற்கு முன்னாலேயே திருவிதாங்கூர் சமஸ்தானத்திலே டெம்பிள் என்ட்ரி ப்ராக்ளமேஷன் செய்த பெருமை, ஆலயங்களை ஜாதி இன வேறுபாடின்றி எல்லோருக்கும் திறந்துவிட்ட பெருமை சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்களையே சாரும். ஆகவே, ஒரு இனத்தைப் பழித்துக் கூறுவது சரியல்ல. 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று கூறிய பெருமை பாரதியாருக்கு உண்டு. அதையும் மறந்து விடுவதற்கில்லை. மகாத்மா காந்தியடிகள் அந்த மக்களுக்கு அரிசனங்கள் என்ற நாமத்தைச் சூட்டி பெருமைப்படுத்தினார். இருபது ஆண்டு கால ஆட்சியில் அந்த இன மக்களிடம் பெரிய பெரிய இலாகாக்களை எல்லாம் கொடுத்து ஆளவைத்த பெருமையும் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு உண்டு. மராமத்து இலாகா, போலீஸ் இலாகா போன்ற பெரிய பெரிய இலாகாக்களை எல்லாம் அவர்களிடம் கொடுத்து அந்த இன மக்களைக் கைதூக்கி விட்டதை மறந்துவிட முடியாது. இப்போது ஜாதியை யாரும் நம்புவது இல்லை.

இந்த மன்றத்தின் முன்னால் இந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கை கோரும் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான நெருக்கடி என்ன ஏற்பட்டது என்பதைப் பற்றிப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. இந்தச் சபையில் நடந்த ஒரு நிலைமை—சபாநாயகரைப் பதவியிலிருந்து இறக்குவதற்காகக் கையாண்ட முறை, ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். நான் ஆளும் கட்சி உறுப்பினர்களிடத்தில் சொன்னேன். 'சபாநாயகரை நீக்குவதற்கு நீங்கள் இந்த முறையைக் கையாண்டிருக்க வேண்டுமா? கிட்டத்தட்ட 184 உறுப்பினர்கள் ஆதரவு இருக்கும்போது இந்த முறையை ஏன் கையாள வேண்டும்? சற்று நிதானமாக இருந்திருந்தால் சட்டப்படி, முறைப்படி அவரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டிருக்கலாமே. ஏன் பொறுமையை இழந்தீர்கள்?' என்று கேட்டபோது அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'நாங்கள்





அவரை அந்தப் பதவியில் வைத்திருந்து ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்தச் சபை விவாதித்து அதற்கு முடிவு எடுக்கும் கட்டம் வரும்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி விட்டது என்று சொல்லி விட்டால் எங்கள் கதி என்னவது?' என்று குறிப்பிட்டார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அனைத்துக் கட்சிகளும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த ஒரு கருத்தை வேண்டுமானாலும் தங்களுடைய மனத்தில் கொண்டிருக்கலாம். இந்த அவையில் துணைச் சபாநாயகராக உள்ள தாங்கள் நடைபெற்ற சபாநாயகர் நீக்கத்தைப்பற்றி ஒரு முடிவை அறிவித்ததற்குப் பின்னர், அந்த முடிவுக்கு நாமெல்லாம் கட்டுப்பட்டவர்களாவோம். அந்த முறைகள் தவறு என்று இந்த அவையில் திரும்பவும் பேசுவது தலைவரின் உரிமையைப் பாதிப்பதாகும். ஆகவே, அது குறித்துப் பேசாமல் வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவது இந்தச் சபையின் மதிப்புக்கு ஏற்றதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: துணைத் தலைவர்வர்களே, அதை சர்ச்சைக்கு எடுத்துக் கொள்ளாமல் வேறு விஷயத்திற்குச் செல்லுகிறேன். இன்று இந்தச் சட்டமன்றத்துக்குள்ளே ஆளும் கட்சிக்குப் பெருத்த நம்பிக்கை, ஆதரவு இருக்கிறது என்பதை நாங்களும் ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆனால் இந்த மன்றத்திற்கு வெளியே, மக்கள் மன்றத்திலே இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்ற நிலை இருக்கிறது. அதற்குக் காரணங்கள் பல கூற முடியும்.

ஆளும் கட்சியினர் பதவிக்கு வருவதற்கு முன் மக்கள் மன்றத்தில் எதை வைத்து ஓட்டைப் பெற்று வந்தார்கள்? 'நாங்கள் பதவிக்கு வந்தால் விலைவாசி குறைந்துவிடும்; வரியைக் குறைப்போம். வசதியைப் பெருக்குவோம்' என்று சொல்லி பதவிக்கு வந்தார்கள். 1967-ல் இருந்து இன்றுவரை வரிகள் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் பகுதியில் தண்ணீருக்கு ஒரு ஏக்கருக்கு ஏழு ரூபாய் வரியாக இருந்தது இன்று 20, 22 ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் 'கட்டபொம்மன்' வானம் பொழியுது, பூமி விளையுது, எதற்கு வரி? என்று வீர

முழக்கம் செய்த தமிழகத்தில் தண்ணீருக்குக்கூட விலை ஏறி விட்டது. விவசாயிகள் அதை எண்ணித்தான் போராட்டம் நடத்தினார்கள். மின்சாரக் கட்டணம் உயர்ந்திருக்கிறது. எங்கள் பகுதியில் ஒரு குடிசைப் பகுதியில் ஒரு கடைக்கு இரண்டு ரூபாய் வாடகையாக இருந்ததை 6 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணம் அதிகமாகி இருக்கிறது. அவர்கள் எல்லாம் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. பள்ளிகள் எல்லாம் மூடிக் கிடக்கின்றன. அது ஒன்றே இந்த அரசின் கையாலாகாததனத்துக்குச் சான்று. நடைமுறையில் பள்ளிக்கூடத்தை திறந்து வைக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் எல்லாப் பள்ளிக்கூடங்களும் மூடிக் கிடக்கின்றன என்று சொல்லுகின்றார்கள். தமிழ்நாட்டில் 32,000 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதிலே எத்தனை பள்ளிக்கூடங்கள் மூடிக் கிடக்கின்றன என்ற விவரத்தைக் கூறுவாரா? எங்கே மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே கசப்புணர்ச்சி இருந்து வருகிறதோ, எங்கே மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே போராட்டம் நடக்கிறதோ, அந்த இடங்களில்தான் பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் உள்ள 32,000 பள்ளிகளில் ஒருசில தவிர, மற்றவை நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** மாணவர்கள் மத்தியில் இருக்கிற அதிருப்தியைப் போக்க இந்த அரசு என்ன செய்திருக்கிறது? மாநிலம் முழுவதும் பள்ளிக்கூடங்கள் மூடப்படவில்லை என்று வாதித்தார்கள். மாணவர்கள் பல மாவட்டங்களில் பள்ளிக்கூடங்களுக்குப் போகவில்லை என்பதைப் பத்திரிகை படிப்பதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது.

அடுத்து, எத்தனை மாணவர்கள் அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனை இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடந்து எவ்வளவு மாணவர்கள் இறந்திருக்கிறார்கள் என்றெல்லாம் பார்க்க வேண்டும். 1965-ல் இந்த மன்றத்தில் நடந்த விவாதத்தின்போது அப்போது நடந்த துப்பாக்கிச் சூடு பற்றிக் கண்டித்து இன்று



ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஒரு கருத்தைச் சொன்னார். துப்பாக்கிச் சூடு அந்தக் காலத்திலும் நடந்தது, இப்போதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அப்போது அவர் சொல்லியிருக்கிறார்—

" கடப்பாறையைச் சாப்பிட்டுவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடுமா என்று கேட்பார்கள். இந்தத் துப்பாக்கிச் சூடுகளுக்கு யார் பொறுப்பு? ஹிட்லரை ஏன் ஒரு பெரிய கொலைகாரன் என்று உலகம் சொல்கிறது? யூதர்களை அவர் சுட்டுக் கொன்றார். அவரே கையால் துப்பாக்கியை எடுத்துக் கொண்டா சுட்டார்? அவருடைய பாலிசியபடி, அவரது ஆணைப்படி யூதர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆகவே, அவரைக் கொலைகாரன் என்று சொல்லுகிறார்கள். அப்படி இப்போதும் நேரே முதல் மந்திரி அவர்கள் யாரையும் சுட்டு இருக்க வேண்டாம். ஆனால் இந்த மந்திரிசபையின் ஆணைப்படி இந்தத் துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன. ஆகவே, இந்த மந்திரி சபை பொறுப்பேற்றுத்தான் ஆகவேண்டும். இந்தத் துப்பாக்கிச் சூடுகளுக்கெல்லாம், தீ வைப்பு சம்பவங்களுக்கெல்லாம், அராஜகச் செயல்களுக்கு யார் பொறுப்பு " என்று அவர் இந்த மன்றத்தில் அன்று பேசியதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மு.ப. 10-0

ஏனெனில் எங்கு பார்த்தாலும் துப்பாக்கிச் சூடு, அராஜகம், தீ வைப்பு, பஸ்கள் எரிக்கப்படுகின்றன. யாருக்கு பாதுகாப்பு இருக்கிறது? பாளையங்கோட்டையில் போலீஸ்காரர்கள் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை, எங்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற அடிப்படையில் தங்கள் குறையை எடுத்துக் கூறி ஊர்வலம் வந்திருக்கிறார்கள்.

ஆக, நான் சொல்வதெல்லாம், போலீஸ் இலாகா தன் இச்சைப்படி, தன் கருத்துப்படி செயலாற்ற இந்த அமைச்சரவை சம்மதிக்காத காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கின்றன என்ற குற்றச்சாட்டினை இந்த அவையில் எடுத்துக் கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறும்போது ஆளும் கட்சியினர் சிலருக்கு ஆத்திரம் ஏற்படலாம். சட்டமன்றத்திற்கு வந்ததே—இடிப்பார் இல்லாத ஏமரா மன்னன் என்ற முறையில் செயல்படக் கூடாது. கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டும். அவர்களை திருத்தவேண்டும், நல்ல முறையில்

இந்த ஆட்சி மலரவேண்டும், 4½ கோடி தமிழ் மக்களுக்கும் நல்ல ஆட்சி ஏற்படவேண்டும் என்ற முறையில்தான், அப்படிப்பட்ட நல்ல எண்ணத்தோடுதான் இங்கு வந்திருக்கிறோமே தவிர, வேறு அல்ல.

அடுத்தபடியாக, விலைவாசியை எடுத்துக்கொள்ளுங்கள். விலைவாசிபற்றி அன்று அவர்கள் பேசும்போது ஐந்து பைசாவிற்கு விற்கப்பட்டு வந்த இட்டிலியைக் கொண்டு வந்து இந்த அவையில் காண்பித்தார்கள். அந்த ஐந்து பைசா இட்டிலி இன்றையதினம் 15 பைசாவிற்கு விற்கப்படுகிறது. அன்று காபி 15 காசாக இருந்தது இன்றைக்கு 30 காசு என்ற அளவில் விற்கப்படுகிறது. அன்று சொன்னார்கள். மளிகைக் கடைக்குச் சென்றால் நான்கணா கொடுத்து புளி வாங்கினால்—1967-க்கு முன்னால்—முன்பு கக்கன் தலை அளவிற்குக் கிடைத்தது புளி, ஆனால் இப்போது கண் அளவிற்குத்தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இப்போதுள்ள நிலை புளியை கண்ணால்கூட பார்க்க முடியவில்லை. ஆகவே இதற்கெல்லாம் நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேபோல் சுவர்கள்தோறும் எழுதி காட்டினார்கள் காமராஜ் அண்ணாச்சி, கருப்பட்டி விலை என்னாச்சு என்று. இப்போது கருப்பட்டியின் விலை கிலோவிற்கு ரூ. 2.80 ஆகும். வாங்க முடியவில்லை. ஆகவே இந்த விலைவாசியேற்றத்திற்கு நீங்களும் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். முன்பெல்லாம் சுட்டிக்காட்டினீர்களே, இப்போது இவைகளுக்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறீர்களா என்று கேட்கிறேன்.

அதுபோல் வறுமை; வறுமைபற்றி பத்திரிகைகளில் படிக்கிறோம். பத்திரிகைகளில் வெளிவருகிறது தினந்தோறும், இவ்வளவு பேர்கள் வறுமையை சகித்துக்கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று. எவ்வளவோ தற்கொலைகள் நடக்கின்றன. இவற்றிற்கும் அரசு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம் என்று இப்படிப் பல போராட்டங்கள் நடக்கின்றன. வெளியிலே சென்று பார்த்தால் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்த



அமைச்சரவையைப்பற்றி மக்கள் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சித் தரப்பில் நாங்கள் ஐம்பது பேர்கள் கூட இல்லை என்ற நிலை இருந்தாலும், இந்த மந்திரிசபை கவிழுமா. நீங்கள் சட்டமன்றத்திற்குச் செல்கிறீர்களே, மந்திரிசபையைக் கவிழ்க்க உங்களால் முடியுமா, ஆளும் கட்சியிலிருந்து எவ்வளவு பேர்கள் பிரிந்து செல்வார்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். காரணம், மக்களுக்கு இந்த மந்திரி சபைமீது நம்பிக்கை இல்லை, மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்பதை இந்த மன்றத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊழல்பற்றிச் சொல்லும்போது அதைக் கண்டுபிடிப்பதற்குள்ள சகல சக்தியும் ஆளும் கட்சியினரிடம்தான் இருக்கிறது, உங்களிடத்தில்தான் நிர்வாகம் இருக்கிறது, போலீஸ் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது. எங்களுக்கு என்ன சக்தி இருக்கிறது ? மக்கள் சொல்வதைக் கேட்டு வந்து இங்கு சொன்னால் அதை நிரூபிக்க எங்களால் முடியாது. உதாரணத்திற்கு, ஒரு திருடன் பிக் பாக்கெட் அடிக்கிறான், அதை நான் கண்ணால் பார்க்கிறேன். அவனைக் கூட்டி வந்து இன்னார்தான் திருடினான் என்று போலீசிடம் சொல்லும்போது, நான் திருடினேனா, நீ பார்த்தாயா என்று அவன் மிரட்டும்போது கண்ணால் பார்த்தவன் கூட ஒன்றும் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. அந்த பயத்தோடுதான் இன்று இருக்கவேண்டிய நிலை இருக்கிறது. ஒன்று சொல்கிறேன். 1964-ல் என்று நினைக்கிறேன். இந்த மன்றத்தில் ஒரு ஊழல் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. ஒரு சப் இன்ஸ்பெக்டரைப் பற்றிய குற்றச்சாட்டு. எங்கள் பகுதியில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் இருந்தார். அவர் ப்ளேயர்ஸ் சிகரெட்தான் குடிப்பார். அவருக்கு நாள் ஒன்றுக்கு குறைந்தது நான்கு பாக்கட் சிகரெட்டாவது வேண்டும். அவர் வாதியிடமிருந்தும் வாங்குவார், பிரதிவாதியிடமிருந்தும் வாங்குவார். யார் சென்றாலும் கொஞ்சம் காசு கொடுத்துத்தான் ஆகவேண்டும். அப்போது ஒரு பாக்கட் ப்ளேயர்ஸ் விலை ஒன்றேகால் ரூபாய். ஆக நான்கு பாக்கட் சிகரெட்ஸ் என்றால் ரூபாய் ஐந்தாகிறது. அவருக்கு குறைந்தது நான்கு பாக்கட்களாவது ஒரு நாளைக்கு வேண்டும். அப்போது சப் இன்ஸ்பெக்டரின் சம்பளம் கிட்டத்தட்ட ரூ. 225. இப்போது சம்பளம் அவர்களுக்கு கூடியிருக்கிறது. அந்த 225 ரூபாயில்

மாதம் ஒன்றுக்கு சிகரெட்டுக்கு ரூ. 150 போனால் மிச்சம் 75 ரூபாயை வைத்துக்கொண்டு பெரிய குடும்பத்தை நடத்தமுடியாது. ஆகவே அவர் நிச்சயமாக லஞ்சம் வாங்குகிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகவே இதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது. அப்போது இருளைப் போக்குகிற அருள் என்றெல்லாம் மன்றத்தில் பேசிய அமைச்சர்கள் கூட இங்கு இருக்கிறார்கள். அவர்கள்தான் அன்று ஐ.ஜி. யாக இருந்தார்கள். நான் வெளியே சென்ற போது என்னிடம் கேட்டார்கள், பெயரைச் சொல்லவில்லையே, அவர் யார் என்று கேட்டபோது இன்னார் என்று சொன்னேன். உடனே விசாரணை செய்யும்படி உத்தரவு போட்டு, அவர் தவறைக் கண்டுபிடித்து, அவர் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டு உடனே அவரை சஸ்பெண்ட் செய்ய நடவடிக்கைகள் எடுத்தார்கள்.

அதுபோல் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது, குறைகளை எடுத்துச் சொல்லும்போது, அந்தமாதிரி ஏதாவது இப்போது செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன். அந்த முறையிலும் செய்யலாம். அடுத்தபடியாக, கேரளாவில் ஒரு முறை புகுத்தப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உறுப்பினர் அவர்கள் 1964-ல் நடைபெற்ற நிகழ்ச்சியை எடுத்துக்கூறி நடவடிக்கை எடுத்ததுபற்றிச் சொன்னார்கள். நன்றி. அதேபோல் இன்றுள்ள அதிகாரிகள் இன்ன இடத்தில் இப்படித் தவறு செய்தார், அல்லது இதுபோல் தவறு செய்கிறார்கள் என்று எங்களிடம் தெரிவித்து நாங்கள் நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்திருக்கிறோமா? குறிப்பாக மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள், உங்கள் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு டி. எச். ஓ. பற்றி குறிப்பிட்டுச் சொன்னவுடன் நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். அதேபோல் நீங்கள் தெரிவித்து நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அதைப் பற்றித் தெரிவித்தால், பதில் சொல்லமுடியும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** விளக்கத்திற்கு நன்றி. இநத முறையை இந்த அரசு செயல்படுத்தவேண்டும். கேரளாவில் ஒரு முறை இருக்கிறது. ஒரு அதிகாரி மீதோ அல்லது அமைச்சரவையில்





உள்ளவர்கள் மீதோ ஊழல் அல்லது லஞ்சக் குற்றச்சாட்டு சுமத்த வாய்ப்பளித்திருக்கிறார்கள். அப்படி ஒரு மனுவை சமர்ப்பிக்கும் போது அந்த பாதி மனுவோடு ரூ. 700 கட்டவேண்டும் என்றிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அந்தத் தொகை, அந்த ரூ. 700 திருப்பித் தரப்படும். அப்படி நிரூபிக்கப்படாவிட்டால், அந்தத் தொகையை இழந்துவிடவேண்டும். அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அங்குள்ள முறை வேண்டாம். இங்கே குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுவதற்கு முன்னால் அமைச்சரவை ராஜினாமா செய்யவேண்டும் என்று பேசுகிறார்கள். அப்படி அமைச்சரவை விலக வேண்டுமென்று, குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமல் அப்படி பேசுவது முறைதான் என்று நீங்கள் கருதுகிறீர்களா ? சாதாரணமாக ஏதோ பேசிவிட்டு ஊழல் என்று முடிவு கட்ட விரும்புகிறார்கள். தமிழ்நாட்டில் விஜிலன்ஸ் செம்மையாகவும் ஒழுங்காகவும் நடைபெற்று, ஒரு மாதத்தில் பத்து அல்லது பனிரெண்டு அலுவலர்களின்மீது குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுகிறது. அஃது சம்பந்தமாக இலாகா நடவடிக்கைகள் எடுக்கிறது. குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்க ரூ. 700 கட்டவேண்டியதில்லை. அதற்கு ரூ. 700 தேவை இல்லை. எந்தவிதமான பொறுப்பும் கட்டத் தேவையில்லை. குற்றச்சாட்டு தெளிவாகக் கூறப்பட்டாலும் விசாரித்து முடிவு எடுக்கப்படுகிறது. பொதுவாக ஊழல் ஊழல் என்று சொல்வது சரியல்ல. தனிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லும்படி அவையில் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தனிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சாட்டுவதற்கு அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். கேரளாவில் இருப்பதைப் போன்றதொரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். வேண்டுமானால் 700 ரூபாய் என்பதை ரூ. 1,000 என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவரமுடியும். இல்லை என்றால், அந்த வாய்ப்பு இல்லை. சட்டசபையில் ஒரு கருத்தைச் சொன்னால் உறுப்பினர் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வாரா என்று கேட்கிறார்கள். சொல்வதற்கெல்லாம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னால்....

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உறுப்பினர்கள் பொறுப் பேற்றுக் கொள்வது என்றால், உடனே அவர்களுக்குத் தண்டனை கொடுத்து, ஜெயிலுக்கு அனுப்புவது என்று பொருள் அல்ல. பொறுப்பு என்றால், இந்த அவைக்கு ஒரு தனித் தகுதி உண்டு. உறுப்பினர்கள் தாங்கள் சொல்வதை பரிசீலித்துவிட்டுத்தான் அதைச் சொல்கிறோம் இங்கு என்ற நம்பிக்கையோடு சொல்ல வேண்டும். ஒரு உறுப்பினர் ஒன்று சொல்லும்போது அல்லது இந்த அவையில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது ப்ரைமாபேஸி அளவில் உண்மை இருக்க வேண்டும். அதற்காகத் தான் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படு கிறதே தவிர, அது மிரட்டுகிற வார்த்தை அல்ல.

நான்கூட எதிர்க்கட்சியில் இருந்தபோது முழுப் பொறுப் பையும் ஏற்றுக்கொள்ள முடியாது, சந்தேகத்திற்கு இடமிருக் கிறது, ஆகவே அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித் திருக்கிறேன். சொல்வதைச் சொல்லிவிட்டு அரசு பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், எந்தவிதமான பொறுப்பையும் சுமத்தாமல் சொல்கிற கருத்தை மட்டும் ஆலோசிக்க முடியும். எனவே அந்த வகையில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஆக, நான் குறிப்பிட்ட அந்த முறையை இங்கு புகுத்தவேண்டும். அப்படிச் செய்தால் ஊழல் பற்றி புகார் சொல்கிறவர்கள் எங்களிடம் சொல்லவேண்டியதில்லை, அரசாங்கத்தினிடம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனு கொடுத்து, 700 ரூபாய் சட்டி, விசாரணைக்குக் கொண்டுவர பொதுமக்கள் காத்திருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டதொரு சட்டத்தைக் கொண்டு வந்தால், அரசாங்கத்திற்கும் நல்லது, பொது மக்களுக்கும் நல்லது.

மக்கள் மன்றத்தில் என்ன பேசுகிறார்கள் என்பது அமைச்சர் களுக்குத் தெரியும். மக்கள் வோட்டளித்து ஐந்து ஆண்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஐந்தாண்டுகளுக்குள் எதற்காக அமைச்சரவையை விட்டு வெளியேறவேண்டும் என்ற எண்ணத்தில் அரசின்மீது நம்பிக்கை தெரிவிக்கும்வகையில் ஒரு நம்பிக்கை தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அன்று அரியலூரில் நடந்த விபத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் இவர்கள். அரியலூர் அழகேசா ஆண்டது போதாதா, மூக்கற் மாண்டது





போதாதா என்று இவர்கள் சொன்னதை நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். துப்பாக்கிச் சூட் டால் எத்தனைபேர் இறந்து இருக்கிறார்கள். அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று இருந்த காம் கறை படிந்த காம். அன்று இருந்த முதலமைச்சர் அவர்களுக்கு திரு. இராம. அரங் கண்ணல் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அன்று இருந்த மந்திரி சபை ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்லி விட்டு, ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை இப்போது ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"முதியோரான நீங்கள் உங்கள்மீது ஏற்பட்டுள்ள இந்தப் பழியைப் போக்கிக் கொள்வதற்கு எஞ்சியிருக்கிற காலங்களிலே, இந்த நாட்டுக்கு நல்ல அன்பு வழி மலர்வதற்காக பாடுபடும் வகை யில் பாடுபடவேண்டும். இந்தப் பதவி சாதாரணப் பதவி உங்க ளுக்கு. எவ்வளவோ ஆண்டுகாலம் இந்தப் பதவியை வகித்திருக் கிறீர்கள். நம்முடைய மயிலாப்பூர் தொகுதியில் திருவள்ளுவர் கோயில் காலணா காசுகூட வருமானம் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது. அந்தக் கோவிலில் நீங்கள்வந்து அமர்ந்து விநோபா அடிகளைப்போல, திருவள்ளுவருக்கு பாடுபடுகின்ற விதத்தில், எல்லாக் கட்சிகளையும் இட்டுச் செல்கின்ற ஒரு பெரிய மனிதராக வாழ்கின்ற வகையிலே உங்களுடைய எஞ்சிய காலத் தைச் செலவிடலாம். வேண்டாம் இந்தப் பதவி உங்களுக்கு. உங்களை அட்டிப் படைக்கின்றவர்களுக்கு எந்தவிதமான கெட்ட பெயரும் சேரப் போவதில்லை. எல்லாம் உங்களுக்குத் தான் வரும் என்பதை முதல் அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், நீங்கள் ராசினாமா செய்து விடுங்கள்" என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இதை நான் நினைவில் கொண்டு, இன்று இருக்கும் நிலையில் இருக்கும் விலைவாசி, மக்களிடத்திலே காணப்படும் சட்டம் ஒழுங் கின்மை, எங்கே பார்த்தாலும் பஸ் எரிப்பு, மாணவர்களுக்கு, போலீஸ்காரர்களுக்கு, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை—எங்களுடைய பகுதியில் ஒரு சா மில் இருந்தது, அதையும் மூடிவிட்டார்கள், ரப்பர் பாக்டரி வரும் என்று சொன் னார்கள். எதிர்பார்த்தோம், அதுவும் வரவில்லை—இதையெல்லாம்

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1972 டிசம்பர் 11

மனதில் வைத்து, இந்த அரசு ராசினாமா செய்வதுதான் தமிழக மக்களுக்கும் நல்லது, அவர்களுக்கும் நல்லது என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் விடுத்த வேண்டுகோளை அன்று இருந்த முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டாரா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : அதேபோல் நீங்களும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா அல்லது ஏற்றுக்கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இராம அரங்கண்ணல் : துணைத் தலைவரவர்களே, நான் அவர்களை முதியோரான நீங்கள் என்று மரியாதையாகத்தான் சொல்லியிருக்கிறேன். இப்போது இளைஞர்கள் அரசு நடத்து கொண்டிருக்கிறது. அது திருவள்ளுவருக்குத் தேவையான காரி யங்களை அருமையாகச் செய்து கொண்டிருக்கிறது. நல்ல முறை யிலும் ஆண்டு கொண்டிருக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : அப்படி மக்கள் கருதவில்லையே.

THIRU N. GANAPATHI : Mr. Deputy Speaker, Sir, I thank you very much for the opportunity given to me to support the Motion of Confidence moved by our Chief Minister Dr. Karunanidhi, that the House expressed its implicit confidence in him for the good and salutary work being done by the D.M.K. Government under his leadership for the past three years.

The D.M.K. Government of course came to power in 1967. Unfortunately due to the unexpected and sad demise of our leader Dr. Anna, it fell on the shoulders of our revered Kalaignar Karunanidhi to lead Tamil Nadu to its destiny with the support and sympathy of the entire people of Tamil Nadu. In 1967 we contested the elections in a front and in 1971 we led the front and led it to a big majority in this House. Unfortunately political developments took place and nobody can deny it. Political developments usually take place because politicians and human factors are involved. A party which is a member of a front can never be expected to remain



1972 டிசம்பர் 11] [Thiru N. Ganapathi]

in the same front because they should emphatically exert their individuality so that their party could become stronger and stronger in due course. Therefore with an ulterior motive and with the sinister wish to develop their party in the politics of Tamil Nadu, some members of the front might have left the front and they might have started criticising the D.M.K. Party for the purpose of personal vendetta and for so many other things.

But, I never expected any responsible Opposition Party or leader to say that the D.M.K. Government should resign because of the petition presented to the President of India. We in Tamil Nadu as well as in India are governed by democratic principles and democracy was inherited by us from the long experience of Great Britian and other countries of the world and we have imbibed the democratic principles wherein the Parliament and the Legislature are stated to be supreme and the political sovereignty is vested with the people of the country and we go to the polls periodically. But once the people went to polls and expressed their stronger verdict and confidence in the D.M.K. Government, then it is not the business of the Opposition to demand their resignation. So long as there is a majority in this House and so long as the people in Tamil Nadu have implicit faith in the leadership of Dr. Karunanidhi, they have no business to demand the resignation of the Ministry simply because a petition has been presented to the President of India.

Opposition parties should be responsible parties. Opposition parties' role has been described by constitutional writers as criticising and commenting upon the failures of the Government. Here there is an unfortunate and sad state of affairs. Personal vendetta and personal comments have gained over political principles. Simply because they do not like the D.M.K. Ministry and simply because they do not like the leadership of Dr. Karunanidhi and simply because they do not like some persons occupying the Treasury Benches, they cannot say that the D.M.K. Ministry should resign and they should go to the electorate and get their verdict again. I simply say that this demand is not supported by any democratic principles obtaining in any part of the world.

At this juncture I would like to invite the attention of the hon. Members to the fact that the D.M.K. Party or their leader have not lost the confidence of the people of Tamil Nadu. I also wish to submit that in the 1967 elections, the D.M.K. led its front with

the Muslim League, Swatantra Party, Forward Block and Left Communists. It contested 173 seats and it obtained 138 seats. The Congress contested 234 seats and it obtained 49 seats. The C.P.I. contested 32 seats and obtained only two seats. The Marxists contested 22 seats and it obtained 11 seats. The Swatantra Party contested 27 seats and it got 20 seats. In the 1971 elections there has been some change in the front. The D.M.K. contested 203 seats and obtained 184 seats. The Congress contested 201 seats but unfortunately it got only 15 seats. The C.P.I. contested ten seats as a partner of the front and got eight seats. The Marxists which contested in 1967 as a partner of the D.M.K. front, contested 37 seats but obtained no seat at all in 1971. In fact, all its important leaders lost their deposits in the 1971 elections.

The Swatantra party contested 19 and got seven seats, the Forward Block contested nine and got seven seats. This pattern of voting of the people of Tamil Nadu will clearly show that so long as the party was in alliance with D.M.K., so long as they were partners of DMK, they were supported by the people of Tamil Nadu. When the party disregarded DMK, wanted to oppose the DMK and did not support DMK, it lost the confidence of people of Tamil Nadu. Take the case of Marxists (Communist Marxists) in 1967 elections when they were in alliance with us. They contested 22 and won 11. But in 1971, when they were not in alliance with us, they contested 37 seats and did not secure one seat. So the pattern of voting will clearly show that the people of Tamil Nadu have been always with the DMK and they have always supported DMK and their allies. After we have been democratically elected, it is not the business of any body, supposing to represent the people, supposed to be representatives of true democracy, supposing to represent the well-being of the people to come and ask the resignation of the leader of the DMK party and the Ministers and going to people in higher-up for the same, without coming to the House.

I wish to state emphatically that ours is a parliamentary democracy wherein the people are sovereign and this forum, wherein we are elected by the people as their representatives, is the supreme and sovereign body to decide things so far as Tamil Nadu is concerned. Some people resign from DMK party for personal ends and simply because of that, can the DMK party consisting of 176 people, having a big majority in the House and having



the support of allies (thus having a majority of 190 in a House of 234) resign ? Surely not. Naturally the DMK, having the confidence of the House, has to rule.

The demand of a few members, supposed to represent the welfare of the people, that this popular Ministry should resign, should therefore be dismissed. What business have they to say that this DMK party, commanding a comfortable majority in this House, had lost the confidence of the people ? I would like to say what Dr. Ambedkar has said regarding what is democracy that should prevail in the country. He says that so long as the party in power commands a majority and has the confidence of the House, the Chief Minister of that party has got the right to remain in power. I would like to read the relevant portion of Dr. Ambedkar's speech from the Constituent Assembly debates, dated 31st May 1949, He says :

" Now I have no doubt about it that it is the intention of this Constitution that the Ministry shall hold office during such time as it holds the confidence of the majority. It is on that principle that the Constitution will work. The reason why we have not so expressly stated it is because it has not been stated in that fashion or in those terms in any of the Constitutions which lay down a Parliamentary system of Government. 'During pleasure' is always understood to mean that the 'pleasure' shall not continue notwithstanding the fact that the ministry has lost the confidence of the majority. "

It is the view of the constituent Assembly that so long as a party maintains the confidence of the House i.e. has a majority in the House, it has got every legal right, constitutional right to remain in power. It has the right to decide the destiny of the people. This has been the subject matter of cases in Supreme Court in 1955 and 1971. In those years there have been cases in the Supreme Court to consider the constitution of responsible Government. In 1971 Supreme Court considered the question and said that Article 75 (3) which relates to Parliament brings into existence what is called 'responsible government'. In other words, the Council of Ministers must enjoy the confidence of the House of people. In other words, it says that so long as the Council of Ministers enjoys the confidence in the House, they need not worry about any criticism or comments from Opposition Party saying that they should resign from office. One more fact I

would like to bring to the attention of this Hon. House. So long as the Prime Minister and his party enjoy the confidence of Parliament, and so long as the Chief Minister and his party enjoy the confidence in the Legislative Assembly, they have every right, legal and constitutional right to continue in office.

There was an emergent conference of Presiding Officers of Legislative bodies on 6th and 7th of April 1968. The occasion for this conference arose out of two constitutional questions which arose in West Bengal and Punjab, on account of the behaviour of Speakers of those Assemblies. This conference consisting if so many luminaries of Parliament has chosen to pass resolutions in their conference, at the end of which it is said:

" The question whether a Chief Minister has lost the majority in the Assembly or not should at all times be decided by the Assembly ".

Therefore there is no forum other than legislative Assembly to decide whether the Chief Minister has lost the confidence of the people or not. Hence I submit that the demand of opposition parties that people are not supporting DMK, that the DMK, leadership should resign is untenable and is not maintainable in any court of law, not maintainable under constitutional provisions Tand is not acceptable to parliamentary democracies throughout the world.

One more submission I would like to make. The people elect their representatives in their constituencies and under our constitution, they have no right to recall those representatives saying they have lost their confidence. Once they elect the representatives, it is the responsibility of the representatives to fight for their constituencies and for the welfare of the people of the constituencies in the House. There is no room for any appeal to President, or Governor or Central Government for dissolution of Government, which has been elected lawfully. Simply because of the attitude of some representatives, it cannot be said that the House as a whole has lost the confidence of the people. Taking memorandum to President or Governor without bringing it to the House, is not according to parliamentary democracy. They take the petition to President and say that this Ministry, enjoying a majority in the House, should resign. They do not disclose to the public the list of charges. Nor do they disclose it in this House. They do not reflect the sentiments of the majority. Instead of bringing



it on the floor of the House, they take it to Delhi and give them to the President. The President in turn, as a responsible constitutional head, sends it to the Prime Minister and Prime Minister in turn has sent it to our Chief Minister for his comments. What I wish to emphasise here is, though the opposition parties say that we have lost confidence of the people, they still do not expose the so-called allegations against the Ministry. They do not come out in the open and place before the public the list of allegation against the Ministry. Instead they go to President of India. Why? மு.ப. 10-30

My submission is this. The allegations are all false. Because they are false, they do not have the courage to face the people. So, allegations of corruption made against the Ministers and other Leaders and party members are all false. If they are true, my submission is they would have shown them to the people and they would have given publicity and they would have published them in the press. And if they had been given to the public, certainly then a judicial enquiry would have been instituted by filing complaints of defamation in the respective courts of law. There are responsible presiding officers who would look to them. That is one limb of the State which settles disputes between citizens of the State. So the presiding officers will certainly go into the allegations to be substantiated by both the parties and will certainly find out whether they are true or not, whether they are right or not and they will certainly punish the guilty.

But here since these people are politicians since they do not have any truth in the allegations they level, they have gone to Delhi and presented the petitions there. What is the reason ? If the allegations are true, then there is protection for the people making the allegations. But if false allegations are made in Court, then there is no protection for the people making those allegations. But there is one protection given to them. In the penal law of the land, and in the Criminal Law according to definition of ' defamation ' there is protection given to the person making allegations against other people for any complaint preferred to a superior officer, for defamation there cannot be any proceeding in a court of law. Therefore our hon. Friend and his colleagues have gone to Delhi and given the petition to the President of India supposed to be the superior officer for the Ministry of the State.

THIRU R. PONNAPPA NADAR : May I put one question? Do you believe these allegations are totally false or you believe them to be untrue?

THIRU N. GANAPATHY : My submission is that these allegations are all absolutely, totally and word for word, false. These allegations are made with political motives ; these allegations are made out of personal vendetta, for taking revenge for expulsion from the party.

What I was explaining was that when the complaint is given to the superior officer and when the contents are found to be false, then there is no provision for punishing the people giving the false complaint. You see, Sir, hon. Members of this House may kindly see that if a complaint is falsely given to a police officer, then the police has got to proceed against the complainant for giving false complaint; similarly, the court has got to punish the person for perjury and for giving false complaint. But if a person gives false complaints and makes false allegations to responsible superior officers, then there is legal protection to them, from being punished for making such false allegations. This is the motive which has induced them to go to Delhi and present their petitions to the President.

Another motive is this. If the public know the allegations they will simply pooh pooh them and will say that there is nothing. But if the public are not made known of the true contents of the complaint, then the public may think that there are so many things in the complaint and therefore we should not support the Ministry. That is the motive with which these gentlemen have gone to Delhi.

My friend has chosen to explain that he has obtained legal advice and because of the legal advice they must have realised that if once it is made known to the public, proceedings will be initiated against him and members would be precluded from making comments because of sub judice operation. This is a curious argument, because he does not want it to be given to the public. If he had wanted these allegations to be discussed, then he could have come here and presented those things before the responsible members of this House. And this House would have very much appreciated the truth or falsity of the complaints. The responsible members here would have known the facts of those things and there is the



protection afforded by our Constitution that whatever is discussed in this House cannot form the subject matter of defamation or legal proceeding in any court of law. Therefore the curious step was taken by out hon. Friend when he presented his petition to the President of India. He did not choose to publish it here. He says because of legal advice he did not present or publish, because it will lead to sub judice operation.

I submit, Sir, that the entire allegations supposed to be contained in the petition are all false and should be false; he did not choose to present them to the public or he did not publish them in the public press.

Now there is a demand. Because of the alleged rampant corruption and mal-practices, the Ministry should resign; and if the Ministry did not resign, then the superiors namely the President or the Governor according to the Constitution should dismiss this Ministry. Is it tenable, Sir? In the long parliamentary history of England there were only two occasions when Parliament was dissolved and the Ministry dismissed by the Sovereign; even though they enjoyed the confidence of the House and majority in the House, the Sovereign King chose to dissolve the Parliament and dismiss the Ministers. But later on, it was found that the assumptions leading to dissolution of Parliament were wrong, because of which there was wide propaganda and adverse comments in the Press against the Government based on certain results of the Bye-Election. So, though in the first instance the King dissolved the Parliament, ultimately he saw the folly of it. Therefore, Sir, the last occasion such a thing happened was in 1834 when though the Ministry enjoyed the confidence of the House and the ministry commanded the majority in the House, the King interfered. The people at Delhi as well as the Governor here and the President of India and the Prime Minister are all assisted by and advised by legal luminaries and constitutional pandits and they are all aware of these constitutional provisions. So long as there is majority, so long as the majority express their confidence in the ministry, they cannot interfere with the affairs of this Touse or the Ministry.

Under Article 355, they have got every duty and obligation to protect the State Government from unnecessary harassment of law and order and harassment of creation of trouble by interested parties to dethrone the Ministry from power. Therefore, I submit

[திரு. என். கணபதி] [1972 டிசம்பர் 11

all these contentions of the opposition that the Ministry should resign because the people have lost confidence, even though there are 190 members including the Front Partners to stand by the Ministry, that public opinion is against the D.M.K. ministry, that nine out of ten persons are against this Ministry, are all not at all tenable, maintainable or acceptable to parliamentarians in India, though it may be acceptable to our hon. Opposition members here.

I would once again stress that so long as there is majority who have confidence in the Ministry, who want that Dr. Karunanidhi should lead Tamil Nadu to its destiny, so long as the majority want that he should liberate Tamil Nadu from the clutches of poverty, so long as the majority want that he should develop and take the depressed people to higher status, so long as the majority desire that he should lead the Tamil Nation to glorious heights of popularity and prestige in the eyes of the Nations of the World, nothing can stand in the way, though the opposition parties here may say that we should resign and the D.M.K. Government should resign or they should be dismissed.

One more poser I would like to put. The function of an opposition is to criticise the Government; the function of an opposition in a responsible Government is to expose the follies of the Government, to expose the faults of the Government, so that they can catch the votes and they can be returned to power in the next elections so that they lead the country to its destiny, as they wish or as their pious wish is.

What is opposition here? There is no question of any party creating trouble here. There are our Front Partners. Other parties have dwindled in number. The other parties are not supported by the public of Tamil Nadu and the people of Tamil Nadu have no faith in these parties, though there may be some responsible leaders ventilating here so many grievances against the Ministry.

(Thiru S. Kandappan in the Chair.)

The people of Tamil Nadu are aware that the D.M.K. Government stand for the uplift of the poor. The people of Tamil Nadu are aware that the D.M.K. Government are fighting for the rights of the downtrodden. The people of Tamil Nadu are also aware that only under the leadership of Dr. Kalaignar, Tamil Nadu has



1972 டிசம்பர் 11] [திரு. என். கணபதி]

got the right and liberty to march forward and to get themselves released from the clutches of poverty and to raise their standard of life and so many other things.

Thank you, Sir.

(4) அமைச்சரின் அறிக்கை

புயல் மழையினால் ஏற்பட்டுள்ள சேதங்களும், அரசு மேற்கொண்டுள்ள துயர் தணிப்புப் பணிகளும் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

Mr. CHAIRMAN (Thiru S. KANDAPPAN) : Now the Hon. Chief Minister will make a statement under Rule 82.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, என்னுடைய வேண்டுகோளின்படி மாண்புமிகு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களும், வருவாய்த் துறை வாரியத்தின் அங்கத்தினர் திரு. நம்பியார் அவர்களும், பொதுத்துறைத் துணைச் செயலாளர் திரு. எம். வைத்தியலிங்கம் அவர்களும் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இந்திய விமானப் படையினரின் 'டகோடா' விமானம் மூலம் நேற்று (10—12—1972) ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் சுற்றிப் பார்வையிட்டனர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று மாலை 5 மணிக்கு என்னைச் சந்தித்து மேற்கண்ட மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதத்தைப்பற்றிய நிலைமைகளை எடுத்து விளக்கினார்கள். பல கிராமங்கள் வெள்ளத்தினால் சூழ்ந்துள்ளன. அந்தக் கிராம மக்களுக்கும் வெளியிடத்திற்கும் தொடர்பற்றுப் போயிருக்கிறது. பள்ளமான பகுதிகளில் உள்ள குடிசைகள் எல்லாம் நீரில் மூழ்கியுள்ளன. பல இடங்களில் மண் வீடுகள் இடிந்து விழுந்திருக்கின்றன.

நெற்பயிர் பெரும்பாலும் கடலூர், பண்ருட்டி போன்ற தாலுக்காக்களில் நீரில் மூழ்கியிருக்கிறது. பவானி தாலுக்காவில் அறுவடைக்குத் தகுதியாக இருந்த நெற்பயிர் பெருமழையினால் மடிந்து விழுந்துள்ளது.

கால்நடைகளும் பல இறந்திருக்கக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உயிர்ச் சேதம் ஆங்காங்கு ஏற்பட்டுள்ளதைப் பற்றிப் பத்திரிகைகள் வாயிலாகவும், மற்ற வழிகளிலும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆத்தூர் போன்ற இடங்களில் சாலைகளில் உள்ள பாலங்களில் உடைப்பு ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. சில தாலுக்காக்களில் ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டு, ஆயக்கட்டில் உள்ள பயிர்கள் சேதமடைந்ததல்லாமல் சில இடங்களில் மண் மேடுகள் ஏற்பட்டுள்ளன. பல கிராமச் சாலைகளும், தேசிய நெடுஞ்சாலைகளும் சில இடங்களில் இருப்புப் பாதைகளிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளன. குறிப்பாக கிராமச் சாலைகள் பெரும் அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதினாலும், தண்ணீர் அதிக அளவில் தேங்கி நிற்பதினாலும் வெள்ளத்தினால் எந்த அளவிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை உடனடியாகக் கணக்கிட இயலாமல் இருக்கிறது.

வெள்ளச் சேதம் பற்றி, சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை வாரிய அங்கத்தினர் உடனடியாக அறிக்கை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

இன்னும் சில தினங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியாளர்களை நான் அழைத்துப் பேசி எந்தெந்த வகையில் சேதம் ஆயிற்று, எவ்வளவு சேதம் ஆயிற்று என்பதைக் கணக்கிட்டு, அதற்கு வேண்டிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

முதற்கட்டமாக ரூபாய் மூன்று கோடிக்குக் குறையாமல் செலவழிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அதற்கிடையில் கீழ்க்கண்ட நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

(1) தற்போது வெள்ளத்தினால் வீடு பாதிக்கப்பட்டிருந்தால் அந்த வீட்டைப் புதுப்பிப்பது போன்றவற்றிற்கு ரூபாய் 40 தான் அளிக்கப்பட்டு வருகிறது. இது ரூபாய் 80 ஆக உயர்த்தித் தரப்படும். (ஆரவாரம்) ஏற்கெனவே 40 ரூபாய் கொடுக்கப்பட்டு இருந்தால் 80 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படும்.



(2) குடும்பத்தில் குடும்பத் தலைவர் அல்லது அந்தக் குடும்பத்தைப் பொறுப்பேற்று நடத்துபவர் இந்த வெள்ளத்தினால் இறந்து போயிருப்பாரேயானால் அந்தக் குடும்பத்திற்கு ரூபாய் 2,000 மானியமாக வழங்கப்படும் (ஆரவாரம்). தாய் தந்தையர் இறந்து அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் வளர்ப்பு, கல்வி போன்ற பராமரிப்புச் செலவுகளை அரசு ஏற்றுக்கொள்ளும். (பலத்த ஆரவாரம்).

(3) விவசாயத்திற்கு உதவும் மாடுகள், கறவை மாடுகள் முதலியன இறந்து போயிருக்குமேயானால் புது மாடுகள் வாங்குவதற்காக விவசாயிகள் கடன் கேட்பார்களேயானால் போதிய அளவிற்குக் கடன் தரப்படும்.

(4) வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நடப்பு பசலிக்கு உரிய நிலத் தீர்வை தண்ணீர்த் தீர்வை ஆகியவை ரத்து செய்யப்படும் (ஆரவாரம்).

(5) சாலைகள் முதலியவற்றைப் பழுது பார்ப்பதற்காக உடனடியாக தென்னாற்காடு, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் மூன்று ஸ்பெஷல் டிவிஷனல் இஞ்சினியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(6) குளங்கள், ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளதைப் பொதுப்பணித்துறை இலாகாவினர் உடனடியாகக் கவனிப்பர்.

மேற்கண்ட நிவாரணப் பணிகளை உடனடியாக எடுத்துக் கொள்வதற்காக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகை என்பது பின்னர் நிர்ணயிக்கப்படும்.

மேலே நான் கூறிய சலுகைகளும், நிவாரணப் பணிகளும் இந்த மாதத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

புயலினாலும் வெள்ளத்தினாலும் நமது மாநிலத்தில் பல மாவட்டங்களில் பெரும் அளவிற்குச் சேதம் விளைந்துள்ளதால் மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்படும். இந்த வெள்ள நிவாரணங்களை முழு அளவில் மேற்கொள்ள தேவைப்படும் நிதியினை மத்திய அரசு முன்வந்து அளித்திட வேண்டுமென்று

நேற்று மாலையில் நான் மத்திய நிதி அமைச்சர் திரு. சவான் அவர்களை சென்னையிலே எனது இல்லத்திலே சந்தித்தபோது வலியுறுத்தியுள்ளேன். நிதி உதவி கிடைத்திடும் என்று நம்புகிறேன்.

(Mr. Deputy Speaker in the Chair.)

DR. H. V. HANDE : Sir, on a point of information. Is it possible for the Government to get some Central Ministers here if necessary and convince them that the devastation caused by the floods and cyclone are very severe? Just like in Orissa we have had floods and cyclone and consequent heavy damages. If we can convince them, we can get assistance as early as possible.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் நேற்றைய தினம் வேறு வேலையாக வந்திருந்தபோது, அவர்களைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பினைப் பெற்றேன். தற்போது பெய்த மழையினால் ஏற்பட்டுள்ள சேதத்தினை எடுத்துக்கூறி, அதற்கு மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். நிதி உதவியும் கிடைக்கும் என்று நம்புகிறேன். இதற்கு முன்பு மத்திய அமைச்சர்கள் நாம் நிதி உதவி கேட்டதற்கு, இங்கே வந்து பார்த்தபின்புதான் உதவியளித்தார்கள். அப்போது இருந்த நிலைமை வேறு. அப்போது அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதன் காரணமாக இந்தியப் பிரதமரே இங்கே வந்து பார்வையிட்டுச் சென்று, நிதி உதவியும் செய்தார்கள். இப்போதும் அவர்களுக்குச் சந்தேகம் இருக்கும் என்றால் அவர்களை அழைத்துவந்து நிலைமையை விளக்கிக் காட்டுவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

DR. H. V. HANDE : The Government must convince them that it is so severe so that we can get Central assistance.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** டாக்டர் ஹாண்டே அவர்களுடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும். அவர்களுடைய கருத்து புறக்கணிக்கப்படவில்லை.

### (2) அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. இ. எஸ். தியாகராசன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றுவரும் ஆட்சியின்மீது நம்பிக்கைத் தெரிவிக்கும்





இந்தத் தீர்மானத்தின்மீது—இந்தத் தீர்மானத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அமைச்சரவையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று ஒரு தனி அமைச்சரவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முந்திய அரசுகளில் இந்த நிலை இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று தனி அமைச்சர் நியமிக்கப்பட்டதால், அவர்கள் மூலமாக தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லாம், பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் நல்ல பலனைப் பெற்று வருகிறார்கள். நானும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில், பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக டாக்டர் கலைஞர் அவர்களை முழு மனதுடன் பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றையதினம் அனைத்து இந்தியாவிலும் இல்லாத ஒன்றை தமிழகத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் பிளானிங் கமிஷன் ஒன்றை ஏற்படுத்தி, மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களைத் தீட்டி, அதன் மூலம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தமிழகத்திலே குடிநீர் வாரியம் ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் மாநிலம் முழுவதிலும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாதவண்ணம் நல்ல முறையிலே செயல்படுத்தி வருகிறார்கள். இந்தக் குடிநீர் வாரியத்தின் மூலம் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் தூய நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை இந்த ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் செலவிலே திட்டம் தீட்டி, அதை நம்முடைய தமிழகம் பூராவிலும் செயல்படுத்த, குறிப்பாக எல்லாக் கிராமங்களுக்கும் தூய நீர் கிடைக்கும் வண்ணம் செய்ய டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

அடுத்து, குடிசை மாற்று வாரியம். நம்முடைய மாநிலத்திலே குடிசைமாற்று வாரியம் அமைக்கப்பட்டு ஏழை எளிய மக்கள் பயனடையும் வண்ணம் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றி வருகிறார்கள் டாக்டர் கலைஞர் அவர்கள். ஏன்னெல்லாம்

மழை பெய்யத் தொடங்கிவிட்டால், குடிசைப் பகுதிகளில் வாழுகின்ற மக்களின் குடிசைகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, அல்லல் படுவார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் நகர சபைப் பள்ளிகளில் புகலிடம் அளிக்கப்படும். இப்போது அந்த நிலை இல்லை. குடிசைகள் எல்லாம் மாற்றப்பட்டு மாடி வீடுகளாக்கப்பட்டு அந்த மாடி வீடுகளிலே அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். அந்த ஏழை எளிய மக்கள் எல்லாம் உண்மையிலேயே டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுவார்கள். அவர்கள் சார்பிலே நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை நமது மாநிலத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதாவது முன்பு பஸ் முதலாளிகள் எல்லாம் ஏகபோக உரிமையாளர்களாக இருந்தார்கள். இப்போது அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அதாவது பத்து பஸ்களுக்கு மேல் எந்த ஒரு முதலாளியும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று நமது அரசு உத்தரவிட்டிருக்கிறது. இதைத் தமிழ்ச் சமுதாயம் என்றைக்குமே மறக்க முடியாது.

அது மட்டுமல்ல. பல போக்குவரத்துக் கழகங்களை சோழன், சேரன், பாண்டியன் என்ற பெயர்களால் நமது அரசு அமைத்து ஆயிரக்கணக்கான பயணிகளுக்கு வசதியாக செயல்பட்டு வருகிறது. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த நல்லதொரு அரசை எதற்காக ஒதுக்க வேண்டுமென்று நண்பர்கள் சொல்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அது மட்டுமல்ல. கடந்த ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி நடைபெற்ற சுதந்திர தின வெள்ளி விழாவின்போது நமது கலைஞர் அவர்கள் தியாகப் பரம்பரையினர்களுக்கு மானியங்கள் வழங்க முன்வந்தார்கள். அதற்காக இந்த அரசைத் தியாகிகளின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டின் விடுதலைக்காக யார் யார் போராடினார்களோ அவர்களைப் பாராட்ட முன்வந்தது இந்த அரசுதான். அதேபோன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது உயிர் நீத்தத் தியாகிகள் குடும்பத்தினர்களுக்கு





பொருளாதார உதவி செய்ய இந்த அரசு முன்வந்திருப்பதையும் நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் திருத்தணி எல்லைப் போராட்டத்தில் உயிர் நீத்த திருவெங்காடு கோவிந்தசாமி, பழனி மாணிகள்ளம் ஆகியோர் குடும்பத்திற்கும் இந்த அரசு பொருளாளாதார உதவி அளிக்க முன்வரவேண்டுமென நான் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, நெசவாளர்கள் பிரச்சினை பற்றி ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நெசவாளர்களுடைய எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டு இந்த அரசு சந்தானம் கமிட்டியை நியமித்திருப்பதை நான் வரவேற்கிறேன். தலைவர் சந்தானமும், மற்றும் உள்ள இரண்டு உறுப்பினர்களும் இப்போது நாடு பூராவும் சுற்றி நெசவாளர்களின் நிலையைக் கண்டறிந்து வருகிறார்கள். அவர்கள் அறிக்கை அளித்தவுடன், அவர்களுடைய சிபார்சுப்படி நெசவாளர்களுக்கு இந்த அரசு நல்ல பல சலுகைகளை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதுவும் அன்றி இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை காலத்தில் ஆறு, ஏழு கோடிக்கும் அதிகமாக கைத்தறித் துணி விற்பனை ஆவதற்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை எல்லாம் நாங்கள் பாராட்டுகிறோம். அதுவும் பத்து கோடிக்கு மேல் கைத்தறித் துணி விற்பனையாகாமல் தேங்கியிருந்த காலத்தில் இந்த பாராட்டத்தக்க நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்.

அதோடு இந்த நாட்டில் பசுமைப் புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறார்கள். முன்பு ஒரு தாலுக்காவுக்கு ஒரே ஒரு நிலவள வங்கி இருந்தது. ஆனால் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 350-க்கும் மேற்பட்ட நிலவள வங்கிகளைத் தோற்றுவித்திருக்கிறது. அவற்றின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை விவசாயிகளுக்கு அளித்து உதவி செய்து வருகிறது. குறிப்பாக இத்துறையில் சிறந்த முறையில் பணியாற்றி வருகிற கூட்டுறவு அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இப்படி எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், பி.டபிள்யு.டி., தொழிலாளர் நலம், மின்சாரத்துறை, உணவுத் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, குடும்பக் கட்டுப்பாடு என்பதாக இந்த அரசு எல்லாவற்றிலுமே நல்ல முறையில் 1967-க்கு முன்பு

இருந்ததைவிட நல்ல வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. அதோடு நமது முதல்வர் அவர்களுடைய பிறந்த நாள் விழா என்று எடுத்துக்கொண்டால் சென்ற ஆண்டு பிச்சைக்கார தொழு நோயர்களுடைய மறுவாழ்வுத் திட்டத்தை அளித்தார்கள், இந்த ஆண்டு கண் ஒளி இழந்தவர்களுக்கு கண் ஒளி அளிக்கும் திட்டத்தை அளித்தார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அளிக்கிற டாக்டர் கலைஞர் நீடூழி வாழ வேண்டும். இவர்களது ஆட்சிக்கு எங்கள் கட்சி முழு ஒத்துழைப்பையும் அளிக்கும், எங்கள் தலைவர் திரு. ம.பொ.சி. அவருடன் தோளுக்குத் தோள் கொடுத்து ஒத்துழைப்பார்கள் என்று கூறி, நம்பிக்கைத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

## (3) தன்னிலை விளக்கம்.

### திரு. இராம. அரங்கண்ணல் அவர்களின் தன்னிலை விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் பேரவை விதி 81-ன் கீழ் இந்த அவைக்கு ஒரு தன்னிலை விளக்கம் அளிப்பார்கள்.

**திரு. இராம அரங்கண்ணல் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் 7-ம் தேதி பேசிய திரு. ஜேம்ஸ் அவர்கள் என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றி நான் பேரவை விதி 81-ன் கீழ் இந்த அவைக்கு தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறேன்.

தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கிற குடிசை மாற்று வாரியப் பணியின் பொறுப்பில் இருக்கிறவன் நான். குடிசை மாற்று வாரியம் இன்றைய தினம் அகில இந்திய மாநிலங்களாலும் பாராட்டப் பெறுவதோடு உலகத்தில் உள்ளவர்களாலே கவனிக்கப் படுகிற அளவு இன்றைய தினம் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சிறப்பான பொறுப்பில் இருக்கிற என்னைப்பற்றி வெளியில் பலவிதமான செய்திகள் பரப்பப்படுவது என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில் ‘ இது எல்லாம் பொதுவாழ்வில் ஈடுபடுகிறவர்களுக்கு, அதுவும் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்ற ஆசையோடு பணியாற்றுகிறவர்களுக்கு ஏற்படுவது சகஜம்தான் ’ என்கிற முறையில் அலட்சியமாக இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர்





திரு. ஜேம்ஸ் இந்த மன்றத்தில் அந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிற காரணத்தினால் நடந்த விவரங்களை மன்றத்திற்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

21—1—72 அன்று நான் உடல் நலக் குறைவினால் இல்லத்தில் படுத்திருந்த நேரத்தில் மத்திய அரசின் அதிகாரிகள் வந்தார்கள். என்னிடம் உங்கள் வீட்டைச் சோதனை போடவேண்டும் என்று தெரிவித்தார்கள். நீங்கள் யார் என்று கேட்டேன். கஸ்டம்ஸ்—என்போர்ஸ்மெண்டு டைரெக்டரேட்டைச் சேர்ந்தவர்கள், இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள், எக்சைஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். இப்படி இந்த 4 இலாக்காவினரும் வந்து என் வீட்டைச் சோதனை போட வேண்டும் என்று சொன்னவுடன் எந்த இடத்தை வேண்டுமானாலும் சோதித்துக் கொள்ளுங்கள் என்பதாகச் சொல்லி என் மனைவியை அழைத்து சாவியைக் கொடுத்துவிடச் சொன்னேன். 12 மணி வரையில் சோதனையிட்டார்கள். பிறகு 12½ மணிக்கு என்னிடம் வந்து ‘ உங்களுக்கு பாங்கில் ஏதாவது சேப் லாக்கர் இருக்கிறதா ? ’ என்றார்கள். இண்டியன் ஓவர்சீஸ் பாங்கில் இருக்கும் டெபாசிட் சாவியையும், என்னுடைய செயலாளரையும் அனுப்பி அதனையும் சோதனை போட்டுக்கொள்ளச் சொன்னேன். அதனையும் சோதனையிட்டுவிட்டு 2 மணிக்கு வந்தார்கள். ‘ நீங்கள் பொறுப்பேற்றிருக்கிற குடிசை மாற்று வாரியத்தில் உங்களது அலுவலகத்தைச் சோதனையிடவேண்டும் ’ என்றார்கள். அப்போதுதான் எனக்குக் கொஞ்சம் வேதனை ஏற்பட்டது. குடிசைமாற்று வாரிய அலுவலகத்தை ஒரு திருக்கோயில்போல கருதிக்கொண்டிருப்பவன் நான். அந்தக் காரணத்தினால் அதனையும் சோதனையிடவேண்டுமா, அப்படிச் சோதனையிட உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள் என்று கேட்டேன். பிறகு இவ்வளவும் ஆன பிறகு அதனையும் சோதனை இடட்டும் என்று அனுமதித்தேன். முடிவில் அந்த இடத்தையும் சோதனையிட்டு வந்தார்கள். ஏதாவது கிடைத்ததா என்று கேட்டேன். அங்கும் ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். மாலை 5 மணிக்கு அவர்கள் புறப்படும்போது, ‘ கிடைத்தது என்ன ? ’ என்ற போது சில ரசீதுகள், சிங்கப்பூரில் இருந்த ஒருவர் எழுதிய கடிதம் தான் கிடைத்தது என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். ஆகவே அதுபற்றி நான் அலட்சியமாக இருந்தேன். மறுநாள் பத்திரிகையில் மத்திய அரசு

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 டிசம்பர் 11

அதிகாரிகள் என் வீட்டைச் சோதனையிட்டார்கள் என்கிற செய்தி பெரிதாக வந்தது. பத்திரிகைகளில் வருவதைப் பற்றி நாம் ஒன்றும் கண்டுகொள்ள வேண்டியதில்லை என்று விட்டுவிட்டேன். நம்மைப்பற்றி மக்கள் அறிவார்கள், நாடு அறியும் என்று அலட்சியமாக இருந்தேன். ஆனால், 6—5—72 அன்று இந்தியப் பாராளுமன்றத்தில் அங்கே பொறுப்பேற்றிருக்கிற ஒரு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தந்தார்கள். ஒரு உறுப்பினரைக் கேள்வி போடச் செய்து, அந்த உறுப்பினர் கேள்விக்குப் பதில் அளிப்பது போல் ஒரு பதில் அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் 90 இடங்களில் மத்திய அரசினுடைய அதிகாரிகள் சோதனையிட்டதாகவும், அதன் விளைவாக 92 லட்சம் ரூபாய் பதுக்கல் பணம் எடுக்கப்பட்டதாகவும் அந்த பதில் தரப்பட்டு, அந்த சோதனை யார் யாருடைய வீடுகளில் என்ற விவரம் கொடுக்கப்பட்ட நேரத்தில், அரங்கண்ணல் எம்.எல்.ஏ.-வினுடைய வீடு, அதே போல் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு நடிகையினுடைய வீடு என்று சொல்லப்பட்டது. அதை சென்னையிலே உள்ள பத்திரிகைகள் தலைப்பிட்டு ஏதோ என் வீட்டிலே 92 லட்சம் ரூபாய் கிடைத்தது என்று தொனிக்கச் செய்திகள் வெளியிட்டன. செய்தி வந்த நேரத்தில் கூட, நம் வீட்டில் எதுவும் எடுக்கவில்லையென்ற காரணத்தினால் அதை மறுக்கவேண்டியதில்லையென்று கருதினேன். ஆனால், பிறகு, என்னுடைய நண்பர், இங்கு முதலமைச்சர் பொறுப்பில் இருந்த ஒருவர் உங்களுடைய வீட்டிலிருந்து 12 லட்சம் ரூபாய் எடுத்துக்கொண்டு போய் விட்டார்களாமே. அது 12 லட்சம் ரூபாய் தானா, அதற்கு மேல் இருக்குமா என்று என்னைப் பார்த்துக் கேட்க, அப்படிப்பட்ட செய்திகள் பரவுவது தெரிந்த பிறகு நான் இதை மறுக்கவேண்டியது கடமை என்று கருதி, என்னுடைய சொந்தச் செலவில், எல்லாப் பத்திரிகைகளிலும் என்னுடைய வீட்டில் என்ன நடந்தது என்பதற்கான விளக்கத்தைக் கொடுத்தேன். நான் பத்திரிகைகளில் விளக்கம் கொடுப்பது மத்திய அரசினுடைய அதிகாரிகளுக்குக் கொஞ்சம் கலக்கத்தை உண்டு பண்ணும் என்று எனக்குத் தெரியும். இந்தக் காரியத்தைச் செய்கின்ற டில்லி அரசுக் கட்சிக்கும் அது அதிர்ச்சியை உண்டுபண்ணும் என்றும் எனக்குத் தெரியும். இருந்தாலும், அந்த விளக்கத்தைக் கொடுத்தேன். என்னுடைய வீட்டிலிருந்து என்னென்ன எடுத்தார்கள் என்பதை இந்த



1972 டிசம்பர் 11] [திரு. இராம. அரங்கண்ணல்]

நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன். சோதனையிட்ட பிறகு ஒரு முச்சாலிகா கொடுத்தார்கள். அதிலே,

I, Sri Thiageswaran, Assistant Enforcement Officer, Enforcement Directorate, Sastri Bhavan, Madras searched the office of Thiru Rama Arangannal, Chairman, Slum Clearance Board at Madras. As a result of search, nothing were seized. The search was made between 14 hours and 15 hours without causing damage or loss to property.

என்றிருக்கிறது. இது, என்னுடைய ஆபீசை சோதனையிட்டு எதுவும் நாங்கள் எடுக்கவில்லை என்பதற்கு அவர்கள் கொடுத்த விவரமாகும். அதே போல், என்னுடைய வீட்டை சோதனையிட்ட நேரத்தில் . . .

THIRU R. PONNAPPA NADAR : May I ask whether the Hon. Member is submitting all the papers to the Chair so that we may also have an opportunity of perusing them ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு எந்தவிதமான சந்தேகம் வந்தாலும் இந்தப் பேப்பர்களை அவர்களுக்குத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். என்னுடைய வீட்டை அவர்கள் சோதனையிட்டு, ரூ. 10 லட்சம் என்று சிலபேர் சந்தேகப்படுகிறார்கள், ரூ. 12 லட்சம் என்று சிலபேர் சந்தேகப்படுகிறார்கள், இல்லையில்லை, ரூ. 92 லட்சம் என்று சிலபேர் சந்தேகப்படுகிறார்கள். அவர்களுக்காகத் தெரிவித்துக் கொள்கிறேன், அன்றையதினம் என்னுடைய வீட்டில் எவ்வளவு பணம் இருந்தது, எவ்வளவு எடுத்தார்கள் என்று அதிகாரிகள் அளித்துவிட்டுச்சென்ற முச்சலிகா விவரத்தைக் கூறுகிறேன்.

The following articles were also found at the premises. Cash of Rs. 60 not seized.

சாதாரண ரூபாய் ; 60 ரூபாய்கள், not seized.

Jewellery valued about Rs. 3,000, silver articles valued at Rs. 1,000 in the residential quarters and Rs. 2,000 kept in locker in Indian Overseas Bank, Mount Road, Branch Office, record No. 615--not seized.

இதுதான் என்னுடைய வீட்டிலிருந்தது. அன்றையதினம் என்ன இருந்தது என்பதற்கான விளக்கம். அவர்களே கொடுத்தது. தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியின்பேரில் நான்

காண்பிக்கிறேன். (அவையினருக்கு இரண்டு தாள்களைக் காண்பித்தார்கள்) அவர்களே கொடுத்தது. கடைசியாக, அன்னியச் செலாவணி சம்பந்தமாக அவர்கள் கொடுத்த முச்சலிகா, என்ன எடுத்தார்கள் என்பது. ஒரு கடிதமும், சில பில்களும் எடுத்தோம் என்று அவர்கள் கொடுத்த தகவல் இது....

**திரு. ஜே. ஜேம்ஸ் :** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கைப்பற்றிய அந்த லெட்டரையும் அந்த பில்களையும் கூட சட்ட மன்றத்தில் வைப்பதற்கு உறுப்பினர் இணங்குவாரா ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** அவர்கள் கைப்பற்றியது அவர்களிடம் இருக்கிறது. உறுப்பினர்களைவிட, உங்களைவிட எனக்கு நம்பிக்கையானவர்கள் யாரும் இல்லை. எதை நீங்கள் கேட்டாலும் நான் வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். என்னைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் இந்த அரசுக்கும் இந்த அரசினுடைய தொண்டனாகிய எனக்கும் ஒரு அவமானத்தைச் செய்யவேண்டுமென்று நினைக்கிற சிலருக்காக இந்தக் கொடுமையை உங்கள் மத்தியிலே சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நான் பத்திரிகையிலே அறிக்கை கொடுத்தபிறகு, 'இந்த ரசீதுகளை நாங்கள் எடுத்தோம், இந்த ரசீதுகளின்படி சாமான்கள் வாங்கப் பட்டன சிங்கப்பூரிலே, ரசீதுகளின்படி ரூ. 5,000-க்கு சாமான்கள் வாங்கியிருக்கிறீர்கள்' என்று என்மீது குற்றம் சுமத்தித் தகவல் வந்தது. அந்த ரசீதுகள் என்னுடைய வீட்டில் இருந்தது உண்மை, பெட்டியிலே கிடந்தது, அவர்கள் எடுத்துக்கொண்டு போனது உண்மை. எந்தவிதமான சாமான்களையும் நாங்கள் கொண்டுவர வில்லை. என்னுடைய மனைவியையும் நான் அழைத்துக்கொண்டு போனேன். சிங்கப்பூரிலே ஏராளமான கழகத் தோழர்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். என்னுடைய உறவு உறுப்பினர்கள் பொறுப்பான இடத்திலே இருந்தார்கள். என்னுடைய மனைவி உறவுக்காரர்களுடன் இருந்து, அவர்களுடைய வேலையைப் பார்த்துக் கொண்டார்கள். என்னுடைய வேலையை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு நிறையக் கழகத் தோழர்கள் பொருள்கள் கொடுத்தார்கள். ஏர்போர்ட்டுக்குக் கூட கொண்டுவந்து கொடுத்தார்கள். ஆனால், எனக்கு விதிகள்





தெரிந்த காரணத்தினாலே, இவைகளையெல்லாம் எடுத்துப் போகக் கூடாது என்று தடுத்து, அந்தச் சாமான்களை எல்லாம் விட்டு விட்டு, எந்தவிதமான பொருளும் இல்லாமல், எனக்கு வேண்டிய துணிமணிகள், எழுதுவதற்குப் பேனா இவைகளுடன் இந்த ஏர்போர்ட்டுக்கு வந்து கஸ்டம்ஸ் செக்குக்கு வைத்தேன். வீட்டு வசதி வாரியத்திற்கும், குடிசை மாற்று வாரியத்திற்கும் பயன்படக் கூடிய பெயிண்டுகள், சில பாட்லாக்குகள் ஆகியவற்றை எனக்குக் கொடுத்தார்கள். என்னுடைய பையனுக்கு ஒரு சைக்கிள் கொடுத்தார்கள். இவைகளையெல்லாம் கப்பலிலே போட்டு, அதற்குரிய டியூட்டியையும் நான் கஸ்டம்சுக்குக் கட்டி எடுத்துக் கொண்டேன். ஆனால், வீட்டில் இருந்த ரசீதுகளை வைத்துக் கொண்டு நான் அன்னியச் செலாவணி மோசடி செய்தேன் என்று அவர்கள் நோட்டீஸ் கொடுத்தார்கள். ரூல் 41 பிரகாரம் அங்கே பணத்தை வாங்கி இங்கே கொண்டுவந்து கொடுத்ததுதான் தப்பு. நான் யாரிடமும் அந்த ரூ. 5,000 கூட வாங்கவில்லையென்று சொன்னேன். என்னுடைய வீட்டை எந்த அதிகாரி சோதித்தார்களோ, என்னைக் கூப்பிட்டு எந்த அதிகாரி சோதித்தார்களோ, அவர்களே விசாரணையும் நடத்தினார்கள். தீர்ப்பு வழங்கத் தாமதமாக இருந்தார்கள். அந்த நேரத்தில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும். மேலிடத் தலையீட்டின் பேரில் எனக்கு ரூ. 5,000, என்னுடைய மனைவிக்கு ரூ. 5,000 என்று அபராதம் போட்டு நோட்டீஸ் கொடுத்தார்கள்.

THIRU M. A. LATHEEF : Under what principle of law the concerned officers raided the House of the hon. Member Thiru Arangannal? When goods were seized, when articles were seized under what provision of law, they seized the goods and took away the goods and gave voucher to the concerned Member. Was the particular specific provision of law under which they did this intimated to the hon. Member and if so whether it was given to the Member in writing?

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் உறுப்பினர் கேட்ட கேள்வி நல்ல கேள்விதான். அது கூட, கோர்ட்டுக்கு விவகாரம் வருமானால் விவாதிக்கப்படக்கூடிய விஷயம்தான். என்னுடைய வீட்டை சர்ச் செய்வதற்கு அவர்கள் முறைப்படி நடக்கவில்லையென்று என்னு டைய வழக்கறிஞர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது

அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டிய விஷயம். ஆனால், அவர்கள் சொன்ன மாதிரி எந்தவிதமான கூட்ஸ்ஸும் எடுக்கவில்லை. கான்ட்ராபான்ட் கூட்ஸ், சட்டத்திற்கு விரோதமாக வைத்திருந்ததாக எதையும் எடுக்கவில்லை. துருவித் துருவிப் பார்த்தும் எந்த விதமான பொருளையும் அவர்கள் எடுக்கவில்லை. எந்தவிதமான பொருளும் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: May I know if the warrant of search was given to the hon. Member?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எந்தெந்த அதிகாரிகள் வந்தார்கள் என்று சொல்வதற்கு அடையாளம் காட்டுவதற்கு, அவர்களுடைய கார்டுகளை, தங்களிடம் காட்டினார்களா? அவர்களெல்லாம் அதிகாரம் பெற்றவர்கள் என்பதை தாங்கள் உணர்ந்தீர்களா? இதற்குப் பிறகுதான் சர்ச் நடந்ததா?

திரு. இராம. அரங்கண்ணல்: இதுபோன்ற விஷயங்களில் நுணுக்கமாகக் கேட்கவேண்டுமென்ற எண்ணம்கூட எனக்கு இல்லை. எனக்கு அப்பொழுது டெம்பரச்சர் இருந்தது. நான் படுக்கையில் இருந்தேன். வீட்டை சோதனையிடப் போகிறேன் என்று சொன்னவுடன் அந்த தாள்களைக் காட்டுங்கள், வாரன்ட்டைக் காட்டுங்கள் என்று நான் சொல்லவில்லை. மடியிலே கனம் இருந்தால்தானே பயம் என்று நான் அலட்சியமாக, குழந்தைகளையும் மனைவியையும் கூப்பிட்டு எங்கேயும் போகாதீர்கள் என்று சொன்னேன்.

பிறகு அபராதம் போடப்பட்டது. நான் டெல்லியிலே இருக்கிற டிபார்ட்மெண்டிற்கு அப்பீல் செய்தேன். அபராதம் கட்டக்கூடிய சூழ்நிலையில் இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்பதை விசாரித்துப் பார்க்க வேண்டுமென்று நான் அப்பீல் செய்தேன். அப்பீல் செய்வதற்குக் கூட நாற்பத்து ஐந்து நாட்கள் உண்டு. ஆனால் நாற்பதாவது நாளில்தான் எனக்குச் சொன்னார்கள், நீங்கள் அபராதத்தைக் கட்டினால்தான் அப்பீலை எடுப்பார்கள். இல்லாவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் வசூல் செய்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். என்னிடம் வழக்கறிஞர் சொன்ன காரணத்தினால் நான் அந்தத் தொகையை முன்பணமாகக் கட்டிவிட்டு—அபராதம் அல்ல—டெபாஸிட் ஆகக் கட்டிவிட்டு அப்பீலுக்குப் போயிருக்கிறேன்.





நான் இந்த விளக்கத்தைச் சொல்வதற்குக் காரணம் நாணயமாகவும், எடுத்த காரியத்தை நன்றாகச் செய்யவேண்டுமென்ற ஆசையோடும் நடந்துவருகிற நேரத்தில் அதனை காரணமாக பொறாமை கொண்டவர்கள் ஏதாவது களங்கம் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்கள் வேண்டுமென்றே பழியைச் சுமத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அரசியல் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் அது ஒரு திறந்த புத்தகம். குடிசை மாற்று வாரியப் பணிகளுக்காக 7 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். ஏதாவது ஒரு குற்றச்சாட்டை குடிசை வாரியம் தொடர்பாக இங்கே உள்ள உறுப்பினர் எடுத்துச் சொன்னால் நான் தலைவணங்கி அதற்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கான்ட்ராக்டரையும் எனக்குத் தெரியாது. எவ்வளவு வேண்டுமானாலும் விளக்கங்களை நான் இன்னும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். பொதுவாழ்வில் முப்பது ஆண்டுகளாக இருக்கிற நிலையில் யாரோ ஒருவரிருவர் இந்த அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும், எனக்குக் கெட்ட பெயரை உண்டுபண்ண வேண்டும், இந்தக் காரியங்களுக்கு கெட்ட பெயரை உண்டுபண்ண வேண்டும் என்ற அளவிலேதான் இப்படிக் கோளாறையும் கேவலமான அரசியலையும் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நண்பர் அரங்கண்ணல் அவர்கள் விரிவான விளக்கத்தைக் கூறினார்கள். அன்றைய தினம் நான் கூறியது இராம. அரங்கண்ணல் அவர்கள் அபராதம் கட்டியிருக்கிறார்கள், அப்படிப்பட்ட சூழ்நிலையில் பதவியை விட்டு விலகாததற்குக் காரணம் என்ன என்று கேட்டேன். இவ்வளவு ஆனபிறகும், தாங்கள் நிரபராதி என்று கூறுகிறார்கள், இது ஒரு பெரிய சுமை என்றும் கூறினார்கள். இந்த அரசாங்கத்தின் பெயரைக் காப்பாற்ற களங்கத்தைப் போக்க அவர்கள் தங்களுடைய பதவியை இன்னும் இராஜினாமாச் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கேட்கிறேன். யார்மீதும் பழி சுமத்தவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது....

THE HON. THIRU SI. PA. ADITANAR: On a point of order, Sir. When a personal explanation is given under rule 81 there should be no debate on it. Kindly enforce that rule.

[1972 டிசம்பர் 11

MR. DEPUTY SPEAKER: Mr. James can now clarify his point.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் மீது பழிசுமத்தவேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது, என்னுடைய கட்சிக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கோ என்னுடைய கட்சிக்கோ அவர்கள்மீது களங்கம் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதை அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அன்று திரு. அரங்கண்ணல் அவர்களைப் பற்றி எழுப்பிய ஒரு பிரச்னைக்கு திரு. அரங்கண்ணல் அவர்கள் இங்கே விளக்கத்தை அளித்தார்கள். அவர்களுடைய விளக்கத்தை முழுமையாகக் கேட்டபிறகும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் ஏன் அவர்கள் பதவியை ராஜிநாமா செய்யவில்லை என்று கேட்பது எனக்கு வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது. அவர்கள், தன்னுடைய இல்லத்திலே நடந்த சோதனையில் என்ன என்ன பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று சொன்னார்கள். எதுவும் கைப்பற்றப்படவில்லை, வெளியே 20 லட்சம், 30 லட்சம் என்று பேசப்பட்ட வதந்திகளை நம்புகிறவர்களுக்கு நல்ல விடையாக வெறும் 60 ரூபாய்தான் கண்டுபிடித்தார்கள் என்றும் அதையும் அவர்கள் கைப்பற்றவில்லை என்றும் தெளிவாகச் சொன்னார்கள். சில ரசீதுகள் இருந்ததாகச் சொன்னார்கள். அந்த ரசீதுகளிலே ஏற்பட்ட டெக்னிக்கல் எரர்களை வைத்து அவர்கள் டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் என்ற முறையிலே எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொன்னார்கள். அவர்கள் அப்பீல் செய்கிற நேரத்திலே அபராதம் கட்டாவிட்டாலும். டெபாஸிட் கட்டிவிட்டு அதாவது முன்பணம் கட்டிவிட்டு அப்பீல் செய்திருக்கிறார்கள். இது ஒன்றும் இந்தியாவிலேயே நடைபெறாத நிலைமை இல்லை. சில நேரங்களிலே அரசியல்வாதிகள் இப்படியும் தாக்கப்படுகிறார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு இதைப்பற்றி உணர்த்தியவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் அறிவிக்காமல் இருந்திருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கல்யாணசுந்தரம் அவர்களும் தங்கமணி



1972 டிசம்பர் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

அவர்களும் கொடுத்த அந்தப் பட்டியலில் அரங்கண்ணல் அவர்களுடைய விவகாரமும் வருகிறது. 1955 அல்லது 1956-ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பெருந்தலைவர் திரு. எஸ். ஏ. டாங்கே அவர்கள் இதுபோன்ற ஒரு சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 4 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் அளவில் அபராதமும் கட்டியிருக்கிறார், அதற்காக அவர் பொறுப்பிலிருந்தோ அல்லது அவருடைய கட்சியிலிருந்தோ பொறுப்பை விட்டுவிடவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. வேண்டுமென்று சர்க்காரையோ அல்லது யாரையோ ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் எந்தக் காரியமும் செய்யப்படவில்லை. வாதத்திற்காக அப்படியே வைத்துக்கொண்டாலும் தங்களுடைய வீட்டிலே தாங்கள் அகப்பட்டுக்கொள்ளவேண்டுமென்று எவ்வளவு கைதேர்ந்த எத்தர்களும் துணியமாட்டார்கள். மிகத் தெளிவான முறையிலே திரு. அரங்கண்ணல் அவர்கள் விளக்கம் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு மேலும் களங்கம் கற்பிப்பது நல்லது அல்ல. மேலும் இது வழக்கிலே இருக்கிற காரணத்தினால் இதற்கு மேலே பேசாமல் விட்டுவிடவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அந்த ரசீதிலே 25-ஆம் தேதியிடப்பட்டிருக்கிறது. ஆனால் நான் சிங்கப்பூர் போனது 30-ஆம் தேதிதான். அந்த அப்பீல் கூட டிபார்ட்மெண்ட்டல் அப்பீல் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் இரண்டு மூன்று பேர்கள் பேசுவதற்கு இருக்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பேசட்டும்.

### (2) அமைச்சரவை மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையின்மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை உண்டு என்பதை நிரூபிக்கும் வண்ணம் இந்த அவையில் வாதங்கள் நடந்திருக்கின்றன. அரசாங்கத்தினுடைய தவறுகளையோ அல்லது ஆட்சியினுடைய தவறுகளையோ ஏதாவது இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டுவதற்கு இந்த மன்றத்திற்குத்தான் முழு அதிகாரம்

இருக்கிறது என்ற ஜனநாயகப் பாரம்பரியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற அரசு இந்த அரசு என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு யாரோ அதிலே தலையிட்டு அதன் மூலமாக இந்த அரசைக் கலைத்துவிடலாம் என்று கருதுகிற ஜனநாயகப் பாரம்பரியம் தமிழ்நாட்டிலே சில அரசியல் கட்சிகளுக்கு இருப்பது வருந்தத்தக்கது ஆகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட நாம், இந்த மன்றம்தான் மாநில அரசுக்குப் பூரண அதிகாரத்தை வழங்குவது, இந்த மன்றம்தான் மாநில அரசிற்குப் பொறுப்பு வாய்ந்தது என்ற ஜனநாயகப் பண்பை ஒத்துக் கொள்கிற ஜனநாயகப் பாரம்பரியத்தில் வந்தவர்களும், தேசிய பாரம்பரியத்தில் வந்தவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்பதும் எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த மன்றத்தை முழுமையாகப் பயன்படுத்தி, வாதங்களை வைத்து, கேள்விக் கணைகளைத் தொடுத்து செய்திகளை வெளிப்படுத்தும் பாரம்பரியம் தான் பாராளுமன்றப் பாரம்பரியம் என்று நான் கருதுகின்றேன்.

ஆட்சியிலே உள்ளவர்களின்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் முறை இரண்டு விதமாக இருக்கலாம். இன்றைக்கு ஒரு மாயையான எண்ணம், அரசாங்கத்தில் பொறுப்பேற்றிருப்பதால், ஆட்சியில் உள்ள கட்சியில் இருப்பதால், சொத்தே இருக்கக் கூடாது, இருப்பதை இழந்துவிட வேண்டுமென்ற ஒரு தவறான கருத்தைப் பரப்பி வருவதை நாம் உணர வேண்டும். இந்திய நாட்டிலேயே, இந்த அரசுதான் முதன்முதலாக இப்படிப்பட்ட சந்தேகங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று ஒரு முறையைப் பின்பற்றி, சொத்துக்கணக்கை இங்கே வைத்தோம். சொத்துக் கணக்கை வைத்தோம் என்பதாலேயே, மந்திரியானவுடன் அல்லது சட்டமன்ற உறுப்பினராக ஆனவுடன் தங்கள் சொத்துக்களையெல்லாம் ஏலம் விட்டுவிட வேண்டுமென்று யாராவது முடிவெடுத்தால் அதற்காக வருத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அதை வைப்பதன் நோக்கம், தங்கள் சக்திக்கு அப்பாற்பட்டு சொத்து சேர்க்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் இந்த மன்றத்தில் விவாதிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அதற்கு விளக்கம் சொல்லி, தவறான முறையில் சேர்க்கவில்லை என்று சொல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. இதுவொரு வகை. அடுத்தவகை, அரசாங்கத்தின்மீது குற்றச்





சாட்டுக்களைச் சாட்டும்பொழுது, அதிகாரத்தை முறை மீறிப் பயன்படுத்தி, தவறான முறையில் சலுகைகள் காட்டிச் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன, அதன்மூலம் சிலர் பயன்பெற்றிருக்கிறார்கள், அதன் பிரதிபலனைக் கருதி தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று குற்றம் சாட்டுவது இரண்டாவது வகை. இந்த இரண்டு வகைகளைத் தவிர பொதுவாகக் குற்றச்சாட்டுகளைச் சாட்டுவது பொருள் அற்ற வாதம் என்பதைக் கூறவிரும்புகிறேன்.

வெளியே சென்று நீதி விசாரணை, நீதி விசாரணை என்று சொல்கிறார்கள். இதிலே அவர்களுக்கு ஒரு இன்பம். அதைக் கேட்பதிலே ஒரு இன்பம். ஆனால் அதன் பயன் என்ன? 'கமிஷன் ஆஃப் என்கொயரி' என்று சட்டம் இருக்கிறது. அது பாராளு மன்றத்தில் போடப்பட்ட சட்டம். அதன் அடிப்படையில் மாநில அரசு போடுவதற்கும் உரிமை உண்டு, மத்திய அரசு போடுவதற்கும் உரிமை உண்டு. மாநில அரசு போட்டால் மத்திய அரசு போட முடியாது, மத்திய அரசு போட்டால் மாநில அரசு போட முடியாது. இந்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டப்படி செல்லுமா? அது வேறு விவகாரம். இன்றுள்ள முறையில் அரசியலமைப்புச் சட்டப்படி, மாநில ஆட்சியின் எல்லைக்குள்ளே வரும் செயல்களில், அதிகார வரம்பில், திட்டங்களில் மத்திய சர்க்கார் அந்தப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் தலையிடுமா என்பது வாதப்பிரச்னை, சட்டப்பிரச்னை. நான் அதற்குள் நுழையவில்லை. நாங்கள் எதையும் சந்திக்கத் தயார். ஆனால் நீதி விசாரணை, நீதி விசாரணை என்று மிரட்டுவது, அதுதான் அரசியல் என்று கருதுவது தவறு.

ஏன் நாங்களே கமிஷன் ஆஃப் என்கொயரி போடக்கூடாது? இப்படி சிலருக்குச் சந்தேகம். உங்களைத் தப்பித்துக் கொள்வதற்காகவாவது நீங்கள் ஏன் போடக்கூடாது என்று இரக்கத்தோடு சொல்கிறார்கள். இப்படிச் சொல்பவர்கள் மீது நம்பிக்கையில்லை, இருந்தாலும் போடுங்கள் என்று கேட்பவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் இந்த கமிஷன் ஆஃப் என்கொயரியைப் போட்டால், அவரைப் போட்டுவிட்டீர்கள், இவரைப் போட்டுவிட்டீர்கள், இன்னொருவரைப் போட்டிருக்கலாம் என்று சொல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்த மாநிலத்தில் உள்ளவர் வேண்டாம், வேறு மாநிலத்திலுள்ளவரைப் போடுங்கள், வேறு மாநிலத்திலிருந்து

போட்டால் வேறு நாட்டிலிருந்து போடுங்கள் என்று சொல்லக் கூடிய வாய்ப்பு ஏற்படும், கமிஷன் ஆப் என்கொயரி வைத்தால், கமிஷன் ஆப் என்கொயரியின் மதிப்பு என்ன, ஒன்றும் இல்லை, சட்டப்படி பலன் என்ன, ஒன்றுமேயில்லை என்று இப்படி வாதிட வாய்ப்பு ஏற்படும். ஆகவே நாங்கள் சொல்கிறோம், உங்களுடைய குற்றச்சாட்டுகளை இன்றைக்கே மக்கள் மன்றத்திலே வைக்கலாம், நாங்களே நீதிமன்றத்திற்குச் செல்கிறோம் என்று சொன்னால், சிலர் சொல்கிறார்கள், நாங்கள் அந்த வலையில் விழமாட்டோம், முதலமைச்சர் சொன்ன வலையில் விழமாட்டோம், வெளியே சொல்ல மாட்டோம் என்று சொல்கிறார்கள். என்ன வலை என்றே எனக்குப் புரியவில்லை. இது ஒரு அருமையான வாய்ப்பு. முதல் கட்டமாக மாவட்ட நீதிமன்றங்களுக்குச் செல்லலாம், அப்பொழுதும் நம்பிக்கை வரவில்லையென்றால் ஹைகோர்ட்டுக்குச் செல்லலாம், அப்படியும் நம்பிக்கை வரவில்லையென்றால் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லலாம். டெல்லியிலே அன்பு! சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லலாம். இப்படி மூன்று மன்றங்களிலேயும் செல்லலாம். எனவே நாங்கள் சொல்லும் இந்த முறையைப் பின்பற்றி வெளியே மக்கள் மன்றத்தில் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டால் மூன்று வாய்ப்புகள் கிடைக்கும். அப்படியில்லாமல், நீதி விசாரணைக்குத் தயாராக இல்லை, பயப்படுகிறோம் என்று சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்வது? ஆகவே பொறுப்புள்ள வழியில் ஜனநாயக முறையைப் பின்பற்றத் தயங்குவது தவறாகும் என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே ரகசியம் ரகசியமாக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, இரண்டு கட்சிகளின் சார்பில் அறிக்கைகள் பிரதம மந்திரி பீடத்திலும், குடியரசுத் தலைவரிடத்திலும் தரப்பட்டன. அது அத்தனையையும் சொல்ல எங்களுக்கு வாய்ப்பில்லை. ஒருசில வற்றிற்குப் பதில் சொல்வதற்கு வாய்ப்பு தந்த நண்பர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஒரு அரசின் மீது குற்றம் சுமத்துவதற்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கேள்விகள் மூலம் எழுத்து தகவலைப் பெறலாம். அந்த உரிமை இருக்கிறது. அதில் திருப்தி இல்லை என்றால் சபைத் தலைவரின் மூலமாக இன்னும் பல



தகவல்களைப் பெறலாம். ஒரு குற்றச் சாட்டைச் சாட்டியபொழுது, சபைத் தலைவரை நீதிபதியாக வைத்து, எதிர்க் கட்சித் தலைவரையும் அழைத்து விளக்கம் தந்து வெற்றிபெற்ற பாரம்பரியம் இந்த முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. ஆகவே அந்த வாய்ப்பைப் பெறுவதற்கு இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்களுக்கு முழு உரிமை உண்டு. அதைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் திடீரென்று குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதா? ஒரு தனி நபருக்கு ஒரு ஊரிலே பெரிய தொழிற்சாலை வைக்க அனுமதியை இந்த அரசு தந்தது, அமைச்சர் தந்தார் என்றும், எதற்காகத் தந்தார், அதற்கான காரணம் என்ன என்றும் சொல்லும்பொழுது, அந்த அமைச்சருக்கு ஒரு உறவினர்—அந்த உறவினருக்கு விளக்கம் சொல்கிறார்கள், இப்படியிப்படி சம்பந்தப்பட்ட ஒரு உறவினர்—அந்த உறவினருக்கு அந்தத் தொழிற்சாலையில் வேலை கொடுப்பதற்காக இந்தச் சலுகை தரப்பட்டது. என்ன வேலை? 1,800 ரூபாயிலே வேலை. 1,800 ரூபாயோடுகூட ஏர் கண்டிஷன் பங்களா, ஏர் கண்டிஷன் வீடு இதையெல்லாம் தருவதற்காக லைசென்ஸ் தரப்பட்டது என்பது குற்றச்சாட்டு. இதைப்பற்றிச் சட்ட மன்றத்தில் கேள்வி போட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம். அல்லது அந்த ஊருக்கே சென்று பார்த்துவிட்டு வந்து வாதித்திருக்கலாம். அப்படி எதையும் செய்யாமல் குற்றச் சாட்டுகளை வைக்கிறார்கள், விவரத்தை நாங்கள் தேடித்தேடிப் பார்த்து விசாரிக்கிறோம். கடைசியாக அமைச்சரின் உறவினருக்கு 1,800 ரூபாயிலே வேலை கொடுக்க, மர்மப் பேழையிலே சொல்லப்பட்ட அந்த அமைச்சரின் சொந்தக்கார நபருக்கு வயது மூன்று. அதைவிட இன்னொரு வேடிக்கை என்னவென்றால், அந்தத் தொழிற்சாலையில் 500 ரூபாய்க்குமேல் எந்த வேலையாளரும் வைக்கப்படவில்லை. ஆகவே இதைக்கூட சாதாரண அறிவோடு சிந்திக்க மறுப்பவர்கள் ஏதோ பேழை, பெட்டகம், குற்றச் சாட்டுகள், ஊழல் என்று சொன்னால், அதை வைத்துக் கொண்டு முதலமைச்சருக்குச் செல்வாக்கே அழிந்துவிட்டது, வெறுப்பு வளர்ந்து விட்டது, வெளியே அனுப்பிவிடலாம் என்று சொல்வது சரியல்ல.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister for Law whether he is opening the Pandora's Box in this Assembly?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எனவே, இப்படிச் சொல்லுகின்ற காரணத்தால் நான்கு கோடித் தமிழ்ச் சமுதாயமும் தொடர்ந்து தங்கள் பெரும்பான்மையான ஆதரவை எங்களுக்கும், முதலமைச்சருக்கும் தருமே தவிர கொஞ்சம்கூட அழித்துவிட முடியாது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தாவிச் சென்று விடுவார்கள் என்று இதைச் சொல்லைச் சொல்ல இன்னும் போனவர்கள் திரும்பி வருவார்களே தவிர இங்கிருந்து போக மாட்டார்கள். இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்லும்பொழுது திடீரென்று ஒரு அறிக்கை. ஒரு அமைச்சருக்கு 1937 ஆம் ஆண்டு 3,500 ரூபாயிலே வாங்கிய வீடு, அதன் பெயர் இது, இந்த ஊரிலே இருக்கிறது என்று வருகிறது. குற்றச்சாட்டு என்னவென்றால், அந்த வீட்டை அமைச்சரானதற்குப் பிறகு ஏராளமாகப் பணத்தைச் செலவழித்து, கள்ளப் பணத்தைக் கொண்டு, லஞ்சம் வாங்கியதைக் கொண்டு அந்த வீட்டைப் பெரியதாகக் கட்டி விட்டார்கள். இது குற்றச்சாட்டு. சாதாரண அறிவுள்ளவர்கள்கூடச் செய்யக்கூடிய முறையில் அந்த ஊரைப் பார்த்துவிட்டு, அந்த வீதியைப் பார்த்துவிட்டு, வீட்டின் பெயரைப் பார்த்துவிட்டுச் சொல்லியிருக்கலாம். என்னைப் போன்றவர்கள் அதை நம்பவில்லை. ஆனால் நமது முதலமைச்சரவர்கள் அதை எப்படியாவது விசாரிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். எனவே நாங்கள் விசாரித்தோம். இப்பொழுது சில நாட்களுக்கு முன்பு அந்த வீடு எப்படியிருக்கிறது என்பதற்குப் படம் எடுத்தோம். 25—11—72 அன்று எடுக்கப்பட்டது. 3,500 ரூபாய்க்கு வாங்கிய அந்த வீடு இப்பொழுது ஏராளமான பணம் போட்டுக் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே என்று நாங்கள் படம் எடுக்கச் சொன்னால் இன்னும் அது கூரை வீடாகவே இப்படியிருக்கிறது. (சிரிப்பு) படித்தேன், ரசித்தேன், சிரித்தேன் என்று சொன்னார்கள். நாங்களும் அப்பொழுது விழுந்து விழுந்து சிரித்தோம். இப்பொழுது நீங்களும் சிரிக்கிறீர்கள். இந்தச் சிரிப்பைக் கண்டு ஆத்திரப்படாதீர்கள். எத்தனை நாட்களுக்கு இருக்கும் இந்தச் சிரிப்பு என்ற ஆத்திரம் தொனிக்கிறதே யொழிய, அவதூறை, பொய்யை, முரண்பட்ட செயலை, வேண்டுமென்றே, பதவி ஆசையின் காரணமாக, தான் என்ற அகங்காரத்தின் காரணமாக, தன்னுடைய கட்சியில் தனக்குச் செல்வாக்கு இல்லையே என்ற





அகங்காரத்தின் காரணமாக, நான்தான் பதவியிலே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக ஒருவர் செய்தால் அதற்குச் சில அரசியல் கட்சிகளும், ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள கட்சிகளும் துணைபோனால் நாங்கள் எப்படி அழைப்பது? இதுதான் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான வரைமுறையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால் நாங்கள் எங்களுடைய ஆட்சியில் தலைவரைப் பொறுத்த வரையில் இருதய சுத்தியோடு இருக்கிறோம். எந்தக் குற்றச் சாட்டானாலும் உடனடியாகப் பரிசீலித்து முடிவுகள் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். சமயநல்லூர் விவகாரத்தைப் பற்றி அன்றைக்குப் பேசப்பட்டு ஒருசில தகவல்களைத் தந்தோம். திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் சில கருத்துக்களைக் கேட்டார்கள். அதிலே பெரிய கருத்து இல்லை. இருந்தாலும் முதலமைச்சரவர்கள் எப்படியாவது அதையும் சேகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஏதோ சமயநல்லூர் தெர்மல் ஸ்டேஷனை இரண்டு கோடிக்கு விற்று விட்டார்கள் என்று சொல்லப்பட்டது.

அவை 1951-ல் வாங்கப்பட்ட பொருள்கள். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்ட பொருள்கள். எல்லாப் பொருள்களும் சேர்ந்து அப்போதைய மதிப்பு 111.27 லட்சம் ரூபாய். எந்த முறையில் டிப்ரிசியேஷன் போடுவது என்று ஆடிட்டரைக் கேட்டதற்கு 'ஸ்ட்ரெயிட் லைன் மெதட்'-ல் போட வேண்டுமென்று கூறினார். அந்தப் பொருள்களின் விலையில் 10 சதவிகிதத்தை முதலில் கழித்து விடுகிறார்கள். மீதி இருப்பதை வைத்து எத்தனை ஆண்டுகள் வயது என்று நிர்ணயிக்கிறார்கள். 25 ஆண்டுகள் என்றால் 25-ஆல் வகுக்கிறார்கள். பின்னர் எத்தனை ஆண்டுக் காலம் மீதி இருக்கிறது என்று பார்த்து அதைக் கொண்டு பெருக்குகிறார்கள். இப்படி எல்லாம் கணக்குப் பார்த்து 55 லட்சம் ரூபாய்க்கு விற்கலாம் என்றார்கள். நாம் 59 லட்சம் ரூபாய்க்கு விற்றிருப்பதை ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு வாய்ப்பைத் தந்தார்கள். மேகலா பிக்சர்ஸ்—முதலமைச்சர்—பிக்சர்ஸ்—படம்—என்று சொல்லி விட்டு 'ஊழல், ஊழல்' என்று முடித்து விட்டார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல் மேகலா பிக்சர்ஸ்—படம்—சினிமா—என்று நான் சொல்லவில்லை. தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிந்த அளவுக்கு விளக்கமாகக் கூறியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் அங்கத்தினர்களுக்குப் புரியத் தக்க விதத்தில் எடுத்துச் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஜேம்ஸ் அவர்களுக்கு நன்றி கூறிவிட்டுத்தான் ஆரம்பித்தேன். கோபப்பட்டேனு ? அருமையான வாய்ப்பை அவர்கள் தந்தார்கள்.

மேகலா பிக்சர்ஸ் நிறுவனம் 1952-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதை ஆரம்பித்த மூல புருஷரே மனுக் கொடுக்கிறார். இதிலே என்ன குற்றச்சாட்டு ? இப்போது இதற்கும் முதலமைச்சருக்கும் என்ன சம்பந்தம் ? முதலமைச்சர் குடும்பத்தினர் இதிலே இருக்கிறார்கள். இந்தப் பிக்சர்ஸைப் பயன்படுத்தி ஏராளமான பணத்தை வாங்குகிறார்கள் என்று கூறுகிறார்கள். என்ன ஆதாரம் காட்டுகிறார்கள் ? வேடிக்கையாக இருக்கிறது. இந்த மன்றத்தில் சொத்துக் கணக்கை வைத்திருக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு ஒரு புதிய குற்றச்சாட்டு. சொத்துக் கணக்கைக்கூடச் சரியாகப் படிக்காமல் கூறுகிறார்கள். மேகலா பிக்சர்ஸ் மூலம் எவ்வளவு கடன் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன ஊகித்துக் கொள்ளுகிறார்கள். இதிலிருந்து முதலமைச்சருக்குக் கடன் ஏற்பட்டது என்றால் அது எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்று திருப்பிக் கேட்கவில்லை. வாங்கலாமா கடன் ? இதையெல்லாம் சரியாகப் படித்துப் பார்த்தால் புரிந்து கொண்டிருக்கலாம். முதலமைச்சர் அவர்கள் அமைச்சரானவுடன் ஒரு கன்வென்ஷன் அந்த மாதிரி நிறுவனங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்திலிருந்து விடுதலை பெற்றார்கள், ரிடையர்மென்ட் பெற்றுக் கொண்டார்கள். அவர் அதைத் தன்னுடைய மனைவி பெயருக்கு மாற்றிவிட்டு மனைவியிடமிருந்து கடன் வாங்கினார் என்ற கற்பனைச் செய்தியைப் பரப்புகிறார்கள். கொடுத்திருக்கும் சொத்துக் கணக்கில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்—ரூ. 2,88,022.74 காசு முதலமைச்சர் அவர்கள் அமைச்சர் பதவிக்கு வருவதற்கு





முன்பாக மேகலா பிக்சர்சில் பார்ட்னராக இருந்தபோது ஏற்பட்ட இழப்பு என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதிலிருந்து விலகியதற்குப் பின்னால் அந்தக் கணக்கு வருகிறது. ஆகவே, அவர் கடன் ஏதும் வாங்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கடன் வாங்கவில்லை என்பது உண்மை. கடன் வாங்கியதாக வைத்துக் கொண்டு மற்றக் குற்றச்சாட்டுகளைக் கூறியிருப்பது சரியல்ல.

அடுத்து ‘ பிள்ளையோ பிள்ளை ’. திரு. லத்தீப் கூட தமிழ்நாட்டு அரசியலே ‘ பிள்ளையோ பிள்ளை ’ யிலேதான் இருக்கிறது என்று சொன்னார். பிள்ளையோ பிள்ளை- ஃப்ளை ஓவர்—ஊழல் என்று சொல்லுகிறார்கள். ஃப்ளை ஓவருக்கும், பிள்ளையோ பிள்ளைக்கும் என்ன சம்பந்தம் ?

பிள்ளையோ பிள்ளை படம் எடுப்பதற்குச் சில நிறுவனங்களிடமிருந்து பணம் வாங்கப்பட்டது, கடன் வாங்கப்பட்டது. அமைச்சருடைய குடும்பம் என்றால் கடனே வாங்கக் கூடாதா ? ஃப்ளை ஓவர் காரரிடம் கடன் வாங்கப்பட்டது என்று சொல்லுவது உண்மையா ? ஃப்ளை ஓவர் பாலத்தைக் கட்டுகிறவர் கடன் கொடுத்திருக்கிறாரா ? ஃப்ளை ஓவர் காண்டிராக்ட் முறைப்படி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அதிலே தவறு இருக்குமானால் அடுத்த குற்றச்சாட்டுக்குப் போகலாம் என்று ஃப்ளை ஓவர் ஃபைலை வாங்கிப் படித்துப் பார்த்தேன். ஆறு பேர் டெண்டர் அனுப்பி இருந்தார்கள். அரசாங்கம் கொடுத்த டிசைனுக்கு ஆல்டர்நேடிவ் டிசைன் கொடுத்து சிலர் அனுப்பியிருந்தார்கள். அதிலே குறைவாகக் கொடுத்திருந்தது ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ராக்ஷன் என்ற நிறுவனந்தான். 24,88,815 ரூபாய்க்கு டெண்டர் கொடுத்திருந்தார்கள். குறைந்த டெண்டர் கொடுத்தவருக்குக் கொடுத்தது தவறா ? முதலமைச்சருக்குக் கடன் கொடுப்பார், முதலமைச்சரின் உறவினருக்குக் கடன் கொடுப்பார் என்று அதிகமாக டெண்டர் கொடுத்தவருக்கா கொடுத்து விட்டார்கள். அப்படித்தான் இவர் ஏதாவது பணம் கொடுத்திருக்கிறாரா என்று சந்தேகப்பட்டு அதையும் தேடிப் பார்த்தோம். பணம் கொடுத்தவர்களுடைய கணக்கை எடுத்துப் பார்த்தோம். அதில் ஃப்ளை ஓவர் சம்பந்தப்பட்ட யாரும் இந்தப் படத்திற்குப் பண உதவி செய்யவில்லை. இந்தச் செய்திருப்பவர்கள் நான்கு கம்பெனிகள் ஈஸ்ட் இந்தியா

எஸ். டி. செந்தில்நாதன், எம். லட்சுமி ஆச்சி, எம். தேவானை தேவேந்திர ஆச்சி, ஆர். எம். விஸ்வநாதன். 1,25,000 ரூபாய் படத்திற்கு பினான்ஸ் செய்திருக்கிறார்கள். இதையும் மீறி வேறு எப்படியாவது சம்பந்தம் இருக்கிறதா என்று பார்த்தோம். ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷனுக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது. பட விநியோகஸ்தர்களை எடுத்துப் பார்த்து அதிலே ஏதாவது சம்பந்தம் இருக்குமா என்று துருவித் துருவிப் பார்த்தோம். கிட்டத்தட்ட எட்டுப் பேர் டிஸ்ட்ரிப்யூட்டர்ஷிப் வாங்கியிருக்கிறார்கள். அந்த எட்டுப் பேரில் ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி வரவில்லை. அப்போதும் மனச்சாந்தி ஏற்படாமல் ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் சம்பந்தப்பட்டவர்கள் வாங்கியிருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்த்தோம். இவ்வளவு ஆராய்ச்சி செய்து, மலையைக் கெல்லி எலியைப் பிடித்தோம். ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தில் 15 பேர் இயக்குநர்கள். அதிலே இரண்டுபேர் சினிமாப் படங்களின் டிஸ்ட்ரிப்யூஷன் கம்பெனியில் இருக்கிறார்கள். அந்தக் கம்பெனி சேது பிலிம்ஸ் என்பதாகும். இவர்கள் இந்தப் படத்தை வாங்கியிருக்கிறார்கள். சேது பிலிம்ஸ் புதிதாக பட விநியோகத் துறைக்கு வந்தவர்கள் அல்ல. மனுக் கொடுத்தவருடைய படத்தையே கூட வெளியிட்டிருக்கிறார்கள். எவ்வளவோ ஆண்டுகளாகத் தமிழக பட உலகில் இருப்பவர்கள். ராசி அண்டு கம்பெனி—இதிலே சம்பந்தம் இல்லாத கம்பெனிக்கு 2,25,000 ரூபாய்க்கு இரண்டு மாவட்டங்களுக்கு இந்தப் படம் விநியோகிக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேது பிலிம்சுக்கும் இரண்டு மாவட்டங்களுக்கு ரூ. 2,25,000-க்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே வேறுபாடு கிடையாது. இப்படி ஒரு சாதாரண விஷயம், தெளிவாகக் கண்டு பிடிக்க முடியும் என்று தெரிந்து இதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லுகிறார்கள். சில ரகசியங்களைச் சொன்னேன். பல ரகசியங்களை முதலமைச்சர் அவர்கள் பின்னால் வைக்கப் போகிறார்கள்.

கடைசியாக, நேற்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிய போது சக்தி பைப்ஸ் பற்றிச் சொன்னதற்கு அப்போதே பதில் சொன்னேன். இயற்கையான நடைமுறை விதிகளுக்கு மாறாகத் தான் சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அன்டியூ பேட்ரனேஜ் கொடுப்பதாகச் சொன்னார்கள். தொழிற்சாலை மூடப்பட்டு தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை



ஏற்படுவதைத் தடுக்க சில சலுகைகளைக் கொடுக்கத்தான் செய்தோம்.

சாதாரணமாகக் கடைப்பிடிக்கப்படுகின்ற விதிமுறைகளைத் தளர்த்தி சில சலுகைகள் காட்டப்பட்டன என்பது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டோம். இவ்வளவு சொன்ன பிறகு ஜி.ஓ.-க்களில் முரண்பாடு இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு பத்திரிகையில் வந்த செய்தியைச் சொன்னார் என்று நான் கூறியதற்குக் கூட 'பத்திரிகைக்காரன்' என்று நான் ஏகவசனத்தில் கூறியதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிக் கூறியிருந்தால் அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். ஆடிட்டில் இருந்து சில குறிப்புகளைச் சொன்னார்கள். அந்தக் குறிப்பில் வராத சில உண்மைகளை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். எப்படிக் கிடைத்தது என்று ஆராய்ந்து பார்த்தோம். இந்த அறிக்கையை அக்கவுண்டண்ட் ஜெனரல் அனுப்புதற்கு முன்னால் அங்குள்ள ஒருவர் நோட்ஸ் தயாரித்திருக்கிறார். அந்த நோட்ஸ் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதிலுள்ள செய்திகளைத்தான் அவர்கள் கூறினார்கள். அதற்காக நன்றி கூறிக் கொள்ளுகிறேன்.

டெண்டர் வாங்காமல் கொடுப்பதா என்பதுதான் வாதம். சக்தி பைப்சுக்கு இரண்டு முறையில் உதவி செய்திருக்கிறோம். உதவி செய்கிற முறையைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள். உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்க உதவி செய்யப்பட்டிருக்கிறது. அடிப்படை என்ன ? முதலில் அரசு 25 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்திருக்கிறது. கடன்தான். எப்படி மாறினாலும், தவறு செய்தாலும் திரும்பி வரக் கூடிய கடன்தான். ஏழேமுக்கால் சதவிகிதம் வட்டி. எப்படியும் வந்து தீரும். இரண்டாவது உதவி—இரண்டு மாதம் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள்களைக் கொடுப்பது ; மதிப்பு சுமார் 40 லட்சம் ரூபாய், இதற்கு மேல் கொடுக்கக் கூடாது.

இதற்கு 8 சதவிகிதம் வட்டி. ஆகவே என்ன தவறு ஏற்பட்டாலும் நம் பணத்திற்கு வட்டி உண்டு. இதில் எந்த விதமான தவறும் இல்லை. அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். 1969-ம் ஆண்டில் 15,000 டன்னுக்கு ஆர்டர் கொடுத்தீர்கள். 9,016 டன் தொழிற்சாலையில் உற்பத்தி செய்ய முடியாது

என்று தெரிந்திருந்தும் ஆர்டர் கொடுத்தீர்கள், இது ஒரு குற்றச் சாட்டு.

முன்னூறு மில்லிமீட்டருக்கு மேல், 350 மில்லி மீட்டர்— இதற்கிடையில் உள்ள பொருள்களுக்கு ஆர்டர் கொடுக்கப் பட்டது, உற்பத்தி செய்ய முடியாது என்று ஊகித்துக்கொள்ளப் படுகிறது, 500 மில்லி மீட்டர் வரையில் உற்பத்தி செய்யலாம். டிபெக்டீவ் மெஷினரி என்ற காரணத்தினால் உற்பத்தி செய்ய முடியவில்லை. அதில் எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. 9,016 டன் உற்பத்தி செய்ய முடியாது என்று அவர்கள் ஊகித்துக் கொள்கிறார்கள். அதற்குள்ள தொகை 13 லட்சம். 25 லட்சத்தில் அதைக் குறைத்துக் கொடுத்து விடவேண்டும் என்று ஊகத்தின் அடிப்படையில் முடிவு செய்கிறேன். இது ஒரு குற்றச்சாட்டு.

ஊகம் என்று சொன்னதற்குப் பிறகு குற்றச்சாட்டுக்கு வழி இல்லை. 3,000 டன் என்று சொல்லியிருக்கிறீர்கள். 15,000 டன் ஒரு ஆண்டுக்கு. ஆனால் கிடைத்தது ஏழாவது மாதத்தில், ஐந்து மாதம் மீதியிருக்கிறது. ஐந்து மாதம் என்று சொல்லிவிட்டதால் 25 லட்சத்தில் ஐந்து மாதத்திற்குக் குறைத்துவிட வேண்டும் என்பது ஊகத்தின் அடிப்படையில் ஏற்பட்ட தவறு. ஒரு மாதத்திற்கு 3,000 டன் உற்பத்தி செய்யும் திறன், கப்பாஸிட்டி இருக்கிறது. ஆனால் கிடைப்பது 10,100 டன்தான். உண்மையில் உதவி செய்வதற்கு அதுதான் காரணம். உற்பத்தித் திறன் இருந்தும் உற்பத்தி செய்ய முடியவில்லை என்பதைத் தெரிந்து கொண்டால் அதில் குற்றம்சாட்டுவதற்கு ஒன்றுமேயில்லை. 25 லட்சம் கொடுக்கும்போது அதை எப்படித் திருப்பிப் பெறுவது என்ற முறை வகுக்கப்பட்டது. அதை முரண்பாடு என்று சொன்னார்கள். அது தெரிந்தே தளர்த்தப்பட்ட முரண்பாடு. ஒவ்வொரு மாதமும் சப்ளை செய்யும்போது 25 சதவிகிதம் என்ற அளவில் பிடித்துக் கொண்டு, கடன் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது திட்டம். உற்பத்தி 3.000 டன் என்று எதிர்பார்த்தோம். ஆனால் ஆயிரம் டன்னுக்குக் குறைவாக உற்பத்தி செய்யப்பட்டதால் அந்த டிடக்ஷனை ஒரு ஆண்டுக்குத் தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அதை ஒரு முறை மறுத்து விட்டோம். ஆனால் இவர்களால் கொடுக்க முடியாது என்று தெரிந்தவுடன் அடுத்த ஆண்டிலிருந்து டிடக்ட் செய்யலாம் என்று செய்தோம். நாம் கொடுத்த கடனுக்கு வட்டி உண்டு எப்படியும்.





எட்டு லட்சம் ரூபாய் திரும்பப் பெறப்பட்டது. ஆனால் வேஸ் அண்ட் மீன்ஸ்க்கு அந்த நிறுவனத்திற்குப் பணம் இல்லாததால் புதிய முடிவு எடுத்து அடுத்த ஆண்டு கழித்துக் கொள்ளலாம் என்று தொகை திரும்பக் கொடுக்கப்பட்டது. இது பொங்கல் பரிசு என்று ஒரு பத்திரிகையில் வந்தது. அரசாங்கம் தெரிந்து செய்த சலுகைதான்.

ரா மெட்டீரியல்ஸ் கொடுக்கப்பட்டது பற்றிச் சொன்னார்கள். நாமே பர்சேஸ் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது, நாற்பது லட்சத்திற்கு மேல் போகக் கூடாது என்று! பின்னர் அரசாங்கம் முடிவு செய்தது, இது தேவை இல்லை, நாம் கடன்தான் கொடுக்கிறோம், எவ்வளவு மூலப்பொருள் வாங்குகிறார்கள், எவ்வளவு செலவழிக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலையில்லை, நாம் போய் வாங்கினால் அது நன்றாகயில்லை என்று சொன்னால் தவறுகள் ஏற்படலாம், ஆகவே மூலப்பொருள்கள் பிரச்னையை அவர்களுக்கே விட்டுவிட்டு செக்கிங் அண்ட் வெரிபிக்கேஷன் மட்டும் நம்மிடம் இருந்தால் போதும், பில்படி பணம் கொடுப்போம் என்று முடிவு செய்து செயல்படுத்தினோம். கடன் என்ற முறையில் வட்டி இருப்பதால் அந்த முறையில் மாற்றியதில் தவறு ஏதும் இல்லை. 40 லட்சம் ரூபாய் ரா மெட்டீரியல்ஸ்க்காகக் கொடுத்தோம். 3,000 டன்னுக்கு ரா மெட்டீரியல்ஸ் கொடுக்கப் பட்டது, ஆனால் ஆயிரம் டன் அளவில்தான் வந்தது. மீதி ரா மெட்டீரியல்ஸ் என்னவாயிற்று, அதை செய்து வெளியில் விற்றிருப்பார்கள் என்றார்கள். அப்படி விற்றிருந்தால் வரவேற் கிறோம். உற்பத்தி பெருக வேண்டுமென்பதற்காகத்தான் கடன் கொடுக்கிறோம். வெளியே விற்றுவிட்டால் அந்த அளவிற்கு லாபம் தான். ஆனால் அந்த வாதம் சரியாக இல்லை. மூன்றாயிரம் டன்னுக்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் கொடுக்கப்பட்டது உண்மை. ஆயிரம் டன்தான் உற்பத்திப் பொருளாக வந்தது என்பதும் உண்மைதான். மூலப்பொருள்கள் தவறாகக் கொடுக்கப்பட்டது என்பது தவறு.

ஆடிட்டில் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். மூலப் பொருள்களை வங்கியில் வைத்துப் பணம் வாங்கினார்களே. நியாயமா என்று. நாம் கொடுக்கும் மூலப் பொருள்களையும் அவர்களிடம் இருக்கிற சொந்த மூலப்பொருள்களையும் சேர்த்து. இயந்திரங்களையும்

சேர்த்து மொத்தமாக—ஏற்கனவே 143 லட்சம் ரூபாய் அக்காமடேஷன் இருந்தது தொடர்ந்து இருந்தது. நமது மூலப் பொருள்களை மட்டும் வைத்து கடன் வாங்கியதாகச் சொல்வது தவறு. அந்தப் பொருள்களை ஈடு வைக்க வேண்டுமென்று உத்தா விட்டிருக்கிறீர்களே, ஏன் வைக்கவில்லை, அது தவறல்லவா என்று சொன்னார்கள். ஹைபாத்திகேட் செய்வது எப்போது வரும்? 3,000 டன் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 3,000 டன் தராமல் அவர்களிடம் வைத்திருந்தால், அதற்கு மேல் உற்பத்தி செய்து வைத்திருந்தால் அதை ஈடு கேட்க வேண்டும். தற்போது மூவாயிரம் டன் உற்பத்தி செய்யவில்லை. நமக்குத் தேவையான பொருள்களை வாங்கிய பிறகு தேவையில்லாத பொருள்களை விற்கும்போது ஹைபாத்திக்கேட் செய்யும் பிரச்னைக்கே இடமில்லை. ஆகவே அது தேவை இல்லை. ரா மெட்டீரியல்ஸ்க்காகக் கொடுத்த சலுகை முடிந்து விட்ட பிறகு கொடுப்பதற்கு ஜீ.ஓ. இல்லாமல் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்டார்கள். அதில் நான் சொல்ல விரும்புவது, ரா மெட்டீரியல்ஸ் எவை என்பதில் தகராறு வந்தது.

நாம் ரா மெட்டீரியல்ஸ் என்று சொல்லும்போது சில ஐட்டங்கள் எம்.எஸ். ப்ளேட், பிக் ஐயர்ன் என்று போட்டோம். அவர்கள் பர்னஸ் ஆயில்-ம் மூலப்பொருள். ஆகவே அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ரெப்ரசென்ட் செய்தார்கள். அதில் காலதாமதம் ஏற்பட்டது. மத்திய அரசுக்கு எழுதியிருந்தோம். டி.ஜி.எஸ்.டி. முறைப்படி வருமா என்று கேட்டிருந்தோம். வரும் என்று சொன்னார்கள். அந்தப் பொருள்களுக்கும் சேர்ந்து நாற்பது லட்சம் என்று அறிவித்தோம். இந்த ஆண்டிற்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. பின், ப்ரைஸ் பிக்சேஷன். டெண்டர் கேட்கிறோம். டி.ஜி.எஸ்.டி. டெல்லியிலுள்ள மத்திய அரசின் நிறுவனம். அவர்கள் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு மாநிலத்திலும் எக்ஸ் பாக்டரி ப்ரைஸ் நிர்ணயிக்கிறார்கள். அந்த முறைப்படி நிர்ணயிக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு லாபமே தவிர நஷ்டம் இல்லை. ப்ரைட் சார்ஜையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சக்தி பைப்ஸ் உற்பத்தியாவது சென்னைக்குப் பக்கத்தில். கல்கத்தா அல்லது ஹைதராபாத்திலிருந்து உற்பத்தி செய்து



வரும் பைப்க்கு எக்ஸ் பாக்டரி ப்ரைஸை டி.ஜி.எஸ்.டி. நிர்ணயிக்கிறது. ப்ரைட் சார்ஜையும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது என்றால் டி.ஜி.எஸ்.டி. ரேட் காண்ட்ராக்ட்படி கொடுக்கிறோம். அந்த உற்பத்திச் செலவையும் கணக்கிட்டுத்தான் விலை நிர்ணயிக்க வேண்டும். இல்லையென்றால் டி.ஜி.எஸ்.டி. ரேட் கொடுக்கவேண்டும். அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அரசாங்கத்திற்கு பெரும் இழப்பு ஏற்படும். உற்பத்திக் குறைவாக இருந்த காரணத்தாலும் டிபக்டிவ் மெஷினரி இருந்ததாலும், வேறு வகையான மூலப் பொருள்கள் உபயோகிக்கப்பட்டதாலும், கல்கத்தாவில் ஆகும் உற்பத்திச் செலவை விட இங்கே காஸ்ட் ஆப் புரொடக்ஷன் அதிகமாகும். இந்த இரண்டு முறையிலும் அதிகமாகும் என்பதால் தான். டி.ஜி.எஸ்.டி. ரேட் கொடுக்கப்பட்டது.

ஏன் முன்னாலே போட்ட விலையை பின்னாலே ரிவைஸ் செய்தீர்கள் என்று கேட்டார்கள். 1969–70-ல் இன்ன விலை தர வேண்டுமென்று நிலை இருந்தது. பின்னாலே 70–71-ல் அந்த முறையிலே அல்லவா இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்குப் பதில் சொல்கிறேன். இரண்டாவது ஆண்டில் முதல் ஆண்டில் சொல்லியதை செயல்படுத்த முடியாததாலும், வெளியே வாங்கினாலும் டி.ஜி.எஸ்.டி. ரேட்டுக்கு வாங்க வேண்டும் என்பதாலும், டி.ஜி.எஸ்.டி. ரேட் ரிவைஸ் செய்யப்பட்டதாலும், நாமும் அதை ரிவைஸ் செய்ய வேண்டியதாயிற்று. அவர்கள் ரிவைஸ் செய்யாமல் இருந்து இருந்தால் நாம் மார்க்கெட் பிரைஸ் கொடுக்க வேண்டி வந்திருக்கும். சலுகை என்று வந்தால் மறுபடியும் டி.ஜி.எஸ்.டி. ரேட் தான் கொடுக்க வேண்டி வரும். டி.ஜி.எஸ்.டி. ரேட் ரிவைஸ் செய்யப்பட்டது, ஆகவே நாமும் அதைச் செய்தோம், இதிலே ஒன்றும் தவறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்ஷூரன்ஸ் செய்யலாமா என்று ஒரு கேள்வி எழுந்தது. எந்தச் சரக்கும் உடைந்து விடாமல் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அனுப்ப வேண்டுமானால் அது இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டு அனுப்புவது தேவை தான். நமக்கு இருக்கும் சலுகையெல்லாம், அந்தச் சரக்கு இராமநாதபுரத்திற்குச் செல்ல வேண்டுமானாலும், அது அவர்கள் பொறுப்பில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டும். அப்படி ஏதாவது உடைந்தால் அதற்கு

அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது உடைந்த சாமானுக்குப் பதிலாக பணம் கட்ட வேண்டும் அல்லது புதிய சாமான் கொடுக்க வேண்டும். நாம் அதிகப் பணம் கொடுப்பதால் நீங்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அந்த விதியின் கீழ், இன்ஷூரன்ஸ் பணம் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியாருக்கு விற்று விட்டார்கள் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். வெளியாருக்கு அதிகம் விற்பனை செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. அவர்கள் உற்பத்தி 1,000 டன் என்றால், அதிலே குறைந்த அளவில் பெங்களூர் வாட்டர் போர்டுக்கும், நம்முடைய குடிநீர் வாரியத்திற்கும், நம்முடைய கார்ப்பரேஷனுக்கும், நம்முடைய அனுமதியின் பேரில் நமக்குத் தேவையற்றவைகளை கொடுத்து விடுகிறார்கள். அதிலே தவறு இல்லை. நம்முடைய வாட்டர் போர்டு வெளியே வாங்குகிறார்கள் என்றால், நிச்சயமாக வெளியே தான் வாங்குவோம். காரணம் நாம் சக்தி பைப்ஸ்-ஐ மட்டும் நம்பியில்லை. ஆகையால் வெளியே வாங்குவதில் எந்த விதமான தவறும் இல்லை.

கொடுக்கின்ற கடனும் அந்த நிறுவனத்தை நம்பாமல், தனிப்பட்ட ஒருவரின் பெயரில், 'பர்சனல் ஷூரிடி' என்று கொடுக்கப்படுகிறது. 25 லட்சம், 40 லட்சம், 65 லட்சம் என்று லாஸ் ஏற்பட்டாலும், ஒரு தனிப்பட்ட ஒருவரின் சொத்திலிருந்து தரவேண்டுமென்று நாம் ஒப்பந்தம் எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்னொரு சந்தேகத்தையும் சொன்னார்கள். எல்லாம் சந்தேகம் தான். அந்தத் தொழிற்சாலையில் ரூ. 77,69,670-க்கு பினிஷ்டு கூட்ஸ் இருக்கிறது என்று, சொன்னார்கள். அதைப் பார்க்கிறபோது உண்மையாகத் தோன்றும். நான் முன்னாலே எடுத்துக்காட்டியது போல, 3,000 டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்றாலும். 1,000 டன் உற்பத்தி செய்ததற்குத்தான் பணம் வந்தது. மீதி இருக்கும் இரண்டு டன் உற்பத்தி கணக்கில் சேரவில்லை என்று சொன்னார்கள். நூறு சதவிகித உற்பத்தியில் 65 சதவிகிதம் டிபக்டிவ் மெடீரியல் என்று சொல்லி ரிஜக்ட் செய்யப்பட்டு கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. அதையும் நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்ல



மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதை ரிஜக்டட் கூட்ஸ் என்ற முறையில் தள்ளிவிட்டிருக்கிறோம்.

பீனல் கிளாஸ் இல்லை என்று சொன்னார்கள். அதுவே மோசமான தொழிற்சாலை. வட்டி தான் வாங்க முடியும். அதுவே போதும் என்று நினைக்கிறேன். அதிலே எந்த விதமான தவறும் ஏற்பட்டு விடவில்லை.

அந்தத் தொழிற்சாலைக்கு மட்டும் தானே பணம் கொடுத்திருக்கிறீர்கள் என்று ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நாங்கள் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்க்கும் உதவி செய்திருக்கிறோம். சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் மூடப்பட்டது. எப்படி சக்தி பைப்ஸ்க்கு சலுகை காட்டப்பட்டிருக்கிறது. அங்கே 400 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். சக்தி பைப்ஸ்க்கு 65 லட்சம் உதவி செய்திருக்கிறோம் என்றால் அதைப்போல் இந்த நிறுவனத்திற்கும் 71 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டு தான், பொறுப்புக் கடனாக அந்த நிறுவனத்திற்கு 164.7 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். மொத்தம் ரூ. 2 கோடிக்கும் மேலாக ஒரு தொழிற்சாலைக்கு உதவி செய்திருக்கிறோம். அதை விடக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் டெக்ஸ்டூல் கம்பெனிக்கு உதவி செய்திருக்கிறோம். எங்களுக்கு தொழிற்சாலையைப் பற்றித் தான் கவலை. சுதந்திராக் கட்சியின் தலைவர் தான் அதை நடத்தி வருகிறார். கட்சிக் கண்ணோட்டம் பார்க்காமல், அந்தத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு, அந்த நிறுவனம் நன்றாக நடத்தப்படாமல் இருக்கிறது என்பதை அறிந்து, அதற்கு உதவி செய்திருக்கிறோம். கட்சிக் கண்ணோட்டம் பார்த்து உதவி செய்வது எங்கள் பாரம்பர்யம் அல்ல. அங்கே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள், நாங்கள் எடுத்தபோது ரூ. 209 லட்சம் நஷ்டத்தில் இருந்தது. முதலில் 10 லட்சம் கடன் உதவி செய்தோம். கடந்த ஆண்டு 13 லட்சம் கடன் உதவி செய்தோம். எனக்குக் கூட கடன் கொடுப்பது என்றால் பயம். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படியானாலும் சரி, தொழிலாளர்கள் வாழ்வு நல்ல முறையில் இருக்க வேண்டுமென்பதற்காகக் கடன் உதவி கொடுக்கலாம் என்று சொன்னார்கள்.

[திரு. செ. மாதவன்] [1972 டிசம்பர் 11

அவர் சொன்ன காரணம் சரி என்றே கருதுகிறேன். அந்தத் தொழிற்சாலை அவர்களுக் கெல்லாம் வேலை கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ரூ. 209 லட்சம் நஷ்டம் என்று இருந்ததை, இப்போது ரூ. 126 லட்சம் அக்யூமிலேடட் லாஸ் என்று கொண்டு வந்திருக்கிறது.

தருமபுரியில் லாஸ்கோ ஸ்டீல் மூடிக் கிடந்தது. அந்தத் தொழிற்சாலைக்கு 29 லட்சம் ரூபாய்க்கு கடன் இருந்தது. அதற்கு இப்போது 12 லட்ச ரூபாய் வரை உதவி செய்யப்பட்டிருக்கிறது. அதோடு, ஏராளமான நூற்பு ஆலைகள். சிக் மில்களுக்கு 12—ரூ. 101.41 லட்சம் வரை பொறுப்புக் கடன் கொடுத்திருக்கிறோம். இது வரையில் பொறுப்புக் கடன் கொடுக்காமல், முடியாமல், பாழாகி விட்ட மில்களுக்கு அரசாங்கம் கொடுத்திருப்பது 40.61 லட்சம் ரூபாய். அந்த இழப்பை நாங்கள் பொருட்படுத்த வில்லை. அந்த நூற்பு ஆலைகளில் இன்றைக்கு 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் நல்வாழ்வு வாழ்கின்றன என்ற அடிப்படையில் நாங்கள் கொடுத்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த விதமான தவறையும் அரசு செய்து விடவில்லை. **ஊழல்** என்ற தலைப்பில் இது வராததால் அன்றைக்குக் குறிப்புகள் எடுத்து வரவில்லை. ஆகவே, நான் இன்றைக்கு இவ்வளவு விளக்கமாகக் கூறினேன். அவர்கள் எதையும் சொல்லிவிடவில்லை. இதற்கு மேலும் சந்தேகம் இருக்குமானால், அதைத் தெளிவுபடுத்தத் தயாராக இருக்கிறோம். குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்குமே தயங்கியது இல்லை, தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : My whole contention is that so far as this factory is concerned, they have been given much more than what is ingrained in the Government order. That is what I had pointed out. In fact my entire speech copy, I gave to the Chief Minister. Probably that has helped you to answer. The concessions were much more than what were ingrained in the G.O. That is the audit objection. Did the company during the period February 1971 to January 1972 function to its normal capacity? If so what was the production? If production has been normal, what happened to the rest of production in that. Only 5643 tonnes



1972 டிசம்பர் 11] [Dr. H. V. Hande]

have been offered to Government so far. We put questions on the basis of information supplied to us. Whatever material is brought to us, we bring it to your notice. I am bold enough to put it on the table of the House and give my records to you so that you can reply. This matter has been the subject-matter of discussion for some time. I would say that I am still not convinced and am still under the impression that undue concession has been shown. I still maintain that. More concession than what is ingrained in the G.O. had been shown. Let there be a re-scrutiny of the accounts so far as this company is concerned and that will show that undue concession has been shown to the company.

(திரு. என். கணபதி தலைமை)

* **திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே, நண்பகல்
முதல்வர் அவர்கள் தன் மந்திரி சபையின் மீது நம்பிக்கை உண்டா 12-00
என்று கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் மீது மூன்று நாட்களாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மூன்று நாட்களாக நடக்கும் இந்த விவாதத்தை நான் கூர்ந்து கவனித்தேன். முதல்வர் அவர்கள் தன்னுடைய மந்திரி சபையின் மீது நம்பிக்கை உண்டா என்று கோருகிற தீர்மானம் அச்சத்தின் அடிப்படையில் வந்தது அல்ல, அல்லது அவநம்பிக்கையின் அடிப்படையில் வந்ததும் அல்ல, துணிவின் அடிப்படையில் வந்தது. தெம்பின் அடிப்படையில் வந்தது. நாலரை கோடி தமிழ் மக்கள் கொண்டிருக்கிற பற்றின் மீது அது வந்தது. அது வந்ததினால் அதைப்பற்றி இங்கு உள்ள பேரவை உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்தை விரிவாக எடுத்துச் சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது, பலரும் சொன்னார்கள். அதோடு என் பக்கத்தில் இருக்கிற எனது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய ஹாண்டே அவர்கள் தம்முடைய பேச்சில் குறிப்பிடுகிற பொழுது ஒரு வார்த்தையை அவர்கள் சொன்னார்கள். அது பொருந்துமா என்று நான் யோசிப்பதைவிட, இந்தப் பேரவையின் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்கிறேன். அவர்கள் சொல்லும் வாதம் பொருந்துகிறதா என்று தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

அவர்கள் பேச்சிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். " திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருப்பதுதான் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பெரிய துரதிருஷ்டமாகும் " என்று

அவர்கள் பேச்சிலே குறிப்பிட்டார்கள். என்ன துரதிருஷ்டம் என்று நான் அறிய விரும்புகிறேன். உயர்ந்த குடி மக்களிடத்திலே பல நூறு ஆண்டுகளாக அடிமைகளாக கைகட்டி நின்று, வாய் பொத்திப் பேச முடியாது இருந்த மக்கள் இந்தப் பேரவைக்கு உறுப்பினர்களாக வந்தார்கள் என்பது அவமானத்திற்கு உரியது என்று அவர்கள் கருதுகிறார்களா என்று நான் கேட்கிறேன்.

அதுமட்டுமல்ல. இங்கே நடக்கின்ற மந்திரிசபையின் மீது அவர் சரியான குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. குற்றச் சாட்டினுடைய விளக்கத்தை அவர் குறிப்பிடவில்லை. வெறும் குற்றச்சாட்டு என்று மட்டும் சொல்லப்பட்டதே தவிர, புள்ளி விவரத்தோடு எந்தக் காரணத்தையும் ஹாண்டே அவர்களோ மற்றவர்களோ குறிப்பிடவில்லை.

இன்னொன்றையும் ஹாண்டே அவர்கள் பேச்சில் குறிப்பிட்டார். "அகில இந்தியாவிலும் காங்கிரஸ் அல்லாத மந்திரிசபை இது தான் என்று முதல்வர் அவர்கள் பெருமிதம் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்தப் பெருமையும் போய்விட்டது. திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் அவை பலவீனம் அடைந்து போய் இருக்கிறது" என்று சொல்லப்பட்டது. நீங்கள் இதை நம்புகிறீர்களா? எங்கே பலவீனம் அடைந்தது? அவர்கள்தான் பலவீனம் அடைந்தார்கள். அவர்கள் கட்சி பலவீனம் அடைந்திருக்கிறது. அவர்கள் சொல்லிய சொற்கள் பலவீனம் அடைந்திருக்கின்றன. அவர்கள் போட்ட கோஷங்கள் பலவீனம் அடைந்திருக்கின்றன. அவர்கள் கூட்டிய ஊர்வலம் பலவீனம் அடைந்திருக்கிறது. அவர்களுடைய கூட்டு பலவீனம் அடைந் திருக்கிறது. அவர்களுடைய திட்டங்கள் பலவீனம் அடைந்திருக் கின்றன. எங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பலவீனம் அடைந்திருக்கிறது? அவர்கள் எந்த அடிப்படையில் அப்படிக் கூறுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

இன்னொன்று அவர்கள் பேசும்பொழுது சொன்னார். அதை நான் அறிந்துகொள்ள வேண்டியிருந்தது. என்னுடைய கட்சி சகா அவர்கள் பேசும்பொழுது, ஹாண்டே அவர்கள் சொன்னார். 'நீங்கள் வெண்ணெ வைக்கிறீர்கள்' என்று சொன்னார். நான் மறுக்கவில்லை. ஹாண்டே அவர்கள் சொரி கல்லை வைத்துத் தேய்க்கிறார். அந்த எரிச்சல் தாங்காது இருந்ததால் வெண்ணெ



வைக்கிறோம். அதில் என்ன தப்பு? சொரி கல்லைப்போட்டுத் தேய்க்கிறார். எரிகிறபொழுது வெண்ணெய் வைத்து, அதன் காரணமாக ஆறுதல் அளிக்கிறது. இது தானே தவிர, வேறு ஒன்றுமில்லை. இந்த வெண்ணெ வைத்தல் என்பது கீழ்த்தரமான ஒரு சொல். அதை இந்தப் பேரவையில் உபயோகப்படுத்தி யிருக்கக் கூடாது. நான் அதை மேல்தரமாக ஆக்கிச் சொல் கிறேன். வெண்ணெ வைப்பது என்பது குளுமைக்காக. நான் ஒன்று சொல்கிறேன். என்னுடைய பேச்சின்மூலம் டாக்டர் ஹாண்டே அவர்களுடைய தலையில் ஐஸ் வைக்கிறேன். காரணம், கொஞ்சம் வேகமாக இருக்கிறார். வேகமாக இருப்பதினால் நான் ஐஸ் வைக்க விரும்புகிறேன். அதை அவர் தப்பு என்று சொல்ல மாட்டார். நாங்கள் வெண்ணெ வைத்தோம் என்று சொன்னார். அவர் கோஷ்டிக்கு நான் ஐஸ் வைக்க நிற்கிறேன் இப்பொழுது.

இன்னொரு விஷயமும் சொல்லப்பட்டது. 'நீங்கள் ஒருதலைப் பட்சமாகப் பேசாதீர்கள். இந்த விவாதத்தில் பொது நிலைமையி லிருந்து பேசுங்கள்' என்று சொல்லப்பட்டது. நாங்கள் ஏன் ஒருதலைப்பட்சமாகப் பேசுகிறோம்? 176 பேர்களைக் கொண்டிருக்கிற மெஜாரிடி பெற்றிருக்கிற அதுவும் கூட்டுக் கட்சிகளைச் சேர்க்காமல் மெஜாரிடி பெற்றிருக்கிற ஒரு சர்க்கார் மீது இன்று 4½ கோடி மக்களும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள், அதிலே நீங்களும் சேர்ந்தது தான், இந்தப் பேரவையில் நாங்களும் சேர்ந்தது தான், நம்பிக்கை இழந்துவிட்டோம் என்று பேசுவது? பேச்சு உரிமை என்பதை எந்தவிதமாகப் பயன்படுத்துவது என்பது வேண்டாமா? எப்படி வேண்டுமானாலும் பேசுவதா, இவர் களுக்குப் பதில் நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நெருக்கடியைப்பற்றி அவர்கள் சொன்னாரே, "நெருக்கடி வந்திருக்கிறது, உங்கள் மந்திரிசபை மீது நம்பிக்கை இல்லை, மக்கள் உங்கள் மீது வெறுப்பு அடைகிறார்கள்" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ஒப்பற்ற தலைவரும், இந்தியாவின் தனிப்பெரும் தலைவரும், என்னுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு. இராஜகோபாலாச்சாரி அவர்கள் தன்மீது நம்பிக்கை உண்டா என்று கொண்டுவந்த தீர்மானத்தில் பேசிய பேச்சை நான் இந்தச் சட்டமன்றத்தினுடைய ரெகார்டிலிருந்து இங்கே எடுத்து வைக்கிறேன். அதை இந்த அவையிலே வாசித்துக் காட்டுகிறேன்,

தலைவர் அவர்களுடைய அனுமதியின் பேரில். அது இப்பொழுது இந்தப் பேரவைக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது.

> " எல்லா வித கருத்து அடிப்படையிலும், கோணத்திலும், மிகுந்த சிக்கலான, சிரமமான சூழ்நிலையில் இன்று நான் பணியாற்றுகிறேன். இச்சபையின் தெளிவான உறுதியான ஆதரவு இல்லாது நானும், எனது சகாக்களும் எங்களது கடமையை ஆற்ற முடியாது. எதிர்க்கட்சியினர் குழப்பத்தை விரும்புகின்றனர் . . . "

எதிர்க் கட்சியினர்கள் வேண்டும் என்றே குழப்பத்தை விளைவிக்கின்றனர். இதை நான் சொல்லவில்லை. ஆளுகின்றவர்கள் சொல்லவில்லை. மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய இராஜகோபாலச்சாரி அவர்கள் சொல்கிறார். வேண்டுமென்றே குழப்பத்தை விளைவிக்கின்றனர்.

> " அவர்களுடைய கொள்கைகள் அனைத்தையும்தான் குழப்பம் என்று கூறுகிறேன் . . . "

அவர்கள் கூறுவது இப்பொழுது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது ?

> " மாநிலம் முழுவதற்கும் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள இச்சபையின் தெளிவான விருப்பத்தை நான் தெரிந்து கொள்வது அவசியமென்று கருதுகிறேன்."

மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். இது அச்சத்திலிருந்து எழுந்தது. அவர்களுடைய மந்திரிசபைக்கு முஸ்லிம் லீக் ஆதரவு கொடுக்கவில்லை என்றால் அவர்கள் வந்திருக்க முடியாது. முஸ்லிம் லீக் ஆதரவைப் பெற்றும் கூட இரண்டு வோட்டு, ஒரு வோட்டில் தான் இருந்தது, அவர் உயிர், மந்திரிசபையின் ஜீவன். அப்பொழுது இருந்த சூழ்நிலைமைக்காக அவர் அப்படிச் சொன்னார், நம்பிக்கை உண்டா என்ற தீர்மானத்தை சபையில் தான் கொண்டுவருவதாகக் குறிப்பிட்டார். ஆனால், இப்பொழுது இங்கு அப்படி இல்லை. 185-க்கு மேற்பட்டவர்கள் இதற்கு ஆதரவு கொடுக்கக்கூடியவர்கள் என்றால், ஆதரவு கொடுக்கக்கூடியவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் மக்களுடைய ஆதரவு இருந்துகொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய சூழ்நிலையில் இருக்கிற ஒரு சர்க்காரின் மீது நம்பிக்கை உண்டு என்று சொல்லாமல் எப்படி நம்பிக்கை இல்லை என்று சொல்வது ?



இதற்கு இன்னொன்றையும் உதாரணமாகக் காட்டப் போதுமானது என்று கருதுகிறேன். இதே பேரவையிலே முதல்வராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அது இப்பொழுது இந்தப் பேரவைக்கு மிகப் பொருத்தமானது என்று கருதி தலைவர் அவர்களுடைய அனுமதியின் பேரில் அதைப் படிக்கிறேன்.

> " தமிழ் நாட்டுச் சட்டமன்ற நடவடிக்கைகள் எல்லோருக்கும் வருத்தத்தைத் தான் அளித்திருக்கும். ஏனெனில், நம் சட்டமன்ற பாரம்பரியம் தலை சிறந்ததாகும். அதற்கு பங்கம் வரக் கூடாது என்பது தான் என் அவா. சட்ட மன்றம் ஆளும் உரிமை பெற்றது. நீதிமன்றத்தைப்போல் உரிமையை மீறுகின்றவர்களுக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரமும் சட்ட மன்றத்துக்கு உண்டு. ஆனால், சட்ட மன்றத்தின் உரிமையையும் கௌரவத்தையும் பாது காப்பதில் அரசே முதன்மையாக நிற்க வேண்டும். ' சபாநாயகரே கோர்ட்டுக்குச் சென்று விட்டாரே ! ' என்று பார்லிமெண்ட் சபாநாயகர் குறைப்படுவது நியாயம் தான் "

என்று கூறுகிறார்.

இங்கிருந்து வெளியே அனுப்பப்பட்டவர் அவர் ; இங்கே நடைபெற இருக்கும் நடைமுறைகள் பரிதாபத்துக்குரியது என்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் என்றென்றும் இருக்க வேண்டுமென்று எங்கும் நான் தீர்ப்பளிக்கவில்லை. நீங்கள் கூட ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிக்கலாம். ஆனால் அந்த முயற்சி நியாயமாகயிருக்க வேண்டும், நேர்மையாகயிருக்க வேண்டும், சத்தியமாக இருக்க வேண்டும். ஒரு பேழை இங்கிருந்து கவர்னருக்குப் போகிறது. பிறகு டெல்லிக்குப் போகிறது. பிறகு அந்தப் பேழை இங்கு திரும்பி வருகிறது. பிறகு இங்கிருந்து பதில் அங்கே போகிறது. அவ்வளவு அவசியம் என்ன வந்தது ? உங்களுக்குத் துணிவிருந்தால் தெம்பிருந்தால் ஒரு குற்றச்சாட்டைத் தெளிவாக இந்தப் பேரவையில் வையுங்கள். என் பக்கத்திலிருக்கிற அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களை நான் கேட்கிறேன். அவர் குற்றம் செய்தார். இதோ இன்ன குற்றம் செய்திருக்கிறார். இங்கு லஞ்ச ஊழல் நடந்திருக்கிறது. இந்த

இடத்தில் தவறு நிகழ்த்தியிருக்கிறார் என்று இந்தப் பேரவையில் சொல்லுங்களேன். சொன்னவுடன் அவர் மறுக்கிறார். இல்லை கோர்ட்டிற்குப் போகிறார். உங்கள் வாதத்தை அங்கே தாராளமாகத் தொடங்கலாமே. அதற்குத் தெம்பில்லை. அப்படி நம்முடைய முதலமைச்சர் கேட்டார். நீங்கள் இதற்குப் பதில் சொன்னீர்களா என்று கேட்டபோது அது நாங்கள் யோசிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். இன்றும் சொல்ல முடியவில்லை. காரணம் உண்மையில்லை. நான் இன்னொன்று உங்கள் தலைவர்கள் மூலம் கேட்கிறேன். உலகத்தில் என் கொள்கையின் அடிப்படையில் கட்சி வெளி வந்திருக்கிறது. பல கட்சிகள் கொள்கையின் அடிப்படையில் வெளி வந்திருக்கின்றன. ஜனசங்கம் கூட முஸ்லீம்கள் இங்கே இருக்கக் கூடாது என்று சொல்லும் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அதைக் கூட வரவேற்கிறேன். இப்படி ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை உண்டு.

இந்த துர்ப்பாக்கியமான தமிழ்நாட்டில் ரசிகர்களுக்கு என்று ஒரு சங்கம். இது என்ன சங்கம் என்று எனக்கு விளங்கவில்லை. ரசிகர்கள் சங்கம் என்றால் வைத்துக் கொள்ளட்டும். அதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. என்ன அவர்கள் செய்ய வேண்டியது ? இவன் குதிப்பதை விட, இவன் கத்தியெடுத்து ஆடுவதை விட, அவன் குதிப்பது, அவன் கத்தியெடுத்து ஆடுவது தான் நன்றாக இருக்கிறது என்று பேசுவது தான் ரசிகத் தன்மையே தவிர வேறல்ல. நான் சினிமா பார்ப்பதில்லை. சினிமாப் படத்தில் என் நண்பர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நடித்து பார்த்ததில்லை. மற்ற படத்தையும் நான் பார்த்ததில்லை. நான் சினிமா பார்த்து கிட்டத்தட்ட அதாவது அசுவத்தம்மா காலத்தில் பார்த்தேன். தியாகராஜ பாகவதர் காலத்தில் பார்த்தேன். "சிந்தாமணி" என்று அம்மையார் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் காலத்தில் படம் பார்த்தேன். அதற்குப் பிறகு நான் எந்தப் படமும் பார்த்ததில்லை. அது எனக்குப் பிடிக்கவும் இல்லை. நான் அந்தக் கலையைக் கலையாகக் கருதுவதுமில்லை. அந்த வால்போஸ்டர் ஒட்டியிருப்பதைப் பார்த்தாலே இது கலையா என்று எனக்குத் தோன்றுகிறது. அதாவது ஹைக்கோர்ட்டுக்கு இரண்டு விரல் கீழேயும், செஷன்ஸ் கோர்ட்டிற்கு நான்கு விரல் மேலேயும் துணிகட்டியிருக்கிறது.





இதைப் போய் என்ன பார்க்க வேண்டியிருக்கிறது ? நான் மறைபொருளாகச் சொல்லுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த மாதிரியான வாசகங்களை நமது பதிவேட்டிலிருந்து நீக்குவது பொருத்தமாகயிருக்கும். அதுவும் பண்பட்ட தலைவர், முஸ்லீம் லீக் கட்சித் தலைவரவர்கள் அப்படிச் சொல்லுவது நல்லதா என்று கேட்கிறேன்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** மறைமுகமாகச் சொன்னேன். மனித உடலிலுள்ள உறுப்புக்களை, மேலேயிருப்பதை மேல்கோர்ட் என்றும் கீழ் இருப்பதை கீழ்க்கோர்ட் என்று சொன்னேனே தவிர, கோர்ட்டிற்கு நான் குறிப்பிடவில்லை. இந்த வார்த்தைகளை உபயோகப்படுத்தியதை தயவு செய்து அவர்கள் தப்பாகக் கருத வேண்டாம். இதுவும் ஒரு கலையா ? இந்தக் கலையை ரசிப்பவர்களுக்கு மன்றம் இருக்கிறது. இருக்கட்டும். இந்த மன்றத்தை அரசியலில் புகுத்துவானேன். அரசியலுக்கும் இந்த மன்றத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை தயவு செய்து சிந்தித்துச் சொல்லுங்கள். அவர்கள் நடிப்பைப் பற்றி குறிப்பிடவில்லை. வேறு விஷயங்களைப் பற்றியும் நான் குறிப்பிடவில்லை. அது எனக்குத் தேவையுமில்லை. நமது நாடார் அவர்கள் குறிப்பிட்டது போல அது என் பண்பும் அல்ல. ரசிகர்களுக்கு அரசியலில் என்ன வேலை ? அவர்கள் இங்கே கூட்டம் கூட்டிக் கூடுவது என்ன ? என்ன அதிலே சத்தம் போடுகிறார்கள். ரசிகர்கள் கூட்டத்தில் என்ன சத்தம் போடுகிறார்கள். யாரோ ஒருவர் வாழ்க என்று சொல்லுகிறார்கள். நன்றாக சொல்லட்டும். அதில் தப்பில்லை. யாரோ ஒருவர் வாழ்க என்று கூறுவதில் தவறில்லை. வாழ்க என்ற கோஷம் இங்கே வேண்டும் என்று விரும்புகிறேன். ஒழிக என்ற கோஷம் வேண்டாம். அதோடு நின்றுவிட வேண்டியதுதானே.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதை வைத்துக் கொண்டு நான் அரசியலைக் கைப்பற்றுவேன். என்னுடன் நிற்கிறாயா, எனக்கு நடிக்கத் தெரியும், என்னோடு நடிக்கிறாயா என்று கேட்டால் முடியாது. அந்தக் கலையில் எனக்கு ஆற்றலில்லை. நடிக்க முடியாது.

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 டிசம்பர் 11

ஆனால் ஒன்று. நேர்மையோடும், நியாயத்தோடும் விவாதத்திற்கு வருகிருயா என்று கேட்டால் தாராளமாகச் சொல்லுவோம் வருகிறோம் என்று. தெளிவாகச் சொல்லுவோம் வருகிறோம் என்று. அதில் தப்பில்லை. அம்மாதிரியான வாதத்தை இங்கே சொல்லுங்களேன். இங்கே அவர்களை வரவேண்டாம் என்று யார் தடுத்தார்கள். நம்முடைய சுதந்திராக் கட்சியும், நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியும் வந்து இருப்பது போல, அவர்கள் வந்து சொல்லியிருக்கலாமே. நண்பர் ஹாண்டே அவர்கள் சக்தியைப் விவகாரத்தைப் பற்றிச் சொன்னார். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அந்தமாதிரி வந்து பேசலாமே. இதில் ஒரு உட்கருத்து இருக்கிறது. இந்த ஆட்சியின் மீது குறையுண்டு என்று அவர்களுடைய மனச்சாட்சி ஒப்பவில்லை. எனக்கு அது தெளிவாகத் தெரியும். இதிலே ஊழல் இருக்கிறது என்று அவர்கள் ஆதாரப்பூர்வமாகக் காட்ட முடியாது என்பது எனக்குத் தெரியும். அவர்களுடைய எண்ணமெல்லாம் எப்படியாவது ஆட்சிக்கு வரவேண்டும். நல்லது. நான் உங்களையும் சேர்த்துப் பேசுகிறேன். வரலாம். கொஞ்சம் பொறுங்களேன். ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுங்களேன். 76-லே சந்திப்போமே. சந்திப்போம், சந்திப்போம், 76-ல் மக்களிடையே சந்திப்போம். மக்கள் தீர்ப்பளிக்கட்டும். நீங்கள் ஆட்சிக்கு வாருங்கள். நம்முடைய மதிப்பிற்குரிய நாடார் அவர்கள் முதன் மந்திரியாக வரட்டும். நான் மந்திரியாக வர முடியாது. ஏதாவது எனக்குச் சந்தர்ப்பம் இருந்தால் அங்கத்தினராக வருவேன். அப்போதும் உங்களிடத்தில் தான் சொல்லுவேன், எங்களுக்கு ஏதாவது செய்யுங்கள் என்று.

இன்னொரு அநியாயத்தைப் பாருங்கள். தமிழ்நாட்டு மக்கள் இந்த அரசு மீது முழுமையாக நம்பிக்கை இழந்து விட்டார்கள். மிகப் பெரும்பான்மை என்று தி.மு.க.-வினர் கூறுவது மாயை. நீங்களெல்லாம் உட்கார்ந்திருப்பது உருவமல்ல. மாயை. வெளியே யுள்ள நிலைமைக்கும், உள்ளேயுள்ள நிலைமைக்கும் சம்பந்தமே இல்லை. வெளியில் உள்ளவர்கள் உங்களைப் புகழ்பாடுகிறார்கள் என்பதற்காக ஏமாந்து விட வேண்டாம் என்று உங்களை எச்சரிக்கிறேன். வெளியே உள்ளவர்கள் ஆதரவு இல்லை என்று முன் பக்கத்தில் சொல்லிவிட்டு, இங்கே வெளியே உள்ளவர்கள்



1972 டிசம்பர் 11] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

புகழ் பாடுகிறார்கள். இது இரண்டாவது பக்கத்தில். இது டாக்டர் ஹாண்டேயின் பேச்சு. அவர் குறிப்பிலிருந்து நான் எடுத்த பேச்சு. நமது மதிப்பிற்குரிய நாடார் அவர்கள் பேசும்போது அல்ல, இடையில் பேசும்போது குறிப்பிட்ட கருத்தை நான் இங்கே கூறுகிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள அத்தனை மக்களும், ஒருவர் கூட பாக்கியில்லாமல், அத்தனை மக்களும், தமிழக முதலமைச்சர் ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று தான் கேட்கிறார்கள். இங்கே எதிர்க் கட்சியில் அமர்ந்திருக்கின்ற நாங்கள் அதைத் தான் பிரதிபலிக்கிறோம். எத்தனை பேர்? தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பேரும். ஒருவர்கூட இல்லை அத்தனை பேரும் இந்த மந்திரிசபை இருக்கக் கூடாது என்று விரும்புகிறார்கள். 13, 14 பேராக இருக்கிற இவர்கள், அவர்களுக்குப் பிரதிநிதிகளாக இருந்து ராஜிநாமாச் செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள். (பலத்த சிரிப்பு). 185 பேருடைய அதிகாரத்தைப் பெற்றவர்கள், இந்த 13, 14 பேருக்காக ராஜிநாமாச் செய்து விட்டு, வெளியே போக வேண்டுமென்றால் இதுதான் ஜனநாயகமா? இது ஜனநாயகமானால் நிச்சயமாக இந்த ஜனநாயகம் வேண்டாம். இது தொலைந்து நாசமாகப் போகட்டும். இது என்ன ஜனநாயகம்?

நூற்று எண்பத்தைந்து பேரைக் கொண்டிருக்கிற இந்த அமைச்சரவை. ஒரு 30 பேர் ராஜிநாமாச் செய் என்று சொன்னவுடனே ராஜிநாமா செய்துவிடுவார்களா? அது முடியுமா? ஏன் அவசரப்படுகிறீர்கள்? கொஞ்ச காலத்திற்குப் பொறுத்திருங்கள். காலம் வரும்போது நடப்பது நடக்கட்டும். நீங்கள் கூட்டாளியாக இருந்தீர்கள். இப்போது பிரிந்திருக்கிறீர்கள். அதனால் நீங்கள் ராஜிநாமாச் செய்துவிட்டு, போட்டியிடுங்கள். அப்படி நீங்கள் போட்டியிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உங்களோடு போட்டியிடுவார்கள். அப்போது நீங்கள் வெற்றிபெற்று இங்கே வந்துவிட்டால், 'பார், பார், மக்கள் எங்கள் பக்கம்தான் இருக்கிறார்கள். நாங்கள் தான் ஆளத் தகுதி உடையவர்கள் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதனால் நீங்கள் ராஜிநாமாச் செய்யுங்கள்' என்று கூறுங்கள். அப்போது அதைப்பற்றிச் சிந்திக்கலாம். அதுவரை பொறுத்துக் கொண்டிருங்கள்.

இந்த அமைச்சரவைக்கு எதிராக ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். உண்மை. அதிலே அதிகமானபேர் வந்தார்கள் என்று சொன்னார்கள். அதுவும் உண்மை. வந்தவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். வேடிக்கைப் பார்ப்பவர்கள் வந்தார்கள்; நடிகரைப் பார்க்க வந்தார்கள்; கூட்டத்தைப் பார்க்க வந்தார்கள். இப்படிப்பட்டவர்களை எல்லாம் பார்த்து அது பெரிய ஊர்வலம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அவர்கள் நடத்திய நாடகம் 40, 30 பேரை அனுப்பியதுதான். அந்த ஒன்றை வைத்துக் கொண்டு மக்கள் பூராவும் இந்த ஆட்சியை எதிர்க்கிறார்கள் என்று எப்படிச் சொல்லமுடியும்?

நான் நிச்சயமாகச் சொல்கிறேன்; தொகுதியிலிருந்து—ஒரு தொகுதியைச் சுற்றிப்பார்த்துவிட்டு வந்து சொல்கிறேன். அவர்களுக்கு எல்லாம் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இருக்கிறது. இங்குள்ள 185 பேருக்கும் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இருக்கிறது. உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள், இது உண்மையா இல்லையா என்று. முதலமைச்சரவர்கள் உங்கள் நெஞ்சத்திலே உள்ளதை இங்கே சொல்லட்டும் என்றுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

எங்கே பேசினாலும் 'ஊழல், ஊழல்' என்று சொல்கிறார்கள். அது ஒரு பாடம். இந்தப் பாடத்தைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் கிடையாது. நான் எம்.எல்.ஏ. ஆக வந்திருக்கிறேன். என்னுடைய கணக்கைக் கொடுத்திருக்கிறேன். அதை எடுத்துப் பாருங்கள். தவறு இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். ஏதாவது நிகழ்ந்திருந்தால் என்மீதுள்ள குற்றச்சாட்டைச் சொல்லுங்கள். அதில் உண்மை இருக்குமானால், அதைத் தாராளமாக—தைரியமாக ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜிநாமாச் செய்து விடுகிறேன். அதுதான் பொருத்தமானதாக இருக்கும். அதுவரை கொஞ்சம் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாதா? அவ்வளவு அவசரமா உங்களுக்கு? (சிரிப்பு).

நான் பேச வரும்போதே என்னை இருதரப்பின் சார்பிலும் பேசச் சொன்னார்கள். அதனால்தான் இருதரப்பிலே உள்ளவைகளைப்பற்றியும் பேசுகிறேன். இருதரப்பினர் குற்றங்களையும்



அலசிப் பார்த்து, அதன்பின்தான் சொல்கிறேன், தயவுசெய்து நீங்கள் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், என்று. 66 வரட்டும். (சிரிப்பு) தவறாகச் சொல்லிவிட்டேன். யாருக்கும் தவறு வருவது சாதாரணம். 1976 வரட்டும். அப்போது தேர்தலிலே போட்டியிடுவோம். மக்கள் யார்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அவர்கள் நாட்டை ஆளட்டும். அதுவரைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

தேளைப்பற்றி ஒன்று சொல்வார்கள். தேளை விட்டு வைத்திருந்தால் அது நிமிஷத்திற்கு நிமிஷம் கொட்டிக் கொண்டே இருக்கும் என்று. அதைப்போல இவர்களைக் கொஞ்சம் விட்டுவைத்திருந்தால் 'கொட்டு, கொட்டு, கொட்டு' என்று நிமிஷத்திற்கு நிமிஷம் கொட்டிக் கொண்டே இருக்கிறார்கள் (சிரிப்பு). நான் இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது. இருப்பினும் காலத்தின் போதாமையினால் முடியவில்லை. இந்த நேரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

"குன்றுபோல் அன்னம் குவித்திருக்கு என்னெதிரில்
உண்ணமுடியாதே ஊராள்வோன் கூர்வாளும்
வண்ணமொழி செல்வாக்கும் என்னைவந்து மறைக்குதடி"

என்று காதலன் தன் காதலியைப் பார்த்துச் சொல்வதாகப் பாடியிருக்கிறார். அதைப்போல இங்கே சொல்ல வேண்டிய விஷயங்கள் குன்றுபோல் குவிந்திருக்கிறது. அதை எடுத்துச் சொல்வதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை முதலமைச்சரவர்கள் தரமாட்டேன் என்கிறார்கள். காரணம், நேரம் அப்படி இருக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்கள் இரண்டு மணி நேரம் பேசுகிறார்கள். இரண்டு மணி நேரம் பேசிவிட்டோம் என்று பிரமிப்படைகிறார்கள். அதற்குப் பதில் சொல்லவில்லையே என்று மகிழ்ச்சியடைகிறார்கள். இரண்டு மணி நேரம் பேசிவிட்டதால், அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு விஷயம் இல்லை என்று அர்த்தமா? இல்லை என்றால் பதில் சொல்லத் தெரியாத கோழைகளா? அல்லது சோணைகளா? இரண்டு மணி நேரம் பேசியதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றும் இல்லையே. உங்கள் மனதிலே இந்த ஆட்சியைப்பற்றி என்ன நினைத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ஒரு சந்தர்ப்பத்தைக்

கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவுதான். இரண்டு மணி நேரத்திலும் பேசிய கருத்து என்ன என்று பார்த்தால் 2½ இஞ்ச் அளவு தான் இருக்கிறது. (சிரிப்பு). திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருப்பது தமிழகத்தினுடைய பெரிய துர்ப்பாக்கியமாகும் என்பதுதான் அவர்கள் பேசியது.

பல நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகு இப்போதுதான் தமிழன் தலை நிமிர்ந்து நடைபோடுகிறான். மனிதன் மனிதனாக வாழ்கிறான். அது இந்த நாட்டிற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமா? குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டிருந்த மக்களுக்குத் தண்ணீர் வழங்கியது இந்த நாட்டிற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமா? குடியிருக்க வீடில்லாமல் சென்னையிலே புழுக்களாய், நாய்களைப் போல நடுத்தெருவிலே திரிந்த லட்சோப லட்சம் மக்களுக்கு மாடிவீடுகட்டிக் கொடுத்து, குடியமர்த்தியது இந்த நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற துர்ப்பாக்கியமா? இந்த நிலைமைகளை எல்லாம் கொஞ்சம் எண்ணிப் பார்த்து நீங்கள் பேசவேண்டாமா? ஒரே ஒரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருப்பது உண்மைதான். அதுதான் "மேல் குடி மக்கள்" என்பவர்கள் நந்தனைப் போகவிடாமல் தடுத்தார்களே, அதைப்போல தடுத்துக் கொண்டிருந்த நிலை மாறி விட்டது, என்பது. அந்த நிலை இனி வர முடியாது. இனி அவர்கள் இங்கே வந்து ஆட்சி செலுத்த முடியாது. அந்த ஒரு துர்ப்பாக்கியத்தைத் தவிர வேறு எந்தவித துர்ப்பாக்கியமும் இங்கே நடந்துவிடவில்லை.

தீண்டாமையைப்பற்றி எல்லாம் பேசுகிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நினைத்திருந்தால் தன்னைவிட உயர்ந்த ஜாதியிலிருந்து தன்னுடைய மகனுக்குப் பெண் எடுத்திருக்க முடியும். "கண்மூடித்தனம் எல்லாம் மண்மூடிப் போக" என்பதற்கேற்ப தன்னுடைய அந்தஸ்தையும் பாராமல் தன்னுடைய மகனுக்கு ஒரு அரிசனப் பெண்ணை மண முடித்து வைத்திருக்கிறார்கள். மனிதன் மனிதனாக வாழ வேண்டும். எவனும் எவனுக்கும் அடிமை இல்லை என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இது இந்த நாட்டிற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியம் என்றால் இதை எங்கே போய்ச் சொல்வது?

இன்னொன்று பாருங்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது, அவர்கள் இப்போது இங்கே இல்லை. இருப்பினும்





அவர் குறிப்பிட்டதைச் சொல்கிறேன். "அகில இந்தியாவிலும் காங்கிரஸ் அல்லாத அமைச்சரவை இதுதான் என்று முதலமைச்சரவர்கள் பெருமிதம் கொண்டிருந்தார்கள். இப்போது அந்தப் பெருமிதம் போய்விட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் மனம் உடைந்துபோய் இருக்கிறது" என்று ஹாண்டே சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். இங்கே இருப்பவர்களில் யாருடைய மனம் உடைந்துபோய் இருக்கிறது? ஆளும் பொறுப்பிலிருப்பவர்கள் முகத்தில் —யாருடைய முகத்தில் புன்சிரிப்பு இல்லை? எல்லோரும் நம்பிக்கையோடும், புன்சிரிப்போடும்தான் இருக்கிறார்கள். "நம்பிக்கை இல்லை நம்பிக்கை இல்லை" என்று சொல்லிவிட்டதால் இங்கே யாரும் நம்பிக்கை இழந்துவிட்டவர்களாக இல்லை (சிரிப்பு) ஆட்சி மீது உள்ள நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறப் போகிறது என்று கேள்விப்பட்டவுடன் நான்கு ஐந்து நாட்களாக உடல் நலம் சரியில்லாமல் ஆஸ்பத்திரியிலிருந்த அமைச்சரவர்கள், பரிபூரண குணம் அடைந்து, இங்கே அதைக் கேட்பதற்காக ஓடி வந்திருக்கிறார்கள். பிடித்திருந்த நோயே போய்விட்டது. அவர்களைப் பார்த்தா மனம் உடைந்து போய்விட்டார்கள் என்று சொல்கிறீர்கள். இதற்குப் பெயர்தான் "சால்ஜாப்பு" என்பது. இந்த சால்ஜாப்பை வைத்துக் கொண்டு இந்தப் பேரவையை அல்லது இந்த அமைச்சரவையை நிச்சயமாக நீங்கள் மாற்ற முடியாது. மாற்றிவிட முடியும் என்று கனவு கண்டுகொண்டிருக்காதீர்கள். அந்தக் கனவு பலிக்காது. அதை அனுமதிக்க முடியாது. தமிழ்நாட்டு மக்களுடைய எண்ணங்களை, அமைச்சரவையினுடைய கருத்துக்களை விமர்சித்து, பரிசீலிப்பதுதான் இந்த மன்றத்தின் வேலை. மன்ற உறுப்பினர்களுடைய வேலையாக இருக்க வேண்டும். அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டும். அதுதான் நீங்கள் மக்களுக்குச் செய்யும் தொண்டாகும்.

உங்கள் பக்கம் பல பத்திரிகைகள் இருக்கின்றன. ஆம். ஒரு சில பத்திரிகைகள் தவிர மற்ற எல்லாப் பத்திரிகைகளும் உங்களுக்காக எழுதிக் கொண்டிருக்கின்றன. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதை எல்லாம் இங்கே விளக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஆழமாக நான் அதற்குள் போகவிரும்பவில்லை. எத்தனை

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 டிசம்பர் 11

பக்கங்கள் எழுதுகின்றன. ஒன்றிரண்டு பத்திரிகைகளைத்தவிர மற்ற எல்லாப் பத்திரிகைகளும் உங்களைப்பற்றியே எழுதுகின்றன என்றால் என்ன பொருள்? அவர்கள் உள்ளத்தில் கொண்டிருக்கிற அருவருப்பு.

எம்.ஜி.ஆர்-க்கு பாரத் பட்டம் கிடைத்தது. எந்தப் பத்திரிகையிலாவது போட்டதா? போட்டு "கும்பகோணத்துப் பார்ப்பான் குளத்தில் விழுந்து செத்தான்" என்பதைத் தவிர வேறு எந்தப் பத்திரிகையிலாவது இப்போது போடுவது போலத் தலைப்பக்கத்தில் படம் போட்டு எம்.ஜி.ஆர். பற்றி எழுதினார்களா? ஆனால் இன்றைக்கு என்ன செய்கிறார்கள்? "திரு ஐயங்கார், திருநீராட திருக்குளத்திற்குப் போக, திருப்படியில் கால் வைத்து, திருப்படி வழுக்க, திரு நீரில் விழுந்து, திரு. உயிர் விட்டார்" என்பதாக—மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருவைகுண்டம் போனார் என்று சொல்கிறார்—(சிரிப்பு) "திருவைகுண்டம் போனார்" என்பதாக திரு திரு என்று எத்தனை திருக்கள் போட்டு எல்லாப் பத்திரிகைகளும் எழுதுகின்றன. இதுதானா பத்திரிகை தர்மம்? அந்த தர்மத்தையா நாம் இங்கே அடிப்படையாக வைத்துக் கொண்டு பேசுவது?

மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் எத்தகைய பரிதாபகரமான நிலையில் இருந்துகொண்டு தமது மந்திரிசபையின்மீது நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவந்தார்களோ அத்தகைய ஆட்சியில், பரிதாபகரமான நிலையில் இந்த மந்திரிசபை இல்லை. அந்த அவலநிலை எல்லாம் இந்த மந்திரிசபைக்கு இல்லை. மிகத் தெளிவான பலத்துடன் இந்த மந்திரிசபை இருக்கிறது. நீங்கள் எல்லாம் பத்திரிகையில் தினம் தினம் எப்படி எப்படி எழுதினீர்கள்? திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து 85 பேர்கள் போய் விட்டார்கள், மறுநாள் பத்திரிகையில் 96 பேர் போய்விட்டார்கள், மறுநாள் 125 பேர்கள் வருவதாக இருக்கிறது. அடுத்து 165 பேர்கள் இந்தப் பக்கம் வந்திருக்கிறார்கள் என்றெல்லாம் எழுதினீர்களே, கடைசியில் பார்த்தால் 9 பேர்கள் தானே. "இந்த 9 பேர் வெட்டியது 3 குளம், அதிலே இரண்டு பாழ், ஒன்று தண்ணீரே இல்லை" அவ்வளவுதானா? உங்களது இந்தப் பிரச்சாரத்தினால் யார் மாறினார்கள்?



1972 டிசம்பர் 11] [திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்]

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மணியைப் பார்க்கிறார்கள். அதற்கு மரியாதை கொடுக்கவேண்டுமென்று கருதி, இந்தப் பேரவையில் அமைச்சரவைமீது நம்பிக்கை இருக்கிறது என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நான் என் கட்சியின் சார்பில் ஆதரித்து—இந்த அமைச்சரவைமீது நம்பிக்கை உண்டு—இந்த அரசுக்கு அச்சாணியாக இருக்கிற நாலரைகோடி மக்களுக்கு இந்த அமைச்சரவைமீது நம்பிக்கை உண்டு என்பதாக நாலரை இஞ்சு ஆணி வைத்து அடித்து, நம்பிக்கை உண்டு, நம்பிக்கை உண்டு என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பெரும்பான்மை பலத்துடன் கூட ஆளும் கட்சியாக விளங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையின் மீது நம்பிக்கை உண்டு என்பதாக மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்கிறேன். இதுபோன்ற ஒரு தீர்மானம் அவசியமே இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவை முன்னவர் சார்பாக தங்களுக்கு ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது மணி 12½ ஆகிறது. பார்வர்ட் ப்ளாக் கட்சித் தலைவர் திரு. பெருமாள் பேசவேண்டும். காங்கிரஸ் கட்சித் தலைவர் தமக்கு 1½ மணி வேண்டும் என்கிறார். ஆகவே திரு. பெருமாள் அவர்களது பேச்சோடு இன்றைய அவை நிகழ்ச்சியை முடித்துவிட்டு நாளையதினம் திரு. பொன்னப்ப நாடார் பேச்சு, அதற்குப் பதில் ஆகியவற்றை வைத்துக் கொள்வதற்கு அவையின் அனுமதியைப்பெற்று முடிவு செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெருமாள் அவர்களது பேச்சோடு இன்றையதினம் அவை நிகழ்ச்சி முடிவுறும். நாளையதினம் இந்த நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது விவாதம் தொடரும். திரு. ஏ. ஆர். பெருமாள் தம்முடைய பேச்சை இன்றையதினமே முடித்துக்கொள்ளவேண்டும்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** இந்த மாமன்றத்தில் ராஜாஜியால் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட சூழ்நிலை வேறு. இன்றைய தினம் கொண்டுவரப்பட்டுள்ள சூழ்நிலை வேறு. அதை

[திரு. எ. ஆர். பெருமாள்] [1972 டிசம்பர் 11

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகின்றபோது நமது முதல்வர் அவர்கள் தெளிவாகவும், விரிவாகவும் கூறினார்கள். இப்போது அவை விவாதத்திலே 3 கட்சிகள் வந்து கலந்து கொள்ளாமல் வெளியில் இருக்கின்றன. நாங்கள் கலந்து கொள்ளாத நேரத்தில் அவையில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதுதான் முறையா? இது ஜனநாயகத்திற்குச் சரி தானா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதில் நான் கொஞ்சம் கருத்து வேறுபாடு கொள்கிறேன். அந்த 3 கட்சிகளில் ஒன்று கம்யூனிஸ்டுக் கட்சி, மற்றொன்று இந்திரா காங்கிரஸ், அடுத்ததுதான் தி.மு.க.-இல் இருந்து பிரிந்துசென்ற எம்.ஜி.ஆர். கட்சி.

பாராளுமன்றத்தில் கட்சிமாறிகளுக்காகவே ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள். அது என்னவென்றால் கட்சிமாறிப் போவது என்றால் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு, எந்தக் கட்சிக்குப் போகிறார்களோ அந்தக் கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நிற்கவேண்டும் என்பது. அந்தச் சட்டம் ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்னால் வந்திருந்தால் இந்திரா காங்கிரஸ், எம்.ஜி.ஆர். கட்சி ஆகியவை தோன்றியே இருக்க முடியாது. எப்படி உச்சவரம்புச் சட்டம் வரப்போகிறது என்று தெரிந்தவுடன் தம்முடைய நிலத்தை மற்றவர்கள் பேரில் எழுதி வைத்துக்கொண்டு தப்பிப்பது தவறோ அதைப்போலவே தான் இதையும் தவறானதாகக் கருதவேண்டிய நிலை இருக்கிறது.

இவர்கள் சொல்கிற காரணம் இந்த அமைச்சரவைமீது மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டது என்பதாகும். எதைக்கொண்டு சொல்கிறார்கள்? மக்கள் நம்பிக்கை, மக்கள் நம்பிக்கை என்பதும், மக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று மிரட்டுவதும் எதை அடிப்படையாக வைத்து என்பதை ஆலோசிக்க வேண்டும். இன்றைய தினம் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மையான உறுப்பினர்களின் பலம் இருக்கிறது. அப்படி இருக்க ஏன் இப்படிச் சொல்கிறார்கள். ஒரு தொகுதியில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் போட்டியிடுகிறார். மற்ற கட்சியைச் சேர்ந்தவரும் போட்டியிடுகிறார். வெற்றிபெற்றவர்கள் 25 ஆயிரம் ஓட்டுக்கள் வாங்கியிருக்கலாம். தோற்றவர் 24 ஆயிரம் ஓட்டுக்கள் வாங்கியிருக்கிறார். 2,000 ஓட்டு வித்தியாசத்திலே ஒரு கட்சியைச் சேர்ந்தவர் வெற்றி பெறுகிறார். ஆகவே, அந்தத் தொகுதியிலே 24,000 பேர் அந்த



1972 டிசம்பர் 11] [திரு. எ. ஆர். பெருமாள்]

வேட்பாளரை எதிர்த்து ஓட்டுப் போட்டவர்கள் இருக்கிறார்கள். நான், காரியாபட்டி தொகுதியிலே, 32,000 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றேன். என்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முத்துவேல் சேர்வை 22,000 வாக்குகள் பெற்று தோற்றார். ஆகவே, எனக்கு எதிராக, 22,000 வாக்காளர்கள் வாக்குகள் அளித்தார்கள் என்பது ஜனநாயக உண்மைதான். அதிலே, 5,000 பேர், 10,000 பேர் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டியதன் மூலமாக என்னுடைய தொகுதியின் நம்பிக்கையை நான் இழந்துவிட்டேன் என்று கூறிவிட முடியுமா? அவர்கள் எதை வைத்து இப்படிக் கூறுகிறார்கள்? அமைச்சர்கள் பேசுகிற கூட்டங்களில் கல் எறியப்படுகிறது. அமைச்சர்களால் கூட்டங்களில் பேச முடியவில்லை, திரும்பி வந்துவிட்டார்கள், ஆகவே, நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்று கூறுகிறார்களா? கூறுகிறார்கள் என்று சொன்னால்கூட யார் கூறுகிறார்கள் என்று கேட்பார்கள். அமைச்சர்கள் பேசுகிற கூட்டங்களில் கல் எறிவது, அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத் தோழமை கட்சிகளுடைய கூட்டங்களிலே கல் எறிவது என்று சொன்னால், நானெல்லாம் ஏறத்தாழ 30 ஆண்டுகாலம் பொதுவாழ்க்கையிலே இருக்கிறேன். 50,000 பேர் கொண்ட பொதுக்கூட்டத்திலேகூட 50 பேரை வைத்து குழப்பத்தை உண்டுபண்ணி, கூட்டத்தை நடக்கவிடாமல் செய்ய முடியும். மீதியுள்ள 49,950 பேர் நம்பிக்கையை இழந்து விட்டார்கள் என்று பொருளா? எதை வைத்துக்கொண்டு அவர்கள், மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள்? ஏதோ ஒரு பேரணி நடத்தினார்கள், அதற்குப் பின்னாலே கதவடைப்பு நடத்தினார்கள். அதற்குப் பின்னாலே என்ன நடந்தது? வாக்காளர் பேரணி நடத்தினார்கள். முதலிலே நடத்தினார்களே பேரணி, அது எப்படி நடந்தது? அந்தப் பேரணியிலே 30,000 பேர் வந்திருப்பார்கள். அந்தப் பேரணி அண்ணா சிலை அருகே வந்தபொழுது அங்கு ஏணி இல்லாததன் காரணமாக, வழியிலே சென்றுகொண்டிருந்த கூட்டம் அண்ணா சிலைக்கு முன்பாகப் பெரும் கூட்டமாகக் கூடியது. அப்பொழுது புகைப்படம் எடுத்தார்கள். அந்தப் புகைப்படத்தை எல்லாப் பத்திரிகையிலும் போட்டார்கள். ஆக, ஊர்வலம் நடத்துவது, கதவடைப்பு நடத்துவது, இவைகள்தான் மக்கள் நம்பிக்கைக்கு அடிப்படை என்று வாதாடுகிறார்களா? என்னவென்றே எனக்குப் புரியவில்லை......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆகிய அனைவருடைய ஆலோசனையின்படி, இன்று மாலை 4 மணிக்கு பேரவையை வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம். நாளை வெள்ளப் பகுதிகளைப் பார்ப்பதற்கு அமைச்சர்கள் செல்லவிருப்பதால், இன்று மாலை 4 மணிக்கு அவையை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை அத்தனை பேர்களும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** ஆக, எந்த அளவை வைத்துக் கொண்டு மக்கள் நம்பிக்கையை இந்த அரசு இழந்துவிட்டது என்று சொல்கிறார்கள் ? எதற்கு ஆதாரமாக சட்டமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தலை வைத்துப் பாருங்கள், மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை வைத்துப் பாருங்கள், அப்பொழுது பார்க்கலாம் என்று கூறுகிறார்கள், நான் கேட்கிறேன். இதுபோன்ற கேள்விகளை ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சட்டமன்றத்திலேயுள்ள எதிர்க் கட்சிகள் அத்தனையும் கிளப்பினால் தேர்தல் நடத்த அந்த அந்த மாநில அரசுகளும் மத்திய அரசும் தயாராக இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

தி.மு. கழகத்திலிருந்து பிரிந்துசென்ற 9 பேர், ஸ்தாபனக் காங்கிரசிலிருந்து பிரிந்துசென்ற ஒருவர், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 8 பேர், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 6 பேர், 234 பேர் உள்ள அவையில், இவர்கள் மட்டும் வெளியிலேயிருந்து கொண்டு இந்த அமைச்சரவை ராஜினாமாச் செய்துவிட்டு தேர்தல் நடத்தவேண்டும், இந்தச் சட்டமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தவேண்டுமென்று சொன்னால் அது எந்தவகையான ஜனநாயகம் என்று கேட்கவிரும்புகிறேன்.

அவர்கள் சொல்வது ஏதாவது ஒன்றை நிலையாகச் சொல்கிறார்களா ? அவர்களுடைய பேச்சுக்களை கோர்வையாகப் பார்த்தால் தெரியும், ஏதாவது ஒன்றையாவது நிலையாகச் சொல்கிறார்களா ? முதலிலே, முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ராஜினாமா செய்யவேண்டுமென்று சொன்னார்கள். பத்திரிகையிலே வந்தது. அவர் மாத்திரம் ராஜினாமா செய்தால் போதும், இது முதலிலே சொன்னது. இங்கேயிருந்து பட்டியலைத் தூக்கிக்கொண்டு டெல்லிக்குப் போனார்களே, அங்கே, டெல்லியிலே, பத்திரிகைக்



காரர்களிடம் எம்.ஜி.ஆர். மாத்திரமல்ல, கல்யாணசுந்தரம் அவர்களும் சொன்னார். சட்டமன்றத்தைக் கலைக்கவிடமாட்டோம், முதல்வரோடு இன்னும் சில மந்திரிகள் ராஜினாமா செய்யவேண்டும், நீதிவிசாரணை வேண்டுமென்று சொன்னார்கள். அங்கேயிருந்து இங்கே வந்தவர்கள் என்ன சொன்னார்கள். சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை வையுங்கள் என்று சொன்னார்கள். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் முரண்பாடான கருத்துக்களைச் சொல்லி வந்தார்கள். முன்னாலே அப்படி சொன்னாயே, பின்னாலே ஏன் அப்படிச் சொன்னாய் என்று யாராவது கேட்டார்களா ? முன்னாலே சொன்னதற்கும் பின்னாலே சொன்னதற்கும் முரண்பாடு இருக்கிறதேயென்று யாராவது கேட்டார்களா ?

கணக்கைக் கொடுங்கள் என்று சொல்கிற அவர், 1969-ம் ஆண்டுக்குப் பின்னால் கணக்கு கொடுத்திருக்கிறார்களா ? கணக்கு அவர்கள் கொடுக்கவில்லையென்று மேடைக்கு மேடை பேசுகிற அவர் கணக்கு கொடுத்திருக்கிறாரா ? நாம் கணக்கு கேட்டால், நான் வருமான வரி இலாகாவிலே அப்பீல் செய்திருக்கிறேன், எனவேதான் இந்தச் சட்டமன்றத்திலே கணக்கு கொடுக்கவில்லையென்று சொல்கிறார். அவர் வருமான வரி இலாகாவுக்கு ரூ. 17 இலட்சம், ரூ. 18 இலட்சம் பாக்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்படி வந்தது ? வருமானத்திற்குத்தானே வரி. ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வந்தால், அதற்குத்தானே ரூ. 70,000, ரூ. 80,000 வரி வரும். வந்த வருமானத்திற்குத்தான் வரி. வருமானம் வரும் என்று உத்தேசிக்கப்பட்ட வருமானத்திற்கும் சேர்த்து வரியா ? வருமானம் வந்த பின்னால் அந்த வருமானத்தை அடிப்படையாக வைத்துத்தான் வரி போடப்படுகிறது. அப்படியானால், 17 லட்சம், 18 லட்சம் ரூபாய் பாக்கி என்று சொன்னால் அந்த 17 லட்சம், 18 லட்சம் ரூபாய் என்ன ஆனது ? அது எங்கே போனது ? அந்த பாக்கி எங்கே போனது ? இதையெல்லாம் கேட்க மாட்டார்களா ? ஆக ஒவ்வொரு துறையிலும், எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், எம்.ஜி.ஆர். கூறுகின்ற காரணங்கள் முன்னாலே சொன்னதற்கும் பின்னாலே சொன்னதற்கும் மாறி மாறித்தான் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், தமிழ்நாட்டிலே சாதாரணமாக இருக்கிற குழப்பம். அந்த தைரியத்திலேதான் பேசுகிறார் என்று நினைக்கிறேன். பெரிய நகரங்களிலே உள்ள தெருக்களிலே வித்தைக்காரர்கள். வேடிக்கை

காட்டக் கூடியவர்கள் வருவார்கள். அவர்கள் முதலிலே என்ன செய்வார்கள். ஒரு மேளத்தை வைத்துக்கொண்டு, டம் டம் என்று அடித்துக்கொண்டிருப்பார்கள். 4, 5 சிறுவர்கள் சேருவார்கள். பிறகு மேலும் சில சிறுவர்கள் சேருவார்கள். அந்த வித்தைக்காரர்கள் எல்லோரையும் ஓகோ என்று கூவி கைதட்டுங்கள் என்று கூறுவார்கள். உடனே அவன் எதிர்பார்த்த கூட்டம், 150, 200 பேர் கூடியபிறகு. அந்த வித்தைக்காரன் முதலிலே இதோ இருக்கிற கீரிக்கும் அதோ இருக்கிற பாம்புக்கும் நான் சண்டை விடப் போகிறேன் என்று கூறுவான். அந்தச் சண்டையை நான் இப்பொழுது விடமாட்டேன், கடைசியிலே விடுவேன் என்று சொல்லிவிட்டு, மாங்கொட்டையை வைத்து, மாஞ்செடி காட்டுவான், இப்படி பலவற்றைக் காட்டிவிட்டு, கடைசியிலே தாயத்தை விற்க வருவான். அதை வைத்து, இது என்ன பேறு, இது என்ன ரூபாய் என்று ஒருவனை சொல்லவைத்து இறுதியில் இந்த தாயத்தைக் கட்டிக்கொண்டால் நினைத்த காரியம் எல்லாம் நடக்கும் என்று சொல்லி தாயத்தை விற்பான். இதற்குள் ஏறத்தாழ 1, 1½ மணியாகும். அந்த கீரிக்கும் பாம்புக்கும் சண்டை விடுகிறேன் என்று சொன்னபோது இருந்த பாதிப் பேர் போயிருப்பார்கள். மிச்சம் இருக்கிற பாதிப் பேர் மறந்து போயிருப்பார்கள். ஆக, கடைசியிலே சண்டை விடாமலே மூட்டையை கட்டிக்கொண்டு போவான். நானும், 15, 20 வருஷமாக வித்தை காட்டுகிறவர்களைப் பார்த்திருக்கிறேன். ஒருநாளாவது இவ்வளவு நேரம் வித்தையைக் காட்டினாயே, ஏனப்பா, முதலிலே கீரிக்கும் பாம்புக்கும் சண்டை விடுவதாகச் சொன்னாயே, தாயத்தை விற்றுவிட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு போகிறாயே, அதைக் காட்டு, என்று யாராவது கேட்டிருக்கிறார்களா என்றால், இதுவரைக்கும் கேட்டதில்லை. கேட்டாலும் சண்டையைக் காட்டமாட்டார்கள். ஏனென்றால், கீரிக்கும் பாம்புக்கும் சண்டை விட்டால், ஒன்று பாம்பு சாகும், அல்லது கீரி சாகும். கீரி அநேகமாகச் சாவதில்லை. ஒரு ஊரிலே, ஒரு நாளைக்கு, 4 இடத்திலே அந்த வித்தையைக் காட்டுகிறார்கள். 4 சண்டைக்கு 4 பாம்புகளுக்கு அந்த வித்தைக்காரன் எங்கே போவான்? அதுபோல்தான் இதுவும்.

எதைச் சொன்னால் மக்கள் மத்தியிலே ஒரு பரபரப்பு ஏற்படுமோ, எதைச் சொன்னால் மக்கள் தங்கள் கவனத்தை திருப்பு



வார்களோ, அப்படி அவர்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய பிரச்சினையைக் கொண்டு வரவேண்டுமென்று கருதி இந்த அரசாங்கத்தின் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தினார் எம்.ஜி.ஆர். அவர்கள். அமைச்சர்கள் கோடி கோடியாக, லட்சம் லட்சமாக பணம் சேர்த்துவிட்டார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் பணக்காரர்களாகிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இந்தக் குற்றச்சாட்டு இந்த அரசுக்குப் புதுமையான குற்றச்சாட்டு அல்ல. 1971-ம் ஆண்டு தேர்தல் நடந்த காலத்தில் எம்.ஜி.ஆர். அவர்களே அந்தத் தேர்தலில் நமக்காக பிரச்சாரம் செய்துவந்த நேரத்திலே, இதைப்போன்ற குற்றச்சாட்டுகள் சர்வ சாதாரணமாக, அத்தனை பேர்மீதும் சுமத்தப்பட்டது. உங்களுக்கெல்லாம் நினைவிருக்கும் என்று கருதுகிறேன். ஒரு வால் போஸ்டர் போட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படத்தைப் போட்டு, நம்முடைய கலைஞர் முதல்வர் அவர்கள் அவரைப் பின்பற்றுவதைப் போல் படம் போட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களே, இன்னும் அநேக தம்பிமார்கள் கார் பங்களாக்கள் வாங்க வேண்டியிருக்கிறது. மீதமுள்ள தம்பிமார்களுக்கு காரும் பங்களாவும் வாங்கிக் கொடுக்கும்வரை நாங்கள் இருக்கிறோம் என்று ஒரு பத்திரிகை படம் போட்டது. அந்தப் பத்திரிகையினுடைய படத்தை எடுத்து நிறையப் போட்டு, அந்த பெரிய சுவரொட்டிகளை ஒவ்வொரு தொகுதியிலும் ஒட்டினார்கள். இது எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தெரியாதா? அந்தச் சுவரொட்டிகளுக்கு எல்லாம் அவர் அன்றைக்குப் பதில் சொல்லவில்லையா? என்ன காரணம் இன்றைக்கு திடீரென்று லஞ்சக் குற்றச்சாட்டு? நான் மதுரை மாநாட்டிலே இருக்கிறேன். அவர் மதுரை மாநாட்டிலே பேசுகிறார், பேசும்பொழுது வேகம் வருகிறது. அவர் பேசுகிறார்—தாய்மார்களைக் கேட்கிறேன், கூடியிருக்கிற ஆயிரக்கணக்கான பெரியோர்களைக் கேட்கிறேன், தம்பிமார்களைக் கேட்கிறேன். இந்த அரசு லஞ்சம் மிகுந்தது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள், இந்த அரசில் லஞ்சம் இருக்கிறதா சொல்லுங்கள் என்று கேட்டபொழுது, இல்லை இல்லையென்று அங்கேயுள்ள கூட்டத்தினர் பதில் சொன்னார்கள். அடுத்தாற்போல இன்னொரு கேள்வியைக் கேட்கிறார். இந்த அரசிலே ஊழல் மலிந்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் சொல்கின்றன, தாய்மார்களே உங்களைப்

பார்த்துக் கேட்கிறேன், ஊழல் இருக்கிறதா என்று கேட்கிறார், இல்லை இல்லை என்று கூட்டத்தினர் சொன்னார்கள். அப்படியே பெருமித உணர்ச்சியோடு இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்து பார்த்தீர்களா மக்களுடைய பதிலை என்று பேசுகிறார்கள். அது நடந்தது ஆகஸ்டு 5-ஆம் தேதி என்று நினைக்கிறேன்—என்னுடைய நினைவு சரியாக இருந்தால்—மதுரை மாநாட்டிலே மக்கள் மன்றத்திலே அன்றைக்குத் தீர்ப்புக் கேட்கிறார். கேட்டவர் யார்? இன்றைக்கு யார் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு என்று சொல்கிறாரோ அவரே அன்றைக்குக் கேட்டார். அதே எம்.ஜி.ஆர்.தான் அக்டோபர் 8-ஆம் தேதியன்று, எந்தக் கேள்வியை அவர் கேட்டு மக்கள் பதில் அளித்தார்களோ அதே கேள்வியை, ஆகஸ்டு 5-ஆம் தேதி கேட்ட அதே கேள்வியை அக்டோபர் 8-ம் தேதியன்று—இடையிலே 60, 61 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன—இவ்வளவு பெரிய லஞ்ச ஊழலை எப்படிக் கண்டுபிடித்தார் என்று தெரியவில்லை. கூறுகின்ற குற்றச்சாட்டுகளை ஆதாரப்பூர்வமாக முறையாகச் சொல்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. 8-ஆம் தேதி குற்றச்சாட்டு சொல்கிறார். 10, 11-ம் தேதி கட்சியிலிருந்து வெளியேற்றப்படுகிறார். உடனே புதுக்கட்சி ஆரம்பிக்கிறார், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று அதற்குப் பெயர் சூட்டுகிறார். உடனே இந்திரா காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து குற்றப் பட்டியலைத் தயாரிக்கிறார்கள். உடனே சட்டமன்றத்தைக் கூட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

நான் தங்கமணியின் அறிக்கையைப் பார்த்தேன், கல்யாண சுந்தரத்தின் அறிக்கையைப் பார்த்தேன். அன்றைக்கு தைரியம் இருந்தால் கூட்டுங்கள் என்று சொன்னார்கள். சொல்லி, 2, 3 நாட்களிலே சட்டமன்றம் கூட்டப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பு வருகிறது. சட்ட மன்றம் கூடியது. சபாநாயகர் வந்து அமர்கிறார். அவர் சபையை ஒத்திவைத்து விட்டுப்போய்விட்டார். சட்ட மன்றத்தைக் கூட்டுங்கள் என்று சொல்வது, கூட்டினால் ஒத்தி வைத்துவிட்டு போய்விடுகிறார்கள். அதற்குப் பின்னாலும் சட்ட மன்றம் கூடியபொழுது வேறு சபாநாயகர் வைத்து சட்டமன்றம் நடத்தப்பட்டால், சட்ட மன்றத்திலே உண்மையான சபாநாயகர் இல்லை ஆகவே கூட்டத்திற்கு வரமாட்டோம் என்று சொல்கிறார்





கள். உண்மையிலேயே குற்றச்சாட்டுகளைக் கூற தைரியம் இல்லாமல், சட்ட மன்றத்தின் மூலமாக அவற்றைக் கூறக்கூடிய ஆற்றல் இல்லாமல் எப்படியோ அரசுமீது கெட்ட பெயரை ஏற்படுத்தி விட்டோம், எப்படியோ அமைச்சர்கள்மீது லஞ்சக் குற்றச்சாட்டு சொல்லிவிட்டோம், உள்ளே போனால் ஆதாரமில்லாமல் கூற முடியாது, நீதிமன்றத்திற்குப் போனால் நிரூபிக்க முடியாது மாத்திரமல்ல, உரிய தண்டனையையும் நிரூபிக்க முடியாவிட்டால் பெற்றுக்கொள்ளவேண்டும், எப்படியோ வெளியிலே கிளப்பிவிட்டு ஒரு பொய்ப் பிரச்சாரத்தைச் செய்துவிட்டோம், அதைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற காரணத்தைத் தவிர வேறு எந்தக் காரணம் இருக்க முடியும்? 1952-ம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனை என்ற புத்தகம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதிலே திருநெல்வேலி மாவட்டத்திலேயுள்ள வயலி வாப்பட்டி என்ற கிராமத்தில் இரண்டு கண்மாய்கள் மராமத்து செய்ய டெண்டர் கேட்கப்பட்டு 6 லட்ச ரூபாய்க்கு வேலை செய்யப்பட்டு 60 டன் உணவு தானியம் உற்பத்தி செய்திருக்கிறார் என்று கொடுத்தார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சிக்காரர்கள் வயலி வாப்பட்டியில் உள்ள கண்மாய்கள் கட்டபொம்மன் காலத்தில் எப்படியிருந்ததோ அப்படியேதான் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு எம். பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள், அது வேறு ஒன்றும் இல்லை, அச்சுப் பிழை என்று சொன்னார்கள். அச்சுப் பிழை என்றால் 'ல' அச்சுப் பிழையாக வரலாம், 'ள' அச்சுப் பிழையாக வரலாம். அச்சுப் பிழை என்றால் ஒரு வார்த்தை அச்சுப் பிழையாகலாம், அல்லது ஒரு வரி அச்சுப் பிழை ஆகலாம். அப்படியில்லாமல் அந்தப் பக்கம் பூராவும், பாரா பூராவும் அச்சுப் பிழையா? உங்களை ஆட்சியிலே அமர்த்திய எங்கள் காலப் பிழை என்று தேவர் அவர்கள் சொன்னார்கள்.

ஊழல் ஊழல் என்று வெளியிலே சொல்லிக்கொண்டிருக்கின்றவர்கள் இங்கே வந்து சொல்லவேண்டும், ஊழலை உரித்துக்காட்ட வேண்டும். அப்படிச் செய்யவில்லை. கம்யூனிஸ்டு கட்சியில் ஊழல் நடந்திருக்கிறது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். சட்டமன்றத்திலே நான் அந்தக் கட்சியிலே எவ்வளவு ஊழல் இருக்கிறது என்று சொல்லட்டுமா? அன்றைக்கு இந்த மன்றத்திலே நன்றியைப்பற்றிப் பேச்சு வந்தது. இந்திய கம்யூனிஸ்டு

கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வோட்டுக்களைப் பெற்றது மட்டுமல்ல, பணத்தையும் பெற்று வந்தார்கள், அந்த நன்றியைக்கூட மறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது பேசிய ராஜபாளையம் உறுப்பினர் ஒருவர் பணம் யாரும் தரவில்லை என்று சொன்னார்கள். அப்பொழுது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உங்களுடைய தொகுதிக்கே கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இன்றைக்கு லஞ்சம் ஊழல் பற்றிப் பேசுகிற அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர், இல்லை நாங்கள் பணம் வாங்கவில்லை என்று சொன்னபொழுது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து ரூ. 5 ஆயிரம் தேர்தல் நிதியாகப் பெற்றுக் கொண்டதற்காக கையெழுத்துப் போட்ட ரசீதை இங்கு காட்டினார்கள். அப்பொழுது அவர் சொன்னார் அந்தப் பணம் என் கைக்கு வரவில்லை என்று சொன்னார்கள். இதுதான் ஊழல். எந்தப் பணம், கையெழுத்துப் போட்டு வாங்கப்பட்டதோ அந்தப் பணத்தை அந்த சட்டமன்ற உறுப்பினர் வாங்கவில்லை என்று சொன்னார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சி எப்பேர்ப்பட்ட பாரம்பரியம் கொண்டது, அந்தப் பாரம்பரியத்தைக் களங்கப்படுத்திவிட்டார் என்ற காரணத்தினாலே பொது மேடையில் அல்ல, சீரணி அரங்கத்தில் அல்ல, சட்டமன்றத்திலேயே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பொருளாதாரத் தன்மையை பொருளாதார மேம்பாட்டை அரசியல் நாணயத்தை முதலமைச்சர் அவர்கள் உரித்துக் காட்டிவிட்டார்கள் என்ற காரணத்தினாலேதான் அவர்கள் இன்றைக்கு பொய்ப் பிரச்சாரத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து 1971-ஆம் ஆண்டு தேர்தலின்போது பணம் பெறவில்லையா ? பணம் கொடுத்ததற்காக எங்களைத் தொடர்ந்து ஆதரியுங்கள் என்று கட்டாயப்படுத்தினார்களா ? ஆதரிக்க வேண்டுமென்று உடன்பாடு ஏதாவது இருக்கிறதா ? நீங்கள் பணம் பெற்றீர்கள், அதற்கு ஆதாரமாக ரசீது இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி தேர்தலுக்கு பணத்தை திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து பெற்றுக்கொண்டுள்ள உங்களைப்பற்றி இன்றைக்கு தென்பாண்டி மண்டலத்திலே ஒரு தகவல் உலவுகிறதே, நீங்களே சொல்வதைப் போன்ற பொதுமக்களிடம் பேசப்படும் அந்தப் பேச்சு, நீங்கள் சொல்வதைப் போன்ற கேள்விப்பட்ட அந்தத்





தகவல் என்னவென்றால் தமிழ்நாட்டில் உள்ள மோட்டார் முதலாளிகள் அத்தனை பேரும், 1976-ஆம் ஆண்டுக்குள்ளாக இங்கேயுள்ள வழித்தடங்கள் அத்தனையும் தேசியமயமாக்கப்படவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக அரசு முடிவெடுத்திருப்பதால், இங்குள்ள தனிப்பட்ட மோட்டார் முதலாளிகள் ஒரு பஸ்ஸுக்கு 1,000 ரூபாய் வீதம் கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கொடுத்து இம்மாதிரியான கலவரங்களை, குழப்பங்களைத் தூண்டிவிட்டு அரசாங்க பஸ்களைத் தாக்குங்கள் என்று சொன்னதாகப் பேச்சு வழங்குகிறதே, செய்தியாகப் பேசப்படுகிறதே, பொதுமக்களிடம் அப்படிப்பட்ட வதந்தி உலவுகிறதே என்று அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை உங்கள்மீது சுமத்த முடியாதா ?

நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையை வைத்திருப்பது கம்யூனிஸ்ட் கட்சி. நாட்டுடைமையாக்குவதில் செயல்பட்டுக் கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்கள் கல்வீச்சிற்கு ஆளாக்கப்படுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்கள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ்கள் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்படுகின்றன. நாட்டுடைமையாக்கப்பட்ட அரசின் சொத்துக்கள், மக்களின் சொத்துக்கள் சேதப்படுத்தப்படுகின்றன, அழிக்கப்படுகின்றன. அதை கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்து ஒரு வார்த்தை கூறியது உண்டா? இது அரசாங்கத்தின் சொத்துக்கள், இதைச் சேதப்படுத்தக் கூடியவர்கள் யாரானாலும் அந்த வன்முறையாளர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் தமிழ்நாட்டுக் கிளை கண்டிக்கிறது என்று சொன்னது உண்டா ? இன்றைக்குப் புதிதாகக் கட்சி தொடங்கியிருக்கும் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்டித்தது உண்டா? அரசாங்க பஸ்களை தீ வைத்துக் கொளுத்துவது, பெட்ரோல் ஊற்றிக் கொளுத்துவது, இதற்காக, தனிப்பட்ட மோட்டார் முதலாளிகள் பஸ் ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம் மொத்தமாக வசூல் செய்து நாட்டுடைமையாக்கும் திட்டத்திற்கு எதிராகக் கம்யூனிஸ்டுகளைத் தூண்டி விட்டிருக்கிறார்கள், மோட்டார் முதலாளிகளிடமிருந்து இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி பணம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களை நான் கம்யூனிஸ்ட் கட்சியின்மீது சுமத்துகிறேன். ஆதாரம் கேட்டால், நீங்கள் கொடுக்கும் ஆதாரம் இருக்கிறதே அதேபோல்

தகவல், பொதுமக்கள் மத்தியில் பேசப்பட்ட பேச்சு, முக்கியமான அந்தரங்கத்திற்கு உரிய பேச்சு என்று கூறுவேன். அவைகள் தானா, இன்னும் வேண்டுமென்று கேட்டால், கொடுத்த மோட்டார் முதலாளிகளைக் கோர்ட்டிலே நிறுத்தத் தயார்.

எம்.ஜி.ஆர். ரசிகர்கள், 15, 20 இளைஞர்கள், எம்.ஜி.ஆர். விலக்கி வைக்கப்பட்டதும், எம்.ஜி.ஆரை விலக்கிவிட்ட ஆத்திரத்தால், உணர்ச்சியால் பொங்கி எழுந்தார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் தொடர்ந்து அந்தக் கிளர்ச்சிகளை யார் நடத்துகிறார்கள்? கம்யூனிஸ்ட்காரர்களுக்கு இப்படிப்பட்ட கிளர்ச்சிகளுக்கு ஆள் மட்டும் கிடைத்தால் போதும், இயக்கத்தை நடத்துவதில் கெட்டிக்காரர்கள். அவர்களுக்கு ஆள்தான் வேண்டும். ஒரு ஊரிலே ஓரேயொரு கம்யூனிஸ்ட் இருந்தால் போதும். யாராவது பத்துப் பேர் வேறு காரணத்திற்காகச் சண்டை போட இருந்தாலும், அந்தக் காரணத்தைத் தங்களுக்கு ஆதரவாகத் திருப்பிச் சண்டை போட வைத்து வேடிக்கை பார்ப்பதிலே பலே கைதேர்ந்தவர்கள் கம்யூனிஸ்ட்கள். அதேபோல் இன்றைக்கு எம்.ஜி.ஆர். ரசிகர்களை லாவகமாக உபயோகிக்கிறார்கள். வன்முறைகளை எப்படியெப்படி உபயோகிக்க வேண்டுமோ அப்படி உபயோகிக்கிறார்கள். எம்.ஜி.ஆர். யாருடைய கைப்பாவையாக மாறிவிட்டார் என்றால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கைப்பாவையாக மாறிவிட்டார். இங்கே உட்கார் என்றால் உட்காரக்கூடிய நிலையில், பேசு என்றால் பேசக்கூடிய நிலையில் எம்.ஜி.ஆர். இருக்கிறார். பேசிக்கொண்டிருக்கும்பொழுது கே. டி. கே. தங்கமணியைக் கேட்டார்கள், என்ன, சொல்லலாமா என்று. அவர், சொல்லுங்கள் என்று சொன்னார். பிறகு சொல்கிறார். உட்காரலாமா, எழுந்திருக்கலாமா என்று அவரைக் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய பாவையாக இருக்கிறார். இன்னும் கொஞ்சம் நேரம் இருங்கள் என்றால் இருக்கிறார். இப்படி இங்கே சட்டமன்றத்திலேயே, நம்முடைய பக்கத்திலேயே இவ்வளவு நடந்தால் நமக்குத் தெரியாமல் எவ்வளவு நடக்குமோ? உட்கார் என்றால் உட்காருவது, எழுந்திரு என்றால் எழுந்திருப்பது, நிற்கச் சொன்னால் நிற்பது என்று, நம்முடைய கண்ணுக்கு முன்னாலேயே, எம்.ஜி.ஆரை உட்காரச் சொன்னால் உட்காருகிறார், எழுந்து பேசு என்றால் பேசுகிறார். பேசாமல் இரு என்றால் பேசாமல் இருக்கிறார். இப்படி நம்முடைய கண்ணுக்கு எதிரிலேயே நடக்கிறது



என்றால் அங்கே எவ்வளவோ தெரியவில்லை. சத்தியா ஸ்டூடியோவிலே, இராமாவரம் தோட்டத்திலே, எம்.ஜி.ஆர். பிக்சர்ஸிலே, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திலே எத்தனையெத்தனையோ, யார் கண்டார்கள்? ஆக இது, எம்.ஜி.ஆர். அவர்கள் தனிப்பட்ட ஆத்திரத்திற்குப் பலியாகி, தனிப்பட்ட உணர்ச்சிகளுக்குப் பலியாகி, தன்னை எவ்வளவு கீழ்ப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் எடுத்துக் காட்டுகிறது.

நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எந்தக் குற்றத்தைச் செய்தார்கள்? எந்தத் தவறைச் செய்தார்கள்? உங்களுக்கு ஏதாவது குற்றம் என்று தெரிந்தால் தவறு என்று தெரிந்தால் பல மேடைகளிலே சொன்னதை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லலாமே? கலைஞருடைய கையைப் பிடித்துக்கொண்டு கேட்பதற்கு உரிமை இல்லையா? இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறாய், பதில் சொல் என்று கேட்கலாமே. ஆனால் அவரால் கேட்க முடியாது. அதற்குக் காரணம், உங்களுடைய மனச்சாட்சி. மனச்சாட்சியைத் திருப்பிப் பாருங்கள். இந்த ஐந்தாண்டுக் காலத்தில் எந்தெந்தத் துறைகளுக்கு நாம் சிபாரிசு செய்தோம், யார் யாருக்கு நாம் சிபார்சு செய்தோம், அதில் எத்தனையெத்தனை நிறைவேற்றப்பட்டன, எத்தனையெத்தனை நிறைவேற்றப்படவில்லை என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நிறைவேற்றப்பட முடியாமல் இருந்தால் அதற்கு என்ன காரணம்? அது சட்ட விரோதமாக இருந்தாலோ அல்லது இப்படிச் செய்தால் சேலிக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதாலோ, ஆக இந்த இரண்டைத் தவிர, நியாயமான காரியங்களாக, சட்ட ரீதியான காரியங்களாக, ஏற்கத் தகுந்த காரியங்களாக, எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்படாத காரியங்களாக இருந்தால் அத்தகைய காரியங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா? எந்தக் காரியங்களை நீங்கள் சொன்னீர்களோ அந்தக் காரியங்கள் சட்டவிரோதமான காரியங்கள் என்று கருதப்பட்டால், அந்தக் காரியங்களைச் செய்யாமல் விட்டிருந்தால் அதைக் குற்றச்சாட்டுகள் என்று கூறுகிறீர்கள். இதை எந்த வகையில் நியாயம் என்று ஏற்றுக் கொள்வது?

ஒரு தனிப்பட்ட மனிதர், எங்கேயோயிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தவர், இங்கே வந்து சினிமா நட்சத்திரமாக ஆனவர்—யாரும்

ஆகலாம்—எந்த சினிமா நட்சத்திரத்திற்கு இவ்வளவு பெரிய கியாதி, இவ்வளவு பெரிய புகழ் இருந்தது என்பதற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் மனச்சாட்சியிருந்தால் பதில் சொல்லட்டும். நீங்கள் என்ன அப்படிப்பட்ட மிகச் சிறந்த நடிகரா ? சிவாஜிகணேசனைக் காட்டிலும், கட்டபொம்மன் நாடகத்தில் அவர் மாதிரி உங்களால் நடிக்க முடியுமா ? ஆனால் உங்களை உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழகம். உங்கள் நடிப்பிற்கு இலக்கணம் வகுத்து, நடிகர் திலகத்தைக் காட்டிலும், மக்கள் திலகம் என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். மேடைகளில் அப்படி இப்படி என்று பேசி நம்ப வைத்தார்கள் நாட்டு மக்கள் மத்தியில். அதனால் உங்களுக்கு ஏற்பட்ட அந்தப் புகழ், அந்தச் சிறப்பு உங்களுக்குச் சினிமாத் தொழிலில் வெற்றியை உருவாக்கியது. கனித் நன்மையால், தனி நபரின் திறமையால் கிடைத்த வெற்றி அல்ல. அந்த வெற்றியைப் பயன்படுத்தி இந்த நாட்டு மக்களின் மத்தியில் ஏழை பங்காளன் என்று நம்ப வைத்தீர்கள். கொடை வள்ளல் என்று நம்ப வைத்தீர்கள்.

உங்கள் கொடை வள்ளலைப்பற்றி எனக்குத் தெரியாதா ? முத்துராமலிங்கத் தேவர் கல்லூரிக்கு 10,000 ரூபாய் பணம் கொடுக்கிறேன் என்று அறிவித்துவிட்டு, பத்திரிகைகளில் அறிக்கை கொடுத்துவிட்டு, பிறகு ஆயிரம் ரூபாயை மாத்திரம் கொடுத்து பாக்கி இன்னும் 9,000 ரூபாயைக் கொடுக்கவில்லையே, எங்களுக்குத் தெரியாதா உங்கள் வள்ளல் தன்மை.

நான் இதே நேரத்தில் உங்களைக் கேட்கிறேன். உங்கள் வள்ளல் தன்மையைப்பற்றி எடுத்துக்கொண்டால் எத்தனை காரியங்களுக்கு நீங்கள் நன்கொடை கொடுத்திருக்கிறீர்கள் ? அந்த நன்கொடைப் பணம் எங்கிருந்து வந்தது ? அதற்குரிய வருமானம், அதற்குரிய கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அதை விட்டுவிட்டு யாருடைய கணக்கை யார் கேட்பது ? ஒருவரைக் குற்றம் சாட்டுவதற்கு முன்னால் முதலிலே தன்னைச் சுத்தப் படுத்திக்கொண்டு குற்றம் சாட்ட வேண்டும். இங்கே உட்கார்ந்திருந்தால் அத்தனை பேரும் கறைபடிந்த கையை உடையவர்கள். ஆனால் அவர்கள் அப்படியே அவர் பின்னால் போய் உட்கார்ந்தால் [illegible] கறை படிந்த கை இல்லையா ? கலைஞரிடம் [illegible] திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும்





வரையில் கறை படிந்த கை, அங்கிருந்து எம்.ஜி.ஆர். பக்கம் வந்துவிட்டால் அவர்கள் கை கறை படியாத கை. உங்கள் பக்கத்தில் இருப்பவர்களைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா ? எவ்வளவு பரிசுத்தமானவர்கள், அவர்களெல்லாம் யார் ? தெரியாதா ?

சுவாமி இராமகிருஷ்ணரின்மீது அவரது தொடையில் ஒரு பவுனை வைத்தால் ஜபத்திற்குத் தடையாக இருப்பதால் அது கிடு கிடு என்று ஆடுமாம். பவுனை எடுத்துவிட்டால் நின்றுவிடுமாம். அப்படி உங்கள் பக்கத்திலிருப்பவர்களெல்லாம் சுவாமி இராம கிருஷ்ணர்களா, விவேகானந்தர்களா, இராமலிங்க அடிகளா ? அவர்களுடைய பரிசுத்தத்தை இந்த நாடு நன்கு அறிந்திருக்கிறது. அவர்களுடைய அரசியல் நாணயத்தை இந்த நாடு தெளிவாக உணர்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட நபர்கள்தான் உங்கள் பின்னால் வரமுடியுமேதவிர, திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஏற்கெனவே குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ஒதுக்கித் தள்ளி வைக்கப்பட்டவர்கள், ஊழல் லஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள்தான் உங்கள் பின்னால் வர முடியுமேதவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணிபுரியக்கூடிய உண்மையான தொண்டர்கள், பரிசுத்தமான தொண்டர்கள் யாரும் உங்கள் பின்னாலே வர முடியாது.

நான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறேன் என்று சொல்கிறார்கள். எனக்குப் பெரிய பட்டத்தையே சூட்டுகிறார்கள். பெருமாளா, அவர் ஃபார்வார்ட் பிளாக் கட்சித் தலைவர் இல்லையே. அவர் கலைஞரின் கையாள். இது எனக்குக் கொடுத்திருக்கும் பட்டம். கலைஞர் கருணாநிதியின் கையாள் என்று மேடைக்கு மேடை பேசுகிறார்கள். அவர் ஃபார்வர்ட் பிளாக் கட்சியின் தலைவர் அல்ல. கலைஞர் கருணாநிதியின் கையாள் என்று சொல்கிறார்கள். நான் அதை மனப்பூர்வமாக, மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். அதற்குக் காரணம் எங்களுக்குத் தெரியும்.

இருபதாண்டுக் காலம் பார்வேர்டு ப்ளாக் கட்சியின் தொண்டர்கள். முத்துராமலிங்கத் தேவரின் தொண்டர்கள் என்ன பாடு பட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். எவ்வளவு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

எங்கள் மறக்குலத்து மங்கையர் கற்பழிக்கப்பட்டார்கள், துப்பாக்கியால் சுடப்பட்டார்கள் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். எங்கள் தலைவரைச் சிறைச்சாலையில் போட்டு எப்படிக் கொன்றார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதற்குப் பின்னால் நாங்கள் எல்லாம் இந்த ஆட்சி மாறாதா என்று ஏங்கினோம். நல்லாட்சி வாராதா என்று கனவு கண்டு கொண்டிருந்தோம். அதற்கெல்லாம் விடை காணும் வகையில்தான் இன்றைக்குக் கலைஞர் ஆட்சி இருந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் நாங்கள் இந்த ஆட்சிக்குப் பக்கபலமாக இருக்கிறோம். ஏதோ அவர்கள் நினைப்பது போல் கலைஞரின் கருணையால், தி.மு.க. அரசாங்கத்தின் தயவால் எங்களைப் போன்றவர்கள் சௌகரியமாக இருக்கிறோம் என்று கூறுவது சரியல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி மட்டும் சொல்லவில்லை; தோழமைக் கட்சிகளும் எப்போது வேண்டுமானாலும், எந்த விசாரணைக்கும் நாங்கள் தயார் என்று கூற விரும்புகிறேன். ஏதோ இங்கே கலைஞரின் ஆட்சியை எதிர்ப்பவர்கள் பரிசுத்தவாதிகள் போலவும், ஆதரிப்பவர்கள் எல்லாம் கறை படிந்தவர்கள் போலவும் பேசுகிறார்கள்.

குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இருக்கிறதா? எம்.ஜி.ஆர். அவர்கள் தாராளமாக இங்கே உட்கார்ந்துகொண்டு குற்றச்சாட்டுப் பட்டியலை வாசிக்கலாமே. ஜனாதிபதியிடத்தில் கொடுத்தது வேறு. சட்டமன்றத்தில் இரண்டாவது பட்டியல் கொடுக்கப் போகிறோம்: இனிமேல் ஜனாதிபதியிடத்தில் கொடுக்கப் போவதில்லை என்று கூறுகிறார்கள். எங்கே இரண்டாவது பட்டியல்? இங்கே அவர்களும் ஏதோ ஒரு காகிதத்தை வைத்துக்கொண்டு வாசிக்கப் போகிறார்கள் என்று நினைத்தேன். வந்தார்கள், போய்விட்டார்கள். வெளியில் போய் என்ன பேசுகிறார்கள்? உண்மையான சபாநாயகர் வந்தால்தான் சட்டசபைக்கு வருவோம் என்று கூறுகிறார்கள். அடாடாடா....! உண்மையான சபாநாயகர் யார்? பத்துப் பேர், இருபது பேர் ஏற்றுக் கொள்ளுகிறவர்கள்தான் உண்மையான சபாநாயகரா? 184 சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருவரை சபாநாயகராக ஏற்றுக்கொண்டிருக்கிற இடத்தில் 24 பேர் வெளியே இருந்துகொண்டு அவர் உண்மையான சபாநாயகர் இல்லை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொண்டார்கள். அவர்கள் உண்மையான சபாநாயகர் இங்கே இல்லை என்று சொல்லவில்லை. மாமேதை



ராஜாஜி அவர்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த ஸ்பீக்கர் சட்ட முறையாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபாநாயகர் அல்ல; துணைச் சபாநாயகர். சபாநாயகர் இடம் காலியாக இருக்கிறது.

**திரு. ஏ. ஆர் பெருமாள் :** துணைத் தலைவர் என்றே வைத்துக் கொள்ளுங்கள். துணைத் தலைவரை ஏற்றுக் கொண்டிருப்பது உண்மை. அவர்கள் இங்கே வந்து தங்களுடைய குற்றச்சாட்டைக் கூறியிருக்கலாம். அவர்களுக்கு மிகப் பெரிய செல்வாக்கு வெளியே இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் செல்வாக்கு தங்களுக்கு இருப்பதாக ஒரு மாயையில் இருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்கூடச் சொன்னார்கள்— 'வெளியே போய்ப் பார்த்தால் தெரியும், உள்ளே இருந்துகொண்டு பேசுகிறீர்களே' என்று. நாங்கள் வெளியே போய்ப் பார்த்துத்தான் வந்திருக்கிறோம். யார் எதிர்க்கிறார்கள்? 1967-ம் ஆண்டுத் தேர்தலிலும், 1971-ம் ஆண்டுத் தேர்தலிலும் நம்மை எதிர்த்து யார் வேலை செய்தார்களோ, யார் எதிர்த்து வாக்களித்தார்களோ அவர்கள்தான் இன்றைக்கும் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக வந்திருக்கக்கூடியவர்கள் எம்.ஜி.ஆர். ரசிகர்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள்? போகிற காரை நிறுத்துகிறார்கள். 'எம்.ஜி.ஆர். வாழ்க, கருணாநிதி ஒழிக' என்று எழுதுகிறார்கள். சிலபேர் 'எம்.ஜி.ஆர். வாழ்க' என்று மட்டும் எழுதி விட்டு விடுகிறார்கள். பத்து நாட்கள் இப்படி நடந்ததைப் பார்த்தோம். அதற்குப் பின்னால் பெரிய ஒரு பேரணி; அதற்குப் பின்னால் கடை அடைப்பு; பிறகு வாக்காளர் பேரணி. அதிலே 150 பேர், அதிகபட்சம் ஆயிரம் பேர், இல்லை ஐயாயிரம் பேர் என்றே வைத்துக் கொள்ளலாம். முதலமைச்சர் வீட்டுக்குச் சென்றவர்கள் 500 பேர்தான். ஐயாயிரம் பேரே ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று சொன்னால் ராஜினாமாச் செய்து விடவேண்டுமா என்ன?

இப்படி ராஜினாமா செய் என்று சொல்லுகிறார்களே, அப்படி ஒரு சட்டம் இருக்கிறதா என்று எனக்குத் தெரிந்த வக்கீல்களிடம் எல்லாம் கேட்டேன். அவர்கள் விடிய விடியச் சட்டப் புத்தகங்களை எல்லாம் புரட்டிப் பார்த்துவிட்டு அப்படி ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இது ஒரு தோற்றம். மக்கள் இந்த

அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள். மக்கள் நம்பிக்கை போய்விட்டது, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, மத்திய அரசாங்கம் தலையிட வாய்ப்பு உண்டா ? எப்படியாவது மத்திய அரசைத் தலையிட வைக்கவேண்டும் ; தலையிட வைத்து இந்த அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும். இந்திரா காங்கிரசார் இந்தியா முழுவதும் ஆளுகிறார்கள், தமிழகத்தைத்தவிர, டெல்லியிலும் அவர்கள்தான் ஆளுகிறார்கள். 1971-ம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்னால் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவு இல்லாமல் நாடாளுமன்றத்தை நடத்த முடியாத நிலை இருந்தது.

ஜனாதிபதி தேர்தல் வந்த நேரத்தில் நம்முடைய அரசியல் மேதை ராஜாஜி அவர்கள் முதல்வர் அவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். வீட்டுக்கு வந்து நீங்கள் சஞ்சீவ ரெட்டிக்கு ஓட்டுப் போடவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். அன்றைக்கு ராஜாஜி அவர்களுடைய ஒத்தாசையுடன் பதவிக்கு வந்திருந்தால் அன்றைக்கு ராஜாஜி அவர்கள் சொன்னதுபோல் சஞ்சீவ ரெட்டிக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவைக் கொடுத்திருந்தால் இந்திய அரசியல் வரலாறே எப்படி மாற்றப்பட்டிருக்கும் என்பதை இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் சஞ்சீவ ரெட்டிக்கு ஆதரவு கொடுக்கவில்லை. எந்தப் பக்கம் முற்போக்கு அணி இருக்கிறதோ அந்தப் பக்கம் எப்போதும் நம்முடைய முதல்வர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். பிரதமர் இந்திரா காந்தியைப் பிற்போக்குவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கவிழ்க்க வேண்டுமென்று வேலை செய்த நேரத்தில் ஆதரவாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசை இந்திரா காந்தி கவிழ்க்கத்தான் வேண்டும் ; உபகாரம் செய்தவர்களுக்கு இப்படிப்பட்ட பிரதி உபகாரத்தைச் செய்யத்தான் வேண்டும்.

நான் சொல்லுகிறேன். பார்வர்டு பிளாக் கட்சியின் கருத்தாகச் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாக அல்ல, முதல்வர் அவர்கள் அனுமதி பெற்றுச் சொல்லுகிற கருத்து அல்ல, சுயேச்சையாகச் சொல்லுகிறேன். பெரும்பான்மையாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசைக்





கவிழ்த்துப் பாருங்கள்; கவிழ்த்துவிட்டுத் தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்று பாருங்கள். யாரோ வருகிறார்கள் என்பதற்காகப் பத்தாயிரம் பேர் கூடுகிறார்கள் என்றால் இந்த அரசுக்கு மக்கள் நம்பிக்கை போய்விட்டது என்று அர்த்தமா ? பெரும்பான்மை ஆதரவுடன் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்க்க வேண்டுமென்ற அளவுக்கு இந்திரா காந்தி அவர்கள் அவ்வளவு அறியாமையில் மூழ்கி இருக்க மாட்டார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன், இந்த மந்திரிசபை ஆறு மாதத்தில் போய்விடும், மூன்று மாதத்தில் போய்விடும், இரண்டு மாதத்தில் போய்விடும் என்று—நேற்றுகூட ஒரு ஆருடக்காரர் சொல்லியிருக்கிறார், இரண்டு மாதங்களுக்குள்ளாக இந்த சட்டமன்றம் கலைக்கப்படும் என்று. இரண்டு மாதங்களுக்குள்ளாக. பிறகு அந்தப் பதவிக்காக ஏன் கோர்ட்டுக்குப் போகவேண்டும் ?

இந்த சர்க்கார் 1976 கடைசிவரையில் இருக்கும் என்று சொல்கிறார்களா என்று பார்த்தால் ஆறு மாதங்களில் போய் விடும், மூன்று மாதங்களில் போய்விடும், இரண்டு மாதங்களில் போய்விடும் என்று குறைவாகச் சொல்கிறவர்கள் முற்போக்குவாதிகள் என்ற நிலையில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பெருவாரியான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவையில் உட்கார்ந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகமும் உட்கார்ந்திருக்கிறது. தோழமைக் கட்சிகளும் உட்கார்ந்திருக்கின்றன. நான் காங்கிரஸ் கட்சியில் முப்பதாண்டுகள் இருந்தவன். தேச விடுதலைக்காக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவன் நான். போராடி வெள்ளை ஏகாதிபத்தியத்தில் இருந்து நாம் விடுதலை பெற்றோம். இருந்தும் நமக்குக்கூட அந்த மெஜாரிட்டி இல்லை. காங்கிரஸ் கட்சிக்குச் சட்டமன்றத்தில் கலைஞருக்குக் கிடைத்துள்ளதுபோல் உள்ள மெஜாரிட்டி கிடைக்கவேயில்லை. இது வரலாறு. காரணம் என்ன ? அவ்வளவு பெரிய பெரிய தியாகங்கள் செய்து நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த கட்சிக்கே இவ்வளவு பெரிய மெஜாரிட்டி கிடைத்ததில்லை. ஆனால் தமிழக மக்கள் கலைஞருக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 184 பேர்களைத் தந்திருக்கிறார்கள். 184 பேர்கள். இதை எப்படி உடைப்பது என்று ஒரு சதி. அந்தச் சதிக்குப் பலியானவர் திரு. எம்.ஜி.ஆர். நான்கூடக் கேள்விப்பட்டேன். அவருக்கு நிறைய

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1972 டிசம்பர் 11

வாக்குறுதிகள் கொடுத்தார்களாம். அறுபது, எழுபது பேர்கள் அவர்களோடு வந்துவிடுவார்கள் என்று எண்ணினார்கள். கடைசியில் பத்துப் பேர்களே போனார்கள். இப்போது அவர்கள் கேட்கிறார்கள், தமிழகத்தையே ஒரு தேர்தல் களமாக்கி நான் தேர்தலுக்கு நிற்கிறேன், கலைஞர் அவர்களும் நிற்கவேண்டும், நிற்பார்களா என்று கேட்கிறார்கள். 4½ கோடி மக்களிடையே அப்படி ஒரு தேர்தல் நடத்த சட்டமிருக்கிறதா? தமிழ்நாட்டையே ஒரு தொகுதியாகக்கொண்டு அதில் வேட்பாளராக நிற்கிறார் எம்.ஜி.ஆர். அவர்களை அமெரிக்காவிற்கு அனுப்பினால் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம். ஆனால் இந்த நாட்டில் அப்படி இல்லை. அப்படித்தேர்தல் நடத்துவதற்கு யார் பணம் கொடுப்பது யார் செலவழிப்பது? ஆக பிரச்சினைகளை நேரடியாகச் சமாளிக்க முடியாமல் சுற்றி வளைத்துத் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கோபாலபுரத்தையே கருணாநிதி வாங்கிவிட்டாராம். அங்குள்ள வீடுகள் எல்லாம் அவருக்கே சொந்தமாம். கோபாலபுரத்து கோமான், அங்கு ஒரு வீடுகூட பாக்கியில்லை, அவ்வளவு வீடுகளும் கருணாநிதிக்கே சொந்தம் என்று சொல்லவில்லையா? கோடிக்கணக்கில் சம்பாதித்துவிட்டார் என்று எடுத்துச் சொல்லவில்லையா? ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சர், ஒரு கழகத்தின் தலைவர், அவருக்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது என்ற உணர்வே இல்லாமல் அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். அதற்கு முதல்வர் அவர்கள் சரியான பதிலைத் தந்திருக்கிறார்கள். என் சொத்து முழுவதையும், என் குடும்பத்தில் யார் யார் சொத்து சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்களோ அவர்கள் சொத்துக்களை எல்லாம் சேர்த்து பத்து லட்சம் ரூபாய்க்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் பத்து லட்சம் கொடுத்துவிட்டு அவைகளை எடுத்துக் கொள்ளட்டும். அதுவும் மொத்தமாகக் கட்டமுடியாது என்றால் தவணைகளில் கட்டுங்கள், அதில் ஐந்து லட்சத்தைத் திராவிட முன்னேற்றக் கழக நிதிக்குத் தந்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். கோபாலபுரத்திற்கே சொந்தக்காரர், கோபாலபுரத்துக் கோமான், கோபால்புரத்திலுள்ள எல்லா வீடுகளுமே அவருக்குத் தான் சொந்தம் என்றால் கோபாலபுரமே பத்து லட்சத்திற்குத் தான் பெறுமா? எந்தக் கிறுக்குப் பயலாவது கொடுப்பானா? சென்னையில் ஒரு வீடே ஒன்றரை, இரண்டு லட்சம் ரூபாய் பெறும்



1972 டிசம்பர் 11] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

என்று கேள்விப்படுகிறேன். அங்கு சுமார் 150, 200 வீடுகளாவது இருக்கும் என்று கருதுகிறேன். அவற்றைப் பத்து லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டு எடுத்துக்கொள்ளுங்கள், சினிமாப் படங்களே தேவை இல்லை.

திரும்பவும் ஒன்று கேட்டார்கள். உங்கள் சொத்துக்கள் முழுவதையும் இருபது லட்சம் ரூபாய்க்குக் கொடுங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோம், கழகத்திலிருந்து நிதி வசூலித்துத் தந்துவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சவாலுக்கு மழுப்பாமல் சரியாகப் பதில் சொல்லுங்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கு அவர்கள், 67 தேர்தலில் பத்து லட்சத்திற்கு ஊர் ஊராக நாடகங்கள் நடத்தி எப்படி எப்படியோ வசூல் செய்தோம், இப்போது கருணாநிதிக்கு இருபது லட்சம் ரூபாய் கொடுக்கத் தைரியம் வந்திருக்கிறது என்றால் அவர்களுக்கு எவ்வளவு வசதி வந்துவிட்டது என்று பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுதான் பதிலா? முதல் அமைச்சர் அவர்களுக்குப் பத்து லட்சத்திற்குக் குறைவாகத்தான் சொத்து இருக்கிறது, உங்களுக்கு இருபது லட்சத்திற்கு மேல் இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. மறுக்கமுடியுமா? இருபது லட்சம் சொத்து வைத்திருப்பவர், வரிகட்ட முடியாதவர், கணக்குக் கேட்கத் தகுதி உண்டா? அவர்கள் சொல்வதை நாங்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமாம், தமிழ் சமுதாயம். பதினாறு லட்சம் ரூபாய் வரி பாக்கி எப்படி வந்தது?

அவர் ஜப்பான் போனார், யார் யார் கூடப் போனார்கள்? உங்களோடு அழைத்துச் சென்ற ஆண்கள் எத்தனை பேர்கள், பெண்கள் எத்தனை பேர்கள்? எந்தெந்த ஹோட்டல்களில் நீங்கள் தங்கினீர்கள், அவற்றிற்குக் கொடுத்த கட்டணம் எவ்வளவு? எந்தெந்தக் கார்களில் சுற்றினீர்கள்? அவற்றிற்குக் கொடுத்த வாடகை எவ்வளவு? பொருட்காட்சியில் படம் எடுத்தீர்களே அதற்கான செலவு எவ்வளவு? சிங்கப்பூர் போனீர்களே, உங்களோடு யார் யார் வந்தார்கள்? மொத்த விமானக் கட்டணம் என்னவாயிற்று? ஹோட்டல்களில் தங்கிய அறைகளுக்கான செலவு எவ்வளவு? படம் எடுத்ததற்கான செலவு எவ்வளவு? எல்லாவற்றிற்குமாகச் செய்த செலவு எவ்வளவு? உங்களுக்கு

அன்னியச் செலாவணியாகக் கிடைத்த தொகை எவ்வளவு? கணக்குக் காட்ட முடியுமா? என்று சட்ட அமைச்சர் அவர்கள் கேட்டார்களே, அதற்குப் பதில் வந்ததா? நாம் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லியதே கிடையாது. ஆனால் அவர்கள் கேட்பார்கள் பாருங்கள் கேள்வி. லஞ்சம், ஊழல் மலிந்துவிட்டன, இந்த அரசு ராஜினாமா செய்யமாட்டேன், என்று சொல்கிறது என்று சொல்கிறார்கள்.

அவர் நான் ஆணையிட்டால் என்று சொன்னால் உடனே ராஜினாமா செய்யவேண்டும். உடனே மக்கள் வோட்டுப் போட்டால் நினைத்ததை முடிப்பவன் நான் என்றால் அதை சினிமாவில் காட்டலாம். நினைத்ததை முடிப்பவன் நான் என்று பேசியவர்களின் கதை, வரலாறு எங்களுக்குத் தெரியும். அரசியலில் இருக்கிறவர்கள் பேசும்போது அதில் நியாயம் இருக்க வேண்டும், உண்மை இருக்க வேண்டும்.

திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் காங்கிரஸ் ஆட்சிமீது குற்றஞ்சாட்டியபோது நியாயத்தின் பேரில், ஒழுக்கத்தின்பேரில் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் இவர்கள் எந்த நியாயத்தின் பேரில், எந்த ஒழுக்கத்தின் பேரில் குற்றஞ்சாட்டுகிறார்கள் என்று கேட்கிறேன்? எந்தவிதமான நியாயமும் இல்லாமல், உண்மையும் இல்லாமல் தனிப்பட்ட விரோதத்தின், குரோதத்தின் அடிப்படையில் ஒரு கழகத்தின்மீது, ஒரு நாட்டின் முதல் அமைச்சர்மீது, ஒரு அமைச்சரவைமீது, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்மீது, அக்கழகத்திலுள்ள தொண்டர்கள்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள். கொஞ்சமாவது மனச்சாட்சி வேண்டாமா? புரட்சி நடிகர் வாழ்க, எம்.ஜி.ஆர். வாழ்க என்று நரம்புகள் துடிக்க கோஷம் போட்டவர்கள்மீது குற்றம் சுமத்துவதா? உங்களுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள்மீது குற்றம் சுமத்துவதா?

தெளிவாகச் சொல்லுங்கள் தேர்தல் வரும், 1976-ல் வரும். அப்போது களத்தில் இறங்கலாம். அதற்கிடையில் நிச்சயமாகத் தேர்தல் வராது. நான் தெளிவாகச் சொல்கிறேன். 1976-ம் ஆண்டுக்கு முன்பாகத் தமிழ்நாட்டில் தேர்தல் வர வேண்டுமென்று எவ்வளவு பிற்போக்குச் சக்திகள் ஒன்றாகச் சேர்ந்தாலும்சரி பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அதற்கு இடம் தரமாட்டார்கள் என்று தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். பிரதமர் இந்திரா



காந்தி அவர்கள் தமிழ்நாட்டை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். யார் யார் என்னென்ன காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குரிய செல்வாக்கு என்ன, அவர்கள் தகுதி என்ன, எதற்காக இந்தப் பிரச்னைகளைக் கிளப்புகிறார்கள் என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்துதானிருக்கிறார்கள். 76-க்குப் பிறகு வேறு யாராவது வந்துவிடுவார்களா என்றால் நிச்சயமாக இல்லை. 76-க்குப் பின்னாலும் திராவிட முன்னேற்றக் கழகம்தான் வரும், டாக்டர் கலைஞர்தான் முதல்வராகவும் இருப்பார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த அரசு வேண்டாம் என்று மக்கள் சொன்னார்களா? என்ன தவறை இவர்கள் செய்தார்கள்? என்ன குற்றத்தை இந்த அமைச்சர்கள் செய்தார்கள்? எந்தக் குற்றத்தை அந்தக் கட்சியினர் செய்தார்கள் என்று எடுத்துக் காட்ட முடியுமா? முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : முடித்து விடலாமா?

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொன்னேன். அதற்குப் பிறகு இந்த அரசு எப்படி ஏழை மக்களுக்காகப் பாடுபடுகிறது என்று சொல்லலாம் என்று இருந்தேன். நேரம் கடந்துவிட்ட காரணத்தால், பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக தமிழக அரசு முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கைத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இத்துடன் பேரவையின் காலை நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பிறகு பேரவை மீண்டும் மாலை 4 மணியளவில் பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன் அவர்களின் தலைமையில் கூடியது.

## (2) அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அமைச்சரவையின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தொடர்ந்து விவாதம் நடக்கும்.

[1972 டிசம்பர் 11

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல நாட்களாக நடக்கின்ற இந்த நம்பிக்கைத் தீர்மானத்தின்மீது என்னுடைய கட்சியின் சார்பாக எடுத்துக்கூறிய கருத்தினை ஆதரித்து, இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று நாங்கள் இங்கே கூறுவதற்கு முற்படுகிறோம்.

முதன்முதலில் இந்த நம்பிக்கைத் தீர்மானத்திற்கு அவசியமில்லை, இது தேவையற்றது என்ற வாதத்தை நான் இங்கே சொல்ல முற்படுகிறேன். ஏனென்றால், இப்படி பெரும்பான்மையாக சட்டமன்றத்திற்கு உள்ளே இருந்தபோதிலும், எதற்காக இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது என்பதை நிதானமாகச் சிந்திக்கும்பொழுது, உள்நோக்கத்தோடுதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டினை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்தரப்பில் வந்தது, அதை இங்கே விவாதிப்பதற்குப் போதிய சந்தர்ப்பம் இல்லை, ஏனெனில் எதிர்க்கட்சியில் இருக்கிற நபர்கள் குறைந்திருக்கிறார்கள், அதற்குப் போதிய நம்பர் இல்லை என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். எங்கள்மீது காட்டுகின்ற பரிவு உணர்ச்சிக்கு நாங்கள் மெத்த நன்றி உடையவர்களாக இருக்கிறோம். ஆனால், நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த ஆட்சி நியாயமான ஆட்சி அல்ல, இந்த ஆட்சி நீடித்து இருக்கக்கூடாது என்று நான் மட்டுமல்ல, நாங்கள் சேர்ந்திருக்கிற கட்சி மட்டுமல்ல, வெளியிலே இருக்கிற, இந்த மன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றாகக் கூறியிருக்கிறார்கள். ஏன் இந்த ஆட்சி நீடித்து இருக்கக்கூடாது என்பதைப் பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஒருசில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மந்திரிசபையின்மீது ஒருசில அமைச்சர்கள்மீது பல குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சியிலிருந்து, அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற அ.தி.மு.க.வும், அதேமாதிரி கம்யூனிஸ்டு கட்சியும் பிரசிடெண்டு மூலமாக இந்த அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அதனை



1972 டிசம்பர் 11] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இந்த அரசாங்கம் என்ன செய்தது என்பதைப் பற்றி நாம் ஆலோசிக்கவேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளை அனைத்தும் இந்த மன்றத்தில் வைக்கிறோம், அதோடு அரசாங்கம் என்ன பதில் கூறவேண்டுமோ அதையும் சேர்த்து வைக்கிறோம், பிரதம அமைச்சர் அவர்களுடைய அனுமதியைக் கோரியிருக்கிறோம் என்று கூறினார்கள். பிரதம அமைச்சர் அவர்களுடைய அனுமதி இப்பொழுது என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து விளக்குவார்கள் என்று கருதுகிறேன். பல நாட்கள் ஆயிற்று. இது ஒரு அவசரமும், முக்கியத்துவமும் ஆன ஒரு விஷயமாக இருக்கும் காரணத்தினால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த விவாதம் முடிவடைவதற்கு முன்னதாக இதை இந்த மன்றத்தில் வைத்து இருக்கலாம். ஆனால், நேர்மாறாக இன்று அது ஒரு ரகசிய தஸ்தாவேஜியாக காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. மர்மப் பேழையில் இருக்கும் ஒருசில காரியங்கள் வெளியே வந்துவிட்டன என்று நமது சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மர்மப் பேழையில் இருக்கிற காரியங்கள் அத்தனையும் உண்மை அல்ல, உண்மைக்கு புறம்பானது, நாங்கள் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று மார் தட்டி எதிர்க்க வேண்டிய பொறுப்பு இந்த ஆளும் கட்சிக்கு உண்டு என்பதை நான் உணர்த்த விரும்புகிறேன். அதற்கு நேர்மாறாக இதையெல்லாம் நீங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறீர்களா என்று கேட்கிறார்கள். நிச்சயம் அரசாங்கத்தின் கையில் இருக்கிற தஸ்தாவேஜுகளில் இருக்கின்ற விவரங்களையெல்லாம் எங்களால் இங்கே தாக்கல் செய்வது என்பது மிகவும் கடினமான காரியம்.

குறிப்பாக, லஞ்சப் புகார், மற்றவிதமான குற்றச்சாட்டுகள் வரும்பொழுது அவைகளை ருசுப்படுத்துவது என்று சொன்னால் சட்டபூர்வமாக மிகவும் கஷ்டமான ஒரு காரியம் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சாதாரணமாக ஒரு நபர் தன்னுடைய 'நோன் சோர்ஸ் ஆஃப் இன்கம்' என்று சொல்வார்கள் சட்டபூர்வமாக, அதற்கு மீறி தன்னுடைய சொத்துக்கள் எல்லாம் இருக்குமானால், இதிலே கரெப்ஷன் இருக்கிறது, ஊழல் இருக்கிறது என்று நம்புவதற்கு ஒரு சான்றாக இருக்கும், சட்டபூர்வமாகப் பார்த்தால்.

இந்த மாதிரி குற்றம் புரிந்தவர்களையெல்லாம் பார்ப்பது, கண்முன்னால் இம்மாதிரி குற்றங்களைப் பார்ப்பது இல்லை என்பது நமக்கு கண்கூடாகத் தெரியும். ஆனால், இன்று இருக்கிற சூழ்நிலையைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்களோடு இருந்தவர்கள், உங்களோடு உழைத்தவர்கள் உங்கள்மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். அது வீண் குற்றமா என்று பார்க்க வேண்டிய பொறுப்பு இந்த ஆளும் கட்சிக்கு இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். நேர்மாறாக அவர்களைப் பார்த்து அவர்கள் என்ன சொல்கிறார்கள். அவர்களை இழித்தும், பழித்தும், அரசியல் உள்நோக்கத்தோடு பல காரியங்களைக் காட்டி நீங்கள் தப்பித்துக்கொள்ள முடியாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தைப்பற்றி, மேற்கோள்களையெல்லாம் எடுத்துக் கூற முடியும் என்று சொன்னார்கள். அந்த மேற்கோள்களையெல்லாம் நான் இங்கே விவாதிக்க விரும்புகிறேன். அன்பிற்குரிய தலைவர் திரு. ராஜாஜி அவர்கள் முதல்வராக இருந்தபொழுது வந்த தீர்மானத்தை ஒட்டி இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது என்று கூறப்படுகிறது. நான் சொல்கிறேன். இதுமாதிரியான விவாதங்கள் ஏனைய மாநிலங்களில் அண்மையில் ஏற்பட்டதா என்று கேட்டால், இல்லை. நமது விதி முறைகளிலும் இதற்கு இடமில்லை. ஆனால், வேண்டும் என்றே இன்று இருக்கிற அரசியல் சூழ்நிலையில் உங்கள் கட்சியில் இருக்கிறவர்கள் அத்தனை பேர்களும் உங்களுடைய அரசின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று சொல்வதற்காக இந்த நம்பிக்கைத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்றுதான் என்னால் கூறமுடியும்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் நான் கூற விரும்புகிறேன்: இந்த அரசாங்கமானது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமாக, தி.மு.க.வுக்கு வேண்டி மட்டும் நிற்கிறதே ஒழிய, 4½ கோடி தமிழ் மக்களுக்காக இருக்கும் மந்திரிசபை என்று என்னால் கூற முடியாது. கட்சி குறுக்கிட்டு இந்த நிர்வாகம் நடந்துகொண்டிருக்கிறது, நிர்வாக இயந்திரம் இந்தக் கட்சிக்கு வேண்டி இயங்கிக்கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். உதாரணமாக, நாம் பார்க்கிறபொழுது, இன்று இருக்கிற





தி.மு.க.விலிருந்து வெற்றி பெற்று வந்தவர்களுடைய தொகுதிகளில் அதிகமான வேலைகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நான் ஒரு குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். என்னுடைய ஜில்லாவில் ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் ஆறு உறுப்பினர்கள் எதிர்க்கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் ஜில்லா வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் ஜில்லாப் பிரச்னை என்று சொல்ல வரவில்லை. இதேமாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆளும் கட்சிக்கு ஒரு நியதி, மற்ற கட்சிகளுக்கு ஒரு நியதி என்ற முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை**: என்னுடைய தொகுதியில் அதிகமாக ஏதாவது செய்யப்பட்டு இருந்ததா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: ஜில்லாவைப் புறக்கணிக்கிறார்கள் என்று கூறினேனே ஒழிய ஏதோ தங்களுடைய தொகுதிக்காக அதிக சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. 400 கோடி ரூபாய் வருமானம் இருக்கிறது இந்த அரசாங்கத்திற்கு. அந்த ஜில்லாவிலிருந்து வருகிற வருமானத்தைப்பற்றியெல்லாம் தங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது எக்சைஸ் வரியிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் வருவாய் வருகிறது. அதேமாதிரி டிரான்ஸ்போர்ட் இலாகாவில் லாபம் வருகிறது. லாட்டரியிலிருந்து எவ்வளவு பணம் வருகிறது என்பதைப் போன்ற விஷயங்களெல்லாம், எவ்வளவு பணம் வருகிறது என்பதெல்லாம் நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஒரு 5 லட்சம் ரூபாய் பெறுமான வேலை ஏதாவது அந்த ஜில்லாவில் செய்திருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை என்று சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலிருந்து ஒரு கமிட்டி போட்டால்கூட, நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். இல்லையென்றால் எங்களுடைய பதவிகளைத் துறப்பதற்கும் தயாராக இருக்கிறோம்.

அது மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ தொழில்கள் அந்த ஜில்லாவில் வரவேண்டியிருக்கிறது. ஆனால், ஒன்றுகூட அங்கே நடக்கவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** திரு. பொன்னப்ப நாடார் அவர்களுடைய தொகுதியில் சுமார் ரூ. 30, 40 லட்சத்திற்கு உரிய வேலைகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உதாரணமாக, கடற்கரை ரோடு போடும் திட்டம் ரூ. 3,4 லட்சம் பொறுமானமுள்ளது. பாலங்கள் கட்டுவதற்கு 22,23 லட்ச ரூபாய் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனது தொகுதியில் பிரத்தியேகமாக எதுவும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இவர்கள் அப்ரூவர் ஆகிவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியில் ஏதோ ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று தாங்கள் கூறுவது எனக்கு மகிழ்ச்சி. ஆனால் ஒன்று நான் கூற விரும்புகிறேன். இல்லை என்று இன்னும் ஆணித்தரமாகச் சொல்லுகிறேன். ரப்பர் தொழிற்சாலை இந்த ஜில்லாவுக்கு வேண்டுமென்று நாங்கள் இந்த அரசாங்கத்தைக் கேட்டோம், மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். ஆனால் எங்களுக்கு கிடைத்த பதில்—இராமநாதபுரத்தில் அதிகமாக ரப்பர் விளைகிறதோ என்று எங்களுக்குத் தெரியவில்லை—இந்த ஜில்லாவுக்குள் அது இன்று ஓடி ஒளிந்து கொண்டு இருக்கிறது. இது நியாயமா ? இது தர்மமா ? என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தப் பகுதியில் ஏராளமாக ரப்பர் இருக்கிறது. ஏன் இந்த ஜில்லாவைப் புறக்கணிக்கிறீர்கள் ? நீங்கள் இதுபற்றி தந்த காரணம் என்ன என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது கன்னியாகுமாரிக்காக வாதாடுகிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் இங்கு பலமுறை திரு. ஜேம்ஸ் அவர்கள் கேட்டு, ஒரு தனிப்பட்ட நண்பர் அங்கே முன் வந்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒருவரும் முன்வரவில்லை. இருந்தாலும் நம் அரசாங்கத்தின் சார்பிலாவது அதை சிறிய அளவில் ஆரம்பிக்க முயற்சி நடைபெறுகிறது என்று இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அங்கே தொழில் தொடங்குவதற்கு யாராவது அந்த மாவட்டத்தில் சிலபேர் முன்வருவார்களானால், அனுமதி தந்து, கடனுகைப் பண உதவி செய்யத் தயாராக இருக்கிறோம். ரப்பரைப் பொறுத்தவரையில் சிறிய அளவிலாவது



ஒருவரும் முன் வராவிட்டால், அரசாங்கமே செய்யலாம் என்று ஆராய்ச்சியில் இருக்கிறது என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** துணைத் தலைவரவர்களே, அமைச்சர் கூறும் போது தனி நபருக்கு இராமநாதபுரத்தில் தொழில் தொடங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ரப்பர் தாராளமாக கிடைக்கிறது. அந்த ரா மெட்டீரியல்ஸ் கன்னியாகுமரியில் அதிகமாக கிடைப்பதாலும், கிளைமேட்டிக் கண்டிஷன்ஸ் நன்றாக இருப்பதாலும், அந்தத் தனி நபரை கன்னியாகுமரியில் அந்தத் தொழிலை ஆரம்பிக்குமாறு அமைச்சர் அவர்கள் கட்டளையிடுவார்களா ? அங்கே தொடங்கினால் அவருக்கு லாபம் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கான நடவடிக்கை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆசையையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் இந்த தொழிலைத் தொடங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அந்தத் தொழில் அங்கு வந்தால் நாங்கள் வரவேற்போம். அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம். ஒத்துழைப்பு நல்குவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு என்னுடைய நண்பர் வி.கே.இராஜாப் பிள்ளை அடிக்கடி சொல்லுவார்கள். இந்த மாதிரி அவருடைய தொகுதியில் ஒன்றும் செய்யவில்லை, என்னுடைய தொகுதியில் தான் செய்திருக்கிறது என்று. இது முழுக்க முழுக்க உண்மைக்கு புறம்பானது. பொய் என்று சொல்ல வரவில்லை. உண்மைக்கு புறம்பானது என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் இந்த ஜில்லா பிரச்னைக்கு வராமல், இந்த அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும். இந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில் என்பதை மேற்கோளாக நான் இங்கு பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையில் நடைபெற்ற ஒரு செய்தியை எடுத்துக் கூறுவதற்கு முற்படுகிறேன். அங்கு ஒரு ஹோம் மினிஸ்டர் மாட்லிங் என்பவர் என்ன செய்தார் என்பதை இந்த அவையில்

சொல்ல முற்படுகிறேன். அவர் ஒரு கம்பெனியில் சேர்மனாக இருந்தார் என்றும், அவர் ஒரு டொனேட் பணத்தை கொடுத்ததாகவும் அது சம்பந்தமாக ஒரு தஸ்தாவேஜ் இருந்ததாகவும் சாட்சியத்தில் வந்தது. உடனே அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொன்னால் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்து விட்டார்கள். இந்த மாதிரியான ஒரு குற்றச்சாட்டு தன் மீது வந்திருக்கிறது என்று அறிந்தகணமே அவர்கள் ராஜினாமா செய்து விட்டார்கள். உடனே அங்கிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேதனையோடு கூறினார்கள். திரு. மாட்லிங் அவர்கள் தன் ராஜினாமாவைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் முழு விளக்கங்களையும் தெரிந்த பிறகு ராஜினாமா செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனாலும் ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றுவதற்கு மாட்லிங் ராஜினாமா செய்து இருக்கிறார்கள் என்று அவரைப் பாராட்டினார்கள்.

ஆனால் இந்த மாதிரியான குற்றச்சாட்டு உங்கள் மீது வந்திருக்கிறதே அதை எங்களுக்கு தெரிந்து கொள்ளுவதற்காவது நீங்கள் ஏன் தரவில்லை, அதன் ரிப்ளைகள் ஏன் தரவில்லை, தர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு நாங்களெல்லாம் இலவு காத்தக் கிளி மாதிரி இருக்கிறோம் என்று கூற விரும்புகிறேன். இது காலாகாலத்தில் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். அப்போது தான் இங்கு முதலமைச்சர் சொன்னது மாதிரி பார்த்தேன், படித்தேன், ரசித்தேன், ஒன்றுமில்லை என்று சொல்லுவதற்கு முடியும்.

உங்கள் மீது ஏற்பட்டிருக்கக் கூடிய குற்றச்சாட்டுகளெல்லாம் உண்மையானவை அல்ல என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது. இன்றைக்கு நமது சட்ட அமைச்சர் ஒரு விவாதத்தைக் கூறினார்கள். கமிஷன் ஆப் என்குயரி வேண்டுமா, வேண்டாமா என்ற வாதத்தை இங்கு கிளப்பினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். கமிஷன் ஆப் என்குயரி இந்த அரசாங்கத்திற்கும் போடலாம் வேண்டுமானால் மத்திய அரசாங்கத்திற்கும் போடலாம் என்ற கருத்தினை அவர்கள் வாதத் திறமையோடு இங்கு எடுத்துக் கூறினார்கள். நான் கேட்க விரும்புகிறேன். நீங்கள் ஒன்றுமில்லை என்று சொல்லுகிறீர்களே, உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது அல்லவா? ஏன் அந்த





அதிகாரத்தை உபயோகப்படுத்தி, இந்த மாதிரியான ஒரு என்குயரி கமிஷனைப் போடக் கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தக் கமிஷன் ஆப் என்குயரியிலேயாவது என்ன இருக்கிறது என்று நிரூபிப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கலாமே. இவைகளையெல்லாம் நிரூபிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற்கான தஸ்தாவேஜுகள், சான்றுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஏன் இந்த அரசாங்கம் தயங்குகிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்த அரசாங்கம் உடனடியாக இந்தக் கமிஷன் ஆப் என்குயரி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அவர்கள் வேறு ஒரு விஷயத்தை எடுத்துக் கூறினார்கள். அமைச்சர்கள் தங்களுடைய வருவாய்க் கணக்கை இங்கு தந்திருக்கிறார்கள். அதை வைத்து உறுப்பினர்கள் ஏதோ ஏதோ எல்லாம் கூறுகிறார்கள் என்றெல்லாம் கூறினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த சமயநல்லூர் பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு நீண்ட விளக்கத்தை எடுத்துக் கூறினார்கள். 55 லட்சம் ரூபாய்க்கு மதிப்பிடப் பட்டிருப்பதாகவும், அதன் வேல்யுவேஷன் போடப்பட்டிருக்கிறது என்று அவர்கள் எடுத்துக் கூறினார்கள். யார் வேல்யுவேஷனைப் போட்டார்கள், அதன் வேல்யூ எக்ஸ்சேன்ஜ் என்ன என்பதைப் பற்றியெல்லாம் இந்த அமைச்சரவை இந்த மன்றத்திற்கு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். இந்த சமயநல்லூர் மெஷினரி 51-ல் வாங்கப்பட்டது. அது பழுதடைந்து விடக் கூடியது நியாயமானது, என்று வாதாடப்பட்டது. இதை ஏற்பதற்கல்ல என்ற கருத்தினை இங்கு நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மேகலா பிக்சர்ஸ் பற்றி எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கூறினார்கள். அதிலே ஒன்றுமில்லை என்று கூறினார்கள். இந்த மேகலா பிக்சர்ஸ்-ஐ பொறுத்த வரையில் ஏதோ குற்றச்சாட்டுகளெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்று கூற விரும்புகிறேன். இந்த மேகலா பிக்சர்ஸ் இந்த படங்களெல்லாம் வெளியிடுவதற்கு பைனான்ஸ் எங்கிருந்து வந்தது, சோர்ஸ் எங்கிருந்து ஏற்பட்டது என்றெல்லாம் இன்று முதலமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் தருவார்கள் என்று கருதுகிறேன். மேகலா பிக்சர்ஸ்-ல் இருப்பவர்கள் இன்கம்டாக்ஸ் கொடுக்கக் கூடியவர்களா, அவர்கள்

எந்த வகையில் இந்த பெருத்த பணத்தை எல்லாம் உருவாக்கி யிருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதே மாதிரி ஒரு சினிமா தயாரிக்கப்பட்டதைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். பிள்ளையோ பிள்ளை பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மேகலா பிக்சர்ஸ் என்பது 1951-ம் ஆண்டிலே இருந்து நடைபெற்று வருகின்ற நிறுவனம். அந்த நிறுவனத்தை நானும், திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், மற்றவர்களும் சேர்ந்து தான் ஆரம்பித்தோம். அதற்கு எப்படி வருமானம் வந்தது என்பது சந்தேகத்திற்குரியது என்பதைப் பற்றி அன்றைக்கு திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும் போது ஒரு படம் எப்படி எடுத்து, வினியோகிக்கப்படுகிறது என்பதைப் பற்றி கூறியிருக்கிறேன். குற்றச்சாட்டுப் பட்டியலை இங்கு வைக்கின்ற நேரத்தில் திரு. நாடார் அவர்கள் சொல்லு கின்ற அந்தக் குற்றச்சாட்டு இருக்குமானால் அதிலே வருகின்ற பதிலிலே அந்த விளக்கம் எல்லாம் வரும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இன்னொரு சமாதானம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதாவது இந்த பிள்ளையோ பிள்ளை என்ற படம் வினியோகம் செய்ததில் ஒரு கண்டிராக்டர், ஈஸ்ட் கோஸ்ட் கண்டிராக்டர், வினியோகம், டிஸ்டிரிபியூட் செய்தார் என்று ஜேம்ஸ் கூறினார்கள். அது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதாகச் சொல்லி, கடைசியில் அது சம்பந்தமாக ஒன்றுமில்லை என்று சொல்லக் கூடிய அளவில் நம் சட்ட மந்திரி அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். இதில் பல டிஸ்டிரிபியூட்டர்கள் வாங்கி யிருக்கிறார்கள். ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்டிரக்ஷன் கம்பனியைச் சேர்ந்தவர்களும் இதிலே டிஸ்டிரிபியூஷன் பங்கு கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றெல்லாம் இந்த மர்மப் பேழையில் இருந்த கருத்தினை நான் பார்த்தேன்.

அது மட்டுமல்ல. இன்னொரு விஷயத்தையும் நான் கூற விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மர்மப் பேழையில் இருந்த கருத்துக்களைத் தெரிந்து கொண்டு, நீங்கள் ஏன் சட்ட மன்றத்தில் வைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதிகார பூர்வமான குற்றச் சாட்டுகள் என்னென்ன என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதினால் தான், இது உண்மையா இல்லையா என்று நாங்கள் தெரிந்து சொல்ல முடியும். அதுவல்லாமல் நீங்கள் பொறுப்பு ஏற்று கொள்கிறீர்களா, இது உங்களுக்கு எப்படி கிடைத்தது என்றெல்லாம் ஒரு வேளை கேட்கக் கூடும் என்று வந்தால் நான் இந்த விவாதத்தில் இறங்குவது முறையல்ல. ஆனால் இந்த சினிமாவிலே 10 லட்சத்திற்கு மேலாக லாபம் வந்திருக்கிறது. பிள்ளையோ பிள்ளை என்ற படத்தில், ஈஸ்ட்மென் கலரில் தயாரித்திருக்கிறார்கள். இதிலே அதிகார துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள். இது எந்த அளவுக்கு உண்மை என்பதை விளக்கும் பொறுப்பு இன்றைக்கு முதலமைச்சருக்கு உண்டு. ஏனென்றால் தன்னுடைய குமாரரைப் பற்றி, இந்தமாதிரியான தொழிலிலே ஈடுபடுகின்ற நேரத்தில் ஏற்படுகிற தவறுகளுக்குக் காரணம் இருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது. அது உண்மைக்குப் புறம்பானது என்றால் அதைத் தெளிவாக்க வேண்டும். நாம் எல்லாம் இந்த மன்றத்திலே வீற்றிருக்கிறோம் என்றால், ஏற்படுகின்ற தவறுகளைச் சுட்டிக் காட்டுவதற்கும், அதற்கு விளக்கம் பெறுவதற்கும்தான். மக்க ளுக்கு அதைப்பற்றி தெளிவுபடுத்துவதற்குத்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, சக்தி பைப்ஸ் நிறுவனத்தைப்பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த விஷயத்தைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இதைப் பற்றிக் கேட்பதற்கு காரணம் இந்த நிறுவனத்திற்கு தனிப்பட்ட முறையில் சலுகைகள் காட்டியிருப்பதுதான். சட்ட அமைச்ச ரவர்கள் அதற்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அக்கவுண்டன்ட் ஜெனரல் ஆபீஸிலிருந்து வந்த நோட்டுகளைப்பற்றி எல்லாம் கூறினார்கள். அதிலும் குறிப்பாக அங்கு இருப்பது 'டிபக்டிவ் மெஷினரி' என்று தெரிந்தும் 25 லட்சம் ரூபாய் அட்வான்ஸ்

கொடுத்திருக்கிறார்கள். டிபக்டிவ் மெஷினரியாக இருக்கும்போது ஏன் 25 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஏதோ தொழில் நடைபெறுவதற்கு, தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்படுவதற்கு மூடிக்கிடந்த நிறுவனத்தைத் திறப்பதற்கு, அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு என்றெல்லாம் சொல்லலாம். இப்படி ஒருசில தொழில் அதிபர்களுக்கு மட்டும் விசேஷ சலுகை அளிக்கப்படுவதற்கு காரணம் என்ன ? எனவே, இது சம்பந்தப்பட்ட விளக்கங்கள் சரியானவையாக இல்லை என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மூன்றுயிரம் டன் உற்பத்தித் திறன் என்று கூறினார்கள். ஆனால் இந்த மூன்றுயிரம் டன்னுக்குள்ள 'ரா மெட்டீரியல்ஸ்' அங்கே இல்லை. அதற்குப்போய் அட்வான்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இதிலே சில சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. டி.ஜி.எஸ்.டி. அறிக்கைப்படித்தான் செய்ததாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு ராஜ்ஜியத்திற்கும் உள்ள விலையை அவர்கள் முடிவு செய்கிறார்கள். எக்ஸ் பாக்டரி ரேட் நிர்ணயம் செய்கிறபோது, ஏன் கல்கத்தாவிலே உள்ள ஒரு நிறுவனத்திடம் இருந்து வாங்கவேண்டும் ? இங்கேயே வாங்குவதாக இருந்தால் செலவு எவ்வளவோ குறைந்திருக்குமே. பொதுவாக இந்த நிறுவனம் சரியாக இயங்கவில்லை என்று சொல்லப்படுகிறபோது, அதற்கு 65 சதவீதம் 'ரிஜெக்ஷன் சார்ஜ்' கொடுத்ததாக மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி 65 சதவீதம் ரிஜெக்ஷன் சார்ஜ் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன ? சரியாக இயங்காத ஒரு நிறுவனத்திற்கு இவ்வளவு பெரிய சலுகை கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ? இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு சரியான விளக்கத்தை அமைச்சரவர்கள் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அதுமட்டுமல்ல. இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் வேறு சில காரியங்களைப் பற்றிச் சொன்னார்கள். நான் பொதுவாக இந்த மன்றத்திலே கூறவேண்டிய குற்றச்சாட்டுகள் பல இருக்கின்றன. அவை எல்லாம் அடுத்தடுத்து வரும். அதற்கு முன்னதாக இங்கு இந்த மன்றத்திலே ஜாதி உணர்ச்சியைத் தூண்டிவிடுகிற முறையிலே சில பெரும் தலைவர்கள் பேசினார்கள். அதிலும்



முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் ஜாதி உணர்ச்சிகளைத் தூண்டுகிற முறையிலே அவர்கள் உணவு முறைகளைப் பற்றி எல்லாம் பேசினார்கள். அதைப்பற்றி எல்லாம் இந்த மன்றத்திலே குறிப்பிடுவது பொருத்தமுடையதாகாது.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவரவர்களே, மேல் இனம், கீழ் இனம் என்று இன்று நேற்றல்ல, நெடு நாட்களாக இருக்கிறது. அப்படி இருக்கிற நிலை மாறி ஒரு சமநிலைக்கு வர வேண்டுமென்ற எண்ணத்திலே தான் நான் கூறினேனே அல்லாமல் வேறு நோக்கத்தோடு அல்ல என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வகுப்பு உணர்ச்சியைத் தூண்ட வேண்டுமென்ற முறையில் மேல் இனம் என்றும் கீழ் இனம் என்றும் நான் கூறவில்லை. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் அவ்வாறு கருதியிருந்தால் அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இனிமேலும் அவ்வாறு கூறவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அவர்களுடைய விளக்கத்திற்கு பெருத்த நன்றி. நல்ல நோக்கத்தோடு கூறியிருந்தால் பலரும் அதைப் பாராட்டுவார்கள்.

அடுத்தபடியாக, இந்த அரசாங்கத்திலிருந்து என்ன என்ன காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். பஞ்சத் துயர் தணிப்பு என்ற முறையிலே அரசாங்கம் செய்த தவறுகளை எடுத்துக்கூற விரும்புகிறேன். பஞ்சத் துயர் தணிப்பு நிதியாக மத்திய அரசாங்கத்திடம் இருந்து 17 கோடி ரூபாய் பெற்றிருக்கிறார்கள். அதில் எத்தனை கோடி ரூபாய் இங்குள்ள பொதுமக்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்பது புரியவில்லை. அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மூலமாகவே இந்தப் பணத்தை செலவிட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆளும் கட்சிக்காரர்கள் பயனடையும் வகையிலே செலவிடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின் மீது சுமத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆளும் கட்சியிலே இருக்கக்கூடிய ஒரு பத்திரிகையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். முரசொலி

பத்திரிகை முன்னால் எப்படி நடைபெற்றது, இப்போது எப்படி நடைபெறுகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். அரசாங்கத்திற்கும் இந்தப் பத்திரிகைக்கும் பெரும் தொடர்பு இருக்கிறது. இன்றைக்கு மற்ற பத்திரிகைகளுக்கு அரசாங்க விளம்பரங்கள் கொடுக்கப்படாமல் இந்தப் பத்திரிகைக்கு மட்டும் கொடுக்கிறார்கள். அதோடு, இந்தப் பத்திரிகையை ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களில் எல்லாம் கட்டாயமாக--அநேகமாக எல்லாப் படிப்பகங்களிலும்—வாங்கச்சொல்லி கட்டாயப்படுத்துகிறார்கள். அதனால் அந்தப் பத்திரிகையை நடத்துபவர்களுக்கு பெருத்த லாபம் கிடைக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் முதலமைச்சரவர்கள் இந்தப் பத்திரிகையை நடத்தி வந்தார்கள். இந்தப் பத்திரிகை அவர்களுடைய கட்சிப் பத்திரிகை. 28—2—1967-ம் ஆண்டுக்குப் பிறகு அவர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டதாக நான் அறிகிறேன். இதிலே என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக முரசொலி பத்திரிகை எவ்வளவு பிரபலமாக இருந்தது என்றும் இப்பொழுது எவ்வளவு பிரபலமாக இருந்து வருகிறது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆட்சியாளர்களின் ஒத்துழைப்பினால் இந்தப் பத்திரிகை இவ்வளவு விரைவில் மிகப் பெரிய அளவுக்கு முன்னேறியிருக்கிறது. இன்றைக்கு மவுண்ட் ரோட்டிலே இந்தப் பத்திரிகை நிறுவனத்திற்குச் சொந்தமாக ஒரு கட்டிடத்தை வாங்கியிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வருகிறது. சொந்தக் கட்டிடம் வாங்குவதற்குள்ள நிதி இந்த நிறுவனத்திற்கு எங்கிருந்து வந்தது என்ற பேச்சு பரவலாக இருந்துகொண்டிருக்கிறது. இவ்வளவு குறுகிய காலத்திலே இந்தப் பத்திரிகை இவ்வளவு வளர்ச்சி அடைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை நாமும் சிந்திக்க வேண்டும்.

**திரு. மு. சின்னசாமி :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் முரசொலி பத்திரிகையைப்பற்றி குறிப்பிட்டதால் அதுபற்றிய சில தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு





முன்னதாகவே முரசொலி பத்திரிகைக்கு சொந்தக் கட்டிடம் இருந்தது. அந்தக் கட்டிடத்தை இடித்துக் கட்டுவதற்காக, அதற்கு அருகாமையில் இருக்கிற இடத்தை வாடகைக்கு வாங்கி இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் இப்படித் தவறான தகவலை மன்றத்திற்குத் தெரிவிக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அது ஜனநாயக முறைக்கு உகந்ததல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் மர்மப் பேழையிலே என்னென்ன இருக்கின்றன என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக்கொண்டு வருகிறார்கள். மர்மப் பேழையில் இருப்பதை முழுவதுமாக அவர்கள் சொல்லாவிட்டாலும் கடந்த இரண்டு, மூன்று நாட்களாக நடைபெறுகின்ற விவாதத்தின்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கலந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளிலே பலவற்றிற்கு நானும் மற்றவர்களும் பதில் சொல்லியாகிவிட்டது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இன்னும் மிச்சம் இருப்பவைகளையும் சொல்லிவிட்டால், பிறகு இந்த மன்றத்திலே மர்மப் பேழை பட்டியலுக்கு பதில் வைக்கப்படுகின்ற நேரத்தில், அதன் சுவை குறைந்துவிடும். எனவே, மர்மப்பேழை மர்மம் முழுவதையும் இப்பொழுதே வெளியிட்டுவிடாமல் இருந்தால் நல்லது. இப்போது அவர் குறிப்பிட்ட முரசொலி பத்திரிகை சம்பந்தப்பட்ட விவகாரமும் மர்மப் பேழையில் இருக்கிறது. மர்மப் பேழைப் பட்டியலுக்குப் பதில் அளிக்கும் போது இதற்கும் சேர்த்து பதிலளிக்கப்படும். ஆனால் ஒன்றை மட்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் முரசொலி பத்திரிகை சம்பந்தமாக இங்கே கொடுத்த தகவல் தவறானது ; அது சரியான தகவல் அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அடுத்தபடியாக, நான் இன்னொரு விஷயத்தைக் கூறவிரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களுக்கு வேண்டியவர் ஒருவருக்கு —அதாவது திரு. ஏ. எல். சீனிவாசன் என்பவருக்கு சென்னை நகருக்கு அருகில் நூறு ஏக்கரா நிலம் கொடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி செய்கிறது, ரெவின்யூ போர்டு மூலமாக அந்த

நிலத்தில் குடியிருப்பவர்களை வெளியேற்றி, அந்த நிலத்தைக் கையகப்படுத்தி திரு. ஏ. எல். சீனிவாசனுக்குக் கொடுக்க வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று கூறப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதில் திரு. ஏ. எல். சீனிவாசன் என் நண்பர் என்பதுதான் உண்மை. நூறு ஏக்கரா நிலம் எந்தப் பகுதியில், எங்கே தரப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே விளக்கினால் அதற்கு நான் பதில் கூற வசதியாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சென்னை நகருக்கு அருகாமையில் நூறு ஏக்கரா நிலம் என்று இருக்கிறது. விசினிடி ஆப் மெட்ராஸ் என்றுதான் இருக்கிறது. அதுவும் ரெவின்யூ போர்டு மூலமாக கையகப்படுத்த வேண்டிய . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுவும் மர்மப் பேழை தான். (சிரிப்பு) கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்கள் கொடுத்த புகார்களில், அ.தி.மு.க. கொடுத்த புகார்களில் ஒன்று. இதுபற்றி திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்களுடைய இளவல் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தங்களது பத்திரிகையில் பதிலளித்து எழுதியிருக்கிறார்கள். 1907-ஆம் ஆண்டு ஐயனாவரம் பகுதியில் பல ஏக்கரா நிலம் அவர்களது குடும்பத்திற்குச் சொந்தமாக இருந்தது. அதைப் பலர் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தார்கள், அதை மீட்டுக் கொடுக்க சர்க்காரிடத்தில் மனுக் கொடுத்தார்கள். ஆனால் ரெவின்யூ போர்டு அதுபோல இப்போது மீட்டுத் தரமுடியாது என்று பதிலளித்துவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன். 1907-ம் ஆண்டு அவர்களது குடும்பத்திற்கு, சாத்தப்ப செட்டியாருக்கு உரிமைக்குட்பட்ட நிலம் இருந்தபோது, புகார் கொடுத்த எம்.ஜி.ஆர். ஒருவேளை குழந்தையாக இருந்திருக்கக் கூடும் என்று குறிப்பிடுகிறார் அந்தக் கட்டுரையில்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** குறிப்பிடுகிற பகுதி குடிசைவாழ் பகுதி. கலைஞர் கருணாநிதி நகர் என்றே அதற்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. குடிசைமாற்று வாரியம் அந்த இடத்தையே எடுத்துக்கொள்ளலாமா என்று இருக்கிற சூழ்நிலையில், அதை யாருக்குக் கொடுக்க முடியும்? (சிரிப்பு)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** என்னிடத்தில் உள்ள தகவல் அந்த இடத்தில் இருக்கிற குடிசைவாழ் மக்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கிற நிலையில் இருக்கிறது என்பதுதான். அது வேண்டாம். வேண்டுமானால் அந்த நிலத்திற்குரியவர் கோர்ட்டுக்குச் சென்று வழக்காடி அந்த நிலத்தைப் பெறட்டும் . . .





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது மைனர் இனாம் சம்பந்தப்பட்ட நிலம் ஆகும். அந்த நிலத்தை மீட்டுத் தர வேண்டும் என்று அவர்கள் ரெவின்யூ போர்டுக்கு மனுக் கொடுத்தார்கள். மனு காலம் கடந்து கொடுக்கப்பட்டது என்று சொல்லி அவர்கள் ரிஜெக்ட் பண்ணிவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அரசாங்கத்திற்கு மனுச் செய்துகொண்டார்கள். அரசாங்கமும் அதே காரணத்திற்காக ஜனவரி மாதமே மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டது. இப்போது அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நீதி மன்றம் என்ன தீர்ப்பு அளிக்கும் என்று எனக்குத் தெரியாது. நீதிமன்றத்தின் முடிவை நம்மால் சொல்ல முடியாது. சம்பந்தப்பட்ட நிலம் மைனர் இனாம் சம்பந்தப்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அடுத்து, திரு. ஏ. எல். சீனிவாசனுக்கு பீர் தயாரிக்க லைசென்சு வழங்கப்பட்டிருப்பதாக ஒரு புகார் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் இதே மன்றத்தில் யார் யாருக்கு லைசென்சு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். அதில் ஏ. எல். சீனிவாசன் பெயர் ஒன்று. அதுபோல நமது மாநிலத்திற்குத் தேவையானதை வெளிமாநிலங்களில் இருந்து வரவழைப்பதைவிட இங்கே தயாரிக்க வேண்டும், அரசாங்கமே அதைத் தயாரிப்பது இல்லை என்று முடிவு செய்துவிட்ட காரணத்தினால் தனியார் துறையில் யார் யார் அதுபோன்ற பாக்டரியை வைக்க முன்வந்தாலும் அவர்களுடைய மனு பரிசீலிக்கப்பட்டு பலருக்கு லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல ஒரு பாக்டரியை ஆரம்பிக்க மனுப்போட்டு, அரசாங்கம் அவருக்கு உரிமை கொடுத்தும்கூட அவர் இதுவரை ஆரம்பிக்க வில்லை. இந்த பாக்டரியை ஆரம்பிக்க இருக்கிற இடத்திற்கும், முன்பு திரு. பொன்னப்ப நாடார் குறிப்பிட்ட இடத்திற்கும்

சம்பந்தம் இல்லை. இந்த பீர் பாக்டரியை அரக்கோணத்தில் ஆரம்பிக்க மனுப்போட்டார் என்பது என்னிடம் உள்ள தகவல்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அடுத்து இன்னொரு தகவல் என்கையில் இருக்கிறது. நாகப்பட்டினம் அருகில் பிஷரீஸ் கன்டிராக்டர் சுல்தான் மரைக்காயர் என்பவருக்கு 1970 ஏப்ரலில் 161 லட்சம் ரூபாய் அட்வான்சு கேட்டிருக்கிறார்கள், அதிலே 12 லட்சம் ரூபாய் ஜி.ஓ. கூடப் போடாமல் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதாகும். இதுபோல கன்டிராக்டர்களுக்கு அட்வான்ஸ் கொடுப்பது ரூல்களுக்கு விரோதமானது. வேண்டியவர்களுக்கு இதுபோல தனிச்சலுகை காட்டப்படுவது சரியல்ல. அவர் பி.டபுள்யூ.டி. அமைச்சருக்கு நெருங்கியவர் என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தயவு செய்து என் பெயரை இழுக்க வேண்டாம். உறுப்பினர் குறிப்பிடுவதைப் போன்று எனக்கு யார் ஒருவரும் வேண்டியவர், நெருங்கியவர் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள எல்லோரும் தான் எனக்கு வேண்டியவர். அந்த பிஷ்ஷரீஸ் கன்டிராக்டர் பற்றி சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மெஷினரி வாங்க இதுபோன்று பணம் அட்வான்சாகக் கொடுக்கப்பட்டது என்று சொல்லப் படுகிறது. எல்லா கன்டிராக்டர்களையும் சமமாக நடத்த வேண்டுமே தவிர இதுபோன்று வேண்டியவர்களுக்கு என்று அட்வான்சு கொடுப்பது சரியான முறையாகாது.

அடுத்தபடியாக, கோடைக்கானல். பழனி ரோடு கன்டிராக்ட் சம்பந்தமாக பல குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. அகமட் கம்பெனியாருக்கு 85 லட்சம் ரூபாய் அட்வான்சாகவே கொடுக்கப் பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இந்தக் கம்பெனிக்கு மட்டும் ஏன் இந்தச் சலுகை? இதுபோன்ற இந்த அரசாங்கம் வேண்டிய கன்டிராக்டர்கள், கம்பெனிகள் ஆகியவற்றுக்குச் சலுகை கொடுத்துக்கொண்டே போனால் அது எங்கே கொண்டுபோய் விடும்? இந்தமாதிரியான காரியங்களைத் தவிர்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, கோயம்பத்தூரில் ஓவர் ப்ரிட்ஜ் கட்டுவதற்கு ஒரு கன்டிராக்டருக்கு பெருத்த தொகை அட்வான்சாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவர் பெயர் என்ன, எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதையும் சொன்னால் விவரமாகப் பதில் அளிக்க முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அந்த விவரங்கள் இப்போது என்னிடம் கைவசம் இல்லை. அமைச்சர் அவர்களுக்கே அது நன்றாகத் தெரிந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுவும் அந்த மர்மப் பேழையில் அடங்கியிருப்பதுதான்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீங்கள் ஏன் அதை அடைத்து வைத்திருக்கிறீர்கள்? அந்தப் பேழைதான் உங்கள் கையில் இருக்கிறதே.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றி குறிப்பிடப்பட்டுவிட்ட காரணத்தினால் அந்த விவரங்களை நான் இங்கே அளித்துவிடுகிறேன். முதலாவதாக அந்த வொர்க் கன்டிராக்ட் விடுவதற்கு டெண்டர் கோரப்பட்டது.

'The Chief Engineer called for tenders. The following quoted their rates :—

1. Messrs. E. R. P. Rangaswamy, Thiruppur—Rs. 37,78,050.
2. The Ranga Structurals, Madras—Rs. 39,14,061.
3. Messrs. Associated Engineering Syndicate, Madras—Rs. 39,32,385.
4. Thiru R. Muthuswamy, Thiruppur—Rs. 40,61,388.
5. Thiru S. Raghavan, Coimbatore—Rs. 42,14,033.
6. Messrs. A. M. Ahamad & Company, Madras—Rs. 42,28,833.

பைத்தியக்காரனைத் தவிர வேறு யாருமே இந்தவிதமான டெண்டரை ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அதிலே குறைந்த டெண்டரை தலைமைப் பொறியாளர் அரசாங்கத்திற்குத் தெரிவித்த நேரத்தில், மறுபடியும் ரீ-டெண்டர் விடவேண்டுமென்று சொன்னோம். இதில் வந்த குறைந்தபட்ச டெண்டரான, ஈ.ஆர்.பி. ரங்கசாமியினுடைய டெண்டர் ரூ. 37 லட்சம் அதிகமென்று ரீ-டெண்டர் விடவேண்டுமென்று உத்தரவிட்டோம். அதற்குப் பிறகு; கே. ராஜகோபாலன், ரூ. 35,20,300 ; எஸ். ராகவன், ரூ. 36,30,971. ஆர். முத்சாமி, ரூ. 37,61,265; ஏசியா

இன்ஜினீயரிங் அண்ட் கம்பெனி, ரூ. 38,28,011. இதிலே கே. ராஜகோபாலனுடைய டெண்டர் ரூ. 35,20,300, மூன்றாலே வந்த குறைந்த டெண்டர் ரூ. 37 லட்சம்.

'It was recommended by the Chief Engineer and was accepted by the Government'.

No advance was given to Thiru Rajagopalan.

எனவே, முதலிலே பெறப்பட்டக் குறைந்தபட்ச டெண்டரைக் கூட ஏற்றுக் கொள்ளாமல், ரீ-டெண்டர்விட்டு, பிறகு, ரூ. 35,20,300, கிட்டத்தட்ட 2¼ லட்சம் ரூபாய் குறைவாக இருந்த டெண்டருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த டெண்டரைத்தான் ஒத்துக் கொண்டிருக்கிறோமே தவிர வேறு அல்ல. அட்வான்ஸ் கொடுக்கப் படவே இல்லை. எந்த டெண்டருக்கும் அட்வான்ஸ் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. எனவே, கற்பனை உலகத்திலே பிரவேசித்து யாருக்கோ கொடுக்கப்பட்டது என்று சொல்வது சரியல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த ஓவர் பிரிட்ஜானது இடிந்து விழுந்ததே, அதற்குக் காரணம் என்ன, என்று தங்களுடைய மேன்மையான இலாகாவிலே உள்ளவர்கள் விசாரித்தார்களா? என்ன காரணத்தினால் அது இடிந்து விழுந்தது என்ற விவரங்களெல்லாம் இந்த மன்றத்திலேயுள்ள உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். இது ஒழுங்காக நடைபெற வில்லை. மக்களுடைய வரிப்பணம் வீணாகிறது என்பதால்தான் இதைப்பற்றிக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புவார்கள் என்று தெரிந்துதான், இந்த விளக்கங்களை எல்லாம் கேட்டு வைத்திருந்தேன்.

'As the collapse in the fifth span occurred when actual concreting was in progress, the question of quality or quantity of cement or design does not arise. The Contractor has not been paid for the concreting done.'

தலைமைப் பொறியாளர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு 6—11—72 அன்று கொடுத்த ரிப்போர்ட்படி

'Judging from the condition of the centering in the spans 1 to 4 which are of greater height than the centering in span 5 and from their position of being able to stand the load of the concreting



to-day, I feel the collapse in the 5th span might have happened due to unexpected movement of some wedge in the centering in the span.'

கம்ப்ளீஷன் ரிப்போர்ட் இன்னும் கொடுக்கப்படவில்லை. இடையிலே எதிர்பாராமல் ஏற்பட்ட சம்பவமாகும் இது. இதை வைத்துக் கொண்டு, முடிச்சு போடுவார்கள் என்று சொல்வார்களே அப்படி முடிச்சு போடுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நான் முடிச்சு போடவில்லை. இப்படிப்பட்ட பெரிய பிரச்னை, அதுவும், ஓவர்பிரிட்ஜ் இடையே விழுகிறது என்று சொன்னால் அதிலே இருக்கிற நிபுணர்களைப் பற்றி என்ன சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. இவர் களெல்லாம் ஒழுங்காகத் தங்களுடைய கடமைகளை ஆற்று கிறார்களா? பொதுமக்களுடைய வரிப்பணம் சரியாக செலவழிக் கப்படுவதைக் கண்காணிக்கிறார்களா? அதனால்தான்....

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது ஓர்க் முடியவில்லை. ஓர்க் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ரிஸ்க் அந்த கன்ட்ராக் டருடைய பொறுப்பிலே நடைபெறுகிறது. இதிலே, ஏற்படுகிற நஷ்டங்களுக்கு ஒப்பந்தக்காரர்தான் ஜவாப்தாரி. ரிவர் பாங்கிலே, கிழே வெல் போடுகிற வேலை நடந்துகொண்டிருக்கிறது. அங்கு தண்ணீர் வந்தால், அதுமாதிரி ஏற்படும். சில வேலைகள் அப்படித் தான் நடைபெறும். பொதுவாக, கட்டிமுடித்த கம்ப்ளீஷன் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லிவிட்டோம். அதைக்கேட்ட எதிர்க்கட்சித் தலைவர் எங்களைப் பாராட்டவாவது வேண்டும். குற்றச்சாட்டு அக்மதி அண்ட் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது என்பதுதான். மர்மப் பேழையிலே இருப்பதில் இதுவும் ஒன்று. அது இல்லையென்று ஆன்பிறகு பாராட்டலாமே. அதிகமான டெண்டருக்குக் கொடுக் கப்பட்டது என்பது குற்றச்சாட்டு. முதல் டெண்டரில், அதிக மாக வந்தது என்றுதான், அது கூடாது என்று மறுபடியும் கேட்டு, ராஜகோபாலன் என்பவருக்கு விடப்பட்டது; குறைந்த டெண்டர் அது. அதைக் கேட்டு பாராட்டாமல், கம்ப்ளீஷன் நடந்துவிட்டது என்று பேசக் கூடாது. பதிலைக் கேள்விப்பட்டு சிரிக்கிறாரா, ரசிக்கிறாரா அல்லது உண்மை என்று நம்புகிறாரா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எனக்கு எந்த சிரிப்பும் ரசிப்பும் வராது. ஏனென்றால், தங்களுடைய கட்சிக்கு ப்ரூட் மெஜாரிட்டி இருக்கிறது, ஸ்டீம் ரோலர் மெஜாரிட்டி இருக்கிறது. வேண்டுமென்றால், எங்களைப் பார்த்து, நீங்கள் அப்படி கேட்கக் கூடும். உங்களைப் பாராட்டுவதற்காக, நாங்கள் இங்குவரவில்லை. எங்களுக்குத் தெரிந்த மெட்டீரியல்லை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதை வைத்து சிரிக்கிறாரா அல்லது கேலியாக உணரமுடிகிறதா ? என்று கேட்கவில்லை. மர்மப் பேழையிலே உள்ள செய்திகள் இவ்வளவு மட்டமாய் இருக்கிறதே என்று எங்களோடு சேர்ந்து சிரிக்கிறாரா அல்லது இன்னும் நம்புகிறாரா என்று கேட்கப்பட்டதாக அவர் கொள்ளவேண்டும். வேறு மாதிரி எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. எதிர்க்கட்சிகளை மதிக்கிற உணர்ச்சியோடுதான் நாங்கள் அனைவரும் இருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** எதிர்க்கட்சிகளை மதிக்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு என்னுடைய நன்றி. ஆனால் நடைமுறையிலே என்ன இருக்கிறது என்றெல்லாம் நான் கூறவேண்டிய தேவையில்லை. 2-ம் தேதி நடந்த நிகழ்ச்சி, கோர்ட்டிலே இருக்கிற விவகாரமானதால் நான் அதைப்பற்றி சொல்வது பொருத்தமல்ல. அன்று நடந்தது, எங்களை எந்த முறையிலே நடத்தினீர்கள் என்பதற்கு ஒரு சான்று என்று கூறி அதை முடித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் சில காரியங்களைக் கூறவேண்டு மென்று கருதுகிறேன். இந்த தி.மு.க. கட்சியின் சார்பாக, புதிதாக இரண்டு டிரஸ்டுகள் நிறுவப்பட்டிருக்கின்றன. ஒன்று சென்னையிலும், இன்னொன்று மதுரையிலும் நிறுவப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். மெட்ராசிலே இருக்கிற அந்த டிரஸ்டுக்கு சுமார் 20 லட்சம் ரூபாய் விலை பெறக்கூடிய 100 கிரவுண்டு நிலங்கள் வாங்கியிருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் விவரங்களையெல்லாம், அந்த நிலங்கள் எங்கெங்கு இருக்கிறது, யார் யார் அதிலே டிரஸ்டிகளாக இருக்கிறார்கள், எந்த நோக்கத்தோடு அந்த டிரஸ்டு உருவாக்கப்பட்டிருக்கிறது, அது கட்சியின் வளர்ச்சிக்காகவா அல்லது வேறுவிதமாக கறுப்



பணங்களை ஏய்ப்பதற்காகவா என்ற ஆதாரத்தையும் எடுத்துக் கூறவேண்டும். சாதாரணமாக, கருப்புப் பணங்களையெல்லாம் வெள்ளைப்பணமாக மாற்றுவதற்கு இந்த மாதிரி டிரஸ்டுகளை நிறுவுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதே மாதிரி, 100 கிரவுண்டு நிலம் வாங்கப்பட்டிருக்கிறதா, அது ரூ. 20 லட்சம் பெறுமா என்ற விளக்கத்தையும் இந்த அமைச்சரவை தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மதுரையில் ரூ. 5 லட்சத்திற்கு நிலம் வாங்கப் பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தேனாம்பேட்டையிலே, காங்கிரஸ் மைதானம் டிரஸ்டிலே இருக்கிறதா, வேறு வகையிலே இருக்கிறதா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அது டிரஸ்டிலே இருக்கிறது. அது, இப்பொழுது புதிதாக கள்ளப்பணத்தை மாற்றுவதற்காக வாங்கப்பட்டது அல்ல என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியானால், சென்னை அண்ணா சாலையில் அண்ணா அறிவாலயம் கட்ட வாங்கப்பட்டிருக்கிற இடம் கள்ளப்பணத்தால் வாங்கப்பட்ட இடம் என்று மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுகிறார்களா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** உங்களுடைய கட்சியிலே யிருந்து பிரிந்துசென்றவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள், கள்ளப் பணத்திலே கைதேர்ந்தவர்கள் கூறினால் வெள்ளைப் பணத்திலே எதையும் செய்யக்கூடிய பொன்னப்ப நாடார் அவர்கள் அதையும் நம்பிக்கொண்டு பேசக்கூடாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அந்தக் கள்ளப் பணத்திலே கைதேர்ந்தவர்கள்தான் உங்களுடைய பொக்கிஷதாரராக இருந்தார்கள். ஆகவே, அந்த மாதிரி ஆட்களை எல்லாம் நீங்கள் உடனே அப்புறப்படுத்துவது நல்லது. இங்கு கூறினார்கள், பாலக்காட்டிலேயிருந்து இங்கு படையெடுத்து வருகிறார்கள்,

அவர்களுடைய ஆட்சியை இங்கே அனுமதிக்கமாட்டோம் என்று ஈரோடு நண்பர் சின்னசாமி அவர்கள் கூறினார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கள்ளப்பணத்திலே கைதேர்ந்தவர்கள் என்று நான் யாரையும் குறிப்பிட்டுச்சொல்ல வில்லை. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன தற்கு நன்றி.

**திரு. ஆர் பொன்னப்ப நாடார் :** அவர் கள்ளப்பணத்திலே கைதேர்ந்தவர் என்று நான் சொல்லவில்லை. இந்த மாதிரியாக தங்களுடைய வலைக்குள் நான் விழமாட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சபை நடவடிக்கை குறிப்பிலே ஏறியிருக்கிறது. கள்ளப்பணத்திலே கைதேர்ந்தவர் தான் உங்கள் பொக்கிஷதாரராக இருந்தார் என்பது சபை நடவடிக்கை குறிப்பிலே ஏறியிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** முதலமைச்சர் கூறியதற்குத் தான் நான் பதில் கூறினேனே தவிர, வேறு ஒன்றும் கூறவில்லை. இப்படி ஐந்து லட்ச ரூபாய்க்கு ஒரு டிரஸ்டு மதுரையிலே நிறுவப் பட்டு இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் முதலமைச்சரவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

இன்னொரு விஷயத்தைக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். திருச்சியிலே பொன்னி எண்டர்பிரைஸஸ் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது அவர்கள் ஏரியல் ஸ்ப்ரேயிங், பூச்சி மருந்து தெளிப் பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 21—10—72 ஆம் தேதி யன்று, 4.5 லட்சம் ரூபாய் கள்ளப் பண வேட்டையிலே கைப் பற்றப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது அதைப்பற்றிய தகவல்கள் என்ன என்பதை அவர்கள் தெரிவிக்கவேண்டும். இதுவும் மர்மப் பேழையிலே இருக்கும் மர்மம்தானா என்பதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏரியல் ஸ்ப்ரேயிங் விதி முறைகளுக்கு அப்பாற்பட்ட முறையில் அந்தக் காரியங்கள் நடை பெறுகின்றன. இதில் அரசாங்கப் பணமும், பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து பணமும் விவசாயிகளிடமிருந்து பணமும் அதிகமாக வாங்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இதைப்பற்றியும் பதிலளிக்க வேண்டும்.



நாதன் பப்ளிகேஷன்ஸ் என்று புத்தகங்களை அச்சிட்டு வினியோகிக்க ஒரு நிறுவனம் இருக்கிறது. டெக்ஸ்ட் புக்ஸ் எல்லாம் இந்த நிறுவனத்தின் வழியாக பப்ளிஷ் செய்யப் படுகின்றன. ஆனால் பள்ளிக்கூட மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்கள் வந்து சரியாக விற்கப்படவில்லை என்று சொல்லப் படுகிறது. இதைப்பற்றியும் அரசு ஆறஅமர யோசித்து பதில் கூற கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசாங்கத் தினுடைய புத்தகங்களை விநியோகிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஏஜன்சி என்று முன்னாலே நியமிக்கப் பட்டார்கள், சென்ற ஆண்டு முதல் கல்வி மாவட்ட அளவிற்கு ஏஜன்சிகள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட 30, 40 கம்பெனிகளில் ஒரு கம்பெனிதான் நாதன் கம்பெனி என்பது. அதற்கும் முறைப்படிதான் தரப்பட்டிருக்கிறது. அதில் ஏற்பட் டிருக்கிற தவறு என்னவென்புதை அவர்கள் சொன்னால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் புத்தகங்களை வழங்குவதிலே ஏந்தவிதமான தாமதமும் ஏற்பட வில்லை. ஆனால் சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டுதான் ஜூலை மாதத்திலே வழங்கவேண்டிய புத்தகங்கள் ஆகஸ்டு மாதத்திலே தான் கொடுக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் அச்சகத்திற்குக் கொடுக்கப்பட்ட வேலை துரிதமாக நடைபெற்று சரியான நேரத்தில் வந்துசேரவில்லை. ஆனால் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் ஜூன் மாதத்திலே அச்சடிக்கப் பட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டு இன்ன குற்றச்சாட்டு என்பதைத் தெரிவித்தால் பதிலளிக்கலாம். இதிலே எந்தவிதமான புகாரும் வரவில்லை, எந்தவிதமான கோளாறும் இல்லை, அப்படி வந்திருந்தால் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களுக்கு அந்தக் குற்றச்சாட்டின் காப்பி வந்திருக்கும் என்று கருதுகிறேன். அதிலே அந்தக் கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இதற்கும் போதிய

பதில் கூறக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவு விநியோகத்திலே, கேரளாவிற்கு அரிசி அனுப்புவதற்காக அதிகமான அளவில் அனுப்புவதற்காக பெர்மிட் வழங்கப்பட்டிருப்பதாகவும் முக்கியமாக தாண்டவராயன் என்பவருக்கு, கோயம்புத்தூரைச் சேர்ந்தவர், 15 ஆயிரம் டன் அரிசி அனுப்ப அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அவருக்குப் போதிய பண வசதியில்லாத நிலை என்றும் அதற்கு சுமார் 2 கோடி ரூபாய் தேவைப்படும் என்பதால் பல நிறுவனங்கள் அவருக்கு உதவியதாகவும் சொல்லப்படுகிறது. குறிப்பாக ஏ.எம்.ரா. அசோஷியேடட் டிரேடர்ஸ் என்று தெரிகிறது. தாண்டவராயன். அவர்களுடைய புக்களையெல்லாம் போலீஸார் சீஸ் செய்து இருக்கிறார்கள். புட். செல்லுக்கு புகார்கள் வந்திருக்கின்றன. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனைய நிறுவனங்களும் இருக்கின்றன, ஆனந்த மாளிகை, மெட்ரூஸ், வாசவி கம்பெனி, மெட்ரூஸ், ஆனந்தா இண்டஸ்டரீஸ், மெட்ரூஸ், என்பதேயாகும். இதில் ஏதாவது ஒழுங்கு தவறியிருக்கிறதா என்பதையும் அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும் பொழுது சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் எதிர்க்கட்சித் தலைவரிடம் இருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, இப்படியொரு வழக்கு வந்து அரசாங்கம் விட்டுவிட்டதா, நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஏதோ கேஸ் எடுத்ததாக தகவல் இல்லை. கேஸ் எடுத்திருந்தால் நான் சொல்வதற்கு விரும்பவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்பே நானே சொன்னேன். டி.சி.எம்.எப்.க்குச் சொந்தமான அரிசி மக்கிப்போயிருந்தது, அதற்கு டெண்டர் மூலம் நல்ல விலை வாராத காரணத்தினாலே நெகோஷியேஷன்ஸ் செய்யப்பட்டது. தவறு நடந்து இருக்கிறது. என்று இந்த





மன்றத்திலே முதன்முதலில் சொன்னது நான்தான். அதற்குப் பிறகு போலீஸாரிடம் சொல்லி, ஃபுட் செல்லுக்கு புகார் செய்யப்பட்டு, 400, 500 டிரான்ஸாக்ஷன்களையெல்லாம் விசாரித்துப் பார்த்து இதற்காக அதிகாரிகள் எல்லாம் கேரளாவிற்குச் சென்று அதற்குப் பிறகு பிராசிகியூஷன் செய்யக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் இந்த வழக்கில் தலையிடாது, போலீஸார் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடர்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அப்படி வழக்குத் தொடர்ந்தால் நான் நிச்சயமாகப் பாராட்டுவேன். ஆனால் வழக்குத் துரிதமாக இல்லை, பைல்கள் எல்லாம் தூங்குகின்றன என்று கேள்விப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பைல்கள் தூங்கவில்லை. யாரோ புகாரைக் கொடுத்துவிட்டு எங்கோ தூங்கிக்கொண்டிருப்பதற்கு என்மீது புகார் சொல்லவேண்டாம். அது வழக்கறிஞருக்குச் சென்று இருக்கிறது. அதைப்பார்த்த பிறகு நிச்சயமாக நீதிமன்றத்தின் முன்பு குற்றவாளிகள் நிறுத்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த டீலிலே எவ்வளவு அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் அதைத்தான் ஏற்கனவே சொன்னேன். அது அரசாங்க அரிசியல்ல. டி.சி.எம்.எப். அரிசியாகும் அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லை. அந்த டீலின்மூலம் எவ்வளவு லாபம் என்று எனக்குத் தகவல் இல்லை. உணவு அமைச்சர் அவர்களிடம் கேட்டால் அவர்கள் விவரமாகச் சொல்வார்கள். அரசாங்கத்திற்கு நஷ்டமே கிடையாது, அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, அந்த டி.சி.எம்.எப்-க்கும் நஷ்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஜே. கே. கே. அங்கப்பன் அண்ட் பிரதர்ஸ், குமாரபாளையம் விற்பனை வரி 35 லட்சம்

கொடுக்கவேண்டியிருப்பதாகவும், அதை அவர் கட்டத் தவறிய தாகவும் அவருக்கு அரசாங்கம் பரிவுகாட்டியதாகவும் சொல் கிறார்கள், அது உண்மையா, என்ன நடந்தது என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏதோ 35 லட்சம் ரூபாய் என்று சொன்னார்கள். பத்திரிகையிலே நான் பார்த்தது, 7 லட்சம், 7 லட்சம், 14 லட்சம் என்றுதான் பார்த்தேன். ஆனால் அவர்கள் சுமார் 35 லட்சம் என்று சொல்கிறார்கள். குமாரபாளை யத்தில் எந்த வியாபாரியிடமிருந்தும் வரிபாக்கியில்லை. அரசாங்கம் எப்படியும் எதையும் விட்டுவைக்கவில்லை. அரசாங் கத்திற்கு அதிலே ஒரு பைசாகூட நஷ்டம் இல்லை, இழப்பு இல்லை, வரியை வசூலிக்காமல் விட்டுவிடவில்லை. 7 இலட்சம் ரூபாய் என்று சொல்வதோ அல்லது பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு யாராவது பேசினாலும்கூட அதற்கும் சேர்த்தே பதில் சொல்லிவிடுகிறேன். அப்படி குமாரபாளையத்தில் எந்த வியா பாரிக்கும் 7 இலட்சம் ரூபாய் வரி பாக்கி இல்லை. 7 இலட்சம் ரூபாய் டர்ன்ஓவருக்கு வரி என்று வைத்திருக்கிறார்கள். வரி 7,000 போட்டிருக்கிறது. அப்பீலில் இருக்கிறது. ஏழு இலட்சம் ரூபாய் எந்த நேரத்திலும் எந்த வியாபாரியிடத்திலும் பாக்கி யிருந்தது இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதேமாதிரி இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருக்கும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் எதிர்க்கட்சியினரை எந்த முறையிலே நடத்துகிறார்கள் என்பதைப்பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழர் படை என்ற ஒரு அமைப்பு இன்றையதினம் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களைத் தாக்க முனைந்திருக்கிறார்கள். குறிப்பாக மதுரையிலே இருக்கும் இதன் தளபதியானவர் என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தை இந்த மன்றத்திலே கூற விரும்புகிறேன். அக்டோபர் மாதம் 8-ஆம் தேதி அன்று மதுரையிலே ஒரு கூட்டம் நடந்தது. அது ஒரு முக்கியமான இடத்திலே, வடக்கு மாசி வீதியும் மேல மாசி





வீதியும் சந்திக்கின்ற இடத்தில் நடந்த அந்நிகழ்ச்சியில் மாண்பு மிகு முதலமைச்சரவர்களும் கலந்துகொண்டதாகக் கேள்விப் படுகிறேன். அந்தக் கூட்டத்தில் குறிஞ்சி பத்திரிகையின் ஆசிரியர், எங்கள் கட்சியைச் சேர்ந்த நெடுமாறன் அவர்களைப்பற்றி என்னென்ன பேசப்பட்டது என்பதைக் கூறவேண்டிய கடமை எனக்கிருக்கிறது. அந்த மதிப்பிற்குரிய மேலவை உறுப்பினரும், வணக்கத்திற்குரிய மேயருமான அன்னார் நெடுமாறனுக்குச் சமாதி கட்டப்போகிறேன் என்று ஆவேசத்தோடு, ஆத்திரத்தோடு கூறி யிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவரை இந்த அரசியலிலிருந்தே அப்புறப்படுத்த வேண்டிய காரியங்களையெல்லாம் செய்வேன் என்று சீறிச்சினம் கொண்டு பேசியிருக்கிறார்கள் என்பதாகத் தகவல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஒரு முக்கியமான விஷயம். அங்கப்பன்பற்றிச் சொன்னபொழுது ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். அதைச் சொல்வதற்கு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் அனுமதிக்கவேண்டும். அந்த அங்கப்பன் வழக்கு தொடர்ந்திருப்பதாகப் பத்திரிகைகளில் பார்த்திருக் கிறோம். தொடர்ந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். செய்தியை வெளியிட்ட பத்திரிகை ஆசிரியர், நான் தெரியாமல் வெளியிட்டு விட்டேன், மன்னித்து விடுங்கள் என்று கடிதம் எழுதி வாபஸ் பெற்றிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகை நாத்திகம் என்று தெரியும் என்று நினைக்கிறேன். இன்னொரு பத்திரிகை, சுதேச மித்திரன் பத்திரிகை, 'அவுட் ஆஃப் இக்னரன்ஸ்' வெளியிட்டு விட்டோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். வழக்கில் இருக்கிறது, இங்கே சொன்னவர்கள், அங்கப்பனுக்குச் சலுகை காட்டியதாகக் குற்றம் சாட்டியவர்கள் நீதிமன்றத்திற்கு தைரியமாக வந்து சொல்லி, அந்தக் குற்றச்சாட்டை நிரூபித்தால் என்ன தண்டனையை வேண்டுமானாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படி நிரூபிக்கப்படவில்லையென்றால், அப்படிச் சொன்னவர் களுக்கு தீர்ப்பு என்ன என்பதை நிச்சயமாக 1976 வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அடுத்தபடியாக, அந்தக் கூட்டத்திலே, நெடுமாறனின் தந்தையாக திரு. பழனியப்பப் பிள்ளை கொஞ்சம் சொத்து சம்பாதித்து வைத்திருக்கிறார்கள், அதை

அழிக்க நெடுமாறன் பிறந்திருக்கிறார். அவருடைய சமாதியையும் விரைவில் கட்டிவிடுவேன் என்று கூறியிருக்கிறார்கள். இம்மாதிரியான பேச்சுக்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் முன்னணித் தலைவர்கள் பேசினால் இந்த நாட்டிலே என்ன நடக்கும் என்பதை நாம் உணர வேண்டும். பொறுப்பாக இருப்பவர்கள் கட்டுப்பாட்டோடு பேசவேண்டும். அவர்கள் நாவை அடக்கிப் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

இந்த மன்றத்திலேகூட நான் இதற்கு முன்பு கூறினேன். கழிந்த மாதம் 13-ஆம் தேதியன்றும், இந்த மாதம் 2-ஆம் தேதியன்றும் ஒருசிலர் என்னென்ன முறையிலே நடந்து கொண்டார்கள்? அதிலும் குறிப்பாக பெருந்தலைவர் என்று சொல்லப்படுபவர் எப்படி நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டை நானே கூறியிருக்கிறேன். இம்மாதிரியான விரும்பத்தகாத காரியங்களை பெரிய மனிதர்கள் செய்யக்கூடாது. யாராவது தவறு செய்தாலும் கண்டிக்க வேண்டும்? எங்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டும். அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகளுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். இன்றையதினம் சட்டம், ஒழுங்கு, அமைதி குலைந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து சென்றதனாலே மக்கள் திண்டாடுகிறார்கள். அதற்கு எதிர்க்கட்சிகளின் மீது பொறுப்பைப் போட்டுவிட்டு குற்றக்கணைகளை வீசக்கூடாது. இன்றைக்கு உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒழுங்காகப் பேசுகிறார்களா அல்லது ஒழுங்காகக் காரியங்களைச் செய்கிறார்களா என்பதை நீங்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும். இம்மாதிரியான காரியங்களை இந்த மேயரைப்போன்றவர்கள் மறுபடியும் செய்தால் இந்தத் தேசத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் என்ற கருத்தை மட்டும் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அடுத்து, டிரஸ்ட் விஷயமாக முன்பு ஒரு விஷயத்தைக் கூறினேன். இன்னொரு விஷயத்தை இந்த டிரஸ்ட் விஷயமாகக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இந்த டிரஸ்ட் சம்பந்தமாக தினத்தந்தி டிரஸ்டிலே என்னென்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதையெல்லாம் இந்த மன்றத்திற்குக் கூறுவது பொருத்தமாக





இருக்கும் என்று கருதுகிறேன். தினத்தந்தி டிரஸ்டின் ஃபவுண்டர் அல்லது . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, தினத்தந்தி டிரஸ்டைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டு பதில் சொல்லியிருக்கிறோம். இப்பொழுது உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, எனவே, அதைப்பற்றி இங்கே பேசுவது முறையாகாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அந்த வழக்குகளின் விவரங்களைப்பற்றிச் சொல்லவில்லை. டெல்லியிலேயிருந்து அட்வகேட் வந்து, ஆர்குமெண்ட் நடந்து, ஆர்டர்ஸ் ரிசர்வ் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அதன் விவரங்களுக்குள் செல்லவில்லை. நானும் வழக்கறிஞன் என்ற முறையில் என்னுடைய பொறுப்பும் எனக்குத் தெரியும். ஆனால் பல ரிட்டுகள், 1557/69, 558, 559, 3352 முதல் 3357 வரை . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இதைச் சொல்வதையே நான் ஆட்சேபிக்கிறேன். ரிட் போடப்பட்டிருக்கிறது, விசாரணையில் இருக்கிறது, விசாரணை முடிந்து தீர்ப்பைக் கூறுவதற்கு காத்து இருக்கும்பொழுது அதைப்பற்றிப் பேசுவது சரியா என்று பார்க்கவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நான் மெரிட்டைப்பற்றிக் கூறவில்லை. இம்மாதிரி ரிட்டில் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) :** சட்ட அமைச்சரவர்கள் கூறுவதைப்போல் இதைப்பற்றிப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது என்று கருதுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : I am not making any references. I am only mentioning that these writs are pending. What has happened subsequent to that, I will just explain in Tamil.

1969-லே இந்த டிரஸ்டுக்காக 12 இலட்சம் ரூபாய் என்று அசெஸ்மெண்ட் போடப்பட்டிருக்கிறது. 1970-லே 13 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அப்பீல் கொடுத்து, ஸ்டே கேட்டார்கள். கண்டிஷனல் ஸ்டே போடப்பட்டது. ஆனால் அதைப் பூர்த்தி செய்யவில்லை. அட்வகேட்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 டிசம்பர் 11

அசிஸ்டன்ட் கமிஷனர் அதற்காக "பெனல்ட்டி" போட்டிருக்கிறார்கள். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், இந்த இன்கம் டாக்ஸ் மூலமாக சுமார் ஒரு கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரும். அப்படிச் செய்தால் நமக்கு 75 சதவிகிதம் கிடைக்கும் என்பதால் நான் அதைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இதற்குமுன்பு "லீடர் ஆஃப் தி அப்போசிஷன்"-ஆக இருந்த நண்பர் திரு. கருத்திருமன் அவர்கள் கிட்டத்தட்ட இதையே தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு கோடி என்றார்கள், இவர்கள் 80 இலட்சம் என்று சொல்கிறார்கள். இதே காரியத்தைத்தான் அவர்களும் சொல்லி, அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்தவர்கள் இதற்கு ஆதாரம் இருந்தால் கொண்டு வாருங்கள் என்று கேட்க, எனக்கு ஆதாரம் இல்லை என்று அவர் சொல்லியபிறகு, இந்தப் பேரவையில் அவருடைய நடத்தைக்காக "வார்னிங்", எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வார்னிங் கொடுத்ததாகக் காட்ட முடியுமா ? வார்னிங் பண்ணவில்லை. சும்மா சொல்லக்கூடாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

That was the opinion of the Speaker.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எதிர்க்கட்சி தலைவர் ஆதாரம் காண்பிக்கவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது.

DR. H. V. HANDE : Don't twist facts.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஆகவே, எதையும் புதிதாகச் சொல்லவில்லை. டிரஸ்ட் பற்றிச் சொல்வதால் கூறுகிறேன். அவைகள் எல்லாம் வழக்கில் இருக்கின்றன. வழக்கில் தீர்ப்பாகி, கொடுக்கவேண்டிய பணம் கொடுக்காமல் இருக்கவில்லை. நீங்கள் அப்படி முன்னால் சொன்னதையே, திருப்பத் திரும்பச் சொல்லி அதே காரியத்திற்குப் பதில் சொல்லி—பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன்—அந்த டிரஸ்ட், தினத்தந்தி டிரஸ்ட் சம்பந்தமாகப் பாக்கியிருக்கிறதா என்றால் இல்லை. அதை மட்டும் உறுதியாகக் கொள்ளுங்கள்.



1972 டிசம்பர் 11]

DR. H. V. HANDE : How is the Hon. Minister for Co-operation so much interested in this trust, we would like to know. The way in which he is answering questions shows that he is fully aware of the whole subject. What are his connections with this trust because he has the full answer. How is he interested in this trust?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** . மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறிய விவரங்களை விட அதிகமாகத் தெரிந்த காரணத்தால் விவரங்களைச் சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் எந்தவிதத்திலும் வரி போட்டு கொடுக்காமல் இல்லை. நான் கணக்கு கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். டிரஸ்டைப் பொறுத்தவரையில் தவறாக நடந்தது என்ற தவறான கருத்து இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். எந்தப் பணமும் பாக்கி இல்லை. வேறு சிலரைப்போல் சில லட்சங்கள் பாக்கி இருக்கிறது என்று ஒப்புக்கொண்டு கோர்ட்டுக்கு தவணை கொடுங்கள் என்று கேட்பது போன்று எதுவும் நடைபெறவில்லை.

DR. H. V. HANDE : Now the cat is out of the bag. By saying that no amount is due by the trust, he has indirectly exposed his connection with it and now the cat is out of the bag. That is all.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கும் இந்த டிரஸ்டுக்கும் சம்பந்தம் இல்லை. என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தமாதிரியான டிரஸ்டுகள் பல இருக்கின்றன. மதுரையிலுள்ள டிரஸ்ட் பற்றிச் சொன்னேன். சென்னையிலுள்ள டிரஸ்ட் பற்றிச் சொன்னேன். இந்த டிரஸ்டுகள் சரியாக இயங்குகின்றனவா என்பதைப் பற்றியெல்லாம் இந்த மன்றம் அறிந்து கொள்வதற்காகத்தான் இந்த விவரங்களை எல்லாம் கூறினேன். முன்பு இங்கே எங்கள் கட்சித் தலைவர் ஏதோ கூறினார், பிறகு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் என்ற முறையிலே பதில் சொன்னார்கள். அதைக் கண்டு நான் ஒன்றும் பயப்படப் போவதில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலம் கொடுப்பதிலே தங்களிடம் இருந்து பிரிந்து சென்ற எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு 31½ கிரவுண்டை சத்தியா ஸ்டுடியோவுக்காகக் கொடுத்திருக்கிறார்கள்

அது சம்பந்தமாக முன்னாள் மாண்புமிகு உறுப்பினர் மார்ட்டின் அவர்கள் பல முறையும் இந்த மன்றத்திலே முன்பு எடுத்துக் கூறினார்கள். ரெவின்யூ போர்டு மெம்பர் சிபாரிசுக்கு விரோதமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு அனந்தநாயகி போன்றவர்கள் எல்லாம் கூட இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். ஒரு கிரவுண்ட் அந்த இடத்தில் ஐயாயிரம் ரூபாய் வாடகை பெறும் என்றும் 15 வருஷ காலக் கெடுவுக்கு வாடகைக்கு விட்டிருப்பதாகவும், அதற்கு பிஞன்ஸ் செகரட்டரி மறுப்புத் தெரிவித்ததாகவும் போன்ற பல விஷயங்களும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒருவேளை இன்று உங்கள் கட்சியில் இல்லாமல் இருக்கலாம். இந்தமாதிரியான காரியங்கள் எல்லாம் நடக்கக்கூடாது, எதிர்காலத்திலாவது தவிர்க்கப்படவேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பல குற்றச் சாட்டுகள் இருக்கின்றன.

பொதுவாக இந்த அரசாங்கம் விலைவாசி உயர்வைத் தடுக்க என்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்பது பிரச்சினையாகும். விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்கள், குறிப்பாக பல கிளர்ச்சிகளை எல்லாம் நடத்தியவர்கள் விலைவாசி உயர்வைத் தடுக்க நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. இந்த அரசாங்கமோ, மத்திய அரசாங்கமோ உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன். விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதற்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மர்மப் பேழை முடிந்து விட்டது என்று கருதுகிறேன். அதற்குப் பதில் அளித்து விட்டால் பின்னால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தேவை இருக்காது.

முரசொலியைப் பற்றிச் சொன்னார்கள். முரசொலிப் பத்திரிகையின் சர்குலேஷன் இந்த அரசு வந்த பிறகு அதிகரித்து விட்டது என்று சொன்னார்கள். சலுகைகள் காட்டப்படுகின்றன என்றார்கள். முரசொலியின் சர்குலேஷன் 1965-66-ல் 11,250 ; 1966-67-ல்—அப்போது ஆட்சிக்கு வரவில்லை—16,790 ; 1971-72-ல் 17,580, கிட்டத்தட்ட ஆயிரம்கூட அதிகமாகவில்லை. இந்த அரசு வந்ததற்குப் பின்னால் விற்பதில் பயங்கரமான





சூழ்நிலை ஒன்றும் ஏற்படவில்லை. மர்மப் பேழையில் அது இருந்தாலும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதை எப்படி நம்பியிருக்கிறார் என்பதுதான் எங்கள் கேள்வி. மவுண்ட் ரோடில் கட்டடம் வாங்கப்பட்டது, இடிக்கப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். மர்மப் பேழையில் அதைப்பற்றி இருக்கிறது என்று தெரியும். அதைத்தான் அவர்கள் படிக்கிறார்கள். ஏற்கனவே முரசொலிக்குச் சொந்தமான கட்டடம் இருந்தது. அது திரு. மாறன் அவர்களுக்குச் சொந்தமான கட்டடம். இப்போது அல்ல 1958-ம் ஆண்டு வாங்கப்பட்ட கட்டடம், இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் வாங்கப்பட்டது அல்ல. 1970-ம் ஆண்டு கற்பனை உலகத்திற்கெல்லாம் மூலாகாரமாகச் சொல்லுகின்ற அளவுக்கு வாங்கப்பட்ட அந்தச் சிறு இடத்தினுடைய பரப்பளவு 1,284 சதுர அடி. பில்டிங் இடிக்கப்பட்டு இப்போது மொட்டையாக இருக்கிறது. வாடகைக் கட்டடத்தில்தான் இப்போது முரசொலி நடைபெறுகிறது.

தூத்துக்குடியில் நடந்ததாக பாதி விஷயத்தைதான் சொன்னார்கள். கல்கான் மரைக்காயர் என்ற கண்டிராக்டர் எந்த அமைச்சருக்கும் சொந்தக்காரர் அல்ல. காண்டிராக்ட் தவறு என்று சொன்னார்கள். குற்றச்சாட்டில்கூட எந்த காண்டிராக்ட் என்று விவரமாக எடுத்துச் சொல்லவில்லை. நாங்கள் எல்லா காண்டிராக்டையும் எடுத்துப் பார்த்தோம். அங்கே சவுத் வார்ஃப் என்று ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு லோயஸ்ட் டெண்டர் நாகப்பட்டினம் இம்போர்ட்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்ஸ் கார்ப்பரேஷன் ரூ. 11,06,115 ; நார்த் வார்ஃபுக்கு நீலகண்டன் கம்பெனி லோயஸ்ட் டெண்டர் ரூ. 13,02,980. ஈஸ்டர்ன் பிரேக் வாட்டர்சுக்கு லோயஸ்ட் டெண்டர் ஏற்கனவே கொடுத்ததைவிட மறுபடியும் குறைத்து 16,61,732½ ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் அவர் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். இதிலே நாகப்பட்டினம் இம்ப்போர்ட்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்ஸ் கார்ப்பரேஷன் லோயஸ்ட் டெண்டர். சென்ட்ரல் ஜெட்டிக்கு லோயஸ்ட் டெண்டர் நீலகண்டன் கம்பெனி 9,50,195 ரூபாய். லோயஸ்ட் டெண்டரைவிட வேறு யாருக்குக் கொடுப்பது? அவ்வாறு கொடுக்க வேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்கள் சிபாரிசு

செய்ய மாட்டார்கள். லோயஸ்ட் டெண்டருக்குத்தான் விடுகிறோம்.

கொடைக்கானல் ரோடு காண்டிராக்ட் பற்றிச் சொல்ல ஆரம்பித்து பாதியோடு விட்டு விட்டார்கள். அகமது அண்டு கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது, அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது என்பது குற்றச்சாட்டு. இதிலும் லோயஸ்ட் டெண்டர் நாகப்பட்டினம் இம்போர்ட்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்ஸ் கம்பெனிக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றச்சாட்டில் வந்திருப்பது அகமது அண்டு கம்பெனிக்கு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டதாக. குற்றச்சாட்டில் இல்லாத இன்னொருவருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினம் இம்போர்ட்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு 46,46,589 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜே.கே.கே.-வைப்பற்றி ஆரம்பித்து பாதியோடு விட்டு விட்டார்கள். அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொன்னதுபோல் 1965-ம் ஆண்டு மத்திய அரசாங்கம் நூலாக விற்றது அல்லது கைத்தறியாக விற்றது என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு சிலவற்றைக் கண்டுபிடித்தார்கள். மத்திய அரசாங்கம் கண்டு பிடித்தது 1965-ல். நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் சென்று புள்ளிவிவரங்களை வாங்கி யார் யாருக்கு வரி போடலாம் என்று பார்த்து பல பேருக்கு வரி போட்டோம். எல்லோரும் உயர் நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். பெரும்பாலும் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். குறிப்பாக ஜே.கே.கே அங்கப்ப செட்டியாருக்கு 7,71,677½ ரூபாய்க்கு அசெஸ்மென்ட் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு வரி 7,216 ரூபாய் 18 காசு. பெனல்டி முதலில் போடப்பட்டது 11,572 ரூபாய். பின்னால் அப்பலெட் அதிகாரி குறைத்திருப்பது 4,629 ரூபாய். இரண்டும் சேர்ந்து கிட்டத்தட்ட 12,000 ரூபாய் வருகிறது. இதிலே வரியும் பெனல்டியும் சேர்ந்தா ஏழு லட்சம் என்பது தவறு. இன்டிபென்டன்ட் குவாசி ஜுடிஷியல் அதாரிடி அசிஸ்டென்ட் கமிஷனர் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அதையும் போர்டு ஆப் ரெவின்யூவில் ரெவ்யூசெய்து எப்படி தவிர்க்க வேண்டுமென்ற முறையில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.



அடுத்து ஏரியல் ஸ்ப்ரே, இது கொஞ்சம் விறுவிறுப்பானது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லுகிறார்கள். அதிலே விறுவிறுப்பு இல்லை, சுறுசுறுப்பு இல்லை, சுவையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு ஏரியல் ஸ்ப்ரே மூலம் மருந்து தெளிக்கப்படுகிறது. இதில் தனிப்பட்டவர்கள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்ஸ் என்று சொல்வதற்கு இடம் கிடையாது. இதில் அரசாங்கமே தீர்மானிக்கிறது. ஒவ்வொரு வட்டாட்சி ஒன்றியத்திற்கும் எவ்வளவு தெளிக்கவேண்டுமென்று முடிவு செய்கிறோம். இந்த ஆண்டு புதிதாக நாம் அதிகமாக எடுக்கவில்லை. எல்லா ஆண்டும் அதிகமாக தெளிக்கவேண்டும் என்பதுதான் கொள்கை. இந்த மருந்து தெளிப்பதில் யாருக்குக் கொடுப்பது என்பதுதான் பிரச்னை. டெண்டர் கோரப்படுகிறது. யார் குறைவாகக் கேட்கிறார்கள் என்று பார்க்கப்படுகிறது. இதில் துர்பாக்கியம் என்னவெனில் இதில் யார் யார் கலந்துகொள்கிறார்களோ அவர்களுக்கு ஏரியல் ஸ்ப்ரே செய்ய வசதியாக ஹெலிகாப்டர் இருப்பதில்லை. தமிழ்நாடு பூராவையும் எடுத்துக்கொண்டால் முழுமையாகக் கொடுப்பதென்றால் தெளிக்கமுடியாது, காரணம் ஹெலிகாப்டர் இல்லை. இதை உணர்ந்து யார் யாருக்கு எவ்வளவு ஹெலிகாப்டர் இருக்கிறது என்று பார்த்து அவர்களை அழைத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரிவு என்று கொடுக்கப்படுகிறது. இது தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிற ஒரு முறையாகும்.

1971–72-ல் அதே முறை பின்பற்றப்பட்டு டெண்டர்கள் அழைக்கப்பட்டு குறைத்துக் கேட்டவர்கள், அதிகமாகக் கேட்டவர்கள்; போட்டி போட்டவர்கள் எல்லோரையும் அழைத்து ஒன்றாக வைத்துப் பேசி ஹெலிகாப்டர் மூலம் தெளிப்பதற்கு ரூ. 11-க்கு கொடுத்திருக்கிறோம். ஃபிக்ஸட் விங் மூலம் தெளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். காரணம், அதற்கு 8 ரூபாய். இதற்கு ரூ. 11. ஆகவே 11 ரூபாய் என்று கொடுத்திருக்கிறோம் என்பதை ஒரு பெரிய பிரச்சினையாக வைத்து அதிகமாகக் கொடுத்து விட்டோம் என்று சொல்லப்படுகிறது. 1966–67-ல் பொன்னப்ப நாடார் அவர்களுக்கு இந்த புள்ளிவிவரம் பிடிக்கும்

என்பதால் தருகிறேன்—டென்டர் கால்பார் செய்யப்பட்டு கொடுக்கப்பட்ட விவரங்கள். ஃபிக்ஸட் விங்க்கு 8 ரூபாய். ஹெலிகாப்டருக்கு ரூ. 10. இப்போது ரூ. 11 என்று கொடுக்கிறோம். அரசாங்கத்திற்கு அவர்கள் ரெப்ரஸென்ட் செய்திருந்தார்கள். ப்ரொப்பல்லர் சார்ஜ் அதிகமாக ஆகிறது, ஆகவே 11 ரூபாய் வேண்டுமென்று கோரியிருந்தார்கள். முன்னால் ஒத்துக்கொண்டு செய்யாது விட்டுவிட்டவர்கள் என்ற முறையில் எல்லோருக்கும் சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பல பேர்களுக்கு சேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் தவறு ஏதும் இல்லை. இதில் ஒன்பது பேர்கள் பயன்பெறுகிறார்கள். தனிப்பட்டவர்களுக்கு சலுகை காட்டப்படவில்லை என்பதுதான் உண்மை. அரசாங்கத்திற்கும் பொன்னி என்டர்ப்ரைஸஸ்-க்கும் சம்பந்தம் இருப்பது என்பது கற்பனை. பொன்னி என்டர்ப்ரைஸஸ்க்கும் அமைச்சரவையில் உள்ள யாருக்குமோ சொந்தம் அல்லது தொடர்பு இருக்கிறது என்பது அதைவிட மேலான கற்பனை. அது கற்பனைக்குமேல் கற்பனை. அங்குதான் தவறு செய்கிறார்கள். பொன்னி என்டெர்ப்ரைஸஸ் உயர்நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். யார் மீது? யார் ஹெலிகாப்டர் வைத்து மருந்து தெளிக்கிறார்களோ அவர்கள்மீது, அந்த அஸோஸியேஷன் மீது. ஆகவே அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. அரசாங்கத்தைப் பற்றி ஒருவார்த்தையும் சொல்லவில்லை. பம்பாய் நிறுவனத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருப்பவர், எல்லாப் பகுதிகளுக்கும் சென்று ஒழுங்காக தெளிக்கப்படுகிறதா, வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா, ப்ளாக்கிங், கொடி நட்டு ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிக்கப்படுகிறதா என்று பார்க்க நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கும் இவருக்கும்தான் வழக்கு. பொன்னி என்டர்ப்ரைஸ்க்கும் அரசுக்கும் சம்பந்தம் கிடையாது. நம் ஒப்பந்தம் பம்பாயிலுள்ள நிறுவனங்களுக்கு மட்டும்தான். பம்பாய் நிறுவனம்பற்றி மேலும் விசாரித்ததில் நம் மாநிலத்தில் மட்டுமல்ல பலமாநிலங்களிலும் அவர்கள் இதுபோல் அவர்கள் பிரதிநிதிகளை நியமித்திருக்கிறார்கள். ஆக, இதில் எந்தவிதமான சலுகையும் காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**DR. H. V. HANDE**: Just one ' vilakkam '. The Madras firm which undertook did not have the contract directly. I hope the Hon. Minister accepts it. The particular firm let it on a sub-contract to the Bombay firm. The Government while awarding the contract did not even find out whether they had any helicopter. Without verifying this fundamental thing, how did the Government give them the contract? That is question two. The third point is this. The understanding arrived at between the Madras Firm and the Bombay Firm was that the Bombay Firm would pay 80 paise to the Madras Firm and on that basis the sub-contract was given by the Madras Firm to the Bombay Firm. Without doing any thing, by getting this 80 paise, the Madras Firm is understood to have made a profit of Rs. 7.75 lakhs without investing any capital. They had not even a Bank account at the time the Government gave them the contract. After accepting the contract, afterwards, they opened an account with the Indian Overseas Bank. Without giving, the contract to the Madras Firm who later on let it on sub-contract to the Bombay Firm and made a profit without doing anything, if Government had given the contract to the Bombay Firm directly, the Government could have got Rs. 8 lakhs. That is one point of view. How does the Government expect to exonerate itself from that point of view?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: தனிப்பட்ட நபர்கள் யாருக்கும் சலுகை அளிக்கப்படவில்லை. ஹெலிகாப்டர் இல்லாத தனி நபருக்குக் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். அது தவறு. பம்பாய் நிறுவனத்தைச் சேர்ந்த பல பேர்களுக்கு ஹெலிகாப்டர் வசதிக்கேற்றவாறு பிரித்துக்கொடுக்கப்பட்டது. பொன்னி என்டர்ப்ரைஸஸ் என்னென்ன வேலைகள் செய்கிறார்கள் என்பதற்கும் நமக்கும் சம்பந்தம் கிடையாது. எண்பது ரூபாய்க்கு கொடுத்தது சரியா தவறா என்றால் அவர்கள்தான் முடிவுசெய்யவேண்டும். நமக்கு அப்படிக் கொடுத்ததில் செலவு குறைந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும். 1966-67-ல் பத்து ரூபாய் என்று கொடுக்கப்பட்டது இப்போது 71-72-ல் ஒரு ரூபாய் கூட்டி 11 ரூபாய் என்று நம் அரசு கொடுத்தது நியாயமா இல்லையா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களைப் பொறுத்தவரைக்கு அது நியாயந்தான். அவர்கள் வேலையாட்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்கள்,

[திரு. செ. மாதவன்] [1972 டிசம்பர் 11

அது அதிகமா அல்லது குறைவா, அப்படிக் கொடுத்திருக்கலாமா கொடுத்திருக்கக்கூடாதா, வேலை செய்தார்களா இல்லையா, அது அவர்களுக்குள்ள சண்டை. அதில் நாம் எப்படி ஈடுபடுவது? அரசாங்கத்திற்கு நஷ்டம் என்று சொல்வது முற்றிலும் தவறு. காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் எவ்வளவோ செலவுகளைச் சேர்த்து காண்ட்ராக்ட் எடுக்கிறார்கள். அதைப்பற்றி கேட்க நமக்கு உரிமை இல்லை. தனி நபர்களுக்கு சலுகை கொடுத்ததாக ஹாண்டே அவர்கள் ஊகிப்பது தவறு. ஹெலிகாப்டர் இல்லாதவர்களுக்கு கொடுத்ததாக ஊகித்துக்கொள்வதும் தவறு.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஹெலிகாப்டர் இல்லாமல், பாங்க் அக்கவுண்ட் இல்லாமல் தனிப்பட்ட நபர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஏன் டயாக்டாக அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது? ரூ. 10 என்பதை ரூ. 11 ஆக ஆக்கியிருப்பதைப்பற்றிச் சொல்லவில்லை. இன்டேன் 24 ரூபாய் ஆக இருந்தது 22 என்றாகியிருக்கிறது.

That cannot strengthen the argument of the Minister. Without any basis how this was done should be explained.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவ்வளவு பதில் சொன்னதற்குப் பிறகும் சந்தேகமா? தனிப்பட்ட நபர்களுக்கு சலுகை காட்டப்படவில்லை, தனிப்பட்ட நபர்களுக்கு கொடுக்கவில்லை. பொன்னி என்டெர்ப்ரைஸஸ் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்றால் அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. பொன்னி என்டெர்ப்ரைஸஸ் ஒரு கணக்கு திறந்தார்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கில், புதிதாக திறந்திருப்பதாக குற்றச்சாட்டில் இருக்கிறது. பொன்னி என்டெர்ப்ரைஸஸ்க்கும் அரசாங்கத்

மாலை 5-30 துக்கும் சம்பந்தம் இல்லை. புதிதாகத் தொடங்கப்பட்ட ஒருவருக்கு கொடுத்ததாக கற்பனை செய்வது தவறு. நீங்கள் நான் கேட்டது நிறுவனங்களில் பல நிறுவனங்களுக்கு நேரடியாக கொடுக்கப்பட்டது. பொன்னி என்டர்பிரைசஸ்க்கு கொடுக்கப்படவில்லை. இண்டியன் ஓவர்சிஸ் பாங்கில் அகௌண்ட் திறந்ததாகச் சொல்கிறார்கள். அப்படித் திறந்தது பொன்னி எண்டர்பிரைஸஸ். அவர்கள் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள். அந்த பாங்க் அகௌண்ட்டுக்கும், யாருக்கு அதைக் கொடுத்தார்களோ அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை.



1972 டிசம்பர் 11]

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஒரு ஹெலிகாப்டர் கூட இல்லாதவருக்குக் கொடுக்கப்படவில்லையா?

That is where there is discrepancy. My point is that it has been given. Therefore, let the whole matter be investigated. If the list of persons is given, this doubt would not be there. My contention is that one of the firms had given sub-contract. The point is, you could have placed the contract with the original firm and if that had been done, there would not have been a loss of about Rs. 7 lakhs to the Government.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னால் உண்மையான கருத்தாகிவிடும் என்று நினைக்கிறீர்கள். இதுதான் நீதிமன்றத்தில் கொடுத்த வழக்கு சி. எஸ். 319/72. பொன்னி எண்டர்பிரைசஸ் கொடுத்ததாகச் சொல்வது. அவர்கள், அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அவர் வாதி. நாம் கொடுத்தது 9 பேருக்கு.

'Indian Agricultural Aviation Association. Bombay represented by its President, Kambatta Aviation Limited, Pushbak Avitaion, Mahindra and Mahindra, Mukesh Aviation, Agricultural Aviation Private Limited, Avindia Private Limited, Sanki Aviation Private Limited, Champaka Aviation Limited'.

நீதிமன்றத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இத்தனை பேரும் எங்களுக்கு கமிஷன் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) பொன்னி எண்டர்பிரைஸஸ் வாதி பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவர்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தை மீறி விட்டதாக அவர் சொல்கிறார். அந்த வழக்கில் தான் ரகசியங்கள் வருகின்றன. இந்தச் சந்தேகங்களும் எழுப்பப்பட்டிருக்கின்றன.

'On 2nd July 1971 an agreement was executed at Madras between the plaintiff (not between the Government) Ponni Enterprises and the first Defendant, The Indian Agricultural Aviation Limited. . . .'

அந்த எட்டு பேரின் சார்பில் 9-வது நபர், அவர் ஒப்பந்தம் போட்டிருக்கிறார். அந்த ஒப்பந்தப்படி பணம் கொடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு. தனி நபருக்கு எப்படி வரும்? பொன்னி எண்டர்பிரைசசுக்கு எப்படி வரும் என்று கேட்கிறார்கள். அவர்கள் ஒப்பந்தத்தில் சொல்கிறார்கள்.

[திரு. செ. மாதவன்] [1972 டிசம்பர் 11

'As per the agreement, the plaintiff, Ponni Enterprises were appointed agents to perform the task and assume responsibility of the first defendant . . .'

அரசாங்கம் அல்ல, பம்பாயிலுள்ள அந்த நிறுவனங்களின் ஏஜெண்டாக

'and its members who have been carrying on the business of aerial spraying in India. . . .'

இதைவிட வேறு என்ன சொல்ல வேண்டும்? இது நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட வாதம். அரசாங்கம் எந்தவிதமான தவறும் செய்யவில்லை. கற்பனையில் செல்லவேண்டாம். அவர் நம்பினாலும் நீங்கள் நம்பமாட்டீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இவ்வளவு பாயின்ட்ஸ் கொண்டு வந்தால் தான் உண்மை வெளி வருகிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ரகசியங்கள் ஒன்றும் இல்லை என்பதற்கு வாய்ப்புக்கொடுத்ததற்காக டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஒரு சில கம்பெனிகளுக்கு ஹெலிகாப்டர் இருந்தது. அவர்கள் ஏஜெண்டாக ஒருவரை நியமனம் செய்ததை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெயரைப் படித்தேனே அதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தொழில் அமைச்சரின் விளக்கத்தோடு, நான் ஒரு சிறிய விளக்கத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

கொடைக்கானல்—பழனி ரோடு டெண்டர் கோரப்பட்டது நான்கு டெண்டர்கள் வந்தன. நான்கு டெண்டரில் லோயஸ்ட் டெண்டராக 48,30,863 ரூபாய்க்கு வந்தது. நான்கு டெண்டரில் லோயஸ்ட் டெண்டராக வந்ததை ஒப்புக்கொண்டிருக்கலாம். ஆனால் அதிகம் என்று கருதி, மறுபடியும் ரீ-டெண்டர் கோரப்பட்டது. ரீ-டெண்டர் கோரப்பட்டபோது, 9 பேர்கள் டெண்டர் கோரினார்கள். முதலாவதாக கோரப்பட்டபோது 4 டெண்டர்களும், ரீ-டெண்டர் கோரப்பட்டபோது 9 டெண்டர்களும்



1972 டிசம்பர் 11] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

வந்தன. ரீ-டெண்டரின்போது லோயஸ்ட் டெண்டராக ரூ. 45,87,393 அந்த லோயஸ்ட் டெண்டர் கொஞ்சம் அதிகம் என்று கருதி, நெகோசியேஷன் செய்யப்பட்டு ரூ. 45,76,346 என்று நிர்ணயம் செய்யப்பட்டது. முதலாவதாக வந்த டெண்டருக்கும், இரண்டாவதாக வந்த டெண்டருக்கும் உள்ள வித்தியாசம் ரூ. 3,04,517. இரண்டாவதாக டெண்டர் கோரப்பட்டு, நெகோசியேஷன் மூலமாக அரசாங்கத்திற்கு மிச்சப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர்களே, திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்களின் நிலம் மைனர் இனாம் நிலத்தின் கீழ் வருகிறது என்று சொன்னேன். அது எஸ்டேட் அபாலிஷன் கீழ் வருகிற நிலம் என்று திருத்திக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னய்ய நாடார்:** என்னுடைய நேரத்தை அமைச்சர்கள் குறுக்கிட்டு எடுத்துக்கொண்டு விட்டார்கள். ஆதலால் கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிப் பிரச்னையைப் பற்றி இந்த அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டு போகிறது. இதற்கு உதாரணமாக 19—8—1972 அன்று ஹிந்து பத்திரிகையில் வந்த ஒரு குறிப்பை மட்டும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்று நினைக்கிறேன்.

'Prices have shown an unprecedented rise. The consumers price index had risen by 12 points from 236 to 248 points........... '

அதேமாதிரி ரிசர்வ் பாங்க் கொடுத்துள்ள அறிக்கையிலேயும் விலைவாசி ஏற்றம் அதிகமாக இருக்கிறது என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். முன்பு விலைவாசிப் போராட்டம் நடத்தியவர்கள் இன்று அமைச்சர்களாக இருக்கிறார்கள். அரிசியப் பண்டங்களின் விலை இன்று குறைந்திருக்கிறதா? படியரிசித் திட்டம் என்று முன்பெல்லாம் விளம்பரம் செய்தார்கள். இன்று படியரிசித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா? இன்று மக்கள் என்ன நினைக்கிறார்கள். நீங்கள் தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை

நிறைவேற்றத் தவறி விட்டீர்கள் என்று. ஆகவே, நீங்கள் மக்களின் நம்பிக்கையை இழந்து நிற்கிறீர்கள் என்ற குற்றச் சாட்டை நான் கூற விரும்புகிறேன்.

வறுமை தமிழ்நாட்டில் எப்படியிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூறு விரும்புகிறேன். பட்டினிச் சாவு ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக திருச்சியில் ஒரு குடும்பமே அழிந்து இருக்கிறது. தாயும், தந்தையும், மூன்று குழந்தைகளும் வறுமையின் காரணமாக தற்கொலை செய்து கொண்டார்கள். அந்தக் குடும்பத் தலைவரின் பெயர் மாணிக்கம், பள்ளவாரம், சமயபுரம் அருகாமையில் உள்ள இடம். இம்மாதிரி சம்பவங்கள் பல நாட்டில் நடந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தால் அந்த மாதிரியான காரியங்கள் நடக்காது என்று சொன்னீர்கள். ஏழைகளின் வாழ்வு மலர்ந்து இருக்கிறதா? பட்டினிச் சாவு நடந்து கொண்டிருக்கிறது, ஒரு குடும்பமே அழிந்து இருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று படித்தவர்களிடத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எந்தவிதமான காரியங்களையும் செய்யவில்லை என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கம் தொழிலாளர்கள் அரசாங்கம் என்று சொல்கிறார்கள். தொழிலாளர்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்து இருக்கிறது என்பதற்கு சிம்சன் பிரச்னை நல்ல சான்றாக இருக்கும். எப்படி சைகிள் செயின்கள் உபயோகிக்கப்பட்டது? அதையெல்லாம் நான் விவரிக்கத் தயாராக இல்லை. சென்னை நகரில் ஒரு பதட்டமான நிலைமை சிம்சன் போராட்ட காலத்தில் இருந்தது. அதற்கு யார் யார் எல்லாம் அடியாட்களாக இருந்தார்கள் என்பதையெல்லாம் நாம் எல்லோரும் உணர வேண்டும். அரசாங்கத் தரப்பில் இருக்கிற இந்த லேபர் யூனியன்களெல்லாம் இதற்கு என்ன முட்டுக்கட்டைகள் செய்தார்கள், இதை எதிர்த்தார்கள், என்ன இன்னல்கள் விளைவித்தார்கள் என்றெல்லாம் நான் இங்கே எடுத்துக் கூற தேவையில்லை. தொழில் துறையிலே,





அதிலும் குறிப்பாக தமிழகத்தில் தொழில் துறையானது வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சொல்வார்கள், நலிந்த ஆலைகளெல்லாம், மூடப்பட்ட ஆலைகளெல்லாம் திறக்கப்பட்டன என்று சொல்வார்கள். ஆனால் எத்தனை ஆலைகள் புதியதாக திறக்கப்பட்டன இவர்களுடைய ஆட்சியின் காலத்தில் என்பதை இந்த மன்றத்தில் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ராஜ்யத்தில் சட்டமும், ஒழுங்கும் குலைந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன். மாணவர்கள் மத்தியில் அவிழ்த்துவிடப்பட்டிருக்கிற அடக்குமுறை தாங்க முடியாத தன்மையில் இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திலிருந்து எவ்வளவு ஸி.ஆர்.பி. யூனிட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன தமிழ்நாடு அரசாங்கத்திற்கு என்ற விவரங்களையெல்லாம் பாராளுமன்றத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். டிசம்பர் மாதம் 6-ம் தேதி வெளிவந்திருக்கின்றன. இந்த ஆண்டு ஜூன் 15 முதல் 17 வரையில் நான்கு கம்பெனிகள் தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஜூலை 4 முதல் 7 வரையில், 1½ கம்பெனிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நவம்பர் 11 முதல் 13 வரையில் இரண்டு கம்பெனிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நவம்பர் 12 முதல் டிசம்பர் 6 வரை 6 கம்பெனிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று பாராளுமன்றத்தில் தகவல்கள் தந்திருக்கிறார்கள். நமது போலீஸ் படை போதாது. மத்திய ஸி.ஆர்.பி. வேண்டும் என்று இந்த அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இம்மாதிரி எல்லாம் நடந்திருக்கிறது. எதற்காக ஸி.ஆர்.பி. யூனிட்டுகளை அனுப்பியிருக்கிறார்கள்? அமைதியின்மை ஏற்பட்டது. கட்சியில் ஏற்பட்ட பிளவின் காரணமாக, நாட்டில் இருக்கிற கிளர்ச்சியின் காரணமாக அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது என்று ஒருவேளை வாதாடக்கூடும். ஆனால் இன்று மாணவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள், பொதுமக்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். வன்முறையாளர்கள் புகுந்து பலவிதமான நஷ்டத்தையும், நாசத்தையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, இந்த ஆட்சி வந்ததற்குப் பிற்பாடு எத்தனை இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது? அண்மையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தை நாம் எல்லாம் உணரவேண்டும். கண்ணமங்கலம் பகுதியிலே ஒரு சிறுவன்

துப்பாக்கிப் பிரயோகத்தினால் இறந்திருக்கிறான். அவனுடைய தந்தையார் அந்த வில்லேஜ் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கிறார். அவன், 12 வயது சிறுவன் மாண்டிருக்கிறான் வேலூருக்குப் பக்கத்திலே கண்ணமங்கலம் பகுதியிலே துப்பாக்கிப் பிரயோகத்தினால். அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன்.

அண்மையில் போடிநாயக்கனூரில் நடந்த நிகழ்ச்சி உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். இரண்டு முறை அந்தப் பகுதியிலே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. முதல் தடவையில் 56-க்கு மேலான நபர்கள் காயமடைந்தார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதற்குப் பிற்பாடு நடந்த சம்பவத்தில் பலரும் காயம் அடைந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் யார் காரணமாக இருந்தார்கள் என்பதையெல்லாம் நாம் உணர வேண்டும். ஆளும்கட்சியில் இருக்கிற ஒருசிலர் வேண்டுமென்றே அக்கிரமமாக தூண்டிவிடுகிறார்கள். போலீஸ்காரர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யாமல் விட்டுவிட்டு, சாதாரண அப்பாவி மக்களை வஞ்சம் தீர்க்கின்ற தன்மையில் நடந்துகொள்கிறார்கள்.

பாளையங்கோட்டையில் நடந்த நிகழ்ச்சிகள் இங்கே எடுத்துக் கூறப்பட்டு, பேராசிரியர் திரு. சீனிவாசன் அவர்கள் எப்படித் தாக்கப்பட்டார்கள், அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதெல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டன. நான் ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் பேராசிரியர் சீனிவாசன் தாக்கப்பட்டது முதல் நீதி விசாரணைக்கு உகந்ததாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வதெல்லாம் தேவையில்லை, அந்த வாதம் வேண்டியதில்லை. ஏனென்றால், அந்த வழக்கு இருந்தாலும், இதற்கு மூல காரணமாக இருந்தது சீனிவாசன் என்ற அந்தப் பேராசிரியர் தாக்கப்பட்டதுதான்.

ஊர்துஞ்சன் என்ற மாணவன் இறந்தது வருந்தத்தக்க செயலாகும். அவனை போலீஸ்காரர்கள் வேண்டும் என்றே அடித்து ஆற்றில் தள்ளினார்கள் என்று மாணவர்கள் பலரும்





என்னிடம் கூறினார்கள். இம்மாதிரி சம்பவங்களெல்லாம் தமிழ் நாட்டில் பெருவாரியாக நடந்துகொண்டிருக்கின்றன. மாணவர்கள் கொதித்து எழுந்திருக்கிறார்கள். திருச்சியில் நடந்த சம்பவம் பற்றி நான் இங்கே ஒரு குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். திருச்சியில் ஆர்.டி.ஓ. அவர்களும், டி.ஐ.ஜி. அவர்களும் மாணவர்களைத் தாக்குவதற்கு அதிகமாக உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அங்கு இருக்கிற டி.ஐ.ஜீ. ஒரு கைதேர்ந்த நபர் என்று கூறவேண்டிய தேவையில்லை. ஏனெனில் அவர் எந்த இடத்தில் இருந்தாலும், அங்கெல்லாம் உடனே கலவரங்கள் மூளுகின்றன என்ற தன்மையைப் பார்க்கிறோம். அண்ணாமலை யுனிவர்ஸிடியில், அவர் அங்கே டி.ஐ.ஜி.-யாக இருந்த காலத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதேமாதிரி தென்காசியில் தேர்தல் நடந்தபொழுது இந்தப் பெரியவர்தான் அங்கே டி.ஐ.ஜி.யாக இருந்தார். அவர் அங்கே நடத்திய நாடகங்கள் அந்தப் பகுதியில் உள்ள எல்லோருக்கும் தெரியும், எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தெரியும். நாகர்கோவில் இடைத் தேர்தல் நடந்த காலத்தில் அவர் மதுரையில் டி.ஐ.ஜி.யாக இருந்தார். அவர்கள் எதிர்க்கட்சியாளரை எப்படித் துன்புறுத்தினார்கள், அதிலும் குறிப்பாக மாணவர்களை எப்படித் துன்புறுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களை வைத்துக் கொண்டு இந்த நீதி விசாரணை நடந்தால் நியாயம் கிடைக்காது, நியாயமான சாட்சியங்கள் கிடைக்காது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஆகையால் அன்னாரை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும். அதேமாதிரி ஆர்.டி.ஓ.-வையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் அல்லது சஸ்பெண்டு செய்ய வேண்டும், ஒன்று சஸ்பெண்டு செய்ய வேண்டும், அல்லது மாற்ற வேண்டும். இப்படி ஏதாவது செய்தால்தான் தெளிவு கிடைக்கும். ஏதோ விசாரணை ஏற்படுத்தியாகிவிட்டது, எல்லாம் முடிந்துபோய்விட்டது என்று நினைப்பது கூடாது. நான் சொன்ன மாதிரி அந்தக் காரியங்களை உடனே செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக பல இடங்களில் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. எதற்காகக் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், இந்த அரசாங்கத்தின் மீது மாணவர்களுக்கு

நம்பிக்கை இல்லை. அவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தினால் அவர்கள் கொதித்து எழுகிறார்கள். அவர்களுடைய வெறுப்புணர்ச்சியைத் தெரிவிப்பதற்காக அவர்கள் கல்லூரிகளையும் பள்ளிகளையும் பகிஷ்கரிக்கிற நிலைமையில் இருக்கிறார்கள். ஆதலால் இந்த நிலைமைகளையெல்லாம் நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த தேசத்தில் இந்த ஆட்சியாளர்கள்மீது எவ்வளவு வெறுப்புணர்ச்சி இருக்கிறது என்பதையெல்லாம் புரிந்துகொள்ளவேண்டும். மாணவர்கள் வெறுக்கிறார்கள், தொழிலாளர்கள் வெறுக்கிறார்கள். ஏன், பொதுமக்கள் அத்தனை பேர்களும் வெறுக்கிறார்கள். இந்த அரசாங்கம் தங்களுக்குப் பெரும்பான்மை இருக்கிறது, ஸ்டீம்ரோலர் மெஜாரிட்டி இருக்கிறது. ஆகையால் என்ன வேண்டுமானாலும் நாங்கள் செய்வோம் என்ற முறையில் அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இம்மாதிரிக் காரியங்களினால் பொதுமக்கள் நம்பிக்கையை நீங்கள் இழந்து இருக்கிறீர்கள். ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருக்கிறது, சட்டமன்றத்தில்தான் இதற்கெல்லாம் கடைசி முடிவு சொல்ல வேண்டியது என்ற வாதங்களையெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள். எந்தப் பகுதியில் சென்றாலும், இங்கே இருக்கிற ஆட்சியின் மீது வெறுப்பு இருக்கிறது. ஏதோ ஊர்வலம் நடத்தினார்கள், கடை அடைப்பு நடத்தினார்கள், ஆதலால் பொதுமக்கள் இவர்கள் பக்கத்தில் இல்லை என்று பலரும் கூறினார்கள். 1965-ல் என்ன நடந்தது என்பதையெல்லாம் நீங்கள் எல்லோரும் நன்றாக அறிவீர்கள். 1967-ல் என்ன நடந்தது, காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டிற்கு ஒன்றும் செய்யவில்லை என்ற காரணத்தினால் அவர்கள் வெளியேற்றப்படவில்லை. அதேமாதிரி பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று நீங்கள் பலரும் சொல்லிக்கொண்டிருக்கலாம்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

ஆனால், மக்களுக்கு இந்த ஆட்சியின் மீது வெறுப்பு இருக்கிறது, இந்த ஆட்சி நீடித்து இருக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள். ஆதலால்தான் எதிர்க்கட்சியாக இயங்குகின்ற நாங்கள் இந்த ஆட்சியாளர் ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று கேட்கிறோம். இந்தச் சபையில் எங்களுக்கு முன்னால் சபாநாயகர் திரு. மதியழகன் அவர்களுக்கும் முதல் அமைச்சர் அவர்களுக்கும்





வாக்குவாதம் நடந்தது. 'நீங்கள் ராஜிநாமா செய்வதற்குத் தயாரா, உங்களை எதிர்த்து நான் போட்டியிடுகிறேன்' என்று சொல்லக்கூடிய அளவில் அவர்கள் இங்கே கூறினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். நீங்கள் இரண்டு தலைவர்களும் ராஜிநாமா செய்தால் நாங்கள் உங்களைத் தேர்தலில் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இல்லாமல் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் செய்கின்ற அக்கிரமங்களையும், ஊழல்களையும் மூடி மறைப்பதற்காக நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வருவது நியாயம் அல்ல, தர்மம் அல்ல என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், நண்பர் கணபதி அவர்கள் வோட்டிங் பாட்டோனைப்பற்றி ஒரு சில கருத்தினைக் கூறினார்கள். நான் அதற்குப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கழிந்த பொதுத் தேர்தலில் என்ன முறையில் வோட்டிங் வந்திருக்கிறது, அது எப்படியெல்லாம் இருக்கிறது என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நானும் ஒரு கணக்கை எழுதி வைத்திருக்கிறேன். டி.எம்.கே. ஃபிரண்ட், முஸ்லீம் லீக், பார்வேர்டு ப்ளாக் இவைகளுக்கு எத்தனை வாக்குகள் மொத்தம் கிடைத்தன, வோட்டுகள் எத்தனை கிடைத்தன என்பதைத் தனித் தனியாக எழுதி வைத்திருக்கிறேன்.

டி.எம்.கே.-க்கு 76,69,095, முஸ்லீம் லீக்குக்கு 2,36,111, பார்வேர்டு ப்ளாக்குக்கு 2,18,114, ஆக மொத்தம் 81,23,320. டி.எம்.கே.-க்கு எதிராகக் கிடைத்த வாக்குகளையும் நான் இன்னொரு கணக்கு போட்டிருக்கிறேன். காங்கிரஸ் (ஓ) 53,65,372, ஸ்வதந்தரா 4.65,145, சி.பி.ஐ. 3,64,803, அதேமாதிரி விவசாயக் கட்சி 2,60,676, உழைப்பாளர் பொதுநலக் கட்சி 1,45,262, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 1,47,985, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி 37,491, ரிப்பப்ளிக்கன் பார்டி 25,667. மொத்தமாக இந்தக் கட்சிகளெல்லாம், தங்கள் 7 கட்சிகளின் கூட்டில் இந்தக் கட்சிகள் உள்ளன, 68,12,413 ஓட்டுகள் 1972-ல் பெற்றிருக்கிறது. இந்த ஆண்டி டி.எம்.கே. ஓட்டுகள் 13,10,907.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் கூட்டிலிருந்த உழைப்பாளர் கட்சி இப்போது எங்கள் கட்சியில் இருக்கிறது என்ற இந்தக் கணக்கைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதன் தலைவர்தான் தங்கள் கட்சியில் இருக்கிறார்கள். உறுப்பினர்கள் தங்கள் கட்சியில் இல்லை என்பதை நினைவு கொள்ளவேண்டும். இந்த 13,10,907 இவ்வளவு ஓட்டுகள்தான் அதிலே வித்தியாசமாக இருக்கிறது. இப்போது உங்களுடைய கட்சியில் ஏற்பட்டு இருக்கின்ற சரிவு டிபெக்ஷன் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த டிபெக்ஷன் எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் நாங்கள் இதை வரவேற்கவில்லை. யாரானாலும் சரி, இந்தக் கட்சி மாறுகிறவர்கள் சமூக விரோதிகள் (பலத்த கைதட்டல்) என்ற கருத்தை நான் ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன். எந்தக் கட்சியின் பெயரால் இந்த நண்பர்கள் இன்றைக்கு வெற்றி பெற்று வருகிறார்களோ, தனக்கு அந்தக்கட்சி பிடிக்கவில்லை என்று சொன்னால் நியாயமாக அவர்கள் ராஜினாமா செய்து விட்டு (பலத்த கைதட்டல்) மறுபடியும் தேர்தலில் வெற்றி பெற்று இந்த மன்றத்திற்கு வருவதுதான் பொருத்தமாகயிருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. என். கணபதி :** திரு. பொன்னப்ப நாடார் சொல்லுகின்ற கருத்து கூட்டணிக்கும் பொருந்துமா என்று அவர்கள் தயவு செய்து விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தக் கருத்து எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன். திருமதி இந்திரா காந்தி கட்சிக்கும் பொருந்தும். நமது மாநிலத்தில் அதிகாரத்திலிருக்கின்ற கட்சிக்கும் பொருந்தும். எதிர்க்கட்சியான எங்களுக்கும் பொருந்தும்.

அடுத்து, பாராளுமன்றத் தேர்தலிலே எப்படி வாக்குகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் சற்று கவனிக்க வேண்டும். லோக்சபையில் மொத்தமாகக் கிடைத்திருக்கின்ற வாக்குகளைப் பற்றி நான் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆளும் கட்சியாகயிருக்கின்ற காங்கிரஸ்(ஆர்)க்கு 63 மிலியன் வாக்குகள் கிடைத்தன. மொத்தமாகக் கிடைத்த சதவிகிதம் 43. சீட்டுகள் 380. காங்கிரஸ்(ஓ)க்கு கிடைத்த வாக்குகள் 15 மிலியன். மொத்த சதவிகிதம் 10.5. மொத்தம் கிடைத்த சீட்டுகள் 16. ஜனசங்கத்திற்கு, கிடைத்தது 10.7 மிலியன் ஓட்டுகள், ஓட்டுகளின் சதவிகிதம் 7.3; கிடைத்த



சீட்டுகள் 22. அதேமாதிரி சி.பி.எம்-க்கு கிடைத்த வாக்குகள் 7.3 மிலியன். சதவிகிதம் 5.1. ஆனால் கிடைத்த சீட்டுகள் 25. அதே மாதிரி சி.பி.ஐ.-க்கு கிடைத்த வாக்குகள் 6.3 மிலியன். சீட்டுகள் 23. எஸ்.எஸ்.பி-க்கு கிடைத்த வாக்குகள் 3.5 மிலியன். ஆனால் மொத்தமாக கிடைத்த சீட்டுகள் 3. பி.எஸ்.பி.-க்கு கிடைத்தது 1.4 மிலியன். கிடைத்த சீட்டுகள் 2. சுதந்திராக் கட்சிக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 3.5 மிலியன். கிடைத்த சீட்டுகள் 8. பொதுவாக இந்தக் கணக்கைப் பார்க்கின்றபோது,

Thus the Congress (R) which polled four times the Congress (O) got 22 times the number of seats won by the latter. The two Communist Parties, which together got a little less than the Congress (O) in the total number of votes, were able to get 48 seats and the Congress (O) suffered its worst in Tamil Nadu where it polled 4.8 million votes and got only one seat whereas the D.M.K. which polled 5.6 million votes got 23 seats and Congress (R) won 9 seats with its 2 million votes.

இப்படிதான் இந்த வாக்குப் பதிவு நடந்திருக்கிறது என்ற விவரத்தை நான் குறித்து வைத்திருக்கிறேன். பொதுவாகப் பார்க்கின்றபோது, இன்று கிடைத்திருக்கின்ற வாக்குகளையெல்லாம் பார்க்கும்போது, காங்கிரஸ் (ஓ) எந்த முறையில் இருக்கிறது, மக்கள் நம்பிக்கையை எப்படி பெற்றிருக்கிறது, இன்னும் எப்படி பெறப்போகிறது என்பதற்கெல்லாம் சூசகமாக நான் இந்தப் புள்ளி விவரங்களைத் தர விரும்புகிறேன். ஆதலால் யார் வேண்டுமானாலும் சரி, எந்தக் கட்சி வேண்டுமானாலும் சரி, எங்களை அழித்து விடுவோம், அழிப்பதற்கு நாங்கள் முனைந்திருக்கிறோம் என்று நினைத்தால் யாராலும் அழிக்க முடியாது. மக்கள் எங்களை அழிக்க நினைத்தால்தான் நாங்கள் அழிவோமென்ற உண்மை எங்களுக்குத் தெரியும். ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்று மக்களுடைய நம்பிக்கையை இந்தச் சரிவுக்குப் பிற்பாடு தொடர்ந்து அனுபவிக்கிறதா என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். நான் முன்பே கூறினேன். கணக்குப்படி 13 லட்சம் ஓட்டுகள்தான் வித்தியாசம் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எதிர்க்கட்சித் தலைவர் மறுபடியும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பொதுமக்களிடத்தில் நம்பிக்கையில்லை என்ற கருத்தைச் சொல்ல இப்படிச்

சொல்கிறார்கள். இந்த அவையில் இந்த விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால் ஒருவேளை பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த விவரத்தைச் சொல்லிவிட்டு, மக்கள் இந்த ஆட்சியை ஆதரிக்கவில்லை என்று சொல்லியிருக்கலாம். இப்படிப் பதில் சொன்ன பிறகும், விவரங்கள் கொடுத்த பின்னும், இந்தப் பதில் தேவைதானா? இன்னும் அவர்கள் அந்தக் கருத்தை ஒப்புக்கொள்ளுகிறாரா? என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: நடந்த வாதங்களெல்லாம் சரியென்று ஒப்புக்கொள்ளுவதற்கு நான் தயார் அல்ல, பொது மக்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் சந்தேகத்திற்குரிய பல காரியங்கள் இருக்கின்றன. மர்மப் பேழையில் மறைமுகமான சில காரியங்கள் புதைந்திருக்கிறது என்றுதான் பொதுமக்கள் நம்புகிறார்கள். இந்த ஆட்சி மீது பல ஆட்சேபணைகள் இருக்கின்றன. குற்றச்சாட்டிருக்கிறது, ஊழல் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள் என்பதை நான் கூற விரும்புகிறேன். நீங்கள் பொதுமக்களுடைய நம்பிக்கையை இழந்திருக்கிறீர்கள். அது மட்டுமல்லாமல் இன்னொரு விவரத்தையும் நான் கூற விரும்புகிறேன். லோக் சபாவில் ஒரு விவாதத்தின்போது எத்தனை பேர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் தென்னாட்டிலே என்ற கணக்கு கேட்கும்போது, 20 லட்சத்திற்கு மேலான நபர்கள் தமிழ் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் லோக்சபையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெருமளவு இன்று மாணவர்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் இந்த ஆட்சியின் மீது அவநம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் இன்னும் நீங்கள் ஆட்சியில் தொடர்ந்து நீடிக்க நியாயமில்லை, நீங்கள் மக்கள் நம்பிக்கையை இழந்து இருக்கிறீர்கள், மக்களை மறுமுறை சந்திக்க வேண்டும். சந்திக்க வரவேண்டுமென்று கேட்டு இந்தத் தீர்மானத்தை வன்மையாக நான் எதிர்த்து இதோடு அமருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவரவர்களே, கடந்த 7-ம் நாள் அன்று தொடங்கிய நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தின் மீதான விவாதம் 24 மாண்புமிகு உறுப்பினர்களால்





இங்கு விவாதிக்கப்பட்டு, என்னையும் சேர்த்து 25 பேர் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

2-ம் தேதி அன்று இந்தப் பேரவை கூடியபோது, பேரவையிலே எதிர்த்தரப்பிலேயுள்ள ஒரு சில உறுப்பினர்கள், கவர்னர்பெருமான் அவர்கள் இந்த மன்றத்தினுடைய கூட்டத்தை புரோரோக் செய்து மீண்டும் ஒரு தேதியை அறிவித்திருப்பது உயர்நீதி மன்றத்தில் விவாதத்திலிருக்கின்ற நேரத்தில் இந்தப் பேரவை கூடலாமா, இந்தப் பேரவையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளெல்லாம் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு முன்னாள் சபாநாயகர் திரு. மதியழகன் அவர்கள் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் அவருக்குச் சாதகமாக முடிந்து விடுமானால் நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்துவிட வேண்டிய நிலைமை ஏற்படுமே, ஏன் வீண் காலதாமதம்? கால விரயம், பண விரயம் ஏற்படுகின்ற அளவுக்கு இந்தப் பேரவையை நடத்த வேண்டுமா? என்கின்ற வினாக்களையெல்லாம் எழுப்பினார்கள். இன்றைய தினம் அந்த வினாக்களுக்கெல்லாம் உற்ற விடை கிடைத்தது, உயர்நீதிமன்றத்திலே முன்னாள் பேரவைத் தலைவர் நண்பர் மதியழகன் அவர்கள் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (பலத்த கை தட்டல்) இந்த முடிவு இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகள் எதுவும் ரத்து செய்யப்பட மாட்டா என்கின்ற உறுதி தருகிறது. நாம் அனைவரும் இதுவரையிலே கலந்து கொண்டு ஆற்றிய உரைகளும், இனி நடத்தவிருக்கின்ற விவாதங்களும் செல்லுபடியாகும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது, வழக்குத் தொடர்ந்தவர் வழக்குச் செலவையும் தரவேண்டுமென்ற அளவில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது (பலத்த கைதட்டல்). இந்த அவையில் நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தை ஏன் கொண்டு வரவேண்டுமென்ற வினாவினை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்புமிக்க நாடார் அவர்கள் இங்கு மீண்டும் ஒருமுறை எழுப்பினார்கள். சுலபமாக இதற்கு விடை காணலாம்.

அதைக் கொண்டுவந்த காரணத்தாலேதான் கிட்டத்தட்ட மாலை 6-00
இரண்டு மணி நேரம் டாக்டர் ஹாண்டே அவர்களும், கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே பல பிரச்சனைகளைப்பற்றி விவாதிக்க முடிந்தது. அதை விட வேறு ஒரு பெரிய காரியத்திற்கு என்று கருதி இத்தீர்மானம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 11

கொண்டுவரப்படவில்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், அதைப்போலவே சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், இந்த மன்றத்திலே இருக்கின்ற தோழமைக் கட்சி உறுப்பினர்களும், தலைவர்களும் அதைப் போலவே கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா தி.மு.க., ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தின் மூலம் அவர்கள் இந்த அரசின்மீது என்னென்ன குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்களோ அதற்கான நல்ல வாய்ப்பினை தாராளமாக வழங்க வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தின் காரணமாகத்தான் இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானம் மொழியப்பட்டு, இந்த மாமன்றத்தில் நான்கு நாட்களாக காரசாரமான விவாதமாகவும் கருத்துக்கள் நிறைந்த விவாதமாகவும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் 24 பேர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அவர்கள் கூறிய பல சொற்கள்—விவாதங்கள் இந்த அரசுக்கு விரோதமானவை, இந்த அமைச்சரவைக்குப் புறம்பானவை என்றாலும், அவை எங்களுடைய உள்ளங்களை ஓரளவு புண்படுத்தக்கூடியதாக அமைந்திருந்தாலும் நாங்கள் அவைகளை எல்லாம் இந்த மாமன்றத்திலே எப்படி விவாதிக்கவேண்டுமென்ற உணர்வைப் பெற்றவர்கள். இது போன்ற தாக்குதல்களைத் தாங்கும் பண்பாடு உள்ளவர்கள் என்ற காரணத்தினால் அவைகளை வரவேற்கிறோம், அதற்கேற்ற வகையிலே அமைச்சர் பெருமக்களும் அவர்களுடைய விளக்கங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தை ஏதோ உள்நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறோம் என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், எந்த உள்நோக்கத்தோடும் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை. நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு இந்த அமைச்சரவை பயந்து, நடுங்கி, ஓடி ஒளிந்துவிடும் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகவேதான், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது அவர்கள் என்ன கருத்துக்களைக் கூறுவார்களோ அந்தக் கருத்துக்களை கூறுவதற்கு ஒரு வாய்ப்பாகத்தான்



1972 டிசம்பர் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்த நம்பிக்கை கோரும் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதை எந்த அடிப்படையிலே எந்த அளவுகோலைக்கொண்டு கணக்கிட்டுப் பார்ப்பது என்பதை மாத்திரம் நாம் புரிந்துகொள்ளவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துச்சொல்லிய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் கடந்த ஓராண்டு அல்லது இரண்டாண்டு காலமாக தமிழகத்துப் பெருவெளிகளில், தெருக்களில், பேசப்பட்டதும், ஏடுகளில் எழுதப்பட்டதும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தனது விளக்கத்தை இதற்குத் தந்திருக்கிறது. மீண்டும் மீண்டும் அதே குற்றச்சாட்டுக்களைத்தான் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்களே அல்லாமல் புதிதாக எதுவும் சொல்லப்பட்டதாகத் தெரியவில்லை.

கொள்கை ரீதியாக எடுத்துக்கொண்டால், எவை எவைகளை இந்த மன்றத்திலே பேசுவது, எவை எவைகளைப் பேசக்கூடாது, என்ற நியதியை நாம் கடைப்பிடிக்கவேண்டும். சட்டமன்றத்திலே நடைபெறும் விவாதங்கள் வெளியிலே நடைபெறுகின்ற சொற்பொழிவுகளைப் போன்றவை அல்ல என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு செய்யும் காரியங்களில் எது தவறு, எது முறைகேடானது என்பதை எடுத்துக் கூற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. அவர்கள் அப்படி எடுத்துக் கூறுகின்ற நேரத்தில் “ நீங்கள் யார் எடுத்துச் சொல்ல, நாங்கள் யார் அதைக் கேட்க” என்ற ஆணவக் குரலில் ஒருநாளும் நாங்கள் கேட்டதில்லை; கேட்கப் போவதுமில்லை. அந்த ஆணவம் எங்களிடம் இல்லை. சொல்வது யாராக இருந்தாலும் அடக்கத்தோடும், அமைதியோடும் கேட்டு, அதற்கு தகுந்த முறையிலே செயல்படும் பண்பாட்டுடன் தான் நாங்கள் இருக்கிறோம். மாற்றாருக்கும் மதிப்புக் கொடுக்கின்ற அரசியல் நாகரீகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே கடைபிடித்துவரும் என்பதை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த இந்த ஐந்தாண்டு காலத்திலே என்னென்ன செய்திருக்கிறோம், என்னென்ன செய்யத் தவறி

விட்டோமா என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தேர்தல் நேரத்திலே மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையா? இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களோடும் தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த வளர்ச்சிக்கும் இன்றைக்கு கழக அரசு வந்த பிறகு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டினையும் உணர வேண்டும்.

இந்தியாவில் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே ஒருசில மாநிலங்கள் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தன. அந்த மாநிலங்களிலே ஒன்று மராட்டிய மாநிலம் என்பதை நாம் எல்லாம் நன்கறிவோம். நம்முடைய தமிழ்நாட்டிலே 20 ஆண்டுக் காலம் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு 1967-ம் ஆண்டிலே எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். பேரறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றி இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், தமிழகத்தின் வளர்ச்சி எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதை உணர முடியும். இங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு, பிற்பட்ட சமூகத்தினருக்கு, ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏராளமான நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். ஒரு அரசு நல்ல அரசா இல்லையா என்பதற்கு எது அளவுகோல்? நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். உள்ளே இருக்கின்ற பெரும்பான்மை உறுப்பினர்களை வைத்துக் கொண்டு உங்களுக்கு பெருத்த ஆதரவு இருக்கிறது என்று எண்ணிவிட முடியாது. நாட்டிலே இருக்கின்ற மக்களில்—வெளியே இருக்கிறவர்களில் 100-க்கு 90 பேர் அல்லது 10-க்கு 9 பேர் உங்களை நம்பவில்லை; உங்களை ஆதரிக்கவில்லை என்று சொன்னார்கள்.

பாராளுமன்றத்திலேயும் சரி, சட்டமன்றத்திலேயும் சரி, இருக்கின்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோரைக் கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் ஆட்சியின் பலத்தை நிர்ணயிப்பது



வழக்கம். ஆனால் டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். ஹாண்டே ஒரு டாக்டர். ஒருவனுக்கு காய்ச்சல் வந்தால் அவனுக்கு எத்தனை டிகிரி காய்ச்சல் அடிக்கிறது என்று பார்க்க வேண்டுமென்றால் தெர்மாமீட்டரை வைத்துப் பார்த்துத்தான் சொல்வார். அதைப்போல இந்த நாட்டிலும் மக்கள் எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்களா இல்லையா என்பதை 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும்பான்மை வாக்கு என்னும் தெர்மாமீட்டரை வைத்துக் கணக்கெடுத்து, ஆளத் தகுதி உடையவர்கள்தான் என்று அனுப்பியிருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** உங்கள் தர்மாமீட்டர் பழசு, அது கெட்டுப் போய்விட்டது என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** என்னுடைய தர்மாமீட்டர் பழசா புதுசா என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஜுரம் வரும்போது வைத்துப் பார்த்தால் தெரியும் (பலத்த ஆரவாரம்). ஆகவே, மக்கள் மன்றத்தினுடைய ஆதரவு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறதா இல்லையா என்பதை இந்த மன்றத்தினுடைய ஆதரவில் இருந்து தெரிந்து கொள்ளலாம். முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவளித்ததால்—நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான்—எங்களுக்கு மக்கள் வாக்களித்தார்கள். 1967-லும் வாக்களித்தார்கள், 1971-லும் வாக்களித்தார்கள். அதன் மூலம் மக்களின் முழு நம்பிக்கையையும் மகோன்னதமான முறையில் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்களுடைய அந்த ஆதரவினால்தான் நாங்கள் இங்கே வீற்றிருக்கிறோமே அல்லாமல் பதவிக்காகவோ, அதிகாரத்திற்காகவோ, அந்தஸ்திற்காகவோ, கௌரவத்திற்காகவோ நாங்கள் இங்கே இல்லை. எந்த மக்கள் எங்களை நம்பி இங்கே அனுப்பி வைத்தார்களோ, அந்த மக்களுக்காக என்றும் உதவ, உழைக்க நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதற்காக எங்கள் கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்திலே இந்த மன்றத்திலே நிதி நிலை அறிக்கையை வைத்துவிட்டு, பதிலுரை பகர்கின்ற நேரத்தில்

அண்ணா அவர்கள் சொன்னார்கள், "என்னுடைய அரசு தமிழகத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்கள்—அவர்களுடைய வாழ்க்கையை அடிப்படையாக வைத்துத் திட்டங்களைத் தீட்டும்" என்று சொன்னார்கள்.

தமிழ் தழைக்க, தமிழ்க் குலம் செழிக்க என் அரசு பாடுபடும் என்று எடுத்துக் காட்டினார்கள். அவர் காட்டிய வழியில் நின்று நாங்கள் பணியாற்றுகிறோமா இல்லையா?

சென்னை இராஜ்யம் என்ற பெயர் அண்ணா அவர்கள் காலத்தில் தமிழ்நாடு என்று தனக்கே உரிய பெயரைப் பெற்றது. இந்த மாமன்றமே அன்றைக்கு மகிழ்ச்சிக் கடலில் ஆழ, இன்றைக்கு மைசூர் மாநிலத்தவர்களும் நம் வழியைப் பின்பற்ற அன்றைக்கே சென்னை இராஜ்யம் என்ற பெயர் மாற்றப்பட்டு நாம் பிறந்த மண்ணுக்கு, தமிழ்நாடு என்கிற பழைய பெயர், நம்முடைய இலக்கியங்களில் காணப்படுகின்ற பெயர், நம் உரிமையைக் காக்கின்ற பெயர் சூட்டப்பட்டது. 1937-ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ முப்பது, முப்பத்தைந்து ஆண்டுக் காலமாக நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு முடிவு காணுகின்ற வகையில் அண்ணன் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்—இன்றுமட்டுமன்றி இனிமேல் தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டுக்கும்தான் இடம், தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்தி மொழிக்கு இடமில்லை என்கிற தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றியது இதே மன்றத்தில்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை மறந்து விட முடியாது.

சுயமரியாதைத் திருமணம் என்கிற சமுதாய சீர்திருத்தத் திருமணங்களை சட்டப்படி செல்லுபடியாகத் தக்கதாகச் செய்ய வேண்டும் என்பதாக எதிர்வரிசையில் இருந்து நாங்கள் கூறி வாதிட்டுவந்த நேரத்தில் எல்லாம் அப்போதிருந்த ஆட்சியாளர்களால் அது புறக்கணிக்கப்பட்டது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் அண்ணன் அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும் என்கிற புரட்சிகரமான கருத்துக்குச் சட்டவடிவம் கொடுத்ததும்—இந்த திராவிட





முன்னேற்ற கழக ஆட்சியில் தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

புஞ்சை நிலங்களுக்கும் மானாவாரி நிலங்களுக்கும் அடிப்படை நிலத்தீர்வை நீக்கப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

நஞ்சை நிலங்களுக்கும் ஐந்து ஏக்கருக்குள் நிலம் இருக்குமானால் அந்த 5 ஏக்கராவுக்கும் அடிப்படை புஞ்சைத் தீர்வை நீக்கப்படும் என்று செய்ததும் முன்னேற்றக் கழக ஆட்சியில் தான்.

நகர்ப்புற நிலங்களுக்கு ஒரு கிரவுண்டும், அதற்குக் குறைவாகவும் நிலம் உள்ளவர்களுக்கு நகர்ப்புற நிலவரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதும் கழக ஆட்சியில்தான். மேலும் கூட இன்னும் சில சலுகைகளை அளிக்க ஒரு சட்டத்தையே கொண்டு வந்து நிறைவேற்றலாம் என்ற யோசனையும் முன்னேற்றக் கழக அரசுக்கு இருந்து வருகிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாயிரத்திற்குக் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு அவர்கள் வாங்கிய கடனுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு, வாங்கிய கடனைப் போல இரண்டு பங்கு வட்டி செலுத்தியிருந்தார்கள் என்றாலும், அல்லது அசலும், வட்டியும் செலுத்தியிருக்கிறார்கள் என்றாலும் அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டும், வட்டியும் 1—3—72-க்குப் பிறகு 9 சதவிகிதம் என்ற அளவிலேயே கணக்கிடப்பட வேண்டும் என்று நிர்ணயித்து—நடுத்தர மக்களுக்கு, ஏழை மக்களுக்கு கடன் நிவாரணம் அளித்த அரசும் முன்னேற்றக் கழக அரசுதான்.

15—2—1970 முதல் ஏற்கனவே 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்த நில உச்சவரம்பை 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதாகக் குறைத்ததுவும் முன்னேற்றக் கழக அரசுதான். முன்பு இருந்த விதிவிலக்கு, கரும்புப் பயிருக்கு, மலைப்பகுதி நிலத்திற்கு, மேய்ச்சல் நிலத்திற்கு, கால்நடை வளர்ப்பு பால் பண்ணைக்கு அளிக்கப்பட்டிருந்த விலக்குகள் எல்லாம் நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். அறக் கட்டளைகளுக்கும் புதிய உச்சவரம்பை நிர்ணயித்தது முன்னேற்றக் கழக ஆட்சியில் தான். சமய அறக்கட்டளைகளுக்கு என்று 1—3—72-க்குப் பிறகு

நிலங்களைப் புதியதாக வாங்கக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப் பட்டதும் முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்.

இருள் அடைந்து கிடந்த தமிழகத்திலுள்ள பல்வேறு கிராமங்கள் 1973-ஆம் ஆண்டுக்குள் மின்னொளி பெற்றாக வேண்டும் என்கிற சபதத்தை எடுத்துக் கொண்டு மின்வாரியத்துறை அமைச்சர் அவர்களுடைய ஒத்துழைப்போடும், மின்வாரியத் துறை அலுவலாளர்களின் உறுதுணையோடும், மின்வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உறுதுணையோடும் இன்றைக்கு வேகம் வேகமாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்குகின்ற திட்டத்தை நிறைவேற்றி வருவது முன்னேற்றக் கழக அரசுதான். தமிழகத்தில் உள்ள மொத்த கிராமங்கள், குக்கிராமங்கள் 61,393 ஆகும். அதில் 1933-ம் ஆண்டு முதல் அதாவது மின்சாரம் முதன் முதலாக தமிழகத்தில் நுழைந்த ஆண்டில் இருந்து 1967 வரை மொத்தமுள்ள 61,393 கிராமங்களில், மின் ஒளி வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் 20,250 தான். 1973-க்குள் தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் ஒளி வழங்கப் படும் என்கிற மின்னொளி தீவிரத் திட்டத்தை இந்த அவையில் நான் அறிவித்த பிறகு இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் மின்னொளி பெற்றுள்ள கிராமங்கள் 38,474 ஆகும். 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை—34 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் மின்னொளி வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் 20,250 தான். ஆனால் கடந்த ஐந்து ஆண்டுக்குள்ளாக முன்னேற்றக் கழக ஆட்சியில் மின்னொளி வழங்கப்பட்ட கிராமங்கள் மட்டும் 38,474 ஆகும். ஆக தமிழகத்தில் மட்டும் மொத்தம் 58,724 கிராமங் களுக்கு மின்னொளி அளிக்கப்பட்டுவிட்டன. மிச்சமிருப்பது மூவாயிரத்திற்கும் உட்பட்ட கிராமங்களே என்கிற நிலையை அடைந்திருக்கிறோம்.

அடுத்து, தமிழகத்திலுள்ள அரிஜனக் காலனிகள் 23,096 ஆகும். 1933-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை மொத்தமுள்ள 23 ஆயிரம் அரிஜனக் காலனிகளில் மின்னொளி வழங்கப்பட்டிருந்த அரிஜனக் காலனிகள் 4,354 தான். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் கழக ஆட்சியில் 18,036 அரிஜனக் காலனிகள் மின்னொளி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. மிச்சமிருப்பது ஆயிரம்தான்.





DR. H. V. HANDE : These statistics do not cover the frequent and fantastic break-down of electricity all over the State, especially in the City of Madras. There is sudden loss of power, increase and decrease in voltage and it is all so bad and all this happens because of expansion and so in giving statistics, that also should be covered.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** செய்து வருகிற பெரிய காரியத்தில் இடையில் ஏற்படுகிற குறைபாடுகள் குறித்துப் பேசுகின்றார்கள். அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சுட்டிக் காட்டப்படுகிற நேரத்தில் அந்தக் குறைபாட்டைக் களைவதற்கு மின்வாரியம் தயாராய் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வுத் திட்டம் என்று தொடங்கியபோது அது சிலருக்குச் சாதாரணமாகத் தோன்றியிருக்கலாம். ஆனால் வேறு எந்த மாநில அரசும் அது பற்றி எண்ணிப் பார்க்காத நேரத்தில் முன்னேற்றக் கழக அரசு தான்—பிச்சைக்காரர்கள் தானே, அதுவும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தானே என்று அலட்சியப்படுத்தாமல்—சமுதாயத்திற்கே அவக்கேடாக இருக்கிற அந்தப் பிரச்சினையில் தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்தியிருக்கிறது. இன்றைக்கு பருகூர், பரனூர், உளுந்தூர்பேட்டை, புதுக்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு தஞ்சை, கோவை, சேலம், தர்மபுரி, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டு மொத்தமுள்ள இந்தப் 10 இல்லங்களும் முடிந்தவுடன் 5 ஆயிரம் தொழுநோய்ப் பிச்சைக் காரர்கள் அங்கே மறுவாழ்வு பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டிருப்பது இந்த முன்னேற்றக் கழக அரசு தான். இந்தத் திட்டத்தினுடைய வெற்றிக்குப் பிறகு மிச்சமுள்ள பிச்சைக்காரர்கள்—தொழுநோய் பாதிக்கப்படாமல் இருக்கிற பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பெறுகிற திட்டத்தையும் இந்த அரசு தீட்ட இருக்கிறது.

கண்ணொளி வழங்குகிற திட்டம் சிலரால் கேலி செய்யப்படலாம். சிலர் விளம்பரத்திற்காக நடத்தப்படுகிறது என்று கருதலாம். உண்மையாகச் சொன்னால் அதற்கு விளம்பரம் நிரம்பத்

தேவை. பட்டிக்காட்டில் இருக்கிற பாமர மக்கள், கண் பழுது பட்ட பாமர மக்கள், பழுது பட்ட கண்ணொளியைப் பெறுவதற்கு இப்படிப்பட்ட ஒரு பாதை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள அதிக அளவில் விளம்பரம் தேவைப்படுகிறது. கிட்டத் தட்ட தமிழகத்தில் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் எடுத்த கணக்கின்படி 10 லட்சம் பேர் கண்ணொளி மங்கியவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும் பாலோர் வயது முதிர்ந்தவர்கள். இந்த ஆண்டு ஒரு லட்சம் பேர் களுக்காவது கண்ணொளி வழங்குவது என்கிற தீவிர திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மனத்துணிவோடு ஜூன் 3-ஆம் தேதி முதல் இந்தத் திட்டம் தமிழகத்தில் தொடங்கப்பட்டது. ஜூன் 3-ஆம் தேதி துவங்கிய திட்டம்—இதுவரை கண்ணொளி வழங்குகிற முகாம்களை 26 இடங்களில் நடத்தியிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கண்ணொளி வழங்குவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதற்காக எங்கள் ஜில்லாவில் நிதி வசூலிக்கப்பட்டது. எந்த முறையில் வசூலிக்கப்பட்டது என்பது எல்லாம் எங்களுக்குத் தெரியும். வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு, எத்தனை பேர்களுக்கு சிகிச்சை அளித்தார்கள் என்று பார்க்க வேண்டும். நடுவில் அந்த நிதி சோர்ந்துவிடக் கூடாது என்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நல்ல வேளை, கண்ணொளி வழங்குவதிலே ஆட்சேபணையில்லை யென்று சொன்ன தற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நிதியைப்பற்றிச் சொல்கிறேன். இந்த 26 முகாம்களில் புற நோயாளிகளாக (Out patient) சிகிச்சை பெற்றவர்கள். கண்ணுக்குச் சிகிச்சை பெற்றவர்கள், 1,22,555 பேர். கண்ணை அறுவை செய்து கொண்டு சிகிச்சை பெற்று கண்ணாடி வழங்கப் பெற்றவர்கள் 19,697 பேர். என்னுடைய பிறந்த நாளை முன்னிட்டு கண்ணொளி வழங்க வேண்டுமென்று கேட்டு. யாரும் கட்டாயப்படுத்தப்பட்டு அல்ல, இன்றைக்கு, இதுவரையிலே கிடைத்திருக்கிற நிதியினுடைய மொத்த தொகை ரூ. 50 லட்சம். நிதியாகக் கிடைத்திருக்கிறது இந்த நல்ல காரியத்திற்கு. இதிலே, இந்த 19,697 பேருக்கு அறுவை சிகிச்சை செய்து கண்ணாடி வழங்கவும், 1,22,555



பேருக்கு கண் சிகிச்சை புற நோயாளிகளாக பாவிக்கப்பட்டு சிகிச்சை செய்யவும் இதுவரையிலே ரூ. 11 லட்சம் செலவிடப் பட்டிருக்கிறது. என்னுடைய பிறந்தநாள் அடிப்படையிலே சேர்க்கப்பட்ட நிதியென்ற காரணத்தினால் அது என்னுடைய வரவு செலவுக் கணக்கிலே இல்லை யென்பதையும் அது அரசாங்கத் தினுடைய வரவுசெலவுக் கணக்கிலே நடைபெறுகிறது என்பதையும் இந்த அவைக்கும் இந்த அவையின் மூலமாக பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை யாகும்.

சத்துணவுத் திட்டம். நம்முடைய மாநிலத்தில் மத்திய அரசினுடைய உதவியோடு சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப் படுகிறது என்பதை மத்திய அரசிலே இருப்பவர்களும் புகழ்ந்து கூறுகிறார்கள். சென்னையிலும் மற்றும் 20 முக்கிய நகரங்களிலும் நம்முடைய நல்வாழ்வுத்துறை அமைச்சர், நம்முடைய சமூக நலப்பணியை ஏற்றிருக்கின்ற அரிசன நலத்துறை அமைச்சர் சத்தியவாணி முத்து ஆகியவர்களுடைய முயற்சியோடு அந்த இலாக்காவிலே இருக்கிற ஊழியர்களுடைய இடையறா உழைப் போடு, 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், சத்துணவுத் திட்டத்தில் பயன்படும் குழந்தைகள், 2,10,000. தாய்மார்கள் 40,000 பேர். முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுகிறது என்று மத்திய அரசின் பாராட்டைப் பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

1971-ம் ஆண்டு இளைஞர் அணி என்ற ஒன்று துவக்கப்பட்டது. அதிலே இன்றைக்குப் படித்த வேலையில்லாமலிருக்கிற பட்ட தாரிகள், பொறியாளர்கள், டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இவர்களெல்லாம் அவர்களுக்கு வேலை கிடைக்கிற வரையில், இடையிலே வேலைகள் கிடைத்தாலும் அவர்கள் அறிவித்துவிட்டுச் செல்லலாம் என்கின்ற நிபந்தனையோடு, ஆண்கள் 2729 பேரும் பெண்கள் 288 பேரும் அவர்களுடைய மாதாந்திரச் செலவுக்காக ரூ. 175 பெற்றுக் கொண்டு கிராமங்களில் முதியோர் கல்வி, சுற்றுப்புறத் தூய்மை, விஞ்ஞான அறிவு, உலகத்தைப் பற்றிய பொது அறிவு இவைகளை யெல்லாம் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்கிற அளவிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இளைஞர் அணியைப் போலவே, பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட சீரணியும் தமிழ் நாட்டிலே எல்லா கிராமங்களிலும் ஏராளமான நற்பணிகளைக் குவித்திருக்கிறது என்பதை நாடு நன்றாக அறியும்.

1967-ம் ஆண்டு தமிழ்நாட்டிலே உள்ள அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 3½ கோடி, 1972-ம் ஆண்டில் அரிசன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட, ஒதுக்கப்படுகிற தொகை ரூ. 8½ கோடி. இந்த அரசு அரிசனங்களுக்கு என்ன செய்தது, அரிசன மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்றெல்லாம் கேள்விக்கணைகளை மேடையிலேயிருந்து அரசியல்வாதிகள் எங்களை நோக்கி விடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஒருவேளை, நான் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற காரணத்தால் அரிசன சமுதாயத்தை மறந்து விட்டேன் என்கின்ற பழியை என்மீது போட வேண்டுமென்று எண்ணி பின்தங்கிய சமுதாயத்திற்குத்தான் நான் பாடுபடுகிறேன் என்கிற குற்றத்தைச் சாட்டுவதற்காக அந்தப் பெரியவர்கள் அரசியல் ரீதியில் தாக்க முற்பட்டிருக்கிறார்கள். ஆனால் அன்று நண்பர் பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டபடி, இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நான் சம்பந்தியாகி விட்ட காரணத்தினால், யாரும் அந்த அவநம்பிக்கை கொண்டிடத் தேவையில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ரூ. 3½ கோடி 1967-ம் ஆண்டு அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை; இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, ரூ. 8½ கோடி. பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 1967-லே ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1 கோடி. 1972-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4½ கோடி. இதுவரையிலே இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலே இல்லாத அளவுக்கு அந்த இலாக்கா தனியாக அமைக்கப்பட்டு, பிற்பட்டவருக்காக ஒரு தனி அமைச்சருடைய நேரடிப் பார்வையில் அந்த இலாக்கா இயங்கி வருகிறது. அண்மையிலே கூட, நானும் அந்தத் துறையினுடைய அமைச்சர் இராஜாராமும் சேலத்திற்குச் சென்று புதியதாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைந்து இருக்கிற சமுதாயத்தினுடைய பாராட்டுதலைப் பெற்றோம். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக அமைக்கப்பட்ட பின்தங்கியோர் நலக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட வகுப்பினர் ஏறத்தாழ 15 அல்லது 16. அர்ச்சகரை வேளாளர், கம்பர், கள்வேலி கவுண்டர், கன்னர், கன்னட சைனீகர், குர்சிடிகார், ஓலவச்சர், பாணர், வெள்ளான் செட்டியார், வேடர், ஆஸ்தாந்திர கோலா, செட்டி, சக்கரவார், பணி செய்வார், சவளக்காரர்—ஆகிய 15 வகுப்பினர் இன்றைக்குப் பின் தங்கியோர் பட்டியலிலே புதிதாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.



1967-ம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக இருந்த விடுதிகள் 11. இந்த 5 ஆண்டுக் காலத்திலே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக, கட்டப்பட்ட விடுதிகள் 134. 11 இருந்தது, 1967-ல். இன்றைக்கு பிற்படுத்தப்பட்டவர்களுக்காக இருக்கிற விடுதிகளின் எண்ணிக்கை, அதையும் சேர்த்து 145.

வேலை வாய்ப்பு, கல்லூரிகளிலே இடம் அளித்தல் போன்றவைகளில் அரிசன மக்களுக்கு 16 சதவிகிதம் என்று இருந்ததை 18 சதவிகிதம் என்று ஆக்கியதும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதம் என்று இருந்ததை 31 சதவிகிதம் என்று ஆக்கியதும் சாதாரணமாகத் தெரியலாம். ஆனால், சமுதாயத்திலே அது எவ்வளவுப் பெரிய புரட்சி என்பதை இந்தச் சமுதாயத்தினுடைய கடந்தகால வரலாற்றை எண்ணிப் பார்க்கின்றவர்களுக்குத்தான் நன்றாகப் புரியும்.

அதுமட்டுமல்ல, அரிசனங்கள் அறங்காவலர்களாக இல்லாததையும், அவர்களை அறங்காவலர்களாகப் போடலாம், அல்லது போட வேண்டுமென்ற பரிந்துரை இருக்கிறது. போனால் போகட்டும், போடுங்கள் என்கின்ற தயவு தாட்சண்யத்தின் அடிப்படையிலே இருந்தது. அரிசனங்கள் அறங்காவலர்களாக ஆக்கப்பட வேண்டும், அது சட்டமாகவே ஆக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, எந்த ஒரு ஆலயத்திலே இருக்கிற எந்த அறங்காவலர் குழுவிலும் நிச்சயமாக ஒரு அரிசனச் சகோதரன் இடம் பெற்றே ஆக வேண்டுமென்ற சட்டத்தை அமைத்தது திராவிட முன்னேற்றக்கழக அரசு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அதைப் போலவே மேலும் ஒரு புரட்சித் திட்டமாக, அர்ச்சகர் என்றால் ஒரு வகுப்பிலே பிறந்தவர்களாகத்தான் இருக்க வேண்டு மென்று நிலையை மாற்றி, ஆண்டவனை பூஜிக்க, அர்ச்சனை செய்யக் கூடிய தகுதி படைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அர்ச்சகராக வரலாம் என்று சாதிச் சனியனுடைய இடுப்பை ஒடித்த அரசு திராவிட முன்னேற்றக் கழக என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அரசாங்க அலுவலர்கள், அவர்களுடைய தேவைகள் கோரிக் கைகள் நிரந்தரமானவையானாலும் இந்த அரசாங்க அலுவலர் களுக்கு இரண்டாவது சம்பளக் குழு ஒன்றினை நிறுவி 21 கோடி ரூபாயை அள்ளி வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதிலே மாறுபாடுகள் இருக்கிறது என்று அறிவித்ததும், ஒரு நபர் குழு ஒன்று அமைத்து. அந்தக் குழுவினுடைய சிபாரிசுகளை ஏற்று மீண்டும் ரூ. 5 கோடி அளித்தது முன்னேற்றக் கழக அரசு.

இதற்குப் பிறகு அரசு அலுவலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக டி.ஏ.யில் ரூ. 10 உயர்வு அளித்ததன் காரணமாக ரூ. 6 கோடி இழப்பையும் பொருட்படுத்தாமல் பொறுப்பேற்றுக் கொடுத்த அரசு முன்னேற்றக் கழக அரசு.

வெள்ளையன் காலத்திலிருந்து இருந்துவந்த, என்.ஜி.ஓக்களின் ரகசியக் குறிப்பேட்டு முறை, அதை யாராலும் அகற்ற முடியாது என்ற அளவுக்கு அதிகாரிகளுடைய குறுக்கீடு இருந்ததை என்.ஜி.ஓ.க்கள் எப்படியும் தகர்த்தெறிய வேண்டுமென்று அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள், ஒரு காலத்திலே அண்ணா அவர்கள் அவர்களுக்களித்த வாக்குறுதி, அதற்கேற்ப கடந்த ஆண்டு ரகசியக் குறிப்பு முறையை, வெள்ளைக்காரன் காலத்திலிருந்து வந்த அந்த முறையை, 20 ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியிலும் அதை அகற்றுவதற்குத் துணியாத அந்த முறையை அகற்றி, அரசாங்க அலுவலர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற்றது முன்னேற்றக் கழக அரசு என்பதை நாடு நன்கு அறியும்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில், 1966–67-ம் ஆண்டு குறுகிய கால, மத்திய காலக் கடனாக அளித்த தொகை ரூ. 31.45 கோடி—குறுகிய கால, மத்திய காலக் கடன். 1971—72-ல்



அளித்த தொகை ரூ. 57.34 கோடி. நீண்ட காலக் கடன் அதாவது 10-லிருந்து 15 ஆண்டுக் கடன், 1966–67-ல் ரூ. 2.93 கோடி 1971—72-ல் ரூ. 25.42 கோடி நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட அயராத முயற்சிகளால் விவசாயிகளுக்கு இந்த அளவுக்குக் கடன்களை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுடைய பேரன்பினை நாம் பெற்றிருக்கிறோம். இந்த அரசு விவசாயிகளுடைய அரசாக இன்றைக்கு இருக்கிறது. இடையிலே சில பேர் அதை மாற்றுவதற்கு முனைந்தாலும் விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளருக்கு பணியாற்றுவதற்காக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை என்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, டாக்டர் நாவலர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற கல்வி இலாகா. 1966—67 ஆம் ஆண்டில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பொதுக் கல்விக்காக செலவழிக்கப்பட்டது 44 கோடி ரூபாய். இன்றைக்கு 1972—73 ஆம் ஆண்டில் பொதுக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிற தொகை 89 கோடியே 85 லட்சம் ரூபாய். இதிலே மருத்துவக் கல்லூரி, அரிசனத் துறையினர் மூலம் இயங்குகிற பள்ளிகள் ஆகியவற்றையும் சேர்த்தால் 113 கோடி ரூபாய் ஆகிறது. மொத்தம் மாநிலத்தின் செலவு 396 கோடி ரூபாயில் கல்விக்காக ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு செலவழிக் கிறோம். 113 கோடி ரூபாய் ஒதுக்குகிறோம் என்பதை மறந்து விடக் கூடாது, இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பின்னால் இதற்கு வர இருக்கிறேன்.

1966–67-ஆம் ஆண்டு அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் 105 இருந்தன. 1972—73-ஆம் ஆண்டிலே 176 கல்லூரிகளாக அதிகரித்திருக்கின்றன. 1966–67-ஆம் ஆண்டில் இருந்த அரசுக் கல்லூரிகள் 27 ஆகும். ஆனால் இன்றைக்கு 1972—73-ஆம் ஆண்டில் 49 கல்லூரிகள் இருக்கின்றன. கழக ஆட்சியில் ஐந்து ஆண்டுக் காலத்திலே புதிதாக வந்த கல்லூரிகள் 71 கல்லூரிகள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. துவக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தொகை 1966–67-ஆம் ஆண்டில் 50 லட்சமாக இருந்தது. 1971—72-ஆம் உண்டில் 57 லட்சமாக உயர்ந்து, கிட்டத்தட்ட 7 லட்சம் மாணவர்கள் தொகை அதிகரித்து,

இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தொகை 1966—67-ஆம் ஆண்டில் 13 லட்சத்து 4 ஆயிரமாக இருந்தது, 1971—72-ஆம் ஆண்டில் 15 லட்சத்து 38 ஆயிரமாக உயர்ந்து ஏறத்தாழ 3¼ லட்சம் அதிகமாக மாணவர்களுடைய தொகை உயர்ந்திருக்கிறது. கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1966—67-ஆம் ஆண்டில் 94 ஆயிரம் ஆகும். 1972—73-ஆம் ஆண்டில் இரண்டு லட்சம் மாணவர்கள். செலவு கல்லூரிக்கு மாத்திரம் 1966—67-ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாய் ஆக இருந்தது, இப்பொழுது கல்லூரிக்கு மாத்திரம் ஆகிற செலவு 10 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது. மாலை நேரக் கல்லூரிகள் 1966—67-ஆம் ஆண்டில் 3 இருந்தன. படித்த மாணவர்களின் எண்ணிக்கை 520. 1972—73-ஆம் ஆண்டில் 32 மாலை நேரக் கல்லூரிகள், படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரம், 520 லிருந்து 9 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது. இது கல்வித் துறையிலே நாம் கண்டிருக்கிற வளர்ச்சி.

அடுத்து, குடிசை மாற்று வாரியம். குடிசை மாற்று வாரியப் பணிகளை மற்ற மாநில அரசைச் சேர்ந்தவர்கள் வந்து பார்த்து தங்கள் மாநிலத்திலே இதை உருவாக்க வேண்டுமென்ற அளவுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. இன்று நான் வருகிற வழியிலே அயோத்தியா குப்பத்தைப் பார்த்தேன். பீச் ரோடிலே குடிசைகள் எல்லாம் அகற்றப்பட்டு அந்த மக்கள் எல்லாம் தங்களுக்காக கட்டப்பட்ட கூடகோபுரங்களிலே இருக்கிறார்கள். ஏதோ சேர சோழ பாண்டிய மன்னர்கள் எல்லாம் இருந்ததாகச் சொல்கிறார்களே—அவர்கள் மீண்டும் வந்து ராஜ உடை அணிந்து கொண்டு கூடகோபுரங்களிலே உள்ள உப்பரிகையிலே வந்து பார்த்தால் அதைப் பார்க்கிற நேரத்திலே ஏற்படுகிற மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சி குடிசையிலே அன்றைக்கு வாழ்ந்த மக்கள் இன்றைக்கு கூடகோபுரத்திலே இருப்பதைப் பார்க்கிற நேரத்திலே நமக்கு ஏற்படுகிறது.

நொச்சிக் குப்பத்தைப் பாருங்கள், அயோத்தியா குப்பத்தைப் பாருங்கள், கோட்டூர்புரத்திலே வியாசர்பாடியிலே ஏழை மக்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற எழில் மாளிகைகளைக் காணுங்கள். இதற்காக 7 ஆண்டுக் கால திட்டமொன்றை உருவாக்கி அதனை நிறைவேற்றிட திரு. இராம அரங்கண்ணல்





அவர்கள் தலைமையில் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப் பட்டது. 63 திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற அளவில் அந்தத் திட்டத்தின்கீழ் 23,232 குடியிருப்புகள் கட்டப் பட வேண்டுமென்பது திட்டம். அவற்றில் 4,590 கட்டி முடிக்கப் பட்டவை, வேலை நடந்து கொண்டு இருப்பவை, பாதியளவுக்கு நடந்துகொண்டிருப்பவை 7,897, ஆரம்ப வேலை தொடங்கப்பட்டு இருப்பவை 10,745. இந்தத் திட்டத்தை ஜெயப்பிரகாஷ் நாராயண் பாராட்டியிருக்கிறார். இந்தத் திட்டத்தை எல்லைப்புற காந்தி பாராட்டியிருக்கிறார். பல்வேறு மாநிலங்களின் முதல் வர்கள் பாராட்டியிருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகின்ற தூதுவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். நல்லவர்கள் அனைவரும் பாராட்டி இருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** : திருமதி இந்திரா காந்தி அம்மையார் அந்தத் திறப்பு விழாவிற்கு வர மறுத்துவிட்டதாகச் செய்தி சொல்கிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மறுத்துவிடவில்லை. பல்வேறு நிகழ்ச்சிகள் இருந்த காரணத்தினால் வர இயலவில்லை. நல்லது சொல்லும்பொழுது இதுதான் கண்ணிலே படும். ஏதாவது இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்க வேண்டுமென்று தான் தோன்றுகிறது. அந்த ஓட்டுக் குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் அத்தனைபேரையும் நான் இந்திரா காந்தியாகப் பார்க்கிறேன். அந்த ஓட்டுக் குடிசைகளில் வாழ்கின்ற தாய்மார்களை எல்லாம் நான் என்னுடைய தாயாகக் காண்கிறேன். அந்தக் குடிசைகளில் வாழ்கின்றவர்களையெல்லாம் என்னுடைய சகோதரர்களாகக் காண்கிறேன். ஏழை எளிய மக்களின் ஆட்சிலே, சாதாரணமானவர்களின் ஆட்சியிலே ஏழை எளிய மக்களுக்கு இதையாவது செய்ய முடிந்ததே என்ற நிம்மதியைக் காண்கிறேன். ஆனால் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத் திறப்பு விழாவுக்கு யார் வந்தார்கள் யார் வரவில்லை என்பதுதான் குறை, நான் அரங்கண்ணல் அவர்கள் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன், திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அடுத்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அந்த மக்களைப் பார்க்க வேண்டும். டாக்டர் அவர்களுடைய தொகுதியிலே வேலை நடந்து கொண்டிருக்கிறது, அவரும் அந்த விழாவிலே கலந்து

கொள்ளவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் வெளியிலே வேகமாகப் பேசக்கூடியவர்கள். அவர் உட்கார்ந்திருக்கின்ற பொழுது ஹாண்டே, எழுந்தால்தான் சண்டை.

அதைப் போலவே கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள் இதற்கு முன்பெல்லாம் அதிகாரிகளை மக்கள் வந்து சந்திக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் அதைப் பெருமளவுக்குக் குறைத்திருக்கிறோம், முழுமையாக இல்லையென்றாலும் பெருமளவுக்குக் குறைத்து இருக்கிறோம்.

1967-ஆம் ஆண்டில் மனுநீதித் திட்டம் என்ற திட்டத்தினை இராமநாதபுரம் மாவட்டத்திலே தொடங்கி இன்றைக்குத் தமிழகம் முழுவதும் பரவலாக நடத்திக் கொண்டு வருகிறோம். திங்கள்தோறும் வாரமொரு நாள் குறிப்பிட்டு மாவட்ட அதிகாரிகள் அனைவரும் எல்லாக் கிராமங்களுக்குச் செல்கிறார்கள். ஒரு நாளிலே கிட்டத்தட்ட 1,500 கிராமங்களுக்கு அதிகாரிகள் சென்று மக்களைச் சந்தித்து அவர்களுடைய மனுக்களைப் பெற்று உடனடியாகக் கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கிறார்கள். இந்த மனுநீதித் திட்டம் இந்த ஆட்சியிலே உருவாக்கப் பட்டு செம்மையாக நடைபெற்று வருகிறது.

கிராமப்புறத்திலும், நகரப்புறத்திலும் இருக்கின்ற சாதாரணக் குடிமகனுக்கு உதவிட பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் திட்டம் உருவாக்கப்பட்டு—இருக்கின்ற நகராட்சிகளின் மொத்த எண்ணிக்கை 99 ஆகும். திரு. கந்தப்பன் அவர்கள் தலைமையில் இந்த அரசினுடைய ஒத்துழைப்போடு அந்தத் திட்டத்தை செவ்வனே நடத்தி வருகிறோம், தீவிரமாகப் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறோம். மொத்தம் உள்ள நகராட்சிகள் 99-லே—ஏற்கனவே வெள்ளையன் காலத்திலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 30, 35 நகராட்சிகள்தான் தண்ணீர் வசதியைப் பெற்றிருந்தன—ஆனால் இன்று மொத்த நகராட்சிகள் 99-ல் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது 80 என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆலந்தூர், பல்லாவரம், ஆம்பூர், வாணியம்பாடி, பண்ணுருட்டி, ஆத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, அருப்புக்கோட்டை, இராமனுதபுரம் ஆகிய பத்து இடங்களில் இன்றைக்கு இந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆய்வு வேலை நடந்து வருபவை, அம்பத்தூர், கத்திவாக்கம், மாதவரம் ஆகிய இடங்களாகும்.





அவுட் லைன் புரப்போஸலுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்கள் நெல்லிக்குப்பம், பொன்னமலை, சிங்காநல்லூர் ஆகியவை ஆகும். ஆய்வு மதிப்பீட்டுத் தொகையை, நிதிவசதி இல்லாததால் நகராட்சி செலுத்த முன்வராத இடங்கள், சீர்காழி, கொளச்சல் பத்மனுபபுரம் ஆகியவை ஆகும்.

இவைகள் மட்டுமல்லாமல், மொத்தம் இருக்கின்ற பேரூராட்சிகள் 641. இதில் இதுவரையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டவை 55. குடிநீர்த் திட்ட வேலைகள் நடந்து கொண்டிருப்பவை 27. ஆய்வு அனுமதிக்கப்பட்டவை 145. மிச்சம் 414. இதற்காக ஒரு தீவிரமான திட்டத்தை யோசித்துக் கொண்டிருக்கின்றோம். விரைவில், தமிழகத்தில் 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லாத கிராமம், பட்டி தொட்டி எதுவுமே இல்லை என்கின்ற உன்னதமான நிலையை நாம் நிறைவேற்றியே தீருவோம், அந்தச் சபதத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டம் 1974ஆம் ஆண்டு இறுதியில் முடியக் கூடும் என்ற நல்ல செய்தியை நான் சென்னை நகரத்து மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூற்பாலைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் 14 நூற்பாலைகள்—சிக் மில்ஸ்—அவைகளை ஏற்று நடத்துவது என்று அரசு தீர்மானித்தது. கீழ்கண்ட மில்களை இதுவரையில் எடுத்திருக்கிறோம். ஓம் பராசக்தி, முருகன், சோமசுந்தரா, கோவை ஸ்பின்னிங் அண்டு வீவிங், கிருஷ்ணவேணி, ஸ்ரீரெங்கவிலாஸ் கம்போடியா மில்ஸ். ஒரு மாதத்திற்கு முன் எடுத்தது, பங்கஜா, காளீஸ்வரா, சாரதா, பயோனீர், சுதந்திரா (மதுரை), பாலராமவர்மா ஆகிய மில்களை ஒரு மாதத்திற்குள் எடுத்திருக்கிறோம். எடுக்கப்பட்ட 13 மில்களில் 9 மில்களில் உற்பத்தி துவங்கிவிட்டது. 4 மில்களில் விரைவில் வேலை துவங்கும் ஒரு ஆலைப்பட்டும், காளீஸ்வரா மில், அதன் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில், தங்களுடைய மில் சிக் மில் அல்ல என்று வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

மேற்படி மில்களை நடத்துவதற்கு நிதி உதவியை மாநில அரசு 49 சதவிகிதமும், மத்திய அரசு 51 சதவிகிதமும் தருவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாநில அரசு எவ்வளவு கஷ்டங்கள் இதற்காக எடுத்துக் கொண்டது, எந்த அளவிற்கு வாதாடியது,

போராடியது என்பதை அறிவீர்கள். 13 மில்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி, மத்திய அரசு 164 லட்சத்து 83 ஆயிரம். தமிழ்நாடு அரசு 144 லட்சத்து 60 ஆயிரம். இதுவரை மத்திய உதவி கிடைத்திருப்பது 92 லட்சம் ரூபாய். மாநில அரசு கொடுத்திருப்பது 117 லட்சம் ரூபாய். பயன்பெறும் தொழிலாளர்கள் 13 மில்களிலும் சேர்ந்து 11,900 பேர் என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே எந்த மாநிலமாவது ஆலைகள் மூடப்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு, வேலையிழந்து வேதனையிலே சிக்கித் தவிக்கின்ற தொழிலாளர்களுக்கு, பாட்டாளிகளுக்கு நிவாரணத் தொகை அளித்ததாகக் கேட்டிருக்கிறோமா? இங்கேதான், கோவையிலே மில் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து முதலில் 5 லட்சம் ரூபாயும், மறுபடியும் தீபாவளிப் பணமாக 1 லட்சத்து ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் சுமார் 6 லட்சம் ரூபாய் முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் கொடுத்த ஒரே மாநிலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகின்ற நம்முடைய தமிழக மாநிலம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வேலைவாய்ப்புத் திட்டங்களைப்பற்றி யெல்லாம் பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய சக்தி அத்தனையையும் பயன்படுத்தி, நம்மால் முடிந்த வரையில் வேலை வாய்ப்புத் திட்டங்களை மாநில அரசின் அதிகார வரம்பு, நிதிநிலை ஆதாரம் இவைகளுக்கு ஏற்றவாறு நாம் வகுத்திருக்கிறோம். நான் முதலில் கூறியபடி இளைஞர் அணி மூலம் 3,000 பேர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. பயிற்சி ஆசிரியர்கள் 6,500 பேர்களுக்கு வாய்ப்பு.

கிராம சாலைகள்—மேம்பாடு திட்டத்தின் மூலம் மத்திய அரசின் உதவியோடு 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்து, 600 பட்டதாரிகள், 1,000 டிப்ளமா ஹோல்டர்ஸ், 1,000 கிராஜூவேட்ஸ் மென் இரண்டாண்டு பயிற்சி பெறுவார்கள், அவர்கள் பயிற்சி முடிந்த பிறகு அந்தந்தத் துறைகளிலே சேர்க்கப்படுவார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.





தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம், 3,000 பேர்களுக்குக் கடன் கொடுக்கும் திட்டம் இன்றைக்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கிராமப்புற சிறப்பு வேலைத் திட்டத்தின் மூலம், 15,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு.

குளங்கள், ஏரிகள் இவைகளைச், சீர்திருத்த, மேம்படுத்த, ஆய்வு செய்வதற்காக 418 பொறியாளர்கள், 607 டிப்ளமோதாரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

என்ஜினியரிங் பட்டதாரிகள் 20,000 ரூபாய்க்குக் குறைவான வேலைகள், காண்டிராக்ட்ஸ் எடுத்தால் 5 சதவிகிதம் வரை அதிகப்படுத்திக் கொடுக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

முதல் கிரேட் கான்ஸ்டபிள்கள் 1,000 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

105 டாக்டர்களுக்கு புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 205 நர்ஸ்களுக்குப் புதிய பதவிகள் ஏற்படுத்தப்பட்டன.

இவைகள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நம்மால் முடிந்த வரையில் செய்த சாதனைகளாகும்.

தமிழ்நாடு முழுவதும் தாங்கள் குடியிருக்கும் இடம் தங்களுக்குச் சொந்தமாக்கப்படாமல் இருக்கிறதே என்று கவலைப்பட்ட மக்கள் இலட்சக் கணக்கில் இருந்தார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார், பட்டா வழங்குகிறேன் பட்டா வழங்குகிறேன் என்று சொல்கிறார்கள், இது என்ன பெரிய விவகாரம், ஏற்கனவே குடியிருந்த இடத்தைத் தானே கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஆனால் உண்மை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கனவே குடியிருக்கிற இடம்தான். ஆனால் அந்த இடத்தைப் பிரித்துப் பகுத்து பார்க்க உரிமை அவர்களுக்கு இல்லை. அந்த இடத்தின் கூரையை அகற்றிவிட்டு ஓட்டுவில்லை வீடாக மாற்றி அமைக்கின்ற உரிமை அவர்களுக்கு இல்லை. அந்த வீட்டை பத்தாண்டுகளுக்குப் பிறகு விற்கவோ, அடைமானம் செய்வதற்கோ உரிமையில்லை. அந்த உரிமை இல்லாமல், எந்த நேரத்திலே

வெளியேறு என்று சொன்னாலும் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையிலிருந்தவர்கள். காலையிலே திருப்பூர் மொய்தீன் அவர்கள் கூறியதைப்போல், வெளியேறு என்றால் வெளியேற வேண்டியவர்கள், விரட்டப்படக்கூடிய அளவில், அடிமைகளைப்போல் இருந்தவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு 1947-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரையில், இருபதாண்டுக் காலத்தில் கொடுக்கப்பட்ட நிலப் பட்டா எவ்வளவு? 1,11,443 பட்டாக்கள் இருபதாண்டுக் காலத்தில். ஆனால் இந்த ஐந்தாண்டு காலத்தில், எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையைப்பெற முடியாமல் இருக்கும் முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், ஐந்தாண்டுக் காலத்தில் 2,72,235 பேர்களுக்கு நிலப்பட்டா. அதைப் போலவே மனைப்பட்டா இருபதாண்டுக் காலத்தில் 63,770 பேர்களுக்கு, இருபதாண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில் அளிக்கப்பட்டது. ஆனால் ஐந்தாண்டுக் கால கழக ஆட்சியில் 3,52,013 பேர்களுக்கு நாம் பட்டாக்களை வழங்கியுள்ளோம்.

தஞ்சை மாவட்டத்திற்கு என்று தனிச் சட்டம் இயற்றினோம். திரு. மணலி கந்தசாமி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே ஒருவர். அவர் தஞ்சையிலே நடைபெற்ற குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கும் விழாவில் பேசும்பொழுது சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இரவு 12 மணிக்கு இந்தப் பட்டாக்களை வாங்கிக் கொண்டு சென்று இன்று இரவு தூங்கும்பொழுது நம்முடைய சொந்த வீட்டிலே தூங்குகிறோம் என்ற உணர்ச்சியோடு தூங்குவார்கள் என்று பெரியவர் கந்தசாமி அவர்கள் கூறினார்கள். இன்னொன்றும் சொன்னார்கள், இரத்தப் புரட்சியால் சாதிக்கக்கூடிய காரியத்தை கழக அரசு ஒரு துளி மை செலவிலே சாதித்து விட்டது என்று சொன்னார்கள். 1,54,274 பேர்களுக்கு தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு, அதிலேயும் பெரும்பாலும், அரிசன மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களுக்கு குடியிருப்பு மனைகள் சொந்தமாக்கப்பட்டன. ஆரம்பத்திலேகூட, அதற்கு ஒரு தொகை செலுத்த வேண்டும், அதைக் கடனாக அரசு கொடுக்கும், அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டும் என்று சட்டமன்றத்திலே நாம் ஒரு முடிவை எடுத்தோம். ஆனால் அந்த முடிவு மாற்றப்பட்டு இன்றைக்கு அவர்கள் தொகை எதுவும்



செலுத்த வேண்டியதில்லை, அந்த மனைக்கு எவ்வளவு பணம் தேவையோ அதை மிராசுதாரர்களுக்கு அரசாங்கமே கொடுத்து விடும் என்ற முடிவையும் அரசு எடுத்திருக்கிறது. இவைகளெல்லாம் ஏழை எளிய, நடுத்தர மக்களுக்காகச் செய்யப்பட்ட காரியங்கள்.

சோஷலிசம், கம்யூனிசம் பேசுகிறார்கள். ஆனால் எந்த சோஷலிசத் திட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு புறக்கணித்து விட்டது? பேருந்துகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு அமைந்தவுடனேயே, இங்கே பஸ்களைத் தேசியமயமாக்க முதல் கட்டமாக 75 மைல்களுக்கு அப்பாலுள்ள வழித்தடங்கள், சென்னையிலிருந்து புறப்படும், வந்து சேரும் வழித்தடங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் வந்து சேரும், புறப்படும் வழித்தடங்கள் இவைகள் தேசியமயமாக்கப்பட்டன.

பிறகு 10 பஸ்களுக்கு மேல் யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று உச்சவரம்பு கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து, 50 பஸ்களுக்கு மேல் இருந்த கம்பெனிகள் தேசியமயமாக்கப்பட்டன. மேலும் எல்லா பஸ்களும் படிப்படியாக தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று, ஆக்கப்படும் என்ற அறிவிப்பை விடுதலை நாள் வெள்ளி விழாச் சிறப்புக் கூட்டத்தில் இந்த அவையிலே அறிவித்தேன். அதற்கான விதிமுறைகளை போக்குவரத்து துறை அமைச்சர் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள் சட்ட அமைச்சரோடு வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பேருந்து முதலாளிகளுக்கு ஏற்பட்ட கோபத்தைப்பற்றி இங்கே பேசியவர்கள், குறிப்பாக, ஏ. ஆர். பெருமாள் போன்றவர்கள் சொன்னார்கள்.

யாருடைய கோபத்தைப் பற்றியும் நான் கவலைப்படப் போவதில்லை. இருப்பது இரண்டு நாள்தான் என்றாலும், ஆட்சிச் சக்கரம் இன்னும் ஒருநாள்தான் என்றாலும் சமதர்ம சமுதாயத்தைச் சமைக்க, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தே தீரும் என்பதை மாத்திரம் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். (ஆரவாரம்).

சங்கு எடுக்கின்ற தொழிலாளர்கள் கோரிக்கை இருபதாண்டுக் காலக் கோரிக்கை. இராமநாதபுரத்தில் ஏலத்திற்கு விடுகிறார்கள்,

யாரோ சில பெருமக்கள் ஏலம் எடுத்து லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, சங்கு எடுக்கின்ற தொழிலாளர்களாகிய நாங்களே அதை எடுத்து விற்பனை செய்யும் உரிமையும் எங்களுக்கு வேண்டும் என்று கேட்டார்கள். பழைய ஆட்சியில் அது ஏற்றுக் கொள்ளப் படவில்லை. சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு சங்கு எடுக்கும் தொழிலாளர்கள் சங்கை எடுத்து அவர்களே விற்பனை செய்யும் உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஏன் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொன்ன அடிப்படையில் இன்றைக்கு அந்த உரிமை தொழிலாளர்களுக்கே வழங்கப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் தொழிலாளர்கள் அதன் பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

1969-ம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டபோது இரண்டு விஷயங்களை வெளியிட்டேன். மரமேறுபவர்களுக்கு விபத்து ஏற்பட்டால், மீனவர்களுக்கு விபத்து ஏற்பட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று சொன்னேன். ஓராயிரம், இரண்டாயிரம் எல்லாம் என்ன பெரிய விவகாரமா என்றெல்லாம் பேசினார்கள். நடந்திருப்பது என்ன ? ஆயிரம் ரூபாய் உதவிபெற்ற குடும்பங்கள் இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் 73 குடும்பங்கள். 73 குடும்பங்களில் மரம் ஏறியவர்கள் விபத்தின் காரணமாக இறந்துவிட்ட காரணத்தால் 73 குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் அளிக்கப்பட்டிருக்கிறது. விபத்தில் கைகால் முறிந்தவர்களுக்கு 500 ரூபாய் உதவித் தொகை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் 81 பேர் அந்த உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார்கள்.

மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது மரணம் அடைந்தால் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று அறிவித்தேன். இது வரையில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலத்தில் 105 குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,08,000 ரூபாய் இந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அறிவிக்கும்போது சாதாரணமாகத் தெரிந்த விஷயம்



இன்றைக்கு 105 குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்கும் அளவுக்குப் பயன்பட்டிருக்கிறது.

விடுதலை வீரர்களுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தீர்மான வடிவில் மானியம் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, அந்தத் தீர்மானம் நிறைவேறி ஒரு ஐந்து பேருக்கு மானியம் வழங்கப் பட்டது. அதற்குப் பிறகு ஆட்சி மாறிவிட்டது. மாறாமல் இருந்திருந்தால் காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்து அதைச் செய்திருக்கும் ; மறுக்கவில்லை, ஆனால் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகும். அண்ணாவுக்குப் பிறகு நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகும் ஐந்து பேராக இருந்த அந்த விடுதலை வீரர்களின் எண்ணிக்கை 50 ரூபாய் மானியம் பெறுகிற வீரர்களின் எண்ணிக்கை இன்றைக்கு 7,448 ஆக உயர்ந்திருக்கிறது. இப்போது அந்த 50 ரூபாய் 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தாமிரப் பத்திரம் பெற விடுதலை வீரர்கள் சிலபேர் டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களை எல்லாம் வழி அனுப்பி வைத்த ஒரே ஒரு முதலமைச்சர் இந்தியாவிலேயே நான்தான் என்று கருதுகிறேன். நானும், நாவலரும், வேறுசில அமைச்சர்களும் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று தாமிரப் பத்திரம் பெற டில்லிக்குச் சென்ற விடுதலை வீரர்களை, தியாகிகளை வழி அனுப்பி வைத்தோம். கதராடைகள் அணிவித்து களிப்புற்றோம்.

டில்லிக்குச் சென்று திரும்பி வந்த பிறகு அவர்கள் சொன்னார்கள்—டில்லியில் கேட்டார்களாம் ' இங்கு எங்கள் மாநிலத்தில் தருவதைப்போல் உங்களுக்கு மானியம் தருகிறார்களா ? ' என்று மற்ற மாநில தியாகிகளைப் பார்த்து கேட்டார்களாம். அவர்கள் எல்லாம் ' அப்படி என்றால் என்ன ? என்று கேட்டார்களாம். இது வேறு மாநிலங்களில் விடுதலை வீரர்களுக்கு காட்டப்படுகின்ற உபசாரமாக இருக்கிறது !

7,400 பேருக்கு நாங்கள் மானியம் அளித்தது மாத்திரமல்ல ; கட்டபொம்மன் பரம்பரை, அவருடைய வாரிசு எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கிறோம். வ.உ.சி. குடும்பத்தில்கூட அவரது மகள் ஆனந்தவல்லி அம்மையாரைத் தூத்துக்குடியில் பார்த்தேன். இப்போது அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

தில்லையாடி வள்ளியம்மையை மறக்காமல், தில்லையாடியில் பிறந்து வளர்ந்து தென்னாப்பிரிக்காவில் உயிர்நீத்த நாகப்பனை மறக்காமல், நாராயணசாமியை மறக்காமல், வள்ளியம்மை நகரை உருவாக்கி, வள்ளியம்மை மண்டபத்தைக் கட்டி, அரிசனங்களுக்காக நாகப்பன் நகர், நாராயணசாமி நகர் என்று உருவாக்கி தில்லையாடி கிராமத்தில் 10 இலட்சம் ரூபாயை இந்த அரசு தில்லையாடி வள்ளியம்மை நினைவாகச் செலவழித்திருக்கிறது.

விஸ்வநாததாஸ் பற்றி முடிதிருத்துவோர் மாநாட்டில் கேட்டுக் கொண்டார்கள். 'கொக்கு பறக்குதடி பாப்பா! வெள்ளைக் கொக்கு பறக்குதடி பாப்பா!' என்று தேசிய மேடைகளில் முழங்கியவர் அவர் நடிகராக இருந்தாலும் போராட்டங்களில் இருந்து விதிவிலக்கு பெறுமல் (சிரிப்பு) பல போராட்டங்களில் சிறை சென்றவர்! கஷ்ட நஷ்டங்களை ஏற்று சிறைச்சாலையில் வாடிய செம்மல் விஸ்வநாததாஸ் அவர்களின் குடும்பத்தைத் தேடிப் பிடித்து ஓய்வூதியம் அளித்து வருகிறோம்.

அது மாத்திரமல்ல, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீக்குளித்து இறந்துபோன 9 வீரர்களின் குடும்பத்திற்கு 100 ரூபாய் மாத உதவித் தொகை கொடுத்து வருகிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பல வகையிலும் உயிர்நீத்த, 1965-ம் ஆண்டு துப்பாக்கிப் பிரயோகத்தின்போது உயிர் நீத்த 53 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் விதம் அளித்து வருகிறோம். அப்போது இருந்த அரசு அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்யவில்லை. இப்போது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தால் உடனே உதவித் தொகை கேட்கிறார்கள். நீதி விசாரணை கேட்கிறார்கள். ராஜினாமா செய் என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால் 1965-ல் துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்த 53 பேர்களின் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகையாக அளிக்க இந்த அரசு முடிவு செய்து அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** திருவாங்கூர் தமிழகப் போராட்டத்திலே பலரும் துப்பாக்கிப் பிரயோகத்திலே இறந்திருக்கிறார்கள். பலர் அடக்குமுறைக்கு ஆளாகியிருக்கிறார்கள் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பழைய அரசாங்கம் செய்ய மறந்ததை எல்லாம் இந்த அரசாங்கம் நிச்சயமாகச் செய்யும். திரு. நாடார் அவர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டு விவரங்களைத் தருவார்களேயானால் நிச்சயமாகப் பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

இவை மாத்திரமல்லாமல் தமிழகத்தில் மத்திய மாநில உறவு பற்றி ஆராயக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதனுடைய அறிக்கையையும் பெற்றிருக்கிறோம்.

இரண்டாவது சம்பளக் குழு ஏற்படுத்தப்பட்டு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது.

போலீஸ் கமிஷன் நியமிக்கப்பட்டு ஏராளமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

மாநிலத்திற்கென்று தனியாகத் 'திட்டக் குழு' ஏற்படுத்தப்பட்டது.

நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஏற்படுத்தப்பட்டு, அறிக்கை தரப்பட்டு அவற்றை அரசு பரிசீலித்து வருகிறது.

நெசவாளர்களின் பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து பரிந்துரை செய்ய தனியாக ஒரு குழு திரு. சந்தானம் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம்பற்றி ஆராயத் தனியாகக் குழு பணியாற்றி வருகிறது.

பிற்பட்டோர் நலக்குழு ஏற்படுத்தப்பட்டு அறிக்கை பெறப்பட்டு பரிந்துரைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுதும் கூலி நிர்ணயம் செய்ய விரைவில் குழு அமைய இருக்கிறது.

வெளியில் சிலபேர் பத்திரிகை ஆசிரியர்களைப் பார்த்துக் கேட்டார்களாம். 'திராவிட முன்னேற்றக் கழக அரசைப்பற்றிக் குறை கூறுவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, ஏன்?' என்று கேட்டார்களாம். அதற்கு அவர்கள் சொன்னார்களாம்—' அவர்களுக்குக் கோயில் பிடிப்பதில்லை, ஆண்டவனைப்

பிடிப்பதில்லை, நாஸ்திகர்களாக இருக்கிறார்கள், ஆகவேதான் எதிர்க்கிறோம்' என்று சொன்னார்கள். ஹாண்டே அவர்களுக்கே இவ்வளவு நாள் எங்களோடு பழகியும், அண்ணா அவர்களோடு உறவாடிக் கொண்டிருந்த ஹாண்டே அவர்களுக்கே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கை இதுநாள் வரை புரியாமல் இருக்கும்போது பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஒருவேளை புரியாமல் இருக்கலாம், அல்லது புரிந்தும் மாறாமல் இருக்கலாம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த அரசைப்பற்றி....

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** கொள்கை என்றார்கள். என்னுடைய கொள்கை அதுதான் பலதடவை சொல்லியிருக்கிறேன். இப்போது அல்ல.

Even from my student days, I have been saying it . The late Anna also knew it.

என்னுடைய கொள்கையைப் பின்பற்றுவதில் ரொம்பச் சந்தோஷம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நம் இரண்டு பேரையும் விட வயதில் மூத்தவர் அண்ணா. அவர் சொன்ன கொள்கையை இருவரும் பின்பற்றுவோம்.

1967-ல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கோவில்களை எல்லாம் இடித்து விடவில்லை. பழுதடைந்த கோவில்களில் திருப்பணி செய்யப்பட்டது. அப்படி திருப்பணி செய்யப்பட்ட கோவில்கள் 1967-ல் 200. பெரியாருக்கு பிடிக்காது. ஹாண்டேக்கு பிடிக்கும். தமிழ்நாட்டின் பழைய கலை, கலாசாரம், சிற்பங்கள் இவைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறையோடு 1967-ல் திருப்பணி செய்யப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை 200. 68-ல் 90. 69-ல் 130. 70-ல் 250. 71-ல் 450. 72-ல் 700 திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

கோவில்களில் திருமண மண்டபங்கள் 1947-ல் இருந்து 1967 வரையில் 34 தான் கட்டப்பட்டன. நண்பர் கண்ணப்பன் அவர்களின் முயற்சியினாலும், இதற்கு முன்னிருந்த அமைச்சர்கள் முயற்சியினாலும் 67-72-ல் இந்த ஐந்தாண்டுகளில் 135 திருமண மண்டபங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு 78 திருமண மண்டபங்கள்



கட்டப்படும் என்று இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த மன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலாக அளிக்கப்பட்டிருக்கிறது.

பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோது அரங்கண்ணல் பேசியதாக ஒரு உறுப்பினர் இங்கு குறிப்பிட்டதாகக் கேள்விப்பட்டேன். நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு வள்ளுவர் கோவிலுக்குப் போய் உட்கார்ந்து அதை சரி செய்யக் கூடாதா என்று கேட்டதாக. அவர்கள் அதைச் செய்யாவிட்டாலும் இன்று வள்ளுவர் கோவில் திருப்பணியை ஏற்றுக்கொண்டு அதில் பக்தவத்சலம் அவர்களையும் ஒரு உறுப்பினராக இருக்க வேண்டுமென்று வேண்டி அவர்களும் ஒப்புதல் அளித்தார். அவர்களும், நமது கண்ணப்பன் அவர்களும், திரு. அரங்கண்ணல் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், திருமதி அனந்தநாயகி அவர்களும் மற்றும் பலரும் சேர்ந்த ஒரு குழு அமைக்கப்பட்டு திருவள்ளுவர் கோவிலை நல்ல முறையில் அமைத்துள்ளார்கள். அதை நம்முடைய பழந்தமிழ் இலக்கியத்திற்குச் சான்றாக அமைக்க வேண்டும், பல இலட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை என்ற அளவில், அந்தப் பணிக்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடற்கரைப் பட்டணமாக ஒரு காலத்தில் பேரோடும் புகழோடும் விளங்கிய பூம்புகார் பட்டணத்தில் கண்ணகியின் மாண்பினை சீரும் செழிப்புமிக்க இலக்கியச் செறிவை எடுத்துக் காட்டுகிற வகையில் காலத்திற்கும் அக் கடற்கரையில் கண்ணகியின் காவியம் கீதமிசைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தணியாத ஆசையோடு சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைந்து வருகிறது. வேலைகள் முடிவுற்று சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் அதைப் பார்த்து மகிழலாம், விரைவில் அந்த வாய்ப்புக் கிடைக்கும்.

இவ்வளவு சாதனைகளை, உணர்ச்சிபூர்வமான, உள்ளத்தைத் தொடக்கூடியதை, ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கிற மக்களை கைதூக்கி விடக்கூடிய இவ்வளவு சாதனைகளையும் ஆற்றியிருக்கிற இந்த அரசை நடாத்துகிற நாங்கள் ஜனநாயகத்தை உணராதவர்கள், ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பவர்கள் என்று— நேற்றுகூட முன்னாள் சபாநாயகர் வெகு அழகான வார்த்தைகளை எல்லாம் மிக முக்கியமானதொரு இடத்தில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பிறந்ததின விழாவில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள்கூட

ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைகளை எல்லாம் அந்த விழாவில் பேசியிருக்கிறார்கள். ‘பொய்யன் கருணாநிதியின் செவிட்டு சர்க்கார்’ என்று முன்னாள் சபாநாயகர் பேசியிருக்கிறார். வேறு சிலரும் நம்முடைய ஜனநாயகத்தை திராவிட முன்னேற்றக் கழகம் இன்று கடைப்பிடித்து வருகிற ஜனநாயகத்தை இழித்தும் பழித்தும் பேசுகிறார்கள்.

இந்த அவைக் கூட்டங்களைக் கூட்டப்படுவதிலிருந்து அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்துவது வரையில் எந்த அளவிற்கு ஜனநாயகம் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை புள்ளிவிவரங்களோடு சமர்ப்பிக்கிறேன். 1952-ல் இருந்து 57 வரையில் ஐந்தாண்டுகளில் ஒன்பது கூட்டங்கள், செஷன்ஸ், நடைபெற்றிருக்கின்றன. நடைபெற்ற நாட்கள் ஐந்தாண்டுகளில் 314. 1957-ல் இருந்து 62 வரையில் 10 செஷன்ஸ். கூடிய நாட்கள் 305. 1962-ல் இருந்து 67 வரையில் 9 செஷன்ஸ், கூடிய நாட்கள் 252. 67–72-ல் இதுவரையில் 15 செஷன்ஸ், கூடிய நாட்கள் 317. ஆகவே ஜனநாயக கடமைகளை நிறைவேற்றிட எவ்வளவு அதிகமான நாட்களைத் தரவேண்டுமோ அதைத் தந்து இந்தச் சட்டசபைக் கூட்டங்களை நடத்த வேண்டுமோ அந்த அளவிற்கு நடத்தியிருக்கிறோம்.

அமைச்சரவைக் கூட்டங்களை எடுத்துக் கொண்டால்—சிலர் பேசுகிறார்கள், எந்த அமைச்சருடைய பைல்களையும் அவர்கள் பார்க்க முடியாதாம், எல்லாவற்றையும் முதல் அமைச்சர்தான் பார்க்கிறார், அமைச்சர்களுடைய சுதந்திரம் எல்லாம் பறிக்கப் பட்டுவிட்டன, முதல் அமைச்சர் அவர்கள் சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார் என்று பேசுகிறார்கள். சில பைல்கள் முதல் அமைச்சருக்கு வரவேண்டும். சில பைல்களை அந்தந்தத் துறை அமைச்சர் அவர்களே பார்த்து முடிவு செய்யலாம் நான் நிதி அமைச்சராக இருக்கிற காரணத்தினால் பல பைல்கள் எனக்கு வந்தாக வேண்டும். ஆட்சிப் பொறுப்பில் இல்லாமலிருந்தவர்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பணியாற்றியவர்களுக்குக்கூட இது தெரியாமல் இருப்பதற்காக உள்ளபடியே வேதனைப்படுகிறேன். யாரையும் குறை கூற இதைச் சொல்லவில்லை.

அமைச்சரவைக் கூட்டங்களை எடுத்துக் கொண்டால் மற்றவைகளைவிட குறைந்த அளவில் இல்லை. யாரையும் கலக்காமல்



எதுவும் நடைபெறவில்லை என்பதற்காக சான்றுகள் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். 54 முதல் 63 வரையில் ஒன்பதரையாண்டுக் காலம் மதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். அவர்கள் கூட்டிய அமைச்சரவைக் கூட்டங்கள் 61. திரு. பக்தவத்சலம் அவர்கள் கூட்டிய கூட்டங்கள்—63 முதல் 67 வரையில் மூன்று ஆண்டுகள் ஐந்து மாதங்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள்—அவர் கூட்டிய கூட்டங்கள் 15. அண்ணா அவர்கள் 6—3—67-ல் இருந்து 2—2—69 வரையில் ஒரு ஆண்டு 11 மாதம். இதில் 11 மாதங்களைக் கழித்துவிடலாம், ஒரு ஆண்டுக் காலம் அவர்கள் கூட்டிய கூட்டங்களின் எண்ணிக்கை 8. நான் 10—2—69 முதல் இதுவரையில் மூன்று ஆண்டுகள் பத்து மாதம் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்கள் 47 என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அமைச்சரவைக் கூட்டங்கள் மட்டுமல்ல. எந்த ஒரு சிக்கலான பிரச்னை எழுந்தாலும், சர்ச்சைக்குரிய பிரச்னைகள் எழுந்தாலும், அமைச்சர்களைக் கலந்துகொண்டு, இன்னும் சொல்லப்போனால் சில நேரங்களில் பொதுப்பிரச்னைகளில் காவிரி நீர் தகராறு போன்ற பிரச்னைகளில் எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு, முடிவு எடுக்கிற ஜனநாயகப் பண்பினை நாம் காத்து வருகிறோம். ஆகவே சர்வாதிகாரம் நடைபெற்றுவிடவில்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள், ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், இங்கு போலீஸ் ராஜ்யம் நடைபெறுகிறது, அடக்குமுறை நடைபெறுகிறது, சுட்டுத் தள்ளுகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். துப்பாக்கிப் பிரயோகத்தை நாம் ஏதோ மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம் என்று பொருள் அல்ல. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் சில துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்று விடுகின்றன. சிலரது உயிர் பறிக்கப்படுகிறது. அதற்காக வருந்துகிறோம், அனுதாபம் தெரிவிக்கிறோம். அந்தக் குடும்பங்களுக்கு நிதி வழங்குகிறோம். அதனால் அந்தக் குடும்பங்கள் முழு ஆறுதல் பெற்றுவிட முடியாது. அது எங்களுக்குத் தெரியாமல் இல்லை.

ஆனால், தமிழ்நாட்டில் நடைபெறுகிற துப்பாக்கிப் பிரயோகத்தை வைத்துக் கொண்டு உடனடியாக இந்த அமைச்சரவை ராஜிநாமா செய்யவேண்டும் என்று சொல்கிற நேரத்தில் ஒரு

நான்காண்டு கால அகில இந்தியக் கணக்கைப் பார்க்க வேண்டும். குஜராத் மாநிலத்தில் 69, 70, 71, 72 இந்த நான்காண்டுகளில் நடைபெற்ற கலகம் 183, செத்தவர்கள் 53 பேர்கள். காயம் பட்டவர்கள் 257 பேர்கள். மராட்டியத்தில் நான்காண்டுக் காலத்தில் நடைபெற்ற கலகம் 394, இறந்தவர்கள் 129, காயம் பட்டவர்கள் 426 துப்பாக்கிச் சூட்டினால். கேரளாவில் கலகம் 21, இறந்தவர்கள் 14, காயம் பட்டவர்கள் 165. மேற்கு வங்கத்தில் கலகம் 1,011, இறந்தவர்கள் 335, காயம்பட்டவர்கள் 511 ஆந்திராவில் கலகம் 310, இறந்தவர்கள் 213, காயம்பட்டவர்கள் 203. இந்தப் புள்ளிவிவரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் 30 பேர்கள்தான் இறந்தார்கள் என்று சொல்வதால் 30 பேர்களைச் சுட்டது சரிதான் என்று வாதிப்பவர்கள் அல்ல நாங்கள். 30 பேர்களில் 17 பேர்கள் விவசாயப் போராட்டத்தில் இறந்த நேரத்தில் தமிழ்நாட்டில் இதுவரையில் யாருக்கும் கொடுக்காத அளவிற்கு ரூ. 5,000 அந்தக் குடும்பங்களுக்கு வழங்கினோம். ரூ. 5,000 உயிரின் விலை அல்ல. ஆனால் இழந்துவிட்ட குடும்பங்களுக்கு....

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முதல் அமைச்சர் அவர்களின் ஸ்டேட்மெண்டில் கலகங்கள் 23 என்று சொல்லியிருக்கிறார்கள். கலவரங்கள் குறைவாக உள்ளன. மற்ற மாநிலங்களைவிட இது நல்ல அமைதியாக இருக்கிற மாநிலம். முல்கி பிரச்சினை போன்ற பிரச்சினைகள் இங்கு இல்லை. அமைதியாக இருக்கக்கூடிய இடத்தில், பிரச்சினைகளே இல்லாத மாநிலத்தில், க்ளைவ் ஹாஸ்டல் போன்ற இடங்களில் போலீஸ்காரர்கள் சென்று ஆர்ப்பாட்டம் செய்யக்கூடிய முறை தவிர்க்கப்படவேண்டுமென்று சொன்னேனே தவிர வேறு அல்ல. முன்கூட்டியே எச்சரிக்கை கொடுத்து சிறிய விஷயங்கள் பெரிய கலகமாக, பயங்கரமான நிலைமை ஏற்படாமல் இருக்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படிக் கேட்பதிலே எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. அதைக் கேட்டுவிட்டு ராஜினாமா செய்யுங்கள் என்று சொல்கிற நேரத்தில்தான் இந்தப் புள்ளி விவரங்களைக் கூற வேண்டியிருக்கிறது.

க்ளைவ் ஹாஸ்டல் சம்பவம் நான் வரவேற்றதல்ல. பாளையங்கோட்டைச் சம்பவத்தை எவ்வளவு வன்மையாகக் கண்டித்து



இருக்கிறேன். நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதற்கு முன்பு நடைபெற்ற கலவரங்களின் போது, நாங்கள் டாக்டர் ஹாண்டே உள்பட, எத்தனை தடவை கேட்டிருக்கிறோம், நீதி விசாரணை வேண்டுமென்று. 1965-ல் மொழிக்கிளர்ச்சி தமிழகம் பூராவிலும் நடந்த நேரத்தில் சிதம்பரம் ஒரு ஊரில் தவிர, வேறு எந்த ஊரிலும் நீதி விசாரணை வைக்கப்படவில்லை. 1958-ல் முதுகுளத்தூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபோது எதிர்தரப்பு வரிசையில் இருந்த அத்தனைபேரும் கேட்டோம், நீதி விசாரணை வேண்டுமென்று. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த காமராஜரும், அமைச்சர் சுப்பிரமணியமும் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதோடு, எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் போலீசார் கலவரம் நடந்த இடத்திற்குப் போக மாட்டார்கள். ஆகவே, நீதி விசாரணை வைக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

பாளையங்கோட்டைச் சம்பவம்பற்றிக் குறிப்பிட்டபோது ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. மேலவையில் சங்கரலிங்கம் எடுத்துச் சொன்னார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும், சங்கரலிங்கம் அவர்களும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது —1965-ம் ஆண்டில்—தூத்தூர் என்ற இடத்தில் ஒரு பள்ளிக் கூடத்தில் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நுழைந்து தன்னை இழி மொழி கூறிய மாணவனைத் தன் வசம் ஒப்படைக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில், அங்கேயிருந்த மூன்று ஆசிரியர்கள் அனுப்ப முடியாது என்று கூறியதால், அந்த சப்-இன்ஸ்பெக்டர் அந்த மூன்று ஆசிரியர்களையும் கைது செய்து, கையில் விலங்கிட்டு இழுத்துச் சென்று, அவர்களைச் சிறைச்சாலையில் அடைத்து விட்டார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும், சங்கரலிங்கம் அவர்களும் அதைப் பார்த்துவிட்டு, பக்தவத்சலத்திடம் கேட்ட நேரத்தில் அவர்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்க மறுத்து இருக்கிறார்கள். அப்போதும் மாணவர்கள் கிளர்ச்சி நடைபெற்றது. அதை நாடு தழுவிய இயக்கமாக மாற்றுவது நான் நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கிறோம்.

பேராசிரியர் சீனிவாசனை அடித்த இன்ஸ்பெக்டர், போலீஸ் காரர்கள்மீது வழக்குப் பதிவு செய்து இருக்கிறோம். மாணவர்

களின் போராட்டத்தினால் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், பேராசிரியருக்கும் தகராறு. அந்த இன்ஸ்பெக்டர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். லூர்துநாதன் தண்ணீரில் விழுந்து இறந்த சம்பவம்குறித்து விசாரணை நடத்த, மாவட்ட நீதிபதி தகுதியில் ஒருவர் நீதிவிசாரணைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்வளவும் நடைபெற்று இருக்கிறது.

திருச்சியில் நடந்த சம்பவம்குறித்து எனக்கு வந்த தகவல்களைக் கூறினேன். இன்னும் தகவல்களைச் சேகரியுங்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நான் நிராகரித்தேனா, புறக்கணித்தேனா, நீங்கள் யார் சொல்ல, நான் யார் கேட்க என்று சொன்னேனா. பல பேர் தகவல்கள் கூறினார்கள். அமைச்சர் மாதவன் மூலமாக பிரின்சுபாலுடன் தொடர்பு கொண்டு சில விவரங்களைத் தந்தேன். நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது. நீதி விசாரணை வைக்கப்பட்டபிறகும் இன்று ஹார்த்தால் நடத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அமைதியாக நடைபெற்று இருக்கிறது.

நேற்று இங்கே ஒரு அறிக்கை, காங்கிரஸ் மாணவர்களால் அல்ல, சுதந்திரா மாணவர்களால் அல்ல, கம்யூனிஸ்ட் மாணவர்களும், அ.தி.மு.க. மாணவர்களும் சேர்ந்து வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொன்னார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் அல்ல. சட்டக்கல்லூரியில் நடைபெற்று இருக்கிறது. சட்டக்கல்லூரி மாணவர்கள் 5, 6 பேர் பிற்பகலில் குறளகத்தின் உள்ளே சென்று இருக்கிறார்கள். இங்கே எதற்காக வருகிறீர்கள் என்று கேட்டபோது அங்கேயிருக்கும் கேன்டீனில் நாங்கள் காப்பி சாப்பிடப் போகிறோம் என்று சொல்லி உள்ளே நுழைந்து, அங்கே மாட்டப்பட்டிருக்கும் முதலமைச்சர் படம்—என்னுடைய படத்தை உடைத்து நொறுக்கிப் போட்டு விட்டுப் போய் விட்டார்கள். நான் கேட்கிறேன். நாம் மாணவர்களுக்காகப் பரிந்து பேச வேண்டியது தான். மாணவர்கள் மென்மையாக நடத்தப்படவேண்டியவர்கள் தான். அதற்காக இதே மாதிரியான காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே போனால், மாணவர்கள் என்ற ஒரே ஒரு தலைப்பின்கீழ் வருகிற காரணத்தால் எல்லா வன்முறைகளையும் நாம் அனுமதித்துக்கொண்டே போனால், நாடு எங்கே போய் நிற்கும்? அதைத் தயவுசெய்து அனைவரும் சிந்திக்கவேண்டும்.





என்னுடைய படம் உடைக்கப்பட்டதற்காக நான் கவலைப் படவில்லை. ஆயிரம் படத்தை உடைக்கட்டும் கவலையில்லை. என்னுடைய படத்தின்மீது சாணத்தை வீசுகிறார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. என்னுடைய படத்தின்மீது சாணத்தை வீசிவிட்டு, கையை அசிங்கப்படுத்திக்கொள்கிறார்களே என்று தான் கவலைபடுகிறேன். கையையும் கருத்தையும் அசிங்கப் படுத்திக் கொள்கிறார்களே, எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்கிறார்களே என்ற கவலைதானே தவிர வேறு அல்ல. சட்டக் கல்லூரி மாணவர்கள் ஹர்த்தாலில் ஈடுபட்டால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால், அமைதியாக ஊர்வலம் செல்ல வேண்டும். அப்படியில்லாமல், குறளகத்தில் நுழைவானேன், அங்கேயிருக்கும் படத்தை உடைப்பானேன்? யாராவது தடுத்தால் குறளகத்தில் போலீசார் நுழைந்து அடித்தார்கள் என்று செய்தி வரும். நாளைக்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் வரும். பத்திரிகைகளில் செய்தி வேறு பெரியதாகப் போட்டாலும் போடலாம். மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவதால் அவர்களின் எதிர்காலம் பாழடிக்கப்படுகிறதே என்றுதான் கவலைப்படுகிறேன்

மாணவர்கள் கிளர்ச்சி தமிழ் நாட்டில் மட்டும் நடப்பதாக யாரும் எண்ணிக்கொள்ளக் கூடாது. உலகம் முழுவதும் நடைபெறுகிறது. இங்கேயும் நடைபெறுகிறது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இந்தக் கிளர்ச்சி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது டெல்லிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் கிளர்ச்சி. துணை வேந்தர் தாக்கப்பட்டார், பல்கலைக்கழக அலுவலகத்தை மாணவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள், காவலர் தலையிட்டார்கள் ஒரு மாதகாலமாக அந்தப் பல்கலைக்கழகம் மூடிக்கிடக்கும் நிலைமை, பஸ்கள் தீயிடப்பட்டன, ஆகிய சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன.

கௌகத்தி பல்கலைக்கழகம், அஸ்ஸாம் மாநிலத்தில் இருக்கிறது. அந்த மாநிலத்தில் மொழிக்கிளர்ச்சி, பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டன, எங்கும் வன்முறைச்செயல்கள், பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு முழுவதும் கலவர சூழ்நிலை. இப்படி மாணவர்களைப் பற்றிய செய்திகள் வராமல் இல்லை.

ஆந்திரப் பிரதேசத்தில், டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல், முல்கி விதிகளைக் குறித்து, ஆந்திரா தெலிங்கானா பகுதிகளில் மாணவர்களின் வன்முறைக்கிளர்ச்சி, கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடக்கின்றன, அரசு சொத்துக்களுக்கும், பொதுச்சொத்துக்களுக்கும் அதிகமான சேதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

உத்திரப் பிரதேசத்தில் 40 நாட்களாகப் பல்கலைக்கழகங்கள். கல்வி நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. வன்முறைக் கிளர்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. காவலர் கல்வி நிலையங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

பஞ்சாப்-ஹரியானா மாநிலங்களில் சினிமா டிக்கெட்டின் விலை குறைக்கப்பட வேண்டுமென்று மாணவர்கள் தொடுத்த கிளர்ச்சியின் காரணமாக கல்வித் துறையும் பொது வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று செய்தி வந்திருக்கிறது. துப்பாக்கிச் சூட்டில் பல பேர் சாவு, காயமுற்றோர் பலர், இன்னும் அங்கே அமைதி நிலைமை ஏற்படவில்லை. இங்கே மத்திய போலீஸ் அழைக்கப்பட்டதற்கே குறை கூறிய பொன்னப்ப நாடார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன், அங்கே ராணுவமே வரவழைக்கப்பட்டிருக்கிறது. ஏழு வாரத்திற்கும் மேலாகக் கல்வி நிலையங்கள் மூடிக் கிடக்கின்றன.

குஜராத்தில் மாணவர்கள் கிளர்ச்சி. துணை வேந்தரை ராசினாமா செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அந்தக் கிளர்ச்சியின் சூடு தாங்காமல் துணை வேந்தரே உண்ணாவிரதம் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிச் சூடு, சாவு ஆகிய நிலைமைகளால் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

பீகார் மாநிலத்தில் பாட்னா பகுதியில் மாணவர்கள் கிளர்ச்சியை ஒட்டி வன்முறைச்சம்பவங்கள், துப்பாக்கிச் சூடு, சாவு, பல்கலைக் கழகங்களில் அடிக்கடி தகராறு, பல நாட்களாக மூடப்பட்டுக் கிடக்கின்ற நிலைமை.

வங்காளத்தில் சென்ற இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகவே வன்முறைச்செயல்களின் காரணமாகப் பல்கலைக்கழகங்கள் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இது அனைவரும் அறிந்த ஒன்று.





கேரளத்தில் தனியார் துறை கல்லூரி நிர்வாகத்தினருக்கும் அரசுக்கும் ஏற்பட்ட தகராறின் காரணமாகப் பல கல்லூரிகள் இரண்டு திங்களுக்கு மேல் மூடிக்கிடக்கின்றன. அதனை ஒட்டி கிளர்ச்சிகள் உருவாகியதை நாம் யாரும் மறந்து விடவில்லை.

இந்த நம்பிக்கை கோருகிற தீர்மானத்தில் பேசியவர்களும், எல்லா கட்சிகளும் ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மாணவர்கள் பொதுக்கோரிக்கைகளுக்காக, ஒரு மொழியால் தாங்கள் பாதிக்கப்படுகிறோம், அல்லது பயிற்சி மொழித் திட்டத்தால் அவர்களுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன, அவர்களுடைய உணவு விடுதியில் இத்தகைய கஷ்டங்கள், கல்லூரியில் வசதியில்லை போன்ற கோரிக்கைகளை வைத்துப் பேச்சு வார்த்தை மூலமாக, அமைதியான கிளர்ச்சியின் மூலமாக தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டுமே யல்லாது எடுத்ததற்கெல்லாம் கிளர்ச்சி, போராட்டம், யாரோ ஒருவரை ஒரு கட்சியில் இருந்து விலக்கினால் அதற்குப் போராட்டம், அதற்காகக் கல் எறிதல், சர்க்கார் உடைமைகளுக்குச் சேதம் என்ற காரியங்களில் மாணவர்கள் ஈடுபடுவது உள்ளபடியே தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கும், மாணவர்களுடைய எதிர்காலத்திற்கும் உகந்தது அல்ல. மாணவர்கள், எடுத்ததற்கெல்லாம் போராட்டத்தில் ஈடுபடுவோம், வன்முறைகளில் ஈடுபடுவோம் என்று சொன்னால் அதை யாரும் வரவேற்க மாட்டார்கள். திரு. ஹாண்டே அவர்களும் அதைத்தான் வலியுறுத்திப் பேசினார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அதை வரவேற்கத்தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்த அவையின் சார்பாக மாணவர்களைக் கேட்டுக்கொள்வேன். அவர்களுடைய எதிர் காலத்தை மறந்து விடாமல், ஒளி மயமான எதிர் காலத்தை இந்த இளமைத் துடிப்பின் குறும்புகளால், இப்படிப்பட்ட கிளர்ச்சியால் அவர்கள் கெடுத்துக் கொள்வது நல்லது அல்ல என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

குற்றச்சாட்டுகள் எல்லாம் இங்கே எடுத்துப் பேசப்பட்டன. நம்பிக்கை இல்லை இந்த அரசின்மீது. ராசினாமா செய்யவேண்டும் இந்த அரசு என்று பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும்

குற்றச்சாட்டுகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒரு வகையில் எங்களுக்கு நிம்மதி. பிரதமரிடத்திலிருந்து நாங்கள் அனுமதி பெறுவதற்கு முன்பே மர்மப் பேழையின் முக்கால் பகுதி திறக்கப்பட்டுவிட்டது. ஆனால் டெல்லிக்குக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு போனவர்கள் நல்ல சாமர்த்திய சாலிகள். அவர்கள் தாங்கள் வந்து இங்கே ஆழம் பார்ப்பானேன் என்று பொன்னப்ப நாடார் அவர்களையும், ஹாண்டே அவர்களையும் விட்டு ஆழம் பார்த்துவிட்டார்கள் (டாக்டர் ஹாண்டே எழுந்தார்) நீங்கள் இல்லை. அவ்வளவு சாமர்த்தியமாக அவர்கள் அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

சட்டசபையிலிருந்து பேசமாட்டார்களாம், பொது மக்களிடத்தில் சொல்ல மாட்டார்களாம். சட்டமன்றத்தில் பேசுங்கள், நல்ல பாதுகாப்பு உண்டு, சட்ட மன்றத்தில் எதையும் பேசலாம், அந்தப் பாதுகாப்பு இங்கே அளிக்கப்பட்டிருக்கிறது, பதில் சொல்கிற கடமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் இங்கே பேச வருவதில்லை. பொது மக்களிடத்திலே பேசுங்கள், பத்திரிகைகளிலே வரட்டும், நீங்கள் எதிர்பார்க்கின்ற நீதி விசாரணை, உயர்நீதி மன்றத்தில் நாம் நடத்திக்கொள்ளலாம் என்று சொன்னோம்.

பேராசிரியர் அன்பழகன், நேற்றோ, அதற்கு முன்தினமோ குறிப்பிட்டார்கள். அவதூறு கூறுகிறவர்கள் தப்பித்துக்கொள்வது, குற்றம்சாட்டப்பட்டவர்கள் மாத்திரம் விசாரணைக்கு உட்படுவது என்பது சரியான நியாயமாகாது என்று குறிப்பிட்டார்கள். அவதூறு கூறுபவர்களுக்கு என்ன தண்டனை ?

ஆகவேதான், நீதிமன்றத்தில் சந்திப்போம். தைரியம் இருந்தால், துணிவு இருந்தால், பல்லாயிரக்கணக்கான மக்கள் மன்றத்தில் கூறுங்கள். கருணாநிதி என்ன குற்றம் செய்தார், நெடுஞ்செழியன் என்ன குற்றம் செய்தார், நடராசன் என்ன குற்றம் செய்தார், சத்தியவாணிமுத்து என்ன குற்றம் செய்தார் என்று தைரியம் இருந்தால், துணிவு இருந்தால், திராணி இருந்தால், தெம்பு இருந்தால், வக்கு, வகை இருந்தால் பொது மக்கள் முன்னால் கூறட்டும், நீதி மன்றத்தில் சந்திப்போம் என்று கூறினோம். அங்கும் கூற முடியாதாம், சட்டமன்றத்தில்





கூறுங்கள், பவ்யமாகப் பேசுவோம், இங்கே பாதுகாப்பு உண்டு, நான் பாதுகாப்பு என்று சொல்வது ஏதோ வன்முறையிலிருந்து பாதுகாப்பு என்று கருதிக்கொள்ளவேண்டாம். சட்டமன்றத்தில் சில உரிமைகள் இங்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பாதுகாப்பிற்குள், அந்த வளையத்திற்குள் நின்று பேசுகின்ற உரிமை, ஜனநாயகக் கடமை இருக்கிறது, இங்கே பேசுங்கள் என்று கூறினோம். இங்கேயும் பேசமாட்டோம், அங்கேயும் பேச மாட்டோம். மர்மயோகியின் மர்மப் பேழையில் இருக்கிறது, ஆகவே மர்மப் பேழையின் உள்ளே இருப்பதை விசாரணை வைத்துத்தான் ஆராயவேண்டும் என்று சொன்னால், இதைவிட வேடிக்கை, வேதனை என்ன இருக்க முடியும் ?

நடப்பது கொள்கைப் போராட்டமா ? கம்யூனிஸ்டு கட்சி அல்லது வேறு சில கட்சிகள், தி.மு.க. 50 பஸ் விடுகிறவர்களைத் தான். அவைகளைத்தான் எடுத்துக்கொண்டு தேசீயமயமாக்கி இருக்கிறது, அது போதாது, உடனே எல்லா பஸ்களையும் தேசீய மயமாக்கவேண்டும் என்று வாதிட்டால் எனக்குப் புரியும். இது கம்யூனிஸ்டு கட்சி, இது தீவிரமாகப் போராடுகிறது என்பது எனக்குப் புரியும். அவ்வளவு பேர்களின் பஸ்களையும் எடுத்துக் கொள்ளாதீர்கள், படிப்படியாக எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது 'தனியார் உரிமையைப் பாதுகாத்துக் கொடுங்கள் என்று சுதந்திராக் கட்சி வாதிட்டால் எனக்குப் புரியும். அதைப்போலவே அதிக வேகமாகச் செல்லாதீர்கள். நிதானமாகச் செல்லுங்கள் என்று காங்கிரஸ் கட்சியோ, அல்லது மற்றைய கட்சியோ எடுத்துச் சொன்னால் எனக்குப் புரியும். நிலச் சீர்திருத்தம் இந்த அளவுக்குப் போதாது, இன்னும் வேகமாகச் செயல்பட வேண்டும், மடங்களின் சொத்துக்களையெல்லாம் அபகரித்துக் கொள்ள வேண்டும், கோவில்களின் சொத்துக்களை எடுத்துக்கொள்ளக்கூடிய அந்த அளவுக்குச் சமுதாய சீர்திருத்தம், சோஷலிஸம் வர வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி வாதிட்டால், எனக்குப் புரியும். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை மாத்திரம் சொந்தமாக்கியிருக்கிறீர்கள், போதாது, அவர்கள் வீடு கட்டுவதற்குப் பணம் வேண்டும் என்று கம்யூனிஸ்டு வாதிட்டால் எனக்குப் புரியும். ஆனால், இவை அனைத்தையும் இன்றைக்கு மறந்துவிட்டார்கள். என்ன காரணம் ? கம்யூனிஸ்டு கட்சிக்கு

இருக்கிற பயம் என்ன ? நம்முடைய கொள்கைகள் அனைத்தையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்துகிறது, ஆகவே, நம்முடைய கட்சி கால் ஊன்ற முடியாத நிலை ஏற்படுகிறது, ஆகவே கொள்கை ரீதியிலே நம்மோடு வாதிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அதன் காரணமாகத்தான் லஞ்சம், ஊழல் என்ற வார்த்தைகளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஊரிலே பேசுகிறார்கள். குற்றச்சாட்டுகளை ஆங்காங்கு வாரி வீசுகிறார்கள். தங்களுக்கு வெளியிட தைரியம் இல்லாமல் பத்திரிகைகளுக்குக் கொடுக்கிறார்கள். பிறரிடம் சொல்லி, நீங்கள் போய் கொடுங்கள் என்று கூறுகிறார்கள். நீங்கள் விசாரணை நடத்துங்கள் என்று சொல்கிறார்கள். கொள்கைப் போரா ? நிலச் சீர்திருத்தம் போதாது என்று கொள்கைப் போரா ? தேசிய உடைமைத் தத்துவத்தில் ஓட்டை உடைசல்கள் என்று கொள்கைப் போரா ? விதிவிலக்கு இன்னும் ரத்து செய்யப்பட வேண்டும் வேகமாக. செய்யப்பட்டிருக்கிற விதி விலக்குகள் போதாது என்கின்ற கொள்கைப் போராட்டமா ? அல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் 1952-ம் ஆண்டில் நடைபெற்ற சென்னை மாநகரத்தில் நடைபெற்ற தி.மு.க. பொது மகாநாட்டில் சொன்னார்கள். தமிழகத்தில் உண்மையான கம்யூனிஸ்டு கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று சொன்னார்கள். அதை இன்றைக்குச் செயல்படுத்தி வருகிறது இந்த ஆட்சி. இப்படியே நீடித்தால் வலது சாரி கம்யூனிஸ்டு கட்சிக்கு இடமே இல்லாமல் போய்விடும் என்ற பயத்தின் காரணமாக ஊழல், லஞ்சம் என்று பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் தலையீடுகள் என்று பேசுகிறார்கள். நிர்வாகத்தில் தலையீடு என்ற குற்றச்சாட்டு. திரு. பக்தவத்சலம் அவர்கள் எழுதிய புத்தகத்தைப் படித்தேன். ‘ எனது நினைவுகள் ’ என்ற புத்தகம். அதிலே 106-வது பக்கம், குறித்துக் கொள்ளலாம். நான் புத்தகத்தை எடுத்துவரவில்லை. அதிலே அவர் குறிப்பிடுகிறார். ‘ காமராஜின் சிபார்சுகள் ’ என்கின்ற தலைப்பில் சொல்கிறார்கள்.

> “ காம்ராஜ் பல முறை பல விஷயங்கள்பற்றி என்னிடம் சிபார்சு செய்திருக்கிறார். அவர் சொல்லும் விஷயம் ‘ தகாதது அல்ல ’ என்று இருந்தால் உடனடியாக அதைச் செய்திருக்கிறேன். சாதாரணமாக நான் செய்யாமல் இருந்திருக்கக்கூடியதைக்கூட காமராஜர் சொல்கிறார் என்பதற்காகச் செய்திருக்கிறேன்.”



திரு. பக்தவத்சலம் அவர்கள் ‘ எனது நினைவுகள் ’ என்ற புத்தகத்தில் ‘ காமராஜின் சிபார்சுகள் ’ என்ற தலைப்பின்கீழ் எழுதிய வாசகங்கள் இவை. 110-ம் பக்கத்தில் இன்னொன்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

> “ ஒரு கிருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவரை விட்டு விடுமாறு ஒரு எம்.எல்.ஏ. சப்-இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிறார். சப்-இன்ஸ்பெக்டர் அவ்வாறு செய்ய மறுத்து விடுமாறு ஒரு எம்.எல்.ஏ. சப்-இன்ஸ்பெக்டரிடம் கூறி அவரை மாற்றவேண்டுமென்று அந்த எம்.எல்.ஏ. வற்புறுத்தியிருக்கிறார் ” . . .

தான் சொல்வதைக் கேட்காவிட்டால் ஊழல் புகார் கிளப்பப்படும் என்பது அந்த எம்.எல்.ஏ. காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்மீது ஊழல் புகார் கூறி அவரை மாற்ற வேண்டும் என்று அந்த எம்.எல்.ஏ. வற்புறுத்தியிருக்கிறார்.

> “ அப்போது விவசாய மந்திரியாக இருந்த கக்கன், அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுமாறு ஜில்லா சூப்ரண்டிடம் கூறியிருக்கிறார். நான் தஞ்சாவூர் போயிருந்தேன். இதை ஜில்லா சூப்ரண்ட் என்னிடம் சொன்னார். நான் அப்போது உள்துறை மந்திரி. அந்த நேர்மையான சப்-இன்ஸ்பெக்டரை மாற்றவேண்டாம் என்று நான் சூப்ரெண்டிடம் தெரிவித்தேன்.”

திரு. பக்தவத்சலம் ‘ எனது நினைவுகள் ’ என்ற புத்தகத்தில் கக்கனை ஜாடையாகக் குறை கூறிய வாசகம் இது. ஆகவே, நிர்வாகத்தில் தலையீடுகள் அந்தக் காலத்தில் இருந்திருக்கின்றன. பக்தவத்சலம் அவர்களும் நிர்வாகத்தில் தவறான தலையீடுகள் கூடாது என்பதைத்தான் சொல்லியிருக்கிறார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** புத்தகத்தில் கூறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதே மாதிரி எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும் உங்களைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். எது உண்மை, எது உண்மை இல்லை என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் பக்தவத்சலம் அவர்களைக் குறை கூறிச் சொல்லவில்லை. பக்தவத்சலம் அவர்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 டிசம்பர் 11

கூறியதை எடுத்துக் கொண்ட நோக்கமே தவறான காரியங்களில் நிர்வாகத்தில் தலையீடு கூடாது என்பதுதான். அதைத்தான் பக்தவத்சலம் அவர்களும் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் அதை எடுத்துச் சொன்னேனே அல்லாமல், வேறு இல்லை.

ஊழல், ஊழல் என்று பேசப்படுகிறது. தலைவர் காமராஜ் அவர்கள் நேற்றையதினம் அறிவித்துவிட்டார். தெளிவாக, திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். ஸ்தாபன காங்கிரஸ் தி.மு.க.வைத் தனியாக நின்று எதிர்க்கும், எதிர்த்து வெற்றி கொள்ளும் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். நான் அன்றைக்குச் சொன்ன அந்த மூன்று அணிகள் தமிழகத்தில் எதிர்காலத்தில் பொதுத் தேர்தலில் ஒன்றை ஒன்று நிச்சயம் சந்திக்கும் என்கின்ற கருத்துக்கு நேற்றையதினம் காமராஜ் அவர்கள் பச்சைக் கொடி காட்டிவிட்டார் என்பதுதான் நான் அதற்குக் கொள்கிற பொருள் ஆகும். காங்கிரஸ் கட்சியின் தலைமையில் உள்ள அணி, ஸ்தாபன காங்கிரஸ் தலைமையில் உள்ள அணி, தி.மு.க. தலைமையில் உள்ள அதன் தோழமைக் கட்சிகள் அணி, இந்த மூன்று அணிகள்தான். இன்று முன்னேற்றக் கழக ஆட்சியில் இருக்கிற கொள்கை, கோட்பாடுகளைப்பற்றி விமர்சிக்காமல் காமராஜ் போன்ற பெரும் தலைவர்கள் ஊழல், ஊழல் என்று சொல்கிறார்களே என்று எண்ணும்போது உள்ளபடியே வருத்தப்படுகிறேன். சில விஷயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். காமராஜ் அவர்கள் கன்னியாகுமரித் தொகுதியில் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிட்டார்கள். சி. சுப்பிரமண்யம் அவர்களே சட்டமன்றத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், இங்கே நிதி அமைச்சராக இருந்த பொழுது. "நாம் யாரும் நமக்கு ஆன தேர்தல் கணக்கைச் சபையில் சொன்னால், ஒருவர்கூட எம்.எல்.ஏ. ஆக வர முடியாது" என்று திரு. சி. சுப்ரமண்யம் அவர்கள் இங்கே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். காமராஜுடைய நாடாளுமன்றத் தேர்தலின் செலவுக் கணக்கு அவர் கொடுத்த கணக்காக இருக்க முடியுமா? இப்படிக் கேட்கிற காரணத்தால் "உன் சேதி என்ன?" என்று கேட்க முடியும். ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டேயிருந்தால் ஊழல் எங்கே இருக்கிறது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, நான் அதை சூசகமாக விட்டுவிடுகிறேன்.



1972 டிசம்பர் 11] [டாக்டர் மு. கருணாநிதி]

காமராஜ் அவர்கள் "சமவாழ்வு" என்ற புத்தகத்தில் இந்த ஊழல் லஞ்சம் என்பதைப்பற்றி அழகான மணிவாசகங்களைத் தமிழகத்திற்கு தந்திருக்கிறார்கள். "சமவாழ்வு" புத்தகம்—பக்கம் 37. அதில் சொல்லுகிறார் :

> "லஞ்சத்தை ஒழித்து விடுவேன் என்று ராஜாஜி கூறுகிறாரே; அவர் என்ன பரசுராமர் அவதாரமா?"

என்று காமராஜ் கேட்கிறார். பிறகு அவரே—

> "லஞ்சம் இல்லை என்று யார் கூறுகிறார்கள். அந்தக் காலம் முதல் லஞ்சம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இப்போது கொஞ்சம் அதிகமாகி விட்டது. ராஜாஜி ஆண்ட காலத்தில் லஞ்சமே இல்லையா என்ன?"

இது காமராஜுடைய கேள்வி. பிறகு "சமவாழ்வு" புத்தகம்—38-ம் பக்கம் :

> "ஆயிரம் பேர் போட்டி போட்டுக் கொண்டு லஞ்சம் கொடுக்க வருவதால் அவன் அதை ஏலத்துக்கே விட்டு விடுகிறான்"

> "ஏலம் எடுத்தவன் போக லஞ்சம் கொடுக்கப் போன மற்ற 999 பேரும் 'லஞ்சம், லஞ்சம்' என்று கூப்பாடு போடுகிறார்கள். ஏழைக்கு ஒன்றுமே புரியவில்லை. லஞ்சமா? யார் கொடுக்கிறார்கள்? யார் வாங்குகிறார்கள்? என்று விழிக்கிறான். இதற்குக் காங்கிரசா பொறுப்பு?".

இது காமராஜுடைய கேள்வி. அடுத்து—

> "காங்கிரஸ் அரசாங்கம் வந்தவுடன் ஊழல் வந்து புகுந்து விடவில்லை. அது 5,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. காரணங்களைக் கண்டறிந்து இத் தீங்கைக் களைய வேண்டும்"

5,000 ஆண்டுக் காலமாக லஞ்சம் ஊழல் இருந்து வருகிறது என்ற வரலாற்றை காமராஜ் அவர்கள் உலகிற்கு உணர்த்துகிறார்.

> "காங்கிரசில் உள்ள கடைசித் தொண்டனாவது இவ்வளவு பணம் வாங்கினான் என்று நிரூபிக்க முடியுமா? நிரூபிக்க முடியாது என்று தெரியும். ஊழல்பற்றிக் கூச்சல் போடுபவர்கள்தான் ஊழல் நிறைந்தவர்கள்" (பலத்த கைதட்டல்)

இதை ஒவ்வொருவரும் சுவரொட்டி போட்டு ஒட்டி வைக்க வேண்டும். "ஊழல்பற்றி கூச்சல் போடுகிறவர்கள்தான் ஊழல் நிறைந்தவர்கள்". இது காமராஜ் "சமவாழ்வு" புத்தகத்தில் எழுதியிருக்கின்ற பொன்மொழிகள். அவர் "நிரூபிக்க முடியுமா?" என்று கேட்கிறார். "நிரூபிக்க முடியுமா?" என்று நாங்கள் கேட்டால் அது தவறாகிறது. காமராஜ் கேட்டார் அப்போது லஞ்சம் ஊழல் என்கிறீர்களே, நிரூபிக்க முடியுமா என்று. லஞ்சம் ஊழல் என்று சொல்லியே, இதையே தாரக மந்திரமாக வைத்து இந்த ஆட்சியை ஒழித்துவிடலாம் என்று 71-லே கங்கணம் கட்டினார்கள். தொடர்ந்து அதையேதான் இன்றைக்கும் சொல்லி வருகிறார்கள். அ.தி.மு.க. அந்தப் பணியை வேகமாகச் செய்கிறது. ஹாண்டே அவர்களையும், பொன்னப்ப நாடார் அவர்களையும் விட்டுவிட்டு, அந்தப் பக்கம் திரும்பினால் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதற்காக அந்தப் பக்கம் போகிறேன்.

அ.தி.மு.க., அண்ணா தி.மு.க. என்று அவர்கள் பெயரிட்டு அழைத்தாலும், அ.தி.மு.க.-வில் அண்ணா அங்கே இல்லை, அண்ணாவின் கொள்கைகள், அண்ணாவின் கொள்கையான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அண்ணாவின் ஜனநாயக நெறி, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. (பலத்த கைதட்டல்). அ.தி.மு.க.-வில் உள்ள அந்த 'அ'-வை முன்னால் சேர்ந்தால் நல்ல பொருள் வரும்! 'நீதி' 'அநீதி' ஆகும். 'தர்மம்' 'அதர்மம்' ஆகும். 'நியாயம்' 'அநியாயம்' ஆகும். அ.தி.மு.க. என்பது தி.மு.க. கொள்கைக்கு எதிரானது. (கைதட்டல்). அதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். ஆகவே அ.தி.மு.க. என்பது அண்ணாவுக்கு விரோதமாக, தமிழகத்திற்கு விரோதமாக, தி.மு. கழகத்தின் கொள்கையான மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக இன்றைய தினம் செயல்பட்டு வருகின்ற ஒரு புதிய கட்சியாகும். அந்தப் புதிய கட்சி எத்தனை நாளைக்கு இருக்கும், என்றைக்கு அது இந்திரா காங்கிரசோடு இணையும் என்பதெல்லாம் வேறு விஷயம்.

ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை, அதுவும் முன்னணியிலே இருக்கிற முக்கியமானவர்களை பிரதமர் டெல்லியில் இருக்கிற அதிகாரங்களைக் காட்டி பணிய



வைத்து விடலாமென்று நடைபெறுகின்ற முயற்சிகளை, இந்த மாமன்றத்தில் இருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களும் நம்மோடு சேர்ந்து எதிர்ப்பர் என்பதில் எனக்கு கிஞ்சித்தும் ஐயமில்லை.

காலையில் நம்முடைய நண்பர் அரங்கண்ணல் குடிசை மாற்று வாரியத்தின் தலைவர், மிக்க வேதனையோடு தனக்கு விளைவிக்கப் பட்ட ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். டெக்னிகல் எரருக்காக 4,000, 5,000 அபராதம் போட்டார்கள். அவர் அதற்கு அப்பீல் செய்து வாதாடப் போகிறார். இன்கம்டாக்ஸ் ஆபீசர் ரெய்டு நடத்துகிறார். மறுநாள் கவர்னர் என்னிடம் கேட்கிறார் 20 லட்சம் ரூபாய் அரங்கண்ணல் வீட்டிலிருந்து எடுத்து விட்டார்களாமே என்று. அரங்கண்ணலைப் பார்த்து பக்தவத்சலம் கேட்கிறார் 12 லட்சம் எடுத்துவிட்டார்களாமே என்று. பத்திரிகையில் செய்தி வருகிறது. அரங்கண்ணல் வீட்டில் ரெய்டு. பெரிய சோதனை. இருபது லட்சம் எடுத்துவிட்டார்கள் என்ற செய்தி வருகிறது. இப்படி நான் டெல்லியிலே இருக்கின்றவர்களை இந்த நேரத்தில் குற்றம் சாட்ட விரும்பவில்லை. கீழே இருக்கின்ற குட்டித் தேவ தைகளை, அந்தத் தேவதைகளைப் பிடித்து ஆட்டிப்படைக்கின்ற தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சில தேவதைகள் இந்தக் காரி யத்தில் ஈடுபடுகிறார்கள்.

நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்பு கோவை மாவட்டத்தின் கழகச் செயலாளர் ராஜமாணிக்கம் அவர்களுடைய வீட்டில் வருமான வரி அதிகாரிகள் திடீரெனப் பிரவேசித்தார்கள். அரங் கண்ணல் வீட்டில் இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் எடுத்த தொகை வெறும் 60 ரூபாய். ராஜமாணிக்கம் வீட்டில் சென்று அவர்கள் சோதனை நடத்தினார்கள். அங்கே ஆயிரம் ரூபாய் இருந்தது. எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். ஐந்து, ஆறு ஆயிரம் ரூபாய்க்கு நகைகள் இருந்தன. அந்த ராஜமாணிக்கம் அவர்கள் இன்று, நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாக கோயம்புத்தூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்து வருகின்றவர். இன்னும் சொல்லப்போனால் சிங்காநல்லூரில் 40 ரூபாய் வாடகைக்கு நான் ஒரு வீட்டில் குடியிருந்தபோது, அரிசிக்குக் கஷ்டப்படுகிற நேரத்தில், என்னுடைய வீட்டிற்கு அரிசி கொண்டுவந்து, கொடுத்து, என்னுடைய வீட்டில் உலை பொங்க வைக்கின்ற அளவுக்கு அன்றைய தினம் வசதிபடைத்திருந்தவர். ஒரு கடையில் குமாஸ்தாவாகப் பணியாற்றி சம்பாதித்தார். அவருக்கு

அவருடைய கழகப் பணியை கௌரவிப்பதற்காக, கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தார் நிதி வசூல் செய்து, என்னை அழைத்து 40 ஆயிரம், 45 ஆயிரம்—அவையில் உக்கன் அவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள்—அதைப் போல, அன்றைக்கு ராஜமாணிக்கத்திற்கு 45 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஒரு வீடு வாங்கித் தந்தோம். அந்த வீட்டிற்கு வாங்கிய பத்திரம் அவருடைய வீட்டில் இருந்திருக்கிறது. அதைப்பற்றி 'பஞ்சன் லாமாவோ', 'தலைலாமாவோ' அந்த 'பஞ்சன் லாமா' பத்திரத்தை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாற்பத்தேழு ஆயிரம் ரூபாய் பத்திரம், ஆயிரம் ரூபாய் பணம் ஆகிய இதையே கைப் பற்றவில்லை. கொடுத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

ஆக, இப்படி முன்னேற்றக் கழகத்திலே யார், யார், எங்கங்கே தூண்களாக இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் மிரட்டுவது என்ற அளவுக்கு வருமானவரி இலாக்கா அவர்களுடைய கையிலிருக்கிறது என்கின்ற காரணத்தினாலும், என்ஃபோர்ஸ் மெண்ட் இலாகா தங்கள் கையில் இருக்கிறது என்ற காரணத்தி னாலும் மிரட்டி, இன்றைக்குச் சில பேரைப் பலிய வைக்கலாம் என்று கருதியிருக்கிறார்கள். அவர்கள் தேடிப் பார்த்து, பணத் தைக் கைப்பற்ற வேண்டிய இடங்கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. அங்கேயெல்லாம் என்ன செய்கிறார்கள் தெரியுமா? சமரசம் பேசிக் கொள்கிறார்கள். கட்சியிலிருந்து வெளியே வரு கிறாயா விட்டு விடுகிறோம். கட்சியை இரண்டாக ஆக்குகிறாயா, விட்டு விடுகிறோம் என்று சமரசப் பேச்சு. ஒரு நண்பருடைய வீட்டிற்குச் சென்று யார் அந்நியச் செலாவணிக் குற்றச்சாட்டைக் கண்டு பிடித்தார்களோ, அதே அதிகாரி அந்த நண்பருக்கு நீங்கள் இந்த அலுவலகத்திற்கு இந்த மாதிரி பதில் எழுதுங்கள் என்று சொல்லிக் கேட்கிறார். இந்த அளவுக்கு நிலைமை அங்கே. நான் இவைகளையெல்லாம் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சியின் சார்பாக, இந்தியாவின் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு எடுத்துக் கூறுவது கடமை என்பதற்காகச் சொல்லுகிறேன்.

அரசியல் வாழ்வில் இருப்பவனெல்லாம் களங்கம் சுமத்தப் படுகிற காரணத்தால் அந்தக் கட்சியை அழித்துவிட முடியுமா? களங்கம் சுமத்தினால் மக்கள் தீர்ப்புத் தர வேண்டாமா?





ராஜமாணிக்கத்தின் வீட்டில் ரெய்டு நடத்துவது, மறுநாள் பத்திரிகையில் ராஜமாணிக்கத்தின் வீட்டில் சோதனை, பல லட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டது என்ற செய்தியைப் போடுவார்கள். ராஜமாணிக்கத்தைக் களங்கப்படுத்த வேண்டும், கோவை மாவட் டத்தில் கழகத்தின் பலத்தைக் குறைத்து விட வேண்டும் என்று இப்படிப்பட்ட காரியங்களில் இன்றைக்கு இங்கிருக்கக்கூடிய வருமான வரி அதிகாரிகள், என்ஃபோர்ஸ்மெண்ட் அதிகாரிகள் போன்றவர்கள் ஈடுபடுவார்களானால், திராவிட முன்னேற்றக் கழகம் அவைகளைச் சந்திக்க வேண்டிய இடத்தில் சந்தித்துத் தீரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

இவைகளையெல்லாம் நிதானமாக, நான் உணர்ச்சி வேகத்தில் பேசுகிறேன் என்று கருதாமல், பிரதமரைப் போன்றவர்கள், டெல்லியில் இருக்கும் முக்கியமானவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக் காரியங்களை யார் நடத்துகிறார்கள், யார் தூண்டுதலின்பேரில் இது நடைபெறுகிறது, அவர்கள் இன்றைக்கு ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இந்த நாட்டிலே இருக்கிற சில கட்சிகளை அடகு வைக்க எண்ணி, பிறகு இந்த நாட்டையும் வேறு ஒரு நாட்டிற்கு அடகு வைப்பதற்கு இன்றைக்கு பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் பகிரங்கமாக எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே, இதில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

முன்னேற்றக் கழகம் மக்களுடைய செல்வாக்கை இழந்து விட்டது. ஆகவே அந்தக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறங்க வேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், பொன்னப்ப நாடார் அவர்களும் விவாத நேரத்தில் எடுத்துச் சொன்னார்கள். காரணம், உங்களோடு இருந்த கட்சிகளெல்லாம் பிரிந்து போய் விட்டன. ஆகவே நீங்கள் ராஜினாமா செய்து விடுங்கள். உங்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். சில கட்சிகள் போய் விட்டன. ஆளும் காங்கிரஸ்,

கம்யூனிஸ்ட் கட்சி இவர்கள் போய் விட்டார்கள், நான் மறுக்கவில்லை. வீட்டில் குழம்பு வைக்கின்றோம். அந்தக் குழம்பிலிருந்து ஒரு கத்தரிக்காய் அல்லது ஒரு வெண்டைக்காய் துண்டு வெளியே விழுந்து விட்டால், குழம்பை எடுத்து அப்படியே கொட்டிவிட மாட்டோம். அதைப்போலத்தான் 71-ல் குழம்பு வைத்தோம். அந்தக் குழம்பில் முஸ்லிம் லீக் புளியாக இருந்தது. பார்வேட் பிளாக் காரமான கட்சி, ஆகவே காரமான மிளகாயாக இருந்தது. தமிழரசுக் கழகம் சின்னக் கட்சி என்று சொன்னாலும் உப்பாக இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் வைத்த குழம்பில் கத்தரிக்காயாக, அல்லது வெண்டைக்காயாக இந்திரா காங்கிரசும், கம்யூனிஸ்ட் கட்சியும் இருந்தது. பரிமாறுகிற நேரத்தில் இரண்டு துண்டு கீழே விழுந்து விட்டது. அதற்காக புளியும், உப்பும், காரமும் இன்னும் வேறு பண்டங்கள் இருக்கின்ற குழம்பைக் கொட்டிவிட வேண்டுமா ? வீட்டிலே குழம்பு வைத்துச் சாப்பிட்டு பழக்கமுள்ள, ஹாண்டே அவர்கள், பொன்னப்ப நாடார் அவர்கள், அவர்கள் வைக்கவில்லை, வீட்டில் வைத்த சாப்பாட்டில் இதை உணராமல் இல்லை. ஆகவே, இரண்டு துண்டு பதார்த்தங்கள் கீழே விழுந்துவிட்டன என்பதற்காக சமைத்தவை முழுவதையும் கொட்டிவிடு என்றால் முடியாது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எம்.ஜி.ஆர். இப்போது முன்னேற்றக் கழகத்திலிருந்து போய் விட்டார். எம்.ஜி.ஆர். மட்டும் போகவில்லை ; அவர் 50 சதவீதம் ஓட்டு வாங்கித் தரவில்லையா என்றும் சொன்னார் அது எவ்வளவு தவறான கருத்து என்பதை விளக்க விரும்புகிறேன்.

1957-ல் கழகம் போட்டியிட்ட இடங்கள் 117. அப்போது எம்.ஜி.ஆர். இளமை முறுக்குடன் ' மதுரை வீரன் ' படம் நடந்து, அதனால் மதுரை வீரன் என்ற பெயரைப் பெற்றிருந்த சமயம். அந்தக் காலத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்தார். அப்போது கழகத்திற்கு கிடைத்த இடம் 15. டிப்பாசிட் இழந்த இடம் 40. 1962 பொதுத்தேர்தலிலும் முன்னேற்றக் கழகம் போட்டியிட்டது. போட்டியிட்ட இடங்கள் 142. கழகம் வெற்றி பெற்ற இடங்கள் 50. அப்போதும் எம்.ஜி.ஆர். புயல் வேகத்தில் பிரச்சாரம் செய்தார். அப்படி இருந்தும் கிடைத்த இடம் 50 தான். அதற்குப் பிறகு 1967 பொதுத் தேர்தலில் கழகம் 173 இடங்களில் போட்டியிட்டது, 138 இடங்களில் வெற்றிபெற்றது. அப்போது எம்.ஜி.ஆர். பிரச்சாரம் செய்ய வரவில்லை. அவர் மருத்துவ மனையில் இருந்தார். ஆனால் அவருடைய போஸ்டரைப் போட்டுப் பிரச்சாரம் செய்தார்கள் என்று சொன்னார்கள். போஸ்டர் போடப்பட்டது உண்மை. ஹாண்டே அவர்களுக்குச் சத்தியத்தின்மீது நம்பிக்கை இருந்தால்—சத்தியமாகச் சொல்கிறேன் எம்.ஜி.ஆர். போஸ்டரை தலைமைக் கழகச் சார்பில் நாங்கள் போடவில்லை அவர்களுடைய தொகுதிக்காக அவர்களே போஸ்டர் போட்டார்கள். அதில் ஒரு தொகுதிக்கு சில போஸ்டர்கள் அனுப்பி, சுவர்களில் ஒட்டி வைத்திருந்தார்கள். 1957-ல் 15 இடம், 1962-ல் 50 இடம், 1967-ல் 138 இடம் பெற்றோம் என்றால் எங்கள் வெற்றி எங்கள் அண்ணன் அவர்களும் நாவலர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், என்.வி.என். அவர்களும் மற்றும் உள்ள அமைச்சர் பெருமக்களும், கழகத் தலைவர்களும், கழகத்தின் சொல்வீரர்களும், செயல்வீரர்களும், கழகக் கண்மணிகளும் ஆற்றிய தொண்டுதான் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டவனாக நான் இருக்கிறேன். இவைகளை எல்லாம் எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் படிப்படியாக, மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் என்பதல்லாமல் வேறல்ல. ஹாண்டே அவர்கள் கூறியதுபோல் கழகத்தின் கட்டுக்கோப்பு அழிந்துவிடவில்லை. அந்தக் கட்டுக்கோப்புக் குலையாமலேயே கழகம் இன்றும் இருக்கிறது. பதினெட்டாயிரம் கிளைக்கழகங்களில் 20 அல்லது 25 கிளைக் கழகங்கள் வேண்டுமானால் பிரிந்து போயிருக்கும். அவைதவிர மற்றக் கிளைக் கழகங்கள் எல்லாம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கின்றன. வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், வட்டப் பிரிவு, மாவட்டப் பிரிவு, மாநில அமைப்பு, பொதுக்குழு, செயற்குழு எல்லாமே கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கின்றன. எப்படி காங்கிரஸ் கட்சியில் பெரும்புயல் வீசிய நேரத்திலும் தமிழ்நாட்டில் ஸ்தாபன காங்கிரஸ் கட்டுக்கோப்புக் குலையாமல் இருந்ததோ, அப்படியே எம்.ஜி.ஆரும், ஒருசிலரும் போய்விட்டபோதிலும் கழகம் கட்டுக்கோப்புக் குலையாமல் அப்படியே இருக்கிறது.

அண்மையில் என்னை பம்பாய் பத்திரிகைக்காரர் ஒருவர் பேட்டி கண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து

எம்.ஜி.ஆரும் இன்னும் சிலரும் பிரிந்து போய்விட்டதால் கழகத்தில் பூசல் ஏற்பட்டு, கழகம் பலவீனம் அடைந்திருக்கிறதாமே என்று கேட்டார். அப்போது நான் அவருக்குக் கோபம் வராத வகையில் நான் ஒன்றைச் சொன்னேன். கடலிலே இருந்து சூரிய வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாக மாறி செல்வதைப்போல் சிலர் போய் இருக்கிறார்கள் என்று சொன்னேன். நான் ஏன் அவ்வாறு சொன்னேன் என்றால், கடலிலே இருந்து ஆவியாக சென்ற நீர், குளிர்ந்து மழையாகப் பெய்து, பூமியிலே விழுந்து திரும்பவும் கடலிலே வந்து சேரும். அதைப்போலவேதான் வெளியே போனவர்கள் இப்போது சட்ட மன்றத்திற்கு வரவிடாமல் செய்கிறார்களே என்று வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இறுதியில் அவர்களும் இங்கே வந்து சேருவார்கள் என்று நம்புகிற காரணத்தால்தான் அப்படிச் சொன்னேன்.

இன்றைக்கு இந்த நம்பிக்கை கோருகின்ற தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதன் நோக்கமே, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் பேசுவதற்கு விரும்பிய அங்கத்தினர்களுக்கு அவர்களின் கருத்துக்களைச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கட்டும் என்பதற்காகத்தானே அல்லாமல் வேறல்ல. இந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதைப்போலவே முஸ்லீம் லீக் கட்சி, ஃபார்வர்டு பிளாக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகிய கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தோழமைக் கட்சியினர் என்ற காரணத்தினால் நன்றி தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்தரப்பிலே இருக்கின்ற—ஜனநாயகத்தின் மரபையும், சபையின் கௌரவத்தையும் காப்பாற்றுகின்ற வகையில்—மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும், அதைப்போலவே சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், அவருடையக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நம்பிக்கை கோரும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒன்றைச் சொல்லிக்



கொள்வேன். நாங்கள் இப்போது ராஜிநாமா செய்ய வேண்டியதில்லை. எங்களைக் கொஞ்சம் பணியாற்ற விடுங்கள். ஐந்தாண்டுக் காலம் முடிந்ததும் தேர்தல் வரும். அப்போது நாம் எல்லாம் போட்டியில் கலந்துகொள்ளலாம். மக்கள் யாரை நம்புகிறார்களோ அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். அது வரையிலும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். பதவியே பெரிதென்று நாங்கள் இங்கே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்பவில்லை. பள்ளியில் பயின்றபோதோ அல்லது பொது வாழ்விற்கு வரும்பொழுதோ எங்களில் யாரும் இப்படிப் பட்ட பதவி கிடைக்கும் என்று எண்ணி கட்சிக்கு வரவில்லை. நாங்கள் முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கும்போது பெரிய செல்வந்தர்களாகவோ, கனதனவான்களாகவோ இல்லை. சாதாரண விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான். கொள்கைப் பிணைப்பால் எங்கெங்கோ இருந்து வந்து ஒன்றாகச் சேர்ந்தோம். ஒரு ஏழை குமாஸ்தாவின் மகன்தான் நாவலர் அவர்கள். ஒரு சாதாரணப் பத்திரிகை விற்பனையாளரின் மகன்தான் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். காங்கிரஸிலிருந்து அச்சுக்கூடம் வைத்து, அச்சடித்துக்கொண்டிருந்தவர்தான் என்.வி.என். அவர்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் கழகத்தை உருவாக்கினோம். இன்றைக்கு 18 ஆயிரம் கிளைக்கழகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறோம். இந்தக் கிளைக்கழகத் தோழர்களின் கணக்கு வேண்டுமென்று கேட்டார் அருமை நண்பர் எம்.ஜி.ஆர்.

சென்ற வாரம் சேலத்திற்குப் போயிருந்தேன். அங்கே கழகச் செயலாளர் நண்பர் தாவூது என்பவர் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு, பார்க்கப் போயிருந்தேன். அவருடைய வீட்டைப் பார்த்தால் கூரை சரிந்திருந்தது. பின் நிதி வசூல் செய்து, பிணத்தை எடுத்தோம். இப்படித்தான் கழகத் தோழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றுக் கட்சியினர் எண்ணிப்பார்த்திட வேண்டும். எங்களை ஐந்தாண்டுக் காலம் வாழ விட்டாலும்சரி, அல்லது ஐந்தாண்டுக்காலம் ஆள விட்டாலும்சரி, நாங்கள் இந்த நாட்டு ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும் என்பதிலே உள்ள எங்கள் லட்சியத்தோடு பணிபுரிகிறோம்; மேலும் பணிபுரிவோம், என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்திலே பின் தங்கிய மக்கள், ஏழை எளிய

மக்கள், அரிசன மக்கள், நடுத்தர மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இவர்கள் வாழ்க்கையை உயரச் செய்வதே எங்கள் லட்சியப் பணி. எவ்வளவு நாள் வாழப்போகிறேனோ? பதவியிலே இருக்கிற காலத்தில், மட்டுமல்ல, ஆட்சியிலிருக்கும் வேலை முடிந்துவிட்டால் என்னைப்போல் சந்தோஷப்படுகிறவர்கள் யாரும் இருக்க முடியாது. என்னைப் பொறுத்த வரையிலே நான் இராஜாஜி அவர்களைப் போன்றோ அல்லது தந்தை பெரியார் அவர்களைப் போன்றோ நான் நீண்டநாள் வாழ்வேன் என்று நினைக்கவில்லை. என் உடலிலே அந்த அளவுக்கு வலிவு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்களைப்போல 59-லே போனாலும் போவேன்; அல்லது கலைவாணர் என். எஸ். கே.-வைப்போல் 49-லே போனாலும் போவேன். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. (பல குரல்கள் : அப்படிப் பேசாதீர்கள்). ஆனால் என்னுடைய கடைசி நிமிட மூச்சு இருக்கும் வரையில் தமிழ் சமுதாயத்திற்காக, ஏழை எளிய மக்களுக்காக, பாட்டாளி மக்களுக்காக, 'பாடுபடுவேன், பாடுபடுவேன்' என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

